UNIVERSAL
LIBRARY
OU_208173
UNIVERSAL
LIBRARY

தொல்காப்பியம்

சொல்லதிகாரம்

சேனாவரையருரை



அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்
கந்தசாமியாரவர்களும்
சேலம் இராமாண்மைக் கழகக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்
பண்டித-வித்துவான்,
ஞா. தேவநேயப் பாவாணர் B.O.L., அவர்களும்
திருத்திய திருத்தங்களும் முன்னுரையும்-னும்

இரண்டாம் பதிப்பு

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை

First Edition April 1923

All Rights Reserved

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI & MADRAS

April, 1946

Printed at Rajan Electric Press, Madras
for S. I. S. S. W. P. S. (Tin) Ltd., Madras - Q. H. Ms'95-B.

பதிப்புரை.

தமிழணங்கின் தனிமுதற் பேரற்றத்தையும், என்றும் மாறு இளமைவீறையும், எழில் வடிவினையும் மக்கள் மனக்கண் முன் காட்டி விளக்கும் ஆடியெனச் சிறந்து பொலிவது தொல் காப்பியம் என்னும் ஒப்புயர்வற்ற செந்தமிழ் நூலாகும்.

இந்நூல் எழுத்துசொல் பொருள் எனமூவகைத்தாய்த் தமிழின் இயலினைத் தெரிக்கின்றது. இந்நூலின் முதன்மையும், சிறப்பும் நோக்கி இதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். எழுத்ததிகாரத்திற்கு நச்சினார்க்கினியர் உரையும், சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையும், பொருளதிகாரத்தின் இறுதி நான்கியல் கட்குப் பேராசிரியர் உரையும் பெருவழக்காகப் பயிலப் பட்டுவருகின்றன.

ஆயினும் ஒருரையைப் பயில்வார் மற்றையோர் உரையையும் ஒப்பு நோக்கிப் பார்த்தல் உண்மை யாராய்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் துணை செய்வதாகலின், எம்மால் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் பதிப்பிக்கப்பட்டதோடு, அதன் இறுதியில் நச்சினார்க்கினியர், இளம்பூரணரோடு கருத்து மாறுகொண்ட இடங்கள், நூற்பாக்களோடும் அவரவர் உரைகளோடும் தொகுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இப்முறையில், அதற்கடுத்த சொல்லதிகாரமாகிய இதையும் சேனாவரையர் உரையுடன் பதிப்பித்ததோடு, விளக்கம பெற வேண்டிய இடங்கட்குத்தக்க ஆராய்ச்சிக் குறிப்புக்களும் பிற வாசிரியர் கோட்பாடுகளும் தெளிய உணருமாறு அடிக்குறிப்பாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றை எழுதியுதவிய வித்துவான் ஞா. தேவநேயப்பாவாணர், பி. ஓ. எல். அவர்கட்கு எம நன்றி உரித்தாகுக.

தமிழ் மொழியின் நல்லியலினை மக்கள் உள்ளத்தில் தெள்ளுறத் தெரிப்பதாய்ச் சொல்லிய சிறப்புடன் வெளிவரும் இந்நூலைத் தமிழுலகம ஏற்றுப் பயனெய்துமாக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்.

		பக்கம்.
க.	கிளவியாக்கம்	க
உ.	வேற்றுமை யியல்	சள
ங.	வேற்றுமை மயங்கியல்	ஙஅ,
ச.	விளிமரபு	அள
ஞ.	பெயரியல்	ஙஅ
ங.	வினையியல்	கஉ-ஐ
எ.	இடையியல்	கஞஞ
அ.	உரியியல்	ஙளங
க.	எச்சவியல்	ஙகச

உ

திருச்சிற்றம்பலம்

தொல்காப்பியம்

உ. சொல்லதிகாரம்

சேனவரையருரை

தன்றேள் நான்கின் ஒன்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினும
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் நெஞ்சே.

ஆகியில் தமிழ்நூல் அகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனே வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே.

தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவனைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே.

சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதுந் திகழ்தரற் பொருட்டே.

க. தெளிவியாக்கம்

[எழுத்துக்கள் பொருள்தரும் முறையில் சொற்களாகும் வகை உணர்த்துவது.]

க. திணை

உயர்திணையும் அஃறிணையும்

க. உயர்திணை யென்மனர் மக்கட் சுட்டே ;
அஃறிணை யென்மனர் அவரல பிறவே ;
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.

நிறுத்த முறையானே[1] சொல்லுணர்த்திய எடுத்துக்கொண்டார் ; அதனால் இவ்வதிகாரம், சொல்லதிகார மென்னும் பெயர்த்தாயிற்று.

சொல்லாவது, எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது. உரையாசிரியரும் எழுத்தாதல் தன்மையொடு புணர்ந்து என்பார் 'எழுத்தொடு புணர்ந்து' என்றாராகலின், ஒருபுடை

1 நிறுத்த முறையாவது . முந்துநூலுள நிறுத்த முறை.

யொற்றுமையே கூறினர். தன்மையொடு புணர்ந்து என்னுக்கால், ஒரெழுத் தொருமொழிக்கு எழுத்தொடு புணர்தல் இன்மையின் சொல்லாதல் எய்தா தென்க. பொருள் குறித்து வாராமையின் அசைநிலை சொல்லாகா எனின், 'ஆவயின் ஆறும் முன்னிலை யசைசசொல்' (சொல் - உஎச) என்றும், 'வியஙகோ ளசைசசொல்' (சொல் - உஎக) என்றும் ஒதுதலான், அவையும் இடமுதலாகிய பொருள் குறித்து வந்தன என்க. 'யாகா பிற பிறக்கு' (சொல் - உஎக) என்னுந் தொடக்கத்தனவோ எனின், அவையும் மூன்றிடத் திற்கும் உரியவாய்க் கட்டுரைச் சுவைபட வருதலின் பொருள் குறித்தனவே யாம். இக்கருத்தே பற்றியன்றே ஆசிரியர் 'எல்லாச சொல்லும் பொருள்குறித் தனவே' (சொல் - கடுகி) என்றோதுவாராயிற் றென்க.

சொற்றான் இரண்டு வகைப்படும். தனிமொழியும் தொடர்மொழியும் என. அவற்றுள், தனிமொழியாவது, **சமய ஆற்றலால்**[1] பொருள் விளக்கு வது. தொடர்மொழியாவது, **அவாய்நிலை**[2]யானும் **தகுதி**[3]யானும **அண்மைநிலை**[4] யானும் இயைந்து பொருள் விளக்குந் தனிமொழி ஈட்டம்.

பெயர்ச்சொல்லும், வினைசசொல்லும், இடைசசொல்லும், உரிச்சொல்லு மெனத் தனிமொழி நான்கு வகைப்படும். 'மரம்' என்பது, பெயரச்சொல். 'உண்டான்' என்பது வினைசசொல். 'மற்று' என்பது இடைசசொல். 'நனி' என்பது உரிசசொல்.

இருமொழித் தொடரும் பன்மொழித் தொடரும் எனத தொடர்மொழி இரண்டு வகைப்படும். 'சாதத்தன் வந்தான்' என்பது இருமொழித் தொடர். 'அறம் வேண்டி அரசன் உலகம் புரந்தான்' என்பது பன்மொழித் தொடர்.

அதிகாரம என்னுஞ் சொற்குப் பொருள் பல உளவேனும், ஈண்டு அதி காரம் என்றது ஒரு பொருள் நுதலி வரும் பல ஓத்தினது தொகுதியை என்க. வடநூலாரும் ஓரிடத்து நின்ற சொல் பல சூத்திரங்களோடு சென்றியைதலை யும், ஒன்றன நிலக்கணம் பற்றி வரும் பல சூத்திரத் தொகுதியையும் 'அதி காரம்' என்ப.[5] சொல்லதிகாரம், சொல்லை யுணர்த்திய அதிகாரம் என விரியும்.

---

1 **சமய ஆற்றலாவது :** இரசொலலால இபபொருளை உணரவேணடுமெனற இறைவனின விருபபம. இதனை வடநூலார 'சஙகேத ரூபாசகதி' எனபர.

2 **அவாய் நிலை :** ஒரசொல தன பொருளை விளகுவதான மறறொரு சொலலை அவாவி நிறறல. எ-டு: ஆ கிடநதது. ஆ எனன செயதது என அவா நிகழநதவழி கிடநதது எனவும, கிடநதது எது என அவா நிகழநதவழி ஆ எனவும ஒனறை யொனறு அவாவி நினறு பொருள விளகுதல காணக.

3 **தகுதி :** ஒரு சொல மறறொரு சொலலோடு தழுவத தகுதியுடைததாதல. எ-டு: நீரால நனை - நனைதறகு நீர தகுதியுடைததாதல காணக. தீயால நனை - எனற பொழுது, நனைதறகுத நீ தகுதியுடைதனறுதல காணக.

4 **அண்மை :** சொறகளை இடையீடினறிக கூறுதல. எ-டு. ஆவைக கொணு என இடையீடினறிக கூறிக காணக. அஙஙனமினறி ஆவை எனக கூறியபின ஒரு நாழிகை சென்று கொணு எனக கூறினும, ஆவை எனக கூறியபின 'ஓடடைக கணடேவ, நீ செல' எனபன போனற பல தொடராகளோ அனறிப பல சொற களோ கூறிப பின கொணு எனக கூறினும அணமையினமையால பொருள படாமை காணக. இதுபறறியே இலகக்கணவிளகக ஆசிரியர்,

"தனிமொழி சமயவாறறலாற றனிதது,
தொடாமொழி யவாயநிலை தகுதியணமையிற,
றொகைநிலை தொகாநிலை யாயிரு வகையிற,
றொடாநதும பொருளைத தோறறுத லியலபே" (161-சூ.)

எனக கூறினமையுங காணக.

இவறறை வடநூலார முறையே ஆகாங்ஷா, யோகயதா, சாந்நிதி எனபர.

5 **இதனை** சிவஞானமுனிவர விரிதது**ணாதினர். தொல்காப்பியச் சூத்திர விருத்தியுட்** காணக.

அச் சொல்லே யாங்ஙனம் உணர்த்திஞலே எனின், தம்மையே எடுத்தோதியும், இலக்கணங் கூறியும் உணர்த்திஞன் என்பது.

வழுக் கலைந்து சொற்களே ஆக்கிக்கொண்டமையான், இவ்வோத்துக் 'கிளவியாக்க' மாயிற்று. ஆக்கம்—அமைத்துக் கோடல்; கொய்யும் நூறுங்கும் கலைந்து அரிசி அமைத்தாரை, அரிசியாக்கினர் என்பவாகலின். சொற்கள் பொருள்கள்மேல் ஆமாறு உணர்த்தினமையால் கிளவியாக்கமாயிற்று எனினும் அமையும். பொதுவகையாற் 'கிளவி' என்றமையால், தனிமொழியுந் தொடர் மொழியுங் கொள்ளப்படும். கிளவி, சொல், மொழி என்னுந் தொடக்கத்தன வெல்லாம் ஒரு பொருட் கிளவி.

இதன் பொருள்: மக்களென்று கருதப்படும் பொருளே ஆசிரியர் உயர்திணையென்று சொலலுவர்; மக்களென்று கருதப்படாத பிற பொருளே அஃறிணையென்று சொல்லுவர்; அவ்விருதிணைமேலும் சொற்கள் நிகழும் என்றவாறு.

எனவே, உயர்திணைச சொல்லும் அஃறிணைச சொல்லும் எனச் சொல் இரண்டு என்றவாறும். மக்கட்சாதி சிறந்தமையான், 'உயர்திணை' என்றார்.

என்மனுர் என்பது செய்யுள் முடிபெய்தி நின்றதோர் ஆர் ஈற்று எதிர்கால முற்றுச சொல். என்றிசினேர், கணடிசினேர் என்பன முதலாயின அவ்வாறு வந்த இறந்தகால முற்றுசசொல். என்ப என்னும் முற்றுச சொல்லினது பகரம் குறைத்து மன்னும ஆரும் என இரண்டு இடைசசொல் பெயது விரிததார் என்று உரையாசிரியர் கூறினுரால் எனின், 'என்மனுர' என்பது இடர்ப்பட்டுழிச சிறுபான்மை வாராது, நூலுள்ளுஞ் சான்றோர செய்யுளுள்ளும பயின்று வருதலானும்,[1] "இசைநிறை" என்பது மறுதலைப் பொருள் கூறுகின்றுர் பின்னும் இசைநிறை என்றல் மேற்கோள் மரபலவாதலானும், அவர்க்கது கருத்தன் றென்க. மாணாகரக்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறுது உய்த்துணர வைத்தல் அவாக்கு இயல்பாகலான் செய்யுள் முடிபென்பது கூறுராயினர்.[2]

என்மனுர் ஆசிரியர் எனவே, உயர்திணை அஃறிணை என்பன தொல்லாசிரியர் குறியாம். ஆசிரியர என்னும் பெயர வெளிப்படாது நின்றது.

மக்களாகிய சுட்டு யாதன்கண நிகழும், அது 'மக்கட் சுட்டு' எனப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித தொகை.[3] ஈண்டு மக்கள் என்றது மக்கள் என்னும் உணர்வை. எனவே, மக்களேயாயினும், மக்களென்று சுட்டாது பொருளென்று சுட்டியவழி உயர்திணை எனப்படாது என்பதாம்.

---

1 இப பகுதி பற்றிய கருத்து, அசிடட இளமபூரண உரையுட் காணபபடவிலலே. இஙஙனமே உரையாசிரியர கருதுதெனக கொணடு சேனவரையர மறறதத இடஙகள் பல அசசிடட இளமபூரண வுரையுள காணபபடடவிலலே. இதனல, உரையாசிரியர இளமபூரணரலலாத வேறொருவரோ எனச சில அறிஞர ஐயுறுகினறனர. இஃது ஆராயறபாலது.

2 ஈண்டுக கூறியவாறுல மன இனை இரண்டும முறையே எதிகால இடைநிலையும் இறநத கால இடைநிலையுமாம எனபது பெறபபடடது. சிவஞானமுனிவர சிவஞானபாடியத்துள 'என்மனுரென்பது செயயுண முடிபாயதோர ஆரீறறு முறறுசசொல மன எதிர்கால இடைநிலே. அது 'உயர்திணை யென்மனுர மககட சுடடே' எனனுஞ் சூத்திரத்துச சேனவரையருரையாலும அறிக' எனறார். இஙஙனமாகவும, மன இறநதகால இடைநிலே யெனபாரிலர.

3 மககட்சுடடெனபது அனமொழித்தொகை யனறெனவும இருபெயரொடடாகு பெயரெனவுஞ் சிவஞானமுனிவர கூறினர. **தொல்காப்பியச் சூத்திரவிருத்தியுடன காண்க.**

இனி அவ்வரல ஏன்னுது பிற என்றே விடின் யாதல்லாத பிற என்று அவாய் நிற்குமாகலின், 'அவரல' என்றார். மக்கட்சுட்டே என்று மேல் நின்றமையின் மக்களல்லாத பிற என்று உணரலாம் எனின், ஆற்றல் முதலாயினவற்றுற் கொள்வது சொல் இல்வழி என மறுக்க. இனி அவரல என்றே ஒழியின், அவற்றது பகுதி[1]யெல்லாம் எஞ்சாமல் தழுவாமையின், எஞ்சாமல் தழுவுதற்கு 'அவரல பிற' என்றார்.

செய்யுளாகலான் ஆயிருதிணை எனச் சுட்டு நீண்டது. வரையறை யின்மை யின்[2] ஈண்டு யகர உடம்படுமெய் ஆயிற்று.

சொல் நிகழ்சசிக்குப் பொருள் இடமாகலின், ஆயிருதிணையின்கண் என ஏழாவது விரிக்க. இன் சாரியை வேற்றுமையுருபு பற்றியும் பற்றாதும் நிற்கும் என்று உரையாசிரியர் இரண்டாவது விரித்தாரா லெனின்;—'சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும் - சாரியை உள்வழித் தன்உருபு நிலையலும்' (எழு - கரிஎ) என்று இரண்டாவதற்குத் திரிபு ஓதினமையானும், 'செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்' (சொல் - உஅ) என்புழியும் பிறாண்டு மெல்லாம் ஏழாவது விரிதற்கேற்பப் பொருளுரைத்தமையானும், அவ்வுரை போலியுரை யென்க. ஆயிருதிணையினும் என்னும் உம்மை விகாரவகையால் தொக்குநின்றது.

இசைக்கும் என்பது செய்யும் என்னும் முற்றுசசொல். மன் என்னும் இடைசசொல் மன என ஈறு திரிந்து நின்றது. மன் என்று பாடம் ஓதுவாரு மூளர். எகாரம் ஈற்றசை.

சொல் வரையறுத்தலே இச சூத்திரத்திற்குக் கருத்தாயின், 'ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்' என்றாற்போல 'உயர்திணைச் சொல்' 'அஃறிணைச் சொல்' என அமையும், உயர்திணை மக்கள் அஃறிணை பிற எனல் வேண்டா எனின்: உயர்திணை அஃறிணை என்பன தொல்லாசிரியர் குறியாகலான், ஆடூஉ மகடூஉப்போல வழக்கொடு படுத்துப் பொருள் உணரலாகாமையின், உயர்திணை மக்கள் அஃறிணை பிற எனல் வேண்டும் என்பது இவ்வாறு பொருள் நுதலிற்றாக உரையாக்கால், சூத்திரம் ஒன்றுமாறில்லை என்க. (க)

உ. பால்

உயர்திணையில் மூன்றுபால்

உ. ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே.

இ - ள்: ஆடூஉ அறிசொல்லும் மகடூஉ அறிசொல்லும் பல்லோர் அறியுஞ் சொலலொடு பொருந்தி, அம்மூன்று கூற்றுச் சொல்லும் உயர்திணையனவாம; எ - று.

ஆண்மகனே 'ஆடூஉ' என்றலும், பெண்டாட்டியை 'மகடூஉ' என்றலும் பண்டையார் வழக்கு.

1 பகுதி - உயிருளவாம உயிரிலவாம காட்சிப பொருளாம கருதாப பொருளாமாகிய பலவகை.

2 வரையறையின்மையின் - புணரியலில் இயலவுயிருகரபபின் இயலா உடமபடு மெயயென வரையறுகபபடாமையின.

அறிவு முதலாயினவற்றுள் ஆண்மகன் சிறந்தமையின் 'ஆடூஉ அறி சொல்' முற்கூறப்பட்டது. பன்மை இருபாலும்பற்றி வருதலின் 'பல்லோரறி சொல்'பிற்கூறப்பட்டது.

இரண்டாம் வேற்றுமை உயர்திணைக்கண் சிறுபான்மை தொகப்பெறுதலின், தொக்கு நின்றது. திரிந்த புணர்ச்சி யன்மையின் விகாரவகையால் தொக்கதென்பாரும் உளர்.

'சிவணி' என்னும் வினையெச்சம், உயர்திணைய என்னும் வினைக்குறிப்புக் கொண்டது, ஆறும் வேற்றுமை ஏற்று நின்ற சொல் பெயராயும் வினைக்குறிப்பாயும் நிற்குமாகலான். உயர்திணைய[1]வாம என்னும முப்பாற்சொல்லின் வினை, 'ஆடூஉ அறிசொல்' 'மகடூஉ அறிசொல்' என்னும் இரண்டன் வினையாகிய சிவணி என்னுஞ் செய்தென் எசசத்திற்கு வினைமுதல் வினையாயினவாறு என்னையெனின் ;—உயர்திணையவாதல். ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல் என்பனவற்றிற்கும எய்துதலான், வினைமுதல் வினையாம் என்க ; 'முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின' (சொல் - உகூய) என்புழி வினைமுதல் 'வினை யென்னுந் துணையல்லது பிறிதொன்றற்குப் பொதுவாகாது வினைமுதற்கே வினையாதல் வேண்டும் என்னும் வரையறை யின்மையின். அல்லாக்கால், 'இவளும் இவனும் சிற்றிலிழைத்தும் சிறுபறை யறைந்தும் விளையாடுப' என்ன போல்வன அமையாவாம் என்க.

ஆடூஉ அறிசொல் முதலாயினவற்றை உணர்த்தியல்லது அவற்றது இலக்கணம் உணர்தலாகாமையின், "பால உணர்ததும் எழுதது வகுப்பவே அவை தாமும் பெறப்படுமெ ; இச சூதநிரம் வேண்டா" என்பது கடா அன்மை உணர்க.

உயர்திணைச சொல் உணாத்தி அதனது பாகுபாடு கூறுகின்றாராகலின், 'அம் மூப்பாற்சொல் உயர்திணைய' என்றாயினும், உயர்திணைச சொல் மூன்று பாகுபாடு படுமெ என்பது கருதுதாகக் கொள்க. இக் கருத்தானன்றே, ஆசிரியர் அம் மூப்பாற் சொல்லும் என 'இனைத்தென அறிந்த பொருள் தொகுதிக்குக்' (சொல் - உஉ) கொடுக்கும் உமமை கொடாராயினும்[2], உரையாசிரியரும் உயர்திணை யெனப்பட்ட பகுப்பை விரிபபுழி இதனுணையல்லது விரிபடாதென்பது ஈண்டுக் கூறியது என்றுரைத்ததூஉம என்க. 'ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே' (சொல் - உ) என்பதற்கும் ஈதொக்கும். (உ)

அஃறிணையில் இரண்டு பால்

உ. ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
ருயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே.

இ - ள் : ஒன்றனை அறியுஞ் சொல்லும், பலவற்றை அறியுஞ் சொல்லும் என அவ்விரண்டு கூற்றுச் சொல்லும் அஃறிணையன வாம் ; எ - று. (உ)

---

1 உயாதிணைய எனபது வினைகருமிபபு முறுமுங்கால அதரம ஆறும வேறறுமையுடபாகாது, வினைகருமிபபு முறறு விகுதியேயாம எனறறிக.

2 (பாடம) கொடாராயினூஉம

'பேடி' முதலிய சொற்கள் இப்பகுதியில் அடங்கும் முறை

சு. பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும்அந் தம்தமக் கிலவே
உயர்திணை மருங்கின் பால்பிரிந் திசைக்கும்.

இ - ள்: உயர்திணையிடத்துப் பெண்மைத் தன்மை குறித்த ஆண்மை திரிந்த பெயர்ச்சொல்லும், தெய்வத்தைக் குறித்த பெயர்ச்சொல்லும, இவையெனத் தம் பொருளே வேறு அறிய நிற்கும ஈற்றெழுத்தினைத் தமக்குடைய அல்ல, உயர்திணையிடத்து அதற்குரிய பாலாய் வேறுபட்டு இசைக்கும; எ - று.

பால் வேறுபட்டு இசைத்தலாவது தாம் உயர்திணைப் பெயராய் ஆடூஉ அறிசொல் முதலாயினவற்றிற்குரிய ஈற்றெழுத்தே தம் வினைக்கு ஈறாக இசைத்தல்.

எடுத்துக் காட்டு: பேடி வந்தாள், பேடா வந்தார், பேடியர் வந்தார் எனவும்; தேவன் வந்தான், தேவி வந்தாள், தேவர் வந்தா எனவும் வரும்.

அலிப்பெயரின் நீக்குதற்குப் 'பெண்மை சுட்டிய' என்றும், மகடூஉப் பெயரின் நீக்குதற்கு 'ஆண்மை திரிந்த' என்றும கூறினார்.

பெணமை சுட்டிய எனவே பெணமை சுட்டாப் பேடு என்பதும் ஒழிக்கப் பட்டதாம.

பெண்மை திரிதலும் உண்டேனும் ஆண்மை திரிதல் பெரும்பான்மை யாகலான் 'ஆணமை திரிந்த' என்றார்.

பேடியா பேடிமார் பேடிகள் என்பனவும் அடங்குதற்குப் பேடி யென்னும் பெயர்நிலைக்கிளவி யென்னது 'பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி' என்றார்.

பெண்மை சுட்டிய என்னும் பெயரெசசம பெயர்நிலைக் கிளவி என்னும் பெயர் கொண்டது. ஆண்மை திரிந்த என்பது இடைநிலை.

'தன்மை திரிபெயர்'[1] (சொல் - குசு) என்றாற்போலச் சொல்லோடு பொருட்கு ஒற்றுமை கருதி 'ஆணமை திரிந்த பெயர்நிலைக் கிளவி' என்றார்.

உயர்திணை மருங்கிற் பால்பிரிந்திசைக்கும எனவே தமக்கென வேறு ஈறு இன்மை பெறப்படுதலின், 'இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே' எனல் வேணடா எனின், தமகென வேறு ஈறு உடையவாய்[2] ஆடூஉவறிசொல் முதலாயினவற்றிற்குரிய ஈற்றனும் இசைக்குங்கொல் என்னும் ஐயம் நீக்குதற்கு, 'அந்தம் தமக்கிலவே' எனல் வேண்டும் என்பது.

---

1 தனமை திரிபெயா - அலி எனபது.

2 தமகுரிய ஈறுனு இசைபபதனறியும, எனவும பாடமுணடு.

குறிப்பு:—மேறகணட நூறபாவையும அதன உரையையும உலகியலையும நோககுமிடதது, பாலதிரிந்த மககளும அவாகளோகு குறிகருகு பொறகளும பிறவுமாறும ஆணமை திரிநது பெணமை கொணடவள பேடி, பெணமை திரிநது ஆணமை கொணடவள பேடன, இவவிருவாககும பொதுபபெயர பேடு, இமமூவாககும பலாபாற பெயர, முறையே, பேடியா பேடா பேடுகள எனபன. புணாசசி யுணாசசி யிலலாதனும பால காடடும உறுபபால ஆணும பெணணுமலலாதனும அலி. பேடி எனனும பெயா பேடிமா பேடுகள எனவும பலாபால ஏறகும.

பாலுள் அடங்காத பேடியையும் திணையுள் அடங்காத தெய்வத்தையும் பாலுள்ளும் திணையுள்ளும் அடக்கியவாறு.

சுட்டிய என்பது செய்யிய என்னும் வினையெச்ச மென்றும், ஆண்மை திரிதல் சொற்கின்மையின் பெயர்நிலைக்கிளவி என்பது ஆகுபெயராயப் பொருண் மேல் நின்றதென்றும் உரையாசிரியர் கூறினாலெனின்: ஆண்மை திரிதல் பெண்மைத்தன்மை எய்துதற் பொருட்டன்றிப் பேடிக்கு இயல்பாகவின் பெண்மை சுட்ட வேண்டி ஆண்மை திரிந்த என்றல் பொருந்தாமையானும், பொருளே கூறலுற்றாராயின் ஆசிரியர் பேடியும் தெய்வமும் என்று தாம் கருதிய பொருள் இனிது விளங்கச் சுருங்கிய வாயபாட்டாற் சூத்திரிப்பராகலானும், அவர்க்கது கருத்தன்மையான், உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க. (சு)

ஆண்பால் ஈறு

டு. னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்.

இ - ள்: னஃகானுகிய ஒற்று ஆடூஉ அறிசொல்லாம்; எ - று.

எ - டு: உண்டனன், உண்டான், உண்ணுகின்றனன், உண்ணுகின்றான், உண்பன், உண்பான், கரியன், கரியான் என வரும்.

ஆடூஉஅறிசொல்லாவது னகாரானற்றுச் சொல்லாயினும், பால் உணர்த்துதற் சிறப்பு நோக்கி 'னஃகான் ஒற்றே' என்றார். 'அறமாவது அழுக்காறின்மை' என்றற்போல, னஃகான் ஒற்று ஆடூஉவறிசொல் என்றாராயினும், ஆடூஉஅறிசொல்லாவது னஃகான் ஒற்றென்பது கருதாகக் கொள்க. 'ளஃகான் ஒற்று' முதலாயினவற்றிற்கும் இவை ஒக்கும். ஏகாரம் அசைநிலை.

உரையாசிரியர் பிரிநிலை யென்றாலெனின், பிரிநிலையாயின் ஆடூஉவறிசொற்கு இலக்கணங் கூறுதலன்றிப் பிரித்து அதன் சிறப்புணர்த்துதலே கருத்தாமாகலின் அவ்வுரை போலியுரை என்க. (டு)

பெண்பால் ஈறு

கூ. ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்.

இ - ள்: ளஃகானுகிய ஒற்று மகடூஉ அறிசொல்லாம்; எ - று.

எ - டு: உண்டனள், உண்டாள், உண்ணுகின்றனள், உண்ணுகின்றாள், உண்பள், உண்பாள், கரியள், கரியாள் என வரும். (கூ)

பலர்பால் ஈறு

எ. ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

இ - ள்: ரஃகானுகிய ஒற்றும் பகரமாகிய இறுதியும் மார் என்னும் இடைச்சொல்லும ஆகிய மூன்றும் பலரறி சொல்லாம். ஏ எண்பது சாற்றசை; எ - று.

எ - டு: உண்டனர, உண்டார், உண்ணுகின்றனர், உண்ணுகின்றார், உண்பர், உண்பார், கரியர், கரியார் எனவும்; கூறுப, வருப எனவும்; கொண்மார், சென்மார் எனவும் வரும்.

மார் எதிர்காலம் பற்றி வந்த ஆரேயாம்; ரஃகான் ஒற்றென அடங்கு மெனின்: அற்றன்று, ஆரேயாயின் கொண்மார் என்புழி மகரம் காலம்பற்றி வந்ததோர் எழுத்தாகல் வேண்டும்; உண்பார் வருவார் எனக் காலம்பற்றி வரும் எழுத்து முதனிலைக் கேற்றவாற்றான் வேறுபட்டு வருமன்றே; அவ்வாறன்றி உண்மார் வருமார் என எல்லா முதனிலைமேலும் மகரத்தோடு கூடி வருதலானும், வினைகொண்டு முடிதற்கேற்பதோர் பொருள் வேறுபாடுடைமையானும் ஆர் ஈறு அன்று வேறெனவே படும் என்பது.

மூன்று காலமும் வினைக்குறிப்பும் பற்றி வருதல் ஒப்புமை நோக்கி அர் ஆர் என்னும் இரண்டு ஈற்றையும் 'ரஃகான்' என அடக்கி ஓதினார். அன் ஆன் அள் ஆள் என்பனவற்றையும் இவ் வொப்புமை பற்றி 'னஃகான் ளஃகான்' என அடக்கி ஓதினார்.

ரகாரம் மூன்று காலமும் வினைக்குறிப்பும்பற்றிப் பெருவழக்கிற்றாய் வருதலின், முன் வைத்தார். மார் பகரவிறுதியிற் சிறு வழக்கிற்றாகலின், பின் வைத்தார்.

உண்கும், உண்டும, வருதும சேறும என்னுந் தொடக்கத்தனவும் பலரறி சொல்லாயினுட, அவை 'எண்ணியல் மருங்கில் திரி' (சொல் - உ0சு.) தலின் நேரத் தோன்றுவாகலான், 'இவற்றை நேரத் தோன்றும் பலரறி சொல்' என்றார்.[1]

மூன்றும் பலரறி சொல் என்றாராயினும், பலரறி சொல்லாவது இம் மூன்றும் என்பது கருதுதாகக் கொள்க. (எ)

ஒன்றன்பால் ஈறு

அ. ஒன்றறி கிளவி, தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

இ - ள்: ஒன்றறி சொல்லாவது தறட என்னும ஒற்றை ஊர்ந்த குற்றியலுகரத்தை இறுதியாகவுடைய சொல்லாம்; எ-று.

எ - டு: வந்தது, வாராநின்றது, வருவது, கரிது எனவும்; கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று எனவும்; குண்டுகட்டு, கொடுந்தாட்டு, குறுந்தாட்டு எனவும் வரும.

கிடக்கை முறையாற் கூறுது 'தறட' எனச சிறப்பு முறையாற் கூறினார்.

குன்றியலுகரம் என மெலிந்து நின்றது. தகர உகரம் மூன்று காலமும் வினைக்குறிப்பும்பற்றி வருதலும், றகர உகரம் இறந்தகாலமும வினைக்குறிப்பும்பற்றி வருதலும், டகர உகரம வினைக்குறிப்பேபற்றி வருதலுமாகிய வேறுபாடுடைமையால், குற்றியலுகரமென ஒன்றாது மூன்றாயின. (அ)

பலவின்பால் ஈறு

கூ. அ ஆவ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே.

---

1 கும டும தும றும என்னும ஈறுதக னமைபனமை விணைமுற்றுகளும பலரறி சொறகளேனும, அர ஆர ப மார எனனும ஈறுற முற்றுகளோபபோல உயர்திணைகெ யுரியவாகாது, 'யானுமெனை னெஃகுஞ்சாறும்' எனறாறபோல திணை விரவி ணைணுமிடதது அஃறிணையையும உளபபடுதது தலின, அவறறை நேரத தோனறு என விலகவினா எனக.

இ - ள்: பலவறி சொல்லாவன அ ஆ வ எனவரும் இறுதியை யுடைய அக்கூற்று மூன்று சொலலாம்; எ - று.

எ - டு: உண்டன, உண்ணுகின்றன, உண்பன, காண்பன எனவும்; உண்ணு, தின்னு எனவும்; உண்குவ, தின்குவ எனவும் வரும்.

உணட, உணணுகின்ற, உணப, கோட்ட என்னுக தொடக்கத்தனவும அகரவீற்றுப் பலவறிசொல். அவற்றுள் உண்ப என்பது பாரவீற்றுப் பலறி சொல்லன்றே, அஃறிணைக் காயினவா றென்னை யெனின்: பகர இறுதியாயி னன்றே உயர்திணைக்காவது. ஈண்டுக் காட்டப்பட்டது 'யானக தகைப்ப செலவு' (கலி - கஉ) 'சினையவுஞ் சுனையமும் காடினா கொயல் வேணடா நயந்து தாங்கொடுப்ப போல்' (கலி - அம) என நின்றனபோல எதிகாலத்து வரும் பகர மூாந்து நின்ற அக ஈறுகளின், அஃறிணைசொல்லேயா மென் பது. செயயுளாகலின், தகைப்பன கொடுப்பன என்னுஞ் சொற்கள் தகைப்ப கொடுப்ப என விகாரவகையான் அவ்வாறு நின்றனவாலான், வழக்கு முடி விற்கு அவை காட்டல் நிரம்பாதெனின்: தகைதன, தகையாகின்றன; தகைத்த, தகையாகின்ற எனவும்; கொடுதன, கொடாகின்றன; கொடுத்த, கொடாகின்ற எனவும இறந்தகாலதது மி்ழ்காலத்தும அக ஈறு முதனிலைக் கேற்றவாற்றான் அவ்வக்காலததிற்குரிய எழுதது்பெற்று அன்பெற்றும பெறு தும முடியுமாறுபோல, எதிர்காலத்தும முதனிலை யேற்ற வாற்றான் அக் காலததிற்குரிய எழுதது்பெற்று அன் பெற்றும் பெறுதும முடியும. எதிர காலத்திற்குரிய எழுததாவன பகரமும வகரமுமா ம. அவற்றுட் பகரம் பெற்று அன்பெற்றும பெறுதும முடிவழி, தகைப்பன தகைக்ப, கொடுப்பன கொடுப்ப எனவும்; வகரம் பெற்று அவ்வாறு முடிவழி, வருவன வருவ; செல்வன செல்வ எனவும் இவ்வாறு முடியுமாலி்ன், தகைப்ப கொடுப்ப என்பன விகார மெனப்படா இயல்பேயாம என்பது. கொடுப்பன யாவை அவைபோல, என உவமை கருதாது அவைபோலமையே சுட்டி நிற்றலின் கொடுப்ப என்பது பெயரன்மை யறிக. அன் பெறுது எதிகாலதது வரும வகர ஒற்று ஊர்ந்து நின்ற அகரமாய வகர ஈறு அடையுமெனின், வினைகொணடு முடிதல் ஒழிதது மார் ஈற்றிற்கு உரைத்தது உலகார்க்க. அவ்வாறு உரைக்கவே, குறிபபம் பெற்ற வழி அன்பெறறுக் எலாமையின், உணணுவ தின்குவ என்னுக தொடக்கத்தன வகர ஈறேயாம. வருவ செல்வ எனக குறிபபம் பெறுதவழி வகர ஈறுதலும் அகர ஈறுதலும என இரு நிலைமையும் உடையவாம. என்னை? எல்லா வினைகளணணும் சேறன்மாலைதாகிய வகர ஈறு ஆணடு விலக்கப்படாமை யானும, அததன்மைத்தாகிய அகர ஈறும ஆணடு வந்து அன் பெறுதவழிக, கால வகரம ஊர்ந்து அவ்வாறு நிற்றலு டைமையானும என்பது.

வருட என்னுட உகரம விகாரவகையான[1] நீண்டு நின்றது.

ஈற்று வகையான் மூன்றாகிய சொல் என்பார் 'அப்பால் மூன்று' என்றார். (கூ)

இந்த ஈறுகள் வினையிலும் வருதல்

கo. இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றில்நின் றிசைக்கும் பதினே ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

1 வருட எனபதை விகார மெனபாரையிட இசைநிறை யளபெடை எனபதே சிறந்த தாம

இ - ள்: உயர்திணை அஃறிணை யென்னும் இரண்டு திணைக் கண்ணும உளவாகிய ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐந்து பாலும் அறிய அவ்வச் சொல்லின் இறுதிக்கண் நின்று ஒலிக்கும் பதினெழுத்தும் புலப்படுதற்கண் வினைச்சொற்கு உறுப்பாய்ப் புலப்படும்; எ - று.

திணை இரண்டே பால் ஐந்தே என வரையறுத்தற்கு 'இரு திணை மருங்கின் ஐம்பால்' என்றார்.

னகாரமும ளகாரமும் டகாரமும் மாரும இறுதியின் நுணர்தலும் என் பதற்கு 'ஈற்றின் நின்றிசைக்கும் பதினெழுத்தும்' என்பது ஞாபக[1] மாயிற்று. அல்லனவற்றிற்கு அநுவாத[2] மாதலிற்ம என்றார்.

தாமே என்பது கட்டுரைசுவைபட[3] நின்றது. வினை எனப் பொதுப் படக் கூறினாயினும, எழுவுழிக் ழகாடல் என்பதனுறை படர்க்கைவினை என்று கொள்ளப்படும.

இவை பெயரொடு வருவழித் திரிபின்றிப் பால் விளக்காமையின் வினை யொடு வரும என்றார். (ய)

பெயரும் வினையும ஒத்த பாலில் வருதல்

கக. வினையின் றோன்றும் பால்அறி கிளவியும்
பெயரின் றோன்றும் பால்அறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.

ஒரு திணைசசொல் வேறொரு திணைசசொலலொடு முடியுந் திணைவழுவும், ஒருபாற்சொல் அதற்கினை ணை வேறப் பாற சொல்லொடு முடியும பால்வழு வும, பிறிதோர காரணம பற்றாது ஒரு பொருட் குரிய வழக்கு ஒரு பொருண மேற் சென்ற தெனப்படும் மபபு வழுவும, வினையதற் கிறையாகாச் செப்பு வழுவும், வினைவப்படாத பொருளோப்பற்றி வரும வினை வழுவும, ஓர் இடசசொல் ஓர் இடத்துச சொல்லோடு முடியும இட வழுவும, காலக்கிளவி தன்னெழுடியை யாக் காலமொடு புணராக் காலவழுவும என வழு எழுவகைப்படும். 'வழுவற்க' என்றலும, 'வழுவமைக்க' என்றலும' என வழுக் காத்தல் இருவகைப்படும. குறித்த பொருளே அதற்குரிய சசொல்லாற் சொல்லுக என்றல் வழுவற்க என்றலாம. குறித்த பொருட் குரிய சசொல்லன்றியினும ஒருவாற்றான் அப்பொருள் விளங்குதலின் அமைக என்றல் வழுவமைக்க லாம. இச சூத்திர முதலாக இவ் வோத்து வழுக் காக்கின்றது.

இ - ள்: கூறப்பட்ட பதினெரிற்றவாய் வினைபற்றி வரும் பால்அறி சொல்லும், அவன் இவன் உவன் என்பன முதலாகப் பெயர்பற்றி வரும் பாலறி சொல்லும், தம்முள் தொடருங்கால்,

---

1 ஞாபகம - நினை வுறுத்தல 'னஃகா னெறவே ஆடீஉ வறிசொல' எனபது முதலிய நூறபாகளில சூறறில நினறிசைககு மெலல றொலலாந சூறுகள இஙகு சூறறில நினறிசைககு மெலல று கூறிய தும ஞாபகம

2 அநுவாதம - வழிமொழிதல. முன கூறியதையே பினனும கூறுதல ஒரு பயனேக இயதாயின வழிமொழிதல எனனும குணமும பயனறறதாயின கூறியது கூறல எனனுங குறறமுமாகும இஙகு வழிமொழிதல.

3 கட்டுரைசசுவை - இலகிய வுணாநடைசசுவை.

ஒரு பாற்சொல் ஏனைப் பாற்சொல்லொடு மயங்கா, தம் பாற் சொல்லொடு தொடரும். எனவே, பிற பாற் சொல்லொடு தொடர் வன வழு என்பதாம்; எ - று.

ஈண்டுப் பெயரென்றது பொருளே.[1] *திணை யுணராக்கால் அதன் உட்பகுதி யாகிய பால் உணர்தலராகாமையின், பால் அறி கிளவி எனவே திணையறிதலும் பெறப்படும்; படவே, மயங்கல்கூடா என்றது திணையும் பாலும் மயங்குதற என்றவாறும்.*

இன்னும் மயங்கல்கூடா என்றதனால், வினைப் பாலறிசொல்லும் பெயர்ப் பாலறிசொல்லும், பாலறிசொல்லுள் ஒரு சாரனவும்[2] *இடமும் கால மும உணர்த்துடாகலின், அவ்வாறு உணர்தலுவனவற்றுனும மயங்குற என்ற வாறும; ஆகவே, இடமும காலமும மயங்குதல் வருதலும் கூறப்பட்டதாம்.*

எ - டு: அவன வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன எனவும; ஒருருகல வந்தான் எனவும திணையும பாலும் இடமும் காலமும வழுவாது முடிந்தவாறு. அவ்வாறன்றி, அவன் வந்தது, அவன் வந்தாள், யான் வந்தான், நாம் வந்தான் என மயங்கி வருவனவெல்லாம வழுவாம.

'சிறப்புடைப் பொருளோத் தான் இனிது கிளத்தல்' என்பதனுன் ஐம பால் உணர்தலுக்குச் சிறப்புடைய படர்க்கை வினைபற்றி ஒருதலேயுனும, 'தன் மைச சொல்லே ஆண்மைக் கிளவி' (தொல்பொ - சுஎந) என்றும, 'முன்னிலை சுட்டிய ஒருமைச் கிளவி' (தொல் - சுஙஉ) என்றும பெயர வழுவமைப்பா ராகலின் தன்மை முன்னிலைப பாலறி கிளவியும மயங்குற்ற என்பது ஈண்டைக கொள்ளப்படும.

எ - டு: யான் வந்தேன், யாம் வந்தேம எனவும; நீ வந்தாய, நீயிர் வந் தீர் எனவும வரும. யான் வந்தேம, நீயிர வந்தாய என்றுக் தொடக்கதன வழுவாம.

மயங்கல் கூடா என்றதற் மயங்குதலுடைய பொருளதா என்றவாறு. மயங்கல் கூடா, தம்மாபினவே என்பனவற்றுள் ஒன்றனது ஆற்றலான் எனையதன் பொருளும் உணரப்படுதலின் ஒன்றேற அமையுமெனின: சொல்லில்வழியது உயதது ணர்வு தெனல.

தம மாபினவே என்பதனைப் பிரிதது மேலேறா தொடரக்கிச சொற் கண மாறுபு பிறழா தம மாபினவே என மாறுபுழுக் காதகதாக உரைக்க. இது **யோகவிபாகம்** *என்னும நூற்புணர்ப்பு.*[3] *முன னிரு பொருள் பட உரைப்பன வெல்லாம இந் நூறபுணர்ப்பாக தொள்ள. யானை மேயப்பானைப் பாகன் என்றலும் யாடு மேயப்பானை இடையன் என்றலும் மரபு. மேயத்தல் ஒப்புமை*

---

1 பெயரென்றது பொருளே - நூற்பாவில் பெயர எனறது பெயரால் குறிக்கப்படும பொருளே. பெயர எனறும தொல ஒரு பொருளின பெயரையும் ஆகு பெயராய,த தான குறிக்கும பொருளேயும உணர்த்தும எனக வாழ்தலில் இரண்டு பெர மூனறு பேர எனபவை சாடடுகள மூவாடடன எனற உயர்திணைப பொருளைக குறிக்தல காண்க. பேர எனபது பெயரனெனறுக மாறு.

2 பாலறி சொல்லுள ஒரு சாரன எனபதிற் ஐக கூறியது அனைன முன்னிலைச சொற களே, அவை தமமை யுணர்த்தல் ஒரு தலையாகலா னும பலவறிசொல்லும ஆகிய எனனை யோ உணர்த்துதலின.

3 யோகவிபாகம் - கூட்டுப பிரித்தல, விபாகம் - கூடடாம, விபாகம் - பிரிபபு. இரு பொருளபட அமைந்து இருதலால் ஐக ஒரு நூறபா அமைத்தல பெரும விரகம. நூறபுணரபபு - நூலிலாதது.

யான் யானை மேய்ப்பானை இடையன் என்றலும், யாடு மேய்ப்பானைப் பாகன் என்றலும் மரபுவழு.

செப்புவழாநிலையும், வினைவழாநிலையும், சிறப்பு வகையான் ஓதப்படும் இடவழாநிலையும, இவ்வாறு ஓதப்படும் மரபுவழாநிலையும் ஒழித்து, ஒழிந்தன இச் சூத்திரத்தாற் காத்தார். (கக)

'பேடி' என்னும் சொல் இம் முறையில் அமையும் வகை

கஉ. ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே.

இ - ள் : 'உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்' (சொல் - ச) என்று மேற் கூறப்பட்ட ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி ஆடூஉவறி சொல்லோடு புணர்தற்குப் பொருந்தும இடனுடைத்தன்று ; எ - று.

ஆண்மையறி சொற்கு ஆகிடன் இன்று என்ற விலக்கு ஆண்மையறி சொல்லோடு புணர்த்த லெய்திநின்ற பேடிக்கல்லது எலாமையின், அவிமேற் செல்லா தென்க.

இச சூத்திரதைதைப் 'பெண்மை சுட்டிய' என்னுஞ் சூத்திரத்தின் பின் வையாது ஈண்டு வைத்தார், இது வழுவற்ற என்கின்ற தாகலான். (கஉ)

வினைவும, விடையும் அமையும் வகை

கங. செப்பும் வினைவும் வழாஅல் ஓம்பல்.

இ - ள் : செப்பினையும் வினைவினையும வழுவாமற் போற்றுக ; எ - று.

செப்பென்பது வினைய பொருளே அறிவுறுப்பது. அஃது இரண்டு வகைப்படும், செவ்வன் இறையும்[1] இறை பயப்பதும்[2] என. உயிர எத்தன்மைத்து என்று வினையவழி உணர்தல் தன்மைத்து என்றல் செவ்வன் இறையாம. உண்டியோ என்று வினையவழி வயிறு குத்திற்று என்றல், உண்மேனன் என்பது பயந்தமையின், இறை பயப்பதாம்.

கருவூர்க்குச செல்லாயோ சாத்தா எனப் பருநூல் பன்னிரு தொடி என்பது செப்புவழுவாம. சொல் எப்பொருள் உணாத்தும் என்று வினையவழிச் சொல் ஒரு பொருளும் உணர்த்தாது என்பதும் அது, வினைய பொருளே வினைவால் உணர்ந்து வினைய பொருளே யன்றித தான் குறித்த பொருளைச செப்பால் உணர்த்துகின்ற ஞகலின் என்பது.

வினை இன்றியும் செப்பு நிகழ்தலின், வினைய பொருளே யெனல் வேணடா எனின், வினைய பொருளே யென்னுது அறிவுறுப்பது செப்பு எனின், அறிய லுறவினை அறிவுறுத்தலின் வினைவும் செப்பாய் அடங்குதலானும் செப்பென்பது உத்தர மென்பதனைத் ஒருபொருட் கிளவி யாகலானும், வினையபொருளை யறிவுறுதலே இலக்கணமா மென்பது. குமரியாடிப் போந்தேன் சோறு

---

1 செவ்வன இறை - நேராயிடை.

2 இறைபயப்பது - நேரானறிக குறிப்பாக அலலது சுறறுவழியாக விடை தருவது இறை - விடை.

தம்மின் என வினவின்றி நிகழ்ந்த சொல் யாண்டடங்கு மெனின் :—அறிய லுறுதலே யுணர்த்தாது ஒன்றனே அறிவுறுத்து நிற்றலிற் செப்பின்பாற் படும்.

வினு எதிர்வினுதல், எவல், மறுத்தல், உற்றதுரைத்தல், உறுவதுகூறல், உடம்படுதல் எனச் செப்பு அறுவகைப்படு மென்று உரையாசிரியர் கூறினரா லெனின் :—உயி ரெத்தன்மைத் தென்றவழி உணர்த்தற்றன்மைத் தென்றன் முதலாயின அவற்று ளடகாமையானும், மறுத்தலும் உடம்படுதலும் வினுவப் பட்டார்கண் ணன்றி எவப்பட்டார்கண்ண வாகலானும், அறுவகைப் படுமென்று பிறர்மத மேற்கொணடு கூறினு ரென்பது.

வினுவாவது அறியலுறவு வெளிப்படுப்பது. அது மூவகைப்படும், அறி யான் வினுவும், ஐயவினுவும், அறிபொருள் வினுவு மென. அறியான்வினு உயிர் எத்தன்மைத் தென்பது. ஒருபுடையானும் அறியப்படாத பொருள் வினுவப் படாமையிற் பொது வகையான் அறியப்பட்டுச் சிறப்பு வகையான் அறியப்படாமை நோக்கி அறியான் வினுவாயிற்று. ஐயவினு குற்றியோ மகனே தோன்றுகின்ற உரு வென்பது அறிபொருள் வினு அறியப்பட்ட பொருளேயே ஒரு பயன் நோக்கி அவ்வாய்பாட்டி னொன்றன் வினுவுவது. பயன் வேறறிதலும்[1] அறிவுறுத்தலு முதலாயின. கறக்கின்ற எருமை பாலோ சினையோ என்பது வினுவுழுவாம. ஒரு பொருள் காட்டி இது நெடிதோ குறிதோ என்பதும் அது.

உரையாசிரியர் அறிபொருள் வினுவை அறிவொப்புக் காணடலும், அவ னறிவு தான் காண்டலும், மெயயவற்குக் காட்டலும் என விரித்து, ஏனைய கூட்டி, ஐந்தென்றார்.

இருவகைச் செப்பினும், மூவகை வினுவினும், செவ்வன் இறையும், அறி யான் வினுவும், ஐயவினுவும வழாநிலை யாகலின், வழாஅலோம்பல் என்பதனுற் கொள்ளப்படும். ஏனைய வழுவமைப்புழிக் காணப்படும். வினு வழீஇயினவிடத்து அமையாதென்று உரையாசிரியர் கூறினு ராலெனின் : அற்றன்று : 'யாதென வருஉம் வினுவின் கிளவி' (சொல்- உ) எனவும், 'வன்புற வருஉம் வினுவிடை வினைசசொல்' (சொல் - உசச) எனவும் முன்னா வழுவமை பா ஆகலான், அது போலியு ரை யென்க. (கஉ)

கூச. வினுவும் செப்பே வினுஎதிர் வரினே.

இ - ள் : வினுய பொருளே ஒருவா ற்றுன் அறிவுறுத்து வினு விற்கு மறுமொ ழியாய் வரின், வினுவும் செப்பாம் ; எ - று.

சாத்தா உண்டியோ என்று வினுயவழி உண்மேனே என வரும். வினு வாயபாட்டான் வந்ததாயினும், உணபல் என்பது கருத்துப்பொரு ளாகலின் செப்பெனப்படும். உணடியோ என்று வினுயவழி உணபல் உண்மேன் என்று இருது தானுன்றை வினுவுவான் போலக் கூறலின், வழுவமைதியா யிற்று. இது செப்புவழுவமைதியேல் 'செப்பே வழீஇயினும்' என்புழி யடங்கு மெனின் :—ஒன்றன் செப்பு ஒன்றற் காவதன்றி[2] வினுச் செப்பாயின மையின், வேறு கூறினார். (கச)

1 வேறறிதல் - தான றிந்த பொருளன்றி வேறோதுமுணர்தா என அறிதல.

2 ஒன்றன செப்பு ஒன்றறகாவது - முடகுதகிறறு எனனும வினுவிறகு விடையாகிய முடகுதகிறறு எனபது செலலாபபோ எனற வேறொரு வினுவிறகு விடை யாய வநது செலலேனை எனறு பொருளபடுவது.

கடு. செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான.

இ - ள்: செவ்வனிறையாகாது செப்பு வழுவிவரினுங் கடியப் படாது, ஒருவாற்றான் வினைய பொருட்கு இயைபுபட்ட கிளவி யாதற்கண்; **எ - று.**

சாத்தா உண்டியோ என்று வினையவழி, நீ உண் என்றும், வயிறு குத்தும் என்றும், பசித்தேன் என்றும், பொழுதாயிற்று என்றும் வரும்; இவை செவ்வன் இறை அல்லவேனும், வினைய பொருளே ஒருவாற்றான் அறிவுறுத் தலின், அமைந்தவாறு கண்டுகொள்க. அஃதேல், இவை 'தெரிபுவேறு நிலை யலுங் குறிப்பின் தோன்றலும்' (சொல் - கடுஎ) என்புழிக் குறிப்பின் தோன்றலாய் அடங்குமாகலின், ஈண்டுக கூறல்வேண்டா எனின்:—அவ் வாறு அடங்குமாயினும், 'செப்பும் வினவும் வழாஅ லோம்பல்' (சொல் - கசு) என்றதனான் இவையெல்லாம் வழுவாதல் எய்திற்று, அதனான் அமைக் கல் வேண்டுமென்பது. (கடு)

கசு. செப்பினும் வினவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே.

இ - ள்: செப்பின்கண்ணும் வினவின்கண்ணும சினைக்கிள விக்கும் முதற்கிளவிக்கும் உறழபொருளுந் துணைப்பொருளும அவ்வப்பொருளுக்கு அவ்வப்பொருளே யாம்; **எ - று.**

எனவே, சினையும் முதலும் தம்முள் மயங்கி வருதல் வழு என்பதாம்.

உறழ்பொருளாவது ஒப்புமை கூறுதி மாறுபடக் கூறப்படுவது. துணைப் பொருளாவது ஒப்புமை கூறப்படுவது.

எ - டு: இவள் கண்ணின் இவள் கண் பெரிய, நும் அரசனின் எம் அர சன் முறைசெய்யும் எனவும்; இவள் கண்ணின் இவள்கண் பெரியவோ, எம் அரசனின் நும் அரசன் முறைசெய்யுமோ எனவும்; இவள் கண் ஒக்கும் இவள் கண், எம் அரசனே ஒக்கும நும்அரசன் எனவும; இவள் கண் ஒக்குமோ இவள் கண், எம அரசனே ஒகுமோ நும அரசன் எனவும் வரும்.

'அவன் கோலினுந் தண்ணிய தடமென் தோளே' (பட்டின. ஈ00-க) எனவும, 'துளிதலைத் தலைஇய தளிரன் னேளே' (குறுந். உஉஉ) எனவும் மயங்கி வந்தன வழுவாம் பிறவெனின்:—அவை செய்யுள் பற்றி வரும் உவம வழு ஆகலின் ஈண்டைக்கு எய்தா, அணியியலுள் பெறப்படும. இம் மகள் கண் நல்லவோ கயல் நல்லவோ என வழக்கின்கண்ணும் மயங்கி வருமாலெனின்: உண்மை யுணர்தற்கு வினையதன்றி ஐயவமை வாயபாட்டாற் கண்ணைப் பூனைந் துரைத்தல் கருத்தாகலின், அன்னவை யெல்லாம் உரை என்னுஞ் செய்யு ளாம் என்பது. இந் நான்கை மூலியின் இந்நான்கை கண் நல்ல என்னுந் தொடக் கதுதன மயக்கம் இன்மையின் இலக்கண வழங்காம் பிற வெனின்: அற்றன்று: ஒத்த பண்பு பற்றியன்றே பொருவுவது; கண்ணொடு மூலைக்கு ஒத்த பண் பின்மையால் பொருவுதல் யாண்டையது! ஒத்த பண்பு பற்றிய பொருவுதற் கண்ணது இவ்வாராயசசி என்பது.

காக்கப்பட்டன செப்பு வழாநிலையும் வினவு வழாநிலையும் என்பார் 'செப் பினும வினவினும்' என்றார். 'வழாலோம்பல்' (சொல் - கஉ) என்புழி

அடங்குமாயினும், நுண்ணுணர் வுடையார்க்கல்லது அதனுல் உணர்தலாகா மையின், விரித்துக் கூறியவாறு. தன்னினமுடித்தல் என்பதனுல் 'பொன் னுந் துகிரும் முத்தும் மணியும்' (புறம் - உகஅ) என எண்ணுகாலும் இன மாய பொருளே எண்ணப்படு மென்பது கொள்க. (கசு)

இயல்பு வழக்கும் தகுதி வழக்கும அமையும் வகை

கள. தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.

இ - ள்: தகுதிபற்றியும வழக்குப்பற்றியும் நடக்கும் இலக் கணத்திற் பக்கச் சொற் கடியப்படா ; எ - று.

தகுதி யென்பது அப் பொருட்குரிய சொல்லாற் சொல்லுதல் நீர்மை அன்று என்று அது கூளைந்து தக்கதோர் வாய்பாட்டால் கூறுதல். அது செத தாரைத் துஞ்சினுர் என்றலும், சுடுகாட்டை நன்காடு என்றலும், ஓலையைத் திருமுகம் என்றலும, கெட்டதனைப் பெருகிற்று என்றலும என இத் தொடக் கத்தன.

வழக்கு என்பது காரணமின்றி வழங்கற்பாடேபற்றி வருவது. பண்பு கொள் பெயராயினும் பண்பு குறியாது சாதிப் பெயராய வெள்யாடு வெண்க ளமர்[1] கருங்களமா[2] என வருவனவும், குடத்துள்ளும் பிற கலத்துள்ளும் இருந்த நீரைச் சிறிதென்னுது சில என்றலும், அடுப்பின் கீழ்ப்புடையை[3] மீயடுப்பு என்றலும், பிறவும் வழக்காறும்.

பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றலும், வண்ணக்கர் காணததை நீலம் என்றலும முதலாகிய குழுவின் வந்த குறிநிலை வழக்கும், கண் கழீஇ வருதும் கான்மேல் நீர்பெயது வருதும என்னுந் தொடக்கதது இடக்கரடக்கும் தகுதி என்றும, மரூஉமுடிபை வழக்காறு என்றும், உரை யாசிரியர் அமைததாரால் எனின்: குழுவின் வந்த குறிநிலை வழக்குச் சான்றோர் வழக்கின்கண்ணும் அவர் செய்யுட்கண்ணும வாராமையின் அமைக்கப்படாவாகலானும், இடக்கர - க்கு 'அவையல் கிளவி' (சொல்-சசஉ) எனவும், 'மறைக்குங்காலை' (சொல் - சசஙூ) எனவும், முன்னர் அமைக்கப் படுதலானும், மரூஉமுடிபு எழுத்ததிகாரதது கூறப்பட்டமையானும், அவர்க் கது கருததன் றென்பது. கருமை முதலாயின ஒரு நிகரன அன்மையிற் காக்கையொடு சார்த்திக் கரும்பழத்தை விதந்த துணே யல்லது காக்கைக்கு வெண்மை நேராமையிற் காக்கையிற் கரிது களம்பழம் என்புழிக் கரிது வெளி தாயிற் றன்று. ஆதலால் வழுவன்று. கிழக்கு மேற் கென்பன வரையறை யின்றி ஒன்றனெடு சார்த்திப் பெறப்படுவன வாதலின், ஒன்றற்குக் கீழ்பா லதனைப் பிறிதொன்றற்கு மேல்பால தென்றலும் வழுவன்று. சிறுவெள்வா யென்பது இடுகுறி. கருவாடு என்பதும் அது. அதனுன் இவை வழக்காறு என அமைக்கப்படாவாயினும், உரையாசிரியர் பிறர்மதம் உணர்த்திய கூறினர் என்பது.

தத்தமக்குரிய வாய்பாட்டானன்றிப் பிற வாய்பாட்டாற் கூறுதல் வழு வாயினும், அமைக என மரபுவழு அமைத்தவாறு. (கள)

1 வெணகளமா - வேளாளா 2 கருங்களமா - புலையா.
3 புடை - பகக அடுபபு.

கஅ. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே.

இ - ள்: இனப் பொருளைச் சுட்டுதலின்றிப் பண்படுத்து வழங்கப்படும பெயர் வழக்குநெறி யல்ல செய்யுள்நெறி; எ - று.

எ - டு: 'செஞ்ஞாயிற்று நிலனு வேண்டினும் வெண்திங்களுள் வெயில் வேண்டினும்' (புறம் - நஅ) என வரும்.

பல பொருட்குப் பொதுவாகிய சொல்லன்றே ஒரு பொருட்குச் சிறந்த பண்பான் விசேடிக்கப்படுவது; ஞாயிறு திங்கள் என்பன பொதுச் சொல் அன்மையிற் செஞ்ஞாயிறு என்றும் வெண்திங்கள் என்றும் விசேடிக்கப்படா வாயினும, செய்யுட்கண அணியாய் நிற்றலின், அமைக்க என்றார்.

பெருங்கொற்றன் பெருஞ்சாத்தன் என இல்குணம்[1] அடுத்து வழக்கின் கண்ணும் இனஞ்சுட்டாது வருதலின் செயயுளாறென்றல் நிரம்பாதெனின்: — அவை இனஞ்சுட்டாமையின் வழுவாயின அல்ல, இல்குணம் அடுத்தலின் வழுவாயின. இனஞ்சுட்டலாவது இனத்தைச் சுட்டி அவற்றினின்றும் விசேடிக்கப்படுதல். வெண்மை முதலாயின விசேடித்தலாவது அக் குணமில்லா இனப்பொருளின் நீக்கி அக் குணமுடையதனை வரைந்து சுட்டுவித்தலன்றே; சுட்டப்படுவதன்கண் அக் குணமில்லையாயின் வரைந்து சுட்டுவிக்குமாறு என்னே! அதனால் விசேடிக்கற்பாலது விசேடியாது நின்றதன்றுகலின் ஈண்டைக்கு எய்தா; 'வழக்கின் அகிய உயர்சொற் கிளவி' (சொல் - உஎ) என் புழி ஒன்றென முடிதலின் என்பதனால் அமைக்கப்படும்.

குறுஞ்சூலி, குறுந்தடி என்னுந் தொடக்கத்தன சூலி தடி யெனப் பிரிந்து நில்லாமையிற் பண்புகொள் பெயர் எனப்படா. பண்படாது, வடவேங்கடந் தென்குமரி, முட்டாழை, கோட்சுரை எனத் திசையும் உறுப்புந் தொழிலும் முதலாய அடையடுத்து இனஞ்சுட்டாது வருவன ஒன்றென முடித்தல் என்பதனால் செய்யுளாறென அமைதலுக் கொள்ளப்படும்.

ஒன்றனதாற்றலான் ஒன்று பெறப்படுதலின்,[2] வழக்காறல்ல என்றுணுஞ் செய்யுளாறென்றுணும் கூற அமையுமெனின்: உய்த்துணர்வது சொல்லில் வழி என மறுக்க.

பண்புகொள் பெயர் இனங்குறித்து வருதல் மரபு; அம் மாபு வழக்கின் கண் வழுவற்க என்றும், செய்யுட்கண வழுவமைக்க என்றுங் காத்தவாறு யிற்று. (கஅ)

கஉ. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

இ - ள்: தன்னியலபில் திரியாது நின்ற பொருளை, அதனியல்பு கூறுங்கால் ஆக்கமும காரணமும் கொடாது இற்றெனச் சொல்லுக; எ - று.

இயல்பாவது பொருட்குப் பின் தோன்றாது உடன் நிகழுந் தன்மை.

எ - டு. நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளி உளரும், உயிர் உணரும் என வரும்.

---

1 இலகுணம - இலலாதகுணம

2 ஒனறன தாறறலால ஒனறு பெறபபடுதல - வழககாறலல எனபதால செயயுளா றெனபதும செயயுளா றெனபதால வழககாறலல வெனபதும அறியபபடுதல.

இற்றென்பது வினைக்குறிப்பு வாய்பாடாயினும், உளரும், உணரும் என்னுந் தெரிநிலை வினையும், இற்றென்னும் பொருள்பட நிற்றலின், இற்றெனக் கிளத்தலேயாம்.

நிலம் வலிதாயிற்று என இயற்கைப்பொருள் ஆக்கம பெற்று வருமால் எனின் :—கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச் செய்யப்பட்ட நிலத்தை வலிதாயிற் றெனின், அது செயற்கைப் பொருளேயாம். நீர்நிலமும் சேற்று நிலமும் முன் மிதித்துச் சென்று வன்னிலம மிதித்தான், நிலம் வலிதாயிற்று என்றவழி மெலிதாயது வலிதாய் வேறுபட்டதென ஆக்கம் வேறுபாடு குறித்து நிற்றலின் இயற்கைப்பொருள் ஆக்கமொடு வந்ததன்றும். அல்லது நிலத்திற்கு வன்மை விகாரமென்று ஓர்ந்து நிலம் வலிதாயிற்று என்னுமாயின், திங்கள் கரிது என்பதுபோலப் பிறழ உணர்ந்தார் வழக்காய் ஆராயப்படா தென்க. (கக)

உ0. செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.

இ - ள் : காரணத்தால் தன்மை திரிந்த பொருளை, அத் திரிபு கூறுங்கால், ஆக்கங் கொடுத்துச் சொல்லுக ; எ - று.

ஆக்கமொடுகூறல் என்பதனால் திரிபு கூறுதல் பெற்றும். என்னை ? அதன்கணல்லது வாராமையின்.[1]

இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என்பன, இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (உ0)

உக. ஆக்கந் தானே காரண முதற்றே.

இ - ள் : செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறுங்கால, காரணத்தை முற்கூறி அதன்வழி ஆக்கங் கூறுக ; எ - று.

தானே என்பது செய்யுட்சுவை குறித்து நின்றது.

எ - டு : கடுக்கலந்த கைபிழியெண்ணெய் பெற்றமையான் மயிர் நல்ல வாயின ; எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால் யாத்தமையால் பைங்கூழ் நல்லவாயின ; நீர் கலத்தலால் நிலம் மெலிதாயிற்று ; நீசசார்தலால் நீர் வெய்தாயிற்று என வரும்.

மயிர் நல்ல, பயிர் நல்ல எனச் செயற்கைப் பொருள் ஆக்கம் பெறுது வந்தனவா லெனின் :—அங்ஙன்மை பொருட்குப் பின்தோன்றுது உடன் தோன்றிற்றேல் இயற்கையேயாம் ; அவ்வாறன்றி, முன் தீயவாய்ப் பின் நல்ல வாயினவேனும், தீயநிலைமை காணுதான் மயிர் நல்ல பயிர் நல்ல என்றல் படும் இழுக்கென்னை ? அது செயற்கையாவது உணர்ந்தான் ஆக்கங்கொடாது சொல்லினன்றே வழுவாவ தென்க.

செயற்கைப் பொருளை ஆக்முங் காரணமுங் கொடுத்துச் சொல்லுக என்பதே கருத்தாயின் சூத்திரம் ஒன்றுகற்பாற் றெனின் : --அவ்வாறேறுதின், ஆக்கமுங் காரணமுஞ் செயற்கைப் பொருட்கண் ஒத்தவாயின என்பது பட்டுக்[2]

---

1 "ஆக்கமொடுகூறல .....வாராமையின்"-ஒரு பொருளை வளாசியடையவதும திருந்துவதும கெடுவதும இனனொரு பொருளாய் மாறுவதுமே ஆகுமாம. அவவகையாகுமும திரிபேயாதலின, ஆகும கூறுவே திரிபும உடனை கூறியவாறும. ஆகுகதனினலன்றி வேறு வகையில திரிபிலலை எனபது.

2 "ஆகுமுங .....பட்டு" - செயறகைபபொருட்கு ஆகுமம போனறேறு காரணமும யாபபுரவாய (நியதியாய) வரவேண்டுமெனறு பொருளபடடு.

'காரணமின்றியும் போக்கின்று' (சொல் - உஉ) என்பதனோடு மாறுகோடலானும், காரணஞ் செயற்கைப் பொருளதோ ஆக்கத்ததோ என ஐயுறப்படுதலானும், ஆக்கந்தானே காரண முதற்றெனப் பிரித்துக் கூறினரென்பது.

இயற்கைப்பொருள் ஆக்கமுங் காரணமும் பெறாது வருதலும், செயற்கைப் பொருள் அவை பெற்று வருதலும் இலக்கண மெனவே, இவ்வாறன்றி வருவன மரபு வழு என்பதாம்.

நுண்ணுணர்வுடையார்க்குத் 'தம்மாபினவே' (சொல் - கக) என அடங்குவ வாயினும், ஏனையுணர்விலார்க்கு இவ்வேறுபாடு உணர லாகாமையின், விரித்துக் கூறினர். (உக)

உஉ. ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

இ - ள்: காரண முதற்றெனப்பட்ட ஆக்கச் சொல் காரண மின்றி வரினுங் குற்றமின்று வழக்கினுள்; எ - று.

எ - டு: மயிர் நல்லவாயின, பயிர் நல்லவாயின என வரும்.

வழக்கினுட் காரணமின்றியும் வருமெனவே, செய்யுளுட் காரணம் பெற்றே வருமென்பதாம்.

எ - டு: 'பரிசிலர்க் கருங்கல நல்கவுங் குரிசில்
வலிய வாகுநின் தாள்தோய் தடக்கை' (புறம் - கச)

எனவும்,

'தெரிகணை யெஃகம் திறந்தவா யெல்லாம்
குருதி படிந்துண்ட காகம் - உருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மால்
தப்பியா ரட்ட களத்து' (களவழி நாற்பது - நி)

'வருமழைய வாயகொள்ளும் வாடாச்சீர் வண்கைக்
கருமுருகன் சூடிய கணணி - திருநுதால்
இன்றென் குறற்கூந்தல் பெய்தமையால் பண்டைத்தன்
சாயல வாயின தோள்'

எனவும் காரணம் பெற்று வந்தவாறு கண்டுகொள்க. குக்கிற்புறத்த, சிரல்வாய என ஆக்கமின்றி வந்தனவா லெனின்:—தொகுக்கும்வழித் தொகுத்தல் என்பதனான் ஆண்டாக்கந் தொக்கு நின்றதென்பது.

'அரிய கானஞ் சென்மோர்க்
கெளிய வாகிய தடமென் றோளே' (குறு - எஎ)

எனவும்,

'நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு' (குறள் - நஂடு)

எனவும், செயற்கைப் பொருள் செய்யுளுள் காரணமின்றி வந்தனவா லெனின்:—களவுக்காலத் தரியன இக்காலத்து எளிய வாயின என்பது கருத்தாகலான், இக்காலங் காரணமென்பது பெறப்படுதலானும், ஊழாலென்பது

அதிகாரத்தான் வருமாகலானும், அவை காரணமின்றி வந்தன எனப்படா வென்பது. (உஉ)

பால் ஐயமுள்ளன அமையும் வகை

உங. பால்மயக் குற்ற ஐயக் கிளவி
தான்அறி பொருள்வயின் பன்மை கூறல்.

இ - ள்: திணை துணிந்து பாலதுணியாத ஐயப் பொருளை அவ்வத்திணைப்பன்மையாற் கூறுக; எ - று.

கிளவி என்றது ஈண்டுப் பொருளை.

ஐயப்பொருளாவது சிறப்பியல்பால் தோன்றுது பொதுவியல்பால் தோன்றிய பொருள்.[1]

எ - டு: 'ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ இஃதோ தோன்றுவார்' எனவும், 'ஒன்றோ பலவோ செய புக்கன' எனவும் வரும்.

திணைவயின் என்னுது தானறிபொருள்வயின் எனப் பொதுப்படக் கூறியவதனான், 'ஒருவன்கொல்லோ பலர்கொல்லோ கறவை யுய்த்த கள்வர்' எனவும், 'ஒருத்திகொல்லோ பலர்கொல்லோ இக்குருக்கதகிழல் வண்டலயர்ந்தார்' எனவும், திணையோடு ஆண்மை பெண்மை துணிந்த பன்மை யொருமைப்பா லேயமுங கொள்ளப்படும்.

ஒருமையாற்கூறின் வழுப்படுதல் நோக்கிப் பன்மை கூறல் என வழா நிலை போலக் கூறினாரேனும், ஒருமையைப் பன்மையாற் கூறுதலும் வழுவாத லின், ஐயப்பொருண்மேல் சொல் நிகழுமாறு உணர்த்திய முகத்தால் பால்வழு அமைததவாறும். (உங)

உச. உருபென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்று முரித்தே சுட்டுங் காலை.

இ - ள்: உருபெனச் சொல்லுமிடத்தும், ஒருமையும் பன்மையு மாகப் பிரிக்கப்படும் அஃறிணைப் பொதுச் சொற்கண்ணும், இவ் விரு கூற்றினும் ஐயப்புலப்பொதுச் சொல்லாதல் உரித்து; எ - று.

எனவே, 'ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ தோன்று நின்ற உருபு' எனவும், 'ஒன்றுகொல்லோ பலகொல்லோ செய் புக்க உருபு' எனவும், 'குற்றிகொல்லோ மகன்கொல்லோ தோன்றுநின்ற உருபு' எனவும், 'ஒன்றுகொல்லோ பலகொல்லோ செய் புக்க பெற்றம்' எனவும் சொல்லுக என்பதாம்.

ஐயக்கிளவி யென்பது அதிகாரத்தாற் பெற்றும்.

உருபினும் என்னுது உருபென மொழியினும் என்றதனான், உருபின் பொருளவாகிய வடிவு பிழம்பு பிண்டமென்னுந் தொடக்கத்தனவுங கொள்க.

பன்மை கூறல் உயர்திணைப்பாலேயத்திற்கு உரித்தென்றும், உருபென மொழிதல் திணையையத்திற்கு உரித்தென்றும் உரையாசிரியர் கூறினாரா லெனின்:—அவை அவற்றிற்கே உரியவாயின், அஃறிணைப் பிரிப்பு என்றுற் போல உயர்திணைப்பான் மயக்குற்ற என்றும், திணையையத்து என்றும், விதந்

1. சிறபபியலபு பால; பொதுவியலபு திணை.

தோதுவர் ஆசிரியர்; அவ்வாறு ஓதாமையானும், நடையுள்[1] அவை பொதுவாய் வருதலானும், அவை போலி யுரை யென்க.

ஒருவன்கொல்லோ பலர்கொல்லோ என்றற் றொடக்கத்து உயர்திணைப் பன்மை யொருமைப்பால் ஐயத்திற்கு உருபு முதலாயின ஏலாமையும், திணையையத்திற்கும் ஏனைப்பாலையத்திற்கும் ஏற்புடைமையும், சுட்டியுணர்க என்பது போதரச் 'சுட்டுங்காலை' யென்றார். சுட்டுதல் - கருதுதல். (உச)

அவை, துணிந்தபின் அமையும் வகை

உரு. தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான.

இ - ள்: ஐயுற்றுத் துணியும்வழி அன்மைக் கிளவி அன்மைத் தன்மையைச் சுட்டி நிற்றலு முரித்து என்று சொல்லுவர், துணிந்து தமீஇக் கொள்ளப்பட்ட பொருளின் வேறுய பொருளிடத்து; **எ - று.**

என்றது, குற்றிகொல்லோ மகன்கொல்லோ என்றாலும், ஒருவன் கொல்லோ ஒருத்திகொல்லோ என்றாலும், ஒன்றுகொல்லோ பலகொல்லோ என்றாலும், ஐயம் நிகழ்ந்தவழித் துணிதலு முண்டு; பிறநடையுள் துணிந்த வழி மறுக்கப்படும் பொருண்மேல் அன்மைத்தன்மை யேற்றினும் அமையும் என்றவாறு.

மகனென்று துணிந்தவழிக் குற்றியன்று மகனெனவும், குற்றியென்று துணிந்தவழி மகனல்லன் குற்றி யெனவும், ஆண்மக னென்று துணிந்தவழிப் பெண்டாட்டி யல்லள் ஆணமகனெனவும், பெண்டாட்டி யென்று துணிந்தவழி ஆணமகனல்லன் பெண்டாட்டியெனவும், ஒன்றென்று துணிந்தவழிப் பலவல்ல ஒன்றெனவும், பலவென்று துணிந்தவழி ஒன்றன்று பலவெனவும் மறுக்கப்படும் பொருண்மேல் அன்மைக்கிளவி அன்மைத்தன்மையைச் சுட்டி நின்றவாறு.

உம்மை எதிர்மறையாகலான், வேறிடத்துச் சுட்டாமையே பெரும் பான்மை யென்பதாம். ஆகவே, இவ்வுருபு குற்றியன்று மகனென ஐயப்புல மாகிய பொதுப்பொருண் மேலானும், குற்றியல்லன் மகனெனத் துணி பொருள் மேலானும அன்மைக்கிளவி அன்மை சுட்டி நிற்றல் பெரும்பான்மை யென்பதாம்; என்னை? வேறிடத்துச் சுட்டாமையாவது ஈண்டுச் சுட்டலே யாகலான்.

குற்றியன்று மகன் என்றவழி மகனென்பது நின்று வற்றுமெனின்:—

'எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப' (சொல் - சுஅ)

என்பதனுன் எழுவாய் வெளிப்படாது நிற்றலு முண்மையான், வெளிப்படாது நின்ற இவனென்னும் எழுவாய்க்கும் அது பயனிலையாகலின், நின்றுவற்றுதல் யாண்டைய தென்க. அல்லனவற்றிற்கும் ஈது ஒக்கும்.

குற்றியல்லன் என்புழிக் குற்றியென்பது அல்லனென்னுஞ் சொல்லோடியைந்தவாறு என்னை யெனின்:— இவ்வுருபு குற்றியாம் என்றவழி ஆம் என்பதனோடு குற்றியென்பதாஉம் எழுவாயாய் நின்றே இயைந்தாற்போல, இவன் குற்றியல்லன் என்புழி ஆமென்பதன் எதிர்மறையாகிய அன்மைக் கிளவி

1. நடை என்றது வழக்கை.

யோடும் குற்றியென்பது எழுவாயாய் நின்றே யியையு மென்பது. எழுவாயாய் இயைதலி னன்றே யான் நீயல்லன் என்புழி நீயென்பது வேற்றுமைக்கேற்ற செய்கை பெறுது நின்றதென்க. (உரி)

வண்ணச் சினைச்சொல் அமையும் வகை

உசு. அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.

இ - ள்: பண்புச்சொல்லும், சினைச்சொல்லும், முதற்சொல லும் என மூன்றுங் கூறப்பட்ட முறை மயங்காமல, வழக்கைப் பொருந்தி நடக்கும், வண்ணச் சொல்லோடு தொடர்ந்த சினைச் சொல்லையுடைய முதற்சொல்; எ - று.

வடிவு முதலாகிய பிற பணபும் உளவேனும, வண்ணப் பண்பினது வழக்குப்பயிற்சி நோக்கி 'வண்ணச சினைச சொல்' என்றார.

எ - டு: செங்கால்நாரை, பெருந்தலைச சாததன் என வரும். கால் செந்நாரை, தலைபெருஞ் சாத்தன் என முறை மயங்கி வரின், மரபு வழுவா மென்க.

வழக்கினுள் மயங்காது வருமெனவே,

'கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
செவிசெஞ் சேவலும பொருவலும வெருவர
வாயவன் காக்கையுங கூகையுங கூடி' (புறம் - உகஅ)

எனச செயயுளுள் மயங்கியும் வரப்பெறும என்றவாறும. செவிசெஞ் சேவல், வாய்வன் காக்கை என்பன, செஞ்செவிச சேவல், வல்வாய்க் காக்கை என்னும பொருள்பட நின்றமையின், வணணச் சினைசசொல் மயக்கமாயின. அஃதேல், சினையடையாகிய செமமையும் வன்மையும முதலடை ஆயினவாறு என்னை யெனின்:—சினையொடு முதற்கு ஒற்றுமை யுண்மையான் அவை முதலொடும் இயையுடைய வென்பது.

'பெருந்தோள் சிறுநுசுப்பின் பேரமர்க்கண் பேதை' என்புழி மூன்றும் வழி முதல் கிடவாது பின்னும் அடையுஞ் சினையும புணர்த்தமையான் வண் ணச் சினைசசொல் செய்யுளுள் மயங்கி வந்ததென்று உரையாசிரியர் கூறினார் லெனின்:—மூன்றும்வழிப் புணர்க்கப்படும பேதை யென்னும் முதற் சொல் பேரமர்க்கண் என்னுந் தொகையோடு வேற்றுமைப் பொருள்படத் தொக்கு, அத்தொகை சிறுநுசுப்பு என்னுந தொகையோடும் அப் பொருள்படத் தொக்கு, ஒரு சொல்லாய், 'பெருந்தோட் பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதி' என்றாற்போல மூன்றும்வழிப் பிற சொல்லடுத்துப் பேதை யென்னும் முதல் கிடந்ததெனவே படுதலின், மயக்க மின்மையான், அவர்க்கது கருத் தன்றென்க. அன்றிப் பெருந்தோள் முதலாகிய மூன்றும பலபெயர் உம் மைத்தொகைபடத் தம்முள்தொக்கு ஒரு சொல்லாய்ப் பின் பேதை யென்பத னோடு வேற்றுமைத் தொகைபடத் தொக்கன வெனினும், அவை உம்மைத் தொகைபடத் தொகாது நின்று பேதை யென்பதனோடு வேற்றுமைத் தொகைபட ஒருங்கு தொக்கன வெனினும், தம்முள் இயையாது பேதை யென்பதனோடு இயைதலின், ஆண்டும் மயக்க மின்மை யறிக. அஃதேல்,

இவ்வாறு வருதல் வழக்கிற்கும் உரித்தோ எனின் :—அடுக்கிய அடையும் சினையும் பொதுமை நீக்குதற்கன்றி அணி குறித்து நிற்றலின் செய்யுட்கே உரித்தென்பது. 'சிறுபைந்தூவி' (அகம் - நிள) எனச் சினையொடு குணம் இரண்டடுக்கி வருதல் செய்யுட் குரித்து என்றும், 'இளம்பெருங் கூத்தன்' என முதலொடு குணம் இரண்டடுக்கி வருதல் வழக்கிற் குரித்து என்றும், பிறர் மதமேற் கொண்டு கூறினர். ஒன்றுக பலவாக இனஞ்சுட்டாதன செய்யுட்கு உரியவாம், இனஞ்சுட்டி நின்றன வழக்கிற்கு உரியவாம் என்பதே உரையாசிரியர் கருதுதென்க. அன்றிப் பிறநூன் முடிந்தது தானுடன்படுதல் என்பதனால் சினையொடு குணம் இரண்டடுக்கல் செய்யுளாறென்று கொள்ளினும் அமையும் ;

'முதலொடு குணமிரண் டடுக்கல் வழக்கியல்
சினையோ டடுக்கல் செய்யு ளாறே'

என்றாராகலின்.

வண்ணச் சினைசசொல் என்றதனால் வண்ணமும் சினையும் முதலுங் கூறுதற்கண்ணது இவ்வாராய்சசி யென்பதாம். எனவே, இளம்பெருங்கூத் தன், பெரும்பலாக்கோடு என்னுந் தொடக்கதன வேண்டியவாறு வரப்பெறு மென்றவாறு.

மயங்காது வருக என மரபுவழுக் காத்தவாறு. (உசு)

பால் வழுவமைதி

உள. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னெய்திய வுயர்சொற் கிளவி ;
இலக்கண மருங்கின் சொல்லா றல்ல.

இ - ள் : ஒருவனையும் ஒருத்தியையுஞ் சொல்லும் பன்மைச் சொல்லும், ஒன்றனைச் சொல்லும் பன்மைச் சொலலும், வழக்கின் கண் உயர்த்துச் சொல்லுஞ் சொல்லாம், இலக்கண முறைமை யாற் சொல்லும் நெறியல்ல ; எ - று.

எ - டு : யாம் வந்தேம், நீயிர் வந்தீர், இவர் வந்தார் என வரும.[1]

உயாசொல் உயர்க்குஞ் சொல்.

உயர்சொற் கிளவி யென்புழிக் கூறியது கூறலன்மை பண்புத்தொகை யாராய்ச்சிக்கண் சொல்லுதும்.*

தாம் வந்தார் தொண்டனர் எனப் பன்மைக்கிளவி இழித்தற் கண்ணும் வந்ததாலெனின் :—ஆண்டு உயர்சொல் தானே குறிப்பு நிலையாய் இழிபு விளக்கிற்றென்பது.

---

1 ஒருவா எனனும சொலலும உயாசொற கிளவியே, ஒருவா தாமாய ஒனறை எண ணும் போதும ஓ ஆசிரியரும ஒரு தகவலும ஒனறைக கூறுமபோதும 'யாம' எனனும பனமைச சொல நிகழும. ஆசிரியா கூறுவதை ஆங்கிலததில Editorial 'we' எனபா, யாஙகள் நீங்கள அவாகள எனனும இரட்டைப பனமைப பெயா கள் ஆசிரியா காலததில வழஙகவிலலை.

* நகையாடல பறறி வநத 'நரியனா' 'தேரையா' எனபனவும, உயாவுபறறிவநத 'நாலடியாா' 'திருகோவையாா' எனபனவும இவை போனறவும ஒனறனைக கூறும பனமைக கிளவிகளாம.

இலக்கண மருங்கின் சொல்லாறல்ல என்றதனுன் இலக்கண மன்மையும், வழக்கினுகிய உயர்சொற் கிளவி யென்றதனுன் வழுவன்மையுங கூறினுர்; கூறவே, வழுவமைதி யென்றவாறும். அஃதேல், "வழக்கினுகிய உயர்சொற் கிளவி" யெனவே வழுவமைதி யென்பது பெறுதும்; இலக்கண மருங்கின் சொல்லாறல்ல எனல் வேண்டா வெனின்:—அங்ஙனங கூறிற் செய்யுள் வரைந்தவாறே வழுவமைத்தவாறே என ஐயமாக்கலின், அவ்வாறு கூறல் வேண்டு மென்பது.

பன்மைக் கிளவியும் எனப் பொதுவகையால் கூறினுரேனும், உயர்த்தற் கண் வழங்கப்பட்டு வரும் உயர்திணைப் பன்மையும் விரவுப் பன்மையுமே கொள் ளப்படும் என்றற்கு 'வழக்கினுகிய' என்றுர்.

தன்னினம் முடித்தல் என்பதனுன் எருத்தையும் ஆவையும, எந்தை வந்தான், எம்மன்னே வந்தாள் என உயர்திணையாய் உயர்த்து வழங்கலும், ஒன்றென முடித்தல் என்பதனுல் 'கன்னிஞாழல்,' (சிலப்-கானல்வரி-கஅ) கன்னியெயில் என அஃறிணையாய் நின்று உயர்திணை வாய்பாட்டால் கூறப் படுதலும், பண்புகொள் பெயராகொடை, வழக்கினகத்தும், பெருங்கொற்றன், பெருஞ்சாத்தன் என இல்குணம் அடுத்து உயர் சொல்லாய வருதலுங கொள்க. (உஎ)

ங. இடம்

இடம் உணர்த்தும் சொற்கள்

[1]உஅ. செலவினும் வரவினுந் நரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப.

இ - ள்: செலவு முதலாகிய நான்கு தொழிற்கண்ணும் நிலை பெறப் புலப்படாநின்ற அந்நான்கு சொலலும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் அம்மூவிடத்திற்கு முரியவாய் வரும்; எ - று.

செலவு முதலாகிய தொழிற்கண் சிறப்பு வகையான் நிலைபெறுது பொது வாய் வரும இயங்குதல் ஈதல் என்னுந் தொடக்கத்தனவற்றின் [2]நீக்குதற்கு 'நிலைபெறத் தோன்றும்' என்றுர்.

முற்றும் எச்சமும் தொழிற்பெயருமாகி அதைதொழில்பற்றி வரும் வாய் பாடு பலவாயினும், அவையெல்லாம் இந்நான்கு தொழிலும் பற்றித் தோன்று தலின், 'நான்கு சொல்' என்றுர்.

பொருள் வகையான் முன்னறியப்பட்டமையான் 'அந்நாற் சொல்லும்' என்றுர்.

இச சூத்திரத்துள் ஈங்கு முதலாயின தன்மைக்கண்ணும், ஆங்கு முதலா யின படர்க்கைக்கண்ணும் அடக்கப்பட்டன.[3]

---

1 28, 29, 30 ஆகிய மூனறு நூறபாகக்கீயும தெயவச சிலையா ஒனறுக்க கொணடு பொருள கூறுவா.

2 இயங்குதல, செலவு வரவுகட்கும, ஈதல தரவு கொடைகடகும பொதுவாம.

3 ஈங்கு வந்தான எனபது எனனிடம வந்தான எனறும ஆங்குச சென்றன எனபது அவனிடம சென்றன எனறும, சில சமயத்திற பொருள நிருதலால, ஈங்கு முத லாயின தனமைக்கண்ணும ஆங்கு முதலாயின படாக்கைக்க கண்ணும அடக்கப் பட்டன.

வினைசொல் மூன்றிடத்திற்கும் உரியவாதல் வினையியலுள் பெறப் படுதலின் ஈண்டுக் கூறல்வேண்டா எனின் :—ஆண்டுப் பாலுணர்த்தும் ஈற் றுன் இடத்திற்குரிமை கூறினார், ஈண்டு ஈற்றுனன்றிச செலவு முதலாயின முதனிலை தாமே இடங்குறித்து நிற்றலுடைமையான், இவ்வேறுபாடு ஆண்டுப் பெறப்படாமையின், ஈண்டுக் கூறினுரென்பது. அஃதேல், தருசொல் வரு சொல் ஆயிரு கிளவியுந் தன்மை முன்னிலை யாயீரிடத்த, படர்க்கையிடத்த கொடைசசொல்லுஞ் செலவுச சொல்லும் என ஒதுக, இசசூத்திரம் வேண்டா வெனின் :—அங்ஙனமோதின், இடஞ்சுட்டிய முதனிலை இந்நான்குமே யென் னும் வரையறை பெறப்படாமையின், இது வேண்டுமென்பது. அஃதேல், போதல் புகுதல் என்னுந் தொடக்கத்தனவும் இடஞ்சுட்டுதலின் நான்கென் னும் வரையறை அமையாதெனின் :—அவை இக்காலத்துச் சிலவிடத்துப் பயின்று வருமாயினும் மூன்றிடத்திற்கும் பொதுவாகலினன்றே, ஆசிரியர் அந் நாற் சொல்லுமென இவற்றையே வரைந்தோதுவாராயிற் றென்பது. (உஅ)

தன்மை முன்னிலைக்குரிய சொற்கள்

உகூ. அவற்றுள்
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த.

இ - ள் : கூறப்பட்ட நான்கு சொல்லுள், தருசொல்லும் வரு சொலலுமாகிய இரண்டும் தன்மை முன்னிலையாகிய இரண்டிடத் திற்கும் உரிய ; எ - று.

எ - டு : எனகுத் தந்தான், நினக்குத் தநதான், என்னுழை வந்தான், நின்னுழை வநதான் எனவும் ; ஈனகு வநதான் எனவும் வரும்.

தரப்படும் பொருளை எற்பான் தானும் முன்னின்முனும் ஆகலானும, வரவுதொழில் தன்கண்ணும முன்னின்முன் கண்ணும் சென்று முடிதலானும், ஈற்றுனன்றி இவ்விரு சொல்லும தன்மை முன்னிலைக்கு உரியவாயினவாறு கணடுகொள்க.

‘நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்து மூரிய’ (சொல் - உஅ)

என்று மூன்றிடத்திற்கும வரைவின்றி ஆம எனவுங கொள்ள வைத்தமையான்,

‘பெருவிற லமரர்க்கு வென்றி தந்த’ (புறம் - நிநி)

எனவும,

‘தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது’ (அகம் - நசு)

எனவும்,

மயஙகி வருவனவும் அமைக்கப்படும். அஃதேல், படர்க்கைச்சொல்மயக்க மும எய்துமா லெனின் :—அஃது எச்சவியலுள் பெறப்படுதலின்,[1] ஈண்டுக் கொள்ளப்படாதென்க.

---

1 எசசவியலுட் பெறபபடுதலின எனறு கூறியது,

‘‘கொடுவென கிளவி படாகசையாயினுங
தனனேப பிறனபோற கூறுங் குறிபபில
தனனிடத தியலு மெனமனுர புலவா’’

எணணும எசசவியல 52-ம நூறபாவை நோகக.

ஒருவன் சேய்நிலத்து நின்றும் அணிநிலத்துப் புகுந்தானுயின் சேய்நிலம் நோக்க அணிநிலம் ஈங்கெனப்படுதலின், அவன்கண வந்தான், ஆங்கு வந்தான் என்பன இலக்கணமேயாம். இச்சான்கும் கொடைப் பொருளன என்று உரையாசிரியர் கூறினராலெனின் :—'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது' என்பதனை அமைத்தாராகலின், அவர்க்கது கருதன் றென்க.

தரவு வரவை யுணர்த்துவனவற்றைத் தருவதும் வருவதும் போலத் தரு சொல், வருசொல் என்றார். (உக)

படர்க்கைக்குரிய சொற்கள்

உ0. ஏனை யிரண்டும் ஏனை யிடத்த.

இ - ள் : செலவுச்சொல்லும் கொடைச்சொல்லும் படர்க்கைக்குரிய ; எ - று.

எ - டு : அவன்கட் சென்றான், ஆங்குச சென்றான், அவற்குக் கொடுத்தான் என வரும்.

செலவுதொழில் படாக்கையான்ணை சென்றுறுதலானும், கொடைப் பொருளேற்பான் படர்க்கையான் ஆதலானும் ஈற்றனன்றி[1] இவ்விருசொல்லும் படர்கையிடதிற்குரியவாயினவாறு கண்டுகொள்க. (உ0)

'யாது' 'எவன்' என்னும் சொற்கள் அமையும் வகை

உக. யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்.

இ - ள் : யாது எவன் என்னும இரண்டுசொல்லும அறியாப் பொருளிடத்து வினவாய் யாப்புறத் தோன்றும் ; எ - று.

எ - டு : இசசொற்குப் பொருள் யாது, இச சொற்குப் பொருள் எவன் என வரும்.

எவ்வகையானும் அறியாப்பொருள் வினவப்படாமையின், ஈண்டு அறியாப்பொருள் என்றது பொதுவகையான் அறியப்பட்டசு சிறப்புவகையான் அறியப்படாத பொருளேயாம்.

யா, யாவை, யாவன், யாவள், யாவர், யார், யாண்டு, யாங்கு என்னும் தொடக்கத்தன திணையும் பாலும் இடமும் முதலாகிய சிறப்புவகையானும் சிறிதறியப்பட்ட பொருளனவாகலின், அறியாப்பொருள்வயின் செறியத் தோனறுமை யான், இவற்றையே விதந்து 'அறியாப்பொருள்வயின் செறியத் தோன்றும்' என்றார். இவையும திணையும் பாலும் குறித்து வருதலின் சிறப்புவகையானும் அறியப்பட்ட பொருளனவேயன்றே எனின் :—அற்றன்று இசசொற்குப் பொருள் யாது, எவன் என்று வினையவழி, இறப்பானும், அஃறிணையொருமையும் பொதுமையும் துணிந்து அவற்றுள் பகுதியறிதற்கு வினவுகின்றனல்லன் பொதுவகையான் வினவுகின்றன் என்று உணரும. ஆகலின், அவ்வாறுதல் வழக்கினகத்து வினவுவானதும் இறுப்பானதும் குறிப்பொடு படுத்து உணர்க.

முன்னர் வழுவமைத்தற்கு அவை இன்னபொருட்கு உரிய என அவற்றது இலக்கணம் கூறியவாறு. (உக)

1 ஈற்றனன்றி - ஈற்றனலலாது முதனிலையால.

அவற்றுள், 'யாது' என்னும் சொல்

நஉ. அவற்றுள்
யாதுஎன வரூஉம் வினவின் இளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த இளவி யாதலு முரித்தே.

இ - ள்: கூறப்பட்ட இரண்டனுள் யாதென்னும் வினாச்சொல் அறியாப்பொருள் வினாவாதலேயன்றி அறிந்த பொருட்கண் ஐயம நீக்குதற்கு ஆராய்ந்த சொல்லாதலும உரித்து; எ - று.

எ - டு: இம்மரங்களுள் கருங்காலி யாது, நம்மெருதைந்தனுள் கெட்ட எருது யாது என வரும்.

நமருள் யாவர போயினர், அவற்றுள் எவ்வெருது கெட்டது எனப் பிறவும் அறிந்த பொருள்வயின் ஐயந்தீர்தற்குத் தெரிந்த இளவியாய் வருதலின், அவையும ஈண்டமைக்கற்பால எனின்:—அவை அறிந்தபொருள்வயின் ஐயந்தீர்தற்கல்லது யாண்டும் வாராமையின், ஈண்டமைக்கப்படா வென்பது.

இதனுன் வினாவழுவமைததார். (நஉ)

சினைமுதற் சொல் அமையும் வகை

நஙு. இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியில்[1] உம்மை வேண்டும்.

இ - ள்: கேட்போரான் இத்துணை யென்று அறியப்பட்ட சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும் வினைப்படு தொகுதிக்கண் உம்மை கொடுத்துச் சொலலுக; எ - று.

எ - டு: 'பன்னிரு கையும் பாற்பட வியற்றி' (திருமுருகா-திருச்சீரலை வாய) எனவும, 'மூசு முழங்குதாணை மூவருங் கூடி' (பொருநரா-டுச) எனவும் வரும்.

அறிந்த சினைமுதற்கிளவி எனவே, முன்னறியப்படாதகால், முருகற்குக் கை பன்னிரண்டு, தமிழ்நாட்டிற்கு வேந்தர் மூவர் என உம்மை பெறாது வரும் என்பதாம்.[2]

ஐந்தலைநாகம உடன்றது, நான்மறைமுதல்வர் வந்தார் என்புழி, இனைத்தென அறிந்த சினைமுதற்கிளவியாயினும், வினைப்படுதொகுதி யன்மையின், உம்மை பெறுவாயின. அஃதேல், பன்னிருகையும் என்புழியும் தொகுதிப் பெயர் வினையொடு தொடராது கையென்பதனோடு ஒட்டி நிற்றலின், வினைப்படுதொகுதியன்றும் பிறவெனின்: —ஒட்டி நின்றதாயினும், ஐந்தலை நாகம், நான்மறைமுதல்வர் என்பன போலாது இருசொல்லும் ஒரு பொருண மேல் வருதலின் கையென்பதனோடு இயைந்த இயற்றி என்னும் வினை தொகுதிப்பெயரொடும் இயைந்ததாம்; அதனுன் அது வினைப்படு

1 'வினைபபடுதொகுதியின' - முழுதுதொகையையுங குறிதது வினையொடுமுடியும போது வினை - முடிகுஞு சொல.

2 'முருகற்குக கை பனனிரணடு', 'தமிழ நாடடிறகு வேநதா மூவா' எனபன, முனனறியப படாமையானனறு, வினைபபடுதொகுதியனமையானேயே உமமை பெறுவாயின.

தொகுதியா மென்பது. அஃதேல், கண்ணிரண்டும் குருடு; எருதிரண்டும் மூரி எனப் பெயர் கொண்டவழி உம்மை பெறுமாறு என்னெயெனின் :—பெய ராக வினையாக முடிக்குஞ் சொல்லொடு படுதலே ஈண்டு வினைப்படுதல் என்ரு ராகலின், அவையும் வினைப்படு தொகுதியாம் என்க. ஐந்தலே, நான்மறை என்பனவற்றிற்கு நாகம், முதல்வர் என்பன முடிக்குஞ்சொல் அன்மையின், வினைப்படு தொகுதியாகாமை யுணர்க.

'சிறப்புடைப் பொருளேத் தானினிது கிளத்தல்' என்பதனல் சினை முதற் கிளவி யென்ரு ராயினும், சிறவாத பண்பு முதலாயினவும் கொள்ளப் படும்.

எ - டு. சுவையாறு முடைத் திவ்வடிசில், கதியைந்து முடைத் திக் குதிரை என வரும்.

'இருதோள் தோழர்பற்ற' எனவும், 'ஒண்குழை யொன்று ஒல்கி யெருத்தலேப்ப' எனவும் உம்மையின்றி வந்தனவா லெனின் :—ஆண்டும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றன வென்பது. (நந)

நிலையாமைக்குரிய சொல் அமையும் வகை

நச. மன்னுப் பொருளும் அன்ன இயற்றே.

இ - ள்: இல்லாப் பொருட்கும இடமும் காலமும் பொருளும் முதலாயினவற்றொடு படுத்து இன்மை கூறுதற்கண் உம்மை கொடுத்துச் சொலலுக; எ - று.

எ - டு: பவளக்கோட்டு நீலயானே சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லே ஏனவும், குருடு காணடல் பகலுமிலலே எனவும், 'உறற்பால நீக்கல் உறுவாசகு மாகா' (நாலடி - கoச) எனவும் வரும. இல்லாப் பொருட்கு ஒருகாலும் நிலேயுறுதலின்மையின், 'மன்னுப் பொருள்' என்ரூர்.

இடம் முதலாயினவற்றொடு படுத்தற்கண் என்பது ஏற்புழிக்கோடல் என்பதனல் பெற்றும். அவற்றொடு படாதவழிப் பவளக்கோட்டு நீலயானே யில்லே என உம்மையின்றி வருமென்பதாம்.

முற்றும்மையும எசச உம்மையுமாகிய வேறுபாடுடைய வேனும, உம்மை பெறுதல் ஒப்புமையால், 'அன்ன இயற்று' என்ரூர.

இரண்டு சூத்திரத்தானும் மரபுவழுக் காத்தவாறு. (நச)

இல்லாமைக் குரிய சொல் அமையும வகை

நடு. எப்பொரு ளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்.

இ - ள்: யாதாயினும் ஒரு பொருளேயாயினும் ஒருவன் அல்ல தில்லென்னும் வாய்பாட்டான் இலலேயென லுறின், அப்பொருள் தன்னேயே கூருது அப்பொருளல்லாத பிறிது பொருள் கூறுக; எ - று.

எ - டு: பயறுளவோ வணிகீர் என்று வினயவழி உழுந்தல்லதில்லே; கொள்ளல்லதில்லே என அல்லதில் லென்பான் பிறிது பொருள் கூறியவாறு கண்டுகொள்க.

அல்லதில்லெனின் எனப் பொருள்பற்றி ஒதினராகலின், அல்லதில் லென்னும் வாய்பாடே யன்றி, உழுந்தன்றியில்லை உழுந்தேயுள்ளது என அப் பொருள்படுவன எல்லாம் கொள்க. உழுந்தல்லதில்லை எனப் பிறிது பொருள் கூறுது பயறல்லதில்லை யென அப்பொருள் கூறின், பயறுள்ள அல்லன வில்லையென மறுதலைப் பொருள்பட்டுச் செப்பு வழுவாமாறு அறிக.

யாதானுமாக அல்லதில்லெனின் பிறிது பொருள் கூறுக என எஞ்சாமல் தழீஇ யாப்புறுத்தற்கு எப்பொருளாயினும் என்றார்.

அல்லதில் என்பதற்குத் தன்னுழையுள்ளதல்லது என்றும், அப் பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல் என்பதற்கு இனப்பொருள் கூறுக என்றும், உரைத்தாரால் உரையாசிரியரெனின் :—பயறுளவோ என்று வினையவழிப் பயறில்லை யென்றற்பாலும் வழுவின்மையானும், உள்ளதல்ல தென்றல் கருத் தாயின் ஆசிரியர் அல்லதெனக் குறித்த பொருள் விளங்காமையின் அகப்படச்[1] சூத்திரியா ராகலானும், பாம்புணிக் கருங்கல்லும்[2] பயறும் விற்பா லெருவ னுழைச சென்று பயறுளவோ என்றவழிப் பாம்புணிக் கருங்கலல்லதில்லை யென்றல் இனப்பொருள் கூறுமையாற் பட்ட இழுக்கின்மையானும், அவை போலியுரை யென்க. அல்லதூஉம், இனப்பொருள் கூறுக என்பதே கருத்தா யின், அப்பொருளல்லா இனப்பொருள் கூறல் என்னுது பிறிது பொருள் கூறல் என்னோ ஆசிரியர், அதனானும் அஃதுரையன்மை யுணர்க. (நகு)

நசு. அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்.

இ - ள் : அலலதில் என்பான், பிறிது பொருள் கூறுது அப் பொருள் தன்னையே கூறுமாயின், இபபயறலலதில்லை எனச் சுட் டிக் கூறுக ; **எ - று.**

பயறுளவோ என்றவழிச சுட்டாது பயறல்லதில்லை எனின் பயறுள உழுந்து முதலாயின இல்லை எனப் பிறிது பொரு ளேற்பித்துச செப்புவழுவா மென்பது.

அல்லதில் என்பது அதிகாரத்தாற் பெற்றும்.

தன்னினமுடிதல் என்பதனால், பசும்பயறல்லதில்லை பெருமபயறல்ல தில்லை எனக் கிளந்து கூறுதலும்[3] கொள்க.

'செப்பும் வினவும்' (சொல் - கந) என்றதனால் இவ்வேறுபாடு இனிது விளங்காமையானும, 'பொருளொடு புணராச்சுட்டு' (சொல் - நஎ) என வழுவமைக்கின்றாராகலானும், இவற்றை விதந்து கூறினர்.[4] (நசு)

பொருட்பெயரும் சுட்டுப்பெயரும் அமையுமவகை

நஎ. பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்று கும்மே.

இ - ள் : சுட்டானன்றிப பொருள் வரையறுத்து உணர்த்தாச் சுட்டுப்பெயரால் கூறினும், பொருள் வேறுகாது இப்பயறெனச் சுட்டிக் கூறிய பொருளேயாம் ; **எ - று.**

---

1 அகபபட - குறைய, குனறக கூறலாக.
2 பாமபுணிக கருங்கல - பாமபின நஞ்சையுணனுங கருங்கல.
3 இளநது கூறல - சுடடாமற பெயர சொலலிக கூறுதல.
4 விதநதுகூறல - சிறபபாகப பிரிதது கூறுதல

என் சொல்லியவாறே எனின் :—இவையல்லதில்லை என்றவழி, இவை யென்பது பயற்றையே சுட்டாது உழுந்து முதலாயினவற்றிற்கும் பொதுவாய் நிற்றலின் வழுவாமன்றே; ஆயினும, முன் கிடந்த பயறு காட்டி இவை யென்றுணுகலின், அவற்றையே சுட்டு முதலானமைக்க வெனச செப்புவழு வமைத்தவாறு.

சாதியும் பண்புந் தொழிலும்[1] முதலாயினபற்றி ஒரு பொருளை வரைந் துணர்த்தாது எல்லாப் பொருள்மேலுஞ் சேறலின் " பொருளொடு புணராச் சுட்டுப்பெயர் " என்றார்.

வேறுபடாது, ஒன்றுகும் என்பனவற்றுள் ஒன்றே அமையுமெனின் :— பொருள் வரைந்துணர்தலும் பெயரொடு பொருள் வரைந்துணர்த்தாச் சுட்டுப் பெயர் வேறுபாடுடைத்தேனும், ஒரு பொருள்மேல் முடிதலின் ஒரு பொருட் டாமென்பது விளக்கிய பொருள் வேறுபடாது ஒன்றுகும் என்றார.

அப்பொருள் கூறுதற்கண் என்னுது பொதுப்படக் கூறியவதனால், பிறிது பொருள் கூறும்வழியும் இவையல்லதில்லை யெனச் சிறுபான்மை சுட்டுப்பெய ரால் கூறினும அமையும் என்பதாம்.

யானைநூல் வல்லானொருவன் காட்டுட்போவழி ஓர் யானை யடிச்சுவடு கண்டு இஃதரசுவாவாதற்கேற்ற இலக்கண முடைத்து என்றவழியும்,

'இஃதோர்[2] செல்வற் கொத்தனம் யாமென
மெல்லவென் மகன்வயிற் பெயர்த் தேனே' (அகம் - உசு)

என்புழியும் சுட்டுப்பெயர் பொருளொடு புணராது நிற்றலின், அவற்றையே அமைக்கின்றது இசசூத்திரம் என்பாரு முளர். (ஈஎ)

ஈஅ. **இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்**
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.

இ - ள் : இயற்பெயரும்[3] சுட்டுப் பெயரும் ஒன்றனை ஒன்று கொள்ளாது இரண்டும பிறிதுவினை கோடற்கு ஒருங்கு நிகழுங் காலம தோனறுமாயின், உலகத்தார் சுட்டுப் பெயரை முற்படக் கூறார், இயற்பெயர்க்கு வழியவாகக் கூறுவரென்று சொலலுவர் புலவர்; எ - று.

வினைக்கொருங்கியலுங்கால் அப்பெயர் எழுவாயாயும் உருபேற்றும் நின் றன எல்லாங் கொள்ளப்படும்.

வினைக்கென்புழி அவ்விருபெயரும் ஒருவினை கோடலும தனித்தனி வினைகோடலுங கொள்க. ஒருங்கியலும் என்றதனால் அவை ஒரு பொருள் மேல் வருதல் கொள்க.

---

1 மொசசைபபயறு, கடலைபபயறு எனபன குலம (சாதி) பறறியன, பசசைபபயறு காராமணி எனபன பணபு பறறியன; பொரிகடலை, சுணடறகடலை எனபன தொழில பறறியன.

2 (பா - டு.) இஃதோ.

3 இயறபெயா - ஒரு பொருளுககு இயலபாக ஏறபட்ட அலலது முதலாவது இடப பட்ட பெயா, மகளின பிளளைபபெயரெலலாம இயறபெயரே.

எ - டு: சாத்தன் அவன் வந்தான், சாத்தன் வந்தான் அவன் போயினான் எனவும், சாத்தி வந்தாள் அவட்குப் பூக் கொடுக்க எனவும் வரும்.

அவன்தான் வந்தான், அவனொருவனும் அறங்கூறும், ஈதொன்று குருடு என இயற்பெயரல்லா விரவுப்பெயர்க்கும் உயர்திணைப் பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் வரையறையின்றிச் சுட்டுப்பெயர் முற்கிளக்கவும்படுதலின், இயற் பெயர்க் கிளவி யென்றார். அவ்வாறு அவை முற்கிளக்கப்படுவது ஒருவினை கோடற்கண்ணே யென்பது. அற்றேல், அவை முடவன் வந்தான் அவற் குச் சோறு கொடுக்க, நங்கை வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க, குதிரை வந்தது அதற்கு முதிரை கொடுக்க எனத் தனித்தனி வினைகோடற்கண் சுட்டுப் பெயர் பிற்கிளக்கப்படுதல், முன்னையதற்குத்[1] தன்னின முடித்தலினானும் எனையிரண்டற்கும்[2] இயற்பெயரென்ற மிகையானுங்[3] கொள்க.

பிறிதுவினை கோடற்கண் எனவே, அவன் சாத்தன், சாத்தனவன் என ஒன்றற் கொன்று பயனிலையாதற் கண்ணும், ஒரு பொருண்மேல் நிகழும் எனவே, அவனுஞ் சாத்தனும் வந்தார், சாத்தனும் அவனும் வந்தார் என வேறு பொருளவாய வருதற்கண்ணும், யாது முற்கூறினும் அமையும் என்ப தாம்.

வினை என்றது முடிக்குஞ் சொல்லை.

சுட்டுப்பெயர் யாண்டும் இயற்பெயர்வழிக் கிளக்கப்படுமென யாப்புறுத் தற்கு, முற்படக்கிளவார் என்றும், இயற்பெயர் வழிய என்றுங் கூறினார்.

சுட்டுப்பெயர் என்றாராயினும், அகர இகரச் சுட்டுப்பெயரே கொள்க.[3]

இதுவும் ஓர் மரபு வழாநிலை. (கூ)

கூக. முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே.

இ - ள்: இயற்பெயரும் சுட்டுப்பெயரும் வினைக்கொருங் கியலும்வழிச் சுட்டுப்பெயரை முற்படக் கூறுதல் செய்யுளுள் உரித்து; **எ - று.**

எ - டு:

‘ அவனணங்கு நோய்செய்தான் ஆயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி—முகனமர்ந்
தன்னே யலர்கடப்பந் தாரணியில் என்னைகொல்
பின்னே யதன்கண் விழைவு ’

எனவரும். இதனுள் சேந்தன் என்பது இயற்பெயர்.

ஒருவினை கொள்வழிச் சுட்டுப்பெயர் முற்கிளத்தல் வந்தவழிக் கண்டு கொள்க.

இது செய்யுளிடத்து மரபுவழு அமைத்தவாறு. (கூக)

சூ0. சுட்டுமுதலாகிய காரணக் கிளவியும்[1]
சுட்டுப்பெய ரியற்கையின் செறியத் தோன்றும்.

---

1 முனையது - விரவுப்பெயர் (முடவன்).
2 ஏனையிரண்டு - உயர்திணைப் பெயரும் (நங்கை) அஃறிணைப் பெயரும் (குதிரை).
3 இயற்பெயரென்றமிகை - நூற்பாவில இயற்பெயர் என்று மறுமுறையும் கூறியது.
4 உகரச்சுட்டு வழக்கற்றமையின், ‘‘அகர இகரச் சுட்டுப்பெயரே கொள்க’’ என்றார்.
5 சுட்டுமுதலாகிய காரணக்கிளவி - அதனால் எனினும் இணைப்புச்சொல்.

இ - ள்: சுட்டை முதலாகவுடைய காரணப் பொருண்மையை உணர்த்தும் சொல்லும் சுட்டுப் பெயர்போலத் தன்னுற் சுட்டப் படும் பொருளை உணர்த்தும் சொற்குப்பின் கிளக்கப்படும்; எ - று.

ஈண்டுச் சுட்டப்படும் பொருள் தொடர்மொழிப் பொருள்.

எ - டு: சாத்தன் கையெழுதுமாறுவல்லன் அதனால் தந்தை உவக்கும், சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள் அதனால் கொண்டான் உவக்கும் எனவரும்.

சுட்டுமுதலாய காரணக்கிளவி உருபேற்று நின்ற சுட்டுமுதற்பெயரோடு ஒப்பதோர் இடைச்சொல்லாகலின், 'சுட்டுப் பெயரியற்கையின் செறியத் தோன்றும்' என்றார். செயற்கென்னும் வினையெச்சம், உருபேற்று நின்ற தொழிற் பெயரோடு ஒப்புமையுடைத்தாயினும், உருபும் பெயரும் ஒன்றுகாது[1] பகுப்பப் பிளவுபட் டிசையாது ஒன்றுபட் டிசைத்தலான், அதனின் வேறுயினுற்போல, இதுவும் உருபேற்ற சுட்டுப்பெயரோடு ஒப்புமையுடைத்தாயினும் பிளவுபட் டிசையாது ஒன்றுபட் டிசைத்தலான், வேறுகவே கொள்ளப்படுமென்பது! அஃதேல், சாததன் வந்தான் அஃதறசற்குத துப்பாயிற்று எனத தொடர் மொழிப் பொருளையும் சுட்டிவரும் சுட்டுப்பெயர் கூறுது காரணக்கிளவியே கூறியதென்னை யெனின்:—அவ்வாறு வருவன தன்னின முடித்தல் என்பதனால் அடங்கும். ஈண்டுச் சுட்டப்படும் பொருளை யுணர்த்துவது பெயரன்மையின், சுட்டுப்பெயரியற்கை என்றது வழக்கினகத்துச சுட்டப்படும் பொருளை உணர்த்தும் சொற்குப் பின்னிற்றலும் செய்யுளகத்து முன்னிற்றலுமாகிய அத்துணையேயாம். செய்யுட்கண முன்னிற்றல் வந்தவழிக் கண்டு கொள்க. பொருள் பற்றுது பண்பு முதலாயினபற்றிவந்த சுட்டாதலின் வேறுஒதப்பட்டதென்றுஉரையாசிரியர் கூறினாரெனின்:—சாததன்வந்தான் அஃதறசற்குத் துப்பாயிற்று எனவும, கிழவன் பிரிந்தான் அதனைக் கிழத்தி யுணர்ந்திலள் எனவும், எழுவாயாயும ஏனை வேற்றுமையேற்றும் அச் சுட்டுப் பயின்று வருதலால் பண்பு முதலாயினவற்றைச சுட்டும் சுட்டெனப் பொது வகையால் கூறுது காரணக் கிளவி என ஒருசார் வேற்றுமைக்குரிய வாய்பாடு பற்றி ஓதுதல் குன்றக்கூறலாகலானும், சுட்டுப் பெயராயின் சுட்டு முதலாகிய காரணக் கிளவி என்றும் சுட்டுப்பெயரியற்கையின் செறியத் தோன்றும் என்றும் கூறுதல் பொருந்தாமையானும், அது போலியுரை யென்க.

இதனுன் வழக்கின்கண் மரபுவழாநிலையுஞ் செயயுட்கண் மரபு வழுவமைதியும் உணர்த்தினார். (சo)

இயற்பெயரும் சிறப்புப் பெயரும் அமையும் வகை

சக. சிறப்பி னுகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

இ - ள்: வினைக்கொருங்கியலும்வழிச் சிறப்பினுகிய பெயர்க்கும் இயற்பெயரை உலகத்தார் முற்படக் கிளவார் பிற்படக் கிளப்பர்; எ - று.

வினைக்கொருங்கியலும் என்பது ஏற்புழிக்கோடல் என்பதனாற் பெற்றும்.

---

1 செயறகு எனனும் வினையெசசம பெயரும உருபுமாயப பிளவுபட்டிசையாது உருபேறறுனின்ற தொழிற பெயரினினறு வேறுபடடாறபோல, அதனால எனனும சுட்டிடைச சொலலும உருபேறற சுட்டுப பெயரினினறு வேறுபடும.

ஈண்டுச் சிறப்பாவது மன்னர் முதலாயினாராற் பெறும் வரிசை.

எ - டு: ஏஞதி[1] ஈல்லுதடன், காவிதி[2] கண்ணங்தை என வரும்.

உம்மையால், தவம், கல்வி, குடி, உறுப்பு முதலாயினவற்றாலுகிய பெயரும் கொள்ளப்படும். அவை முனிவனகத்தியன் எனவும், தெய்வப் புலவன் திருவள்ளுவன் எனவும், சேரமான் சேரலாதன் எனவும், குருடன் கொற்றன் எனவும் வரும்.

திருவீரவாசிரியன், மாந்தக்கொங்கேஞதி என இயற்பெயர்முன் வந்தனவாலெனின்:—அவை தொகைச்சொல்[3]லாகலான், அவற்றின்கண்ணதன்று இவ்வாராய்ச்சியென்பது. ஆண்டியற்பெயர் முன்னிற்றல் பண்புத்தொகையாராய்ச்சிக்கட் பெறுதும். (சக)

சஉ. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே.

இ - ள்: ஒருபொருளைக் குறித்து வந்த பல பெயர்ச்சொற்கள், ஒருதொழிலே முடிபாகக் கூறாது பெயர்தோறும் வேறுகிய தொழில்களைக் கொடுத்து முடிப்பின், ஒரு பொருளவாய் ஒன்ரு; **எ - று.**

ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் என்ஞது, ஆசிரியன் வந்தான் பேரூர்கிழா னுண்டான் செயிற்றியன் சென்ரான் என வேறு வேறு தொழில் கிளந்தவழி, வந்தானும் உண்டானுஞ் சென்ரானும் ஒருவனுகாது வேரூய்த் தோன்றியவாறு கண்டுகொள்க.

எந்தை வருக எமபெருமான் வருக மைந்தன் வருக மணாளன் வருக என் புழிக் காதல் முதலாயினபற்றி ஒரு தொழில் பலகால் வந்தமையல்லது வேற்றுதொழிலன்மையான், ஒருதொழில் கிளத்தலேயாமென்பது.

ஈண்டுத் தொழிலென்றது முடிக்குஞ் சொல்லை.

ஆசிரியன் வந்தானென்று ஒருகாற்கூறி இடையிட்டு அவனையே பின்னுருகால் பேரூர்கிழான் சென்ரான் என்று கூறியவழி, ஒரு தொடரன்மையான் ஆண்டாராய்ச்சி யில்லை யென்பது. அஃதேல், ஆசிரியன் வந்தான் பேரூர்கிழா னுண்டான் செயிற்றியன் சென்ரான் என இடையீடின்றி நின்றனவும் ஒரு தொடரன்மையின், ஆராய்ச்சியின்றும் பிறவெனின்:—அற்றன்று; உட்டொடர் பலவாயினும், அவற்றின் றொகுதியாய் அவன் தொழில் பலவுங் கூறுதற் பொருண்மைத்தாகிய பெருந்தொடர் ஒன்றெனவே படுமென்பது.

ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியனிளங்கண்ணன் சாத்தன் வந்துண்டு சென்ரான் என்ஞது, ஆசிரியன் வந்தான் பேரூர்கிழா னுண்டான் செயிற்றி

---

1 ஏஞதி - படைத்தலிலவன். 2 காவிதி - மந்திரி. 3 திருவீரவாசிரியன, மாந்தக கொங்கேஞதி எனபன, திருவீரன ஆசிரியன, மாந்தக கொங்கன ஏஞதி எனப பிரிந்து நிலலாமல ஈறுகெடடுபுணாந்து நினறனவெனறே அவறறினிடையில ஆகிய எனனுஞசொல தொகுகு நினறதெனறே கொணடு, "அவை தொகைச சொலலாகலான, அவறறினகணணதனறு இவவாராயசசியெனபது, ஆணடியற பெயா முனனிறறல பணபுத தொகை யாராயசகிகட பெறுதும்" எனறார சேனவரையா எனவே திருவீரவாசிரியன மாந்தக 'கொங்கேஞதி எனபவறறை அவா பணபுத தொகையாகக கொணடமை புலனும. ஏஞதி நலலுதடன காவிதி கணணஙதை எனபவறறின இடையிலும ஆகிய எனனுஞ சொல வீரிகலா மாதவின, திருவீரவாசிரியன போனறவை நசசினாககினியா கூறியது போலப பிறகால வழகெனறும, சிறபபுப பெயா முறபட வரின இயறபெயா திரிபு மெனறும தொலவதே மிகப பொருததமாம. நூறபாவில முன எனறது இடமுன.

யன் சென்றான் எனப் பெயர்தோறும் வேறுதொழில் நிகழ்த்தல் மரபன்மையின், மரபுவழுக் காத்தவாறுயிற்று. (சஉ)

இட வழுவமைதி

சஈ. தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்று
எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.

இ - ள்: தன்மைச்சொல்லும் அஃறிணைச் சொல்லும் எண்ணுதற்கண் விராய் வரப்பெறுமம; எ - று.

என் சொல்லியவாறோ எனின்:—உயர்திணைச் சொல்லும் அஃறிணைச சொல்லும் எண்ணுதற்கண விராய் வந்து உயர்திணைமுடிபு கொள்ளினும், அஃறிணைமுடிபு கொள்ளினும வழுவாமாகலின், 'மயங்கல்கூடா தம்மரபின' (சொல் - கக) எனவே அவை விராய் எண்ணப்படாமையும எய்தி நின்றது; தன்மைப்பன்மைச் சொல்லால் அஃறிணைசசொல்லும் முடியுமாகலால், தன்மைசசொல்லும் அஃறிணைசசொல்லும் விராயவந்து உயர்திணைமுடிபு கொள்ளினும் அமையும் எனத திணைவழுக் காத்தவாறு.

எ - டு: யானும் என்னெஃகுமும் சாறும என வரும்.

பன்மைத் தன்மைவினை கோடல் எற்றுற் பெறுதுமோ எனின்:—தன்மைச்சொல்லே யென்றதனானும்,

'பன்மை உரைக்குந் தன்மைக் கிளவி
எண்ணியன் மருங்கில் திரிபவை யுளவே' (சொல் - உஙக)

என்பதனானும், பெறுது மென்பது. அஃதேல், 'எண்ணியன் மருங்கில் திரிபவை உளவே' என்பதனான் விராயவந்து உயர்திணைமுடிபு கோடலும் பெறப்படுதலின், இசசூத்திரம் வேண்டா எனின்:—உயதுணாந் திடாப்படுவது எடுதோத்தில்வழி என மறுக்க. (சஈ)

ச. எண் ஒருமைக்குரிய சொற்கள்

சச. ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லாது.

இ - ள்: ஒருமையெண்ணினை உணர்த்தும் பொதுப் பிரி பாற் சொல்லாகிய ஒருவன் ஒருத்தி என்னுஞ சொறகள், ஒருமைக் கண்ணல்லது, இருமை முதலாகிய எண்ணுமுறைக்கண் நில்லா எ - று. எனவே, பொதுப் பிரியாப பாற்சொலலாகிய ஒருவர் என்னுஞ்சொல் இருவர் மூவரென எண்ணுமுறைக்கண்ணும நிற்குமென்பதாம.

பொதுப்பிரி பாற்சொல் என்றாரேனும், ஒருவன் ஒருத்தி என்பனவற்றது பாலுணர்த்துமீறே கொள்ளப்படும். என்னை? எணணுமுறை நில்லா என்று விலகப்படுவன அவையேயாகலினென்பது.

மகன் மகள் என்னுந்தொடக்கத்துப் பெயாப்பொதுப்பிரி பாற்சொல்லின் நீக்குதற்கு ஒருமையெண்ணின் என்றும், ஒருவர் ஒன்று என்பனவற்றின் நீக்குதற்குப் பொதுப்பிரி பாற்சொல் என்றுங கூறினர்.

ஒருவனென்னும் ஆண்மைப்பெண்மைப் பொதுவிற் பிரிதலின் பொதுப் பிரி பாற்சொல் என்றார்.

பொதுப்பிரி பாற்சொல் என்னும் ஒற்றுமையான் நில்லாது என ஒருமையாற் கூறினார்.

ஒருவன் ஒருத்தி என ஒருமைக்கண் நிற்றலும், இருவன் மூவன் இருத்தி மூத்தி என எண்ணுமுறைமைக்கண் நில்லாமையும் கண்டுகொள்க.

ஒன்றென முடித்தல் என்பதனான் ஒருவேன் ஒருவை என்னும் தன்மை முன்னிலையீறும் எண்ணுமுறை நில்லாமை கொள்க.

இது பால்வழுக் காத்தவாறு. (சச)

வியங்கோள் அமையும் வகை

சரு. வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவுவரையார்.

இ - ள்: வியங்கோளொடு தொடரும் எண்ணுப்பெயர் திணைவிராய் வருதல் வரையார்; எ - று.

எ - டு: ஆவுமாயனுஞ் செலக என வரும்.

தன்மைப் பன்மை வினைபோலாது வியங்கோள் இருதிணைக்கும் உரிய சொல்லாகலான் இருதிணைச சொல்லையும் முடிக்குமன்றே, அதனான் ஆவுமாயனுஞ் செல்க என்புழி வழுவின்மையின் அமைக்கற்பாற்றன்று எனின்:— இருதிணைப் பொருட்கும் உரித்தேனும், ஒருதிணைப்பொருளைச சொல்லுதற்கண் இருதிணைப்பொருளும் உணர்த்தாமையின், ஒரு திணையே உணர்த்தல் வேண்டும்; ஒரு திணை உணர்த்தியவழி ஏனைத் திணைப்பெயரோடு இயையாமையின் திணைவழுவாம், அதனான் அமைக்கல் வேண்டுமென்பது.

*எண்ணென்ற[1] உறழென்ற[2] ஆயிரண்டும் இனமென்றல்[3] வேண்டுமென்பது இலக்கணமாகலான்,[4] யானுமென்னெஃகமுஞ் சாறும் என்புழியும் ஆவுமாயனுஞ் செல்க என்புழியும் இனனல்லன உடனெண்ணப்படுதலின் வழுவென்றாரால் உரையாசிரியரெனின்:—திணைவேறுபாடுணடேனும் யானுமென் எஃகமும் என்புழி வினைமுதலும் கருவியுமாகிய இயையும் ஆவுமாயனும் என்புழி மேயப்பானும் மேய்க்கப்படுவனவுமாகிய இயைபும் உண்மையான் உடனெண்ணப்படுதலானும், யானை தேர் குதிரை காலாள் எறிந்தான் என முன்னர் உதாரணங் காட்டுபவாகலானும், பிறண்டும் 'எண்ணுத் திணை விரவுப்பெயர் அஃறிணை முடிபின' (சொல் - நிக) என ஆசிரியர்க்கு ஆராய்ச்சி முடிபுகோடற்கண்ணதாகலானும், அவர்க்கது கருத்தன்றென்க. அல்லதூஉம், திணைவிராய் எண்ணல் வழுவென்பதே கருததாயின்,

'நெடுநல் யானையுந் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாம்' (புறம் - எஉ)

---

* ஒரு சொலலுடன எணணுதறகண எணணெனரு பொருளகளை வறமெனரு எனவும பாடம.

1 எண - பொருளகளை எணணுதல, 2 உறழ - பொருளகளை வேறுபடுதறல, 3 இனனெனறல - ஓரினபபொருள்களையே கூறுதல. 4 இவவிலகக்கணதறதை இவவியல கசூ-ம நூறபாவிற காணக.

எனவும், 'இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்' (குறள் - கூ2o) எனவும், படர்க்கைசசொல்லும் அஃறிணைக்கிளவியும் விராய் எண்ணுதல் வழக்குப் பயிற்சி யுடைமையான் அவையும் அடாஅக உயர்திணைச சொல்லே அஃறிணைக் கிளவி எனப் பொதுப்பட ஓதாது 'தன்மைச சொல்லே அஃறிணைக் கிளவி' (சொல் - சஉ) எனத் தன்மைச சொல்லையே விதந்தோதல் குன்றக் கூறலாமாகலானும், அவர்க்கது கருத்தன்மை யறிக.

'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறுஅ நீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்' (புறம் - கூ)

எனத் திணைவிராய் வந்து முன்னிலைவினை கோடல் எற்றுற் பெறுது மெனின்:—அங்ஙகரன செய்யுள் முடிபு எனப்படும், அவற்றை அதிகாரப் புறனடையாற்[1] கொள்க. திணைவிராய எண்ணப்படும் பெயர் வியஙகோளல்லா விரவுவினை[2]யொடு தொடர்ந்து வருவன வழக்கினுள் உளவேல், ஒன்றென முடிதலுதல் என்பதனுற் கொள்க. (சஞ)

பன்மைக் குரிய சொற்கள்

சசு. வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார்.

இ - ள்: வேறுபட்ட வினையையுடைய பல பொருட்குப் பொது வாகிய சொல்லை ஒன்றற்குரிய வினையால் கிளவார்; எ - று.

எனவே, பொதுவினையால் கிளப்பா என்றவாறும். அவை அடிசில் அணி இயம் படை யென்னும் தொடக்கத்தன.

அடிசில் என்பது உண்பன தின்பன பருகுவன நக்குவன என்னும் நால்வகைக்கும், அணி என்பது கவிப்பன கட்டுவன செறிப்பன பூண்பன என்னும் தொடக்கத்தன வற்றிற்கும, இயம் என்பது கொட்டுவன ஊதுவன எழுப்புவன என்னும் தொடக்கதனவற்றிற்கும், படை என்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவன என்னும் தொடக்கத்தனவற்றிற்கும் பொது வாகலின், அடிசில் அயின்றார், மிசைந்தா எனவும்; அணி அணிந்தார், மெய்ப் படுத்தா எனவும்; இயம் இயம்பினர், படுத்தார் எனவும்; படை வழஙகினர், தொட்டார் எனவும் பொதுவினையால் சொல்லுக. அடிசில் தின்றார், பருகினர் எனவும்; அணி கவித்தார், பூண்டா எனவும; இயம் கொட்டினர், ஊதினர் எனவும்; படை எறிந்தார், எய்தா எனவும் ஒரு சார்க்குரிய வினையாற் சொல்லின் மரபு வழுவாமென்பது.

பொருளின் பொதுமையைச் சொன்மேலேற்றி வேறு வினைப் பொதுச் சொல் என்றார். (சசு)

சஎ. எண்ணுங் காலும் அதுஅதன் மரபே.

---

1 அதிகாரப புறனடை எனறது இசசொலலதிகாரப புறனடையை (எச - சுஎ)

2 வியஙகோளலலா விரவுவினை, செயயும எனனும முறறும வேறு இலலை உணடு எனனும குறிபபு வினைமுறறுகளும ஏவலவினையும.

இ - ள்: வேறுவினைப் பொருள்களைப் பொதுச் சொல்லால் கூறுது பிரிததெண்ணுமிடத்தும் அதனிலக்கணம் ஒருவினையாற் கிளவாது பொதுவினையாற் கிளத்தலேயாம்; எ - று.

எ - டு: சோறுங்கறியும் அயின்றூர், யாழுங்குழலும் இயம்பினர் என வரும். சோறுங்கறியும் தின்றூர், யாழுங்குழலும் ஊதினர் எனின் வழுவாம். அஃதேல், 'ஊன்துவை கறிசோ றுண்டு வருந்துதொழில் அல்லது' (புறம் - சசு) என்புழி உண்டென்பது ஒன்றற்கே உரிய வினையாகலின் வழுவாம் பிறவெனின்:—உண்டலென்பது உண்பன தின்பன எனப் பிரித்துக் கூறும் வழிச சிறப்பு வினையாம்; பசிப்பிணி தீர நுகரப்படும் பொருளெல்லாம் உண வெனப் படுமாகலின் பொதுவினையுமாம், அதனுனது வழுவன்றென்பது. கறி யொழித்து ஏனையவற்றிற்கெல்லாம் உண்டற்றொழில் உரித்தாகலின் பன்மை பற்றிக் கூறினா எனினும் அமையும். (சஎ)

இரட்டைக் கிளவி அமையும் வகை

சஅ. இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா.

இ - ள்: இரட்டித்து நின்று பொருளுணர்த்துஞ் சொற்கள் இரட்டித்து நிற்றலில் பிரிந்து நில்லா; எ - று.

எ - டு: சுருசுருத்தது, மொடுமொடுத்தது என இசைபற்றியும், கொறு கொறுத்தார், மொறுமொறுத்தார் எனக் குறிப்புப்பற்றியும், குறுகுறுத்தது கறுகறுத்தது எனப் பண்புபற்றியும் இரட்டித்து வந்தன பிரிந்து நில்லாமை கண்டுகொள்க. அஃதேல், குறுத்தது குறுத்தது எனப் பிரிந்தும் வந்தனவா லெனின்:—அற்றன்று. குறுத்த தென்பதோர் சொல் குறுவென்பதோர் சொல்லடுத்துக் குறுகுறுத்தென நின்று குறுமை மிகுதியுணர்த்திற் முயின் குறுத்தென்பது குறுமையுணர்த்தக் குறுவென்பது மிகுதி உணர்த்திற் றுதல் வேண்டும. குறுவென்பது மிகுதியுணர்த்தாமையின் குறுகுறுத்த தென்பது ஒரு சொல்லாய் நின்று அப் பொருளுணர்த்திற் றெனவேபடும். அதனுற்றன் அக் குறுமை மாத்திரம உணர்த்தி நிற்பது அதனின் வேறு மென்பது. கறுகறுத்த தென்பதுக்கும் ஈதொக்கும். கறுத்தது கறுத்தது, குறுத்தது குறுத்தது எனச சொன்முழுவதும் இருமுறை வாராமையின், அடுக்கன்மை யறிக.

ஈண்டிரட்டைக் கிளவி யென்றது, மக்களிரட்டை விலங கிரட்டை போல வேற்றுமையுடையனவற்றையன்றி இலையிரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றை யென்று உணர்க.

இரட்டித்து நின்று பொருளுணர்த்துவனவற்றைப் பிரித்து வழங்கல் மரபன்மையின், மரபுவழுக் காததவாறு. (சஅ)

பன்மைக்குரிய வழக்குகள்

சஆ. ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்.

இ - ள்: உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் ஒரு பெயராய்ப் பலபொருட்குப் பொதுவாகிய சொலலைப் பிற உள் பொருளொழியத் தெரிந்துகொண்டு பொதுமையின் வேறுகச் சொலலுக தலைமையானும் பன்மையானும்; எ - று.

தெரிபு என்பதற்குச செயப்படுபொருள் தலைமையும பன்மையுமேயாம்.

பிறரும் வாழ்வாருளரேனும பார்ப்பனசசேரி[1] யென்றல் உயர்திணைக்கண் தலைமை பற்றிய வழக்கு. எயினர்காடென்பது அததிணைக்கண் பன்மை பற்றிய வழக்கு. பிற புல்லும் மரனும் உளவேனும கழுகுகதோட்டம் என்றல் அஃறிணைக்கண் தலைமை பற்றிய வழக்கு. ஒடுவங்காடென்பது அததிணைக்கண் பன்மை பற்றிய வழக்கு. பார்ப்பா பலராயினும கழுகு பலவாயினும் அவை தாமே பன்மைபற்றிய வழக்காம.

பலபொருளொருசொல்லின் நீக்குதற்கு ஒருபெயரென்றார்.

ஒன்றெனமுடித்தல் என்பதனால், அரசர்பெருந்தெரு, வயிரகடகம், ஆதிணடுகுற்றி, ஆனதர், எருததில் எனப் பொதுசசொல்லின்றி வருவனவுங கொள்க.[2]

உள்பொருளெல்லாம் கூறுது ஒன்றனையெடுத்துக் கூறுதன் மரபன்றுகலின், பொதுசசொல்மேற் சொல் நிகழுமாறு உணர்த்திய முகத்தான் மரபு வழுக் காத்தவாறு. (சசு)

நூ. பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம் மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

இ - ள்: உயர்திணைக்கண்ணுமம அஃறிணைக்கண்ணுமம பெயரினுனும் வினையினுனும பொதுமையிற் பிரிந்து ஆண்மைக்கும் பெண்மைக்கும உரியவாய் வருவன எல்லாம் வழுவாகா, வழக்குவழிப் பட்டனவாகலான்; எ - று.

உயாதிணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் என்பது அதிகாரத்தான் வந்தது.

'தொடியோர்[2] கொயகுழை யரும்பிய குமரி ஞாழல்' என்பது உயர் திணைக்கண் பெயரிற் பிரிந்த ஆணெழி மிகுசொல். வடுகாசசாயிரவா மக்களோ யுடையர் என்பது பெயரிற் பிரிந்த பெணணெழி மிகுசொல். இவர் வாழ்க்

---

1 பாணடைகாலததில ஒனறுகச போநதிருந்த ஒரு குலததார வீடடுத தொகுதிகளுச் சேரி எனறு பெயர. அது இகாலததில குடி அலலது தெரு எனபபடும சேரி எனபது நகருகளு புறமபாக உளள தாழ்தத பகுதியையுகுறிததது பிறகாலவழகக. அகநிரகாரம எனபது பாபபான வழகக.

2 தொடி எனபது வளையல, காபபு, கடகம (தோளவளையல) முதலியவறறைக குறிககும. வளையல பெணடிகளே உரியது; கடகமும காபபும இருபாலாகளுகும உரியன. 'தொடியோர ..... ஞாழல' எனபதிலதொடியோர பெணடிரையே குறிததது. அரசர மகளோயுடையவர எனறும போது மகளை எனனுஞ சொல போமமறவரைக குறிககும. வாழகைபபடடதில ஒருதத ஒருவனுகு இலலகஇமுத தியாதல, இசசொல தெனனுடடு வழகக கடடுலஎனபது அரச கடடில, அதாவது அரியணை.

கைப்பட்டார் என்பது தொழிலிற் பிரிந்த ஆணெழி மிகுசொல். இவர் கட்டிலேறினார் என்பது தொழிலிற் பிரிந்த பெண்ணெழி மிகுசொல். நம்பி நூறெருமையுடையன் என்பது அஃறிணைக்கண் பெயரிற் பிரிந்த ஆணெழி மிகுசொல். நம்மரசன் ஆயிரம் யானையுடையன் என்பது பெயரிற் பிரிந்த பெண்ணெழி மிகுசொல். தொடிசெறித்தலும், மக்கட்டன்மையும் இல்வாழ்க் கைப்படுதலும், கட்டிலேறுதலும், எருமைத் தன்மையும், யானைத்தன்மையும ஒழிக்கப்படும் பொருட்கு முண்மையால் பொதுவாய நிற்கற்பாலன ஒருபாற் குரியவாய் வருதலின், மரபுவழு வமைத்தவாறு.

பிறசொல்லாற் பிரிவன 'வேறுபடு வினையினும் இனத்தினுஞ் சார்பி னும்' (சொல் - நிஉ) எனவும், 'தெரிநிலையுடைய அஃறிணை யியற்பெயர்' (சொல் - களக) எனவும், 'நினையுங்காலத் தத்தம் மரபின் வினையோ டல்லது பால்தெரிபிலவே' (சொல் - களஉ) எனவும் முன்னைத்தப்படுத லானும், ஆண்டு வழுவின்மையானும், ஈண்டுத் தாமே பிரிவனவே கொள்க.

தம்மாற்றும் பிரியுமென்பார 'பெயரினுந் தொழிலினும்' என்றார். பெயர்க்கண்ணும் வினைக்கணணுந் தாமே பிரிவன எனினும் அமையும்.

அஃறிணைக்கண் தொழிலிற் பிரிந்தன உளவேல் கண்டு கொள்க. இன்று இவ்வூர்ப் பெற்றமெல்லா மறங்கறக்கும், உழுவொழிந்தன என உரையாசிரியர காட்டினாராலோ வெனின் :—பெற்ற மென்னும் பொதுப்பெயர் கறத்தலும் உழுதலுமாகிய சிறப்புவினையால் பொதுமை நீங்குதல் வழுவன்மையான் ஈண்டைக் கெயதாமையின், அவர்க்கது கருத்தன்றென்பது. (நிo)

நிக. பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

இ - ள்: திணை விராய் எண்ணப்பட்ட பெயர் செய்யுளகத்துப் பெருமபான்மையும் அஃறிணைச்சொற் கொண்டு முடியும; எ - று.

எ - டு:

'வடுக ருருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங
குறுகா றறிவுடை யார்'

எனவும்,

'கடுஞ்சினத்த கொல்களிறுங
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும
நெஞ்சுடைய புகன்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும்.' (புறம - நிநி)

எனவும் வரும்.

எண்ணுத்திணை விரவுப்பெயர் பெரும்பான்மையும் அஃறிணைசசொற் கொண்டு முடியுமெனவே, சிறுபான்மை உயர்திணைச் சொற்கொண்டு முடிய வும் பெறுமென்பதாம்.

எ - டு :

'பார்ப்பார் அறவோர் பசுப்பத தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு' (சிலப் - வஞ்சினமாலை)

எனவும்,

'பார்ப்பார தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்
காற்ற வழிவிலங்கி னூரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார்' (ஆசாரக்கோவை - சுச)

எனவும் வரும்.

இருதிணைப்பெயரும் விராய வந்து ஒருதிணைச்சொல்லான் முடிதல் வழுவாயினும், செயபுளகத்தமைக எனத திணைவழு அமைத்தவாறு.

'பாணன் பறையன் துடியன் கடம்பனென்று
இந்நான் கல்லது குடியு மில்லை' [1] (புறம - ஈஉஅ)

என இருதிணைப்பெயரும விரவி வாராது உயாதிணைப்பெயரே வந்து செய்யுளுள் அஃறிணைமுடிபு கொணடன என்று உரையாசிரியர் கூறினாரா லெனின் :—பாணன் முதலாயினாரைக் குடியென்று சுட்டி வழிக் குடிக்கேற்ற தொகை கொடுததல் வழுவன்மையான், அவ்வுரை போலியுரை யென்க. குடி யென்று சுட்டாதவழிப் பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று இந் நால்வருமல்லது குடியில்லை யென்றேயாம.

'தமமுடைய தணணளியுந் தாமுந்தம மான்றேரும்
எம்மை நினையாது விட்டனரேல் விட்டகல்க'

எனவும,

'யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித
தானுந் தேரும் பாகனும் வந்தென னலனுண்டான்
[தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும புள்ளுங கைதையு மெல்லாங கரியன்றே']

எனவும், இவை யெவ்வாறு வந்தனவோவெனின் :—அவை தலைமைப் பொருளையும், தலைமையில் பொருளைய விராய எணணித தலைமைப்பொருட்கு வினை கொடுப்பவே தலைமையில் பொருளும் முடிந்தனவாவதோர் முறைமை பற்றி வந்தன, ஈணடைக்கெயதா என்பது. தானுந் தன் புரவியுந் தோன்றினான் என்பதுமது (ஙக)

பலபொருளொருசொல் அமையும் வகை

ருஉ. வினைவேறு படுஉம் பலபொருளொருசொல்
வினைவேறு படாஅப் பலபொருளொருசொலென்
றிருவகையு பலபொருளொருசொல்.

1 பாணன, பறையன முதலிய பெயாகள இருகு மகளைக குறிதத ஆணபாற பெயாகளல, மகளை வகுபபைக குறிதத குடிபபெயாகள, ஆதலால அஃறிணையாம.

இ - ள்: வினைவேறுபடும் பலபொருளொருசொல்லும் வினை வேறுபடாப் பலபொருளொருசொல்லும் என இரண்டு வகைப் படும் பலபொருளொருசொல; எ - று.

இனமுஞ் சார்பும் உளவேனும் வேறுபடுதற்கண வினை சிறப்புடை மையின், அதனைப் பெயர் கொடுத்தார், ஆதீண்டு குற்றி யென்பது போல.

இலக்கணச சூத்திரங்களே[1] யமையும் இச சூத்திரம் வேண்டா பிற வெனின்:— இருவகைய வென்னும வரையறை அவற்றுல் பெறப்படாமை யானும், வகுத்துப் பின்னும இலக்கணங்க கூறியவழிப் பொருள் இனிது விளங்குதலானும், இசசூத்திரம வேண்டுமென்பது. (நிஉ)

நிக. அவற்றுள்
வினைவேறு படுஉம் பலபொருளொருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினுஞ் சார்பினுந்
தோற்றந் தோன்றும் பொருள்தெரி நிலையே.

இ - ள்: அவ்விரண்டனுள்ளும், வினைவேறுபடும் பலபொரு ளொருசொல், ஒருபொருட்கே சிறந்தவினையானும, இனத்தானும சார்பானும, பொருள்தெரி நிலைக்கண் பொதுமை நீங்கித் தெளிவியத் தோன்றும; எ - று.

மா என்பது ஒருசார்விலங்கிற்கும் ஒரு மரத்திற்கும வண்டிற்கும் பிற பொருட்கும பொது. குருகு எனபது ஒரு பறவைக்கும் உலமூக்கிற்கும் வளைக்கும் பிறவற்றிற்கும பொது. நாகம் என்பது மலைக்கும் ஒருசார்மரத்திற் கும யானைக்கும பாம்பிற்கும பிறவற்றிற்கும பொது. சே என்பது ஒருசாப் பெற்றத்திற்கும் ஒரு மரத்திற்கும பிறவற்றிறகும பொது.

மாப்பூத்தது; மாவிருகை மோகினை என வேறுபடு வினையானும இனத்தானும, படமென்பது விளங்கிற்று. கவசம புகுந்து நின்று மாகொணு வென்றவழிக சூரியை யென்பது சாரபினுல் விளங்கிறது. குருகு மூகலா யினவுமன்ன.

வேறுபடுவினையினு மென்றாரேனும், ஒன்றென முடித்த லென்பதனுன் இம்மா வயிரம், வெளிறு என வேறுபடுகளும பெயருங கொள்ளப்படும்.

இனத்தொடு சாபிடை வேற்றுமை யெனனே யெனின்:—ஒரு சாதிக் கணவேனத்த சாதி இனமெனப்படும்; அவனைத்த சாதியனறி ஒருவாற்று னியபுடையது சார்பெனப்படுமென்பது. (நிக)

நிச. [2]ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொருளொருசொல்
நினையுங் காலைக் கிளத்தங் கியலும்.

---

1. இலக்கணச சூத்திரங்கள - வரையறை (Definition) கூறும நூறபாக்கள.
2. 'ஒன்றுவினைமருங்கி னொன்றித தோன்றும' எனபது ஒரு நூறபாவாகவும. மற்ற இரண்டடியும வேறொரு நூறபாவாகவுங கொண்டு பொருள் கூறுவா இளம பூரணர.

இ - ள்: வேறுபடாத வினை கொண்டவழி வேறுபடாது தோன்றும் வினை வேறுபடாப் பலபொருளொருசொல் ஆராயுங் கால் கிளந்து சொல்லப்படும்[1]; எ - று.

எ - டு: மாமரம் வீழ்ந்தது, விலங்குமா வீழ்ந்தது என வரும்.

வினைவேறுபடாப் பல பொருளொரு சொலென வேறு கிற்பன வில்லை வேறுபடுவினை முதலாயினவற்றுள் வேறுபடுவனதாமே பொதுவினை கொண்ட வழி வினை வேறுபடாப் பல பொருளொரு சொல்லா மென்பது அறிவித்தற்கு 'ஒன்று வினைமருங்கி னெஞ்றித தோன்றும்' என்றார். 'ஒன்றுவினை மருங்கி னெஞ்றித் தோன்றும்' என ஒரு சூத்திரமாக உரையாசிரியர் பிரித்தாராலெனின்:—அங்ஙனம பிரிப்பின் ஒன்றுவினை மருங்கி னெஞ்றித் தோன்றுதலும் வினைவேறுபடுஉம பல பொருளொரு சொற்கே இலக்கண மாய மாறுகோடலானும, வினைவேறுபடுவன தாமே பொதுவினை கொண்ட வழி வினைவேறு படாதனவா மென்பது அதனாற் பெறப்படாமையானும, அது போலியுரை யென்க.

முன்னும் பின்னும வருஞ் சார்பு முதலாயினவற்றாற் குறித்த பொருள் விளங்காக்கால் கிளந்தே சொல்லுக[2]வென யாப்புறுத்தற்கு 'நினையுங்காலை' என்றார்.

ஆகுகென்பது உரையசை.

குறித்த பொருள் விளங்காமைக்கூறல் மரபன்மையின் மாபுவழுக் காதத வாறு. (நிச)

இதற்கு வழுவமைதி

நிநி. குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி.

இ - ள்: ஒருபொருள் வேறுபாடு குறித்தோன், அஃது ஆற்றல் முதலாயினவற்றால் விளங்காதாயின், அதனைத் தெரித்துச் சொல்லுக; எ - று.

எ - டு:

'அரிதாய சாந்தம கலந்தது போல
வுருகெழுத் தோன்றி வருமே - முருகுறழும
அன்பன் மலைப்பெய்த நீர்'

எனவும்,

'வாரு மதுசசோலை வணைதிர்த்த நாணமலரால்
நாறு மருவி நளிமலைகன் னாட'

---

1 கிளந்து சொலலுதல்—மாமரம விலங்குமா என்றாற்போல அவவபபொருளை பெயர் கூறிச சொலலுதல.

எனவும் வரும். 'கலந்ததுபோல வருமே யிலங்கருவி யன்பன் மலைப்பெய்த நீர்' எனவும், 'நாறு மரவி னளிமலை நன்னாட' எனவும் தெரித்து மொழியாத வழிக் குறித்தது விளங்காது வழுப்படுதலின் மரபுவழுக் காத்தவாறு. வட நூலார் இதனை நேய மென்ப.

'ஊட்டியன்ன வொண்டளிர்ச செயலை' (அகம் - சூஅ) என்புழி இன்ன தனை யென்று தெரிதது மொழியாமையின் வழுவாம் பிறவெனின் :—உவமை யென்னும் அலங்கார மாயினன்றே இன்னதென்றனை யெனல்[1] வேண்டுவது. செயலையந் தளிரினது செய்யாத நிறத்தைச்[2] செய்ததுபோலக் கூறுங கருத் தினதாகலிற் பிறிதோ டலங்காரமாம்.[3] அதனன் அது கடாவன் றென்பது.

'படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்
எடுத்துநிறுத் தன்ன விட்டருஞ் சிறுகெறி' (மலைபடு - கஞ)

என இன்னோரன்ன வெலலாம் அவ் வலங்காரம் பற்றி வந்தன.

'ஒல்லேங குவளைப் புலாஅன் மகன்மார்பிற்
புல்லெருக்கங கண்ணி நறிது'

என்புழிக் குவளை புலால் நாறுதற்கும் எருக்கங்கண்ணி நறிதாதற்கும் காரணங கூறுமையின வழுவாம் பிறவெனின் :—புதல்வற் பயந்த பூங்குழன் மடந்தை பரத்தையிற் பிரிந்து வந்த கிழவனெடு புலந்துரைக்கின்று ளாகலின் குவளை புலால் நாறுதற்கு அவன் தவற்றோடு கூடிய அவள் காதல் காரண மென்ப தூஉம, எருக்கங்கண்ணி நறிதாதற்கு மகிழ்நன் செயத துனி கூர வெப்பம முகிழ் நகை முகததால் தணிக்கும் புதல்வன்மேல் ஒருகாலைக் கொருகால் பெருகு மன்பு காரண மென்பதூஉம் பெறப்படுதலின், வழுவாகா தென்பது.

மீக்கூற்ற மென்புழிப்போலக கூற்றுக் கூற்றமென நின்றது. (திடு)

ருு. புறனடை

திணைக்குப் புறனடை

ருசு. குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழவே
பெண்மை அரசே மகவே குழவி
நன்மை தீமை பெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்
ரூவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தி னுணருங் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங் கியலும்.

இனனதொனறனனை யெனல — இனன பொருளை ஊட.டி யனன எனபது.

2 செயயாத நிறம — ஊடடாத இயறகை நிறம.

3 பிறிதோரலங்காரம — தறகுறிப பேறறவணி.

இ - ள்: குடிமை முதலாக விறற்சொல் ஈறுகச் சொல்லப்பட்ட பதினெட்டு முளப்பட அன்ன பிறவும் அவற்றொடு பொருந்தித் தொக்கு முன்னத்தினுணருங் கிளவிகளெல்லாம், உயர்திணைப் பொருண்மேல் நின்றனவாயினும், அஃறிணைப்பொருளே யுணர்த்தி நின்றவழிப்போல, அஃறிணைமுடிபே கொள்ளும்; எ - று.

எ - டு: குடிமை நன்று, குடிமை தீது; ஆண்மை நன்று, ஆண்மை தீது என வரும். ஒழிந்தனவற்றிற்கும் இவ்வாறு பொருந்தும் வினை[1] தலைப்பெய்க.

தன்மைதிரிபெயர் அலி. இதனோடு ஒருபொருட் கிளவியாய வருவன வுங் கொள்க.

உறுப்பின் கிளவி குருடு முடம என்னுந் தொடக்கத்தன. காதற்சொல் பாவை யானை யென ஒப்புமை கருதாது காதல்பற்றி வருவன. சிறப்புசசொல் கண்போலச சிறந்தானைக் கண்ணென்றலும உயிரபோலச் சிறந்தானை உயிரென்றலும் என இவை முதலாயின. செறற்சொல் செறுதலைப் புலப்படுக்கும் பொறியறை கெழீஇயிலி யென்னுந் தொடக்கத்தன. விறற்சொல் விறலை யுணர்த்தும பெருவிறல் அருந்திறல் என்னுந தொடக்கத்தன. தன்மை திரிபெயர் முதலாயின பொருள் வகையான் ஆறுக அடக்கப்பட்டன.

குடிமை, ஆண்மை, இளமை, முப்பு, அடிமை, வன்மை, பெண்மை, உறுப்பின் கிளவி, சிறப்புசசொல், விறற்சொல் என்பன உயர்திணைக்கண் ஆகுபெயராயல்லது வாரா; அல்லன இருதிணைக்கணணும் ஒத்த வுரிமைய வெனக் கொள்க. காதல்பற்றிச சிறுவனை யானையென்றலும ஆகுபெயராமன்றே எனின்:—யாதானு மோரா இயைபுபற்றி ஒன்றன்பெயர ஒன்றற்காயது ஆகுபெயராம்; இயைபு கருதாது காதல் முதலாயினவற்றான் யானை யென்றவழி ஆகுபெயருள் அடங்கா வென்பது. சிறுவனை யானை யென்றலும் ஒன்றன்பெயர் ஒன்றற்காத லொப்புமையான் ஆகுபெய ரென்பாரு முளர்.

சொல்லா னன்றித திணைவேறுபாடு சொல்லுவான் குறிப்பொடுபடத் தோன்றப்படுதலின், 'முன்னத்தினுணருங் கிளவி' என்றார்.

'அஃறிணை முடிபின' என்னாது 'அஃறிணைமருங்கிற் கிளந்தாங்கியலும்' எனப் பொதுப்படக் கூறியவதனால், குடிமை நன்று, குடிமை நல்ல; அடிமை நன்று, அடிமை நல்ல என ஏற்புழி ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலுங் கொள்ளப்படும்.

அன்ன பிறவும் என்றதனான் வேந்து வேள் குரிசில் அமைசசு புரோசு என்னுந் தொடக்கத்தனவுங் கொள்க.

குடிமை முதலியன உயர்திணை யுணராதும்வழி அஃறிணையான் முடிதல் வழுவாயினும் அமைக வெனத் திணைவழு வமைத்தவாறு. (நிசு)

பாலுக்குப் புறனடை

நூ எ. காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்

1. அழிதா முதலியவை.

ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயி ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

இ - ள்: காலமுதலாகச் சொல்லப்பட்ட பத்தும் அத்தன்மைய பிறவுமாகிய அப் பகுதிக்கண் வருஞ் சொலலெல்லாம், உயர்திணைச் சொல்லாயினும், உயர்திணைக்கண் பால்பிரிந் திசையா, அஃறிணைபபா லாயிசைக்கும்; எ - று.

எ - டு: இவற்குக் காலமாயிற்று, உலகம் பசிததது, உயிர் போயிற்று, உடம்பு நுணுகிற்று, தெய்வஞ் செய்தது, வினை விளைந்தது, பூதம் புடைத்தது, ஞாயிறு பட்டது, திங்க ளெழுந்தது, சொன் னன்று என வரும்.

பிறவும் என்றதனால், பொழுது நன்று, யாக்கை நீது, விநிவலிது, கனவி கடுகிற்று, மதி நிறைநதது, வெள்ளி யெழுந்தது, வியாழ நன்று என்பன போல்வன கொள்க.

கால மென்றது காலக் கடவுளை. உலக மென்றது ஈண்டு மக்கட் டொகுதியை.

உயிரே யுடமபே யெனப் பொதுவகையாற் கூறினுரேனும், மக்களுயிரு முடம்புமே கொள்ளப்படும். என்னை? உயர்திணை முடிபு கொள்ளா என விலக்கப்படுவன அவையேயாகலி னென்பது. 'அஃறிணை யென்மனு ரவரல பிறவே' என்புழி அஃறிணையா யடஙகி உயாதிணை முடிபெயதாமையின், அவையும் விலக்கற்பாட்டிற் கேலா வெனின்:—அற்றன்று; மக்கட்சுட் டுடைமையான் அவை உயாதிணையேயா மெனபது. யாதோ மக்கட்சுட்டுடையவா றெனின்:—அறஞ்செய்து துறக்கம் புக்கான் எனவும, உயிர்நீத் தொருமகன் கிடநதான் எனவும, உயிருமுடம்பும அவரின் வேறன்றி அவராக வுணரப் பட்டு உயர்திணைக் கேற்ற முடிபுகொண்டு நிற்றலின் மக்கட்சுட்டுடைய வென் பது. ஓராவை எமமன்னை வந்தாளெனனும் ஒருபொருத்தை எந்தை வந்தானென் னும் உயர்திணை வாய்பாட்டாற் கூறியவாறுபோல, உயிரு முடமபும் அவ் வாறு கூறப்பட்டன வென்று கொள்ளாமோ வெனின்:—கொள்ளாம்: அவற் றுன் வரும பயனெஞ்சிக் காதலால் எமமன்னை எந்தை யென்றன் ஆண்டு; ஈண்டுக் காதன் முதலாயின இன்மையின் மக்கட்சுட்டுடைய வென்பது.

பால்வகை தெய்வ மென்பது எல்லார்க்கு மின்ப துன்பத்திற்குக் காரண மாகிய இருவினையையும் வகுப்பது. வினை யென்பது அறத் தெய்வம். சொல் லென்பது நாமகளாகிய தெயவம.

அஃதேல், குடிமை யாணமை யென்பனவற்றோடு இவற்றிடை வேற்றுமை யென்னையெனின்:—அவை இருதிணைப் பொருட்கணணுஞ் சேறன்மாலைய; இவை அன்னவல்ல வென்பது.

உலக மென்பது இடதனையும் ஆகுபெயரான் இடத்து நிகழ் பொருளாகிய மக்கட்டொகுதியையும் உணாததுமாகலான், இருதிணைக்கண்ணும் சென்ற தன்றேவெனின்:—அற்றன்று. வடநூலுள் உலகமென்பது இருபொருட்கு

முரித்தாக ஓதப்பட்டமையின், மக்கட்டொகுதியை யுணர்த்தும் வழியும் உரிய பெயரே யாகலின் ஆகுபெய ரன்று; அதனால் ஒருசொல் இருபொருட்கண் ணுஞ் சென்றதெனப்படாது இருபொருட்கு முரிமையான் இரண்டு சொல்லெ னவே படுமென்பது. வேறுபொருளுணர்த்தலின் வேறு சொல்லாதலே துணி வாயினும், பலபொருளொருசொ லென்புழி எழுத்தொப்புமை பற்றி ஒரு சொல்லென்றார்[1].

மேலென்பது ஏழாம் வேற்றுமைப் பொருளுணர்த்துவதோ ரிடைச்சொல் லாகலின், ஈறு திரிந்து மேனவென நின்றது.

இதுவுந் திணைவழுவமைதி. (இஎ)

இடத்துக்குப் புறனடை

நுஅ. நின்றுங் கிசைத்தல் இவணியல் பின்றே.

இ - ள்: ஈறு திரியாது நின்றுங்கு நின்று உயர்திணையா யிசைத்தல் ஈண்டு இயல்பின்று; எ - று.

ஈண்டென்றது காலமுதலாகிய சொற்கள். அவை இடையீடின்றி மேற் சொல்லப்பட்டு நிற்றலின் 'இவண்' என்றார்.

இவணியல்பின்று எனவே, குடிமை ஆண்மை முதலாயின சொல்லின் கண், குடிமைகல்லன், வேதது செங்கோலன் என நின்றுங்கு நின்று உயர்திணை யாயிசைத்தல் இயல்புடைத் தென்பதாம். (இஅ)

நுகூ. இசைத்தலு முரிய வேறிடத் நான.

இ - ள்: காலமுதலாகிய சொல உயர்திணையாய் இசைததலு முரிய, ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்டவழி; எ - று.

காலன் கொண்டான், உலகர் பரித்தார் என வாய்பாடு வேறுபட்டவழி உயர்திணையாய் இசைத்தவாறு கண்டுகொள்க. (இகூ)

கூ0. எடுத்த மொழிஇனஞ் செப்பலு முரித்தே.

இ - ள்: இனமாகிய பலபொருட்கண் ஒன்றனை வாங்கிக் கூறி யவழி அச்சொல தன் பொருட்கினமாகிய பிறபொருளைக் குறிப் பால் உணர்த்தலு முரித்து; எ - று.

உம்மை எதிர்மறையாகலான் உணாததாமையு முரித தென்பதாம்.

எ - டு: அறஞ்செயதான துறக்கம் புகும் எனவும், 'இழிவறிந்துண் பான்கண் இன்பமெய்தும்' (குறள் கூடி - சு) எனவும் வரும். இவை சொல்லு வார்க்கு இனப்பொருளியல்பு உரைக்குங குறிப்புள்வழி, மறஞ்செயதான் துறக் கம் புகான், கழிபேரிரையன் இன்பமெய்தான் என இனஞ் செப்புதலும், அக் குறிப் பில்வழி இனஞ்செப்பாமையுங கண்டுகொள்க.

---

1 ஒரு சொல ஒரு பொருளே தரும. ஒரே சொல பல பொருள தருமாயின பொருள தொறும வேறு சொலலாம. ஆயினும, எழுததொபபுமை பறறித தொலகாபபியா பல பொருளொரு சொல (52) எனறார எனபது.

எடுத்தபொருளை உணர்த்தும் மொழியை 'எடுத்த மொழி' என்றார். இனனல்பொருளின் நீக்குதற்கு 'இனம்' என்றார்.

அஃதேல், மேற்சேரிக் கோழி யலகத்தது எனக் கீழ்ச்சேரிக் கோழி யலகப் புண்டது எனவும, குடங்கொண்டான் வீழ்ந்தான் எனக் குடம் வீழ்ந்தது எனவும், இவையினஞ் செப்பு மென்றும், ஆ வாழ்க அந்தணர் வாழ்க என்பன இனஞ்செப்பா வென்றும் உரையாசிரியர் கூறினாராலெனின் :—அற்றன்று : கீழ்சேரிக் கோழி யலகப்புண்டலின்றி மேற்சேரிக் கோழி யலகதல் அமையாமையானும், குடம் வீழ்தலின்றிக் குடங்கொண்டான் வீழ்தல் அமையாமையானும், கீழ்ச்சேரிக் கோழி யலகப்புணடலும் குடம வீழ்தலும் சொல்லானன்றி[1] இன்றியமையாமையாகிய பொருளாற்றலால் பெறப்படுமாகலான் ஈண்டைக் கெயதா, இது சொல்லாராயசியாகலா னென்பது.[2] இன்னேரன்ன சொல்லாற்றலால் பெறப்பட்டனவெனின் :—புகையுண டென்றவழி எரியுண்மை பெறுதலுஞ் சொல்லாற்றலால் பெறப்பட்டதா மென்பது. இனி ஆ வாழ்க அந்தணர் வாழ்க என்புழிச சொல்லுவான் ஒழிந்த விலங்கும் ஒழிந்த மக்களுஞ் சாக வென்னுங் கருத்தினளுயின் இவையு மினஞ் செப்புவன வன்றே வென்பது. அதனுன் அவை போலியுரை யென்க.

ஒருதொடர் ஒருபொருளுணர்த்தி யமையாது வேறொரு பொருளுங் குறித்து நிற்றல் வழுவாயினும் அமைக என மரபுவழுக் காத்தவாறு. (சூ0)

எணணுக்குப் புறனடை

சுக. **கண்ணுந் தோளும் முலையும் பிறவும்**
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம்வினைக் கியலும் எழுத்தலங் கடையே.

தமவினைக் கியலு மெழுததான் முடிதலும தம் முதல்வினைக் கியலு மெழுததான் முடிதலு மெனச சினைநிலைக்கிளவி இருமுடிபுடையவற்றுள், முதல் வினைக் கியலு மெழுத்தான் முடிவுழி யென்பார், தம்வினைக் கியலு மெழுததலங்கடை யென்றார்.

இ - ள் : கண்முதலாயவும் பிறவும் பன்மை குறித்துநின்ற சினைநிலைக்கிளவி ; அவை தம் வினைகியலு மெழுத்தான் முடியாது தம் முதல்வினைக்கியலுமெழுத்தான் முடியுமவழிப் பன்மையாற் சொல்லப்படும் யாபபுறவுடைய வல்ல ; முதலொன்றுயின் ஒருமையானும், பலவாயிற் பன்மையானுங் கூறப்படும் ; எ - று.

எ - டு : கணணல்லள், தோணல்லள், மூலைகல்லள் எனவும் ; கண்ணல்லர், தோணல்லா, மூலைகல்லர் எனவும் வரும்.

---

1 சொலலாற்றலானனறி என இருததல நனறு.

2 ஓ ஊரை அலலது சேரியைச சூழக கீழைசசேரி மேலைசசேரி வடசேரி தெனசேரி எனப பல சேரிகள இருததல கூடுமாதலானும, குடஞ சுமபபான குடம தீலையி லிருநதபடியே உட்காருதறபோற றேறி விழுதலுமுணடாதலானும். "கீழைச சேரிக கோழி யலகபபுணடலினறி மேறசேரிக கோழி யலகதல அமையாமை யானும, குடம வீழதலினறிக குடங்கொணடான வீழதல அமையாமையானும" எனறு சேனவரையா கூறுவது பொருநதாது.

பிறவு மென்றதனால் புருவங காதென்னுந் தொடக்கத்தனவுங கொள்க. 'பன்மைகூறுங் கடப்பாடிலவே' யென்றதனால் பால்வழுவும், 'தம் வினைக்கியலு மெழுத்தலகடை' யென்றதனால் திணைவழுவு மமைத்தார்.

பன்மை கொண்டன, பன்மையொருமை மயக்கமில்லாத் திணைவழுவாகின், தம்வினைக்கியலு மெழுத்தலகடை யென்பதனான் அமைக்கப்படும்.

மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் என ஒருமைச் சினைப்பெயர் நின்று உயர்திணை கொண்டனவும், நிறங்காரியள், கவுக்கடியள் எனப் பண்புந்தொழிலும் நின்று உயர்திணைகொண்டனவும் தன்னினமுடித்தல் என்பதனான் அமைக்கப்படும்.

கோடு கூரிது களிறு, குளம்பு கூரிது குதிரை என அஃறிணைப்பன்மைச் சினைப்பெயர் நின்று முதல்வினையாகிய ஒருமையான் முடிந்தனவும் அமையுமாறென்னையெனின் :—ஆணடுப் பன்மையொருமை மயக்கமல்லது திணைவழுவின்மையின் ஈண்டைக்கெய்தா ; அப்பன்மையொருமை மயக்கம் ஒன்றென முடித்தல் என்பதனான் அமைக்கப்படும். அஃதேல், இச் சூத்திரத்தால் திணைவழுவோடு கூடிய பால் வழு அமைக்கப்பட்ட தென்பது எற்றுற்பெறுதுமெனின் :—சினைக்கிளவிக்குத தம்வினைக்கியலு மெழுத்தாவது அஃறிணைவினைக் குரிய எழுத்தாம் ; அஃதல்லாதது உயர்திணைவினைக் குரிய எழுத்தே யாம். என்னை ? அஃறிணைக்கு மறுதலை உயர்திணையேயாகலான். அதனால் திணைவழுவுதலும் பெறுது மென்பது. அஃதேல், தம் வினைக்கியலுமெழுத்தாவன சினைவினைக்குரிய எழுத்தென்றும், அவை யல்லாதனவாவன முதல்வினைக்குரிய எழுத்தென்று முரைக்க; உரைக்கவே, உயர்திணைச சினையும் அஃறிணைசசினையு மெல்லாம் அடங்கு மெனின் :—அற்றன்று ; அஃறிணைக்கண் சினைவினைக்குரிய எழுத்தோடு முதல்வினைக்குரிய எழுத்திற்கு வேறுபாடின்றி எல்லாம் அஃறிணையெழுத்தேயாகலின், 'தமவினைக் கியலு மெழுத்தலகடை' யென்பதற் கேலாதாகலால், கண் முதலாயின உயர்திணைசசினையேயா மென்பது. (கூக)

கிளவியாக்கம் முற்றிற்று

உ. வேற்றுமையியல்

[பெயர்கள், உரு பேற்றுப் பொருள் வேற்றுமைப்படும் இயல்புணர்த்துவது.]

க. வேற்றுமையின் வகை

வேற்றுமை இத்தனை என்பது

கூஉ. வேற்றுமை தாமே ஏழென மொழிப.

நான்குசொற்கும் பொதுவிலக்கணம உணர்த்திஞர் அதற் கிடையீடின்றி அவற்றது சிறப்பிலக்கணம் உணர்த்துதன் முறைமையாயினும், வேற்றுமையிலக்கணம் உணர்த்துதற்கு வேறிட மினமையானும, பொதுவிலக்கணமாதல் ஒப்புமையானும், உருபேற்றல் டெயர்க்கிலக்கணமாகலின் வேற்றுமை யுணர்த்திப் பெயருணர்தல் முறையாகலானும், கிளவியாக்கத்திற்கும் பெயரியற்கு

மிடை வேற்றுமையிலக்கணம் உணர்த்திய எடுத்துக்கொண்டார். வேற்றுமை யாவன பெயரும் ஓரிடைசசொல்லு மாகலின், அவற்ற திலக்கணமும் பொது விலக்கணமேயாம்.[1]

வேற்றுமையிலக்கணமென ஒன்றுயினும் சிறப்புடைய எழுவகை வேற்று மையும் அவற்றது மயக்கமும் விளிவேற்றுமையுந் தனித்தனி யுணர்த்தத்தகும் வேறுபாடு யாப்புடைமையான், மூன்றோத்தா னுணர்த்திஞர்.

பொதுவிலக்கணமுணர்த்திச சிறப்பிலக்கணம் உணர்த்துதல் முறையாக லின், முதற்கண்ணதாகிய பெயர்சசொற்குப் பயனிலைகோடலும்[2] உருபேற் றலும்[3] காலந்தோன்றுமையுமாகிய[4] இலக்கணமுணர்த்துவார் இயைபுபட்டமை யான் வேற்றுமையிலக்கணம் உணர்த்திஞ ரென மேலோத்திஞேடு இவ்வோத் திடை யியைபு கூறிஞரால் உரையாசிரியரெனின் :—அற்றன்று ; இவ்வோத் துப் பெயரிலக்கணம் நுதலி யெடுதுதுக் கொள்ளப்பட்டதாயின், உருபேற்ற லும் பயனிலைகோடலுங காலந்தோன்றுமையுமாகிய பெயரிலக்கணம் முன் ஞேதி, இயைபுபடுதலான் வேற்றுமையுணர்த்துங கருத்தினராயின் அவற்றை யும் இன்னவிலக்கணத்த என உணர்த்திப் பின்னும் எடுத்துக்கொண்ட பெயரி லக்கணமேபற்றி யோதிப் பெயரியலென ஒரோத்தான் முடியற்பாற்றன்றே ; அவ்வாறன்றி, வேற்றுமையிலக்கணமே முன்கூறி 'அன்றி யனைததும பெயர்ப் பய னிலையே' (சொல் - சுசு) எனவும், 'ஈறு பெயர்க் காகு மியற்கைய வென்ப' (சொல் - சுசு) எனவும் வேற்றுமையிலக்கணங கூறி அச் சூத்தி ரத்தாற் பயனிலை கோடலும் உருபேற்றலும பெயர்க்கிலக்கண மென்பது உய்த் துணரவைத்துப் பின்னும வேற்றுமையிலக்கணமே யுணர்த்தி, இதனை வேற் றுமையோத்தென்றும், அவற்ற நு மயக்கமுணர்த்திய ஓத்தை வேற்றுமை மயங் கியலென்றும், சிறப்பில்லா விளிவேற்றுமையுணர்த்திய ஓத்தை விளிமரபென் றும், நுதலியதனுற் பெயர் கொடுத்து, மூன்றோதாக வைத்து, பெயரிய லென வேறோரோத்நிற்குப் பெயர் கொடுத்ததமையானும், 'எல்லாச சொல்லும் பொருள் குறித்தனவே' (சொல் - கடுடு) என்பது முதலாகிய ஐந்து சூத்திர மும் பெயரிலக்கண முணாதது மோத்தின்முன் வையாது இடைவைத்தல் பொருந்தாமையானும், இவ்வோத்துப் பெயரிலக்கணம நுதலி யெடுத்துக்கொள் ளப்பட்டதன்று, வேற்றுமை யிலக்கணமே நுதலி யெழுநதெனவே படும் ; அதனுன் அவாக்கது கருத்தன் றென்க. அஃதேல், 'பெயரிலக்கிளவி காலந் தோன்றூ' (சொல் - எ0) எனப் பெயரிலக்கணம ஈண்டுக் கூறியது என்னே யெனின் :—பயனிலைகோடலும உருபேற்றலும் பெயர்க்கிலக்கண மென்பது ஈண்டுப் பெறப்பட்டமையான், அவற்றே டியையக் காலந்தோன்றுமையும் ஈண்டே கூறினர். பெயரிலக்கணமாக லொப்புமையா னென்பது.

1" வேற்றுமை ..பொது விலக்கணமேயாம—"இக்கூற்று அதனுணர்ப பொருத்தமுடைய தன்று. பெயரும உருபும ஓரளவு ஒன்றுபடு கிறதும. வேற்றுமைப பெயரில உருபைப பிரித்து வைத்து, இடைசசொலலென கொளளின், பெயாகளினும விணைகளினும இறுதியிலுளள பாலகாடடு மீறுகளோயும பிரித்துணாந்து இடைச சொலலென கொளளவேண்டும, விரவுபபெயாகளும மகடூஉ மருங்கிற பாறிரி கிளவியும பயனிலையோடு சேராதலால, காடடபபடாமையின, பயனிலை கூறல பற்றி வேற்றுமையைப பொதுவிலக்கணம என்றலும பொருந்தாது.

2. சுசு-வது நூற்பா
3. சுகூ வது ,,
4. எ0-வது ,,

இ - ள்: வேற்றுமையாவன ஏழென்று சொல்லுவர் தொல்லாசிரியர்; எ - று.

செயப்படுபொருண் முதலாயினவாகப் பெயர்ப்பொருளே வேறுபடுத்துணர்த்தலின், வேற்றுமையாயின. செயப்படுபொருண் முதலாயினவற்றின் வேறுபடுத்துப் பொருண்மாத்திர முணர்த்தலின், எழுவாயும் வேற்றுமையாயிற்று. அல்லதூஉம், வேற்றுமை யென்பது பன்மை பற்றிய வழக்கெனினு மமையும்.

தாமே யென்பது கட்டுரைச் சுவைபட நின்றது. (க)

ஊஎ. விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.

இ - ள்: விளிகொள்வதன்கண்ணதாகிய விளியோடு தலைப்பெய்ய வேற்றுமை யெட்டாம்; எ - று.

வேற்றுமை யென்பது அதிகாரத்தான் வந்தது.
முன்னர்,

> 'விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
> தெளியத் தோன்று மியற்கைய வென்ப' (சொல் - ககஅ)

என்பவாகலின், விளிகொள்வ தென்றது விளிகொள்ளும் பெயரை. அதன்கண் விளியென்றதனால், பெயரு மன்று, பெயரிற் வேறு மன்று, விளிவேற்றுமையாவது திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயரிறுதி யென்பதாம்.

'வேற்றுமை தாமே யேழென மொழிப' (சொல் - ஊஉ) எனப் பிறர் மதங[1] கூறி இச் சூத்திரத்தால் தந்துணி புரைத்தார்.[2] (உ)

வேற்றுமையின் பெயர், முறை

ஊஅ. அவைதாம்
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண்விளி யென்னு மீற்ற.

இ - ள்: எட்டெனப்பட்ட வேற்றுமையாவன விளிவேற்றுமையை இறுதியாகவுடைய பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண்ணும்; எ - று.

பெயர் ஐ ஒடு கு இன் அது கண் என்பன பல பெயர் உம்மைத்தொகை. அஃது ஒரு சொல்லாய் விளி யென்னு மீற்ற என்பதனால் விசேடிக்கப்பட்டது. பெயரும் ஐயும் ஒடுவும் குவ்வும் இன்னும் அதுவும் கண்ணும் என விரியும்.

சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்த லென்பதனால் ஒடு வென்றும் அது வென்றும் ஒதினாகலின், [3]ஆனுருபும் அகரவுருபுங் கொள்ளப்படும்.

---

1 பிறர் மத மெனறது தொலகாபபியாகரு முநதின பிற தமிழிலகணிகளின மதததை.
2 இக கருதது; எச-வது நூறபா உரையில வலியுறுததப்படுதல காண்க.
3 கஅ-வது நூறபாப் பாகக.

விளிவேற்றுமையினது சிறப்பின்மை விளக்கிய பெயர் ஐ ஒடு கு இன் அது கண் விளி யென்னுது 'விளி யென்னு மீற்ற' எனப் பிரித்துக் கூறினர்.

உ. முதல் வேற்றுமை

எழுவாய் வேற்றுமை

கூடு. அவற்றுள்
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.

இ - ள்: மேற் சொல்லப்பட்ட வேற்றுமையுள், முதற்கட் பெயரென்று கூறப்பட்ட வேற்றுமையாவது பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமையாம்; எ - று.

பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமையாவது, உருபும் விளியு மேலாது பிறிதொன்றனோடு தொகாது நிற்கும் நிலைமை. எனவே, உருபும் விளியு மேற்றும் பிறிதொன்றனோடு தொக்கும் நின்ற பெயர் எழுவாய் வேற்றுமையாகா தென்றவாறும்.

எ - டு: ஆ, அவன் என வரும். (சு)

எழுவாய் ஏற்கும் பயனிலைகள்

கூகூ. பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

இ - ள்: பொருண்மை சுட்டல் — ஆ வுண்டு என்பது. வியங் கொளவருதல் — ஆ செல்க என்பது. வினைநிலை யுரைத்தல் — ஆ கிடந்தது என்பது. வினவிற் கேற்றல — அஃதியா தது, அஃதெவன் என வினைச் சொல்லோடு தொடர்தல். பண்புகொள வருதல் — ஆ கரிது என்பது; தன்னின முடித்த லென்பதனால், ஆ வில்லை, ஆ வல்ல என்னுந் தொடக்கத்துக் குணப்பொருளவல்லா வினைக் குறிப்போடு தொடர்தலுங் கொள்க. பெயர்கொள வருதல்—ஆ பல என்பது. அன்றி யனைத்தும் பெயர்ப்பயனிலையே யென்பது அவ்வாறும் பெயர் வேற்றுமைப் பயனிலையாம்; எ - று.

முடிக்குஞ் சொற்பொருள் அத்தொடர்மொழிக்குப் பயனாகலின் பய னிலை யென்றார்.

உண்டென்பது பண்பு முதலாயின சுட்டாது உணைமையே சுட்டலின் வேறு கூறினர். பொய்ப்பொருளின் மெய்ப்பொருட்கு வேற்றுமை யுண்மை யாகலின், அவ்வுண்மையைப் பொருணமை யென்றார்.

வியங்கொள வருதல் வினைநிலை யுரைத்தற்கண்ணும், வினவிற்கேற்றல் பெயர்கொள வருதற்கண்ணும், வினைக்குறிப்பாயவழிப் பண்புகொளவருதற் கண்ணும் அடங்குமாயினும், வினையும் பெயரும் பண்பும் முடிக்குஞ் சொல்லா தலே யன்றி முடிக்கப்படுஞ் சொல்லாதலு முடைய, வியங்கோளும் வினவும்

முடிக்குஞ் சொல்லாயல்லது நில்லாமையின், அவ் வேறுபா டறிவித்தற்கு வேறு கூறினு ரென்பது.

'பெயர்தோன்று நிலை' (சொல். சூரி) என்றதனானும், அன்றி யனைத்தும் பெயர்ப் பயனிலையே யென்பதனானும், பெயர் தோன்றிய துணையாய் நின்று பயனிலைத்தாதல் எழுவாய் வேற்றுமைய திலக்கண மென்பது பெற்றும்.

ஆபல என்புழிப் பலவென்பதற்குப் பயனிலை யாதெனின் :—அது பயனிலையாய் ஆவென்பதனை முடித்தற்கு வந்ததாகலின், தான் பிறிதோர் சொன்னேக்காது ஆவென்பதனோடு தொடர்ந்து அதனை முடித்தமைந்து மாறுமென்பது. அஃதேல், பயனிலை கொள்ளாதது எழுவாய் வேற்றுமையாமா றென்னையெனின் :—உருபேற்றல் பெயர்க் கிலக்கணமாயினும் உருபேலாதவழியும் பெயராமாறு போல, எழுவாய் வேற்றுமை பயனிலை கொள்ளாதவழியும் எழுவாய் வேற்றுமையே யாமென்பது. இலக்கிய மெங்குஞ் செல்லாதன இலக்கணமாமா றென்னையெனின் :—ஆண்டிலக்கணமாவன உருபேற்றற்கேற்ற[1] தன்மையும் பயனிலையும் பயனிலை கோடற்கேற்ற தன்மையுமாகலின், அத் தன்மை எல்லாவற்றிற்கு முண்மையின் இலக்கணமா மென்பது.

அகரச்சுட்டு அன்றி யென ஈறு திரிந்து நின்றது. அன்றியனைத்தும் பெயர்ப்பயனிலை யெனவே, பயனிலைகோடல் பெயர்க்கிலக்கண மென்பதூஉம் பெற்றும். (நு)

தொகைப் பெயரும் பயனிலை கொள்ளல்

சூ எ. பெயரி னுகிய தொகையுமா ருளவே
அவ்வு முரிய அப்பா லான.

இ - ள்: பெயரும் பெயருந்தொக்க தொகையுமுள ; அவையு முரிய எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கோடற்கு ; எ - று.

எ - டு: யானைக்கோடு கிடந்தது, மதிமுகம் வியர்த்தது, கொல்யானை நின்றது, கருங்குதிரை யோடிற்று, உவாப்பதினென்கு கழிந்தன, டொற்றெருடி வந்தாள் என வரும்.

பெயரினுகிய தொகையு மென்னும் உம்மையாற், பெயரொடு பெயர் தொக்கனவே யன்றி, நிலங்கடந்தான், மாக்கொணர்ந்தான் எனப் பெயரொடு வினை வந்து தொக்க வினையினுகிய தொகையுமுள என்பதாம். ஆகவே பெயரொடு பெயரும் பெயரொடு தொழிலுந் தொக்கன தொகை யென்பது பெற்றும்.

அவ்வுமுரிய எனப் பொதுவகையாற் கூறினுரேனும், எற்புழிக்கோட லென்பதனுன் எழுவாய் வேற்றுமையாதற் கேற்புடைய பெயரினுகிய தொகையே கொள்ளப்படும்.

இரு தொடர்படச் சூத்திரித் திடர்ப்படுவ தென்னை? பெயரினுகிய தொகையும் எழுவாய் வேற்றுமையாமென்றேத அமையாதோ எனின் :—அங்ஙனமோதின் பெயரொடு பெயரும், பெயரொடு வினையுந் தொக்கன தொகைச் சொல்லா மென்னுந் தொகையிலக்கணம் பெறப்படாதாம் ; அவ் விலக்கண முணர்த்துதற்கு இவ்வாறு பிரித்தோதினு ரென்பது.

---

1 உருபேற்றலும் எனநிருபபது நன்று.

பெயரிலுகிய தொகையுமென்ற உம்மையான் வினையிலுகிய வினைத் தொகை தழுவப்பட்ட தென்றும், 'எல்லாத் தொகையு மொருசொன் னடைய' (சொல் - சஉ0) என்பதனால் தொகைச் சொல்லெல்லாம் எழுவாய் வேற்றுமையாதல் பெறப்படுதலின், ஈண்டு அவ்வுமுரிய அப்பாலான என்றது தொகைச் சொற்குப் பயனிலை கோடன்மாத்திர மெய்துவித்தற்கென்றும், உரையாசிரியர் கூறினாரெனின் :—அற்றன்று : வினைத்தொகைக்கு நிலை மொழி வினையென்பது உரையாசிரியர்க்குக் கருத்தன்மை 'வினையின் ருகுதி காலத் தியலும்' (சொல் - சகநி) என்னுஞ் சூத்திரத்திற் சொல்லுதும். இனி 'எல்லாத் தொகையு மொருசொன் னடைய' (சொல் - சஉ0) என்ப தற்கு ஒரு சொன்னடையவா மென்பதல்லது எழுவாய் வேற்றுமையாமென் னுங் கருத்தின்மையானும், அக்கருத்துண்டாயின் அவையும் எழுவாய் வேற் றுமையாய் நின்று 'அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே' (சொல் - சுசு) என்றதனால் பயனிலை யெய்துமாகலின் அவ்வுமுரிய அப்பாலான வென்றல் கூறியது கூறிற்றுமாகலானும், அதுவு முரையாசிரியர் கருத்தன் றென்க.

அஃதேல், தொகையும் எழுவாய் வேற்றுமையா மென்பதே இச் சூத்திரத் திற்குக் கருத்தாயின் 'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே' (சொல் - சுநி) என்னுஞ் சூத்திரத்தின் பின் வைக்க எனின் :—பெயர் தோன்றிய துணையாய் நின்றலும் பயனிலை கோடலுமாகிய எழுவாய் வேற்றுமை யிலக்கண மிரண்டுந் தொகைச்சொற்கு மெய்துவித்தற்கு அவ்விரண்டு சூத்தி ரத்திற்கும் பின் வைத்தாரென்பது. ஆண்டு வைப்பின், 'அன்றி யனைத்தும் பெயர்ப் பயனிலையே' (சொல் - சுசு) என்றதனாற் பயனிலைகோடல் பெயர்க் கேயாய்த் தொகைக் கெய்தாதா மென்பது. (சு)

எழுவாயும் தோன்று எழுவாயும்

சுஅ. எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

இ - ள்: மூன்றிடத்துப் பெயரும் செவிப்புலனுகத் தோன்றி நின்று பயனிலை கோடல் செவ்வியென்ப ஆசிரியர்; எ-று. எனவே, அவ்வாறு தோன்றுது நின்று பயனிலை கோடலுமுண்டு; அது செவ்வி தன்று என்றவாறும்.

பெயரென்றது ஈண்டெழுவாயை.

கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா என்றவழிச செல்வல் எனவும், யான் யாது செய்வல் என்றவழி இது செய் எனவும், இவன் யார் என்றவழிப் படைத் தலைவன் எனவும் செப்பியவழி, யான் நீ இவன் என்னும் எழுவாய் வெளிப் படாது நின்று, செல்வல், இது செய், படைத்தலைவன் என்னும் பயனிலை கொண்டவாறு கண்டுகொள்க.

எவ்வயிற் பெயரும் என்றது என்னையெனின் :—செல்வல், இது செய் என்னுந் தன்மை முன்னிலை வினைகளான் யான் நீ யென்பனவற்றின் பொருளு முணரப்படுதலின், யான் செல்வல், நீ யிதுசெய் யெனப் பெயர் வெளிப்படுத்தல் பயமின்றுயினும் வழக்கு வலியுடைத்தாகலின், அவ்வாறு வரு தல் பயமின்றெனப்படா தென்பது விளக்கிய எவ்வயிற் பெயரு மென்று ரென்பது.

அவ்வியலா னிலேய லென விரியும்.

பயனிலேக்கு இருநிலேமையு[1] மோதாது எழுவாய்க்கே யோதுதலாற் பயனிலே வெளிப்பட்டே நிற்கும்.

எவ்வயிற் பெயரும் பயனிலே கோடல் செவ்விதென, உருபேற்றல் செவ்விதன்ரு மென வுரைத்து அவ்வாய் நீயி ரென்பன உருபேலா வென்று காட்டினுரால் உரையாசிரியரெனின்:—அவ்வாயென்பது இடைசசொல்லாய் ஆண்டென்னும் பொருள்பட நின்றவழி உருபேயன்றிப் பயனிலேயும் எலா தாம். இனி அல்வழிக்கண்[2] நும்மென்பது திரிந்து நீயிரென நின்ற திரிபைப் பெயரெனக் கொண்டு உருபேலாதென்ரு ராயின், [3]நீயென்பதன் திரி பாகிய நின் என்பதனேயும் பெயராகக் கொண்டு பயனிலே கொள்ளா தென்றுங கூறல்வேண்டும்; அன்றி நும்மின் திரிபாகிய நீயி ரென்பதனே 'எல்லா நீயிர் நீயெனக் கிளந்து' (சொல் - களச) என இயற்கைப் பெயரோடு ஒருங்கு வைத்தது நீயி ரென்னுந்திரிபே இயல்பாக வேற்றுமைக்கண் நும் மெனத் திரிபினு மமையு மென்னுங கருத்தினராயன்றே. அதனுன் இயல் பாகக் கொள்ளப்பட்ட நிலேமைக்கண் நீயி ரென்பதனே உருபேலா தென்ரு ராயின் நும்மெனத் திரிந்து[4] உருபேற்பதனே உருபேலா தென்றல் பொருந்தா தாம். அதனுனது போலியுரை யென்க. (எ)

பெயரில் உருபு நிற்கும் இடம்

கூகூ. கூறிய முறையின் உருபுநிலே திரியா
ராகும் இயற்கைய வென்ப.

எழுவாய மவற்றுமை யுணர்த்தி ஏனே யறுவகை வேற்றுமை யிலக்கணமு முணர்த்திய எடுத்துக்கொண்டார்.

இ - ள்: பெயர், ஐ, ஓடு, கு, இன், அது, கண் என்று கூறப் பட்ட முறைமையையுடைய உருபுதங்நிலே திரியாது பெயர்க்கீரு மியல்பை யுடைய வென்று சொல்லுவர் ஆசிரியர்; எ - று.

எ - டு: சாத்தனே, சாத்தனெடு, சாதனற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் என வரும்.

அம்முறைபற்றி அவை யெண்ணுப்பெயரான்[5] வழங்கப்படுதலின் 'கூறிய முறையி னுருபு' என்ரூர்.

வினேசசொ லிறுதி நிற்குமிடைச்சொல், தாமென வேறு உணரப் படாது அச்சொற்குறுப்பாய் நிற்குமன்றே, இவை யவ்வாறு பெயர்க்குறுப்பாகாது தாமென வேறுணரப்பட் டிறுதி நிற்குமென்பார் 'நிலேதிரியாது' என்ரூர்.

---

1 இருநிலே – வெளிப்படடு நிற்றலும மறைந்து நிற்றலும.

2 தொல. எழுத்து நடஉ; தொல. சொல். கசங.

3 தொல. எழுத்து களக.

4 நும எனனும பெயா நீயிர எனத திரிந்தது எனபது முற்றிலும் வழுவாம. நூம் எனற வழகறற முனனிலேப பனமைப பெயரே நும எனக குறுகி வேறறுமை யேறகும. நீயிர எனபது நீ எனனும முனனிலே யொருமைப பெயர படாக கைகுரிய'இர' சறறொடு கூடியது. ஆதலின எழுவாய வேறறுமை மட்டும் பெறும.

5 எணணுபபெயரான வழங்கபபடுதலாவது முதலாம் வேறறுமை 2-ம் வேற றுமை என வழஙகல.

உருபு பெயர் சார்ந்து வரு மெனவே, உருபேற்றலாகிய பெயரிலக்கண மும் பெறப்பட்டது. (அ)

பெயரின் இயல்பு

எ0. பெயர்நிலைக் கிளவி காலந் தோன்ரு
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே.

இ - ள் : பெயர்ச்சொற் காலந் தோன்ரு, [1]வினைச்சொல்லோ டொக்கும் ஒரு கூறல்லாத விடத்து ;. எ - று.

சாத்தன், கொற்றன், உண்டல், தின்றல் எனக் காலந்தோன்ரு நிற்ற லும், உண்டான், தின்ரூன் எனத் தொழினிலை யொட்டுவன காலந் தோன்றி நிற்றலுங் கண்டுகொள்க.

உண்டான், நின்ரூன் என்னுந் தொடக்கத்துப் படத்துச சொல்லப்படும் தொழிற்பெயர்[2] வினைசசொற்போலத் நிணையும் பாலுங் காலமும் முதலாயின வற்றை விளக்கி, அன் ஆன் முதலாகிய ஈற்றவாய வருதலின், 'தொழில்நிலை யொட்டும்' என்ரூர். ஒட்டுமென்பது உவமசசொல்.

பெயராகிய நிலையை யுடையது பெயர்நிலை யென அன்மொழித்தொகை. பெயா - பொருள். தொழில்நிலையு மது.[3]

காலந் தோன்ரு எனபன ஒரு சொல்லாயப் பெயர்நிலைக் கிளவி யென் பதற்கு முடிபாயின.

பயனிலை கோடலும் உருபேற்றலுமாகிய பெயரிலக்கணம் ஈண்டுப் பெறப்படுதலின், அவற்ரேடியையந் காலந்தோன்ரு மைமையாகிய பெயரிலக்கண மும் ஈணடே கூறினர். பெரும்பான்மைபற்றிக காலந்தோன்ரு மை[4] பெய ரிலக்கணமாயிற்று. (கூ)

ந. இரண்டாம் வேற்றுமை

'ஐ' உருபின் பொருள்

எக. [5]இரண்டா குவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலில் தோன்று மதுவே.

இ - ள் 'பெயர் ஐ ஒடு கு' என்னுஞ் சூத்திரத்து ஐ எனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல் இரண்டாவதாம். அஃதி யாண்டுவரினும் வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டு முதற்கண்ணுந் தோன்றுமவை பொருளாக வரும ; எ - று.

---

1 தொழிலநிலை யொடடும ஒனறு – வினையாலணையும பெயா.
2 தொழிற பெயா—வினையாலணையும பெயா.
3 அது - அனமொழிததொகை (தொழினிலை—தொழிலாகிய நிலையையுடையது.)
4 காலஙகாடடும வினையாலணையும பெயா சிறுபானமை.
5 இருநூறபா முதல ஏழாமவேறறுமை நூறபா முடிய ஒவவொரு வேறறுமைக கும ஒவவொரு நூறபாவாகவே கொணடு பொருள கூறினா இளமபூரணா. [71 ம 72 ம ஒரு நூறபாவே இளமபூரணருககு.]

எ - டு: குடத்தை வனைந்தான், குழையையுடையன் என வரும்.

எண்ணுமுறையான் இரண்டாவதென்பது பெறப்படுமாயினும், இக்குறி தொல்லாசிரியர் வழக்கென்ப தறிவித்தற்கு ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி யிரண்டாவ தென்றார். இது மூன்றாவது முதலாயினவற்றிற்கு மொக்கும்.

பெயரிய என்பது பெயரென்பது முதலாக முடிந்ததோர் பெயரெச்சம்.

தம்மை யுணர்த்துவனவும் பெயரெனப்படுதலின் 'ஐயெனப் பெயரிய' வென்றார்.

வினையே வினைக்குறிப் பென்றாராயினும் அவற்றின் செயப்படுபொருளே கொள்ளப்படும்; அவ்விருமுதலிற் றோன்று மென்றமையான், முத[1]லாதற்கும் வேற்றுமைப் பொரு[2]ளாதற்கும் ஏற்பன அவையே யாகலின். என்னை அவை முதலாதற் கேற்றவாறெனின்:—செய்யப்படுபொருள் முதலாயின தொழிற்குக் காரணமாகலானும், 'ஆயெட்டென்ப தொழினமுத னிலையே' (சொல் - ககஉ) என அவற்றை முதனிலையென்று கூறுபவாகலானு மென்பது. அஃதேல், செயப்படு பொருளாவது வினைமுதற்றொழிற் பயனுறுவதாதலால், குழை முதலாயினவற்றிற்கு அவ்விலக்கண மேலாமையிற் செயப்படு பொருளன்மையான் வினைக்குறிப்பெனல் வேண்டா வெனின்:—அற்றன்று; 'அம்முக் காலமுங் குறிப்பொடு கொள்ளு, மையங்கிலையுடைய' (சொல் - உ00) என்றாராகலின், குறிப்புசொற் காலமொடு தோன்றிக தொழிற்சொல்லாதலும் குழை முதலாயின தொழிற்பய னுறுதலும் ஆசிரியா துணிபாகலின், அவையுஞ் செயப்படு பொருளா மென்பது. ஆயின், செயப்படுபொருட்கட் டோன்று மென வமையும், வினையே வினைக்குறிப் பெனல் வேண்டா வெனின்:—அதனானு கூறின், செயப்பா டினிது விளங்குஞ் சிறப்புடைத் தெரிநிலவினைச செயப்படு பொருளையே கூறினரோ குறிப்பு பொருளு மடங்கப் பொதுவகையாற் கூறினரோ வென் றையமாம், ஐயம நீங்க வினையே வினைக்குறிப்பென்று ரென்பது. வினை வினைக்குறிப்பு என்பன ஈண்டாகு பெயர்.

புகழை நிறுத்தான், புகழை நிறுத்தல், புகழை யுடையான். புகழை யுடைமை என இரண்டாவது பெயரொடு தொடர்ந்தவழியும் வினைச்செயப் படுபொருளும் குறிப்புசெயப்படுபொருளும் பற்றியே நிற்கு மென்பார், எவ் வழி வரினு மென்று யாப்புறுத்தார்.

இயற்றப்படுவதும்,[3] வேறுபடுக்கப்படுவதும்,[4] எய்தப்படுவது[5] மெனச் செயப்படுபொருள் மூன்றும். இயற்றுதலாவது முன்னில்லதனை யுண்டாக்குதல். வேறுபடுத்தலாவது முன்னுள்ளதனைத் திரித்தல். எய்தப்படுதலாவது இயற்றுதலும் வேறுபடுத்தலு மின்றித் தொழிற்பயனுறுந் தன்மையாய் நிற்றல். (கo)

(உ-ம) 1 முதல்—தொழிற காரணம.
2 வேறுபுமை பொருள—வேறுபுமை யேறகும பொருள.
3 கோயிலக கடடினான, நூல இயறறினான.
4 குடததை வனைநதான, கடடிடததை இடிதததான.
5 ஊரை அடைநதான, சோறறை உணடான.

அப்பொருளின் பாகுபாடுகள்

எஉ. காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்ரு
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்ரு
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்ரு
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்ரு
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனுர்.

செயப்படு பொருள் மூன்றனையும்[1] பற்றி வரும் வாய்பாடுகளை விரிக்கின்ரூர்.

இ - ள்: காப்பு முதலாகச் சிதைப்பு ஈருகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டுப் பொருளும் அவைபோல்வன பிறவுமாகிய அம்முதற் பொருள்மேல் வரும் எலலாச் சொல்லும் இரண்டாம் வேற்றுமைப் பால என்று சொல்லுவர் புலவர்; எ - று.

என்ரவென்பது எண்ணிடைச சொல்.

இன்னெல்லாம் புணரியனிலையிடைப் பொருணிலைக்குதவாது[2] (சொல்-உரை) எண்ணின்கண் வந்தன. முன்னர் வருவனவற்றிற்கும் ஈதொக்கும்.

'அம்முதல்' என்றது கூறப்பட்ட செயப்படுபொருள் என்றவாறு.

எ - டு: எயிலை யிழைத்தான் என்பது இயற்றப்படுவது. கிளியை யோப்பும், பொருளை யிழக்கும், நாணை யறுக்கும், மரத்தைக் குறைக்கும், நெல்லைத் தொகுக்கும, வேலியைப் பிரிக்கும், அறத்தை யாக்கும், நாட்டைச் சிதைக்கும் என்பன வேறுபடுக்கப்படுவன. குறைத்தல் சுருக்குதலும் சிறிதிழக்கச் சிதைத்தலுமாம்.[3] அறுத்தல் சிறிதிழவாமற் சினையையாயினும் முதலையாயினும் இரு கூறு செய்தல். ஊரைக் காக்கும், தந்தையை யொக்கும், தேரைஞரும், குரிசிலைப் புகழும், நாட்டைப் பழிக்கும், புதல்வரைப் பெறும், மனைவியைக் காதலிக்கும், பகைவரை வெகுளும், செற்ரூரைச் செறும், நட்டாரை யுவக்கும், நூலைக் கற்கும், பொன்னை நிறுக்கும், அரிசியை யளக்கும், அடைக்காயை யெண்ணும், ஊரைச் சாரும், நெறியைச் செல்லும், சூதினைக் கன்றும், கணையை நோக்கும், கல்வரை யஞ்சும் என்பன எய்தப்படுவன. வெகுளலுஞ் செறலும்

1 செயப்படுபொருள் மூனறு—முந்தின நூறபாவுரையிற கூறப்பட்ட, இயறறப படுவது முதலிய மூனறு.

2 புணரியல நிலையிடைப பொருணிலைக குதவுதலாவது "எலலாவறறையும எனபுழி வறறுச சாரியை நிலைமொழிபபொருள அஃறிணைபபொரு ளெனபதுபட வருதலும, எலலாநமமையும எனபுழி நமமுசசாரியை அபபொருள் தனமைப பனமை யெனபது பட வருதலுமாம்." (தொல. சொல. உரை, நச, உரை).

3 சுருகுதல—குடை மடக்கலும் கருதுரைதலுமபோல ஒரு பொருள் முழுவதையுஞ் சுருக்குதல. சிறிதிழகுக சிதைதல் - ஒரு பகுதியை மட்டும நீகுதல.

கொலைப்பொருள வாயவழி வேறுபடுக்கப் படுவனவாம். செறல் வெகுளியது காரியம்.[1]

இயற்றப்படுவது ஒருதன்மைத்தாகலின், அதற்கொருவாய்பாடே கூறினார். ஏனைய பல விலக்கணத்த வாகலின் பலவாய்பாட்டான் விரித்துக் கூறினார்.

அன்னபிறவு மென்றதனால், பகைவரைப் பணித்தான், சோற்றை யட்டான், குழையை யுடையான், பொருளோயிலன் என்னும் தொடக்கத்தன கொள்க.

காப்பு முதலாயின பொருள்பற்றி யோதப்பட்டமையான்,[2] ஊரைப் புரக்கும், ஊரை யளிக்கும், தந்தையை நிகர்க்கும், தந்தையை யொட்டும், தேரைச் செலுத்தும், தேரைக் கடாவும் என்பன போல்வன வெல்லாங் கொள்க.

இயற்றப்படுதல் முதலாகிய வேறுபாடு, குறிப்புவினைச்செயப்படுபொருட்கண் ஏற்பன கொள்க. (கக)

ச. மூன்றும் வேற்றுமை

'ஒடு' உருபின் பொருள்

எங. மூன்று குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே.

இ - ள்: மேல் ஒடுவெனப் பெயர்கொடுத் தோதிய வேற்றுமைச் சொல் மூன்றுவதாம். அது வினைமுதலுங் கருவியுமாகிய இரண்டு முதலியும் பொருளாக வுடைத்து; எ - று.

மேல் ஐயொடு குவ்வென்றோதியவழி ஆனுருபுந் தழுவப்பட்டமையான், ஈண்டும் அவ்வாறே கொள்ளப்படும்; படவே மூன்றுவதாதலும் வினைமுதல் கருவிப் பொருட்டாதலும் ஆனுருபிற்கு மெய்தும்.

வினைமுதலாவது கருவி முதலாயின காரணங்களைத்[3] தொழிற்படுத்துவது. கருவியாவது வினைமுதற்றொழிற் பயனைச் செயப்படுபொருட்கணுய்ப்பது.

---

1 வெகுளியது காரியம கொலலுதல.

2 பொருள்பற்றி யோதப்பட்டமை—'கொளகீச சொலலே' 'என வென் கிளவி' யெனச சொறபற்றிக கூறாமல 'புரதத லும அளித்தலும முதலிய காபபும, நிகாதத லும ஒட்டுதலும முதலிய ஒபபும' எனப பொருளபற்றிக கூறுதல.

3 கருவி முதலாயின காரணங்கள :—முதறகாரணம துணைகாரணம நிமித்தகாரணம எனக காரணம மூனறு இவை கருவி யெனறுங கூறபபடும. நிமித்தகாரணதைத எழுவாயெனறு கொளளுவதைவிட நோககம எனறு கொள்வது பொருதுமம. எதன நிமித்தம எனபது எதனபொருடடு எனறு பொருள்படுதலி யும, கருவியைக கொணடு கருமஞ செயயும தலைவன கருவியினும வேறுயிருததலி யும, ஒரு கருமததின பயனை நோககுவதும அககருமஞ செயபபடுவதறகுக காரண மாயிருததலியும நோக்குக. நோககம பயனின முனனிலையும, பயன நோககதின பினனிலையுமாகும. அடையபபடாத குறிகோள நோககமும, அடையப்பட்ட பேறு பயனுமாகும. ஊதியம வினைகுமுன பெறபபடுவதாயின நோககமும பயனும ஙனறேயாம. கருவியைக காரகம ஞாபகம எனறும இரணடாயப் பகுபபர். காரகம் ஒரு தொழிலைச் செய்ய உதவுவது; ஞாபகம் ஒரு பொருளை அறிய உதவுவது.

அனை யென்பது அத்தன்மையவாகிய முதலென அவற்ற திலக்கணத் திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

முதலென்பதற்கு மேலே யுரைத்தாம்.

எ - டு: கொடியொடு துவக்குண்டான், ஊசியொடு சூயின்ற தூசும் பட்டும் எனவும், அகத்தியனொல் தமிழுரைக்கப்பட்டது, வேலானெறிந்தான் எனவும் வரும்.

பிறபொருளு முளவேனும் வினைமுதல் கருவி சிறந்தமையான் 'வினை முதல் கருவி யினைமுதற்று' என்றார்.

வினைமுதல் கருவிக்கண ஒடுவெனுருபு இக்காலத் தருகி யல்லது வாராது. (கஉ)

அப் பொருளின் பாகுபாடுகள்

எச. அதனி னியற்றல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனி னுதல்
அதனிற் கோடல் அதனெடு மயங்கல்
அதனே டியைந்த ஒருவினைக் கிளவி
அதனே டியைந்த வேறுவினைக் கிளவி
யதனே டியைந்த ஒப்ப லொப்புரை
இன்ன னேது ஈங்கென வருஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

இ - ள்: அதனின் இயறல்—மண்ணினியனற குடம் என்பது. மண் முதற்காரணம். முதற்காரணமாவது காரியத்தோ டொற் றுமை யுடையது. அதன் தகு கிளவி—வாயாற்றக்கது வாய்ச்சி, அறிவானமைந்த சான்றோர் என்பன. இவை கருவிப்பாற்படும். அதன் வினைப்படுதல்—சாத்தனின் முடியு மிக்கருமம் என்பது. இது வினைமுதற்பாற்படும். அதனின் ஆதல்—வாணிகத்தா னியினன் என்பது. அதனின் கோடல - காண*த்தாற் கொண்ட வரிசி என்பது. இவையுங் கருவிப்பாற்படும். இவையைந்து பொருளும் ஒடுவுருபிற்குஞ் சிறுபான்மை யுரியவாயினும், பெரும் பான்மைபற்றி ஆனுருபிற்கே யுரிய போலக் கூறினர். அதனெடு மயங்கல்—எண்ணெடு விராய வரிசி என்பது. அதனேடு இயைந்த ஒருவினைக் கிளவி—ஆசிரியனெடு வந்த மாணாக்கன் என்பது. வரு தற்றொழில் இருவர்க்கு மொத்தலின், ஒருவினைக் கிளவியாயிற்று. அதனேடு இயைந்த வேறுவினைக் கிளவி—மலையொடு பொருத மால்யானை என்பது. பொருதல யானைக்கல்ல தின்மையின் வேறு வினைக் கிளவியாயிற்று. அதனேடு இயைந்த ஒப்பல் ஒப்புரை—

* காணம—பொறகாசு.

பொன்னே டிரும்பனையர் நின்னெடு பிறரே என்பது. ஒப்பல்ல தனை யொப்பாகக் கூறலின் ஒப்பலொப்புரை யாயிற்று. இம் மூன் றற்கும் உடனிகழ்தல் பொது வென்பதூஉம் அவை ஒடுவெனுரு பிற்கே யுரிய வென்பதூஉ முணர்த்திய, அதனெடியைதல் மூன் றற்குங் கூறினர். அதனெடு மயங்கற்கும் ஈதொக்கும். எல்லாப் பொருட்கண்ணும் அது வென்றது உருபேற்கும் பெயர்ப் பொருளை. 'அதற்கு வினையுடைமையின்' (சொல் - எசு) என்பதற்கும் ஈதொக்கும். இன்னனேது என்பது முயற்சியிற் பிறத்தலா னெலி நிலையாது என்பது. அதனினுதலெனக் காரகவேதுமுற்கூறப்பட்ட மையான், இது ஞாபக ஏதுவாம். இப்பொருள் ஆனுருபிற்கும் இன்னுருபிற்கு முரித்தென்பது விளக்கிய வது என்னது இன்ன னேது என்றார். இன்னனென்பது உம்மைத் தொகை. அவற்ற தேதுப் பொருண்மை; எ—று.

எனவென்பதனை மாற்றி ஏது வென்பதன் பின் கொடுத்து, ஈங்கு வரூஉ மன்ன பிறவு மென வியைக்க. ஈங்கனமென்று பாட மோதுவாரு முளர்.

அதனினியற லென்பதற்குத் தச்சன் செய்த சிறுமாவைய மென்றும், இன்னனென்பதற்குக் கண்ணுற் கொதத்தை காலான் முடவனென்றும், உதா ரணங்காட்டினாரால் உரையாசிரியரெனின் :—அற்றன்று : தச்சன் செய்த சிறுமாவையமென்பது 'வினைமுதல் கருவி யினைமுதற்று' (சொல் - எக) என் புழிய—ங்குதலான் ஈண்டுப் பாற்படுக்க வேண்டாமையானும், சினைவிகாரத்தை முதன்மேலேற்றிக் கூறும பொருண்மை இன்னனென்பதனாற் பெறப்படாமை யானும், அது போலியுரை யென்க.

ஒடுவும் ஆனும் இரண்டு வேற்றுமை யாகற்பால வெனின் :—அற்றன்று : வேற்றுமை மயக்கமாவது ஒரு வேற்றுமையது ஒரு பொருட் கண்ணுக, சில பொருட் கண்ணுக வே வேற்றுமையுஞ் சேறலன்றே; அவ்வாறன்றிச் சிறி தொழித்து எல்லாப் பொருட்கண்ணும் இரண்டுருபுஞ் சேறலானும், வட நூலுள் பொருள் வேற்றுமை யல்லது உருபு வேற்றுமையான் ஒரு வேற்றுமை யாக வோதப்படாமையானும, ஈண்டெல்லா வாசிரியரும் ஒரு வேற்றுமை யாகவே யோதினரென்க. வடநூலொடு மாறுகொள்ளாமைக் கூறல் ஆசிரியர்க்கு மேற்கோளாயின், விளிவேற்றுமையை 'எழுவாய் வேற்றுமைக்கண் அடக் கற்பாலரா வர், அவ்வாறடக்கலிலரெனின் :—அற்றன்று : விளிவேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கல் ஆண்டு எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததன்று ;

> 'எழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
> வேறென விளம்பான் பெயரது விகாரமென்
> றோதிய புலவனு முளனெரு வகையா
> னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்'

என்பவாகலின், ஐந்திரநூலார் விளி வேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக வோர்ந்தாரென்பது பெறப்படும் ; ஆசிரியர் அவர் மதம்பற்றிக் கூறினராகலின் அதனெடு மாறுகொள்ளா தென்பது. இக்கருத்து விளக்கியவன்றே, பாயி ரத்துள் 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' எனக் கூறிற்றென்க.

அன்னபிறவுமென்றதனால், கண்ணூற்கொத்தை, தூங்கு கையா னேங்கு நடைய, (புறம் - உஉ) மதியோடொக்குமுகம், சூலொடு கழுதை பாரஞ் சுமந்தது என்பன போல்வன கொள்க. (கக)

நி. நான்காம் வேற்றுமை

'கு' உருபின் பொருள்

எடு. நான்கா குவதே
குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினுங் கொள்ளும் அதுவே.

இ - ள்: மேல் கு எனப் பெயர்கொடுத் தோதப்பட்ட வேற்று மைச்சொல் நான்காவதாம். அது யாதானுமொரு பொருளாயி னும் அதனை யேற்று நிற்கும்; எ - று.

எ - டு: அந்தணற் காவைக் கொடுத்தான் எனவரும்.

மாணாக்கற்கு நூற்பொருளுரைத்தான் எனக் கொடைப் பொருளவாகிய சொல்லானன்றிப் பிற வாய்பாட்டாற் கூறப்படுவனவும், மாணாக்கற்கு அறிவு கொடுத்தானெனக் கொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கட் செல்லாது ஆண்டுத் தோன்றும் பொருளுமெல்லா மடங்குதற்கு 'எப்பொருளாயினும்' என்றார்.

பிறபொருளு முளவாயினும், கோடற்பொருள் சிறந்தமையின், எப் பொருளாயினுங் கொள்ளு மென்றார். (கச)

அப்பொருளின் பாகுபாடுகள்

எசு. அதற்குவிதீன யுடைமையின் அதற்குடம் படுதலின்
அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின் அதன்பொருட் டாதலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பினென்
றப்பொருட் கிளவியும் அதன்பால என்மனார்.

இ - ள்: அதற்கு விதீனயுடைமை—கரும்பிற்கு வேலி என் பது. விதீன - ஈண்டுபகாரம். அதற்குடம்படுதல்—சாத்தற்கு மகளுடம்பட்டார் என்பது. சான்றோர் கோலிக்குடம்பட்டார் என்பதுமது. அதற்குப்படு பொருளாவது பொதுவாகிய பொரு ளைப் பகுக்குங்கால் ஒரு பங்கிற்படும் பொருள்; அது சாத்தற்குக் கூறு கொற்றன் என்பது. அதுவாகு கிளவி—கடிருத்திரத்திற்குப்† பொன் என்பது. பொன் கடிருத்திரமாய்த் திரியுமாகலின் அது வாகு கிளவி யென்றார். கிளவி - பொருள். அதற்கு யாப்புடைமை - கைக்கு யாப்புடையது கடகம் என்பது. அதற்பொருட்டாதல்— கூழிற்குக் குற்றேவல் செய்யும் என்பது. நட்பு—அவற்கு நட் டான், அவற்குத் தமன் என்பன. பகை—அவற்குப் பகை,

† கடிருத்திரம்—அரைஞாண.

அவற்கு மாற்றான் என்பன. காதல்—நட்டார்க்குக் காதலன், புதல்வற் கன்புறும் என்பன. சிறப்பு—வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர், கற்பார்க்குச் சிறந்தது செவி என்பன.

அப்பொருளென்றது அன்னபொருளே; இவ்வாடையு மந்நூலானியன்றதென்றதுபோல. எனவே, அன்னபிறவு மென்றவாறும்.

அப்பொருட்கிளவியு மென்றதனால், பிணிக்கு மருந்து, நட்டார்க்குத் தோற்கும், அவற்குத் தக்காளிவள், உற்றார்க் குரியர் பொற்றொடிமகளிர் என்பன போல்வனவெல்லாங் கொள்க. (கடு)

கூ. ஐந்தாம் வேற்றுமை

'இன்' உருபின் பொருள்

எ எ. ஐந்தா குவதே
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனி னிற்றிது வென்னு மதுவே.

இ - ள்: மேல் இன்னெனப் பெயர்கொடுத் தோதப்பட்ட வேற்றுமைச்சொல் ஐந்தாவதாம். அஃது இப்பொருளி னித்தன்மைத்து இப்பொருளென்னும பொருண்மையை உணர்த்தும்; எ - று.

ஐந்தாவது நான்கு பொருண்மையுடைத்து; பொருவும், எல்லையும், நீக்கமும், ஏதுவுமென. அவற்றுட் பொருவு இருவகைப்படும்; உறழ்பொருவும், உவமப் பொருவுமென. ஏதுவும் இருவகைப்படும்; ஞாபக ஏதுவும், காரக ஏதுவுமென. அவற்றுள் ஞாபகவேதுப் பொருண்மை மேலே கூறப்பட்டது. காரக ஏதுப் பொருண்மை அச்ச மாக்க மென்பனவற்றுற் பெறப்படும். நீக்கப் பொருண்மை தீர்தல் பற்றுவிடுதல் என்பனவற்றுற் பெறப்படும். ஏனை யிரண்டும் இதனினிற்றிது என்பதனுற் கொள்ளப்படும், அவ்விரண்டனையும் அஃதிருமுறையா னுணர்த்துமாகலான்.[1] எல்லைப்பொருள்—கருவூரின் கிழக்கு; இதனினூங்கு என வரும். கிழக்கு ஊங்கு என்பன, வினைக்குறிப் பல்லவேனும் இற்றென்னும் பொருள்பட நிற்றலின், இற்றென்றலேயாம். பொருஉப்பொருட்குதாரணம் மூன்னர்ப்பெறப்படும். (கசு)

அப்பொருளின் பாகுபாடுகள்

எ அ. வண்ணம் வடிவே யளவே சுவையே
தண்மை வெம்மை யச்ச மென்று
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை யென்று
முதுமை யிளமை சிறத்த லிழித்தல்

---

1 ஏனையிரண்டு—பொருவும எல்லையும. இவை 'இதனின இறறு இது' எனபதனுற கொளளபபடுதலாவது இபபொருளின இபபொருள் இததகையது (உவமப பொருவு) அலலது, இபபொருளினும இபபொருள் இததகையது (உறழ்பொருவு) எனனும வாயபாட்டால பொருவுபபொருளும, இவவிடததின இவவிடம் இத்திசையது எனனும வாயபாட்டால எலலைபபொருளுங கூறபபடுதல.

புதுமை பழமை யாக்க மென்ரு
இன்மை யுடைமை நாற்றந் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்
றன்ன பிறவு மதன்பால என்மனுர்.

இ - ள்: வண்ணமுதலாகப் பற்றுவிடுதலீருகச் சொல்லப் பட்டனவும் அவைபோல்வன பிறவும் ஐந்தாம் வேற்றுமைத் திரத் தனவாம்; எ - று.

வண்ணம் வெண்மை கருமை முதலாயின. வடிவு வட்டஞ் சதுர முத லாயின. அளவு நெடுமை குறுமை முதலாயின. சுவை கைப்புப் புளிப்பு முதலாயின. நாற்றம் நறுநாற்றந் தீநாற்ற முதலாயின.

எ - டு: காக்கையிற்கரிது களம்பழம், இதனின் வட்டமிது, இதனி னெடிதிது, இதனிற் றீவிதிது,[1] இதனிற் றண்ணிதிது, இதனின் வெய்திது, இதனி னன்றிது, இதனிற் றீதிது, இதனிற் சிறிதிது, இதனிற் பெரிதிது இதனின் வலிதிது, இதனின் மெலிதிது, இதனிற் கடிதிது, இதனின் முதி திது, இதனி னிளிதிது, இதனிற் சிறந்ததிது, இதனி னிழிந்ததிது, இதனிற் புதிதிது, இதனிற் பழைதிது, இவனி னிலனிவன், இவனி னுடையனிவன், இதனி னூறுமிது, இதனிற் பலவிவை, இதனிற் சிலவிவை எனவும், **அச்சம்**— கள்ளரி னஞ்சும் எனவும், **ஆக்கம்**—வாணிகத்தினுயினன் எனவும், **தீர்தல்**— ஊரிற் றீர்ந்தான் எனவும், **பற்றுவிடுதல்**—காமத்திற் பற்றுவிட்டான் எனவும் வரும்.

அச்சமுதலிய நான்கு[2] மொழித்து ஒழிந்த இருபத்துநான்கும் ஒத்தபண்பு வேறுபாடுபற்றிப் பொருஉப்பொருள் விரித்தவாறு.

அன்னபிறவுமென்றதனுல், அவனி னளியனிவன், அதனிற் சேய்த்திது, இகழ்ச்சியிற் கெட்டான், மகிழ்ச்சியின் மைந்துற்றன் என்பனபோல்வன கொள்க.

பல வாய்பாட்டோடு வழக்கின்கட் பயின்று வருதலுடைமையாற் பொருஉப் பொருள் இதற்குச் சிறப்புடைத்தாகலின், பெரும்பான்மையும் அதனேயே விரித்தார். (கஎ)

எ. ஆரும் வேற்றுமை

'அது' உருபின் பொருள்

எகூ. ஆரு குவதே
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதன தினுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே.

இ - ள்: அதுவெனப் பெயர்கொடுத் தோதப்பட்ட வேற்று மைச்சொல் ஆருவதாம். அது உடையதாய் நிற்குந் தன்னினும்

1 தீவிது – திதிபபு.

2 அசசமமுதலிய நானகு—அசசம ஆகமம நீதல பறறுவிடுதல எனபன. இவறறுள் முனனிரணடும ஏது; பினனிரணடும நீகமம.

பிறிதொன்றனும் இதனதிதுவென்பது பட நிற்குங் கிளவியிற் றோன்றுங் கிழமையைப் பொருளாக வுடைத்து; எ - று.

எனவே, ஆறுவது கிழமைப் பொருட்டென்றும், அக்கிழமை தன்னுள் வந்த தற்கிழமையும் பிறிதான் வந்த பிறிதின்கிழமையுமென இரண்டென்றுங் கூறியவாறும்.

தன்னென்றது தன்னோடொற்றுமையுடைய பொருளை. பிறிதென்றது தன்னின் வேறுகிய பொருளை.

அஃதேல், தன்னினும் பிறிதினுமாகிய கிழமை தன்னது இதனதிது வெனு மன்ன கிளவிக் கிழமைத்தென்ற தென்னையெனின் :—பொருட்கிழமையும், பண்புக்கிழமையும், தொழிற்கிழமையும் அனவபோல்வனவுமெனக் கிழமை தாம் பல, அவற்றுளொன்று சுட்டாது இதனதிதுவென்னுஞ் சொல்லாற் றோன்றும் கிழமைமாத்திரம் சுட்டுமென்றற்கு 'இதனதிதுவெனுமன்ன கிளவிக் கிழமைத்து' என்றார்.

இதனவிவையென்னும் பன்மை யுருபுத் தொடரு மடங்குதற்கு அன்ன கிளவியென்றார்.

ஒன்று பல குழீஇய தற்கிழமையும், வேறு பல குழீஇய தற்கிழமையும், ஒன்ற்யற்கிழமையும், உறுப்பின் கிழமையும், மெய்திரிந்தாய தற்கிழமையு மெனத் தற்கிழமை ஐந்து வகைப்படும்.[1]

பொருளின் கிழமையும், நிலத்தின் கிழமையும், காலத்தின் கிழமையு மெனப் பிறிதின்கிழமை மூவகைப்படும். அவற்றிற்கு உதாரணம் முன்னர்க் காட்டுதும். (கஅ)

அப்பொருளின் பாகுபாடுகள்

அ0. இயற்கையின் உடைமையின் முறைமையின்
[கிழமையின்
செயற்கையின் முதுமையின் விளையி னென்ரு
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி யுறுப்பின் குழுவி னென்ரு
தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்
திரிந்துவேறு படுஉம் பிறவு மன்ன
கூறிய மருங்கில் தோன்றுங் கிளவி
ஆறன் பால என்மனர் புலவர்.[2]

---

1 ஒன்னூலார் ஒன்றுபல குழீஇய தற்கிழமையை ஒன்றன கூட்டம் என்றும், வேறு பல குழீஇய தற்கிழமையைப் பலவின் ஈட்டம் என்றும், ஒன்றியற்கிழமையைப் பண்பு என்றும், மெய்திரிந்தாய தற்கிழமையைத் திரிபினகம என்றும் கூறுவர், நச்சினார்க்கினியர் இங்குக் கூறிய ஐந்துதற்கிழமையுள் அடங்காதன, கபில ரது அகவல் எனும் செயப்படுகிழமையும், எனது உயிர் எனும் ஒன்றிய தற் கிழமையுமாகும்.

2 இந்நூற்பாவிற் கூறப்பட்டுள்ள கிழமைகளுள், இயற்கை, செயற்கை, முதுமை, விளை, உறுப்பு, குழு, நிலை, திரிந்து வேறுபடுவது என்பன தற்கிழமை; உடை மை, முறைமை, கிழமை, கருவி, துணை, வாழ்ச்சி என்பன பிறிதினகிழமை; தெரிந்து மொழிச்செய்தி என்பது பொதுக்கிழமை.

இ - ள் : இயற்கை முதலாக வாழ்ச்சி யீறுகச் சொல்லப்பட்ட னவும் திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவுமாகிய மேற்கூறப்பட்ட கிழமைப்பொருட்கண் தோன்றுஞ் சொல்லெல்லாம் ஆறும் வேற் றுமைத் திறத்தனவென்று சொல்லுவர் புலவர் ; எ - று.

திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவுமென்றாரேனும், திரிந்து வேறுபடுதல் அன்ன பிறவுமென்றதனால் தழுவப் படுவனவற்றுள் ஒருசாரனவற்றிற்கே கொள்க.

எ - டு : எள்ளது குப்பை, படையது குழாம் என்பன குழூஉக்கிழமை. அவை முறையானே ஒன்று பல குழீஇயதும் வேறு பல குழீஇயதுமாம். சாத்தனதியற்கை, நிலத்ததகலம் என்பன இயற்கைக்கிழமை. சாத்தனது நிலைமை, சாத்தனதில்லாமை[1] என்பன நிலைக்கிழமை. இவை யொன் றியற்கிழமை[2]. யானையதுகோடு, புலியதுகிர் என்பன உறுப்பின் கிழமை. உறுப்பாவது பொருளின் ஏகதேச மென்ப தறிவித்தற்கு ஒருவழி யுறுப் பென்றார். சாத்தனது செயற்கை, சாத்தனது கற்றறிவு என்பன செயற்கைக்கிழமை. அரசனது முதுமை, அரசனது மூதிர்வு என்பன முதுமைக்கிழமை. முதுமை யென்பது பிறிதோர் காரணம் பற்றாது காலம் பற்றி ஒருதலையாக அப்பொருட்கட் டோன்றும் பருவமாகலின் செயற்கையு ளடக்காது வேறு கூறினார். சாத்தனது தொழில், சாத்தனது செலவு என்பன வினைக்கிழமை. இவை மெய்திரிந்தாய தற்கிழமை. சாத்த னது உடைமை, சாத்தனது தோட்டம் என்பன உடைமைக்கிழமை. மறியது தாய், மறியது தந்தை என்பன முறைமைக்கிழமை. இசையது கருவி, வினை கலத்தது திகிரி என்பன கருவிக்கிழமை. அவனது தூணை, அவனதிணைகு என்பன தூணைக்கிழமை. நிலத்ததொற்றிக்கலம்[3], சாத்தனது விலைத்தீட்டு என்பன கலக்கிழமை. ஒற்றியது முதல், ஒற்றியது பொருள் என்பன முதற் கிழமை. கபிலரது பாட்டு, பரணரது பாட்டியல் என்பன செய்யுட்கிழமை. தெரிந்து மொழியாற் செய்யப்படுதலின் தெரிந்துமொழிச் செய்தியாயின. இவை பொருட்பிறிதின்கிழமை. முருகனது குறிஞ்சிநிலம், வெள்ளியதாட்சி என்பன கிழமைக் கிழமை. காட்டதியானை, யானையது காடு என்பன வாழ்ச் சிக்கிழமை. அவற்றுள் முருகனது குறிஞ்சிநிலம், யானையது காடு என்பன நிலப்பிறிதின்கிழமை. காட்டதியானை என்பது பொருட்பிறிதின்கிழமை. எனையது காலப்பிறிதின்கிழமை.

திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவு மென்றதனால், எட்சாந்து, கோட்டு நூறு, சாத்தனதொப்பு, தொகையதுவிரி, பொருளது கேடு, சொல்லது பொருள் என்னுந்தொடக்கத்தன கொள்க. அவற்றுள் எட்சாந்து, கோட்டு நூறு என்பன முதலாயின முழுவதூஉந் திரிதலின், வேறு கூறினார்.

மேற்சொல்லப்பட்ட தற்கிழமை பிறிதின்கிழமை யென்பனவற்றை விரித்தவாறு. (கக)

---

1 சாததனது இலலறம் : [தெய்வச்சிலையார்]

2 ஒன்றியறகிழமை - பணபுத்தறகிழமை. இது குணபபண்பு தொழிறபணபு என இருவகைபபடும.

3 கலம் - ஓலிப்பததிரம.

அ. ஏழாம் வேற்றுமை

'கண்' உருபின் பொருள்

அசு. ஏழா குவதே
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் யிட[1]த்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்று மதுவே.

இ - ள்: கண்ணெனப் பெயர்கொடுத் தோதப்பட்ட வேற்றுமைச்சொல் ஏழாவதாம். அது வினைசெய்யா நிற்றலாகிய இடத்தின்கண்ணும், நிலமாகிய இடத்தின்கண்ணும், காலமாகிய இடத்தின்கண்ணுமென அம்மூவகைக் குறிப்பினகண்ணுந் தோன்றும்; எ - று.

எனவே, ஏழாவது இடப்பொருண்மைத் தென்றவாறும்.

குறிப்பின் தோன்றுமது என்றது அவற்றை யிடமாகக் குறித்தவழி அவ் வேற்றுமை தோன்று மென்றவாறு

எனவே, இடமாகக் குறிக்கப்படாதவழி அப்பெயர்க்கண் வேற்றுமை தோன்றா தென்பதாம்.

தன்னினமுடித்த லென்பதனுள் எனை வேற்றுமைச் சொற்களும் அவ்வப்பொருட்கண் குறிப்பில்வழி அவ்வப்பெயர்க்கண் வாராமை கொள்க.

எ - டு: தட்டுப்புடைக்கண் வந்தான், மாடத்தின்கணிருந்தான், கூதிர்க்கண வந்தான் என வரும். (உ0)

அஉ. கண்கால் புறமகம் உள்ளுறை நிழ்மேல்
பின்சா ரயல்புடை தேவகை[2] யெனஅ
முன்னிடை கடைதலை வலமிட மெனஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

இ - ள்: கண் முதலாக இடமீறாகச் சொல்லப்பட்ட பத்தொன்பது பொருளும் அவைபோல்வன பிறவும் ஏழாவதன்பிறத்தன; எ - று.

கணெனென்னும் பொருளாவது 'கண்ணின்று கூறுதலாற்றனவனுயின்' கலி - கூஎ) எனவும், 'கணைகன்ஞாலம்' எனவும், கணெனென்னு மிடைச்சொல்லா னுணர்த்தப்படும் இடப்பொருண்மை. தேவகையென்பது திசைக்கூறு. கணகால் புறமகமுள்ளென்பன முதலாயினவற்றது பொருள் வேற்றுமை வழக்கு நோக்கி யுணர்ந்து கொள்க.

கணெனின்று சொல்லியானே என்கண்ணின் றிவை சொல்லற்பாலையல்லை என்றும், ஊர்க்காற்செய்யை ஊர்க்கட்செய் என்றும், ஊர்ப்புறத்து நின்ற மரத்தை ஊர்க்கணமரம் என்றும், எயிலகத்துப் புக்கானை எயிற்கட்புக்கான்

1 வினைசெய இடமெனற்று வினைநிகழாசிரை ஆகவே, வினைநிகழாசி வினைநிலம வினைகாலம என இடமூனும எ-டு: போனினகண, போகுகளதனகண, போகுகாலதனகண-

2 தே=தேயம, இடம. வகை=கூறு. தேவகை=தேயகூறு, இடக்கூறு.

என்றும், இல்லுளிருந்தானை இற்கணிருந்தான் என்றும், அரசனுழை யிருந்தானை அரசன்கணிருந்தான் என்றும், ஆவின்கீழ்க் கிடந்த ஆவை ஆவின்கட் கிடந்தது என்றும், மரத்தின்மேலிருந்த குரங்கை மரத்தின்கணிருந்தது என்றும், ஏர்ப்பின்சென்றானை ஏர்க்கட்சென்றான் என்றும், காட்டுச்சாரோடு வதனைக் காட்டிடங்கணேடும் என்றும், உறையூர்க்கயனின்ற சிராப்பள்ளிக் குன்றை உறையூர்க்கட்குன்று என்றும், எயிற்புடைநின்றாரை எயிற்கண் நின்றார் என்றும், வடபால்வேங்கடம தென்பாற்குமரி என்பனவற்றை வடக் கண்வேங்கடம் தெற்கட்குமரி என்றும், புலிமுன்பட்டானைப் புலிக்கப்பட்டான் என்றும், நூலினிடையுங் கடையுந் தலையுநின்ற மங்கலத்தை நூற்கண்மங்கலம் என்றும், கைவலத்துள்ளதனைக் கைக்கணுள்ளது என்றும், தன்னிடதது நிகழ்வதனைத் தன்கண் நிகழ்வது என்றும் அவ் விடப்பொருள்பற்றி எழாம்வேற்றுமை வந்தவாறு கண்டு கொள்க.

எஞ்ஞவென்பது எண்ணிடைச்சொல்.

கண்முதலாயினவெல்லாம் உருபென்றாரால் உரையாசிரியரென்னின் :— உருபாயின், எழாவதற்குக் கண்ணென்பது உருபாதல் மேலே பெறப்பட்டமையாற் பெயர்த்துங் கண்கால்என்றல் கூறியது கூறிற்றுமாகலானும், ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கைவலத்துள்ளது கொடுக்கும் எனப் புறம் அகம் வலமென்பனவற்றுவழி அத்துச்சாரியை கொடுத்து உதாரணங்காட்டினமையானும், அவர்க்கது கருததன்றென்க.[1] உருபல்லவேல், என்னுழை, என்முன் என நிலேமொழி உருபிற்கோதிய செய்கை பெற்றவாறென்னையெனின் :—'அதற்பொருட்டாகலின்' (சொல் - எசு) எனவும் 'தம்மூடைய தண்ணளியுந் தாமும்' எனவும் உருபின பொருள்பட வரும் பிறமொழி வாதுழியும் நிலேமொழி அசசெயலை பெற்று நிற்றலின், அசசெய்கை உருபுபுணர்ச்சிக்கே யென்னும் யாப்புறவின் றென்க.

அன்னபிறவு மென்றதனால், பொருட்கண் உணர்வு, என்கண் அன்புடையன், மலர்க்கண் ஈற்றம், ஆகாயத்துக்கட் பருந்து என்னுந்தொடக்கத்தன கொள்க. (உக)

கூ. வேற்றுமையின் தொகைவிரி இயல்பு

அங. [2] வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலுந் தொகைவயின் பிரிந்து
பல்லா ருகப் பொருள்புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய வென்ப.[3]

இ - ள் : வேற்றுமைத் தொகையை விரிக்குமிடத்து, வேற்றுமையேயன்றி, அன்மொழித் தொகையை விரிப்புழிப் பல்லாற்றான்

1 'கணகால்' முதலியன 'பொருட்டு' 'உடைய' எனபனபோலச சொலலுருபு எனபது சேனவரையர் கருதது.

2 "வேறறுமைப் பொருளை விரிக்குங் காலை
யீறறுநின் றியலுந தொகைவயிற பிரிந்தே"
என ஒரு சூதிரமாகவும மறற இரண்டடியும வேறொரு சூத்திரமாகவுங்கொணடு பொருள் கூறினா இளமபூரணர்.

3 இச்சூதிரததுகசு சேனவரையர் முதலாயினா 'உரைதத உரையைச் சிவஞான முனிவர் மறுததுரைப்பர், தொலகாபபியச் சூதிரவிருதியுட காணக.

அன்மொழிப் பொருளொடு புணர்ந்து வரும் எல்லாச்சொல்லும் விரிக்கப்படும்; எ - று.

உருபு தொகப் பொருள் நிற்றலின், வேற்றுமைத் தொகையை வேற்றுமைப் பொருளென்றார். தொகையை வேற்றுமைப் பொருளென்றும், பொருளென்றும் யாண்டுமோள்ப.

அன்மொழித்தொகை பண்புத்தொகை முதலாகிய தொகை இறுதிநின்றியறலின், ஈற்றுநின்றியலுந்தொகை யென்றார்.

தாழ்குழல், பொற்றொடி, மட்காரணம் என்னும் அன்மொழித் தொகைகளை விரிப்புழி, தாழ்குழலையுடையாள், பொற்றொடியை யணிந்தாள், மண்ணையிய காரணத்தா னியன்றது என வரும் உடைமையும், அணிதலும், இயறலும், கருவுகுழற் பேதை, பொற்றொடியாரிவை, மட்குடம் என்னும் வேற்றுமைத தொகைகளை விரிப்புழியும், கருவு குழலையுடைய பேதை, பொற்றொடியை யணிந்த அரிவை, மண்ணையியன்ற குடம் என வந்தவாறு கண்டு கொள்க.

பொருள் புணர்ந்திசைக்கு மெனவே, இருதொகைக் கண்ணும், ஒருவாய் பாட்டா னன்றிப் பொருள் சிறதியாம லுணர்த்துதற் கேற்ற வாய்பாடெல்லாவற்றினும் வருமென்பதாம். அவ்வாறுதல் மேற்காட்டப் பட்டனவற்றுள் கண்டுகொள்க.

அன்மொழித் தொகையிற் சொற்செய்து விரித்தல் யாண்டுப் பெற்றுமெனின் :—அதுவும அதுவாதமுகத்தான் ஈண்டே பெற்று மென்க. பெறவே, இரண்டு தொகையும் விரிப்புழி வரும் வேறுபாடு கூறியவாறும்.

இதனை 'வேற்றுமைத் தொகையே யுவமைத் தொகையே' (சொல் - சகஉ) என்னுஞ் சூத்திரத்தின் பின் வைக்கவெனின் :—அதுவுமுறையாயினும், இனி வருஞ் சூத்திரங்களான் வேற்றுமைத் தொகை விரிபற்றிய மயக்கமுணர்த்துதலான், ஆண்டுப்படி முறைமை யுணர்த்துதல் ஈண்டு மியையுடைத்தென்க.

உரையாசிரியர் இரண்டு சூத்திரமாக அறுத்து ஆசிரியர் மத விகற்பங் கூறித் தம்மத மிது வெனபது போதர ஒன்முகவுரைப்பாரு முளரென்றார். இரண்டாய ஒன்றுயவழிப் பிறிதுரையின்மையின், உரையாசிரியர் கருத்து இதுவேயாம். (உஉ)

வேற்றுமையியல் முற்றிற்று.

ஈ. வேற்றுமை மயங்கியல்

[வேற்றுமையுருபுகள் தம்முள் மயங்கிப் பொருள் வேறுபாடுகொள்ளும் இயல்புணர்த்துவது.]

க. வேற்றுமையுருபுகள் மயங்குதல்

சார்பு பொருளில்

அசை. கரும மல்லாச் சார்பென் கிளவிக்கு
உரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை.

மேற்கூறப்பட்ட வேற்றுமை தம்முள் மயங்குமா றுணர்த்திய எடுத்துக் கொண்டார். அம்மயக்கம் இருவகைப்படும்; பொருள் மயக்கமும், உருபு மயக்கமுமென. பொருள் மயக்கமாவது தன் பொருளில் நீராது பிறிதொன் றன் பொருட்கண் சேறல். உருபுமயக்கமாவது தன்பொருளிற் நீர்ந்து சேறல். 'யாத னுருபிற் கூறிற் முயினும்' (சொல் - கoசு) என்பதனுன் உருபு மயக்க முணர்த்தினார்; அல்லனவற்று னெல்லாம் பொருண்மயக்க முணர்த்தினார். இவ்விருவகை மயக்கமு முணர்த்துதலான், இவ்வோதது வேற்றுமை மயங்கிய லென்னும் பெயர்த்தாயிற்று. மயக்கமேயன்றி வேற்றுமைக்கோதிய இலக்கணத்திற் பிறழ்ந்து வழீஇயினமைவனவும பிறவும் இயைபுடையன ஈண்டு ணர்த்துதலான், இக்குறி பன்மை நோக்கிச் சென்ற குறியெனவுணர்க.

இ - ள்: இரண்டாவதற்கோதப்பட்ட சார்பு பொருண்மை கருமச் சார்புங் கருமமல்லாச் சார்புமென இரண்டு வகைப்படும். அவற்றுள், கருமச் சார்பு தூணைச் சார்ந்தான் என ஒன்றனை யொன்று மெய்யுறுதலாம். கருமமல்லாச் சார்பு மெய்யுறுதலின்றி அரசரைச் சார்ந்தான் என வருவதாம். கருமமல்லாத சார்பு பொருண்மைக்கு உரித்தாய் வருதலுமுடைத்து ஏழாவது; எ - று.

உ - ம்: அரசர்கட் சார்ந்தான் என வரும்.

கருமமாவது ஈண்டு மெய்யுறுதலாயின், அரசர்கட் சார்ந்தான் என்புழி உறுதலின்மையிற் சார்பாமாறென்னை யெனின்:—தூணபற்றுக ஒரு சாத்தன் சார்ந்தாற்போல அரசா பற்றுக அச சார்ந்தாலுழுகுதலின் சார்பாயிற் றென்பது.

உம்மை எதிர்மறை.

தூணின்கட் சார்ந்தான் எனக் கருமச்சார்ச்சிக்கண ஏழாவது சென்றுற் பயிமிழுக்கென்னையெனின்:—அன்னதோர் வழக்கின்மையே பிறிதில்லை யென்க. இக்காலத்து அவ்வாறு வழங்குபவாலெனின்:—கருமமல்லாச் சார்ச சிக்கண வருமுருபைச் சார்தலொப்புமையாற் கருமச்சார்ச்சிக்கணணுங கொடுத்து உலகதார் இடைத்தெரிவின்றி வழங்கு[1]கின்றாரெனவேபடும்; ஆசிரியர் கருமமல்லாச் சார்பென்கிளவியென விதந்து கூறினமையா னென்பது. ()

---

1 இடைதெரிவினறி வழங்குதல - இன்னவிடத்து இன்னவுருபு வருமென்று இடந் தெரியாது வழங்குதல.

சினைப் பெயரில்

அடு. சினைநிலைக் கிளவிக் கையுங் கண்ணும்
வினைநிலை யொக்கும் என்மனார் புலவர்.

இ - ள்: சினைமேல் நிற்குஞ் சொல்லிற்கு இரண்டாவதும் ஏழாவதும் வினைநிலைக்கண் ஒக்குமென்று சொல்லுவர் புலவர்; எ - று.

எ - டு: கோட்டைக் குறைத்தான், கோட்டின்கட் குறைத்தான் என வரும்.

வினைக்குறிப்பை நீக்குதற்கு வினையென்றார்.

வினைநிலையொக்கு மென்றாரேனும், புகழ்தல் பழித்தல் என்னுந் தொடக்கத்தன வொழித்து மயங்குதற்கேற்கும அறுத்தல் குறைத்தன் முதலாயின வினையே கொள்ளப்படும்.

இரண்டாவதன் பொருட்கண ஏழாவது சென்றதாயினும், சிறுவரவிற் றன்றி இரண்டாவதுபோல ஏழாவது வழக்கின்கட்பயின்றுவருதலின், ஒக்கு மென்றார்; அது காரணத்தால், ஏறுமன்னாச சுராசசிங்கும் சினைக்கிளவிக்கும் ஏழாவது உரிமையுடைத்தென உடன்கூறுது, வேறு கூறினு ரென்பது. (உ)

கன்றல் செல்லல் பொருளில்

அசு. கன்றலுஞ் செலவும் ஒன்றுமார் வினையே.

இ - ள்: கன்றற் பொருண்மேல் வருஞ் சொல்லும் செலவு பொருண்மேல் வருஞ் சொல்லும் இரண்டாவதற்கும் ஏழாவதற் கும ஒரு தொழில்; எ - று.

எ - டு: சூதினைக்கன்றினான், சூதின்கட்கன்றினான்; நெறியைச்சென் றான், நெறிக்கட்சென்றான் என வரும்.

பொருள்பற்றி யோதினமையால், சூதினையிவறினான், சூதின்கணிவறி னான்; நெறியை நடந்தான், நெறிக்கணடந்தான் என வருவனவுங கொள்க.

இரண்டாவதற்கு இப்பொருள் மேலே கூறப்பட்டமையால், கன்றல் செலவென்னும் பொருட்கு ஏழாவது முரித்தென்றேறுத அமையுமெனின், அங் ஙனமோதின் ஏழாவதன் வரவு சிறுபான்மை யென்பது படும்; ஆகலின் உட னோதினரென்பது.

சினைநிலைக்கிளவி நிலைமொழிவரையறை யாகலானும், இது வருமொழி வரையறையாகலானும், வேறு கூறினு ரென்பது. (ஊ)

முதற் பெயர் சினைப் பெயர்களில்

அஎ. முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே.

இ - ள்: முதற் சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்விற்கு ஆரும் வேற்றுமை முதற்கண் வருமாயின், சினைச்சொல்லின்கண் இரண்டாம் வேற்றுமையே வரும்; எ - று.

எ - டு : யானையது கோட்டைக் குறைத்தான் என வரும்.

'சினைநிலைக் கிளவிக் கையுங கண்ணும்' (சொல் - அடி) என்றதனுன் முதற்சினைக் கிளவிக்கும் இரண்டு வேற்றுமையு மெய்துவதனை நியமித்த வாறு.[1] இது வருஞ் சூத்திரத்திற்கு மொக்கும். (ச)

அஅ. முதல்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப.

இ - ள் : அம் முதற்சினைக் கிளவிக்கண், முதற்சொல்முன் ஐகார வேற்றுமை வரின், சினைச்சொல்முன் கண்ணென்னும் வேற்றுமை வருதல் தெள்ளிது; எ - று.

எ - டு : யானையைக் கோட்டின்கட் குறைத்தான் என வரும்.

தெள்ளிது என்றதனுன், யானையைக் கோட்டைக் குறைத்தான் எனச் சிறுபான்மை ஐகார வேற்றுமையும் வருமென்பதாம்.

சினைக் கிளவிக்கண் மயக்கமுணர்த்துகின்ற சூத்திரத்திடைக் 'கன்றலுஞ் செலவும்' எனலுஞ் சூத்திரம் வைத்தென்னை யெனின் :—ஐயுங கண்ணு மென்பது அதிகாரத்தான் வரச சூத்திரஞ் சுருங்குமாகலின், 'சினைநிலைக் கிளவிக்கு' என்னுஞ் சூத்திரத்தின பின அதனை வைத்தாரென்பது. (நி)

அக. முதலுஞ் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே.

இ - ள் : முதலுஞ் சினையும் முதலாயது முதலேயாய்ச் சினையாயது சினையேயாய்த் தம்முள் வேறு பொருளாகா. சொல்லுங் கால், சொல்லுவானது சொல்லுதற குறிப்பினுன் முதலென்றுஞ் சினையென்றும் வழங்கப்படும் ; எ - று.

சொற்குறிப்பின வென்றது முதலெனப்பட்டது தானே தன்னைப் பிறிதொன்றற்கு ஏகதேசமாகக் குறித்தவழிச் சினையுமாம் ; சினையெனப் பட்டது தானே தன்கண் ஏகதேசத்தை நோக்கி முதலெனக் குறித்தவழி முதலுமாம் எ - று.

கோட்டது நுனியைக் குறைத்தான், கோட்டை நுனிக்கட் குறைத்தான், கோட்டை நுனியைக குறைததான் என முதற் கோதப்பட்ட உருபு சினைக் கண்ணும் வந்ததாலென்று ஐயுற்றார்க்கு, கருத்து வகையாற் கோடென்பது ஆண்டு முதலாய் நிற்றலின், முதலிற்கு ஓதிய உருபே முதற்கண வந்ததென, ஐய மகற்றியவாறு. (சு)

பிண்டப் பெயரில்

கூ0. பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய மரபே.

இ - ள் : பிண்டத்தை யுணர்த்தும் பெயரும் முதற்சினைப் பெயரியல்பிற்றிரியா ; அவ்வாறு அவற்றை முதலுஞ் சினையுமாக

1 இங்கு ஐ தான வருமென்பது. [இரண்டு வேறறுமைகள் வரஇருக்க ஒன்றை நியமித்தல.]

வழங்குதல் மேற்றொட்டு வழங்கிவாராநின்ற கூற்றின் மருவிய முறை; எ - று.

பிண்டம் பலபொருட்டொகுதி.

ஈண்டு ஆயிஎல் திரியாவென மாட்டெறிந்தது, முதற்சினைக் கிளவிக்குப் போலப் பிண்டப் பெயர்க்கு முதற்கண் ஆறுவது வரின் சினைக்கு இரண்டாவது வருதலும், முதற்கு இரண்டாவது வரின் சினைக்கு ஏழாவது வருதலும், சிறுபான்மை இரண்டாவது வருதலுமாம்

எ - டு: குப்பையது தலையைச் சிதறினன், குப்பையைத் தலைக்கட் சிதறினன், குப்பையைத் தலையைச் சிதறினன் என வரும்.

பிண்டமும முதலுஞ் சினையுமேயாகலின் வேறு கூறல் வேண்டா எனின்:—குப்பை யென்புழி, தொக்க பல பொருளல்லது, அவற்றின் வேறாய அவற்றினியன்று தானென்றெனப்படும் பொருளின்மையின், தொல்லாசிரியர் அதனை முதலென்று வேண்டார்; அதனை வேறு கூறினரென்பது. படை காடு கா முதலாயினவுமன்ன. (எ)

உயர்பு பொருளில்

கூக. ஒருவினை யொடுச்சொல் உயர்பின் வழிந்தே.

இ - ள்: அதனோடியைந்த ஒருவினைக் கிளவியென மூன்றுவதற்கோதிய ஒருவினை யொடுச்சொல் உயர்பொருளை யுணர்த்தும் பெயர்வழித் தோன்றும்; எ - று.

எ - டு: அரசனோடிவையா வந்தான், ஆசிரியனொடு மாணாக்கா வந்தார் என வரும்.

உயர்பொருட் பெயர்வழி ஒடுக்கொடுப்பு எனவே, உயர்பில்வழிச சாத்தனுங் கொற்றனும் வந்தார் என இரு பெயரும் எழுவாயாய நிற்கு மென்பதாம். நாயொடு கபி வந்தான் என இழிபெயர்க்கண்ணும் ஒருவினையொடுச்சொல் வந்ததா லெனின்:—யாதானுமோ ரற்றன் அதற்குயா புணடாயினல்லது அவ்வாறு கூறார்; கூறுபவாயின், அஃது ஒருவினையொடுசொ லெனப் படாது. நைப்பொருளொடு வந்தான் என்பது போல, அது தனக்குண்டாக வந்தானெனப் பிறிது பொருள் படுவதோ ரொடு வருபா மென்க.

இதனை வேற்றுமை யோத்தின்கண ‘அதனினியறல்’ (சொல் - எசு) என்னுஞ் சூத்திரத்தின்பின் வையாது ஈண்டுவைத்த தென்னையெனின்:—வேற்றுமையது பெயரும முறையுந தொகையும பொதுவகையான் அவற்றதிலக்கணமும் உணர்தலையல்லது, இன்ன வேற்றுமை இன்னபொருட்கண் இன்னவாறுமென்னும விசேட இலக்கணம அதிகாரம்பட்டின்றுகலான், ஆண்டு வையாது, மூன்றுவது இப்பொருட்கண இவ்வாறுமென விசேட விலக்கணம ‘மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய’ (சொல் - கூ) எனக் கூறுகின்றுராக லின், அதனோடியைய ஈண்டு வைத்தார்; இதுவும ஒரு பொருள்பற்றி யோதுகின்ற விசேட இலக்கணமாகலானென்பது. (அ)

ஏதுப் பொருளில்

கூஉ. மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
தோக்கோ ரனைய என்மனர் புலவர்.

இ - ள்: மூன்றும் வேற்றுமைக்கண்ணும் ஐந்தாம் வேற்றுமைக்கண்ணும் விளங்கச் சொல்லப்பட்ட ஆக்கத்தோடு கூடிய ஏதுச்சொல் அவ்வேதுப் பொருண்மையை நோக்கும் நோக்கு ஒருதன்மைய; எ - று.

எ - டு: வாணிகத்தானுயிஞன், வாணிகத்தாலுய பொருள் எனவும், வாணிகத்திஞயிஞன், வாணிகத்திஞய பொருள் எனவும வரும.

வாணிகத்தான், வாணிகதின் என வருபொடு தொடர்ந்துநின்ற சொல்லே ஏதுக்கிளவி யென்றார்.

'அதன்விஞப்படுத லதனிஞதல்' (சொல் - எச) என்றும் 'புதுமை பழமையாக்கம்' (சொல் - எஅ) என்றும் மூன்றுவதற்கும் ஐந்தாவதற்கும் ஏதுப்பொருள் மேற்கூறப்பட்டமையான் இச சூத்திரம் வேணடாவெனின் :— அற்றன்று : பிரிநிலேயேகாரமுதலாகிய இடைச்சொல்லும் ஒருசார் விஞசச் சொல்லும்[1] முன்ஞேதப் பட்டனவேனுமு, எசசமாதலொப்புமையான் எச்ச வாராய்ச்சிக்கண் அவைதம்மையே,

'பிரிநிலே விஞயே பெயரே யெழியிசை
யெதிர்மறை யுமமை யெனவே சொல்லே' (சொல் - சுகூ0)

எனப் பின்னுங கூறினுற்போல, ஏதுப்பொருண்மையும மூன்றுவதற்கும் ஐந்தாவதற்கும் மேற்கூறப்பட்டதாயினும, மயக்கமாதலொப்புமையான் மயக்கவாராய்ச சிக்கண் ஈண்டுங கூறினுராகலின், கூறியது கூறலென்னுங குற்றமின்றென்பது. இஃது 'அச்சக்கிளவி' (சொல் - க00) என்பதற்குமொக்கும்.

அஃதேல், மயக்கமாவது ஒரு வேற்றுமை பிறிதொன்றன்பொருட்கட் சேறலன்றே; ஏதுவின்கண் வரும மூன்றுவதும் ஐந்தாவதும் தம்பொருளே பற்றி நிற்றலின் மயஙகின வெனப்படாவெனின் :—நன்று சொன்னுய. ஏதுப் பொருணமை தனக்குரியவாற்றுன் அவற்றிற்குத தன் பொருளாயினவாறு போலப் பிறிதொன்றற் குரியவாற்றுற் பிறிதொன்றன் பொருளாதலுமுடைமையின், அமமுகத்தான் மயஙகினவெனவே படுமென்பது. அல்லதூஉம ஒரு பொருட்கண இரணடுருபு சென்ற துணேயான் மயக்கமாயிற் றெனினு மமையும.

ஆக்கமொடு புணராத ஏதுக்கிளவி[2] யெனவே, ஆக்கமொடு புணராது ஞாபகவேதுப் பொருணமைகளண வரும இன்னும் ஆனும் ஏதுவரவினவல்ல என்பதாம். ஆணடைந்தாவது பெருவரவிற்றெனக் கொள்க. (கூ)

நோக்கப் பொருளில்

கூஉ. இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்குமவ்
விரண்டன் மருங்கின் ஏதுவுமாகும.

---

1 ஒருசாரினச சொல - சில பெயரெசச வினேயெசசங்கள.

2 ஆக்கமொடு புணராத ஏது - காரணம் ஏது.

இ - ள் : 'நோக்கலினஞ்சலின்' (சொல் - எஉ) என இரண்டாவதற்கோதிய நோக்கப் பொருண்மை நோக்கிய நோக்கமும் நோக்கல் நோக்கமுமென இரண்டு வகைப்படும். நோக்கிய நோக்கம் கண்ணுனேக்குதல். நோக்கல்நோக்கம் மனத்தா னெண்றனே நோக்குதல். அந் நோக்கல்நோக்கமாகிய பொருள் மூன்றுவதற்கும் ஐந்தாவதற்குமுரிய ஏதுப் பொருண்மையுமாம்; எ - று.

நோக்கல் நோக்கத்தால் நோக்கப்படும் பொருளே நோக்கல்நோக்கமென்றார்.

நோக்கல்நோக்க மல் வீரண்டன் மருகின் எதுவுமாகு மெனவே, அவ்வேதுப் பொருண்மைக்குரிய இரண்டிருபும் அவ்வேதுப் பொருண்மையிற் றீராது இரண்டாவதன் பொருட்கண் வருமென்பதாம். ஓம்படைப் பொருட்கண் வருவனவற்றிற்கும் ஈதொக்கும்.

எ - டு :

'வானேக்கி வாழு முயிரெல்லாம் மன்னவன்
கோனேக்கி வாழுங் குடி' (குறள் - நிசஉ)

எனபுழி, வானே நோக்கி வாழும், கோலே நோக்கி வாழுமெ என இரண்டாவது வருதலேயன்றி, வானுனேக்கி வாழும, வாளினேக்கி வாழும், கோலானேக்கி வாழும, கோலினேக்கிவாழும் என மூன்றுவதும ஐந்தாவதும வந்தவாறு கண்டு கொள்க.

ஏதுவாயினவாறென்னே யெனின:—உயிருங குடியும வானேயுங கோலேயு நோக்குவது அவற்றுனேய பயன்பற்றி அவற்றைத் தாமின்றி யமையாமை யன்றே ; அதனுன் அவ்வாறு பயன்படுவன அவற்றதின்றியமையாமைக்கு ஏதுவாதலு முடையவென்பது. அஃதேல், வானுங்கோலும் ஏதுவாயவழி நோக்கப்படுவன பிறவாவான் செல்லுமெனின் :—அற்றன்று : கண்ணுட் குதலினுன் என்றவழிக் கண்ணே செயப்படுபொருளாதலும் பெறப்பட்டாற்போல, வானுனேக்கும், கோலானேக்கும் என்புழியும் அவைதாமே செயப்படு பொருளாதலும் பெறப்பட்டமையால், நோக்கப்படுவன பிறவாவான் செல்லாவென்பது. (கo)

உடைமைப் பொருளில்

கூச. அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே.

இ - ள் : ஆறும் வேற்றுமைப் பொருண்மேல் வரும் உயர்திணைத் தொகைக்கண் உருபு விரிப்புழி அதுவென்னுமுருபு கெட அதன் பொருட்கண் நான்காமுருபு வரும்; எ - று.

ஈண்டு அதுவெனுருபு கெடுதலாவது அவ்வுருபு ஆண்டு வாராமை.

நம்பி மகன், நங்கை கணவன் என்னுந் தொகைகளே விரிப்புழி, நம்பிக்கு மகன், நங்கைக்குக் கணவன் என நான்கனுருபு வந்தவாறு கண்டு கொள்க.

உயர்திணைத் தொகைவயி னதுவெனுருபுகெடக் குகரம் வருமென்றதனான், ஆறனுருபு அஃறிணைப்பால்தோன்ற நிற்றல் பெற்றும்.[1]

உயர்திணைத் தொகைவயின் ஆறுவதனை விலக்கி நான்காவதே சேறலின், 'இதனதிதுவிற்று' (சொல் - ககo) என்னுஞ் சூத்திரத்தாற் கூறப்படும் பொருளோடு உடன் வையாது இதனை வேறு கூறினார். (கக)

தடுமாறு பொருளில்

கூடு. தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டு மூன்றுங்
கடிநிலை யிலவே பொருள்வயி னான.

இ - ள்: தனக்கேயுரித்தாய் நில்லாது ஒருகால் ஈற்றுப் பெயரோடுஞ் சென்று தடுமாறு தொழிலொடு தொடர்ந்த பெயர்க்கு இரண்டாவதும் மூன்றுவதுங் கடியப்படா, அவ்வேற்றுமை தொக அவற்றின் பொருள் நிற்குந் தொகையிடத்து; எ - று.

எ - டு: புலிகொன்ற யானை, புலிகொல்யானை என்புழிப் புலியைக் கொன்ற யானை எனவும், புலியாற் கொல்லப்பட்ட யானை எனவும், இரண்டாவதும் மூன்றுவதும மயங்கியவாறு கண்டு கொள்க.

கொன்ற, கொல்லென்பன வினைமுதற் பொருட்குரியவாகப் புலியென்பது செயப்படு பொருளாயவழியல்லது இரண்டாவது வாராமையானும், அச சொற்கள் செயப்படு பொருட்குரியவாகப் புலி வினைமுதலாயவழியல்லது மூன்றுவது வாராமையானும், இவை ஒருபொருட்கண் வந்தன அன்மையின், மயக்கமாமாறென்னை யெனின்:— ஒரு பொருட்கண் வாராமையின் மயக்க மெனப்படாதாயினும், தடுமாறு தொழிற்றொகைக்கண் இரண்டும் வந்து நிற்றலின் மயக்கப்பாற்படு மென்பது. (கஉ)

கூசு. ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப வுணரு மோரே.

இ - ள்: தடுமாறு தொழிலொடு புணர்ந்த பெயருள், இறுதிப் பெயர்முன்னர்ப் பொருள் வேறுபாடுணர்த்துஞ் சொல் வரின், அச்சொல்லான் அப்பொருள் வேற்றுமை தெரிவர் உணர்வோர்; எ - று.

எ - டு: புலிகொல்யானை யோடாநின்றது, புலிகொல் யானைக்கோடு வந்தன என வரும்.

பிறமயக்கம் போலாது ஈண்டுப் பொருள் வேறுபா டுணர்ந்தல்லது உருபு விரிக்கலாகாமையின், 'மெய்யறி பனுவலின் வேற்றுமை தெரிப' என்றார்.

---

1 கண சாததனது, கணகள சாததன எனனும எழுவாயதொடாகளே சாததனது கண, சாததன கணகள என முறைமாறி ஆறும வேறறுமை வடிவு பெறறமையின, 'அது' 'அ' எனனும அஃறிணை யுருபுகள உயரதிணைக கேலாமைபறறி அதிணைகண குவவுருபு விரிகுமாறு கூறபபடடது. நமபி மகன எனபது நமபிககு மகன என விரிகபபடினும, குவவுருபு இருகொறறொடாகிக ஏறகுமெனவும, நமபிககு மகன வநதான எனபுழிப பிளவுபடடிசைதது வேறு பொருளும படுதலின, பல சொறறொடாககு இனனுருபே ஏறகுமெனவும அறிநதுகொள்க. 'உடைய' எனனும உருபோவெனின, அது சொலலுருபாதலானும் இனனெனசைத தாகாமையானும இனனுருபு போலச சிறநததனறெனக.

முன் புலியைக் கொன்ற யானை, பின் பிறிதொன்றனுன் இறந்துழியும் புலிகொல்யானைக்கோடு வந்தனவென்ப; அவ்வழிக் கொன்றது, கொல்லப் பட்டதென்னும் வேறுபாடு குறிப்பானுணரப்படு மென்பார் 'உணருமோர்' என்றார். பிறவுமன்ன. (கஉ)

பாதுகாத்தற் பொருளில்

கூஎ. ஓம்படைக் கிளவிக் கையும் ஆனும்
தாம்பிரி விலவே தொகைவரு காலை.

இ - ள்: ஓம்படைப் பொருண்மைக்கு ஐகாரவுருபும் ஆனுருபும் ஒத்தவுரிமைய, அவ்வேற்றுமை தொக்கவழி; எ - று.

ஓம்படுத்தல் பாதுகாத்தல்.

புலிபோற்றிவா என்புழி ஓம்படைக்கிளவி இரண்டாவதற்கோதிய காப் பின்கண் அடங்குதலின், புலியைப் போற்றி வாவென ஐகாரவுருபும், புலி அவன் போற்றி வருதற்கு ஏதுவாதலுமுடைமையால் புலியாற்போற்றி வா வென ஆனுருபும், ஒத்தவுரிமையவாய வந்தவாறு கண்டு கொள்க.

புலியேதுவாதலு முடைத்தாயின், "இரண்டன் மருங்கி னேக்கனேக் கமு மோம்படைக் கிளவியு மேதுவுமாகும்" என வமையும் இசசூத்திரம் வேண்டா வெனின்:—அங்ஙனமோதின் ஓம்படைப் பொருண்மைக்கு ஐந்தா முருபு மெய்தும்; அதனை விலக்குதற்கு ஐயுமானுந் தாம பிரிவிலவென வேறு கூறினர். இவை பிரிவிலவெனவே, முன்னுருபு பிரிவுடைத்தாய், புலியிற் போற்றிவாவெனச் சிறுபான்மை வருமெனபதாம.

இரண்டு வேற்றுமைக்கும ஓம்படைப் பொருண்மை இச் சூத்திரத்தா னெய்துவித்தா ரெனினு மமையும்.

தாமென்பது செய்யுட் சுவைபட நின்றது. (கச)

வாழ்தற் பொருளில்

கூஅ. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு
ஏழு மாகும் உறைநிலத் தான.

இ - ள்: ஆறும் வேற்றுமைக்கண் ஓதிய வாழ்ச்சிக்கிழமைக்கு உறை நிலத்தின்கண் ஏழாவதும் வரும்; எ - று.

காட்டியானை என்பது காட்டதியானையென விரிதலேயன்றிக் காட்டின் கண் யானையெனச சிறுபான்மை ஏழாவது விரியினு மமையு மென்றவாறு.

யானைக்காடு, கம்பியூர் என்பன வாழ்சசிக்கிழமைப் பொருளவாயினும், ஆண்டேழாவது மயங்காதென்றற்கு 'உறை நிலத்தான' வென்றார். எனவே, உறைநிலப் பெயர் பின்மொழியாயவழியது இம்மயக்கமென்பதாம். (கரு)

கொடைப் பொருளில்

கூக. குத்தொக வருஉங் கொடையெதிர் கிளவி
அப்பொரு ளாறற் குரித்து மாகும்.

இ - ள் : குவ்வென்னு முருபு தொக வருங் கொடையெதிர் கிளவியாகிய தொகையினது கொடையெதிர்தலாகிய அப் பொருண்மை ஆரும் வேற்றுமைக் குரித்துமாம்; எ - று.

நாகாபலி என்பது நாகர்க்கு நோந்த பலியென விரிதலே யன்றி நாகரது பலியென விரியினுமமையு மென்றவாறு.

கொடையெதிர் கிளவி யென்பதற்குத் தருசொல் வருசொற்குரைத்த துரைக்க.

கொடை யெதிர்தல் கொடையை விரும்பி மேற்கோடல்.

நாகர்க்குக் கொடுத்தலே விரும்பி மேற்கொண்டவழித் திரிபின்றி அவர்க் கஃதுடைமையாதலின், கிழமைப் பொருட்குரிய வுருபாற் கூறினு மமையு மென்றவாறு. (கசு)

அச்சப் பொருளில்

கo0. அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்
எச்ச மிலவே பொருள்வயி னான.

இ - ள் : அச்சப் பொருண்மைக்கு ஐந்தாம வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் ஒத்த கிழமைய, வேற்றுமை தொக அவற்றின் பொருள் நின்றவழி; எ - று.

பழியஞ்சும் என்புழி, பழியினஞ்சும, பழியையஞ்சும் என இரண்டும், ஒத்த கிழமையவாய நின்றவா றறிக.

அஃதேல், ஒரு பொருட்கண வரினன்றே மயக்கமாவது; இவை செயப் படு பொருளும் எதுவுமாகிய பொருள் வேறுபாடுடையவாகலின் மயக்கமாமா றென்னையெனின்:—அற்றன்று : ஈண்டேடதுவாதலே அஞ்சப்படுதலாய வேறன்றி நிற்றலின், ஒரு பொருட்கண வந்தனவேயாம்; அதனான் மயக்கமா மென்பது. (கஎ)

வேற்றுமை மயக்கத்திற்கு வழக்கு முதன்மை

கo0. அன்ன பிறவுந் தொன்னெறி பிழையா
துருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயின் நிலையும் வேற்றுமை யெல்லாம்
திரிபிட னிலவே தெரியு மோர்க்கே.

இ - ள் : மேல் மயக்கங் கூறப்பட்ட வேற்றுமையேயன்றி, அவைபோல்வன பிறவும், தொன்றுதொட்டு வரும் வழக்கிற் பிழையாது, உருபானும் பொருளானும் ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்று, பிறிதொன்றன் பொருளுந் தன் பொருளுமாகிய ஈரிடத்தும் நிலைபெறும் வேற்றுமையெலலாந் திரிபுடையவல்ல தெரிந்துணர்வோர்க்கு; எ - று.

பொது வகையான் இருவயினிலையு மென்றாரேனும், வழிபோவினொல் லாங கூறை கோட்பட்டார் என்றவழிக் கூறை கோட்படுதல் கடவுளரை

யொழித்து ஏனையோர்க்கே யாயினவாறு போல எதுப்பொருட்கண் வரும் மூன்றுவதும் ஐந்தாவதும் ஒரு பொருளேபற்றி நிற்றலின் இருவயினிலை யற்கேலாமையான், அவற்றை யொழித்து அஃதேனையவற்றிற்கேயாம். என்னை? ஏனைய தனபொருளிற் றீராது பிறிதொன்றன் பொருட்கட் சேற லுடைமையான் இருவயினிலையற் கேற்றவா றறிக.

அன்ன பிறவாவன்—கோயினீங்கினென் கோயை நீங்கினென் எனவும், சாத்தனே வெகுண்டான் சாத்தனெடு வெகுண்டான் எனவும், முறையாற் குத்துங்குத்து முறையிற்குதுங்குத்து எனவும், கடலொடு காடொட்டாது கடலேக் காடொட்டாது எனவும் வருவனவும் பிறவுமாம்.

இக்காலத்துச் சிதைந்து வழங்கும் மயக்கமு முண்மையால், தொன்னெறி பிழையாதன ஆராய்ந் துணரப்படுமென்பார் 'தெரியுமோர்க்கு' என்றார். (கஅ)

உ. அவ்வுருபுகளின் இயல்புகள்

உருபு தொடர்ந்தடுக்கி வருதல்

கூ0உ. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொன் னடைய பொருள்சென் மருங்கே.

இ - ள்: பலவுருபுந் தம்மூட்டொடர்ந் தடுக்கிவந்த வேற்றுமைச் சொற்கிளவியெல்லாம் முடிக்குஞ்சொலொன்றனை முற்றுப் பெற்று நடக்கும், அவ்வொன்றனைற் பொருள் செல்லுமிடத்து; **எ - று.**

ஈண்டு வேற்றுமைக் கிளவியென்றது வேற்றுமை யுருபை யிலுதியாக வுடைய சொல்லே.

எ - டு: 'என்னெடு நின்னெடுஞ் சூழாது' எனவும்,
'அந்தணர் நூற்கும் அறத்திற்கு மாதியாய
நின்றது மன்னவன் கோல்' (குறள் - நிசுஉ)

எனவும் வரும்.

சாதனென்றுயைக் காதலன், நாய் தேவனுயிற்று என்புழி, தாயை, தேவன் என்பன, காதலன் ஆயிற்றென்னும் பயனிலைக்கு அடையாய் இடைநின்றுற் போல, கோட்டை நுனிக்கட் குறைத்தான், திணையிற் கிளியைக் கடியும் என் புழி, நுனிக்கண், கிளியை யென்பன, குறைத்தான், கடியுமென்னும் முடிக்குஞ் சொல்லிற்கு அடையாய் இடைநின்ற வாகலான், அவையடுக்கன்மையின், அவையுதாரணமாதல் உரையாசிரியர் கருத்தன் றென்க.

குழையைச் சாத்தனது கள்ளரின என இவ்வாறு தொடராது வருவன வற்றை நீக்குதற்கு உருபு தொடர்ந்தடுக்கியவென்றும், நீ தந்த சோற்றையுங கூறையையுமுண்டுடுத்திருந்தேம் என இன்னோரன்னுழி ஒரு சொல்லாற் பொருள் செல்லாமையின் அவற்றை நீக்குதற்குப் பொருள் சென்மருங்கென் றுங கூறினர். பிறவுமன்ன. (கக)

உருபு விரிந்து நிற்கும் இடம்

கஂக. இறுதியு மிடையு மெல்லா வுருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்.[1]

இ-ள்: வேற்றுமைத் தொடரிறுதிக்கண்ணும் அதனிடை நிலத்தும் ஆறுருபுந் தத்தமக்கோதிய பொருட்கண் நிற்றலை வரையார்; எ-று.

எ-டு: கடந்தான் நிலத்தை, வந்தான் சாத்தனொடு, கொடுத்தான் சாத்தற்கு, வலியன் சாத்தனின், இருந்தான் குன்றத்துக்கண் எனவும்; நிலத்தைக் கடந்தான், சாத்தனொடு வந்தான், சாத்தற்குக் கொடுத்தான், சாத்தனின் வலியன், சாத்தனதாடை, குன்றத்துக்கணிருந்தான் எனவும் வரும்.

நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையா ரெனவே, அப்பொருளுணர்த்தாக்கால் நிலவுதல் வரையப்படு மென்பதாம். அங்ஙனம் வரையப்படுவன யாவையெனின்:—ஆறுவதும் ஏழாவதும், சாத்தனதாடை, குன்றத்துக்கட் கூகை என இடைநின்று தமபொருளுணர்த்தினுற் போல, ஆடை சாத்தனது, கூகை குன்றத்துக்கண் என இறுதி நின்றவழி அப்பொருளுணர்த்தாமையான், அவ்வுருபுகள் ஆண்டு வரையப்படும். ஆறனுருபேற்ற பெயர் உருபொடு கூடிப் பெயராயும் வினைக்குறிப்பாயும் நிற்றலுடைமையான், அந்நிலைமைக்கண் ஆடை சாத்தனது என இறுதிக்கண்ணும் நிற்குமென்பது. இவ்வரையறை யுணர்த்துதற்கும், 'மெய்யுருபு தொகாஅ இறுதியான' (சொல்-கஂஙு) என மூன்ன ருணர்த்தப்படும் வரையறைக்கு இடம் படுத்தற்கும் 'ஈறுபெயராகுமு' (சொல்-சுக) என்றோதப்பட்ட உருபு தம்மையே இறுதியுமிடையும் நிற்குமென வகுத்துக் கூறினரென்பது. (உஂ)

உருபு மற்றொன்றேற்றலும் தொக்கு வருதலும்

கஂச. பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலு
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

இ-ள்: பிறிதோருருபு பிறிதோருருபை யேற்றலும் ஆறுருபுந் தொக்கு நிற்றலும், நெறிபட வழங்கிய வழக்கைச் சார்ந்து வருதலான், வழுவாகா; எ-று.

ஏற்புழிக் கோட லென்பதனால், பிறிதோருருபேற்பது ஆறுவதேயாம்.[2]

பிறிதேற்றலு மென்றமையால், தானல்லாப் பிறவுரு பேற்றல் கொள்க.

எ-டு: சாத்தனதனை, சாத்தனதனொடு, சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதன்கண என உருபு உருபேற்றவாறும்; நிலங்கடந்தான், தாய்மூவர்,

---

1 இச் சூத்திரத்திறகும் மேலவரும 'பிறிது பிறிதேற்றலும்' எனலுஞ் சூத்திரத திறகுஞ் சேனவரையா முதலாயினர உரைதத உரையை மறுத்துச கிவரான முனிவர் வேறுரை யுரைததார். தொலகாப்பியச சூத்திரவிருத்தியுட் காணக.

2 சாத்தனது எனனும் அஃறிணைப படாகதை யொனறனபாற குறிபபு வினமுறறு வினையாலணையும பெயராகி, சாத்தனதை சாத்தனதனை சாத்தனதோடு சாத்தனதொடு எனப பிற உருபேறறும். பிற வேறறுமை யுருபுகள் இங்ஙனம் வினைமுற்றினும பெயரினுமாகாமையின பிறவுருபேலா வென அறிக.

கருப்புவேலி, வரைவீழருவி. சாத்தன்கை, குன்றக்கூகை எனவும், கடந்தானிலம், இருந்தான் குன்றத்து எனவும் உருபு தொக்கு நின்றவாறு கண்டு கொள்க.

இறுதியு மிடையு மென்பதனை அதிகாரத்தான் வருவித்து இரண்டிடத்துங் கூட்டி யுரைக்க.

சாத்தனதனது எனச் சிறுபான்மை தன்னையுமேற்றல் உரையிற் கோடலென்பதனாற் கொள்க.

பெயரிறுதி நின்ற உருபு தன்பொருளொடு தொடராது பிறிதோருருபையேற்றலும், தாம் நின்று தம்பொருளுணர்த்தற்பாலன தொக்கு நிற்றலும், இலக்கணமன்மையின், வழுவமைத்தவாறு. (உக)

கஂடு. ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ இறுதி யான

இ - ள்: ஐகார வேற்றுமைப் பொருளுங் கண்ணென் வேற்றுமைப் பொருளுமல்லாத பிற பொருண்மேனின்ற உருபு தொடர் மொழியிறுதிக்கண் தொக்குநில்லா; எ - று.

இறுதியுமிடையுமென்பது அதிகரிக்க உருபுதொக வருதலுமென்றமையான் வரைவின்றி எல்லாவுருபும் இறுதிக் கண்ணுந் தொகுமென்பது பட்டதனை விலக்கி, இவ்விரு பொருட்கண்ணும் வருவனவே இறுதிக்கட்டொகுவன அல்லன தொகாவென வரையறுத்தவாறு.

அறங்கறக்கும் என இடைக்கண தொக்கு நின்ற நான்காவது கறக்குமறம் என இறுதிக்கண் தொக்கு நில்லாமை கண்டு கொள்க. பிறவுமன்ன. (உஉ)

வேற்றுமை, பொருள்பற்றியது

கஂசு. யாத னுருபிற் கூறிற் ரூயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

இ - ள்: ஒரு தொடர் யாதானுமோர் வேற்றுமையதுருபு கொடுத்துச் சொல்லப்பட்டதாயினும், அவ்வுருபு தன் பொருளான் அத்தொடர்ப் பொருள் செல்லாதவழிப் பொருள் செல்லும் பக்கத்து வேற்றுமையைச் சாரும்; எ - று.

பொருள்செல்லாமையாவது உருபேற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லுந் தம்மூளியையாமை. அவ்வேற்றுமையைச் சார்தலாவது அதன் பொருட்டாதல்.

'கிளையரி நாணற் கிழங்குமணற் கீன்ற
மூளையோ ரன்ன மூள்ளெயிற்றுத் துவர்வாய்' (அகம் - உகஉ)

என்றவழி நான்காவதன் பொருளான் அவ்வுருபேற்ற சொல்லும் அவ்வுருபு நோக்கிய சொல்லும் தம்மூளியையாமையின், அவற்றை யியைக்கும் ஏழாவதன் பொருட்டாயினவாறு கண்டு கொள்க.

உருபு தன்பொருளிற் றீர்ந்து பிறவுருபின் பொருட்டாயும் நிற்குமென உருபுமயக்கங் கூறியவாறுயிற்று.

அஃதேல், அரசர்கட்சார்ந்தான் என்புழியும் இரண்டாவதன் பொருட்கண் ஏழாவது சென்றதென்றமையான், அதனோடிதனிடை வேற்றுமை யென்னையெனின் :—அரசர்கட்சார்ந்தான் என்புழி, அரசரது சார்தற்கிட மாதலே சாரப்படுதலுமாய் இருபொருண்மையும் ஒற்றுமைப்பட்டு நிற்றலின், தத்தம்பொருள்வயிற் றம்மொடு சிவணு மாகுபெயர் போல, இடப்பொருண் மைக்குரிய கண்ணினுருபு அவ்விடப் பொருண்மையோடு ஒற்றுமையுடைத் தாகிய செயப்படு பொருட்கும் ஆணடுரித்தேயாம். மணற்கீன்ற என்புழி, நான்காவதன் பொருளோடு ஏழாவதன் பொருட்கென்னு[1] மியைபின்மை யான், ஒப்பில்வழியாற் பிறிதுபொருள் சுட்டும் ஆகுபெயர்போல, அப்பொருட் குரித்தன்றி வந்ததெனப்படும். அன்னபிறவற்றுள்ளும் இவ்வேறுபாடு தெரிந் துணர்க.

தன்பொருளிற் றீர்தல் இலக்கணமன்மையின், இதனை யிலக்கணத்தோ டுறழ்ந்து வருவனவற்றோடு வைத்தார். (உக)

எதிர்மறைக்கண்ணும் வேற்றுமை ஒக்கும்

கo எ. எதிர்மறுத்து மொழியினுந் தத்தம் மரபின்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே.

இ - ள் : விதிமுகத்தாற் கூறுது எதிர் மறுத்துக் கூறினும், தத்தமிலக்கணத்தான் வரும் பொருணிலைமை திரியா வேற்றுமை யுருபு; எ - று.

எ - டு : மரஞ் சேதக் குறையான், வேலானெறியான் என வரும்.

என்சொல்லியவாறோவெனின் :—குறையான், எறியான் என்றவழி வினை நிகழாமையின், மரமும் வேலுஞ் செயப்படுபொருளாய கருவியுமெனப் படாவாயினும், எதிர்மறைவினையும் விதிவினையோடொக்குமென்பது நூன் முடி பாகலான், ஆணடுவந்த உருபுஞ் செயப்படுபொருண முதலாயினவற்று மேல் வந்தன வெனப்படுமென வழுவமைத்தவாறு. பிறவு மன்ன. (உஉ)

உருபுகளின் திரிபு

கo அ. கு ஐ ஆனென வரூஉ மிறுதி
அவ்வொடு சிவணுஞ் செய்யு ளுள்ளே.[2]

இ - ள் : கு ஐ ஆனென வரூஉ மூன்றுருபும், தொடரிறுதிக் கண்ணின்றவழி, அகரத்தோடு பொருந்தி நிற்றலுமுடைய, செய் யுளுள்; எ - று.

எ - டு : 'கடிநிலை யின்றே யாசிரி யற்க' (தொல். புள். கூசு) எனவும், 'காவ லோனைக் களிறஞ் சும்மே' 'களிறு மஞ்சுமக் காவ லோன' எனவும், 'புரைதீர் கேள்விப் புலவ ரான' எனவும், 'உள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான' எனவும் வரும்.

குகரமும் ஐகாரமும் ஈறு கெட அகரத்தொடு சிவணலுடைமையான், ஐ ஆன் கு என மூன்றையிற் கூறுது, கு ஐ என அவற்றை இயைய வைத்தார்.

---

1 என்றும் - சிறிதும

2 நூறபாவிற கூறபபடட மூனறுருபுகளும் அகரததொடு பொருநதும்போது, 'ஐ' கெடுமஃ; ஏனை 'கு' 'ஆன' இரணடுமகெடா.

இயைய வைக்கின்றவர் ஐகாரம் முன்வைக்கவெனின் :—முறை அதுவாயினுஞ் செய்யுளின்பம் நோக்கிக் ஞகரம் முன்வைத்தாரென்பது.

அஃதேல், இத்திரிபு 'தம்மீறு திரிதல்' (சொல் - உரிக) என இடைச் சொற்கோதிய பொதுவிலக்கணத்தாற் பெறப்படுதலின் ஈண்டுக் கூறல் வேண்டாவெனின் .—அப் பொது விலக்கணத்தான் எய்துவன உருபிற்கு மெய்தோறும், பிறிது பிறி தேற்றலும், 'பிறிதவணிலைய' (சொல் - உரிக) லாயடைகுதலான், ஈண்டுக் கூறல் வேண்டாவாம்; அதனான் அன்ன பொது விலக்கணம் உருபிற்கெய்தாதென மறுக்க. (உரி)

கo௯. அ எனப் பிறத்தல் அஃறிணை மருங்கின்
குவ்வும் ஐயும் இல்லென மொழிப.

இ - ள்: அஃறிணைப் பெயர்க்கண் அகரத்தொடு சிவணி ஈறுதிரிதல் குவ்வும் ஐயுமில்லென எய்தியது விலக்கியவாறு.

அ எனத திரிதலே அ எனப் பிறத்தலென்றார். (உசு)

உருபுகள் பல பொருள்களிலும் மயங்குதல்

கசo. இதன தியல்பிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பி னுக்கமும்
காலத்தி னறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்க னுருபில்
தொன்னெறி மரபின தோன்ற லாறே.

இ - ள்: இதனதியல்பு இதன்தன்மைத் தென்னும் ஆறுவதன் பொருண்மையும், ஒன்றனையொன்று கொள்ளு மென்னும் இரண்டாவதன் பொருண்மையும்,, ஒன்றனைனென்று தொழிற்படற்கு ஒக்கும் என்னும் மூன்றுவதன் பொருண்மையும், முறைப் பொருண்மையைக் கொண்டு நின்ற பெயர்ச்சொல்லினது ஆறும் வேற்றுமைப் பொருண்மையும், நிலத்தை வரைந்து கூறும் பொருண்மையும் பண்பின்கணும் பொருவாகிய ஐந்தாவதன் பொருண்மையும், காலத்தின்கண் ணறியப்படும் ஏழாம வேற்றுமைப் பொருண்மையும், பற்றுவிடு பொருண்மையும், தீர்ந்துமொழிப் பொருண்மையுமாகிய ஐந்தாவதன் பொருண்மையும், அவைபோல்வன பிறவும், நான்கனுருபாற் றோன்றுதற்கண் தொன்னெறி மரபின; எ - று.

எ - டு: யானைக்கோடு கூரிது எனவும், இவட்குக் கொள்ளு மிவ்வணி எனவும், அவற்குச் செய்யத்தகு மக்காரியம் எனவும், ஆவிற்குக் கன்று எனவும் கருஊர்க்குக் கிழக்கு எனவும், சாத்தற்கு நெடியன் எனவும், காலுக்கு வரும்

எனவும், மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான் எனவும், ஊர்க்குத் தீர்ந்தான் எனவும், அப்பொருளெல்லாவற்றின்கண்ணும் நான்காமுருபு வந்தவாறு கண்டு கொள்க.

வன்பால் மென்பால் என்பவாகலின் நிலத்தைப் பாலென்றார்.

'சிறப்பே நலனே காதல் வலியோ
டன்னாற் பண்பும் நிலைக்கள மென்ப' (பொருள் - உஎக)

என உவமை நிலைக்களத்தைப் பண்பென்ப வாகலின், 'பண்பிலுக்கம்' என்றார்.

இதுவும் வேற்றுமை மயக்கமாகலின் மேற்கூறப்பட்டவற்றோடு வையாது இத்துணையும் போந்து வைதத தென்னையெனின் :—அது தொகை விரிப்ப மயங்குமதிகாரம்; இது தொகையல்வழி யானையது கோடு கூரிது என்னுந் தொடர்மொழிப்பொருள் சிதையாமல் யானைக்குக் கோடு கூரிது என நான் காவது ஆண்டுச்சென்று நின்றதாகலான், அவற்றோடு வையாராயினு ரென்பது.

அஃதேல், ஆவின்கன்று எனவுங் கருவூர்க்கிழக்கு எனவுந் தொகையாயும் வருதலின், அப்பொருட்கண் நான்காவது வருதல் ஈண்டுக் கூறற்பாற்றன் றெனின் :—அஃதொக்குமன் ஞயினும், பிறவேற்றுமைப் பொருட்கண் நான் காவது சேறலொப்புமையான் அவற்றிற்கு வேறோர் சூத்திரஞ் செய்யாது இவற்றோ டொருங்கோதினரென்பது.

அன்னபிறவு மென்றதனான், ஊர்க்கட்சென்றான், ஊர்க்கணுற்றது செய் வான் என்னு மேழாவதன்பொருட்கண்ணும், ஊரிற்சேயன் என்னும் ஐந்தா வதன் பொருட்கண்ணும, ஊர்க்குச் சென்றான், ஊர்க்குற்றது செயவான், ஊர்க்குச் சேயன் என நான்காவது வருதல் கொள்க. பிறவுமன்ன. (உஎ)

கஉக. ஏனை யுருபும் அன்ன மரபின
மான மில[1]வே சொன்முறை யான.

இ - ன்: நான்கனுருபல்லாத பிறவுருபுந் தொகையல்லாத தொடர்மொழிக்கண் ஒன்றன்பொருள் சிதையாமை ஒன்று மயங்குதற்கட்குற்றமில, வழங்கு முறைமையான்; எ - று.

எ - டு: நூலது குற்றங்கூறினன் என்னுந் தொடர்மொழிக்கண் நூலைக் குற்றங்கூறினன் எனவும், அவட்குக் குற்றேவல் செய்யும் என்னுந் தொடர்மொழிக்கண் அவளது குற்றேவல் செய்யும் எனவும் வருவன கொள்க. பிறவு மன்ன. (உஅ)

---

1 மானிதற்றல் = கருதுதல், மதித்தல், அளவிடுதல். மானம் = கருத்து, மதிப்பு, அளவு. அளவு ஒன்றன வரையறையாதலின், அளவுகருதுதலில் விலக்குற கருதுதுத தேதான் றும் மானமில = விலக்கத தகுனவலல. ஒப்புநோக்க : வரைநிலை = விலக்குநிலை. "வரை நிலையினறே" (219). வரை = அளவு, விலக்கு. மானம என்னுஞ்சொல 'தமிழமொழி நால' ஆசிரியா கருதுகிறவாறு வட-சொலலன்று.

வேற்றுமை தோன்றுதற்கு ஏது

ககூ. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்ரு
இன்னதற் கிதுபய னுக* வென்னும்
அன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முதல் நிலையே.

இ - ள்: வினையும், வினைமுதலும், செயப்படுபொருளும், நிலமும், காலமும், கருவியுமாகிய ஆறும், இன்னதற்கு, இது பயனுக என்று சொல்லப்படும் இரண்டொடுந்தொக்குத் தொழிலது முதனிலையெட்டாமென்று சொல்லுவர் ஆசிரியர்; எ - று.

ஈண டேதுப்பொருண்மை கருவிக்கண அடக்கப்பட்டது.

தொழின்முதனிலை யென்றது தொழிலது காரணத்தை. காரியத்தின் மூன்னிற்றலின் முதனிலையாயிற்று. காரண மெனினும் காரக மெனினு மொக்கும்.

வினைந்தான் என்றவழி, வினைதற்றொழிலும், வினைந்த கருத்தாவும், வினையப்பட்ட குடமும, வினைதற்கிடமாகிய நிலமும, அத்தொழில் நிகழுங் காலமும, அதற்குக் கருவியாகிய திகிரிமுதலாயினவும, வினையப்பட்ட குடத்தைக் கொள்வானும், வினைந்ததனைய பயனுமாகிய எட்டும்பற்றி அத்தொழில் நிகழ்ந்தவாறு கண்டுகொள்க.

அஃதேல், தொழிலின் வேறுயது காரகமாகலின், வினைதற்றொழிற்கு அத்தொழில்தான் காரகமாமா றென்னே யெனின்:—வினைந்தா னென்பது வினைதலைச் செய்தா னென்னும் பொருட்டாகலின், செய்தற்கு வினைதல் செயப்படுபொருள்நீர்மைத்தாய்க் காரகமா மென்பது. அற்றாகலினன்றே, கொளலோகொண்டா னென்பது இரண்டாம வேற்றுமைத்தொடராயிற் றென்பது.

இன்னதற்கு, இதுபயனுக என்னும இரண்டும அருகியல்லது வாராமையின், அன்னமரபினிரண்டொடு மெனப் பிரித்துக் கூறினர்.

அஃதேல், செய்வது முதலாகிய முதனிலை வேற்றுமையோத்தினுள் கூறப்பட்டமையின் இச்சூத்திரம் வேண்டாவெனின்:- அற்றன்று: இரண்டாவதற்கோதிய பொருளெல்லாவற்றையுஞ் செயப்படு பொருளெனத் தொகுத்து, ஏதுவைக் கருவிக்கணணும் வினைசெய்யிடத்தைக் காலத்தின் கண்ணும் அடக்கி, ஏழாகச செய்து, அவற்றொடு ஆண்டுப் பெறப்படாத வினையென்னு முதனிலை கூட்டி, எட்டென்றராகலின், இப் பாகுபாடு ஆண்டுப் பெறப்படாமையான், இச்சூத்திரம் வேண்டுமென்பது.

இதனுற் டயன் 'நிலனும் பொருளுங் காலமும் கருவியும்' (சொல் - உக.சு) எனவும் 'செயப்படு பொருளைச் செய்தது போல' (சொல் – உசசு) எனவும் வினைக்கிலக்கணங கூறுதலும் பிறவுமாம். (உக)

* 'பயமாக' வெனவும் பாடம்.

ககஙட. அவைதாம்
வழங்கியன் மருங்கின் குன்றுவ குன்றும்.

இ - ள்: மேற்கூறப்பட்ட தொழின் முதனிலை தாம் எல்லாத் தொழிற்கும் எட்டுமே வருமென்னும் யாப்புறவில்லை; வழக்கின்கட் சில தொழிற்கட் குன்றத்தகுவன குன்றி வரும்; **எ - று.**

குன்றதகுவனவாவன செயப்படுபொருளும் ஏற்பதும் பயனுமாம.

கொடியாடிற்று, வளிவழங்கிற்று என்புழி, செயப்படுபொருளும் ஏற்பதும் பயனுமாகிய முதனிலையிலவையாயினும், ஒழிந்தனவற்றுள் ஆகிதலும் வழங்கலுமாகிய தொழினிகழ்ச்சவாறு கண்டுகொள்க.

இதனாற்பயன், எல்லாத்தொழிற்கும முதனிலையெட்டுங குன்றுது வருமோ சிலதொழிற்குச சில குன்றிவருமோ வென்னும் ஐயம் நீங்குதலும், செயப்படுபொருள் குன்றிய வினையை யுணர்த்துஞ்சொல் இரண்டாவதனோடியையா தென்பது பெறுதலுமாம். (கூ0)

கூ இதன்கண், ஆகுபெயர் முடிவு

அதன் இயல்பு

ககச. முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுத லாரைக்குங் கிளவியொடு தொகைஇ
அவ்வியமர பினவே ஆகுபெயர்க் கிளவி.

இ - ள்: முதற்சொல் வாய்பாட்டாற் கூறப்படுஞ் சினையறி கிளவியும், சினைச்சொல் வாய்பாட்டாற் கூறப்படும் முதலறிகிளவியும், நிலத்துப் பிறந்த பொருண்மேல் அந்நிலப்பெயர் கூறலும், பண்புப்பெயர் அப்பண்புடையதனை யுணர்த்திப் பண்பு கொள் பெயராய் நின்றதூஉம், பிறதற் காரணப்பெயரான் அக்காரணத்தானியன்ற காரியதனைச் சொல்லுதலும், அன்மொழிப் பொருண்மேனின்ற இருபெயரொட்டும், செயப்பட்ட பொருண்மேல் அதனைச் செய்தான் பெயரைச் சொல்லுஞ் சொல்லுமென அப்பெற்றிப்பட்ட இலக்கணத்தையுடையன ஆகுபெயர்; **எ - று.**

எ - டு: கடுத்தின்றுண், மெதகுதின்றுண் என முதற்பெயர் சினைமேலும், இலை நட்டு வாழும், பூ நட்டு வாழும் எனச சினைப்பெயர் முதன்மேலும், குழிப்பாடி நேரிது என நிலப்பெயர் அந்நிலத்துப் பிறந்த ஆடைமேலும், இம்மணி நீலம் எனப் பண்புப்பெயர் அப் பண்புடையதன்மேலும, இக்குடம் பொன் எனக் காரணப்பெயர் அதனுளியன்ற காரியத்தின்மேலும, பொற்கொடி வந்தாள் என இருபெயரொட்டு அன்மொழிப்பொருள்மேலும, இவ்வாடை கோலிகன் எனச செய்தான்பெயர் செயப்பட்டதன்மேலும், வந்தவாறு கண்டுகொள்க.

அன்மொழித்தொகை எச்சவியலுள் உணர்த்தப்படுதலின் ஈண்டுக் கூறல் வேண்டா வெனின் :—அன்மொழித் தொகை தொகையாதலுடைமையான் ஆண்டுக் கூறினார்; இயற்கைப்பெயர் ஆகுபெயர் எனப் பெயர் இரண்டாயடங்கும்வழி ஒரு பெயர்ப்பட்டதென மேலும் வந்தவாறு கண்டுகொள்க. அன்மொழித்தொகை எச்சவியலுளுணர்த்தப்படும்; அதனுல் அவ்வாகுபெயராதலுடைமை பற்றி ஈண்டுக் கூறினார்; எச்சவியலுட் கூறப்பட்டவாயினும் வினையெச்ச முதலாயின வினைச் சொல்லாதலும் இடைச்சொல்லாதலு முடைமையான் அவற்றை வினையியலுள்ளும் இடையியலுள்ளுங் கூறியவாறு போல வென்பது.*

தொல்காப்பியனுனுங் கபிலனுனுஞ் செய்யப்பட்ட நூலைத் தொல்காப்பியங் கபிலமென்றல் வினைமுதலுரைக்குங் கிளவியென்றுரால் உரையாசிரியரெனின் :—அற்றன்று: ஒரு மொழியிலக்கணம் ஈண்டுக் கூறுராயினும், வெற்பச சோப்பு என்னும் பெயரிறுதி இதனையுடையானென்னும் பொருள் தோன்ற அன்னென்பதோர் இடைச்சொல் வந்து வெற்பன் சோப்பன் என நின்றுற்போல, தொல்காப்பியன் கபிலன் என்னும் பெயரிறுதி இவனுற் செய்யப்பட்டதென்னும் பொருள்தோன்ற அமமென்பதோர் இடைச்சொல் வந்து அன் கெடுத தொல்காப்பியம் கபிலம் என நின்றனவென்பது ஆசிரியர் கருத்தாம்; அதனுன் அவையுதாரணமாதல் உரையாசிரியர் கருத்தன்றென்க.

அனேயமரபின வென்றது அவ்வாறியாதானுமோரியையுபற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்காதலென ஆகுபெயரிலக்கணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு. ஒன்றன் பொருட்கண ஒன்று சேறலென்னு மொப்புமையான இவற்றை யீண்டுக் கூறினார். அஃதேல் ஆகுபெயர் எழுவாய வேற்றுமை மயக்கமாதலான் ஈண்டுக் கூறினுரென்றுரால் உரையாசிரிய ரெனின் :—ஆகுபெயர் எனவேற்றுமையு மேற்று நிற்றலானும, எழுவாயவேற்றுமையாய நின்றவழியும அது பிறிதோர் வேற்றுமைப்பொருட்கட் சென்று மயங்காமையின் வேற்றுமை மயக்கமெனப்படாமையானும் அது போலியுரை யென்க. (நக)

† நூறு. அவைதாம்

தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியான் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நூவலுங் காலை
வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்.

இ - ள்: மேற்கூறப்பட்ட ஆகுபெயர் தாம் தத்தம் பொருளின் நீங்காது தமபொருளின் வேறல்லாத பொருளொடு புணர்தலும், தம்பொருட் கியைபில்லாத பிறிது பொருளைச் சுட்டிநிற்றலு மென இரண்டியல்புடைய வேறுபாடு போற்றி யுணரப்படும்; எ - று.

---

* ஆகுபெயரும அன்மொழித்தொகையும ஒன்றெனறல பொருந்தாமை தொல்காப்பியச் சூத்திரவிருத்தியுட காண்க

† முதல் நான்கடியும ஒரு சூத்திரமாகவும பின ஒரு அடியாகிய "வேற்றுமை மருங்கிற போற்றல வேண்டும" எனபதை மறறொரு சூத்திரமாகவுங கொண்டு பொருள கூறுவா இளம்பூரணர்.

கடுவென்னு முதற்யெர் முதலோடொற்றுமையுடைய சினைமேல் நிற்றல் தத்தம்பொருள்வயிற் றம்மொடு சிவணலாம். குழிப்பாடியென்னுமிடப்பெயர் இடத்தின் வேறுய ஆடைமேனிற்றல் ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலாம். அஃதேல், குழிப்பாடியும் ஆடையும் இடமும் இடத்துநிகழ் பொருளுமாகிய இயைபுடைய வாகலினன்றே அதன்பெயர் அதற்காயிற்று; அதனுன் அஃதொப்பில்வழியாற் பிறிதுபொருள் சுட்டலாமாறென்னேயெனின் :— நன்று சொன்னுய் : அவ்வியைபுடையவேனும், முதலுஞ் சினேயும் பண்பும் பண்புடையதுமாதன் முதலாகிய ஒற்றுமையாகிய இயைபிலவாகலின், அவை தம்முள் வேறெனவேபடும்; அதனுற் குழிப்பாடியென்பது ஒப்பில்வழியாற் பிறிது பொருள் சுட்டலேயாமென்பது. ஒற்றுமையாகிய இயைபுள்வழி அது தத்தம்பொருள்வயிற் றம்மொடு சிவணிற்றென்றும், அவ்வியைபின்றி இடமும் இடத்துநிகழ்பொருளுமாதன் முதலாகிய இயைபேயாயவழி இஃதொப்பில்வழி யாற் பிறிது பொருள் சுட்டிற்றென்றும், வேறுபடுத்துணரப்படுமென்பார், 'வேற்றுமைமருங்கிற் போற்றல்வேண்டு மென்ரு' என்பது. அஃதேல், இதனேப் பிரித்து ஒரு சூத்திரமாக உரைத்தாரால் உரையாசிரியரெனின் :— அங்ஙனம் பிரிப்பின், தமமொடு சிவணலும் பிறிதுபொருள் சுட்டலுமாகிய இவற்றது வேறுபாட்டின்கண்ணன்பது இனிது பெறப்படாமையானும், எழுத் தோத்தினுள் 'புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியும்' (எழு - கருசு) என்னுஞ் சூத்திரத்து இங்ஙகாப் பாதுகாவலைப் பிரியாது ஒன்ருகவே யுரைத்தலானும், அவர்க்கது கருத்தன் றென்க. (கூஉ)

ககசு. அளவும் நிறையும் அவற்ருெடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னேரே.

இ - ள்: அளவுப்பெயரும் நிறைப்பெயரும் ஆகுபெயராகக் கொள்ளுமிடமுமுடையவென்று சொல்லுவர் உணர்ந்தோர்; எ - று.

பதக்குத்தூணி யென்னும் அளவுப்பெயர் இக்கெற்பதக்கு, இப்பயறு தூணி எனவும், தொடி துலாமென்னும் நிறைப்பெயா இப்பொன்முடி, இவ் வெள்ளி துலாம் எனவும், அளக்கப்பட்ட பொருண்மேலும், நிறுக்கப்பட்ட பொருண்மேலும் ஆகுபெயராய் நின்றவாறு கண்டுகொள்க.

ஒன்று இரண்டென்னுந் தொடக்கத்து எண்ணுப் பெயரும் எண்ணப் பட்ட பொருண்மே னின்றவழி ஆகுபெயரேயாகலின் அவற்றையொழித்த தென்னேயெனின் :—அவை எண்ணப்படு பொருட்கு* முரியவாகலின் ஆகு பெயரெனப்படா; அதனுன் அவற்றை யொழித்தா ரென்பது. † (கூக)

அதற்குப் புறனடை

ககள. இளந்த வல்ல வேறுபிற தோன்றினும்
இளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.

இ - ள்: சொல்லப்பட்டனவேயன்றிப் பிறவும் ஆகுபெயருள வேல, அவையெல்லாஞ் சொல்லப்பட்டவற்ற தியல்பானுணர்ந்து கொள்க; எ - று.

---

* 'எண்ணப்பொருட்கு' எனவும பாடம்.

† எண்ணுப்பெயர் ஆகுபெயராதல தொல்காப்பியச் சூத்திர விருத்தியுட் காண்க.

சொல்லப்பட்டவற்ற தியல்பாவது யாதானுமோரியைபு பற்றி ஒன்றன் பெயர் ஒன்றன்மேல் வழங்கப்படுதல்.

யாழ் குழல் என்னுங் கருவிப்பெயர் யாழ் கேட்டான், குழல் கேட்டான் என அவற்றுளெகிய ஓசைமேலும் ஆகுபெயராய் நின்றன. யானை பாவை என்னும் உவமைப்பெயர் யானை வந்தான், பாவை வந்தாள் என உவமிக்கப்படும பொருண்மேலுமம, ஏறு குத்து எனனுந் தொழிற்பெயர் இஃதோரேறு, இஃ தோர்குத்து என அத்தொழிலானும் வடிவின்மேலும், வருவனவெல்லாங் கொள்க. பிறவு மன்ன.

இயைபுபற்றி ஒன்றன்பெயர் ஒன்றற்காங்கால் அவ்வியைபு ஓரிலக்கணத்தன்றி வேறுபட்ட இலக்கணததை யுடைத்து, அவ் விலக்கணமெல்லாம் கடைப்பிடித்துணர்க என்பார், 'வேறுபிற தோன்றினும்' என்றார். (கூ)

வேற்றுமைமயங்கில் முற்றிற்று

சு. விளிமரபு

[சொற்கள் விளியேற்கும் இயல்புணர்த்துவது]

க. விளியின் இயல்பு

ககஅ. விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு தெளியத் தோன்றும் இயற்கைய வென்ப.

நிறுதத முறையானே விளிவேற்றுமை யுணாததிய வெடுத்துக்கொண்டா; அதனுன் இவ்வோதது விளிமரபென்னும பெயாததாயிற்று.

இ - ள்: விளியென்று சொல்லப்படுவன தமமையேற்கும் பெயரோடு விளங்கத் தோன்று மியல்பையுடைய வென்று சொல்லுவர் ஆசிரியர்; எ - று.

விளிவேற்றுமை எதிர்முகமாக்குதற் பொருட்டாதல் பெயராளே விளஙகுதலிற் கூறாரயினர்.

ஈறுதிரிதலும், ஈற்றயனீடலும், பிறிது வந்தடைதலும், இயல்பாதலு மென்னும் வேறுபாடுடைமையான 'விளியெனப் படுப' என்றார்.

கொள்ளும் பெயரோ டெனவே, கொள்ளாப் பெயருமுள வென்பதாம்.

இயல்புவிளிக்கண் திரியாது நின்ற பெயரேறே விளியெனப் படுதலின், ஆண்டுந் தெற்றென விளஙகு மென்பா 'தெளியத தோன்றும' என்றார். (க)

ககக. அவ்வே இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப.

இ - ள்: விளி கொள்ளும் பெயரும் கொள்ளாப் பெயரும் இவையென மாணக்க னுணர்தற்பொருட்டு அவை யிவ் வோத்தினகத்துப் பொருள்படக் கிளக்கப்படும்; எ - று.

இது கூறுவா மென்னுந் தந்திரவுத்தி.

அவ்வேயெனக் 'கொள்ளும் பெயரொடு தெளியத் தோன்றும்' (சொல் - ககஅ) எனப் பெயரா னுணர்த்தப்படுவதாய் நின்ற விளியைச் சுட்டிய, பெய ரைச் சுட்டுதல் இடருடைத்தெனின் :—விளிவேற்றுமையாவது கொள்ளும் பெயரின் வேறன்றி அவை தாமேயாய் நிற்றலின், அப்பெயரைச் சுட்டமே விளியுஞ் சுட்டப் பட்டனவேயாம் ; அதனுன் இடரின் றென்பது. இவ்வா றுரையாது அவ்வேயெனச சுட்டப்பட்டன விளி வேற்றுமை யெனின் :— வருஞ் சூத்திரத்தின் அவைதாமெனப் பட்டனவும் விளி வேற்றுமையேயாய 'மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயர்' (சொல் - கஉ0) என்பதனோடு இயையாவாமென்பது. விளி கொள்ளும் பெயரும், கொள்ளாப் பெயரும், உயர்திணை விரவுப்பெயர் ஈண்டு மியர்திணைப் பெயருள்ளுமடங்குதலும், நுண் ணுணர்வினுர்க்கல்லது அறியலாகாமையின், ஏனேரும் அறிதற்கு அவை கிளக்கப்படு மென்பார் 'இவ்வெனவறிதற்கு' என்றார். (உ)

உ. உயர்திணைப்பெயர் விளியேற்குமாறு

அதன்கண், விளியேற்கும் உயிர்முதல்கள்

கஉ0. அவைதாம்

இ உ ஐ ஓ வென்னு மிறுதி
அப்பால் நான்கே யுயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

இ - ள் : கிளக்கப் படுவனவாகிய பெயர்தாம் இ உ ஐ ஓ என்னு மிறுதியையுடைய அகரூற்று நான்கு பெயரும் உயர்திணைப் பெயருள் விளி கொள்ளும் பெயர் ; எ - று.

அஃறிணைப்பெயரா னுகுபெயராய உயர்திணைக்கண வந்துழியும், விரவுப் பெயர் உயர்திணைக்கண் வருங்காலும, அவை விளியேற்குமிடத்து உயர்திணைப் பெயரா மென்றற்கு 'உயர்திணை மருங்கின் மெய்ப்பொருள் சுட்டிய' வென்றார்.

எ - டு : 'சுடர்த்தொடீ கேளாய்' (கலி - நிக) எனவும், சாத்தீ எனவும் அவை உயர்திணைப் பெயராய விளியேற்றவாறு கண்டு கொள்க.

மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயர் அப்பால் நான்கென்பன எழுவாயும் பயனிலையுமாய் இயைந்து, ஒரு சொன்னீர்மையவாய், அவைதாமென் னும் எழுவாய்க்குப் பயனிலையாயின.

அஃதேல், உயர்திணை விரவுப பெயரைப் பொருள்பற்றி உயர்திணைப் பெயர்க்கண் அடக்கினுரா லெனின், முன்னர் 'விளம்பிய நெறிய விளிக்குங காலை' (சொல் - கநி0) எனல் வேண்டாவாம பிறவெனின் :—நன்று சொன் னுய் : 'விளம்பிய நெறிய விளிக்குங காலை' என்புழி, விரவுப்பெய ரென்னுது அஃறிணை விரவுப் பெயரென அஃறிணைக்கண் வருவனவற்றை விதந்தோதுத லான், உயர்திணைக்கண் வருவன உயர்திணைப் பெயருள் அடங்கு மென்பதற்கு அச்சூத்திரமே கரியாயிற்றென்பது அல்லதூஉம், புள்ளியிற்றுயர்திணைப் பெயர்க்கண் அவ்வீற் றுயர்திணை விரவுப்பெயரு மடங்கி விளிகோடலெய்து

தலா னன்றே, தாம் நீயிரென்பன விளி கொள்ளாவென எய்தியது விலக்குவா ராயிற்று; அதனானுமடங்குதல் பெறுதுமென்பது. அல்லதூஉம், உயர்திணை யதிகாரத்து முறைப்பெயர் விளியேற்குமாறு கூறினமையானும் பெறப்படும். விரவுப் பெயரை உயர்திணைப் பெயரோடு மாட்டெறிபவாகலின், மாட்டேற்றான் முறைப்பெயர் ஆகாரமும் ஏகாரமும் பெற்று விளியேற்ற லெயதாமையின் ஈண்டுக் கூறினரென்றாரால் உரையாசிரியரெனின்:—அக்கருத்தினராயின் அஃறிணை யென்னுஞ் சொல்லொழித்துப்

'கிளந்த விறுதி யஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய தெறிய விளிக்குங காலை' (சொல் - கஅ0)

எனவும், இதன் பின்

'முறைப்பெயர் மருங்கி னேயெ னிறுதி
யாவொடு வருதற் குரியவு முளவே' (சொல் - கஉசு)

எனவும், இதன்பின் னகார ளகார வீற் றிருவகை முறைப்பெயரு மடங்கப்

'புள்ளி யிறுதி யேயொடு வருமே' (சொல் - கஅகூ)

எனவும் ஒதுவார்மன் ஞாசிரியர். என்னே? மயங்கக் கூறலென்னுங் குற்றமும் நீங்கிச் சூத்திரமுஞ் சுருங்குமாதலான. அவ்வாறோதாமையானும், முறைப் பெயரே யன்றித் தாம நீயி ரென்பனவும் ஈண்டுக் கூறப்பட்டமையானும், உரையாசிரியர்க்கு அது கருத்தன் றென்க. (க)

அவற்றுள், இகர ஐகார ஈறுகள்

கஉக. அவற்றுள்

இ ஈ யாகும் ஐ யா யாகும்.

மேற்கூறப்பட்ட நான்கிறும் விளியேற்குமாறு கூறுகின்றார்.

இ - ள்: அவற்றுள் என்பது அந் நான்கீற்றினுள் என்ற வாறு. நம்பி, நம்பீ என இகரம் ஈகாரமாயும், நங்கை, நங்காய் என ஐகாரம் ஆயாயும், ஈறு திரிந்து விளியேற்கும்; எ - று. (ச)

ஓகார உகர ஈறுகள்

கஉஉ. ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்.

இ - ள்: கோ, கோவே எனவும், வேந்து, வேந்தே எனவும், ஓகாரமும் உகரமும் ஏகாரம் பெற்று விளியேற்கும்; எ - று. (டி)

கஉங. உகரந் தானே குற்றிய லுகரம்.

இ - ள்: மேற்கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம்; எ - று.

திரு, திருவே எனச சிறுபான்மை முற்றுகரவீறு முளவேனும், ஓதிய முறையானே விளியேற்பன குற்றுகரவீறே யாகலின் குற்றியலுகர மென்றார். (அ)

முடிபு

கஉச, ஏனை யுயிரே யுயர்திணை மருங்கில்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்.

இ - ள்: மேற்கூறப்பட்ட நான்கேறுமல்லா உயிரீறு உயிர் திணைக்கண் விளி கொள்ளாவென்று சொல்லுவர் புலவர்; எ - று.

கொள்வன இவையென வரையறுத் துணர்த்தவே, ஏனைய கொள்ளா வென்ப துணரப்படும், வரையறைக்குப் பயன் அதுவாகலான்; அதனு னிச் சூத்திரம் வேண்டாவெனின் :—அஃதொக்கும்: வரையறையாற் பெறப்படுவ தனையே ஒருபயன் நோக்கிக் கூறினர். யாதோ பயனெனின்:—ஏனையுயிர் விளி கொள்ளாவென, மேற்கூறப்பட்ட உயிர் கூறியவாறன்றிப் பிறவாற்று னும் விளி கொள்வனவு முளவென்ப துணர்த்துதற்கென்பது.

எ - டு: கணி, கணியே; கரி, கரியே என வரும். பிறவு மன்ன.

தாமென்றதனுன் ஏனையுயிர் தம் மியல்பாற் கொள்ளாவாயினுஞ் சொல்லுவான்குறிப்புவகையாற் கொள்வனவு முளவென்பதாம். மகவென் பது விளி பெறுதாயினுஞ் சொல்லுவான் குறிப்பான் மகவேயென விளி யேற்றவாறு கண்டு கொள்க. (எ)

அளபெடைப் பெயர்

கூஉடு. அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப.

இ - ள்: அளபெடை தன்னியல்புமாத்திரையின் மிக்கு நான் கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும இகரவீற்றுப்பெயர் இ ஈ யாகாது இயல்பாய் விளியேற்குஞ் செயற்கையையுடையவாம்; எ - று.

அளபெடைமிக் கியற்கையவாகுஞ் செயற்கைய வென்னுது 'மிகூஉமிகர விறுபெயரென' அநுவதித்தாரேனும், மாத்திரைமிக்கியல்பா மென்பது அத னுற் பெறப்படும்.

எ - டு: *தோழீஇஇ எனவும், தோழீஇஇஇ எனவும் வரும்.

இ ஈ யாகாமையின் இயற்கையவாகுமென்றும், மாத்திரை மிகுதலாகிய செயற்கையுடைமையாற் செயற்கைய வென்றும் கூறினர்.

இகரவிறுபெயரென்பது இகரத்தா னிற்ற பெயரென விரியும். (அ)

முறைப் பெயர்

கூஉசு. முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவொடு வருநற் குரியவு முளவே.

இ - ள்: முறைப்பெயரிடத்து ஐயென்னு முடிவு ஆயாகாது ஆவொடு வருதற்கு மூரியனவுள; எ - று.

எ - டு: அன்னை, அன்னு எனவும்; அதனை, அத்தா எனவும் வரும்.

உம்மையான் அன்னுய் அத்தாய் என ஆயாதலுமுடைய வென்பதாம். உம்மை பிரிந்து நின்றது. (கூ)

---

* 'தொழிலீஇஇ' எனபதனை 'அளபெடை மிகூஉம இகரவிறு பெயர்' என்பர் நச்சினார்க்கினியர். 'மலிதிரையூருது' எனும முலகிலகலியுட காணக.

அண்மை விளி

கூஉள. அண்மைச் சொல்லே யியற்கை யாகும்.

இ - ள்: நான்கீற் றண்மைச்சொல்லும் இயற்கையாய் விளி யேற்கும்; எ - று.

அண்மைக்கண் விளி கொள்வதனை 'அண்மைசசொல்' என்றார்.

எ - டு: நம்பி வாழி, வேந்து வாழி, நங்கை வாழி, கோ வாழி என வரும். (கo)

விளியேற்கும் புள்ளி ஈறுகள்

கூஉஅ. னரலள என்னும் அந்நான் கென்ப
புள்ளி யிறுதி விளிகொள் பெயரே.

உயிரீற் றுயர்திணைப்பெயர் விளியேற்குமா றுணர்த்தி, இனிப் புள்ளி யீற் றுயர்திணைப்பெயா விளியேற்குமா றுணர்த்துகின்றார்.

இ - ள்: புள்ளியீற்றுயர்திணைப்பெயர் ன ர ல ள வென்னும் அந்நான்கீற்ற வென்று சொலலுவர் ஆசிரியர்; எ - று.

னரலளவென்னுமொற்றை ஈறாகவுடைய சொல்லே னரலளவென்றார். (கக)

முடிபு

கூஉக. ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா.

இ - ள்: அந்நான்குமல்லாத புள்ளியீற்றுப் பெயர் விளி கொள்ளா; எ - று.

ஈண்டும் விளிகொள்ளாவென்றதனாற் பயன், கூறப்பட்ட புள்ளியீறு பிறவாற்றான் விளி கொள்வனவுளவென்ப துணர்த்தலாம்.

எ - டு: பெண்டிர், பெண்டிரோ எனவும், தம்மான், தம்மானை எனவும் வரும். பிறவு மன்ன.

'விளங்குமணிக் கொடும்பூணாய்' (புறம - கஉo) என வேனைப் புள்ளி சிறுபான்மை விளியேற்றலுங கொள்க. (கஉ)

அவற்றுள், னகர ஈறு

கஉo. அவற்றுள்
அன்னென் இறுதி ஆவா கும்மே.

இ - ள்: அவற்றுள் அன்னென்னும் னகர வீறு ஆவாய் விளி யேற்கும்; எ - று.

எ - டு: சோழன், சோழா; சேர்ப்பன், சேர்ப்பா என வரும். (கஉ)

அதன்கண், அண்மை விளி

கஉக. அண்மைச் சொல்லிற் ககர மாகும்.

இ - ள்: அண்மைவிளிக்கண் அன்னீறு அகரமாம்; எ - று.

எ - டு: துறைவன், துறைவ; ஊரன், ஊர என வரும். (கச)

ஆன் என்னும் ஈறு

கஉ உ. ஆனென் இறுதி இயற்கை யாகும்.

இ - ள்: ஆனென்னும் னகரவீறு இயல்பாய் விளியேற்கும்; எ - று.

சேரமான், மலையமான் என்பன கூறுதற்கண்ணும் அவ்வாறு நிற்றல் கண்டுகொள்க. (கஇ)

அதன்கண் விளையாலணையும் பெயர்

கஉ ங. தொழிலிற் கூறும் ஆனென் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான.

இ - ள்: தொழிலா னெருபொருளைச் சொல்லும ஆனீற்றுப் பெயர் விளிக்கண் ஆயாம்; எ - று.

எ - டு: வந்தான், வந்தாய; சென்றான், சென்றாய் என வரும்.

விளியதிகாரமாகலான் விளிவயினான எனல் வேண்டா எனின்:—சொல்லில்வழி உய்த்துணர்வதென்று மறுக்க. (கஈ)

பண்புப் பெயர்

கஉ ச. பண்புகொள் பெயரும் அதனே ரற்றே.

இ - ள்: ஆனீற்றுப் பண்புகொள்பெயரும் அவ்வீற்றுத் தொழிற்பெயர்போல ஆயாய் விளியேற்கும்; எ - று.

எ - டு: கரியான், கரியாய்; செய்யான், செய்யாய் என வரும். (கஎ)

அளபெடைப் பெயர்

கஉ ரு. அளபெடைப் பெயரே அளபெடை யியல.

இ - ள்: ஆனீற்றளபெடைப்பெயர் இகரவீற்றளபெடைப் பெயரேபோல மூன்று மாத்திரையி னீண்டு இயல்பாய் விளியேற்கும்; எ - று.

எ - டு: உழாஅஅன், கிழாஅஅன் என வரும்.

அளபெடை மூன்றுமாத்திரையின் நீண்டிசைத்தலாகிய விகாரமுடைமையான் 'ஆனெ னிறுதி யியற்கையாகும்' (சொல் - கஉ உ) என்புழி அடங்காமையறிக. (கஅ)

முறைப் பெயர்

கஉ கூ. முறைப்பெயர்க் கிளவி ஏயோடு வருமே.

இ - ள்: னகரவீற்று முறைப்பெயர் ஏகாரம் பெற்று விளியேற்கும்; எ - று.

எ - டு: மகன், மகனே; மருமகன், மருமகனே என வரும. (கக)

னகர ஈற்றுள் விளி ஏலாதவை

கஉள. தானென் பெயரும் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினவின் பெயரும்
அன்றி யகீனத்தும் விளிகோ ளிலவே.

இ - ள்: தானென்னும் பெயரும், அவன் இவன் உவனென் னுஞ் சுட்டுமுதற்பெயரும், யானென்னும பெயரும், யாவனென் னும் வினப்பெயருமாகிய அவ்வகீனத்தும், னகரவீறேயாயினும், விளி கொள்ளா; எ - று. (உ0)

ரகார ஈறு

கஉஅ. ஆரும் அருவும் ஈரொடு சிவணும்.

நிறுத்த முறையானே ரகாரவீறு விளியேற்குமா றுணர்த்துகின்றார்.

இ - ள்: ரகாரவீற்றுள் ஆர், அர் என நின்ற இரண்டும் ஈராய் விளியேற்கும்; எ - று.

எ - டு: பார்ப்பார், பார்ப்பீர்; கூத்தர், கூத்தீர் என வரும். (உக)

அதன்கண் விகாரமாலகணையும் பெயர்

கஉக. தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே.

இ - ள்: மேற்கூறிய இரண்டாற்றுத் தொழிற் பெயர்க்கும் ஈரோடு ஏகாரம் வருதலுங் குற்றமன்று; எ - று.

எ - டு: வந்தார், வந்தீரே; சென்றார், சென்றீரே என வரும்.

அர் ஈற்றுத்தொழிற்பெயர் வந்தவழிக் கண்டுகொள்க.

ஏகாரம் வருதலும வழுக்கின்றென்றதனான், ஏகாரம் பெறுது ஈரொடு சிவணலே பெரும்பான்மை யென்பதாம். (உஉ)

பண்புப் பெயர

கஉ0. பண்புகொள் பெயரும் அதனே ரற்றே.

இ - ள்: அவ் விரண்டாற்றுப் பண்புகொள் பெயரும், அவ் வீற்றுத் தொழிற்பெயர்போல, ஈரொடு சிவணியும், சிறுபான்மை ஈரோடேகாரம் பெற்றும் விளியேற்கும்; எ - று.

காரியார், காரியீர், இளையர், இளையீர் எனவும்; காரியீரே, இளையீரே என வும் வரும். (உஊ)

அளபெடைப் பெயர்

கஉக. அளபெடைப் பெயரே அளபெடை யியல.

இ - ள்: ரகாரவீற்றளபெடைப்பெயர், முற்கூறிய அள பெடைப் பெயரேபோல, மூன்றுமாத்திரையின் மிக்கியல்பாய் விளியேற்கும; எ - று.

எ - டு: சிறுஅஅர், மகாஅஅர் என வரும். (உ஋)

ரகர ஈற்றுள் விளி ஏலாதவை

கசஉ. சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன.

இ - ள்: அவர், இவர், உவர் என வரும் ரகாரவீற்றுச் சுட்டுமுதற்பெயர், னகாரவீற்றுச் சுட்டுமுதற்பெயரே போல, விளிகொள்ளா; எ - று. (உஇ)

கசஊ. நும்மின் திரிபெயர் [1] வினைவின் பெயரென்
றம்முறை யிரண்டும் அவற்றியல் பியலும்.

இ - ள்: நும்மின்திரிபாகிய நீயிரும் வினைவின் பெயராகிய யாவரும் இரண்டும், மேற்கூறிய சுட்டுப் பெயரேபோல, விளியேலா; எ - று.

நீயிரென்பதனை நும்மெனத் திரியாது நும்மென்பதனை நீயிரெனத் திரிப்பினும் இழுக்காதென்னுங்கருத்தான் எழுததோத்தினுள் நும்மென நிறுத்தித் திரித்தாராகலான், அதுபற்றி நீயிரென்பதனை நும்மின்றிரிபெயரென்றார். (உசு

லகர ளகர ஈறு

கசஎ. எஞ்சிய விரண்டின் இறுதிப் பெயரே
நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும்.

நிறுத்த முறையானே லகார ளகாரவீற்றுப்பெயர் விளியேற்குமாறுணர்த்திய எடுத்துக்கொண்டார்.

இ - ள்: உணர்த்தாது நின்ற லகார ளகாரமென்னும் இரண்டு புள்ளியை யிறுதியாகவுடைய பெயர் ஈற்றயலெழுத்து நீண்டு விளியேற்கும்; எ - று.

எ - டு: குரிசில், குரிசீல்; மக்கள், மக்காள் என வரும். (உஎ)

கசஏ. அயல்நெடி தாயின் இயற்கை யாகும்.

இ - ள்: ஈற்றயலெழுத்து, நெட்டெழுத்தாயின், இயல்பாய் விளியேற்கும்; எ - று.

எ - டு: பெண்பால், கோமாள் என வரும். (உஅ)

ளகர ஈற்று வினைப்பெயரும் பண்புப் பெயரும்

கசகூ. வினையினும் பண்பினும்

---

1 'நுமமின திரிபெயா'—நுமமின திரிபெயா நீயிர் எனபது சரியனறு. எழுவாயப பெயரினனறு வேறறுமைபபெயாதோனறுமேயனறி வேறறுமைபபெயரினனறு எழுவாயபபெயா தோனறுது, நும எனபது நூம் எனனும வழகறற பணடை முனனிலைப பனமைபபெயரின வேறறுமைத திரிபாகும நீயிர எனபது நீ எனனும முனனிலை ஒருமைபபெயா 'இர' விகுதியொடு கூடியதாகும.

ஒருமை: நான > நுன - நுனனை, நுன்னுல மு - ன.

பனமை, நூம > நும - நும்மை. நுமமால மு - ன.

நுன > உன. நும > உம். நூங்கள் > நுங்கள் > உங்கள்.

ஒருமை நீன > நின. நீன > நீ.

பனமை: நீம > நிம. நீம + கள் = நீங்கள்.

நீ + இர் = நீயிர் — நீவிர்.

நினையத் தோன்றும் ஆளன் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான.

இ - ள்: வினையின்கண்ணும் பண்பின்கண்ணும் வரும் ஆளீற்றுப்பெயர், இயல்பாகாது, ஆயாய் விளியேற்கும்; எ - று.

எ - டு: நின்றாள், நின்றாய் எனவும்; கரியாள், கரியாய எனவும் வரும்.

விளிவயினான என்பதனை முன்னும் பின்னும் தகுவனவற்றோடு கூட்டுக. (உக)

முறைப் பெயர்

கசஎ. முறைப்பெயர்க் கிளவி முறைப்பெய ரியல.

இ - ள்: ளகாரவீற்றுமுறைப்பெயர், னகாரவீற்று முறைப் பெயர்போல, ஏகாரம் பெற்று விளியேற்கும்; எ - று.

எ - டு: மகள், மகளே; மருமகள், மருமகளே என வரும். (உ0)

ளகர ஈற்றுள் விளி ஏலாதவை

கசஅ. சுட்டுமுதற் பெயரும் வினவின் பெயரும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

இ - ள்: அவள், இவள், உவளென்னும் ளகார ஈற்றுச் சுட்டுமுதற்பெயரும், யாவளென்னும் வினாப்பெயரும், மேற்கூறிய சுட்டுமுதற் பெயரும் வினாப்பெயரும்போல, விளி கொள்ளா; எ - று.

லகர ளகர ஈற்று அளபெடைப் பெயர்

கசஉ. அளபெடைப் பெயரே அளபெடை யியல.

இ - ள்: லகார ளகாரவீற்றளபெடைப்பெயர், மேற்கூறிய அளபெடைப்பெயரே போல, அளபு நீண்டு இயல்பாய் விளியேற்கும்; எ - று.

எ - டு: * மாஅல், கோஒள் என வரும்.

இவை அளபெடைப்பெயராயின், மால் கோளென அளபெடையின்றி வருவன செய்யுளோக்கி அளபு சுருங்கி வந்தனவாம்; இவை அளபெடைப் பெயரல்லவாயின், அளபெடைப்பெயா வந்தவழிக் கண்டுகொள்க. (உஉ)

உ. விரவுப்பெயர் விளியேற்குமாறு

கரு0. கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை.

உயர்திணைப்பெயரும் உயர்திணை விரவுப்பெயரும் விளிகொள்ளுமாறுணர்த்தி, இனி யஃறிணைவிரவுப்பெயர் விளிகொள்ளுமாறுணர்த்துகின்றார்.

* 'மாஅல நினனிறம்போல மழையிருட் பட்டதே
கோஒன் கொளகோடு கொண்டு'
என்ற அடிகளிலுள்ள சொறகள் வந்துள்ளன.

இ - ள்: கிளந்த இறுதியாவன, உயிரீறு நான்கும் புள்ளியீறு நான்குமாம். அவற்றை யிறுதியாகவுடைய அஃறிணைக்கண் வரும் விரவுப்பெயர் மேற்கூறிய நெறியான் விளியேற்கும்; எ - று.

எ - டு: சாத்தி, சாத்தீ; பூண்டி, பூண்டே; தந்தை, தந்தாய் எனவும், சாத்தன், சாத்தா; கூந்தல், கூந்தால்; மக்கள், மக்காள் எனவும் வரும். சாத்தி, பூண்டி, தந்தை, சாத்த என அண்மைவிளியாய் வருவனவுங் கொள்க.

ஓகாரவீறும் ரகாரவீறுமாய் வருவன விரவுப்பெயருளவேற் கொள்க. பிறவுமன்ன. (கூ)

ச. அஃறிணைப்பெயர் விளியேற்குமாறு

கருக. புள்ளியு முயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கி னெல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்
தெளிநிலை யுடையஏ காரம் வரலே.

இ - ள்: புள்ளியீறும் உயிரீறுமாகிய அஃறிணைப்பெயரெல்லாம், விளி கொள்ளுங் காலந்தோன்றின், ஏகாரம் பெறுதலைத் தெற்றெனவுடைய; எ - று.

எ - டு: மரம், மரமே; அணில், அணிலே; நரி, நரியே; புலி. புலியே என வரும்.

அஃறிணைப்பெயருள் விளிகேட்கும் ஒருசார் விலங்கின் பெயரும், விளி கேளாதனவற்றைக் கேட்பனவாகச் சொல்லுவார் கருதியவாற்றான் விளியேற்பனவுமல்லது, ஒழிந்த பெயரெல்லாம் விளி யேலாமையின், 'விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்' என்றார். அதனானே சுட்டுப்பெயர் முதலாயின விளி யேலாமையுங் கொள்க.

தெளிநிலையுடைய ஏகாரம் வரலே என ஏகாரம் பெற்று விளியேற்றலையாப்புறுப்பவே, யாப்புறவின்றிச் சிறுபான்மை பிறவாற்றான் விளியேற்பனவு முளவென்பதாம். அவை வருந்தினை வாழியென்னெஞ்சம்' (அகம - கக) 'கருங்கால் வெண்குருகொன்று கேளுமதி' (நற்றி - உச) 'காட்டுச்சாரோடு குறுமுயால்' 'ஒண்டுவி நாராய்' என்னுந் தொடக்கத்தன. (கச)

எ. புறனடை

மூவகைப் பெயரிலும் சேய்மை விளி

கருஉ. உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையி னிசைக்கும் வழக்கத் தான.

இ - ள்: உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் விளியேற்பனவாகச் சொல்லப்பட்ட எல்லாப் பெயரும், விளிக்குமிடத்து, தத்தமாதிரையி னிறந்திசைத்தலுவாம், சேய்மைக்கண் ஒலிக்கும் வழக்கத்தின்கண்; எ - று.

எ - டு: ஙீஇ, சாத்தாஅ என வரும்.

அளபெடைமிகூஉம் என்றமையான், அளபெடைப் பெயரொழித்து நின்ற பெயர் கொள்க.

அளபிறந்தன என்றது, கெட்டெழுத்து அளபெடையாயும், அளபெடை மூன்று மாத்திரையினிறந்தும், சேய்மைக்குச் சுக்கவாறு நீண்டிசைக்கும் என்றவாறு.

சேரமான், மலையமான் என்னும் ஈற்றயல் அளபிறந்தவழி இயல்புவிளி யென்னுது ஈற்றயல் நீண்டதாகக் கொள்க. அளபிறப்பன எழுத்தாகலின், ஒற்றுமை நயத்தாற் பெயரளபிறந்தவை என்றார். (கூடு)

'அம்ம' என்னும் இடைச்சொல் விளி

கருஙூ. அம்ம என்னும் அசைச்சொல் லீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணு தாயினும்
விளியொடு கொள்ப தெளிய மோரே.

இ - ள்: அம்மவென்னும அசைச்சொல்லினது நீட்டம், விளி கொள்ளும பெயரொடு தோன்றுது, இடைச்சொலலோடு தோன்றிற்றாயினும், விளியாகக கொள்வர் தெளிவோர்; எ - று.

எ - டு: அம்மா சாத்தா என வரும.

சாத்தா என்பதே எதிர்முகமாக்குமாயினும, அமமா என்பதும் அவ்வெதிர் முகமாக்குதலே குறித்து நிற்றலின, விளியாகக் கொள்ளப்படுமென்பார் 'விளி யொடு கொள்ப' என்றார். (கூசு)

உயர்திணைப்பெயருள விளி ஏலாதவை

கருசு. நாநமு எனன அவைமுநலாகித்
தன்மை குறித்த வரளஎன் இறுதியும்
இன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொளலே.

இ - ள்: நாநமு என்னுமுயிர்மெய்யையும் எ என்னு முயிரையும் முதலாகவுடையவாய் ஒருவனது தன்மைப் பொருண்மையைக் குறித்து நின்ற னர ள என்னும் மூன்று புள்ளியை இறுதியாகவுடைய சொல்லும் அவை போல்வன பிறவுமாகிய பெயர்ச்சொல் வருமாயின், விளியொடு பொருந்துதலில; எ - று.

எ - டு: தமன் தமர் தமள், நமன் நமர் நமள், நுமன் நுமர் நுமள், எமன் எமர் எமள் எனவும்; தம்மான் தம்மார் தமமாள், நம்மான் நம்மார் நம்மாள், நும்மான் நும்மார் நும்மாள், எம்மான் எம்மார் எம்மாள் எனவுமவரும்.

அன்னபிறவுமென்றதனால், மற்றையான், மற்றையார், மற்றையாள்; பிறன், பிறர், பிறள் என வருவன கொள்க.

அஃதேல், இவற்றைத தத்தமிற்றகத் துணர்த்தாது ஈண்டுக் கூறிய தென்னை யெனின்:—இவற்றையிற்றகத் துணர்த்தின் மூன்றுசூத்திரத்தா

ணுணர்த்தல்வேண்டுதலிற் சூத்திரம் பல்கும்; அதனை ஞண்டுணர்த்தாராயினர். அஃதேல், உயர்திணை யதிகாரத்துப் பின் ஈவ்வகையினின்: —ஆண்டு வைப்பின் 'விளம்பிய நெறிய விளிக்குங்காலை' (சொல் - கஙிO) என்னும் மாட்டேற்று இனிது பொருள்கொள்ளாதாம், அதனால் பிறிதிடமின்மையின் ஈண்டு வைத்தாரென்பது. (கூஎ)

விளிமரபு முற்றிற்று.

ஙு. பெயரியல்

[பெயர்ச்சொல்லின் இலக்கணம் உணர்த்துவது]

க. சொற்களின் இயல்பு

சொற்கள் பொருளுணர்த்தல்

கருஙு. எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.

நான்கு சொல்லும் பொதுவகையா னுணர்த்தி, பொது விலக்கணமாத லொப்புமையானும் வேற்றுமை பெயரோ டியையுமடைமையானும் பெயரிலக்கணத்திற்கும் பொதுவிலக்கணத்திற்கும் இடை வேற்றுமையிலக்கண முணர்த்தி, இனிச் சிறப்புவகையான் நான்கு சொல்லு முணர்த்துதுவானெடுத்துக்கொண்டு, இவ்வோத்தான் அவற்றின் முதற்கணணதாகிய பெயரிலக்கணமுணர்த்துகின்றார். அதனை னிது பெயரியலென்னும் பெயர்த்தாயிற்று.

இ - ள்: பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே, பொருள் குறியாது நிலலா; எ - று.

'ஆயிருதிணையினிசைக்கும்' (சொல் - க) என்றதனால் இது பெறப்படுதலின் இச் சூத்திரம் வேண்டாவெனின்: —அற்றன்று: சொல்லிசைக்கும் பொருளாவன இவ்விரண்டு திணையுமே பிறிதில்லையென்ப தல்லது, சொல்லெல்லாம் பொருளுணர்த்துதன் மாலையவே உணர்த்தாதனவில்லை யென்னும் யாப்புறவு அதனாற் பெறப்படாமையின், அசைநிலை முதலாயினவும் பொருள்குறித்து நிற்குமென ஐய மறுத்தற்கு இச்சூத்திரம் வேண்டுமென்பது. அசைநிலை முதலாயின பொருளுணர்த்துமாறு மேலே[1] கூறிப்போந்தாம்.

முயற்கோடு, யாமைமயிர்க்கம்பலம் என்பன பொருளுணர்த்தாவாலெனின்: —அவை தொடாமொழியாகலான ஈண்டைக் கெயதா வென்பது. அஃதேல், தொடாமொழிதான் பொருள் குறியாது வருமோவெனின்: —வாரா. அவை மெய்ப்பொருள் குறிப்பனவும் பொய்ப்பொருள் குறிப்பனவுமென இருவகைப்படும். அவற்றுள், பொய்ப்பொருள் குறிப்பனவும் பொருளுணர்த்துவனவேயாம். அல்லாக்கால், *இல்லோன்றலைவனுக வருந் தொடர்நிலைச் செய்யுள் பொருளுணர்த்தாமையின, அவை புலவராற் கொள்ளப்படாவென்பது.

---

1 மேலே எனறது இளவியாகரத்து முதலநூறபா வுரையுள.

* கோவை முதலிய நூலகள்.

அஃதேல், இச் சூத்திரம் முதலாச ஐந்து சூத்திரத்தாற் கூறப்பட்டன பொதுவிலக்கண மாகலான், இவற்றை ஈண்டு வையாது இளவியாக்கத்துள் வைக்கவெனின் :—இவை பொதுவிலக்கணமே யெனினும், ஆண்டுக் கூறப்பட்டன வழூஉக் காத்தலும் வழூஉக்காத்தற்கு உபகாரமுடையனவு மன்றே; 'எல்லாச்சொல்லும் பொருள்குறித்தன' என ஐயமகற்றலும் சொற்பொருள் இனைத்துப் பாகுபடுமென்றலும் சொல் லினைத் தென்றலு மென வழூஉக்காத்தலும், வழூஉக்காத்தற் குபகாரமுடையனவு மன்மையான், ஆண்டுணர்த்தாது, பொருள்வேறுபாடுபற்றிச் சிறப்புவகையான் நான்கு சொல்லு முணர்த்துங் கால் அவை யுணர்த்தி யல்லது உணர்த்தலாகாமையின், அவற்றை மீண் டுணர்த்திஞரென்பது. பொருள் வேறுபாடுபற்றிச் சொல் லுணர்த்துமாறு முன்னர்க் காணப்படும். (க)

சொல், தன்னையும் பொருளையும் உணர்த்தல்

கருசூ. பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னுகும் என்மனர் புலவர்.

இ - ள் : தன்னின் வேறுகிய பொருளறியப் படுதலும் பொருளறியப்படாது அச் சொற்றானே யறியப்படுதலும் இரண்டுஞ் சொல்லாஞ மென்று சொல்லுவர் புலவர் ; எ - று.

எ - டு : சாத்தன், வந்தான், பண்டு காடு மன், உறு கால் என்பனவற்றுல் பொருளுணரப்பட்டவாறும், நீயென் கிளவி, செய்தெனெச்சம், தஞ்சக் கிளவி, கடியென் கிளவி என்பனவற்றுற் பொருளுணரப்படாது அச சொற்றுமே யுணரப்பட்டவாறுங் கண்டுகொள்க.

'ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே' 'எல்லாச சொல்லும் பொருள் குறித்தனவே' (சொல் - கஎஅ) 'எடுபெயராக் காகு மியற்கைய வென்ப' (சொல் - சுக) என்புழிச் சொல்லென்னுஞ் சொல்லும் பெயரென்னும் பெயரும அறியப்படுதற்கண் சொன்மை தெரிதலாம ; ஏனைச்சொல்லும் ஏனைப் பெயரு மறியப்படுதற்கண் பொருணமை தெரிதலாம். அதனுன் ஆண்டுச் சொன்மை தெரிதலும் பொருணமை தெரிதலும் ஒருங்கு வந்தன எனப்படும். அல்லாக்கால், சொல்லென்னுஞ் சொற்பொருளுணர்த்துதலும் பெயரென்னும் பெயரிறுதியுருபு வருதலும் பெறப்படாவா மென்பது.

மேலைச் சூத்திரத்தாற் சொற்கள் பொருளுணர்த்து மென்பது பெறப் பட்டமையால், தானும் பிறிதுமெனப் பொருள் இரண்டு வகைப்படுமென அதனது பாகுபாடு உணர்த்தியவாறு.

இதனுற் பயன், சொற் றன்னையுணர நின்றவழியுஞ் சொல்லேயாமென ஐயமறுத்தலாம். (உ)

குறிப்பும், வெளிப்படையும்

கருஎ. தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் ருேன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே.

இ - ள் : மேற் கூறப்பட்ட பொருண்மை தெரிதல், சொன் மாத்திரத்தான் விளங்கி வேறுநிற்றலுஞ் சொன்மாத்திரத்தாற்

ருன்றது சொல்லொடு கூடிய குறிப்பாற் ருேன்றலுமென, இரண்டு கூற்றை யுடைத்தென்று கூறுவர் ஆசிரியர் ; எ - று.

எ - டு : அவன், இவன், உவன்; வந்தான், சென்ருன் என்றவழிப் பொருள்தெரிபு வேறு நின்றன. ஒருவர் வந்தார் என்றவழி ஆண்பால் பெண் பாலென்பதூஉம், சோறுண்ணுநின்ருன் கற்கறித்து, 'நன்கட்டாய்' என்ற வழித் தீங்கட்டாய் என்பதூஉம், குறிப்பாற் ருேன்றின. கடுத்தின்ருன், தெங்குதின்ருன் எனப் பிறிதின் பெயராற் பிறிதுபொருள் தோன்றலுங குறிப்பிற் ருேன்றலாம். தின்ருனென்னுந் தொழிலொடு முதற்பொருள் இயையாமையின் அதனேடியையுஞ் சினேப்பொருள் அத்தொடராற்றலாற் பெறப்பட்டமையால் குறிப்பிற் ருேன்றலாகாதெனின் :—அற்றன்று : அவ் வியையாமை சொல்லுவான் குறிப்புணர்தற் ருதுவாவதல்லது முதற்பெய ரைச் சினேப்பொருட்டாக்கு மாற்றலின்ருகலான், அதுவும் குறிப்பிற் ருேன் றலேயாமென்க. பிறவு மன்ன.

'இனேதாக முண்மாங் கொல்க களேயுநர்
கைகொல்லும் சாழ்த்த விடத்து' (குறள் - அஎக)

என்னுந் தொடர்மொழியான், நிலேபெற்றபின் களேயலுறிற் களேயலுற்ருரை அவர்தாங் கொல்வர் அதனுற் றீயாரை அவர் நிலேபெருக் காலதனே களேக என்னும் பொருள் விளங்குதலுங குறிப்பிற் ருேன்றலாம். அஃறிணேயிலகணமு கூறுவார் இன்னேரன்னவற்றைப் பிறிதுமொழிதலென்பதோ ரணி யெனப.

சொற்களின் பாகுபாடு

கருஅ. சொல்லெனப் படுப பெயரே வினேயென்
ருயிரண் டென்ப அறிந்திசி னேரே.

இ - ள் : சொல்லாவன பெயர்ச்சொல்லும வினேச்சொல்லு மென இரண்டென்று சொல்லுவர் அறிந்தோர்; எ - று.

பெயர்ச்சொற்கிலக்கணம் வேற்றுமையோத்தினுட் கூறினர் ; வினேச சொற்கிலக்கணம் வினேயியலுட் கூறுப.

பிறசொல்லு முளவாயினும், இவற்றது சிறப்பு நோக்கிப் 'பெயரே வினே யென் ருயிரண டென்ப' என்ருர். இவற்றுள்ளும் பொருளது புடை பெயர்ச்சியாகிய தொழில்பற்றுது அப் பொருள்பற்றி வருஞ் சிறப்புடைமை யாற் பெயரை முற்கூறினர. (சு)

கருக. இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் ருேன்று மென்ப.

இ - ள் : இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினேயையுஞ் சார்ந்து தோன்றும்; எ - று.

அவற்றுவழி மருங்கிற் ருேன்று மென்ருரேனும், பெயரையும் வினேயை யுஞ் சார்ந்து தோன்றும் இவ்விரண்டையும அவற்ருேடு தலேப்பெயரச் சொல் நான்காமென்பது கருத்தாகக் கொள்க. சார்ந்து தோன்று மெனவே, அவற்றது சிறப்பின்மை பெறப்படும். வழக்குப்பயிற்சி நோக்கி இடைசசொல் முற் கூறினர். (ரு)

உ. பெயர்ச்சொல்லின் இலக்கணம்

கசுo. அவற்றுள்
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே.

பொருள் வேறுபாடுபற்றிச சிறப்பு வகையான் நான்கு சொல்லு முணர்த்துதற்கு உபகாரமுடைய பொதுவிலக்கண முணர்த்தி, நிறுத்த முறையானே இனிப் பெயர்ச்சொல் உணர்த்துகின்றார்.

இ - ள்: மேற்கூறப்பட்ட நான்கனுள், பெயரென்று சொல்லப்படுவன, உயர்திணைக்குரியவாய் வருவனவும், அஃறிணைக் குரியவாய் வருவனவும், இரண்டு திணைக்கு மொத்த வுரிமையவாய் வருவனவுமென, மூன்று வேறுபாடுடனவாம், தோன்று நெறிக் கண் ; எ - று. (சு)

கசுக. இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கும்
உரியவை யுரிய பெயர்வயி னான.

இ - ள்: இருதிணைப்பிரிந்த ஐம்பாற் கிளவியாதற்குப் பெயருள் உரியன உரியவாம் ; எ - று.

அவன், பெண்மகன், சாத்தன் என னகரவீறு ஆடுவிற்கும், மகடுவிற்கும், அஃறிணையாணபாற்கும் உரித்தாய் வருதலானும், அவள், மக்கள், மகள் என ளகரவீறு மகடுவிற்கும், பல்லோர்க்கும, அஃறிணைப்பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும், பெண்டாட்டி நபபி எனவும, ஆடு மகடு எனவும இகரவீறும் ஊகார வீறும் இருபாற்கு முரியவாய வருதலானும, வினைச்சொற்போல இன்னவீறு இன்னபாற் குரித்தெனப் பெயாசசொல் லறுபற்றி உணர்தலாகா மையின், 'உரியவை யுரிய' என்றார். பிறவுமனன.

பல்குமென் றஞ்சி இன்ன பெயா இனன பாற் குரித்தெனக் கிளந்தோ தாராயினர். அஃதேல், இவற்றது பாற குரிமை யெற்றுற் பெறுதுமோ வெனின் :—உரியவையெனறது வழக்கினகட் பாலுணாதறுதற்குரியவாய் வழஙகப்படுவன வென்றவாறன்றே ; அதனால் வழக்கு நோக்கிக கொள்ளப்படு மென்பது.

மற்றும், நஞ்சுணடான் சாம என்பது ஒருபாற்குரிய சொல்லாயினும், நஞ்சுண்டாள் சாம, நஞ்சுணடார் சாவா, நஞ்சுணடது சாம, நஞ்சுண்டன சாம் என வேனப்பாற்கு முரிததாம் அசசொலலென இப்பொருணமை யுணர்த்துகின்றது இசசூத்திரமென்றாரால் உரையாசிரியரெனின் :—நஞ்சுணடல் சாதற்குக் காரணமென்பான் ஒரு பானமேல் வைத்து நஞ்சுண

'' சிங்கம் கடப்பது போலும் நாய்கள் பூத்தாயம் பலவாழ்தற்கு
தங்கா விருபபிற றமபெருமான் பாதமுபு நீடி '
எனறும் சிந்தாமணி முதலி லிலமபகம 40-ம செயயுளிடுகளில் ஆன விகுதி
பெண பாலுணாதறி வருவதை யறிக.

டான் சாமென்றதல்லது, ஆண்டுத்தோன்றும் ஆண்மையையும் ஒருமையுஞ் சாதற்குக் காரணமென்னுங் கருத்தினனல்லன்; அதனாற் சொல்லுவான் கருத்தொடு கூடிய பொருளாற்றலாற் சாதல் வினைப்பாற்கும் ஒக்குமெனச் சேறல் சொல்லிலக்கணத்திற் கூறப்படாமையான், ஆசிரியர்,

'ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்
வருவன தானே வழக்கென மொழிப' (பொருளியல்-உஅ)

என இப்பொருண்மை பொருளியலிற் கூறினராகலின், இச சூத்திரத்திற்கு அஃதுரையாதல் உரையாசிரியர் கருத்தன்றென்க. அல்லதூஉம், பார்ப்பான் கள்ளுணலன் என்றவழிக் கள்ளுண்ணுதலை சாதிபற்றிச செல்வதொன்றாக லின் பார்ப்பனிகளும் பார்ப்பார்க்குமல்லது பிறசாதியார்க்கும் அஃதினைக்குஞ் செல்லாமையின், ஐம்பாற்கிளவிகளுமுரிய வென்றல் பொருந்தாமையானும் அவர்க்கது கருத்தன்மை யறிக. (எ)

ஈ. உயர்திணைப் பெயர்கள்

கசூஉ. அவ்வழி
அவனிவ னுவனென வரூஉம் பெயரும்
அவளிவ ளுவளெல வரூஉம் பெயரும்
அவரிவ ருவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவ ரென்னும்
ஆவயின் மூன்றே டப்பதி னேந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே.

இ - ள்: மூவகையாக மேற்சொல்லப்பட்ட பெயருள், அவ னென்பது முதலாக யாவரெனப ஈறாகச் சொல்லப்பட்ட பதினேந் தும் டால் விளங்க நிற்கும் உயர்திணைப்பெயர்; எ - று.

யானென்பது, ஒருவன் ஒருத்தி யென்னும் பகுதி யுணர்த்தாதாயினும், அத்திணை யொருமை யுணர்த்தலின் பாலறிவந்த பெயராம். அல்லதூஉம், பாலறி வந்தவெனப் பன்மைபற்றிக் கூறினரெனினு மமையும். (அ)

கசூஇ. ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த விகர விறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகரவை காரமும்
முறைமை சுட்டா மகனு மகளும்
மாந்தர் மக்க ளென்னும் பெயரும்
ஆடு மகடு வாயிரு பெயரும்
சுட்டுமுத லாகிய வன்னு மானும்
அவைமுத லாகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்து மவற்றே ரன்ன.

இ - ள்: இப்பெயர் பதினைந்தும் மேற்கூறப்பட்டனபோலப் பாலறிவந்த உயர்திணைப்பெயராம்; எ - று.

ஆண்மையடுத்த மகனென் கிளவி ஆண்மக னென்பது. ஒற்றுமை நயத்தான் ஆணமை யுணர்த்துஞ் சொல்லே ஆண்மையென்றார். இது பெண்மையடுத்த வென்புழியு மொகரும். பெண்மையடுத்த மகளென் கிளவியும் பெண்மையடுத்த இகரவிறுதியுமாவன பெண்மகள், பெண்டாட்டி என்பன. நம்மூர்ந்துவரூஉ மிகரமும ஐகாரமுமாவன நமபி, நங்கை என்பன. நமக்கின்னு ரென்னும் பொருள்பட வருதலின் நம்மூர்ந்துவரூஉ மென்றார். அவை நம் மென்பது முதனிலையாக அப்பொருளுணாத்தாவாயின், நமமூர்ந்து வரூஉ மிகரமும் நமமூர்ந்து வரூஉ மைகாரமுமெனப் பிரித்துக் கூறல் வேண்டுமென் பது. இவை யுயர்சொல். முறைமைசுட்டா மகனு மகளுமாவன மூறைப்பெய ரன்றி மகன மகளென ஆடு மகடு வெனனுங துணையாய வருவன. மாந்தா மக்களென்பன பனமைப பெயர். ஆடு மகடு வென்பன மேற் சொல்லப்பட்டன. சுட்டு முதலாகிய அன்னும ஆனுமாவன அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன்; அம்மாட்டான், இம்மாட்டான் உம்மாட்டான் என்பன. இவற்றுள் ஆனீறு இக்காலத்துப் பயின்று வாரா. அவை முதலாகிய பெண்டென் கிளவி இக் காலத்து விழுந்தனபோலும். பெண்டன் கிளவி யென்று பாடமோதி, அவை யாவன அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி என்பாருமுளர். ஒப்பொடு வரூஉங கிளவியாவன பொன்னன்னென், பொன்னன்னுள் என்னுந் தொடக்கத தன. இவை மேலனபோலப் பயினறு வாராமையின், அவற்றோடொருங்கு வையாது வேறு கூறினார். (க)

கசுச. எல்லாரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை யடுத்த மகனென் கிளவியும்
அன்ன வியல வென்மனார் புலவர்.

இ - ள்: எல்லாரு மெனவும், எல்லீரு மெனவும், பெண் மக னெனவும் வரும் மூன்றும் மேற் கூறப்பட்டனபோலப் பாலறி வந்த உயர்திணைப் பெயராம்; எ - று.

புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாரேரக் கத்தார்* இக் காலத்தும் பெண்மகனென்று வழங்குப.

எல்லாரும் எல்லீரும என்புழிப் படர்க்கைப் பன்மை யுணர்த்தும் ஆரும் மூன்னிலைப் பன்மை யுணர்த்தலும் ஈரும உம்மை யடுத்து வருதலானும், பெண மகனெனப் பால் திரிதலானும, இவற்றை வேறு கூறினார். (கo)

கசுடு. நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெய ருடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குரித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குரித்த திணைநிலைப் பெயரே
பல்லோர்க் குரித்த திணைநிலைப் பெயரே

* மாரேரகம - கொறைக் குழந்த நாடு. மாரேரகம எனவும் பாடம.

கூடிவரு வழக்கி னுடியற் பெயரே
யின்றிவ ரென்னு மெண்ணியற் பெயரோ
டன்றி யணைத்து மவற்றியல் பினவே.

இ - ள். நிலப்பெயர் முதலாகச் சொல்லப்பட்டனவும் மேலன போலப் பாலறிவந்த உயர்திணைப் பெயராம்; எ - று.

நிலப்பெயர்—அருவாளன், சோழியன் என்பன. குடிப்பெயர்—மலைய மான், சேரமான் என்பன. குழுவின் பெயர்—அவையத்தார், அத்தி கோசத தார் என்பன. வினைப்பெயர்—வருவார, செல்வார என்பன; தச்சன், கொல் லன் என்பனவு மவை. உடைப்பெயர்—அம்பாகிழான், பேரூகிழான் என் பன; வெற்பன், சேர்ப்பன என்பனவு மவை. பண்புகொள் பெயர்—காரியான், செய்யான் என்பன. பல்லோராக் குறித்த முறைநிலைப் பெயர்—தந்தையர், தாயர் என்பன. பல்லோராக் குறித்த சினைநிலைப் பெயர்—பெருங்காலர், பெருந்தோளர் என்பன. பல்லோராக் குறித்த திணைநிலைப் பெயர்—பாரப் பார், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர் என்பன. பல்லோர்க் குறித்ததனென்று விசேடித்ததலான், இம மூவகைப் பெயருள் ஒருமைப்பெயர இரண்டு திணைக்கு முரியவாம். கூடிவரு வழக்கி னுடியற்பெயர்—*பட்டி புத்திரர், கங்கைமாதத்திரர் என்பன. இவை ஆடல்குறித் திலேயார் பகுதிபடக் கூடியவழி யல்லது வழங்கப் படாமையிற் குழுவின் பெயரின் வேறுயின. அக் குழுவின பெயர் ஒரு துறைக்கண உரிமை பூண்ட பல்லோர்மேல் எக் காலத்தும நிகழ்வன. இன்றிவரென்று மெண்ணியற் பெயராவன ஒருவர், இருவர், முப்பத்துமூவர் என்பன. இன்றிவரென்பது இத்தனையரென்னும பொருட்டுப்போலும. எண்ணுகிய வியல்பு பற்றிப் பொருணர்த்துதலான் 'எண்ணியற் பெயர்' என்றார.

ஒருநிமித்தமபற்றிச சேறலிற பல்பெயர ஒரு பெயராக அடக்கப்பட்டமை யான், நிலப்பெயர் முதலாயினவற்றை மீவறு கூறினார். அஃதேல், ஒப்பொடு வரூஉங்கிளவியு மன்னதாகலின் இவற்றுடன் வைக்கற்பாற்றென்னின் :—அற் றேறனும், வழக்குப்பயிற்கி யின்மையான அவற்றொடு வைத்தா ரென்க. (சக)

* பட்டி புத்திரர்—பட்டி என்பவன குமாரர. இப்பாட்டு என்பவன சாகலினி சுகரத்தருகில விருந்த விசித்திரமாகன மகனி இவன மறுநாட்டார நூலோர் நிடையவதை விருந்த நாடு மகதமான, இவனுக்கு அமைச்சருங் காரியஸ்தரு மிலாதபடியால இவன பேராற்றலேயும மதி நுட்பத்தையு மறிந்து மிகுந்த மரியாதை இவன. அவனை மகனென்றே அன்புரும அதனாலை இவரும் மதி நுட்பமும, செயற்கரியவை யுறைசெயது போதருமை வாய்ந்தவராயிருந்தபடியினாலும, பட்டி புத்திரர் என்றார. கங்கை மாதத்திரர்—கங்கையை அளவிடுபவர மகதனால அனுப்பப்பட்டவராகிய கங்கையினும அள விட்டறியும ஆற்றலுடையராய் எனபது விளங்கிய கங்கை மாதத்திரர் என்றார. இப்பெயர களை பண்டைக்காலத்துச் சிறார்கள் விளையாட்டில குறித்த காலத்து படைத்திடுக கொண்ட பெயராம.

இக்காலத்தும இளஞ்சிறார மகார பலர குழுமிக் கமைந்த கூடி விளையாட்டில குறித்த பொழுதத்து அமைதாரில இருவர் தலைவராக நிறுக்க ஏனையோர இருவர இருவராகப் பிரிந்து, தனியிடஞ் சென்றபின் தமமிற் பெயர புனைந்து தலையாண மையி 'காற்றைக் கலத்தில் நிலைத்த கயல ஒருவன,' 'கடலில் கையால நீந்தினவன ஒருவன,' இவருள் நுமக்கு யாவன வேண்டுமென்னை, 'வானத்தை விலக்கி வளைந்தவன ஒருவன,' 'ஆறுமைலைக் கையிரண்டி நிறுத்தவன் ஒருவன,' இவருள் யாவன நுமக்கு வேண்டு மென்னும வினவுவர. அங்ஙன மினவுதலி இவ்வாட்டுமென, அவர்கள பகுதி யிற் சென்று ஆலோசனை செய்து 'எங்களுக்கு இன்னான் 'இன்னான்' இன்னான் மகார தமமிற் கூறி விளையாட்டில குறித்த பொழுதத்துப் படைத்திடுக கொண்ட பெயர அவை படைத்த புத்திரர், கங்கை மாதத்திரர்' என்றதனாலும இது தனக்கு விளங்கும.

புறனடை

கசுசு. அன்ன பிறவு முயர்திணை மருங்கின்
பன்மையு மொருமையும் பாலறி வந்த
என்ன பெயரு மத்திணை யவ்வே.

இ - ள்: மேற்சொல்லப்பட்ட பெயர்போல்வன பிறவும, உயர்திணைக்கண் பன்மையும் ஒருமையுமாகிய பாலறிவந்த எல்லாப்பெயரும், உயர்திணைப் பெயராம்; எ - று.

*பாலறிவந்த என்றது, ஒருமைப்பாலுணர்த்துவனவும் அடங்குதற்குப் 'பன்மையு மொருமையும் பாலறிவந்த' என்றார்.

அன்னபிறவுமாவன—எனைதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என்னுந தொடக்கத்தன. (கட)

ச. அஃறிணைப் பெயர்கள்

கசுஎ. அதுவிது வுதுவென வரூஉம் பெயரும்
அவைமுதலாகிய வாய்ந்தப் பெயரும்
அவைஇவை யுவையென வரூஉம் பெயரும்
அவைமுதலாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை யென்னும் பெயரும்
ஆவயின் மூன்றே டப்பதி னைந்தும்
பாலறி வந்த வஃறிணைப் பெயரே.

கிறுததமுறையாலே உயாதிணைப்பெய ருணாதகி, இனி யஃறிணைப்பெய ருணாததுகினறார.

இ - ள்: அது, இது, உதுவென வரூஉம் பெயரும், அப பெயர்க்கு முதலாகிய சுட்டே முதலாக ஆயதத்தோடு கூடி அஃது, இஃது, உஃது என வரூஉம் பெயரும், அவை, இவை, உவையென வரூஉம் பெயரும், அச் சுட்டே முதலாக அவ், இவ், உவ் என வரூஉம் வகரவீற்றுப் பெயரும், யாது, யா, யாவை என்னும் வினாப்பெயருமென இப்பதினைந்துபெயரும், பாலவிளங்க வரூஉம் அஃறிணைப் பெயராம்; எ - று.

சுட்டு முதலாகிய ஆய்தப் பெயரும் அவை முதலாகிய வகரவீற்றுப்பெய ரும் அவையல்லதின்மையின், அவவாறு கூறினார். (கஉ)

கசுஅ. பல்ல பலசில வென்னும் பெயரும்
உள்ள வில்ல வென்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளையும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கு மெண்ணுக்குறிப்பெயரும்

* முபபாலறிவந்த எனறும பாடம.

ஒப்பி னெகிய பெயர்நிலை யுளப்பட
அப்பா லொன்பது மவற்றே ரன்ன.

இ - ள்: பல்லவென்பது முதலாகக் கூறப்பட்ட ஒன்பது பெயரும் மேற்கூறப்பட்ட அஃறிணைப் பெயர்போலப் பலவுணர நிற்கும்; எ - று.

பல்ல, பல, சில, உள்ள, இல்ல வெனவும ஐந்துபெயரும தம்மை யுணர்த்தி நின்றன. அல்லன பொருளுணர்த்தி நின்றன.

வினைப்பெயராகிவியாவன வருவது, செல்வது என்பன ; பண்புகொள் பெயராவன உரியது, செய்யது என்பன ; இனைதெனக்கிளக்கு மெண்ணுக் குறிப் பெயர ஒன்று, பத்து, நூறு என எண்பற்றி எண்ணப்படும் பொருண்மை னின்றன. ஒப்பினெகிய பெயரிலையாவன பொன்னன்னது, பொன்னன் னவை என்பன.

முன்னையவைபோலப் பல்ல முதலாயின வழக்கின்கட் பயின்று வாரா மையின், வேறு கூறினார். பல சில வென்பன பயின்றவாயினும், பல்ல இல்ல உள்ள என்பனவற்றோடு ஒப்புமையுடையவாகலின், இவற்றொடு கூறினார். (கச)

அவற்றிற்குக், கள் விகுதி

கஉஉ. கள்ளொடு சிவணு மவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே.[1]

இ - ள்: கள்ளென்னுமீறறிறொடு பொருந்தும் அஃறிணையியற் பெயர் கள்ளீற்றோடு பொருந்துதற்கண் பலவறி சொல்லாம்; எ - று.

அஃறிணை யியற்பெயராவன ஆ, ஈய, குரங்கு, சமுதை, தெங்கு, பலா, மலை, கடல் என்னுந் தொடக்கத்துச் சாதிப்பெயர். ஒருமைக்கும பன்மைக்கும பொதுவாய நிற்றலின இயற்பெயரென்றார். இவை கள்ளென்னு மீற்ற வாய, ஆகள், குதிரைகள் என நின்றவழிப் பன்மை விளக்கலின் பலவறி சொல்லாயினவாறு கண்டுகொள்க.

அஃறிணையியற்பெய ரெனவே, பாலறிபெயரேயன்றி அஃறிணைப் பொதுப்பெயரு மூளவென்பது பெற்றாம.

---

1 'கள்' விகுதி பலவின பாற்குரிய தெனறு இந்நூறபா வரையறுகினும. இவ்விகுதி பெறற மகளை எனறுஞ் சில ஆசிரியா காலததிலேயே உயாதிணை குறிதததமை
"உயாதிணை யெனமனா மகடக சுடடே"
எனபதனாலறியப்படும. மகளை எனபது பலாபால வினைகொணடு முடிதலின தொகுதிப் பெயரனறிப் பலாபாற்பெயரே. மக+கள = மகளை, இது மரூஉப புணரசசி. மகவு எனனும பெயா குழநதையைக குறிததலாலும, பகுதததறிவிலலாத குழநதை அஃறிணையின பாலபடடதெனபதாலும, மரபபிலை குரங்குக குடடிகளும மகவுப பெயா கூறபபடடிருததலாலும, முதலில அஃறிணை மரபிற சிறு பிளளைகளைக குறிதத மகளை எனனும பெயா பிறகாலததில ஓருவனின மகளான பெரியோரையும ஓர ஊரததலிவனின மகளாவ பொதுமகளையும குறிகக தலைபபடட தெனறு பொளளை இடமுணடு. முதி பணடைகாலததில ஒவவொர ஊரும ஒவவொரு பெருங குடிமபமாயிருதது அவவகுடியபதலிவனுலேயே ஆளபபடடு வநததனை விரபகுக. மபபள எனனுஞ் சொலலும முதல அஃறிணைகுறிதததமை கருதியே, 'மகளை எனனுஞ் சொலலாறு சுடடபபடும உயாகுலம' எனனும கருதது மகளைச்சுட டெனறு கூறியிருகக்லாம தொலகாபபியா.

பாற்குரிமை சுட்டாது அஃறிணைக்குரிமை சுட்டிய, 'அவ்வியற்பெயர்' என்றார். (கஞ)

புறனடை

கள0. அன்ன பிறவு மஃறிணை மருங்கிற்
பன்மையு மொருமையும் பால்வரி வந்த
என்ன பெயரு மத்திணை யவ்வே.

இ - ள்: மேற்கூறப்பட்ட பெயர்போல்வன பிறவும், அஃறிணைக்கட் பன்மையும் ஒருமையுமாகிய பால் விளங்க வந்த எல்லாப் பெயரும் அத்திணைக்குரிய; எ - று.

அன்னபிறவு மென்றதனாற் கொள்ளப்படுவன பிறிது, பிற; மற்றையது, மற்றையன; பல்லவை, சில்லவை; உள்ளது, இல்லது; உள்ளன, இல்லன என்னுந் தொடக்கத்தன. (கசு)

அஃறிணைப்பெயர் விகுதி பெருமற் பால் உணர்த்துமாறு

கள கள. தெரிநிலை யுடைய வஃறிணை யியற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே.

இ - ள்: கள்ளொடு சிவணுத அஃறிணையியற்பெயர் ஒருமையும் பன்மையும் விளங்குநிலையுடைய, அதற்கேற்ற வினையொடு தொடர்ந்தவழி; எ - று.

எ - டு: ஆ வந்தது, ஆ வந்தன; குதிரை வந்தது, குதிரை வந்தன என வினையாற் பால் விளங்கியவாறு கண்டுகொள்க.

இஃது அஃறிணைப் பெயரிலக்கணமாயினும், பொதுப்பெயர் வினையொடு வந்து பால் விளங்குதற் லொப்புமை நோக்கி ஈண்டு வைத்தாரென்பது. அஃதேல், கள்ளொடு சிவணு மென்பதனையும் ஈண்டு வைக்க வெனின்: — இயற்பெயர் முன்ன ராரைக்கிளவி போலக் கள்ளென்பது அஃறிணை யியற் பெயர்க்கு ஏறுய ஒன்றுபட்டு நிற்றலின், வினையானன்றிப பெயராதலே பன்மை யுணர்த்தியவாம்; அதனால் அதனைப் பாலறிவந்த பெயருணர்த்தது மதிகாரத்து வைத்தார். (கள

இ. விரவுப் பெயர்கள்

திணை தெரியுமாறு

கள உ. இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமையின்
திரிபுவேறு படுஉ மெல்லாப் பெயரும்
நிலையுங் காலத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே.

இ - ள்: இருதிணைச் சொல்லாதற்கு மொத்த உரிமையவாதலின் உயர்திணைகடட் சென்றுழி உயர்திணைப் பெயராயும் அஃறிணைக்கட் சென்றுழி அஃறிணைப்பெயராயும் வேறுபடும்

விரவுபபெயரெல்லாம், ஆராயுங்கால், தத்தம் மரபின் வினை யோடியைந்தல்லது, திணைவிளங்க நில்லா ; எ - று.

வினையோடல்லதெனவே, திணைக்கேற்றவாற்றுன் ஈறு வேறுபடாது நின்றவாய் நிற்றலின், பெயர்தானே நின்று தத்தமரபினென்றதனாற் பொது வினையொடு வந்து திணை விளக்கா வென்பது பெறப்படும.

இனி அவை, தத்தம் மரபின் வினையொடு பால் விளக்குமாறு :— சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது ; முடவன் வந்தான், முடவன் வந்தது எனவந்தவாறு கணடுகொள்க.

தத்தம் மரபின வினையாவன உயர்திணைக்கும அஃறிணைக்கு முரிய பதினேரிறுப் படர்க்கைவினை. *

எல்லாப் பெயரு மென்பதனை ஆறு போயினுரெல்லாருங கூறைகோட் டிட்டார எனபது போலக கொள்க.

திருதிணைகருப பொதுவாகிய சொல், வினையாற் பொதுமை நீங்கி ஒரு திணைசொல்லா மென்பது கருததாகலின, ஈண்டுப பாலெனப்பட்டது திணையாயாம.

'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்பதனால் தத்தம மரபின் வினையோடல்லது பால்தெரிபில என்றமேனும, சாத்தனெனருவன், சாத்தனெனனறு எனத் தத்தம மரபின் பெயரொடு வருது பால்விளக்குதலுங கொள்க. (கஅ)

கo ங. நிகழுஉ நின்ற பலர்வரை கிளவியின்
உயர்திணை யொருமை நோன்றலு முரித்தே
அன்ன மரபின் வினைவயி னான.

இ - ள் : நிகழுகாலம்பற்றி வரும் **பலர்வரை கிளவியான் உயர்திணை யொருமைப்பால் தோன்றுதலும் உரித்து, அவ்வொரு மைப்பால் தோன்றுதற்கேற்ற வினையிடத்து ; எ - று.**

பலவைரை கிளவியென்றது செய்யுமென்னு முற்றுசசொல்லை.

எ - டு : சாத்தன யாடுழுஉம, சாத்தி சாத்தரைக்கும எனறவழி யாடுழுஉதலுஞ சாத்தரைதலுமாகிய நிகழ அஃறிணைகளேலாது ஒருவற்கும ஒருத்திக்கு மேற்றலின, உயர்திணையொருமைப்பால் விளங்கியவாறு கணடு கொள்க.

நிகழுஉநின்ற தொழிலையுணராதுஞ்சொல்லை ஒற்றுமை நயததான் நிகழுஉநின்ற பலவறிகிளவி யென்றார். நிகழுஉநின்ற வென்றது நிகழா நின்ற வென்றவாறு.

* 'திருதிணை மருங்கினை னெனறு (தொல்லியர் உமை) எனறிர வுரையாற காணக

1 பாழ்தகுபிறர் ஆவையும் மாருதியும், அவர்தின் உயிரிற் உழைபுமாறறி அருமை யாயம் பிறன், அவர் பிரிவு தாதுதி சாத்தன் எனனும் மகளுட பெயரைய இடடு அழைத்து வருகிருளென்றார். முடவன் எனபது முட னாதலையும முடதது எனபது மூட ஆவையுங குறிக்கும.

நடத்தல் நிடத்தன் முதலாகிய பிறதொழில்பற்றி வரும் பலர்வரைநிலவி யான் உயர்திணையொருமை தோன்றுமையின், 'அண்ணமாபின் வினைவயி னை' வென்றார்.

தோன்றலு முரித்தென்னும் எதிர்மறை யுய்மையான், அண்ணமாபின் வினைக்கட் டோன்றுமையு முரித்தென்றது, பலர்வகை நிலவியாற் றோன்று மையு முரித்தென்று கொள்க.

அஃதேல், யாழெழுஉதலுஞ் சாத்தரைத்தலு முதலாகிய தொழில் வேறு பாடுபற்றி வரும் முன்னரிலவினையானும் பயனிகோளாதலை நிருவகையசைத் தானு மெல்லாம உயர்திணைப்பாலி நிகான்று கூடல் பலவகை நிலவியி னென வகைத்துகூறல் பொருத்தமெனின் :— அற்றன்று : 'முன்னரு கோத்தி முறையி னுணர்த்தல்' (சொல்.கூக) எனமு ன்னரிலப்பெயராற பாலுணரு மாறு முன்னருணர்த்தப்படுதலானும், அவ்வாறபின் வினைபற்றி வரும் வியங் கோள் எவ்வ பொருண்ம, தாகவிற் செயதுணர்க்கு செய்யு முயர்திணை சுட்டி யல்லது பெரும்பான்மையும் வாராமையான் ஆண டன்னரபின் வினையாற் பாலுணர்தல் ஒருதலையன்றாலானும், பெயரொசத்திற்கு முடிவாகிய பெயரும் வினையெச்சமுஞ் சிறுபான்மை பொதுவினை கொண்டுவருதலி னல்லது தத்தமபின் வினைகொண்டவழி அவ்வினையே பால் விளக்கலான் ஆண்டெசச் பால் விளக்கல் வேண்டாமையாறும், அவை யொழித்தப பலர்வகைநிலவியே விதந்து கூறினார். இருவகை யெசத்தானும் பியனிகோளாலுஞ் சிறுபான்மை உயர்திணைப் பாற்றன்மை ஒன்றென முடிதலிலாபதனுற் கொள்க.

நிகழ்காலத்தப பிறசொல்லே நீக்குதற்குப் 'பலவகைநிலவி' யென்றார.

பண்மைவிரவுப்பெயரை நீக்குதலாகு 'நிகழ்வுகின்ற' வென்றார.

மேல்விரவுப்பெயர தத்தமரபின் வினையோடல்லது பால்தெரிபில வென்றார் ; இனி அவற்றானன்றிப் பொதுவினையானுட பால்தெரிய நிற்குமென்பது உணர்த்தியவாறு. அஃதேதல், சாத்தன் புற்றின்னும், சாத்தி கள்ளீனும, எனச செயபுமென்னுஞ்சொல்லான் அஃறிணைப்பாலுக் தோன்றுதலின், அது கூறாயிற் றென்னையெனின் :—எழுதலும அறைத்தலும எஃறிணைகளென்னும இயையபில்லாதவாறு போலப புற்றின்றல் உயர்திணைகு வெவ்வாற்றாலு மியபின் றெனப்படாமையானும, கள்ளீனை யென்புழி ஈனுமென்னும வினையானை றிகு கன்றென்னுஞ சார்பான் அஃறிணைப்பால் தோன்றுதலானும், ஒருமை வினையான் ஒருவழி அஃறிணைப்பால் தோன்றலினும அது சிறுபான்மையாக லானும, கூறாயிருவ ரென்பது. (உக)

விரவுப் பெயரின் தொகை, வகை

கஎச. **இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே**
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
யெல்லா மீயிர் மீயெனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவு மாஅங்
கன்னவை நோன்றி னவற்றெடுங் கொளலே.

விரவுப்பெயர் பால்தெரிய நிற்குமா றுணர்த்தி, இனி அவைதம்மை யுணர்த்துவா னெடுத்துக் கொண்டார.

இ - ள் : இயற்பெயர் முதலாக ஈ யென்ப தீருக எடுத்துச் சொல்லப்பட்டனவல்லாத அன்னபிறவும் ஆண்டு வருமாயிற் சொல்லப்பட்டவற்றொடுங் கூட்டுக; எ - று.

இயற்பெயராவன சாத்தன் கொற்றன் என வழங்குதற் பயத்தவாய் நிமித்தமின்றிப் பொருளேபற்றி வரும் இடுபெயர். இயற்பெயரெனினும் விரவுப்பெய ரெனினு மொக்குமாயின், அவற்றுள் ஒருசாரனவற்றிற்கு அப் பெயா கொடுத்த தென்னையெனின் :—அவற்றது சிறப்பு நோக்கி அப்பெயர் கொடுத்தார்; பாணியுந் தாளமும் ஒருபொருள வாயினும் இசை நூலார் தாளத்துள் ஒருசாரனவற்றிற்குப் பாணி யென்னும் பெயா கொடுத்தாற்போல வென்பது.

சினைப்பெயராவன பெருங்காலன், மூடவன் என அச் சினையுடைமை யாகிய நிமித்தம்பற்றி முதன்மேல் வரும் பெயர். சினைமுதற்பெயராவன சித் தலைச்சாத்தன், கொடும்புறமருதி எனச் சினைப்பெயரொடு தொடர்ந்து வரும் முதற்பெயர். சாத்தன், மருதி யென்னு முதற்பெயர் சினைப்பெயரொடு தொடர்ந்தல்லது பொருளுணர்த்தாமையிற் சினைமுதற் பெயராயின. முறைப் பெயராவன தங்தை தாயென முறைபற்றி முறையுடைப்பொருண்மேல் வரு வன. முறையாவது பிறவியான் ஒருவனேனொடொருவற்கு வருமியையபு. அல் லன வைகுந்தங் தம்மை யுணர்த்தி நின்றவாகலான், தாமென்பது முதலாகிய சொல்லேயாம்.

பிறவுமென்றதனான், மக, குழவி போல்வன கொள்க. இவற்றை உயர் திணைப் பெயரென்றதனால் உரையாசிரியரெனின் :—மரபியலுள்,

'மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பு
மவையு மன்ன வப்பா லான' (மரபியல்-கச)

எனவும்,

'குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை' (மரபியல்-கக

எனவும், அவை அஃறிணைக்காதல் கூறி,

'குழவியு மகவு மாயிரண டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே' (மரபியல்-உங)

என வுயர்திணைக்கு மோதிவைத்தாராகலின், அவை விரவுப்பெயரேயாம்; அதனான் அதுபோலியுரை யென்க.

ஒருநிமித்தத்தான் இரண்டுதிணைப் பொருளு முணர்த்துதலின் விரவுப் பெயர் பொருடோறு நிமித்தவேறுபாடுடைய பலபொரு ளொருசொலன்மை யறிக. (உo)

விரவுப் பெயரின் விரி

கஎடு. அவற்றுள்
நான்கே யியற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி யிரண்டா கும்மே
யேனைப் பெயரே தத்த மரபின.

இ - ன்: மேற்கூறிய விரவுப்பெயருள் இயற்பெயருஞ் சினைப் பெயருஞ் சினைமுதற்பெயரும் ஒரொன்று நான்காம்; முறைப் பெயர் இரண்டாம்; ஒழிந்தவை ஐந்து பெயருந் தத்தமிலக்கணத் தனவாம்; எ - று.

தத்தமிலக்கணத்தன வென்றது பொதுவிலக்கணத்தன வல்ல சிறப்பிலக் கணததனவேயா மென்றவாறு எனவே, அவை ஒரொன்றற்கு நிற்ற மென்ற வாறும். ஈண்டுத் தத்தமென்பது, அங்ஙனமன வெனைப் பொதுவல சுட்டா நி, ஒரொன்றாய் நின்ற பெயரைச சுட்டி நின்றது. ஏனைப்பெயரைக்கும் விரிப் பெயர் பதினொன்குமாகப் பத்தென்ப தென்றவாறும்.

கூறப்பட்ட பெயரகு பாகுபாடாகிய ஒருபொருணிதலுணர்தல்பற்றி ஒருருத் திரமாயிற்று. நான்காய விரிதலும் பிரணாடாய் விரிதலும் காலமேயாதலுமாகிய பொருள்வேற்றுமையான் மூன்று சூத்திரமெனினு மமையும். (உக)

இயற்பெயர்

களசு அவைநாம்
பெண்மை யியற்பெய ராண்மை யியற்பெயர்
பன்மை யியற்பெய ரொருமை யியற்பெயரென்
றுந்நான் கென்ப வியற்பெயர் நிலையே.

சினைபெயர

களள. பெண்மைச் சினைப்பெய ராண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெய ரொருமைச் சினைப்பெயரென்
றுந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே.

சினைமுதற்பெயர்

களஅ. பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யாண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யொருமை சுட்டிய சினைமுதற் பெயரென்
றுந்நான் கென்ப சினைமுதற் பெயரே.

முறைப் பெயர்

களக. பெண்மை முறைப்பெய ராண்மை முறைப்பெய
ருயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. [ரென்

இயற்பெயா முதலிய நான்கன் விரியாகிய பதினொன்கும இவையென வுணர்த்தியவாறு.

இவற்றிற்கு உதாரணம் முன்னாக் காட்டுதும.

இயற்பெயா முதன்மூன்றும் ஒரொன்று நான்காய விரிதலும், முறைப் பெயர் இரண்டாதலும், மேலைச் சூத்திரததாற் பெறப்பட்டமையான் அங்ஙன் கும இரண்டுமாவன இவையென்பது இசசூத்திரமகட்குக் கருததாகக் கொள்க. இவ்வா றிடர்ப்படாது தொகைச்சொற்களைப் பயனிலையாகக் கொள்ளவே,

இச் சூத்திரங்களான் அவை யின்ன வென்றலும் இத்தினைய வென்றலும் பெறப்படுமாகலின், மேலைச சூத்திரம் வேண்டாவெனின் :—அற்றன்று : இவற்றுள் விரவுப்பெயர் பத்தொன்பதென்னும் வரையறை பெறப்படாமை யானும், வகுத்துக்கூறல் தந்திரவுத்தியாகலானும் அது வேண்டு மென்பது. (உஉ-உஇ)

பெண்மை சுட்டிய பெயர்

கஅ0. பெண்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருத்திக்கு மொன்றிய நிலையே.

மேற்கூறிய பதினைஞ்சு பெயரும் இருதிணையும்பற்றிப் பாலுணர்த்திய வெடுத்துக்கொண்டார். அவை பெண்மைப்பெயர் நான்கும், ஆண்மைப்பெயர் நான்கும், பன்மைப்பெயர் மூன்றும், ஒருமைப்பெயர் மூன்றுமாம்.

இ - ள் : பெண்மை பற்றி வரும் நான்கு பெயரும், அஃறிணைப் பெண் ணொன்றற்கும் உயர்திணை யொருத்திக்கும் உரிய; எ - று.

அந்நான்குமாவன : பெண்மை யியற்பெயரும், பெண்மைச் சினைப்பெயரும், பெண்மைச் சினைமுதற்பெயரும், பெண்மை முறைப்பெயருமேயாம்.

எ - டு : சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் எனவும், மூடத்தி வந்தது, மூடத்தி வந்தாள் எனவும, மூடக்கொற்றி வந்தது, மூடக்கொற்றி வந்தாள் எனவும, தாய் வந்தது, தாய வந்தாள் எனவும, அவை முறையாலே அஃறிணைப் பெண்மைக்கும், உயர்திணைப் பெண்மைக்கும், உரியவாய வந்தவாறு கண்டு கொள்க. மூடமென்பது சினையது விகாரமாகலிற் சினையாயிற்று.

ஒன்றற்குரியனப் பொதுப்படக் கூறினாரேனும், பெண்மை சுட்டிய பெயரென்றமையான் அஃறிணைப் பெண்ணென்றேயாம். இஃது 'ஆண்மை சுட்டிய வெல்லாப் பெயரும்' (கொல்-கஅக) என்புழியு மொக்கும்.

ஒன்றிய நிலையுடையவற்றை 'ஒன்றிய நிலை'யென்றார். (உசு)

ஆண்மை சுட்டிய பெயர்

கஅக. ஆண்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே.

இ - ள் : ஆண்மை பற்றி வரும் நான்கு பெயரும், அஃறிணையா ணொன்றற்கும், உயர்திணை யொருவனுக்கும் உரிய ; எ - று.

அந்நான்குமாவன : ஆண்மை யியற்பெயரும், ஆண்மைச்சினைப்பெயரும், ஆண்மைச சினைமுதற்பெயரும, ஆண்மை முறைப்பெயருமேயாம.

எ-டு : சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான் எனவும் ; மூடவன் வந்தது, மூடவன் வந்தான் எனவும்; மூடக்கொற்றன் வந்தது, மூடக்கொற்றன் வந்தான் எனவும் ; தந்தை வந்தது, தந்தை வந்தான் எனவும் அவை முறையாலே அஃறிணையாணொன்றற்கும், உயர்திணையாண்பாற்கும் உரியவாய் வந்தவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. (உஎ)

பன்மை சுட்டிய பெயர்

கஅஉ. பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றே பலவே யொருவ ரென்னு
மென்றிப் பாற்கு மோரன் னவ்வே.

இ - ள் : பன்மை சுட்டி வரும் மூன்று பெயரும், அஃறிணை யொருமையும் அத்திணைப் பன்மையும் உயர்திணை யொருமையு மெனச் சொல்லப்பட்ட மூன்று பாற்கும் உரிய ; எ - று.

அம்மூன்றுமாவன : பன்மையியற்பெயரும், பன்மைச்சினைப்பெயரும், பன்மைசினைமுதற்பெயருமாம்.

எ-டு : யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள், எனவும் ; நெடுங்கழுத்தல் வந்தது, நெடுங்கழுத்தல் வந்தன, நெடுங்கழுத்தல் வந்தான், நெடுங்கழுத்தல் வந்தாள் எனவும் ; பெருங்கால் யானை வந்தது, பெருங்கால் யானை வந்தன, பெருங்கால் யானை வந்தான், பெருங்கால் யானை வந்தாள் எனவும் அவை முறையானே அஃறிணையொருமைக்கும், அத்திணைப் பன்மைக்கும், உயர்திணையொருமைக்கும உரியவாய வந்தவாறு கண்டுகொள்க.

பன்மைக்கேயன்றி ஒருமைக்குமுரியவாய் வருவனவற்றைப் பன்மைப் பெயரென்ற தென்னையெனின் :—நன்று சொன்னாய் : பெண்மைப்பெயர் முதலாயினவும் பிறபெயரா லுணர்த்தப்படாத பெண்மை முதலாயின வற்றையு முணர்த்தலானன்றே அப்பெயரவாயின. என்னை? பெண்மை முதலாயின பிறபெயரா லுணர்த்தப்படுமாயின் அப் பெண்மை முதலாயின வற்றுன் அப்பெயர வரைந்து சுட்டலாகாமையின். பன்மைப்பெயர், ஒருமை யுணர்த்துமாயினும், பிறவாற்றாலுணர்த்தப்படாத பன்மையை ஒருகா லுணர்த்தலின் அப்பன்மையான் அவை வரைந்து சுட்டப்படுதலின் அப்பெயர வாயின. அற்றேனும், பன்மைசுட்டிய பெயரென்றமையாற் பன்மையே யுணர்த் தல் வேண்டுமெனின் :—அற்றன்று : இனையபின்மை நீக்கலும் பிறிதினியைபு நீக்கலுமென விசேடித்தல் இருவகைத்து. வெண்குடைப் பெருவிறல் என்ற வழிச வெண்குடைமுதலியவற்றோடு இயைபு நீக்காது வெண்குடையோடு இயைபின்மை மாத்திரை நீக்கி வெண்குடையா னென்பது பட நின்றலின் அஃதியைபின்மை நீக்கலாம். கருங்குவளை என்றவழிச சினம்மை முதலாயின வற்றோடு இயைபு நீக்கலின், இது பிறிதினியைபு நீக்கலாம். பன்மை சுட்டிய பெயரென்பது, வெண்குடைப்பெருவிறல் என்பதுபோல, ஒருமை யியைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபின்மை மாத்திரை நீக்கிப் பன்மை சுட்டுமென்பது பட நின்றது. அதனான் விசேடிக்குங்காற் பிறி தினியைபு நீக்கல் ஒருதலையன்றென்க. அஃறிணையொருமையும் அத் திணைப்பன்மையும் உயர்திணை யொருமையுமாகிய பலவற்றையும் உணர்த்த லாற் பன்மை சுட்டிய பெயரென்பாரு முளர். அஃதுரையாசிரியர் கருத் தன்மை அவ்வுரையான் விளங்கும்.[1]

1 பன்மை சுட்டிய பெயரெனறது இயைபினமை மாத்திரை நீகிய விசேடணமடுத்து நினறதெனச சேனாவரையரும் நச்சினாக்கினியரும உரைத்ததனை மறுத்து பிறிதினியைபு நீகிய விசேடனமடுத்து நினறதென நாட்டினா நன்னூல் விருத்திகாரா, பெயரியலில 'ஒனறே யிருதிணைத் தனபா லேறகும்' எனனுஞ சூத்திர வுரையிலு காணக.

என்றிப்பாற்கு மென்னுமும்மை, இம்மூன்றுபாற்கு மென்பதுபட நிற்றலின், முற்றும்மை. (உஅ)

ஒருமை சுட்டிய பெயர்

கஅங. ஒருமை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருவர்க்கு மொன்றிய நிலையே.

இ - ள் : ஒருமை சுட்டி வரும் மூன்று பெயரும், அஃறிணை யொருமைக்கும், உயர்திணை யொருமைக்கும் உரிய ; எ - று.

அம்மூன்றுமாவன : ஒருமையியற்பெயரும், ஒருமைச் சினைப்பெயரும், ஒருமைச்சினைமுதற்பெயருமாம்.

எ-டு : கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள் எனவும் ; செவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள் எனவும் ; கொடும்புறமருதி வந்தது, கொடும்புறமருதி வந்தான், கொடும்புறமருதி வந்தாள் எனவும அவை முறையானே அஃறிணையொருமைக்கும், உயர்திணை யொருமைக்கும் வந்தவாறு கண்டுகொள்க.

பெண்மைப் பெயரும் ஆண்மைப் பெயரும் ஒருமை யுணர்த்துமாயினும், இவை பெண்மை ஆண்மை யென்னும் வேறுபா டுணர்த்தாது ஒருமையுணர்த்தலான், இவற்றை ஒருமைப்பெயரென்றார். (உக)

தாம் என்னும் பெயர்

கஅச. தாமென் கிளவி பன்மைக் குரித்தே.

தத்தமரபினவெனப்பட்ட பெயர் பாற்குரியவாய் வருமாறுணர்த்து கின்றார்.

இ - ள் : தாமென்னும் பெயர் இருதிணைக் கண்ணும் பன்மைப்பாற் குரித்து ; எ - று.

எ-டு : தாம் வந்தார், தாம் வந்தன என வரும. (உ ஏ)

தான் என்னும் பெயர்

கஅடு. தானென் கிளவி யொருமைக் குரித்தே.

இ - ள் : தானென்னும் பெயர் இருதிணைக்கண்ணும் ஒருமைப்பாற் குரித்து ; எ - று.

எ-டு : தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது என வரும். (உக)

எல்லாம் என்னும் பெயர்

கஅசு. எல்லா மென்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே.

இ - ள் : எல்லாமென்னும் பெயர் இரண்டு திணைக்கண்ணும் பன்மை குறித்து வரும் ; எ - று.

வழியென்றது இடம். பொருள் சொன்னிகழ்தற்கிட மாகலிற் பல் பொருளைப் 'பல்வழி' என்றார்.

எ-டு : எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார், எல்லாம் வந்தன என வரும்.

எல்லாமென்னும் பெயர் இரண்டு திணைக்கண்ணும் பன்மை குறித்து வருமென்ஞது பல்வழியென்றது, மேனி யெல்லாம் பசலையாயிற்று என ஒரு பொருளின் பலவிடங்குறித்து நிற்றலுமுடைத் தென்பதூஉம் கோடற்குப் போலும். அஃது எஞ்சாப்பொருட்டாய் வருவதோ ருரிச்சொலென்பாரு மூளர். (கூஉ)

அதற்கு மேலும் ஒரு விதி

கஅஎ. தன்னு ளுறுத்த பன்மைக் கல்ல
துயர்திணை மருங்கி னைக்க மில்லே.

இ - ள் : எல்லாமென்னுஞ்சொல், உயர்திணைக் காங்கால், தன்மைப்பன்மைக்கலலது முன்னிலைப்பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் ஆகாது ; எ - று.

'நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாம்' (கலி-கூஎ) எனப் படர்க்கைக்கண்ணும் வந்ததாலெனின் :—எழுத்ததிகாரத்துள் 'உயர்திணை யாயி னம்மிடை வருமே' (எழு-ககூ0) எனத் தன்மைக்கேற்ற சாரியை கூறினமையானும், ஈண்டு நியமிதலானும், அஃதிடவழுவமைதியா மென்பது.

தன்மைசொல் அஃறிணைக்கின்மையின், எல்லா மென்பது பொதுமை யிற் பிரிந்து தன்னுளுறுத்த பன்மைக்கண் வந்துழி உயர்திணையீற்றுப்பெய ரெனப்படினும், இருதிணைப்பன்மையு முணர்த்துதற் கேற்றுப் பொதுப் பிரியாது நின்றவழி விரவுப்பெயராதற் கிழுக்கின்மை யறிக.

எல்லாப்பார்ப்பாரும், எல்லாச்சான்ரூரும் எனப் படர்க்கைக்கண் வருதலும் கோடற்குத் தன்னுளுறுத்த பன்மைக் காங்கால் உயர்திணை மருங்கி னல்லதாகாதென மொழிமாற்றி யுரைத்தாரால் உரையாசிரியரெனின்:— படர்க்கைக்கண வருதல் இடவழுவமைதியென்றவழிப்படு மிழுக்கின்மையானும், 'தன்மைச சொல்லே யஃறிணைக் கிளவி' (சொல்-சஉ) எனவும், 'யான் யாம் நாமென வரூஉம் பெயர்' (சொல்-கசூஉ) எனவும் பிரண்டு மோதிய வாற்றால், தன்மைசொல் அஃறிணைக்கின்மை பெறப்படுதலின் ஈண்டுக் கூறல் வேண்டாமையானும், எழுத்ததிகாரத்துள் 'உயர்திணையாயி னம்மிடை வருமே' எனத் தன்மைக்குரிய சாரியையே கூறலானும், அது போலியுரை யென்க.

ஈண்டு ஆக்கம் பெருக்கம். பெருக்கமில்லையெனவே, சிறுபான்மை எனை யிடத்திற்கு மூரித்தா மென்பாருமுளர். (கூஉ)

நீயிர், நீ என்னுஞ் சொற்கள்

கஅஅ. நீயிர் நீயென வரூஉங் கிளவி
பாறெரி பிலவே யுடன்மொழிப் பொருள.

இ - ள் : நீயிர் நீயென்னு மிரண்டு பெயர்ச்சொல்லும் திணைப் பகுதி தெரிய நில்லா ; இருதிணையு முடன் மேன்றும் பொருள்; எ - று.

உடன்மொழிப் பொருள் வென்றது, இருதிணைப் பொருளும் ஒருங்குவரத் தோன்று மென்றவாறு. பிரித் தொருதிணை விளக்கா வென்றவாறு.

எ-டு : நீயிர் வந்தீர், நீ வந்தாய் என இருதிணைக்கும் பொதுவாய் நின்ற வாறு கண்டுகொள்க.

இருதிணைக்கு முரிய பெயரெல்லாந் தத்தமரபின் வினையொடு வந்து திணை விளக்குமன்றே ; இவற்றிற்கு அன்ன வினையின்மையின் ஒருவாற்றானுந் திணை விளக்காமையின், 'பாறெரிபிலவே யுடன்மொழிப்பொருள' வென்றார்.

அவற்றுள், நீ என்னுஞ் சொல்

கஅக. அவற்றுள்
நீயென் கிளவி யொருமைக் குரித்தே.

இ - ள் : மேற்சொல்லப்பட்ட இரண்டுபெயருள் நீயென்னும் பெயர் ஒருமைக்குரித்து ; எ - று.

ஒருமையாவது, ஒருவன், ஒருத்தி, ஒன்றென்பனவற்றிற் செல்லாம் பொதுவாகிய ஒருமை.

எ-டு : நீ வந்தாய் எனவந்தவாறு கண்டுகொள்க. (கூ)

நீயிர் என்னுஞ் சொல்

கஙo. ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே.

இ - ள் : நீயிரென்னும் பெயர் பன்மைக்குரித்து ; எ - று.

பன்மையாவது பன்மூலார்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை.

எ-டு : நீயிர் வந்தீர் எனவந்தவாறு கண்டுகொள்க.

'எல்லாம நீயிர் நீ' (தொல்-கஎக) எனமேற்சொல்லியவாறன்றி, ஒருவனை பன்மையென்னும் முறைபற்றி ஈண்டும நீ யென்பதனை முற்கூறினார். அன்றி, முன்துமொழிந்ததன் றலைதடுமாற்றமென்னும் நச்சினார்க்கினி யெனினு மமையும்.

நீயிர நீயென இருதிணையையும்பாலுள் ஒன்றனை வகைந துணர்த்தா வாயினும, ஒருமை பன்மையெனலும் பொருளா வேறுபாடுடையவென வரையறைப்படுவழி, வரையறுத்தவாறு. (கூ)

ஒருவர் என்னுஞ் சொல்

கஙக. ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி
யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை.

இ - ள்: மேல் இன்றிவரென்னு மெண்ணியற் பெயரென் றோதப்பட்டவற்றுள், ஒருவரென்னும் பெயர்ச்சொல், உயர்திணை மூப்பாலுள் ஒருபால் விளக்காது, ஒருவன் ஒருத்தியென்னும் இரு பாற்கும் பொதுவாய் நிற்கும் ; எ - று.

எ-டு : ஒருவர் வந்தார் எனப் பொதுவாய் நின்றவாறு கண்டுகொள்க.

இருபாற்குமெனப் பொதுப்படக் கூறினுரேனும், ஒருவரென்னும் ஒருமைப்பெயரா னுணர்த்தப் படுதற்கேற்பன ஒருவன் ஒருத்தியென்பனவே யாகலான், அவையே கொள்ளப்படும்.

உயர்திணை யொருமைப்பால் இரண்டென் றறியப் பட்டமையான், இருபாற்குமுரித்தென்னுமும்மை முற்றும்மை. உயர்திணைப் பெயராயினும், பாலுணர்த்தாமையும் முன்னத்தானுணர்த்தலும் இதற்குமொக்குமாகலின், ஈண்டுக் கூறினரென்பது. (கஎ)

அதன் விளிமுடிபு

ககஉ. தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்.

இ - ள் : ஒருவரென்னும் பெயரதியல்பு கருதின் அஃது ஒருமைப் பெயராயினும், பல்லோரறியுஞ் சொல்லொடு தொடர்தற்கேற்கும்; எ - று.

எ-டு : ஒருவா வந்தார, ஒருவரவா என வரும.

ஒருமைப்பெயரா பன்மை கொள்ளாதாயினும், இது வழுவமைதி யிலக்கணமென்ப தறிவித்ததற்குத் தன்மை சுட்டி னென்றார். (கஅ)

நீயிர், நீ என்னுஞ் சொற்களுக்கு மேலுள்ள ஒரு முடிபு

ககஊ. இன்ன பெயரே யிவையெனல் வேண்டின்
முன்னஞ் சேர்த்தி முறையி னுணர்தல்.

இ - ள் : நீயிர் நீ ஒருவரென்பனவற்றை இன்னபாற்பெய ரென்றறியலுறின், சொல்லுவான் குறிப்பொடு கூட்டி முறையா னுணர்க; எ - று.

ஒருசாத்தன், ஒருவஞனும ஒருத்தியானும பலராலும ஒன்றானும் பல வானுந் தன்னுழைச சென்றவழி, 'நீ வந்தாய், நீயிர் வந்தீர' என்னுமன்றே; ஆண்டது கேட்டான் இவ னின்னபால் கருதிக கூறினனென் என்ப துணரும். இனி 'ஒருவரொருவரைச சார்ந்தொழுகலாற்றின' என்றவழிச சொல்லுவா னெடு கேட்டான் இவனெருமை குறித்தானென விளங்கும. பிறவுமன்ன.

இனி இடமுங்காலமும்பற்றிப் பால் விளங்குமவழியும் அறிந்துகொள்க.

ஏகாரம் தேற்றேகாரம்.

முறையினுணர்தலென்பது பாதுகாவல். (கக)

பால்திரிந்த பெயரின் விளிமுடிபு

ககஎ. மகடூ மருங்கிற் பாறிரி கிளவி
மகடூ வியற்கை தொழில்வயி னான.

இனியொருசா ருயர்திணைப்பெயர்க்கும் விரவுப்பெயர்க்கும எஞ்சி நின்ற இலக்கணங கூறுகின்றார.

இ - ள் : மகடூப்பொருண்மைக்கண் பால்திரிந்து வரும் பெண் மகனென்னும் பெயர், விளி கொள்ளுமிடத்து, மகடூவிற்குரிய விளிகொள்ளும்; எ - று.

எ-டு : பெண்மகன் [1] வந்தாள் என வரும்.

பொருண்மைபற்றி மகடூஉவினை கொள்ளுமோ உறுபற்றி ஆடூஉவினை கொள்ளுமோ என்று ஐயுற்றார்க்கு ஐய மகற்றியவாறு.

'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்பதனால் தொழில் வயினனவென்றாராகலின், சிறப்பில்லாப் பெயர்வயினானும் பெண்மகனிவள் என மகடூஉவியற்கையா மென்பதாம். (சஅ)

பெயரீறு செய்யுளுள் திரிதல்

கஙஙரு. ஆவோ வாகும் பெயருமா ருளவே
யாயிட னறிதல் செய்யு ளுள்ளே.

இ - ள் : ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயர்களுமுள; அத் திரியுமிட மறிக செய்யுளுள் ; எ - று.

எ-டு :

'வில்லோன் காலனை கழலே தொடியோணை
மெல்லடி மெலலுஞ் சிலமலே நலலோ
யார்கொ லளியா தாமே (யாரியா'
கயிறுடு பறையிற் கால்பொரக் கலஙகி
வாகை வென்ணெற் றிரலிக்கும)
வேய்பயில் பழுவ முன்னி யோரே' (குறுந-எ)

எனவும்,

'கழனி கல்லா மகிழ்நர்க் கென்னிழை
நெகிழப் பருவரல் செப்பா தோயே' (கற்றிணை-எஅ)

எனவும் ஆகாரம ஓகாரமாய்த திரிந்தவாறு கணடுகொளக.

ஆன், ஆள், ஆர, ஆய என்னுமீற்றவாகிய பெயரல்லது, சேரமான, மலையமான் என்னுந் தொடக்கத்தன அவ்வாறு திரியாமையின், 'ஆயிடனறிதல்' என்றார. உழாஅன், கிழாஅன என்பனவோ வெனின் :—அவை அன்னீற்றுப் பெயா ஒருமொழிப் புணராசசியான அவ்வாறு நின்றனவென்பது. ஆனீறுயவழி, உழவோன், கிழவோன் எனத் திரியுமாறறிக (சக)

உயர்திணை ஈறு அமைந்த விரவுப் பெயர்கள்

கஙஙரு. இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுட் கிளக்கு
மியற்பெயர்க் கிளவி யுயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கிற் றோன்ற லான.

1 பெணமகன எனனும வழககுப போலறறித வடாகாகாட்டு வடடதில இனறு வழங்கும பெடடைபபசனகள எனபதும. இவறறுள, முனனது ஒருமை, பினனது பனமை இதுவே இவறறிடை வேறுபாடு, பையன-பையனகள-பசன, பெணமகன எனபதையும பெடடைபபசனகள எனபதைப போனறு கொடுதமிழ வழககாகக கொளவதே பொருததம.

இ - ள் : செய்யுளுட் கருப்பொருண்மேற் கிளக்கப்படும் இரு திணைக்குமுரிய பெயர் உயர்திணை யுணர்த்தா; அவ்வவ்நிலத்துவழி அஃறிணைப் பொருளவாய் வழங்கப்பட்டு வருதலான்; எ - று.

எ-டு :

'கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை யயர்ந்த வன்பறழ்க் குமரி'

என்புழி, கடுவன், மூலன், குமரியென்பன அஃறிணைப் பொருளவாயல்லது நிலத்துவழி மருங்கிற் றோன்றுமையின், உயர்திணை சுட்டாதவாறு கண்டு கொள்க.

நிலமாவது, முல்லை குறிஞ்சி மருத நெய்த லென்பன.

அஃதேல், இவை உயர்திணை யுணர்த்தாவாயின் அஃறிணைப்பெயரேயாம்; ஆகவே, இச் சூத்திரம் வேண்டா பிறவெனின் :—அற்றன்று : கடுவன் மூல னென்பன அன்னீறு ஆண்மையுணர்த்துமன்றே; அஃறிணைப்பெயர் அவ்வீற் றன் அப்பொருளுணர்த்தாமையின், அவை விரவுப்பெயரேயா மென்பது. அலவன், கள்வனென்பனவோ வெனின் ;—அவை சாதிப்பெய ரெனப்படுவ தல்லது ஆண்மைப்பெய ரெனப்படா வென்க. குமரியென்பது, வடமொழிச் சிதைவாய் வடமொழிப்பொருளே உணர்த்தலின், விரவுப்பெயரேயாம். (சஉ)

ககஎ. திணையொடு பழகிய பெயரலங் கடையே.

இ - ள் : கருப்பொருளுணர்த்தும் விரவுப்பெயர் உயர்திணை சுட்டாது அஃறிணை சுட்டுவது, அவ்வத்திணைக்குரியவாய் வழங்கப் பட்டு வரும் பெயரல்லாதவிடத்து; எ - று.

எனவே, திணைக்குரியவாய வழங்கப்பட்டுவரும் பெயர் இருதிணையுஞ் சுட்டிவரு மென்பதாம்.

திணையொடு பழகிய விரவுப்பெயராவன காளை, விடலை யென்னுந் தொடக்கத்தன.

எ-டு : 'செருமிகு முன்பிற் கூளவேற் காளை' எனவும், 'திருந்துவேல் விடலையொடு வருமெனத தாயே' (அகம்-ககூ) எனவும், உயர்திணை சுட்டி வந்தவாறு கண்டுகொள்க. இவை உயர்திணைப்பொருளன்றேவெனின் :— ஒரெருத்தையும் காளை விடலை யென்பவாகலின், விரவுப்பெயரெனவேபடு மென்பது.

கடுவன், மூலன், குமரியென்பனவும் கருப்பொருளுணர்த்தலின் திணையொடு பழகிய பெயராம பிறவெனின் :—அற்றன்று: விலங்கும் புள்ளு முதலாகிய பொருள்வழி யெல்லாம் அவற்றிற்குரிய பெயா சொல்வதல்லது, பொருளுணடாயினும், இந்நிலத்து இப்பொருள் இப்பெயரால் வழங்கப் படாவென்னும் வரையறையில்லை தலைமக்கள் எந்நிலத்து முளராயினும், பாலைநிலத்துக் காளை மீளியென்னும பெயர் செல்லா மருதநிலத்து ; மருத நிலத்து மகிழ்நன் ஊரனென்னும் பெயர் செல்லா பாலைநிலத்து. அதனாற் பொருள்வகையானன்றிப் பெயா தந் திணைக்குரிமை பூண்டு நிற்றலின், அவற்றைத் திணையொடு பழகிய பெயரென்ரு ரென்பது. (சஉ)

பெயரியல் முற்றிற்று.

கூ. வினையியல்

[வினைசசொல்லின் இலக்கணம் உணாத்துவது]

க. வினைச்சொல்லின் பொது வியல்பு

வினை இன்ன தென்பது

ககூஅ. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நிணையுங் காலைக் காலமொடு தோன்றும்.

கிறுத்த முறையானே வினைசசொல்லாமா றுணர்த்திய வெடுத்துக் கொண்டார். அதனு னிவ்வோத்து வினையியலென்னும் பெயர்த்தாயிற்று.

இ - ள் : வினையென்று சொலலப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது ஆராயுங்காற் காலத்தொடு புலப்படும் ; எ - று.

ஈண்டு வேற்றுமையென்றது உருபை.

எ-டு : உண்டான், கரியன் என வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றியவாறு கண்டுகொளக. -

வேற்றுமை கொள்ளாதெனவுது காலமொடு தோன்று மெனின் தொழினிலையொட்டுத் தொழிற்பெயரும் வினைசசொல்லாவான் செல்லு மாகலானும், காலமொடு தோனறு மெனவுது வேற்றுமை கொள்ளாதெனின் இடைசசொல்லும் உரிச்சொல்லும் வினைசசொல்லெனபபடுமாகலானும, அவ் விருநிறமு நீக்குதற்கு 'வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றும்' என்றார.

வினைச்சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவு முளவி ; அவையும ஆராயுங்காற் காலமுடைய வென்றறிக, 'நிணையுங் காலை' எனறார். அ வியலுவையென்பது முன்னரச சூதத்திரத்தாற் பெறப்படும.

உணாத்தப்படும வினைசசொற்கெல்லாம பொதுவிலக்கண முணாத்தியவாறு. (க)

காலம

ககஉ. காலந் தாமே மூன்றென மொழிப.[1]

இ - ள் : மேற்றோற்றுவாய் செய்யப்பட்ட காலம் மூன்றென்று சொல்லுவர் புலவர் ; எ - று.

தாமென்பது கட்டுரைச சுவைபட நின்றது. (உ)

காலத்தின் பெயர் முதலியன

உ00. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்ரு
வம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளு
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.

---

1 " காலம்.. மொழிப " எனறும, " இறபபினிகழவினெதிரவின " எனறும கூறியிருபபதால, தொலகாபபியா காலததிறகு முனறிய தமிழவரே முக்காலமுங குறிததமை தெளிவாம.

இ - ள் : இறப்பும், நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படும் அம்மூன்றுகாலமுங் குறிப்புவினையொடும் பொருந்தும் மெய்ந் நிலைமையையுடைய, வினைச்சொல்லானவை தோன்று நெறிக் கண்; எ - று.

எனவே, காலமூன்றுவன இறப்பும் நிகழ்வும், எதிர்வு மென்பதூஉம், வெளிப்படக் காலம் விளக்காதன குறிப்புவினை யென்பதூஉம் பெற்றாம.

எ-டு : உண்டான், உண்ணுநின்றான், உணபான் என வரும்.

இறப்பாவது தொழிலது கழிவு. நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுபபெறுத நிலைமை. எதிர்வாவது தொழில் பிறவாமை. தொழிலாவது பொருளினது புடை பெயர்ச்சியாகலின், அஃதொருகண நிற்பதல்லது இரண்டு கண நில்லாமையின், நிகழ்சசியென்பதொன்று அதற்கில்லையாயினும், உண்டல் தின்றலெனப் பஃறொழிற்றொகுதிக்ண ஒரு தொழிலாகக்கோடலின், உணணு நின்றான், வாராநின்றான என நிகழ்சசியு முடைத்தாயிற்றென்பது.

வினைக்குறிப்புக் காலமொடு தோன்றுகால், பகுதிகரியன், இது பொழுது கரியன் என இறந்தகாலமும், நிகழ்காலமும முறையானே பற்றி வருதலும், நாளைக்கரியனும என எதிர்காலத்து ஆக்கமொடு வருதலும் அறிக.

மெய்ந்நிலையுடைய வெனறது, விளங்கித தோன்று வாயினும் காலம் வினைக்குறிப்பொடு கோடல் மெயமமையென வலியுறுத்தவாறு. (கூ)

வினைச்சொறகளின் வகை

உ0ச. **குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக்**
காலமொடு வருஉம் வினைச்சொ லெல்லா
முயர்திணைக் குரியவு மஃறிணைக் குரியவு
மாயிரு திணைக்குமோ ரன்ன உரிமைய
மம்மூ வருபின தோன்ற லாறே.

பொதுவகையாற் கூறிய வினைசசொல்லை சிறப்புவகையா னுணாத்திய வெடுத்துக்கொணடார.

இ - ள் : குறிப்புப் பொருண்மைக்கண்ணுந் தொழிற பொருண்மைக்கணணுந் தோன்றிக் காலத்தொடு வரும் எல்லா வினைச் சொல்லும், உயர்திணைக்குரியனவும் அஃறிணைக்குரியனவும் இரண்டு திணைக்கும் ஒப்பவுரியனவுமென, மூன்று கூற்றனவாம், தோன்றுநெறிக்கண்; எ - று.

கரியன், செயயன் என்புழித் தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக்கொள்ளப்படுதலிற் குறிப்பென்றார்.

எ-டு : உண்டான், கரியன்; சென்றது, செய்யது; வந்தனை, வெளியை என வரும்.

'குறிப்பொடுகொள்ளும்' (சொல்-உ00) என மேற்குறிப் பியைபு பட்டு நிறறலிற் 'குறிப்பினும் வினையினும்' என்றார.

முன் ஈறுபற்றி உணர்த்தப்படும் வினைச்சொற்களே இஃதிறந்தகாலத்திற் குரித்து, இது நிகழ்காலத்திற்குரித்து, இஃதெதிர்காலத்திற்குரித்து என வழக்கு நோக்கி, உணர்ந்துகொள்க வென்பது விளக்கிய, 'காலமொடு வரூஉம்' என்றார்.

வினைச்சொற் கால முணர்த்துங்காற் சிலசெறிப்பா டுடையவென்பது விளக்கிய, 'செறிப்படத் தோன்றி' என்றார். செறிப்பாடாவது அவ்வீற்றுமிசை நிற்கும் எழுத்து வேறுபாடு. அவை முற்றவுணர்த்தலாகாவாயினும், அவ் வீறுணர்த்தும்வழிச சிறிய சொல்லுதும். (ச)

உ. உயர்திணை வினை

தன்மைப் பன்மை வினைமுற்று

உ0உ. அவைதாம்

அம்மா மெம்மே மென்னுங் கிளவியு
மும்மொடு வரூஉங் கடதற வென்னு
மந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

நிறுத்த முறையானே உயர்திணைவினையாமா றுணர்த்துகின்றார். அவைதாம் இருவகைய; தன்மைவினையும் படர்க்கைவினையுமென. தன்மை வினையும இருவகைத்து; பன்மைத்தன்மையும் ஒருமைத்தன்மையுமென. தனித்தன்மையும் உளப்பாட்டுத்தன்மையுமெனினு மமையும். இச்சூத்திரத்தாற் பன்மைத்தன்மை யுணர்த்துகின்றார்.

இ - ள்: மேன் மூவகையவெனப்பட்ட வினைச்சொற்றும், அம் ஆம் எம் ஏம் என்னுமீற்றவாகிய சொல்லும், உம்மொடுவரூ உங் கடதறவாகிய கும்மும் டும்மும் தும்மும் றும்மும் என்னுமீற்ற வாகிய சொல்லுமென, அவ்வெட்டும் பன்மை யுணர்த்துந் தன்மைச்சொல்லாம்; எ - று.

தனக்கு ஒருமையல்லதின்மையினை தன்மைப்பன்மையாவது தன்னொடு பிறரை உளப்படுத்ததேயாம். அவ்வுளப்படுத்தல் மூவகைப்படும்; முன்னின்றாரை உளப்படுத்தலும், படர்க்கையாரை உளப்படுத்தலும், அவ்விருவரையும் ஒருங்குளப்படுத்தலுமென.

அம ஆம என்பன முன்னின்றாரை உளபபடுக்கும்; அமராயவழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம ஏம என்பன படர்க்கையாரை உளப் படுக்கும. உம்மொடு வரூஉங கடதற அவ்விருவரையும ஒருங்குளப்படுத்தலுந் தனித்தனியுளப்படுத்தலுமுடைய.

ஈண்டும் அவைதாமென்பதற்கு முடிபு 'அவைதாம் இ உ ஐ ஒ' (சொல்-கஉ0) என்புழி உரைத்தாங் குரைக்க.

அம, ஆம, எம, ஏம என்பன மூன்று காலமுமபற்றி வரும். உமமொடு வரூஉங கடதற எதிர்காலம் பற்றி வரும்.

முன்னின்ற நான்கீறும் இறந்தகாலம்பற்றி வருங்கால், அம்மும் எம்மும் கடதறவென்னு நான்கன்முன் அன் பெற்று வரும். எம் அன் பெற்றும் பெறுதும் வரும். ஆம் அன் பெறுது வரும்.

எ-டு : நக்கனம் நக்கனெம், உண்டனம் உணடனெம், உரைத்தனம் உரைத்தனெம், தின்றனம் தின்றனெம் எனவும; நக்கனேம் நக்கேம், உண்டனேம் உணடேம, உரைத்தனேம் உரைத்தேம், தின்றனேம் தின்றேம் எனவும்; நக்காம் உணடாம், உரைததாம் தின்றும் எனவும் வரும.

அந்நான்கீறும ஏனை யெழுத்தின்முன் ரகாரமும் ழகாரமுமொழித்து இன் பெற்று வரும்.

எ-டு : அஞ்சினம, அஞ்சினும ; அஞ்சினெம், அஞ்சினேம ; உரிஞினம், உரிஞினும; உரிஞினெம், உரிஞினேம என வரும். பிறவெழுத்தோடு மொட்டிக் கொள்க. கலக்கினம, தெருட்டினம என்னுந் தொடக்கதனை குற்றுகர வீறு கலான், அதுவும் ஏனையெழுத்தே யாம.

இனி அவை நிகழ்காலம்பற்றி வருங்கால், நில், கின்று என்பனவற்றோடு வரும். [1] நில்லென்பது லகாரம னகாரமாய் றகாரம் பெற்று நிற்கும.

எ-டு : உணணுகின்றனம், உண்கின்றனம ; உணணுகின்றும், உண்கின்றும ; உணணுகின்றனெம், உண்கின்றனெம ; உணணுகின்றேம், உண்கின்றேம ; உண்ணுகின்றனேம், உண்கின்றனேம என வரும. ஈண்டு அன் பெற்ற விகற்பம் இறந்த காலததிற் கூறியவாறே கொள்க.

உண்ணுகிடநதனம, உணணுவிருந்தனம எனக் கிட இரு என்பனவுஞ் சிறுபான்மை நிகழ்காலதது வரும்.

---

1 செயினென்ற எனனும நிகழகால வினையெசசம நூறபாவீறு கூறபபடாமையானும, செயயும எனனுமபொலலியேபணைடயுரையாசிரியா நிகழகாலததிறகுக காடடின மையானும். முதறகாலததில நிகழகாலததிறகுத தனிசசொல இலலையெனறும, பினபு, ஆயினென்ற செயயாயினென்ற எனனுஞ சொறகள தோனறினவென்றும ஊகிக்க இடமுணடு ''கால, வழி, இடத தெனபனவறறினை நிகழகாலதது வாய பாடு எதிரகாலததிறகு மேறறலறிக'' எனறு சேனாவரையர உரைதததை (சொல 229-உரை) நோகுக.

''இவி, அவை நிகழகாலம் பறறி வருங்கால, நில கின்று எனபனவறறோடு வரும. நில்லென்பது லகாரம னகாரமாய றகாரம பெறறு நிறகும.'' (சொல-202. உரை)

''உணணுகிடநதனம உணணுவிருந்தனம எனக கிட இரு எனபனவுஞ சிறு பானமை நிகழகாலதது வரும'' (மெ. மெ.) எனறு சேனாவரையரே கூறியிருபபதால, செயதுகின்று எனப பொருளபடும செயயாகின்று எனனும தொடரசசொலலே ஒருசொறபனமை பெறறு நிகழகால வினையசசொலலாயிற றென்க. உணணுகின்றனர் என்பதை உண்+ஆகின்று எனப பிரிதததால, உணணு கிடநதனம உணணுவிருந்தனம எனபனவறறையும உண்+ஆகிடந்து+அனம, உண்+ஆவிருந்து+அனம எனப பிரிதததல வேணடுமெ அங்ஙனம பிரிதததல கூடாமை அறிக. இரு, கிட எனனும வினைகள் எஙஙனம நிகழகாலததை அமைகக பயனபடடனவோ, அஙஙனமே நில எனனும வினையும பயனபடட தெனக.

இனி, செயினென்ன எனபதிலுள்ள இனறு எனனும இடைநிலையும் ன்னு எனபது பேல ஒரு காலததில இறநதகால வினையசசமாயிருநததே கிறறல=ஆறறுதல, செயதல; கில பகுதி- ''கிறபன கிலலென'' (தில, திருவாய. 3, 2, 8). ''கிறறல'' (சிலப, 16, 183), கிறபு=செயகை.

நிகழ்காலத்திற்கு உரித்தென்ற கில்லென்பது, உண்ணுநிற்கும், உண்ணு நிற்பல் என வெதிர்காலத்தும், வந்ததாலெனின் :—அற்றன்று : 'பண்டொரு நாள் இசசேரலக்கண விளையாடாநின்றேன் அந்நேரத தொரு தோன்றல் வந்தான்' என்றவழி, அஃதிறந்தகாலத்து நிகழ்வுபற்றி வந்தாற்போல ஆண் டெதிர்காலத்து நிகழ்வுபற்றி வருதலான், ஆணடும் அது நிகழ்காலத்திற் றீர்ந்தின் றென்க.

அவை எதிர்காலம்பற்றி வருங்கால் பகரமும் வகரமும் பெற்று வரும். வகரமேற்புழிக் குகரமும் உகரமும் அடுத்து நிற்கும்.

எ-டு : உரைப்பம், செல்வம்; உணகுவம், உரிஞுவம் என வரும்.

ஒழிந்த வீற்றோடுமொட்டிக்கொள்க. பாடுகம், செல்கம என வற்புழிச சிறுபான்மை ககரவொற்றுப் பெறுதலுங கொள்க.

உடமொடு வரூஉங கடதற—உணகும, உண்டும, வருதும, சேறும என வரும். உரிஞுதும், திருமுதும என வற்புழி உகரம் பெற்று வரும்.

கும்மீறு, வினை கொணடு முடிதலின், ஒழிந்த உடமீற்றின் வேறெனவே படும். டகர றவென்பன, எதிர்காலத்திற்குரிய எழுத்தன்மையால், பாலுணர்த் தும இடைச்சொற்கு உறுப்பாய வந்தன வெனவே படும். படவே, அவற்றை உறுப்பாகவுடைய ஈறு மூன்றும்; அதனுள் உம்மென ஓரீறுக வடக்க லாகாமையின், அஃதாற்கிளவியொ டென்றார். (கூ)

தன்மை யொருமை வினைமுற்று

உ0கூ. கடதற வென்னு
மந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ
டென்னே னல்லெ னவ்வு மேழுந்
தன்வினை புரைக்குந் தன்மைச் சொல்லே.

இ-ள் : கடதறவென்னு நான்கு மெய்யை ஊர்ந்து வருங் குற்றிய லுகரத்தை ஈறாகவுடைய சொல்லும், என் ஏன் அல் லென்னு மீற்றவாகிய சொல்லுமென அவ்வேழும், ஒருமையுணர்த் துந் தன்மைச்சொல்லாம்; எ-று.

குற்றுகரநான்கும், அல்லும், எதிர்காலம்பற்றி வரும். குற்றுகரம், கால வெழுத்துப் பெறுங்கால், உடமீற்றே டொக்கும். அல்லீறு பகரமும் வகரமும் பெற்று வரும். என் ஏன் என்பன மூன்று காலமும் பற்றி வரும.

எ-டு : உணகு, உண்டு, வருது, சேறு எனவும்; உரிஞுகு, திருமுகு எனவும்; உணடனென், உணணுநின்றனென், உணகுவென் எனவும்; உண் டேன், உண்ணுநின்றேன், உண்பேன் எனவும்; உண்பல், வருவல் எனவும் வரும்.

காலவெழுததடுத்தற்கண எம்மீற்றோடு என்னீறும், எமீற்றோடு எனீறு மொக்கும். ஆண்டுக் கூறிய விகற்பமெல்லாம் அறிந்தொட்டிக் கொள்க.

குற்றியலுகரமென ஒன்றுகாது நான்காதிற்கு முன்னுரைததாங குரைக்க.

எதிர்காலம்பற்றி வழக்குப்பயிற்சியு மில்லாக் குற்றுகரத்தை, அஃகனம் வரும் அல்லோடு பின் வையாது, மூன்று காலமும்பற்றிப் பயின்று வரும் என் என் என்பனவற்றின் முன் உம்மீற்றேடியையை வைத்தது, செய்கென்பது போலச செய்குமென்பதூஉங் காண்கும் வந்தேம், என வினைகொண்டு முடியு மென்ப தறிவித்தற்கெனக் கொள்க. (சு)

செய்கு என்னும் வாய்ப்பாட்டு விளை

உ0ச. அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினு
மவ்வியல் திரியா தென்மனார் புலவர்.

இ - ள் : மேற்கூறப்பட்ட ஒருமைத் தன்மை வினை யேழனுள், செய்கென்னுஞ் சொல் வினையொடு முடியுமாயினும், முற்றுச் சொல்லா தலிற் றிரியாது; எ - று.

உ-டு : காண்கு வந்தேன் என வரும்.

செய்கென்கிளவி யவ்வியல் திரியாதெனவே, 'பெயர்த்தனென் முயங்க யான்' (குறல்-அச) என்பும், 'தகுகினே சென்மோ' (புறம்-நஉ0) எனவும், 'மோயின ளுயிர்த்த காலை' (அகம்-நு) எனவும் வினைமுற்றுசசொல் வினை கொள்ளுங்கால் அவ்வியல் திரியு மென்பதாம. அவை திரிந்தவழி வினையெச்ச மாதல் 'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' (சொல்-சருள) என்பழிப் பெறப்படும்.

இருசாரனவும் பெயரெச்சளாது வினை கொண்டவழிச செய்கென் கிளவி திரியாதென்றும வேறாய திரியுமென்றும கூறிய கருத் தென்னை யெனின் :—உண்டு சொன்னுய: காணகு வந்தேன் என்றவழிச செய்கென் கிளவி வினையெசசமாய்த் திரிந்ததாயிற் செயதெனெசசமாதற் கேலாமையின், செயவெனெச்சமாயத திரிந்ததலல் வேண்டும். வேணடாவே, செயவெனெச சத்திற்குரிய வினைமுதல் வினையும பிறவினையும அது கொள்வான் செல்லும்; வினைமுதல் வினையல்லது கொள்ளாமையிற் செயவெனெசசமாய்த் திரிந்த தென்றல் பொருந்தாது. பிறிதாறின்மையின், முற்றுசசொல்லாய் நின்ற தெனவே படும். அதனுன் அவ்வியல் திரியாதென்ற ரென்பது. அல்லதூஉம, செய்கென்கிளவி சிறுபான்மை யல்லது பெயர்கொள்ளாமையின், பெரும் பான்மையாகிய வினைகோடல் அதற்கியல்பேயாம்; ஆகவே, அது திரிந்து வினைகொள்ளு மெனல் வேண்டாவாம்; அதனுலும முற்றாய் நின்று வினை கொண்ட தென்றலே முறைமையென் றுணாக.

'முற்றுச் சொற்கும் வினையொடு முடியினு
முற்றுச்சொ லென்னு முறைமையி னிறவா'

என்ரூர் பிறருமெனக் கொள்க.

'பெயர்த்தனென்முயங்க' (குறு-அச) என்னும் தொடக்கத்தன இறந்த காலமுணர்த்தலிற் செய்தெனெசசமாதற் கேற்புடைமையான், அவற்றைத் திரிபென்ரூர.

முன்னர் 'எத்திறத் தானும் பெயர்முடி பினவே' என்பதனுற் பெய ரொடு முடிதலெய்துவதனை விலக்கியவாறு. (எ)

படர்க்கை யொருமை வினைமுற்று

உ0ரு. அன் ஆன் அள் ஆ ளென்னு நான்கு
மொருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

தன்மைவினை யுணர்த்தி, இனி யுயர்திணைப் படர்க்கைவினை யுணர்த்து கின்றார்.

இ - ள்: அன், ஆன், அள், ஆள் என்னு மீற்றையுடைய நான்குசொல்லும் உயர்திணை யொருமை யுணர்த்தும் படர்க்கைச் செல்லாம்; எ - று.

இவை நான்கிலும் மூன்றுகாலமுமபற்றி வரும்.

எ - டு: உண்டனன், உண்ணுகின்றனன், உண்பன் எனவும்; உண்டான், உணாணுகின்றான், உண்பான் எனவும்; உண்டனள், உண்ணுகின்றனள், உண்பள் எனவும்; உண்டாள், உண்ணுகின்றாள், உண்பாள் எனவும் வரும்.

காலத்துக் கேற்ற எழுத்துப்பெறுங்கால், அன்னும் அள்ளும் அம்மீற் றாகும், ஆனும் ஆளும ஆமீற்றோடு மொக்கும். அவ் வேறுபாடெல்லாமறிந் தொட்டிக்கொள்க. (அ)

படர்க்கைப் பன்மை வினைமுற்று

உ0கூ. அர்ஆர் பஎன வருஉ மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இ - ள்: அர் ஆர் ப என்னுமீற்றையுடையவாய் வருமூன்று சொல்லும் பல்லோரையுணர்த்தும் படர்க்கைச்சொல்லாம்;எ - று.

ரகாரவீறு இரண்டும் மூன்றுகாலமும் பற்றி வரும்; பகாரம எதிர்காலம் பற்றி வரும.

எ - டு: உண்டனர, உணாணுகின்றனர், உண்பர் எனவும; உண்டார், உண்ணுகின்றார், உண்பார் எனவும்; உணப எனவும் வரும்.

அன் னீற்றிற்குரிய காலவெழுத்து அர் ஈற்றிற்கும், ஆனீற்றிற்குரிய காலவெழுத்து ஆரீற்றிற்கு மூரிய.

பகரம உகரம்பெற்றும் பெறாதும், உரிஞுப, உண்ப என வரும. வருகுப எனச் சிறுபான்மை குகரமும் பெறும். இவ்வேற்பாடு எற்புழியறிந் தொட்டிக் கொள்க. (கூ)

செய்மார் என்னும் வாய்பாட்டுவினை

உ0எ. மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியு மென்ப.

இ - ள்: மூன்னியனவேயன்றி மாரீற்றுச் சொல்லும் பல்லோர் படர்க்கையை யுணர்த்தும்; அஃது அவைபோலப் பெயர் கொள்ளாது வினைகொண்டு முடியும்; எ - று.

பகரத்திற்குரிய காலவெழுத்து மாரைக் கிளவிக்கு மொக்கும.

எ - டு : எள்ளுமார் வந்தார், கொண்மார் வந்தார் என வரும். குகரம் வந்தவழிக் கண்டுகொள்க.

மாரைக்கிளவி வினையோடல்லது பெயரொடு முடியாமையின், எச்ச மாய்த் திரிந்து வினைகொண்ட தெனப்படாமை யறிக. அஃதேதல்,

'பீடின்று பெருகிய கிருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே' (புறம்-கூஎடு)

எனவும்,

'காமம் படரட வருந்திய
நோய்மலி வருத்தங காணன்மா ரெமரே' (நற்-சுச)

எனவும் மாரீற்றுச்சொற் பெயர் கொண்டு வந்தனவாலெனின் :—அவை பாடு வார் காண்பார் என்னும் ஆரீற்று முற்றுசசொல்லின் எதிர்மறையாய ஒரு மொழிப்புணர்ச்சியான் மகரம் பெற்று நின்றன. மாரீறுயின், அவை பாடா தொழிவார், காணாதொழிவ ர் என எவற்பொருண்மை யுணர்த்துமாறில்லை யென்க. (கo)

உயர்திணைக் குரிய வினைமுற்றுக்கள்

உoஅ. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வந்நா லைந்து மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த வுயர்திணை யவ்வே.

இ - ள் : பன்மையும் ஒருமையுமாகிய பாலுணரவந்த இருபத்து மூன்றிற்று வினைச்சொல்லும் முன்னுறக் கிளக்கப்பட்ட உயர் திணையுடையன; எ - று.

ஈண்டுக் கூறிய படாக்கைவினையே கிளவியாக்கத்துட் கூறப்பட்டன, அவை வேறல்லவென்பார், முன்னுறக் கிளந்தவென்றார். அதனாற் பயன், அன் ஆன் அள் ஆளென்பன ஆணபால் பெண்பாலுணர்த்துதல் ஈண்டுப் பெறு தலும், னஃகானொற்று முதலாயின படர்க்கைவினைக் கீறுகளின்று பாலுணர்த்து தல் ஆண்டுப் பெறுதலுமாம். அஃதேதல், முற்றுப்பெற வரிடத்துக் கூறவமையும் வரிடத்துக் கூறிப் பயந்ததென்னையெனின் :—பாலுணர்த்தும் இடைச்சொற் பற்றி உயர்திணைப் படாக்கைவினை யுணர்த்துதல் ஈண்டுக் கூறியதனாற் பயன் ; ஆண்டுக் கூறியதனாற் பயன் வழுச்காத்தற்கு இவற்றைத் தொகுத்திலக்கண வழக்குணர்த்துதலாமென்க. பெயரியல் நோக்கிப் 'பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்' என்றாற் போல, வினையியல் நோக்கி 'வினையிற் றோன்றும் பாலறி கிளவியு, மயங்கல் கூடா' என வமையும், ஆண்டுக் கூறல்வேண்டாவெனின்:— அற்றன்று : இருதிணை யைம்பாற்சொ லுணர்த்தாக்கால் திணைபால்பற்றி வழுவற்கவெனவும் வழீஇயமைகவெனவும் வழுக்காத்த சூத்திரங்களெல்லா வற்றானும் பொரு ளினிது விளங்காமையானும் வினையுள்ளுந் திரிபின்றிப் பால் விளக்குதற்கிறப்புடையன படர்க்கைவினையே யாகலானும், அவற்றைப் பிரித்து ஆண்டுக் கூறினரென்பது. படர்க்கைப் பெயரினுந் திரிபின்றிப் பாலுணர்த்தாமையின், இலக்கணவெழுத்தோடு கூறாது, எதிரது நோக்கிக் கொள்ளவைத்தா ரென்க.

மூன்று தலையிட்ட வல்லாலகத்துமாவன இவை யென இனிது விளங்கப் 'பன்மையு மொருமையும் பாலறி வந்த' என்றார்.

இதனாற் பயன், உயர்திணைவினை மூன்றுதலையிட்ட நாலகத்தென்னும் வரையறை. (கக)

தன்மைப் பன்மை வினைக்கு ஒரு வேறுபாடு

உ0கூ. அவற்றுள்
பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி
யெண்ணியல் மருங்கிற் றிரிபவை யுளவே.

இ-ள்: கூறப்பட்ட இருபத்துமூன்று சொற்களுள், பன்மை யுணர்த்துந் தன்மைச்சொல் எண்ணியலும் வழி அஃறிணையை யுளப்படுத்துத் திரிவனவுள; எ-று.

எ-டு: 'யாணுமென் னஃகுஞ் சாறும்' எனவரும்.

தன்மைப்பன்மை வினைச்சொல், உயர்திணை வினையாகலின், உயர் திணையே உளப்படுத்தற்பாலன; அஃறிணையை உளப்படுத்தல் வழுவாயினும் அமைகவென்பார், திரிபவை யுளவென்றார். அதனால் இசூத்திரத்தை 'முன்னுறக்கிளந்த வுயர்திணை யவ்வே' (சொல்-உ0அ) என்னும் சூத்திரத்தின் பின் வைத்தார்.

திரியுமென்னுது திரிபவையுளவென்றதனால், எல்லாத் திரியா சிலவே திரிவன வென்பதாம் (கஉ)

யார் என்னும் குறிப்பு முற்று

உ-கூ0. யாஅ ரென்னும் வினாவின் கிளவி
யஃறிணை மருங்கின் முப்பாற்கு முரித்தே.

இ-ள்: யாரென்னும் வினாப்பொருளை யுணர்த்துஞ்சொல் உயர்திணை மருங்கின முப்பாற்கு மூரித்து; எ-று.

எ-டு: அவன் யார், அவள் யார், அவர் யார் என வரும.

'ஊதைகூட் டுண்ணு முதுபகரி யாமதெதக
கோதைகூட் டுண்ணிய தாம்யாமன்—பேரதெல்லாங
தாதொடு தாழுந்தார்த் தசசி வளாஅடன்
றூதொடு வாராத வண்டு'

என்புழி, வண்டுதான் யார் என, யாரென்பது அஃறிணைக்கண்ணும் வந்ததா லெனின்:—அது திணைவழுவமைதி யெனப்படும்.

இது வினைக்குறிப்பாயினும, பல்லோர் படக்கை யுணர்த்தும ஆரிற்றின் மூன்றுபா லுணர்த்தும் வேறுபாடுடைமையின், அவற்றொடு வையாது ஈண்டு வைத்தார்.

செயவு ளின்பநோக்கி அளபெழுந்து நின்றது.

வினாவின் கிளவியென அதன்பொரு ளுணர்த்தியவாறு. (கஉ)

வினை முற்றுக்களின் ஈறுகளிற் சில திரியுமாறு

உகக. **பாலறி மரபி னம்மூ வீற்று**
மாவோ வாகுஞ் செய்யு ளுள்ளே.

இ - ள் : பால் விளங்க வருமியல்பையுடைய அம்மூன்றீற்றின்கண்ணும் ஆகாரம் ஓகாரமாகுஞ் செய்யுளிடத்து ; எ - று.

பாலறிமரபினென்றதனால், பாலுணர்த்துதற்கண் திரிபுடைய ஆகாரம் விலக்குண்ணும். மார் சிறுவழக்கிற் முகலாணும், மாகாரம் ஓகாரமாதற் மேலாமையானும், அம்மூவீறுவன ஆன் ஆள் ஆர் என்பனவேயாம.

எ - டு : 'வினவிநிற்றந்தோனே' (அகம்-உசஅ) 'நல்லே மல்லெனை நகூஉப்பெயர்ந் தோளே' (அகம்-உசஅ) 'பாசிலை, வாடா வள்ளியங் காடிறந் தோரே' (குறுந்-உகசு) என ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்தவாறு கண்டுகொள்க.

வந்தோம், சென்றேம் என வழக்கினுள் வருவனவோ வெனின் :— அவை எமீற்றின் சிதைவென மறுக்க. (கசு)

உகஉ. **ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்.**

இ - ள் : முன்னிலையீற்றுள், ஆயென்னுமீறு மேற்கூறப்பட்டன போல ஆகாரம் ஓகாரமாஞ் செய்யுளுள் ; எ - று.

எ - டு : 'வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப' (அகம்-அ0) என வரும்.

கூறப்பட்ட ஈன்கீற்றுத் தொழிற்பெயரும் ஆகாரம் ஓகாரமாதல் பெயரியலுட் கொள்ளப்படும்.

ஆயென்கிளவி ஆவோவாவது பெரும்பான்மையும் உயர்திணைக்கண் வந்த வழி யென்பதறிவித்தற்கு, முன்னிலை யதிகாரத்துக் கூறாது ஈண்டுக் கூறினார்.

அவற்றொடு கொள்ளுமென்றது அவற்றோ டொக்கு மென்றவாறு. (கஇ)

குறிப்பு வினை முற்று

உகங. **அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானுங்**
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானு
மொப்பி னானும் பண்பி னானு
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்.

இ - ள் : ஆறும் வேற்றுமையது உடைமைப் பொருட்கண்ணும், ஏழாம் வேற்றுமையது நிலப்பொருட்கண்ணும், ஒப்பின்கண்ணும் பண்பின்கண்ணுமென அப்பகுதிக்காலங் குறிப்பாற் றோன்றும் ; எ - று.

அப்பகுதிக்காலமாவது அப்பொருட்பகுதிபற்றி வருஞ் சொல்லகத்துக் காலமாம்.

அப்பகுதிக்காலங் குறிப்பாற் றோன்றுமெனவே, அப்பொருள் பற்றி வினைக்குறிப்பு வருமென்றவாறும்.

உடையானது உடைமைத்தன்மையேயன்றி உடைப்பொருளும் உடைமையெனப் படுதலின் உடைமையானு மென்பதற்கு உடைப்பொருட் கண்ணுமெனவு முரைக்க. உரைக்கவே, உடைப்பொருட்கண் வருங்கால், உடைப்பொருட் சொல்லாகிய முதனிலைபற்றி வருதலும் பெறப்படும். கருமையெனபது உடைமைப் பொருளாயடங்கலின், பண்பிலுனும் என் புழிக் கரியனென இன்ன னென்பதுபட வருதலே கொள்க. வாளாது உடைமையானும் என்றவழி 'அன்மையின்' (சொல்-உகச) என்பதுபோல அவ்வொருவாய்பாடேபற்றி நிற்கும். இதனை இஃதுடைத் தென்பதுபட வரும் எல்லா வாய்பாடுந் தழுவுதற்கு 'அதுச் சொல் வேற்றுமை யுடைமை யானு' மென்றார். 'கண்ணென் வேற்றுமை நிலத்திலுனு' மென்பதற்கும் ஈதொக்கும். ஆயின் இஃதிரண்டாம் வேற்றுமைப் பொருளாயெனின் :— ஆண்டுடைமை உருபு நோக்கிய சொல்லாய் வருவதல்லது இரண்டாம் வேற்றுமைப் பொருளனப்படாது. என்னை ? அது செயப்படு பொருண் மைத்தாகலின். அதனுன் உடைமை ஆறுவதன்பொருளெனவே படுமென் பது.

எ - டு : கச்சினன் கழலினன் எனவும், இல்லத்தன் புறத்தன் எனவும், பொன்னன்னன் புலிபோல்வன் எனவும், கரியன் செய்யன் எனவும் வரும்.

கச்சினுன், இல்லத்தான் எனப் பெயருங் குறிப்பாற் காலம் விளக்கலின் அப்பாற் காலங்குறிப்பொடு தோன்று மென்றதனுன் வினைக்குறிப்பென்பது பெறுமாறென்னை யெனின் :— 'தொழினிலை யொட்டு மொன்றலங் கடை' (சொல் - எ0) எனத் தொழிற்பெயரல்லன காலந்தோன்று வென்றலுமையால், கச்சினுன் இல்லத்தா னென்பன காலம் விளக்காமையின், குறிப்பாற் காலம் - விளக்குவன வினைக்குறிப்பாதல் பெறுதும். அல்லதூஉம், வினைக் குறிப்பும் காலந்தோன்றுதலே இலக்கணமாகவுடைய வினைச்சொல்லேயாத லின், தெற்றென விளக்காவாயினுங் காலமுடையவெனவே படும். பெயர்க்கு அன்னதோ ரிலக்கணமின்மையின், காலந் தெற்றென விளக்குவனவுளவேற் கொள்வதல்லது, காலம் விளக்காத பெயருங் காலமுடையவென உய்த் துணருமாறில்லை. அதனுனுங் குறிப்பாற் கால முணர்த்துவன வினைக் குறிப்பே யென்பது பெறப்படு மென்க.

தன்னினமுடித்த லென்பதனுன், ஐயாட்டையன், துணங்கையன் எனச் சிறுபான்மை காலமும் வினைசெய்யிடமும் பற்றி வருவனவுங் கொள்க. (கசு)

உகச. அன்மையி னின்மையி னுண்மையின் வன்மையி
னன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளு
மென்ன கிளவியுங் குறிப்பே காலம்.

இ - ள் : அன்மை இன்மை உண்மை வன்மை யென்னும் பொருள் பற்றி வருவனவும், அவை போல்வன பிறவும், குறிப்புப் பொருண்மையோடு பொருந்தும் எல்லாச் சொல்லுங் காலங் குறிப்பா னுணரப்படும் ; எ - று.

காலங் குறிப்பா னுணரப்படுமெனவே, இவையும் வினைக்குறிப்பா மென்றவாறும்.

ஏ - டு: அல்லன், அல்லள், அல்லர் எனவும்; இலன், இலள், இலர் எனவும்; உளன், உளள், உளர் எனவும்; வல்லன், வல்லள், வல்லர் எனவும் வரும்.

பொதுப்படக் கூறியவதனால், பொருளிலன், பொருளிலள், பொருளிலர் என உடைமைக்கு மறுதலையாகிய இன்மையும் கொள்ளப்படும்.

இவை ஒரு வாய்பாடேபற்றிப் பிறத்தலின், வேறு கூறினார்.

பண்போடு இவற்றிடை வேற்றுமை யென்னையெனின்:— இன்மை, பொருட்கு மறுதலையாகலின, பொருளின்கட் கிடக்கும். பண்பெனப்படாது. அன்மையும் உளமையும் பண்புப்பற்று மிறுதலிற் பண்பெனப்படா. என்னை? குணத்திற்குக் குணமின்மையின். வன்மை — ஆற்றல்; அதுவுங் குணத்திற்கும் உண்டாகலிற் குணமெனப்படாது. ஈதெறனின், அது பண்பாயடங்கும். அதனாற் பொருட்கட் கிடந்து தனக்கோர் குணமின்றித் தொழிலின் வேறுய குணத்தின் அன்மை முதலாயின வேறெனப்படும். பண்பெனினுங் குணமெனினு மொக்கும். இக் கருத்தேபற்றி யன்றே, ஆசிரியர் இன்மையும் உண்மையு முன்னாத்திஞ் சொற்களே முடிப்பாராயிற் றென்பது.

என்னகிளவியுமென்றது அன்னபிறவு மெனப்பட்டவற்றையேயாகக் கொள்க.

குறிப்பேகாலம் என்றவழிக் குறிப்பென்றது குறிக்கப்படுவதனை.

அன்னபிறவுமென்றதனால், கல்லன், கல்லள், கல்லர்; தீயன், தீயள், தீயர்; உடையன், உடையள், உடையர், என வித் தொடக்கத்தனவெல்லாங் கொள்க. (கள)

குறிப்பு வினைமுற்றின் ஈறு

உகரு. **பன்மையு மொருமையும் பாலறி வந்த**
வன்ன மரபிற் குறிப்பொடு வருஉங்
காலக் கிளவி யுயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

இ - ள்: பன்மையும் ஒருமையுமாகிய பால் விளக்கிக் குறிப்புப் பொருண்மையுடையவாய் வரும வினைச்சொல், மேல்வரு முயர்திணைக்கட் கூறிய தெரிநிலைவினையோ டொக்கும்; எ - று.

தெரிநிலைவினையோ டொத்தலாவது, உயர்திணைத் தெரிநிலைவினைக் கோதிய ஈற்றுள் தமக்கேற்பனவற்றோடு வினைக்குறிப்பு வந்தவழி, அவ்வவ் வீற்றுன் அவ்வப்பாலும் இடமும் விளக்கலாம.

மேல் வினைக்குறிப்பு இன்னபொருள்பற்றி வருமென்றதல்லது இன்ன வீற்றுன் இன்னபால் விளக்குமென்றிலர்; அதனால் அஃ தீண்டுக் கூறினார்.

கூறப்பட்ட பொருட்கண வந்தனவாயினும, இல்லை, இல், இன்றி என்பன பால் விளக்காமையின், அவற்றை நீக்குதற்குப் 'பன்மையு மொருமையும் பாலறி வந்த' வென்றார்.

ஒருபொருட்கட் பலவாய்பாடும் ஒருபொருட்கண் ஒருவாய்பாடும் பற்றி வரும் இருதிறமும் எஞ்சாமற் றழுவுதற்கு, 'அன்னமரபின்' என்றார்.

தன்மையும் படர்க்கையும் உணர்த்துந் தெரிநிலைவினை யீற்றுட் குறிப்பு வினைக்கேற்பன :—அம், ஆம், எம், ஏம், என், ஏன் என்னுந் தன்மையீறுமும், அன், ஆன், அள், ஆள், அர், ஆர் என்னும் படர்க்கையீறுமும் எனப் பன்னிரண்டாம்.

ஏ - டு : கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியென், கரியேன் எனவும் ; கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார் எனவும் அவ்வவ் வீறு அவ்வவ் விடமும் பாலும் விளக்கியவாறு கணடுகொள்க. ஒழிந்தபொருட் கண்ணு மொட்டிக்கொள்க.

ஆன், ஆள், ஆர் என்பன நிலப்பொருணமைக்கண் அல்லது பிறபொருட் கட் பயின்று வாரா.

இன்னும், மேலைக் கிளவியொடு வேறுபாடில வென்றதனான், வந்தனன் எனத் தெரிநிலைவினை தொழின்மை மேற்படத் தொழிலுடைப்பொருள் கீழ்ப் பட முற்றாய் நின்றுணர்தியவாறு போல, உடையன் எனக் குறிப்புவினையும் உடைமை மேற்பட உடையான் கீழ்ப்பட முற்றாய் நின்றுணர்த்துவுங் கொள்க. வந்தான், உடையான் எனப் பெயராயவழித் தொழிலுடைப் பொருளும் உடையானும் மேற்பட்டுத்தோன்றுமா றறிக. இஃது 'அஃறிணை மருங்கின், மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே' (சொல்-உஉக) என்ப தற்கு மொக்கும். (கஅ)

கூ. அஃறிணை வினை

பன்மை வினைமுற்று

உகசு. அஆ வளன வருஉ மிறுதி
யப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

உயர்திணைவினை யுணர்த்தி, இனி யஃறிணைவினை யுணர்த்துகின்றார்.

இ - ள் : அகரமும் ஆகாரமும் வகர வுயிர்மெய்யு மாகிய ஈற்றையுடைய அக்கூற்று மூன்றும் அஃறிணைப் பன்மைப் படர்க்கையாம் ; ஏ - று.

அகரம் மூன்றுகாலமும்பற்றி வரும். ஆகாரம், எதிர்மறைவினையாய் மூன்றுகாலத்திற்கும் உரித்தாயினும், எதிர்காலத்துப் பயின்று வரும். அகரம், இறந்தகாலம்பற்றி வருங்கால், கடதறவென்னு நான்கன்மூன், அன் பெற்றும், பெறுதும் வரும். ஏனை யெழுத்தின்முன் ரகார ழகார மொழித்து இன் பெற்று வரும். யகரத்தின்முன் சிறுபான்மை இன்னேயன்றி அன்பெற்றும் பெறுதும் வரும். நிகழ்காலத்தின்கண் நில், கின்றென்பனவற்றோடு அன்பெற் றும் பெறுதும் வரும். எதிர்காலத்தின்கண் பகர வகரத்தோடு அன் பெற்றும் பெறுதும் வரும்.

ஏ - டு : தொக்கன தொக்க, உண்டன உண்ட, வந்தன வந்த, சென்றன சென்ற எனவும்; அஞ்சின எனவும்; போயின போயன போய எனவும்; உண்ணு நின்றன உண்ணுகின்ற, உண்கின்றன உண்கின்ற எனவும் ; உண்பன உண்ட

வருவன் வருவ எனவும் வரும். உரிஞுவன உரிஞுவ என உகரத்தோடு வினை யெழுத்துப்பேறும் ஏற்றவழிக் கொள்க.

வருவ, செல்வ என்னுந் தொடக்கத்தன அகரவீறுதலும், வகரவீறுதலு முடைய வென்பது இளவியாக்கத்துட் கூறினும்.

ஆகாரம் காலவெழுத்துப் பெறுது, உண்ணு, தின்னு என வரும். வகரம், உண்குவ, தின்குவ, என வெதிர்காலத்திற் குரித்தாய்க் குகரமடுத்தும், ஓடுவ, பாடுவ எனக் குகரமடாதும் வரும். உரிஞுவ, திருமுவ என உகரம் பெறுதலும் ஏற்றவழிக் கொள்க. ஒழிந்தவெழுத்தோடும் ஒட்டிக்கொள்க. (கங)

ஒருமை வினைமுற்று

உகள. ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

இ - ள் : ஒன்றனை யுணர்த்தும் படர்க்கைவினையாவது, தறட வென்பனவற்றை ஊர்ந்து நின்ற குற்றியலுகரத்தை ஈறாகவுடைய சொல்லாம்; எ - று.

தகரவுகரம் மூன்றுகாலத்திற்குமுரித்து. றகரவுகரம் இறந்தகாலத்திற் குரித்து. டகரவுகரம் மூன்றுகாலத்திற்குமுரிய வினைக்குறிப்பிற்கல்லது வாராது. அஃதேல், வினைக்குறிப்புக் கூறும்வழிக் கூறுது ஈண்டுக் கூறிய தென்னையெனின் :—'அஃறினை மருங்கின் மேலைக்கிளவியொடு வேறுபா டிலவே' (சொல்-உஉக) என வினைக்குறிப்புப் பாலுணர்த்துமாறு தெரிகிலே வினையோடு மாட்டெறியப் படுமாகலின், டகரமூர்ந்த குற்றியலுகரம் தெரிகிலே வினைக் குறுகாமையின், மாட்டேற்று வகையாற் பாலுணர்த்துதல் பெறப்படா தாம்; அதனான் ஈண்டு மவைததா.

தகரவுகரம், இறந்தகாலத்து வருங்கால், புக்கது, உண்டது, வந்தது, சென்றது, போயது, உரிஞியது எனக் கடதறவும் யகரமுமாகிய உயிர்மெய்ப்பின் வரும். போனது என னகர உயிர்மெய்ப்பின் வருவதோ வெனின் :—அது சான்றோர் செய்யுளுள் வாராமையின், அது சிதைவெனப் படும். நிகழ்காலத்தின்கண், நடவாநின்றது, நடக்கின்றது; உண்ணாநின்றது, உண்கின்றது என, நில், கின்றென்பனவற்றோடு அகரம் பெற்று வரும். எதிர்காலத்தின்கண், உண்பது, செல்வது எனப் பகரவகரம் பெற்று வரும்.

றகரவுகரம், புக்கன்று, உணடன்று, வந்தன்று, சென்றன்று எனக் கடதறவென்பனவற்றின்முன் அன்பெற்று வரும். கூயின்று, கூயிற்று; போயின்று, போயிற்று என ஏனையெழுத்தின்முன் இன் பெற்று வரும். ஆண்டு இன்னின் னகரந் திரிந்தும் திரியாதும் வருதல் கொள்க. வந்தின் றென்பதோவெனின் :—அஃது எதிர்மறுத்தலே யுணர்த்துதற்கு வந்த இல்லி னது லகரம் னகரமாய்த் திரிந்த எதிர்மறைவினையென மறுக்க. அஃ தெதிர் மறையாதல், வந்தில, வந்திலன், வந்திலள், வந்திலர் என வரும் ஏனைப் பாற் சொல்லா னறிக.

டகரவுகரம் குண்டுகட்டு, குறுந்தாட்டு, என வரும்[1]. (உ0)

அஃறிணைக்குரிய பன்மை வினைமுற்றுக்கள்

உகஅ. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வம்மூ விரண்டு மஃறிணை யவ்வே.

இ - ள்: பன்மையும் ஒருமையுமாகிய பாலறிய வந்த அவ்வாறீற்றுச்சொல்லும் அஃறிணையனவாம்; எ - று.

பன்மையு மொருமையும் பாலறிவந்தவென்பதற்கு முன்னுரைத்தாங் குரைக்க.

இதனாற் பயன், அஃறிணைச்சொல ஆறே பிறிதில்லையென வரையறுத்த லெனக் கொள்க. (உக)

'எவன்' என்னும் குறிப்புமுற்று

உகக. அத்திணை மருங்கி னிருபாற் கிளவிக்கு
மொக்கு மென்ப வெவனென் வினாவே.

இ - ள்: எவனென்னும் வினாச்சொல் மேற்கூறப்பட்ட அஃறிணை யிரண்டுபாற்கும உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர்; எ - று.

எ - டு: அஃதெவன், அவையெவன என வரும.

னகரவீறாய் இரண்டுபாற்கும் பொதுவாய் வருதலின், இதனை வேறு கூறினர். அஃதேல் நுமக்கிவன் எவனும எனப யர்த்திணைக்கண்ணும வருமாலனின் :—ஆண்டு அது முறைபற்றி நிற்றலின், அஃறிணைக்கண் வந்த தெனவேபடு மென்பது: அஃதேல், நுமக்கிவனென்னமுறையனும் என்பதல்லது என்ன முறையாம் என்பது பொருந்தாதெனின் :—என்னமுறை என்பது ஆண்டு முறைமேனில்லாது ஒற்றுமைபற்றித்தான் முறையுடையான்மேனிற்றலின், அமையு மென்க. எவனென்பதோபெயரும் உண்டு; அஃதிக் காலத்து என்னென்றும் என்னையென்றும் நிற்கும், ஈண்டுக் கூறப்பட்டது வினைக்குறிப்புமுற் றென்க. (உஉ)

குறிப்பு வினைமுற்று

உஉ0. இன்றில வுடைய வென்னுங் கிளவியு
மன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியு முளவென் கிளவியும்
பண்பி னுகிய சினைமுதற் கிளவியு
மொப்பொடு வருஉங் கிளவியொடு தொகைஇ
யப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்.

---

1 ஒன்றன்பால் விகுதி உணமையில் 'து' ஒன்றே 'று' 'டு' எனபன அதன் புணர்ச்சித் திரிபே. புக்கு + அன் + து = புகன்று, பால + து = பாறறு; குண்டு + கண + து = குண்டுகட்டு. குறுந்தாள + து = குறுந்தாடடு. 'து' விடுதி 'அது' என்பதன் குறுகலமாம.

இ - ள் : இன்று இலவென்பன முதலாகிய பத்தும் வினைக் குறிப்புச் சொல்லாம்; எ - று.

அவற்றுள், இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, உள என் பன தம்மையுணர்த்தி நின்றன. அல்லன பொருளுணர்த்தி நின்றன.

எ - டு : இன்று, இல, கோடுடைத்து, கோடுடைய, அதுவன்று, அவை யல்ல, உள என வரும். ஈண்டும், கோடின்று, கோடில என உடைமைக்கு மறுதலையாய இன்மைபற்றி வருவனவுங் கொள்க.

உடையவென்பது முதலாயவற்றைச் செய்யுளின்ப நோக்கி மயங்கக் கூறினார்.

அவ்வேழனையும் பொருள்பற்றியோதாராயினார்; இளந்தோதியலழியுஞ் சூத்திரஞ் சுருங்குமாகலானென்பது.

உளதென்பது பெருவழக்கிற் றன்மையின், உளவென்பதே கூறினார். அது தன்னினமுடித்தலென்பதனாற் கொள்ளப்படும்.

பண்புகொள்கிளவி—கரிது, சரிய ; செயது, செய்ய என வரும்.

பண்பினுகிய சினைமுதற்கிளவி— நெடுஞ்செவித்து, நெடுஞ்செவிய என வரும். பண்பதுத சினைபற்றியல்லது அவ்வினைக்குறிப்பு நில்லாமையின், பண்பினுகியவெனப் பண்பை முதனிலையாகக கூறினார். பெருந்தோளன் என உயர்திணைக்கண்ணும பண்படுதது வருதல் ஒன்றெனமுடித்தலென்பத னாற் கொள்க. வேற்றுமைப்பொருள்பற்றி வருங்கால், பிறிதின்கிழமையும் உறுப்பின்கிழமையல்லாத தற்கிழமையும் விழாமவேற்றுமைப் பொருண்மையும் பற்றி அஃறிணைவினைக்குறிப்புப் பயின்று வாராமையின், சினைக்கிழமையே கூறினார். அப்பொருள்பற்றிப் பயிலாது வருவன உரையிற் கோடலென்பத னாற்கொள்ளப்படும். 'சிறப்புடைப பொருளோத தானினிது கிளத்தல்' என்பதனாற் கொள்ளினு மமையும.

'அறிந்த மாக்கட் டாகுக தில்ல' (அகம் ४७) 'மெல்லிரன் மன்னி குறை கூறுஞ் செம்மற்றே' (கலி-சுo) எனவும், 'அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே' (புறம்-களக) எனவும் வரும. 'வடாது' 'தெனாது (புறம்-சு) என்பனவும் ஏழாம் வேற்றுமைப் பொருண்மைக்கண வந்த வினைக்குறிப்பு; பெயருமாம்.

ஒப்பொடு வருஉங கிளவி—பொன்னன்னது, பொன்னன்ன என வரும். ஒப்பொடு வருதலாவது பொருள்பற்றி வருதல்.

வழக்குப்பயிற்சி நோக்கிப் பத்தென வரையறுத்தவாறு. (உக)

குறிப்புவினைமுற்றின் மரபு

உஉக. **பன்மையு மொருமையும் பாலறி வந்த**
வன்ன மரபிற் குறிப்பொடு வருஉங்
காலைக் கிளவி யஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

இ - ள்: பன்மையும் ஒருமையுமாகிய பால் விளக்கிக் குறிப்புப் பொருள்பற்றி வரும் வினைச்சொல் மேற்கூறப்பட்ட அஃறிணை வினையோடொக்கும்; எ - று.

வாய்பாபெற்றியும் பொருள்பற்றியும் கூறிய இருவகையும் எஞ்சாமற் றழுவுதற்கு 'அன்னமரபின்' என்றார்.

ஒத்தலாவது, அஃறிணை வினைக்கோதிய ஈற்றுட் பொருந்துவன வினைக் குறிப்பின்கண் வருங்காலும், அவ்வவ் வீற்றுன் அவ்வவ் விடமுங் காலமும் விளக்குதல்.

பொருந்துவனவாவன, ஆகாரமும் வகாரமுமொழித்துக் குற்றுகர மூன்றும் அகரமுமாம். அவற்றுட் டகாரமூர்ந்த குற்றுகரம் 'ஒன்றன் படர்க்கை' (சொல்-உக்க) என்புழிக் கூறுதலான், ஒழிந்தமூன்றும் ஈண்டுக் கொள்ளப்படும். அவை அப்பால் விளக்குதல் மேற்காட்டப்பட்டனவற்றுட் கண்டு கொள்க. (உச)

ச. வினை வினை

பெயர், முறை, தொகை

உஉஉ. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
யின்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யுஞ் செய்த வென்னு
மம்முறை நின்ற வாயெண் கிளவியும்
திரிபுவேறு படூஉஞ் செய்திய வாகி
யிருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமைய.

இ - ள்: முன்னிலை முதலாகச் செய்தவென்ப தீறுகக் கூறிய முறையானின்ற எட்டுச் சொல்லும், பொதுமையிற் பிரிந்து ஒருகால் உயர்திணையுணர்த்தியும், ஒருகால் அஃறிணையுணர்த்தியும், வேறுபடுந் தொழிலையுடையவாய், இருதிணைச் சொல்லாதற்கும் ஒத்தவுரிமைய; எ - று.

முன்னிலை வினைச்சொல்லாவது எதிர்முகமாய் நின்றுன் தொழிலுணர்த்துவது.

வியங்கோள் எவற்பொருட்டாய் வருவது. வாழ்த்துதன் முதலாகிய பிறபொருளுமுடைத்தாகலின், இக்குறி மிருதிநோக்கிச் சென்ற குறியெனவுணர்க.

வினையெஞ்சுகிளவி வினையை யொழிபாகவுடைய வினை.

இன்மை செப்பல் இல்லை, இல் என்பன.

வேறென்பது தன்னை யுணர்த்தி நின்றது.

செய்ம்மனவென்பது மனவீற்று மூற்றாய் எதிர்கால முணர்த்தும். செய்யுமென்பது மூற்றும் எச்சமுமாகிய இருநிலைமையுமுடைத்தாய் உம்மீற்றுன் நிகழ்காலமுணர்த்தும். செய்தவென்பது அகரவீற்றெச்சமாய் இறந்தகால முணர்த்தும்.

செய்ம்மன முதலாகிய மூன்றுவாய்பாட்டானும், அவ்வீற்றவாய்க் கால முணர்த்தும் உண்மன, உண்ணும், உண்ட என்னுந் தொடக்கத்தன வெல்லாந் தழுவப்பட்டன. அவற்றுள் அவை தழுவப்பட்டவா றென்னையெனின் :— எல்லாத் தொழிலும் செய்தல்வேறுபாடாகலின், பொதுவாகிய செய்தல் எல்லாத்தொழிலையும் அகப்படுத்து நிற்கும்; அதனால் அவற்றுள் அவை தழுவப்படு மென்க. அவை பொதுவுஞ் சிறப்பு மல்லவேல், என் செய்யா நின்றுள் என்று வினாயவழி, உண்ணுநின்றுள் எனச் செப்புதல் இயையாதா மென்க. இது செய்து செய்பு என்பனவற்றிற்கு மொக்கும்.

அஃதேல், சிலவற்றை ஈற்றோடுணர்த்திச சிலவற்றை வாய்பாட்டா னுணர்த்திய தென்னையெனின் :— அம்மீறும் அன்னீறும் ஐயீறும் முதலாகிய சொற்கள் காலப்பன்மையான் வரும் வாயபாட்டுப் பன்மையாற் சூத்திரம் பெருகு மென்றஞ்சி, அவற்றை ஈற்றோடுணர்த்திக் காலவேறுபாடு இலேசாற் கொள்ள வைத்தார். காலப்பன்மையில்லனவற்றை வாய்பாட்டானு முணர்த் துப, ஈற்றோடு முணர்த்துப.

முற்றுதலும் பலவாய்பாட்டாற் பயின்று வருதலு முடைமையான், முன்னிலைவினையை முன் வைத்தார். எவற்பொருண்மை முன்னிலைவினைக் கண்ணு மூண்மையிற் பொருளியையுடைத்தாகலானும், இடங்குறித்து முற் றாய் வருதலொப்புமையானும், அதன்பின் வியங்கோள் வைத்தார். அதன்பின், முற்றுதலொப்புமையான் இன்மைசெப்பல் வேறென்கிளவி செய்ம்மன வென் பனவற்றை வைத்தன் முறைமையாயினும், முற்றின்கண் வினையெச்ச முண்மையானும், ஈற்றுப்பன்மையொடு பயின்று வருதலானும், வினை யெச்சம் வைத்தார். இன்மைபற்றி வரும் வினையெச்சமு முண்மையான், அதனோடியைய இன்மைசெப்பல் வைத்தார். வினைக்குறிப்பாத லொப்புமை யானும், செய்ம்மனவிற் பயிற்சியுடைமையானும், அதன்பின் வேறென்கிளவி வைத்தார். முற்றுதலொப்புமையான், அதன்பின், செய்ம்மன வைத்த தார். முற்றுநிலைமையுமுடைத்தாகலின், அதன்பின் செய்யுமென்பது வைத்தார். பெயரெச்சமாதலொப்புமையான், அதன்பின் செய்தவென்பது வைத்தார். இவ்வா றியைபுபற்றி வைத்தமையான், 'அம்முறை நின்ற' வென்றார்.

திரிபுவேறுபடூஉஞ் செய்தியவாகி யெனவே, வேறுவே றுணர்த்தினல்லது ஒரு சொற் சொல்லுதற்கண இருதிணையு முணர்த்தாமை பெறுதும். (உ0)

முன்னிலை யொருமை வினைமுற்று

உஉங. **அவற்றுள்**
மூன்னிலைக் கிளவி
இ ஐ ஆயென வருஉ மூன்று
மொப்பத் தோன்று மொருவர்க்கு மொன்றற்கும்.

இ - ள்: கூறப்பட்ட விரவுவினைகளுள், முன்னிலைச்சொல், இகரவீறும் ஐகாரவீறும் ஆயீறுமாகிய மூன்றும் ஒருவற்கும் ஒருத்திக்கும்ஒன்றற்கும் ஒப்பச்செல்லும்; எ - று.

முன்னிலைக்கிளவி யென்பதற்கு முடிபு 'அவைதாம் அம்மா மெம்மேம்' (சொல்-உ0உ) என்புழி 'அவைதாம்' என்பதற் குரைத்தாங் குரைக்க.

இகரம் தடற ஊர்ந்து எதிர்காலம் பற்றி வரும். ஐகாரம் அம்மீற்றிற் குரிய எழுத்துப்பெற்றும், ஆயீறு ஆமீற்றிற் குரிய எழுத்துப்பெற்றும், மூன்றுகாலமும் பற்றி வரும்.

எ - டு :—உரைத்தி, உண்டி, தின்றி எனவும்; உண்டனை, உண்ணு நின்றனை, உண்பை எனவும்; உண்டாய், உண்ணுநின்றாய், உண்பாய் எனவும் வரும். ஒழிந்தவெழுத்தோடு மொட்டிக்கொள்க. 'ஐயசிறிதென்னோடுக்கி' (குறிஞ்சிக்கலி-க) என இகரம் சிறுபான்மை ககரம்பெற்று வரும்.

உண், தின், நட, இட என்னுந் தொடக்கத்து முன்னிலை ஒருமை பெறுமாறென்னையெனின் :—அவை ஆயீறுதல் எச்சவியலுட் பெறப்படு மென்க. (உசு)

முன்னிலைப் பன்மை வினைமுற்று

உஉச. இர் ஈர் மின்னென வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற் றிறுதி
சொல்லோ ரனைய வென்மனார் புலவர்.

இ - ள் : இர், ஈர், மின்னென்னும் ஈற்றையுடைய மூன்று சொல்லும், பல்லோர்கண்ணும் பலவற்றின்கண்ணுஞ் சொல்லு தற்கண், ஒத்தவுரிமைய ; எ - று.

இர் ஈறு அர் ஈற்றிற்குரிய எழுதத்துப் பெற்றும, ஈறு ஆர்ற்றிற்குரிய எழுத்துப் பெற்றும், மூன்றுகாலமும்பற்றி வரும். மின்னீறு பிறவெழுத்துப் பெறாது, எற்றவழி உகரம் பெற்று, எதிர்காலம் பற்றி வரும்.

எ - டு : உண்டனிர், உண்ணுநின்றனிர், உண்பிர எனவும்; உண்டீர் உண்ணுநின்றீர், உணகுவீர் எனவும்; உண்மின், தின்மின், உரிஞுமின் எனவும் வரும். ஒழிந்த வெழுத்தோடு மொட்டிக்கொள்க.

முன்னிலைவினைக்குறிப்பு, உயர்திணைவினைக்குறிப்பிற் கோதிய பொருள் பற்றி ஐகாரமும் ஆயும் இருவும் ஈருமென்னு நான்கீற்றவாய், கழலினை, நாட்டை, பொன்னனனை, கரியை எனவும் ; கழலினை, நாட்டாய், பொன்னனனை, காரியாய் எனவும் ; கழலினிர், நாட்டினிர், பொன்னனனிர், காரியிர் எனவும் ; கழலினீர், நாட்டினீர், பொன்னனனீர், காரியீர் எனவும் வரும். ஒழிந்தபொருளோடு மொட்டிக்கொள்க. போறி என இகரவீற்று வினைக்குறிப்புமுண்டாலெனின் :—போன்றனன், போன்றான் என் பனபோல வந்து தொரிநிலை வினையாய் நின்றதென மறுக்க.

அஃறிணை வினைக்குறிப்பும் உயர்திணை வினைக்குறிப்பிற் கோதிய பொருள்பற்றி வருதலின், அவற்றை யெடுத்தோதிற் றென்னையெனின்:— அன்மை முதலாயின பொருள் பற்றி வந்தனவெனக் கிளந்தோதலாஞ் சுருக்கத் தன வன்மையானும், சினைமுதற்கிளவி பண்புமடித்து வருதல் உயர்திணை யதி காரத்துப் பெறப்படாமையானும் அவற்றை யோதுவார் எனைப் பொருளு மூடனேஞ்சினர்.

முன்னிலை வினைக்குறிப்புப் பலவாதலானும், எடுத்தோதாவழிப் படுவ தோர் குறைபாடின்மையானும், இவற்றை யுய்த்துணர வைத்தா ரென்பது. அல்லது, எடுத்தோத்தில்வழி உய்த்துணர்வதெனினு மமையும்.

முன்னிலைவினையிற்முன் எதிர்காலம்பற்றி வரும் இகரத்தையும் மின்னை யும் முதலும் இறுதியும் வைத்து, மூன்று காலமும்பற்றி வரும் நான்கீற்றையுந் தம்முளியைய இடை வைத்தார். அல்லது, பொருண்மை கருதாது சூத்திர யாப்பிற்கேற்ப வைத்தா ரெனினு மமையும். (உஎ)

ஏன வினைகள்

உஉடு. எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி
யைம்பாற்கு முரிய தோன்ற லாறே.

இ - ள்: முன்னிலைவினை யொழித்து ஒழிந்த ஏழுவினைச் சொல்லும் மூன்றிடத்திறகும் ஐந்துபாற்கு முரிய, தத்தம் பொருட் கண் தோன்றுமிடத்து; எ - று.

இவ்வாறு பொதுவகையான் எல்லாவிடததோடும் எல்லாப்பாற்கும் உரிய வாதலெய்தினவெனினும, முன்னர் விலக்கப்படுவன வொழிதது ஒழிந்த விட மும பாலும் பற்றி வருமாறு ஈண்டுக் காட்டப்படும்.

எ - டு: அவன் செல்க, அவள் செல்க, அவா செல்க, அது செல்க, அவை செல்க எனவும்; உழுது வந்தேன், உழுது வந்தேம், உழுது வந்தாய், உழுது வந்தீர், உழுது வந்தான், உழுது வந்தாள், உழுது வந்தார், உழுது வந்தது, உழுது வந்தன எனவும்; யானில்லை, யாமில்லை, நீயில்லை, நீயிரில்லை, அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அதுவில்லை, அவையில்லை எனவும்; யான் வேறு, யாம் வேறு, நீ வேறு, நீயிர் வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவா வேறு, அது வேறு, அவை வேறு எனவும்; யானுண்மன, யாமுண்மன; நீயுண்மன, நீயிருண்மன, அவனுண்மன, அவளுண்மன, அவருண்மன, அது வுண்மன, அவையுண்மன எனவும்; யானுண்ணுமூண், யாமுண்ணுமூண, நீயுண்ணுமூண், நீயிருண்ணுமூண், அவனுண்ணுமூண், அவளுண்ணுமூண், அவருண்ணுமூண், அதுவுண்ணுமூண், அவையுண்ணுமூண் எனவும்; அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும் எனவும்; யானுண்டவூண், யாமுண்டவூண், நீயுண்டவூண, நீயிருண்டவூண், அவனுண்டவூண், அவளுண்ட வூண, அவருண்டவூண், அதுவுண்டவூண், அவையுண்டவூண எனவும் வரும். (உஅ)

வியங்கோள் வினை

உஉசு. அவற்றுள்
முன்னிலை தன்மை யாயிரி டத்தொடு
மன்னு தாகும் வியங்கோட் கிளவி.

இ - ள்: மேல் 'எஞ்சியகிளவி' (சொல்-உஉடு) எனப்பட்ட ஏழனுள், வியங்கோட்கிளவி, முன்னிலையும் தன்மையுமாகிய இரண்டிடத்தோடு நிலைபெறுதாம்; எ - று.

ஆயீரிடத்தொடு கொள்ளாதென்ஞது மன்ஞதாகு மென்றதனான், அவ் விடத்தொடு சிறுபான்மை வருதல் கொள்க. மன்னுதல் பெரும்பான்மையும் நிகழ்தல். சிறுபான்மை வருவன, நீ வாழ்க என்னும் வாழ்த்துதற்பொருண் மைக்கண்ணும், யானுநின்ஞெடுடனுறைக என்னும் வேண்டிக்கோடற் பொருண்மைக்கண்ணும் வருவனவாம். 'கடாவுக பாகநின் கால்வ னெடுந்தேர்' என்பதும் வேண்டிக்கோடற்பொருண்மைக்கண் வந்ததாம்.

தன்மைக்கண் ஏவலில்லை, முன்னிலைக்கண் ஏவல் வருவதுண்டேற் கண்டுகொள்க

அஃதேல், வியங்கோளீறு கூறுராயிற் றென்னையெனின்:—எழுத் தோத்தினுள் 'ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்' (எழு-உக0) என அகரவீற்றுள் எடுத்தலாற் பொருந்திய மெய்யூர்ந்து அகரவீறாய் வருதலும், 'செப்பும் விளவும் வழாஅ லோம்பல்' (சொல்-கஉ) எனவும், 'சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்' (சொல்-சகஉ) எனவும், 'மறைச்குங் காலை மரீஇய தொராஅல்' (சொல்-சசஉ) எனவும், உடம்பொடுபுணர்த்தலான் அல் லீறாய் வருதலும் ஆலீறாய் வருதலும் பெறுதலின், வியங்கோளீறுங் கூறினு ரெனவே படும். பிறவு மூளவேற் கொள்க: (உக)

செய்யும் என்னும் வினை

உஉஎ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா.

இ - ள்: பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையு மாகிய அவ்வயின் மூன்றும், நிகழ்காலத்து வருஞ் செய்யுமென் னுஞ் சொல்லோடு, பொருந்தா ; எ - று.

அவ்வயினென்றது, இடமும பாலுமாகிய எஞ்சிய கிளவிக்குரிய பொருட் கண் என்றவாறு.

நிகழுங்காலத்துச செய்யுமென்னுங கிளவியொடென அதனுற் றேன்னுங் கால முணர்த்தியவாறு.

இவையிரண்டு சூத்திரமும் பொதுவகையா னெய்தியனவற்றை விலக்கி நின்றன. (உ0)

வினையெச்ச வாய்பாடுகள்

உஉஅ. செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
வவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி.

பொதுவகையா னெய்தியவற்றுள், வியங்கோட்கிளவிக்குஞ் செய்யுமென் னுங கிளவிக்கும் எய்தாதன விலக்கி, இனி நிறுத்தமுறையானே வினையெச் சத்தினது பாகுபாடுணர்த்துகின்றார்.

இ - ள்: செய்தென்பது முதலாகச் சொல்லப்பட்ட ஒன்ப தும் வினையெச்சமாம் ; எ - று.

அவ்வகையொன்பது மென்றது இறுதி நின்ற இடைச்சொல்லான் வேறுபட்ட ஒன்பது மென்றவாறு. அவ் விடைச்சொல்லாவன உகரமும், ஊகாரமும், புகரமும் எனவும், இயரும், இயவும், இன்னும், அகரமும், குகரமுமாம்.[1]

'செய்கென் கிளவி வினையொடு முடியினும்' (சொல் உ0ச) எனவும், 'செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல்' (சொல்-சஙo) எனவும், இறுதி யிடைச்சொ லேற்றவாற்றுற் பிரித்துணர வாய்பா டோதினுற்போல, ஏற்ற வாற்றுன் இறுதியிடைச்சொற் பிரித்துணர்ந்துகொள்ள ஈண்டும் வாய்பாடு பற்றி யோதினர்.

உகரம், கடதறவூர்ந்து இயல்பாயும், எனையெழுத்தூர்ந்து இகரமாய்த் திரிந்தும், நெடிலீற்றுமுதனிலைமுன்னர் யகரம் வரத் தான் கெட்டும், இறந்த காலம்பற்றி வரும். இவ் வுகரவீறு இகரமாதலும், யகரம் வரக் கெடுதலும் 'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' (சொல்-சஙிஎ) என்பதனுற் பெறப்படும்.

எ - டு: உக்கு, உண்டு, வந்து, சென்று எனவும்; எஞ்சி, உரிஞ், ஓடி எனவும்; ஆய், போய் எனவும் வரும். சினைஇ, உரைஇ, இரீஇ, உடீஇ, பராஅய், தூஉய், தாஅய் என்பனவோவெனின்:—அவை செய்யுண்முடி பென்க. ஆகி, போகி, ஓடி, மலர்த்தி, ஆற்றி என்புழி, முதனிலை குற்றுகரவீ றுதலின், எனை யெழுத்தாத லறிக.

கடதறவென்பன குற்றுகரத்தோடு வருமிடமும் தனி மெய்யாய் வருமிட முந் தெரிந் துணர்க.

அஃதேல், ஆய் என்பதனை யகரவீறென்றும், ஓடி யென்பதனை இகரவீ றென்றுங் கொள்ளாது, உகரவீறென்ற தென்னையெனின்:—நன்று சொன் னாய்: இகரவிறுதி இடைச்சொல்லாயின், இறுதியிடைச்சொல் எல்லாத் தொழிலும் பற்றி வருதலிற் செலவு வரவென்பனவற்றோடும் வரல்வேண்டும். இனிச் செய்தெனெச்சத்துகரமும் இறுதியிடைச்சொல் லாதலின் ஆகுதல் ஓடுதலென்னுந் தொழில் பற்றியும் வரல்வேண்டும். செலவு வரவுபற்றி இகரம் வாராமையானும், ஆகுதல் ஓடுதல் பற்றி உகரம் வாராமையானும், இறுதி யிடைச்சொல் இகரமேயாக உகரமேயாக ஒன்றுவதல்லது இரண்டெனப்படா தாம். உகரம் ஒன்றுய் நின்று கடதற வூர்ந்த விதிவினைக்கட் பயின்று வருத லானும், எதிர்மறை யெசுசமெல்லாம் பெரும்பான்மையும் உகரவீறுயல்லது வாராமையானும், உகரம் இயல்பாக இகரம் அதன் றிரிபென்றலே முறைமை யென்க. யகரவீற்றிற்கும் இஃதொக்கும்.

1செயதுசெயதென செயற்கு என்னும் வினையெச்சங்களின் விகுதிகள் 'உகர'மும்'என' வும் 'குகர'மும் எனக கொளவது பொருந்தாது. இவறறைத துகரமும துவ வொடெனவும அல்லொடு குகரமும் எனக கொள்வதே பொருதும.

இறுதியிடைசசொல - விகுதி.

உக்கு, உண்கு, வநது, சென்று எனபவறறில உகரம் கடதறவூர்நது இயல்பாயிற்று; எஞ்சி, உரிஞ், ஓடி என்பவறறில எனையெழுத்தூாநது இகரமாயத திரிநதது; ஆய போய என்பவறறில நெடிலீறறு முதனிலை முன்னர் யகரம்வரத தான் கெட்டது என்பது சேனவரையா கருத்து.

ஊகாரம் உண்ணூவந்தான், தின்னூவந்தான் எனப் பின்வருந் தொழிற்கு இடையின்றி முன்வருந் தொழின்மேல் இறந்தகாலம்பற்றி வரும். அஃது உண்ணு என ஆகாரமாயும் வரும்.

பகரவுகரம் நகுபு வந்தான் என நிகழ்காலம்பற்றி வரும். நகாநின்று வந்தான் என்றவாறு. ஈண்டு நிகழ்காலமென்றது முடிக்குஞ்சொல்லா னுணர்த்தப்படுந்தொழிற்குத் தன் முதனிலைத் தொழில் காரணமென்பதுபட வரும்.

அ - டு: சோலைபுக்கென வெப்பநீங்கிற்று; உணடெனப் பசி கெட்டது; உரைத்தென உணர்ந்தான்; மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று என வரும். எஞ்சியென எனவும், உரிஞ்யென எனவும், ஏனையெழுத்தோடும் வருமாறறிந் தொட்டிக்கொள்க.

இயர், இய என்பன, எதிர்காலம்பற்றி, உணணியர், தின்னியர்; உண்ணிய, தின்னிய என வரும். போகியர், போகிய என ஏற்றவழிக் ககரம் பெற்று வருதலுங் கொள்க.

இன் எதிர்காலம்பற்றிக் காரணப்பொருட்டாய் வரும்.

எ - டு: மழைபெயயிற் குளநிறையும்; மெய்யுணரின் வீடெளிதாம் என வரும். நடப்பின், உரைப்பின் என ஏற்றவழிப் பகரம் பெற்று வருதலுங் கொள்க.

அகரம், மழை பெய்யக் குளநிறைந்தது; ஞாயிறு பட வந்தான்; உண்ண வந்தான் என மூன்று காலமும் பற்றி வரும். உரைப்ப, உரைக்க என ஏற்ற வழிப் பகரமுங் ககரமும் பெறுதல் கொள்க.

குகரம் உணற்கு வந்தான்; தினற்கு வந்தான் என வெதிர்காலம் பற்றி வரும்.

புகரமும் குகரமும் உகரத்தின்கண்ணும், எனவும இயவும் அகரத்தின் கண்ணும், அடங்குமெனின்:—ஆசிற்றின் மார் அடங்காமைக்கு உரைத்தாங் குரைக்க.

செயற்கென்னும் வினையெச்சம் நான்கனுருபேற்று நின்ற தொழிற் பெயரின் வேறுதல் கிளவியாக்கத்துட் கூறினும்.[1]

நிரியாது நிற்கும் ஊகாரமும், புகரமும், எனவும், இயரும், இயவுமென் னும் ஐந்தீற்றுவினையெச்சமும் வழக்கினுள் இக்காலத்து வாராவாயினும், சான் றோர் செய்யுளுள் அவற்றது வாய்பாட்டு வேற்றுமை யெல்லாங் கண்டு கொள்க. (நக)

1 செயறகென்னும வினையெச்சம் நான்கனுருபேறறு நினற தொழிறபெயரின் வேறென்று சேனவரையர கூறினும், அதை நான்கும் வேறறுமைத தொழிற பெயரே எச்சபபொருள்பட வநததாகக கூறுவது பொருநதும.

உஉகூ. பின்முன் கால்கடை வழியிடத் தென்னு
மன்ன மர்பிற் காலங் கண்ணிய
வென்ன கிளவியு மவற்றியல் பினவே.

இ - ள்: பின்னும், முன்னும், காலும், கடையும், வழியும் இடத்தும் என்னுமீற்றவாய் வருவனவும், அவைபோலக் காலங் கண்ணி வருவன பிறவும், வினையெச்சமாம்; எ - று.

எ - டு: நீயிர் பொய் கூறியபின் மெய் கூறுவார் யார் எனவும், நீ யிவ் வாறு கூறுகின்றபின் உரைப்பதுண்டோ எனவும், பின் இறப்பும் நிகழ்வும் பற்றியும், மருந்து தின்னுமுன் நோய் தீர்ந்தது என முன் இறந்தகாலம் பற்றி யும் 'வலஞக வினையென்று வணங்குநாம் விடுத்தக்கால்' எனவும், 'அகன்றவர் நிறத்தினி நாடுங்கால்' எனவும், காலீறு மூன்று காலமும் பற்றியும், 'தொடர் கூரத் தூவாமை வந்தக்கடை' எனக் கடையீறு இறந்தகாலம்பற்றியும், உரைத்தவழி, உரைக்கும்வழி, உரைத்தவிடத்து, உரைக்குமிடத்து என வழியென்னுமீறும் இடத்தென்னுமீறும் மூன்றுகாலமும் பற்றியும் வரும். கால், வழி, இடத்தென்பனவற்றின் நிகழ்காலத்து வாய்பாடு எதிர்காலத்திற்கு மேற்ற லறிக.

கூதிர் போயபின் வந்தான் எனவும், நின்றவிடத்து நின்றான் எனவும், பின் முதலாயின பெயரெச்சத்தோடும் வந்தவழி, இறப்பு முதலாகிய காலங் கண்ணுமையின், அவற்றை நீக்குதற்குக் 'காலங்கண்ணிய' வென்றார்.

காலவேறுபாட்டான் வரும் வாய்பாட்டுப் பன்மையெல்லாம் ஒரு வாய் பாட்டாற் றழுவலாகாமையின், இவற்றை ஈறுபற்றி யோதினார்.

அன்ன மரபிற் காலங கண்ணிய வென்ன கிளவியு மென்றதனான், உண்பாக்கு, வேபாக்கு என வரும் பாக்கீறும், உண்பான் வருவான் என்னும் ஆனீறும், 'நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே' (குறிஞ்சிக்கலி-கூ) என்னும் உம்மீறும், 'அற்று லளவறிந் தூண்க' (குறள்-கூசஉ) என்னும் ஆலீறும், எதிர்மறைபற்றிக் 'கூறுமற் குறித்ததன் மேற்செல்லும்' (கலி-க) என வரும் மல்லீறும், 'கூறுமை நோக்கிக் குறிப்பறிவான்' (குறள்-எ0க) என்னும் மகர வைகார வீறுங கொள்க.

என்னகிளவியு மென்றதனான், இன்றி, அன்றி, அல்லது, அல்லால் என வருங் குறிப்புவினையெச்சமுங கொள்க. பிறவுமன்ன. (கூஉ)

அவற்றுள் முதல்மூன்று வாய்பாடுகள்

உகூ0. அவற்றுள்
முதனிலை மூன்றும் வினைமுதற் முடிபின.

இ - ள்: மேற்சொல்லப்பட்ட பதினைந்து வினையெச்சத்துள், முதற்கணின்ற செய்து, செய்யு, செய்பு என்னு மூன்றும், தம்வினை முதல்வினையான் முடியும்; எ - று.

எ - டு: உண்டுவந்தான், உண்ணூவந்தான், உண்குபு வந்தான் என வும்; கற்று வல்லனெயினன், கல்லூ வல்லனெயினன், கற்குபு வல்லனெயினன் எனவும் வரும்.

'உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய யாஅவிரி நிழற்றுஞ்சும்' (குறுந்-உகஉ) எனச் செய்தெனெச்சம் வினைமுதல் வினையல்லா வினையான் முடிந்ததா லெனின் :—அது 'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' (சொல்-சஙிஎ) என்புழிப் பெறப்படும்.

இது முன்னர்

'வினையெஞ்சு கிளவிக்கு வினையுங குறிப்பு
நினையத் தோன்றிய முடிபா கும்மே' (சொல்-சாகஉ)

எனப் பொதுவகையான் முடிவனவற்றை எதிரது நோக்கி இவை மூன்றும வினைமுதன் முடிபினவென நியமித்தவாறு. அஃதேல், இதனையும் ஆண்டே கூறுகவெனின் ;— ஆண்டுச் செய்து செய்யூச் செய்பு என்னு மூன்றுமெனக் கிளந்தோதுவதல்லது, முதனிலை மூன்றுமெனத் தொகுத்தோதலாகாமை யானும், ஈண்டு இயைபுடைத் தாகலானும், ஆண்டுக் கூறுது ஈண்டுக் கூறினு ரென்பது. (நாக)

உகக. அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய வென்மனார் புலவர்.

இ - ள் : வினைமுதன் முடிபினவாகிய அம் மூன்றுசொல்லும், சினைவினை நின்று சினைவினையோடு முடியாது முதல்வினையோடு முடியினும், வினையா லெனுதன்மைய ; எ - று.

வினையா லெனுதன்மைய வென்றது, முதல்வினையோடு முடியினும் முதலொடு சினைக்கொற்றுமையுண்மையாற் பிறவினைகொண்டனவாகா, வினை முதல்வினை கொண்டனவேயா மென்றவாறு.

எ - டு : கையிற்று வீழ்ந்தான், கையிறா வீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான் என வரும்.

'உரற்கால் யானை யொடித்துண டெஞ்சிய' என்புழிப்போலக் கையிற் றென்னுஞ் செய்தெனெச்சம் கையிறவெனச் செயவெனெச்சப் பொருட்டாய் நின்றதென வமையும், இச்சூத்திரம் வேண்டாவெனின் :—அற்றன்று : வினை முதல்வினை கொள்ளாதவழியன்றே அது பிறபொருட்டாயது ; வினைமுதல் வினை கொண்டு தன்பொருளே யுணர்த்துவதனைப் பிறபொருண்மே னின்ற தென்றல் பொருந்தாமையான், அது கடாவன் றென்க. (நாச)

வாய்பாடுகள்

உகஉ. ஏனை யெச்சம் வினைமுத லானு
மான்வந் தியையும் வினைநிலை யானும்
தாமியன் மருங்கின் முடியு மென்ப.

இ - ள் : முதனிலை மூன்றுமல்லாத பிற வினையெச்சம், வினை முதல் வினையானும், ஆண்டு வந்து பொருந்தும் பிறவினையானும், வரையறையின்றித் தாமியலுமாற்றான் முடியும் ; எ - று.

எ - டு : மழை பெய்தெனப் புகழ் பெற்றது, மழை பெய்தென மரங் குழைந்தது எனவும்; மழை பெய்யிய ரெழுந்தது, மழை பெய்யியர் பலி கொடுத்தார் எனவும்; மழை பெய்யிய முழங்கும், மழைபெய்யிய வான் பழிச் சுதும் எனவும்; மழை பெய்யிற் புகழ்பெறும், மழை பெய்யிற் குளநிறையும் எனவும்; மழை பெய்யப் புகழ் பெற்றது, மழை பெய்ய மரங்குழைந்தது எனவும்; மழை பெய்தற்கு முழங்கும், மழை பெய்தற்குக் கடவுள் வாழ்த் துதும் எனவும்; இறந்தபின் னிளமை வாராது, கணவன் இனிதுண்டபின் காதலிமுக மலர்ந்தது எனவும் அவை வினைமுதல் வினையும் பிறவினையுங் கொண்டவாறு கண்டுகொள்க. அல்லனவும் இருவகை வினையுங்கோடல் வழக்கினுட் கண்டுகொள்க.

வரையறையின்றி இருவகை வினையுங்கோடலின் 'வினையுங் குறிப்பு, நினையத் தோன்றிய முடிபா கும்மே' (சொல்—சூசுஉ) என்னும் பொதுவிதி யான் முடிவனவற்றை ஈண்டுக் கூறல்வேண்டாவெனின், வினையெச்சங்களுள் ஒருசார ன வினைமுதல்வினை கொள்ளுமென்றதனான், எனையெச்சம் பிற வினையே கொள்ளுமோ இருவகை வினையுங் கொள்ளுமோ என்றையமாம்; அதனான், ஐயநீங்க இவ்வாறு கூறல்வேண்டு மென்பது.

அஃதேல், வினையொடு முடிதல் ஈண்டுக் கூறப்பட்டமையின் எச்சவிய லுள் 'குறிப்பு முடிபாகும்' என வமையும், வினையுமெனல் வேண்டா வெனின் :—குறிப்புமென்னு மும்மையாற் றழுவப்படுவது சேய்த்தாகலிற் றெற்றென விளக்காமையானும், வினைமுதலென்பது பெயர்க்கும் வினைக்கும் பொதுவாகலானும், வினையுமெனல் வேண்டுமென்பது. (கூடு)

வினையெச்சங்கள் அடுக்கி முடிதல்

உகூ. பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினு
முன்னது முடிய முடியுமன் பொருளே.

இ - ள் : ஒரு வாய்பாட்டானும் மற்றப் பல வாய்பாட்டா னும் வினையெஞ்சுகிளவி அச்சொற்கண்முறையான் முடியாது அடுக்கிவரினும், முன்னின்றவெச்சம் முடிய ஏனையவும் பொருண் முடிந்தனவாம்; எ - று.

எ - டு : உண்டு தின்றோடிப் பாடி வந்தான் எனவும், உண்டு பருகூத் தின்குபு வந்தான் எனவும் வரும்.

முன்னது முடிய முடியுமென்றாயினும், உண்டு தின்று மழை பெய்யக் குளநிறையும் என்றவழி, முன்னதன்றொழிலான் ஏனைய முடியாமையின், பன் முறையான் அடுக்குங்கான் முன்னதன் றொழிலான் முடிதற்கேற்பனவே கொள்க.

சொன்முறை முடியாமையாவது தம்மொடு தாமும் பிறசொல்லு முடியாமை.

உண்டு வந்தான்; தின்று வந்தான் எனச் சொற்றொறும் வினையினை தன் மரபு. அங்ஙனநில்லாது தம்முளியையில்லன அடுக்கிவந்து இறுதி

வினையெச்சத்திற்கு முடிபாகிய சொல்லான் எல்லாம் முடியினும் இழுக்கா தென அமைத்தவாறு.

வினையெச்சம் பன்முறையானு மடுக்கி ஒரு சொல்லான் முடியுமெனவே, பெயரெச்சம் ஒருமுறையா னடுக்கி ஒருசொல்லான் முடியு மென்பதாம்.

'நெல்லரியுமிருந்தொழுவர்' (புறம்-உசு) என்னும் **புறத்தொகைப்** பாட்டினுள் 'தென்கடற் றிரைமிசைப் பாயுந்து' எனவும், 'தண்குரவைச்சீர் தூங்குந்து' எனவும், 'எல்வளை மகளிர் தலைக்கை தருஉந்து' எனவும், 'முந்நீர்ப் பாயும்' எனவும் செய்யுமென்னும் பெயரெச்சமடுக்கி 'ஓம்பா வீகை மாவே ளெவ்வி புனலம் புதவின் மிழலை' என்னும் ஒருபொருள்கொண்டு முடிந்த வாறு கண்டுகொள்க. ஆங்குத 'தாங்கா வுறையு ணெல்லூர் கெழீஇய' என்னும் பெயரெச்சம் இடைநிலையாய் வந்தது. பிறவு மன்ன. (கசு)

பெயரெச்ச வாய்பாடுகள்

உஙசு. நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட
வவ்வவ் வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே.

வினையெச்சமுணர்த்தி, இனிப் பெயரெச்சமுணர்த்துகின்றார்.

இ - ள்: செய்யும், செய்த என்னுஞ் சொற்கள், தொழின் முதனிலை யெட்டனுள் இன்னதற்கு இது பயனாக என்னும் இரண்டொழித்து ஏனை யாறுபொருட்கும் ஒத்த வுரிமைய; எ - று.

இவற்றிற் கொத்தவுரிமை யெனவே, ஒழிந்த விரண்டற்கும் இவற்றோடொப்ப வுரியவாகா, சிறுபான்மை யுரிய வென்றவாறும்.

எ - டு: வாழுமில், கற்குநூல், துயிலுங்காலம், வினையுங்கோல், ஓதும் பார்ப்பான், உண்ணுமூண எனச் செய்யுமென்னும் பெயரெச்சத்து உம்மீறு காலவெழுத்துப் பெறுது ஆறுபொருட்கு மூரித்தாய் வந்தவாறு. புக்கவில், உண்டசோறு, வந்த நாள், வென்ற வேல், ஆடிய கூத்தன், போயின போக்கு எனச் செய்தவென்னும் பெயரெசசத் திறுதியகரம் கடதறவும் யகர னகரமும் ஊர்ந்து அப்பொருட்குரித்தாய் வந்தவாறு. நோய் தீருமருந்து, நோய் தீர்ந்த மருந்து என்னு மேதுப் பொருண்மை கருவிக்க ணடங்கும். அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான், ஆ கொடுத்த பார்ப்பான் எனவும்; ஆடை யொலிக்குங கூலி, ஆடையொலித்த கூலி எனவும்; ஏனை யிரண்டற்குஞ் சிறுபான்மை யுரியவாய் வந்தவாறு.

எல்லைப்பொருள் பஃறொழில்பற்றி வருஞ் சிறப்பின்றாகலிற் றொழின் முதலொடு கூறுது 'இன்மை யுடைமை நாற்றக் கீர்தல்' (சொல்-எஅ) என்னும் பொருண்மையாற் றழீஇக்கொண்டாராகலின், பழமுதிருங்கோடு, பழமுதிர்ந்தகோடு எனச் சிறுபான்மை எல்லைப்பொருட் குரியவாதலுங் கொள்க.

'நின்மூகங் காணு மருந்தினே னென்னுமால்' (குறிஞ்சிக்கலி-உச) என்புழிக் காட்சியை மருந்தீதன்றுணுதலின், காணு மருந்தென்பது வினைப் பெயர் கொண்டதாம். 'பொச்சாவாக் கருவியாற் போற்றிச்செயின்' (குறள்-இகூஎ) என்புழிப் பொச்சாவாக் கருவியென்பது மது. 'ஆறுசென்றவியர்' என் புழி வியர் ஆறுசேறலான் வந்த காரியமாகலின், செயப்படு பொருட்கண்டங் கும். நூற்ற நூலானியன்ற கலிங்கமும் ஒற்றுமை நயத்தால் நூற்ற கலிங்க மெனப்படும். 'நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ' (பதிற்றுப் பத்து, உ-ம் பத்து, கூஎ.) எனப் பெயரெச்சத்தி னெதிர்மறை பொருட்பெயர் கொண்டு நின்றதாம். பிறவுங கூறப்பட்ட பொருட்க ணடஙகுமாறறிந் தடக்கிக் கொள்க. உண்டான் சாத்தன், மெழுகிற்றுத் திண்ணை என்புழி உண்டான் மெழுகிற்று என்னு முற்றுச்சொல் வினைமுதலுஞ் செயப்படு பொருளுமாகிய பொருட் குரியவாமாறுபோல, இவ்விருவகைப் பெயரெசசமும் நிலமுதலாகிய பொருட் குரியவாமென அவற்றது அறுபொருட்கு முரிமை உணர்த்தியவாறு. முடிபு எச்சவியலுட் பெறப்படும்.

பொருளாக் கிளவி யென்றார்.

நிலமுதலாயினவற்றைப் பெயரெச்சப் பொருளென்னுது முடிக்குஞ் சொல்லெனின், அவ்வறுபொருட்கு மென்னுது அவ்வறு பெயர்க்கு மென்றே துவார். ஒதவே, 'பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே' (சொல்-சகூஉ) என்னுஞ் சூத்திரம் வேண்டாவாம்; அதனுன் இவை பொருளென்றலே யுரை.

அம் ஆமென்பன முதலாக அகரமீறாகக் கிடந்த இறுதியிடைச்சொற்குக் கூறப்பட்ட காலவெழுத்துச் சிறிய சிதைந்துவரினும், சிறுபான்மை பிற வெழுத்துப் பெறினும், நுண்ணுணர் வுடையோர் வழக்கு நோக்கி யுணர்ந்து கொள்க. (கூஎ)

செய்யும் என்னும் வாய்பாடு

உஉ. அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவிற்று முரித்தே.

இ - ன்: நிலமுதலாகிய பொருளோடு வருங்கால் செய்யு மென்னுஞ் சொல், விலக்கப்பட்ட பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை யென்னும் மூவகைக்கும், உரித்தாம்; எ - று.

உரித்தாய் வருமாறு 'எஞ்சிய கிளவி' (சொல்-உஉஇ) என்னுஞ் சூத்திரத்திற் காட்டிஞம்.

அவற்றொடு வருவழியெனச் செய்யுமென்னுஞ் சொல் அப்பொருண்மைக் குரித்தாயும் உரித்தன்றியும் வரும் இருநிலைமையும் உடைத்தென்பது பெறுதும். அவற்றொடு வரு நிலைமை பெயரெஞ்சு கிளவியாம்; அவற்றொடு வாரா நிலைமை முற்றுச்சொல்லாம். அஃதேல், அது முற்றுச்சொல்லாதற் கண்ணும் பெயரெஞ்சு கிளவியாதற் கண்ணும் வேற்றுமை யென்னை யெனின் :—ஏனைமுற்றிற்கும் ஏனையெச்சத்திற்கும் வேற்றுமை யாவதே ஈண்டும் வேற்றுமையா மென்க. முற்றுச் சொல்லிற்கும் எச்சத்திற்கும் வேற்றுமை யாதெனின் :—பிறிதோர் சொல்லோடியையாது தாமே தொடரா தற்கேற்கும் வினைச்சொல் முற்றும்; பிறிதோர் சொற்பற்றியல்லது நிற்ற

லாற்று வினைச்சொல் எச்சமாம்; இது தம்முள் வேற்றுமை யென்க. அஃ தேல், உண்டானென்பது சாத்தனென்னும் பெயரவாவியன்றே நிற்பது; தாமே தொடராமென்றது என்னையெனின்:—அற்றன்று: உண்டான் சாத் தன் என்றவழி, எத்தையென்னும் அவாய்நிலைக்கண் சோற்றையென்பது வந்தியைந்தாற்போல, உண்டான் என்றவழி யாரென்னும் அவாய்நிலைக்கண் சாத்தனென்பது வந்தியைவதல்லது, அப்பெயர்பற்றியல்லது நிற்றலாற்று நிலைமைத்தன்று அச்சொல்லென்பது. இவ்வேற்றுமை விளங்க ஆசிரியர் முற்றுச்சொல்லென்றும், எச்சமென்றும், அவற்றிற்குப் பெயர் கொடுத்தார்.

(நூஅ)

பெயரெச்சமும் வினையெச்சமும்

உநசு. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியு
மெதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா.

இ - ள்: பெயரெச்சமும் வினையெச்சமும், செய்தற்பொருள வன்றி அச்செய்தற்பொருண்மை எதிர்மறுத்துச் சொல்லினும், இவ்வெச்சப் பொருண்மையிற் றிரியாது; எ - று.

பொருணிலையாவது தம்மெச்சமாகிய பெயரையும் வினையையுங் கொண் டல்லது அமையாத நிலைமை. என் சொல்லியவாறேவெனின்:—செய்யும் செய்த எனவும், செய்து செய்யூ செய்பு எனவும் பெயரெச்சமும் வினையெச்ச மும் விதிவாய்பாட்டா லேதுப்பட்டமையான், ஆண்டுச செய்யா, செய்யாது என்னு மெதிர்மறை வாய்பாடு அடங்காமையின், அவை எச்சமாதல் பெறப்பட் டின்று. அதனால், அவையும் அவ்வெச்சப்பொருண்மையிற் றிரியாது பெயரும் வினையுங்கொள்ளுமென எய்தாத தெய்துவித்தவாறு.

எ - டு: உண்ணுவில்லம், உண்ணுச்சோறு, உண்ணுக்காலம், வினையாக் கோல், ஓதாப்பார்ப்பான், உண்ணுவூண எனவும்; உணாது வந்தான், உண்ணுமைக்குப் போயினன் எனவும் வரும்.

உண்ணு என்பது உண்ணும், உணட என்னுமிரண்டற்கும் எதிர்மறை யாம். உண்ணுத என்பதுமது. உண்ணுது என்பது உண்டு, உண்ணூ, உண் ணுபு என்பனவற்றிற் கெதிர்மறை. உணாமைக்கு என்பது, உண்ணியர் உண் ணிய, உணற்கு என்பனவற்றிற்கும் உண்ண எனச் செயற்கென்பதுபட வரும் செயவெனச்சத்திற்கும் எதிர்மறையாம். உணாமை, உண்ணாமல் என்பனவுந் தாம் அதற்கு எதிர்மறையாம். பிறவும் எதிர்மறைவாய்பா ளெவேற் கொள்க.

உண்டிலன், உணாநின்றிலன், உண்ணலன் உண்ணான் என முற்றுச் சொல்லும் எதிர்மறுத்து நிற்குமாகலின், பொருணிலை திரியாதென அதற் கோதாராயிற் றென்னை யெனின்:—விதிவினைக்கும் எதிர்மறைவினைக்கும் பொதுவாக ஈறுபற்றி ஓதியதல்லது விதிப் பொருளவாகிய வாய்பாடு பற்றி ஓதாமையின், ஆண்டுக் கட்டுரையில்லை யென்க. (நூக)

எச்சங்களிடையே பிறசொற்கள் வருதல்

உநள. தந்த மெச்சமொடு சிவணுங் குறிப்பி
னெச்சொல் லாயினு மிடைநிலை வரையார்.

இ - ள்: தத்தமெச்சமாகிய வினையோடும் பெயரோடும் இயையுங் குறிப்பையுடைய எச்சொல்லாயினும், இவ்வெச்சத்திற்கும் அவற்றுன் முடிவனவாகிய தமக்கும், இடைநிற்றல் வரையார்; எ - று.

எ - டு: உழுது சாத்தன் வந்தான், உழுதேரொடு வந்தான் எனவும்; கொல்லுங காட்டுள் யானை, கொன்ற காட்டுள் யானை எனவும் வரும்.

சிவணுங குறிப்பின் வரையாரெனவே, சிவணுக்குறிப்பின் வரைப வென்பதாம். சிவணுக்குறிப்பினவாவன, ஒருதலையாக எச்சத்தோடியைந்து நில்லாது நின்ற சொல்லொடுந் தாமே யியைந்து கவாபொருட்படுவன. உண்டு விருந்தொடு வந்தான்; 'வல்ல மெறிந்த நல்லிளங கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி' என்றவழி விருந்தொடுண்டென வினையெச்சத்தோடு மியைதலிற் பொருள் கவர்க்கும்; வல்லமெறிதல் நல்லிளங்கோசர்க்கும் எற்கு மாகலின் ஆண்டும் பொருள்கவர்க்கும்; அன்ன சிவணுக் குறிப்பினவாம்.

எச்சொல்லாயினு மென்றதனுன், உழுதோடிவந்தான், கவளங்கொள்ளாக் களித்த யானை என எச்சமும் இடைநிலையாதல் கொள்க.

சாத்தன் உண்டு வந்தான், அறத்தை யரசன் விரும்பினுன், உண்டான் வந்த சாத்தன் என வினைத்தொடர்க்கண்ணும் பிறசொல் இடைநிற்ற லொக்குமாயினும், எச்சத் தொடர்க்கு இடைநிற்பனவற்றின்கண் ஆராய்ச்சியுடைமையாற் கூறினுர். (அ0)

செய்யும் என்னும் பெயரெச்சம் ஈறுகெடுதல்

உஉ-அ. அவற்றுள்

செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகர
மவ்விட னறித லென்மனுர் புலவர்.

இ - ள்; மேற்சொல்லப்பட்ட எச்சங்களுட் செய்யுமென்னும் பெயரெச்சத்திற்கு ஈற்றுமிசை நின்ற உகரந் தன்னு னூரப்பட்ட மெய்யொடுங்கெடுமிட மறிக; எ - று.

கெடுமிடமறிக வென்றது, அவ்வீற்றுமிசையுகரம் யாண்டுங் கெடாது வரையறுக்கவும்படாது சான்றோர் வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வந்தவழிக் கண்டுகொள்க வென்றவாறு.

எ - டு: வாவும்புரவி, போகும்புழை என்பன ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங்கெட, வாம்புரவி, போம்புழை என நின்றன. பிறவும் வந்தழிக் கண்டு கொள்க.

செய்யுமென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு ஈற்றுமிசையுகர மெய்யொடுங்கெடு மெனவே, செய்யுமென்னு முற்றுச்சொற்கு ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங்கெடும், மெய்யொழித்துங் கெடு மென்பதாம்.

எ - டு: 'அம்ப லூரு மவஞெடு மொழிமே' (குறு-நிக) 'சார லூடு வென் ரேழியுங கலுழ்மே' என வரும். பிறவுமன்ன. (அக)

இறந்தகாலச் சொல் எதிர்காலச் சொல்லோடு இயைதல்

உஉகூ. செய்தெ னெச்சத் திறந்த கால
மெய்திட னுடைத்தே வாராக் காலம்.

இ - ள்: செய்தென்னும் வினையெச்சத்தினது இறந்தகாலம் வாராக்காலத்தை எய்துமிடமுடைத்து; எ - று.

ஈண்டுச் செய்தெனெச்சத்திறந்தகால மென்றது முடிபாய் வரும் வினைச் சொல்லா னுணர்த்தப்படுந் தொழிற்கு அவ்வெச்சத்தா னுணர்த்தப்படுந் தொழில் முன்நிகழ்தலே. அது வாராக்கால மெய்துதலாவது. அம்முன் னிகழ்வு சிதையாமல் அவ்வெச்சம் எதிர்காலத்து வருதல்.

எ - டு: நீயுண்டு வருவாய், உழுது வருவாய் எனச் செய்தெனச்சம் பொருள் சிதையாமல் எதிர்காலத்து வந்தவாறு கண்டுகொள்க.

'எய்திட னுடைத்தே வாராக் காலம்' என்றதனான், உண்டு வந்தான், உழுது வந்தான் என அவ்வெச்சம் இறந்தகாலத்து வருதல் இலக்கணமென்ப தாம்.

இறந்தகாலத்துச்சொல் எதிர்காலத்து வந்ததாயினும் அமைகலெனக் காலவழு வமைத்தவாறு. (சஉ)

முக்காலங்கட்கும் உரிய இயற்கையை நிகழ்காலத்தாற் கூறுதல்

உசo. முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்.

இ - ள்: மூன்றுகாலத்தும் உளதாம் இயல்பையுடையெல் லாப்பொருளையும் நிகழ்காலத்துப் பொருணிலைமையுடைய செய்யு மென்னுஞ் சொல்லாற் கிளக்க; எ - று.

முந்நிலைக்காலமுந்தோன்று மியற்கை யெம்முறைப் பொருளுமாவன மலையது நிலையும ஞாயிறுதிங்கள தியக்கமு முதலாயின. அவற்றை இறந்த காலச்சொல்லானும், எதிர்காலசசொல்லானும், வினை நிகழ்காலச்சொல்லானும் சொல்லாது, இறந்தகாலத்தையும் எதிர்காலதத்தையும் அகப்படுத்து மூன்று காலத்திற்கும் பொதுவாய் நிற்குஞ் செய்யுமென்னுஞ்சொல்லாற் சொல்லுக என்றவாறு.

பொதுச்சொற் கிளத்தல்வேண்டு மெனவே, முற்றினும் பெயரெச்சத் தானுங் கிளக்க வென்பதாம்.

எ - டு: மலை நிற்கும், ஞாயி றியங்கும் திங்க ளியங்கும் எனவும்; 'வெங்கதிர்க் கனலியொடு மதிவலந் திரிதருந் தண்கடல்வையத்து' (பெரும்பா- கள) எனவும் வரும்.

நிகழ்காலச் சொல்லாயினும் ஒருகாற் பொதுவாக வுடைமையாற் 'பொதுச்சொல்' என்றார்.

நிகழ்காலச்சொல் இறந்தகாலமும் எதிர்காலமு முணர்த்துதல் வழுவா யினுஞ் அமைகவென அமைத்தவாறு. (சஉ)

விரைவுப்பொருளில் காலம் மயங்குதல்

உசக. வாராக் காலத்து நிகழுங் காலத்து
மோராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி
யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள வென்மனர் புலவர்.

இ - ள்: எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒருபடியாக வரும் வினைச்சொற்பொருண்மை இறந்தகாலத்தாற் சொல்லுதல் விரைவு பொருளையுடைய; எ - று.

சோறு பாணித்தவழி உண்ணுதிருந்தானைப் போகல்வேண்டுங் குறையுடையாளொருவன் இன்னுமுண்டிலையோ என்றவழி, உண்டேன் போந்தேன் என்னும்; உண்ணுகின்றனும் உண்டேன் போந்தேன் என்னும்; ஆண்டு எதிர்காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் உரிய பொருளை விரைவுபற்றி இறந்த காலத்தாற் கூறியிருப்பதைக் காண்க.

தொழில் இறந்தனவல்லவேனும், சொல்லுவான் கருத்து வகையான் இறந்தனவாகச் சொல்லப்படுதலின், 'குறிப்பொடு கிளத்தல்' என்றார்.

எதிர்காலத்துப் பொருண்மையைக் கிளத்தலும், நிகழ்காலத்துப் பொருண்மையைக் கிளத்தலும என இரண்டாகலான், 'விரைந்தபொருள' என்றார். (சச)

சிறப்புப்பொருளில் காலம் மயங்குதல்

உசஉ. மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
யப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.

இ - ள்: மிக்கதன்கண் நிகழும் வினைச்சொல்லை நோக்கித் திரிபின்றிப் பயக்கும் அம்மிக்கதனது பண்பைக் குறித்து வரும் வினைமுதற்சொல், சுட்டிச் சொல்லப்படுவதோர் வினைமுதலில் லாதவிடத்து, நிகழ்காலத்தான் யாப்புறுத்த பொருளையுடைத்தாம்.

முயற்சியும் தெய்வமுமாகிய காரணங்களுட் டெய்வஞ் சிறந்தமையான், அதற்குக் காரணமாகிய தவஞ்செய்தல் தாயைக்கோறன் முதலாகிய தொழிலை 'மிக்கது' என்றார். தெய்வமாய இருவினை மிக்கதன்கண் வினைச்சொல்லாவன, தவஞ்செய்தான், தாயைக் கொன்றான் என்னுந் தொடக்கத்தன. அப்பண்பு குறித்த வினைமுதற்கிளவியாவன, சுவர்க்கம் புகும், நிரயம் புகும் என்பன. யாவன் தவஞ்செய்தான் அவன் சுவர்க்கம் புகும், யாவன் தாயைக் கொன்றான் அவனிரயம் புகும் எனவும்; ஒருவன் தவஞ்செய்யிற் சுவர்க்கம் புகும், தாயைக் கொல்லி னிரயம் புகும் எனவும் மிக்கதன் வினைச்சொல்லை அம்

மிக்கதன்றிரிபில் பண்பு குறித்த வினைமுதற்கிளவி நிகழ்காலத்தான் வந்த வாறு கண்டு கொள்க.

அப்பண்பு குறித்தவென்பதற்கு மிக்கதாகிய இருவினைப்பயனுறுதல் அவ்வினைமுதற் கியல்பென்பது குறித்தவென்று உரைப்பினு மமையும்.

பொதுவகையாகக் கூறுது ஒருவற் சுட்டியவழி, அவன் றவஞ்செய்து சுவர்க்கம் புக்கான், புகுவன் என வினைக்காலத்தாற் சொல்லப்படுதலின், அவ் வாறு ஒருவற்சுட்டுதலே நீக்குதற்கு, வினைமுதற்கிளவியாயினுஞ் செய்வதில் வழி யென்றார். செய்வதென்பது செய்கையை யென்பாரு முளர்.

வினைச்சொலென்றாரேனும், தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும், தாயைக் கொன்ற னிரயம் புகும் என வினைப்பெயராய் வருதலுங கொள்க.

தவஞ்செய்யிற் சுவர்க்கம் புகுவன் என எதிர்காலத்தாற் சொல்லப்படு வதனை நிகழ்காலத்தாற் சொல்லுதல் வழுவாயினும் அமைகவென வழு அமைதியாம்.

அஃதேல், 'இயற்கையுக் தெளிவுங கிளக்குங காலே' (சொல்-உசஞ) என் புழி இது தெளிவாயடங்குமெனின்:—அற்றன்று: இயற்கையுக் தெளிவும் சிறந்த காரணமாகிய தெய்வத்தானுக பிறிதொன்றானுக திரிதலுடைய, இது திரிபின்றாகலானும், இறந்தகாலத்தாற் சொல்லப்படாமையானும், ஆண் டடங்காதென்பது. இதனது திரிபின்மையும் அவற்றது திரிபுடைமையும் விளக்குதற்கன்றே, ஆசிரியர் 'மிக்கதன் மருங்கின்' என்றும் 'இயற்கையுக் தெளிவுங் கிளக்குங காலே' என்றும் ஓதுவாராயிற் றென்பது. (சஞ)

'இது செயல் வேண்டும்' என்னும் முற்று

உசஉ. இதுசெயல் வேண்டு மென்னுங் கிளவி
யிருவயி னிலையும் பொருட்டா கும்மே
தன்பா லானும் பிறன்பா லானும்.

இ - ள்: இது செயல்வேண்டு மென்பதுபட வருஞ்சொல், தன்பாலானும் பிறன்பாலானுமென ஈரிடத்தும் நிலைபெறும பொருண்மையையுடைத்தாம்; எ - று.

தானென்றது செயலது வினைமுதலே.

ஓதல்வேண்டும் என்றவழி வேண்டுமென்பது ஓதற்கு வினைமுதலா யினுற்கும் அவனேதலே விரும்புந் தன்தைக்கும் ஏற்றவாறு கண்டுகொள்க.

இதனுன் ஒருசார்வினைச்சொற் பொருள்படும் வேறுபா டுணர்த்தினார்; உணர்த்தாக்காற் றெற்றென விளங்காமையி னென்பது. (சசு)

வற்புறுத்தற் பொருளில் வரும் வினை

உசச. வன்புற வருஉம் வினைவுடை வினைச்சொ
லெதிர்மறுத் துணர்த்துதற் குரிமையு முடைத்தே.

இ - ள்: துணிந்து திட்பமெய்துதற்கு வரும் வினைவையுடைய வினைச்சொல் வினைநிகழ்வுணர்த்தாது எதிர்மறுத்துணர்த்துதற்கு முரித்தாதலுமுடைத்து.

விஞவாவன ஆ, ஏ, ஓ என்பன.

கதத்தாஞக களியாஞக ஒருவன் தெருளாது ஒருவனே வைதான்; அவன்றெருண்டக்கால், வையப்பட்டான் நீ யென்னே வைதாய் என்றவழித் தான் வைதவை யுணராமையான் வைதேனே யென்னும்; ஆண்டவ் விஞ வொடு வந்த வினைச்சொல் வைதிலே னென்னும் எதிர்மறைப்பொருள்பட வந்தவாறு கண்டுகொள்க. விஞவொடு வந்தவழி எதிர்மறைப்பொருள்படுமா றென்னையெனின்:—சொல்லுவான் குறிப்புவகையான் எதிர்மறைப்பொரு ளுணர்த்திற் றென்க. எதிர்மறைப்பொருளுணர்த்திற்று ஆண் டேகாரமாக லின், வினைச்சொல் எதிர்மறுத் துணர்த்துதற் குரிமையு முடைத்தென்றல் நிரம்பாதெனின்:—எதிர்மறையாயின பயன்றருவது விஞவுடை வினைச்சொ லென்றாகலின், அஃதெதிர்மறுத்தல் யாண்டையதென மறுக்க.

வினைநிகழ் வுணர்த்தற்பாலது வினையது நிகழாமை யுணர்த்துதல் வழுவா யினும் அமைகவென வினைச்சொற்பற்றி மரபுவழு வமைத்தவாறு. (சஎ)

இயற்கைப்பொருளிலும் தெளிவுப்பொருளிலும் காலம் மயங்குதல்

உசடு வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று
மியற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை.

இ - ள்: எதிர்காலத்துக்குரிய வினைச்சொற்பொருண்மை, இயற்கையாதலும் தெளியப்படுதலும் சொலலுமிடத்து, இறந்த காலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானும் விளங்கத் தோன்றும்; எ - று.

இயற்கை யென்பது பெற்றி முதலாயினவற்றை ஞணரப்படுவது. தெளிவு நூற்றெளிவான் வருவது.

ஒருகாட்டின்கட் போவார் கூறைகோட்படுதல் ஒருதலையாகக் கண்டு இஃதியற்கையென்று துணிந்தான், கூறைகோட்டபோமுன்னும், இக் காட்டுட் போகிற் கூறைகோட்பட்டான், கூறைகோட்படும் என்னும். எறும்பு மூட்டை கொணடு தெற்றி யேறின் மழை பெய்தல் நூலாற் றெளிந்தான், அவை மூட்டைகொணடு தெற்றி யேறியவழி, மழை பெய்யாமுன்னும், மழை பெய்த தது, மழை பெய்யும் என்னும். ஆணடு எதிர்காலத்திற்குரிய பொருள் இறந்தகாலத்தானும் நிகழ்காலதத்தானும் தோன்றியவாறு கண்டுகொள்க.

இது காலவழு வமைத்தவாறு. (சஅ)

செயப்படுபொருள் வினைமுதல்போல வருதல்

உசசு. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே.

இ - ள்: செயப்படுபொருளைச் செய்த வினைமுதல்போலத் தொழிற்படச் சொல்லுதலும் வழக்கின்கண் இயலுமரபு; எ-று.

வழக்கியன்மரபெனவே, இலக்கணமன்றென்றவாறும்.

எ - டு: திண்ணை மெழுகிற்று, கலங் கழீஇயிற்று என வரும்.

திண்ணை மெழுகப்பட்டது, கலக் கழுவப்பட்டது என்றுமன் ஞகற் பாலது அவ் வாய்பாடன்றி வினைமுதல் வாய்பாட்டான் வருதலும் வழக்கினு ளுண்மையான் அமைகவென வினைச்சொற்பற்றி மரபுவழு வமைத்தவாறு.

செயப்படுபொருளே வினைமுதல் வாய்பாட்டாற் கிளத்தலேயன்றி, எளிதினடப்பதனேக்கி அரிதானேயட்டது எனச் செயப்படு பொருளே வினைமுதலின் றொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபென்றற்கு, 'தொழிற் படக் கிளத்தலும்' என்றார். இதனைக் கருமகருத்த னென்ப.[1] (சக)

வேறிடத்தினும் காலம் மயங்குதல்

உசஎ. இறப்பே யெதிர்வே யாயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்று மயங்குமொழிக் கிளவி.

இ - ள்: இறப்பும் எதிர்வுமாகிய இரண்டுகாலமும் மயங்கு மொழிப் பொருளாய் விளங்கத் தோன்றும்; எ - று.

எ - டு: இவர் பண்டு இப்பொழிலகத்து விளையாடுவர்; நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தான் பின், நீ யென்செயகுவை என வரும்.

அவ்விரண்டுகாலமும் மயங்குமொழிப் பொருளாய்த் தோன்று மெனவே, அவற்றை யுணர்த்துஞ்சொன் மயங்குமென்றவாறும். அவை பெயரும் வினையு மாய் மயங்குதலின்றி மயங்கு வினைசசொற் கிளவி யென்றது பொதுப்பட 'மயங்குமொழிக் கிளவி' என்றார்

தோன்றுமென்பது பெயரெச்சமெனினு மிழுக்காது.

பண்டு விளையாடினார் என்றும் நாளை வருவன் என்றுமன்றே கூறற் பாலது; அவ்வாறன்றித் தம்முண் மயங்கக் கூறினு மமைகவெனக் காலவழு வமைத்தவாறு. (கo)

உசஅ. ஏனைக் காலமு மயங்குதல் வரையார்.

இ - ள்: இறப்பும் எதிர்வுமேயன்றி நிகழ்காலமும் அவற் றொடு மயங்கும்: எ - று.

எ - டு: இவள் பண்டு இப்பொழிலகத்து விளையாடும் எனவும், நாளை வரும் எனவும் வரும்.

சிறப்பத்தோன்று மெனவும், மயங்குதல்வரையா ரெனவும் கூறினார்; இறப்பும் எதிர்வும் மயங்குதல் பயின்று வருதலானும், அத்துணை நிகழ்கால மயக்கம் பயின்று வாராமையானு மென்க.

மூன்றுகாலமுந் தம்முண்மயங்குமென்றாரேனும், எற்பழியல்லது மயங் காமை கொள்க. எற்புழிக் கொள்ளவே, வந்தானை வருமென்றலும் வருவானை வந்தானென்றலுமென இவை முதலாயினவெல்லாம் வழுவென்பதாம். பிறவு மன்ன. (கிக)

வினையியல் முற்றிற்று.

---

1 இனி, இப்போதுதான் வந்தேன, இப்போதுதான வாங்கினேன எனபவற்றுகுப் பதிலாக, இப்போதுதான் வந்தது, இப்போதுதான வாங்கிறறு எனத தன்மை யொருமை வினைமுறறுகளை படறகையொருமை வினைமுறறுவாயபாடடால உலக வழகில வழங்குவதையும இநநூறபாவால அமைததுகொள்க.

எ. இடையியல்

[இடைச்சொல்லின் இலக்கணம் உணர்த்துவது]

க. பொதுவிலக்கணம்

இடைச்சொல்லின் இயல்பு

உசகூ. இடையெனப் படுவ பெயரொடும் வினையொடு
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே.

நிறுத்த முறையானே இடைச்சொலுணர்த்திய வெடுத்துக்கொண்டார். அதனுன், இவ்வோத்து இடையியலென்னும் பெயர்த்தாயிற்று. மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மையும் இடைவருதலின் இடைச் சொல்லாயிற்று.

இ - ள்: இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயரொடும் வினையொடும் வழக்குப்பெற் றியலும்; தாமாக நடக்குமியல்பில; எ - று.

'இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
மவற்றுவழி மருங்கிற் றோன்றும்' (சொல்-கஞிக)

என்றதனுன் இடைச்சொல் பெயரும்வினையுஞ் சார்ந்து வருதல் பெறப்பட்டமையால், பெயரொடும் வினையொடு நடைபெற்றியலுந் தமக்கியல்பில வென்றது, ஈண்டுப் பெயரும்வினையு முணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது தமக்கெனப் பொருளுடையவல்ல வென்ற வாறும்.

எ - டு: 'அதுகொ றோழி காம நோயே' (குறு-ஙி) எனவும், 'வருகதில் லம்மவெஞ் சேரி சேர' (அகம்-உசு) எனவும், பெயரும் வினையுஞ் சார்ந்து அப்பொருளை வெளிப்படுத்தவாறு கண்டுகொள்க.

சார்ந்து வருதல் உரிச்சொற்குமொத்தலின், தமக்கெனப் பொருளின்மை இடைச்சொற்குச சிறப்பிலக்கணமாம். தமக்கியல்பிலவே யென்றது, சார்ந்தல்லது வாராவென வலியுறுத்தவாறு.

பெயரொடும் வினையொடு நடைபெற்றியலுந் தமக்கியல்பிலவெனப் பொதுப்படக் கூறியவதனுல், சாரப்படுஞ் சொல்லின் வேறுய் வருதலேயன்றி, உண்டனன், உண்டான் எனவும்; என்மனுர், என்றிசினுர் எனவும்; அருங்குரைத்து எனவும் அவற்றிற் குறுப்பாய் வருதலுங கொள்க.

இனி ஒருரை:—'இடைச்சொற்கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கிற் றோன்றும்' என்பதற்கு, சாந்து வருதலான் இடைசசொல்லும் உரிச்சொல்லுஞ் சிறப்பில; இவை யுட்படச்சொன்னுன்காமென்பது கருத்தாகலின், இடைச்சொல் பெயரும்வினையுஞ் சார்ந்து வருமென்னும் வேறுபாடு அதனுற் பெறப்படாது. என்னை? இடைச்சொல் பெயர்சார்ந்தும் உரிச்சொல் வினைசார்ந்தும் வரினும் அவற்றது சிறப்பின்மையுஞ் சொன்னுன்காதலும் உணர்த்துதல் சிதையாதாகலான். அதனுன் இடைசசொல் டெயரும்

வினையுஞ் சார்ந்து வருமென்பது இச்சூத்திரத்தாற் கூறல்வேண்டு மென்ப அவ்வுரை யுரைப்பார் 'பெயரினும் வினையினு மெய்தடுமாறி' (சொல்-உகஎ.) என்பதற்கும் பெயரும் வினையுஞ் சார்ந்தென்று பொருளுரைப்ப. (க)

அதன் பாகுபாடு

உடுO அவைதாம்

புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதவும்
விளைசெயன் மருங்கிற் காலமொடு வருவும்
வேற்றுமைப் பொருள்வயி னுருபா குவவு
மசைநிலைக் கிளவி யாகி வருவவு
மிசைநிறைக் கிளவி யாகி வருவவுந்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குவவு
மொப்பில் வழியாற் பொருள்செய் குவவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை.

இ - ள்: மேற்சொல்லப்பட்ட இடைச்சொற்கள் தாம், இரண்டு சொற் புணருமிடத்து அப் பொருணிலைக் குதவுவனவும், வினைச்சொலை முடிக்குமிடத்துக் காலப் பொருளவாய் வருவன வும், செயப்படுபொருண் முதலாகிய வேற்றுமைப்பொருட்கண் உருபென்னுங் குறியவாய் வருவனவும, பொருளுடையவன்றிச் சார்த்திச் சொல்லப்படுந் துணையாய் வருவனவும், வேறுபொரு ளுணர்த்தாது இசை நிறைத்தலே பொருளாக வருவனவும், தத்தங் குறிப்பாற் பொருளுணர்த்துவனவும், ஒப்புமை தோன்ற தவழி அவ்வொப்புமைப்பொருள் பயப்பனவு மெனக் கூறப்பட்ட ஏழி யல்புடைய. சொல்லுமிடத்து: எ - று.

புணரியனிலை புணரியலது நிலை. ஆண்டுப் பொருணிலைக்குதவுதலாவது எல்லாவற்றையும் என்பழி வற்றுச் சாரியை நிலைமொழிப்பொருள் அஃறிணைப் பொரு ளென்பதுபட வருதலும், எல்லா நம்மையும் என்புழி நம்முச்சாரியை அப்பொருள் தன்மைப்பன்மை யென்பது பட வருதலுமாம். அல்லனவும் தாஞ் சாரந்து வரும் மொழிப்பொருட்கு உபகாரமுடையவாய் வருமா றோர்ந்து கொள்ளப்படும். அல்லாக்கால், சாரியை மொழியாகா வென்பது.

வினைச்சொல் ஒரு சொல்லாயினும் முதனிலையும் இறுதிநிலையும் இடைச் சொல்லுமாகப் பிரித்துச் செய்கை செய்து காட்டப்படுதலின், 'வினைசெயன் மருங்கின்' என்றார். அம்முடிபுணர்த்தாமைக்குக் காரணம் 'புணரிய னிலை யிடை யுணரத் தோன்றல்' என்புழிச் சொல்லப்பட்டது. அவற்றுள் ஒருசார னா லுணர்த்தாமையானும், எல்லாங் காலமுணர்த்துதலானும், 'காலமொடு வரு நவும்' என்றார்.

வேற்றுமைப் பொருளவாய் வருவன பிறசொல்லுமுள வாகலின், அவற்றை நீக்குதற்கு உருபாகுவுமென்றார். பிற சொல்லாவன 'கண்ணகன் ஞாலம்' 'ஊர்க்கா னிவந்த பொதும்பர்' (குறிஞ்சிகலி-உO) என வழாம்வேற் றுமைப் பொருட்கண் வருங் கண் கால் முதலாயினவும், 'அனையை யாகன்

மாறே' (புறம்-சு) 'செற்றோன் பெயரன் பிறந்த மாறே' 'இயல்புளிக் கோலோச்சு மன்னவன்' (குறள்-உஉ) என மூன்றும்வேற்றுமைப் பொருட் கண் வரும் மாறு உளி என்பனவும், அன்ன பிறவுமாம். அஃதேல், வேற்றுமை யுருபுமென்றோதுவார்; ஓதவே, இவை நீங்குமெனின்:—அஃதொக்கும்; அவை தம்மையுந் தழீஇக்கோடற்கு 'வேற்றுமைப் பொருள்வயின்' என்றார். அவை வருங்கால் நிலைமொழியுருபிற்கேற்ற செய்கை ஏற்புழிப் பெறுதலுமுடைமை யின், 'உருபாகுநவும்' என்றார். இஃது இருபொரு ளுணர்த்தலான் இருதொட ராகக்கொள்க.

அசைத்தல் சார்த்துதல். பொருளுணர்த்தாது பெயரொடும் வினையொ டுஞ் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின், அசைநிலையாயிற்று. அவை அந்தின் முதலாயின. 'புகழ்ந்திகு மல்லரோ பெரிதே' 'உரைத்திசினோரே' எனச் சார்ந்த மொழியை வேறுபடுத்து நிற்றலின், அசைநிலைச் சொல்லாயின வென் பாரு மூளர்.

செய்யுட்கள் இசைநிறைத்து நிற்றலின், இசைநிறையாயின.

குறிப்புச சொல்லுவான் கணணதாயினும் அவன் குறித்த பொருளைத் தாங்குறித்து நிற்றலின், தத்தங்குறிப்பினென்றார். சொல்லுவான் குறித்த பொருளைத் தாம் விளக்குமெனவே, 'கூரியதோர் வாள்' என மன்னனன்றி யசைவேறுபட்டான் ஒருகாற் றிட்டமின்றென்னுந் தொடக்கத்து ஒழியிசைப் பொருடோன்றலும் பெறப்படும. பொருட்கும் பொருளைப் புலனுகவுடைய உணர்விற்கும் ஒற்றுமை கருதிப் பொருளுணர்வைப் பொருளென்றார். 'மிகுதி செய்யும் பொருள' (தொல்-உகூக) என்பது முதலாயினவற்றிற்கும் ஈதொக்கும்.

ஒக்குமென்னுஞ் சொல்லன்றே ஒப்புமை யுணர்த்துவது; அச்சொல் ஆண்டின்மையான் ஒப்புமை தோன்றுமையான், ஒப்பில் வழியாலென்றார்; உவமையொடு பொருட்கு ஒப்பில்லையென்றதால்லலென்பது. ஒக்குமென்னுஞ் சொல்லை ஒப்பென்றுரென்பாருமுளர். ஒப்பில்வழியாற் பொருள் செய்குவா வன, அன்ன, எய்ப்ப, உறழ, ஒப்ப என்பன முதலாகப் பொருளதிகாரத்துக் கூறப்பட்ட முப்பத்தாறனுள் ஒக்குமென்ப தொழிய வேனையவாம்.

சாரியையும், வேற்றுமையுருபும், உவமவுருபும், குறிப்பாற் பொரு ளுணர்த்துமாயினும், புணர்ச்சிக்கண உபகாரப்படுதலும் வேற்றுமைத்தொகைக் கும் உவமத்தொகைக்கும் அவ்வுருபுபற்றி இலக்கணங கூறுதலும் முதலாகிய பயனேக்கி, இவற்றை வேறு கூறினார்.

இடைச்சொ லேழனுள்ளும் முதனின்ற மூன்றும மேலே யுணர்த்தப்பட் டமையான் முன் வைத்தார். ஒப்பில்வழியாற் பொருள் செய்குவ முன்ன ருணர்த்தப்படுதலின் இறுதிக்கண வைத்தார். ஒழிந்த மூன்றும் இவ்வோத் தின்கண் உணர்த்தப்படுதலின் இடை வைத்தார். (உ)

இடைச்சொல் நிற்கும் இடமும் வேறுபாடும்

உஙக. அவைதாம்

முன்னும் பின்னு மொழியடுத்து வருதலுந்
தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலு
மன்னவை யெல்லா முரிய வென்ப.

இ - ள் : மேற்சொல்லப்பட்ட ' இடைச்சொல், இடை வருதலேயன்றி, தம்மாற் சாரப்படுஞ்சொற்கு முன்னும் பின்னும் வருதலும், தம்மீறு வேறுபட்டு வருதலும், பிறிதோரிடைச் சொல் ஓரிடைச்சொன் முன்வருதலுமாகிய அத்தன்மையவெல்லாம் உரிய; எ - று.

எ-டு :—'அதுமன்' எனவும், 'கேண்மியா' (புறம்-ரசஅ) எனவும், சாரப் படுமொழியை முன்னடுத்து வந்தன. 'கொன்னூர்' (குறுந்-கஉஅ) எனவும்' 'ஒஒவினிதே' எனவும், பின்னடுத்து வந்தன. 'உடனுயிா போகுக தில்ல' (குறுந்-ருஎ) என ஈறு திரிந்து வந்தது. 'வருகதில் லம்மவெஞ்சேரி சேர, (அகம்-உஎசு.) என்பது பிறிதவ ணின்றது.

அவைதாமெனப் பொதுவகையா லேக்கிளுரேனும், இவ்விலக்கணம் இவ் வோத்தின்கண் உணர்த்தப்படும் அசைநிலை முதலாகிய மூன்றற்குமெனக் கொள்க.

அன்னவையெல்லா மென்றதனுன், 'மன்னேச்சொல்' (சொல்-உருஉ) 'கொன்னேச்சொல்' (சொல்-உருச) எனத் தம்மை யுணரகின்றவழி ஈறு திரி தலும், 'னகாரை முன்னர்' என எழுத்துச்சாரியை ஈறு திரிதலுங் கொள்க. (கூ)

உ. சிறப்பிலக்கணம்

'மன்' என்னும் இடைச்சொல்லின் பொருள்

உருஉ. கழிவே யாக்க மொழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னேச் சொல்லே.

இவ்வோத்தின்க ணுணர்த்தப்படும் மூவகையிடைச் சொல்லுள், தத்தங் குறிப்பாற் பொருள் செய்குந பொருளுணர்த்துதற் சிறப்புப் பரப்புடைமை யான் அதனே முன்னுணர்த்துகின்றுர்.

இ - ள் : கழிவு குறித்து நிற்பதும், ஆக்கங் குறித்து நிற்ப தும், மொழியிசைப் பொருண்மை குறித்து நிற்பதுமென மன்னேச் சொல் மூன்றும் ; எ - று.

எ-டு : 'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே' (புறம்-உகுரு) என் புழி மன்னேச்சொல் இனி அது கழிந்த தென்னும் பொருள் குறித்து நின்றது. 'பண்டு காடுமனின்று கயல் பிறழும் வாயிற்று' என்புழி அஃதாக்கம் குறித்து நின்றது. 'கூரியதோர் வாண்மன்' என்புழித் திட்ப மின்றென்ரு னும் இலக்கணமின் றென்ரு னும் எச்சமாய் ஒழிந்த சொற்பொருண்மை நோக்கி நின்றது. (சு)

'இல்' என்னுஞ் சொல்

உருங. விழைவே கால மொழிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப இல்லைச் சொல்லே.

இ - ள் : விழைவு குறித்து நிற்பதும், காலங் குறித்து நிற்பதும், ஆண்டொழிந்து நின்ற சொற்பொருளே நோக்கி நிற்பது மெனத் தில்லைச்சொல் மூன்றும் ; எ - று.

எ - டு : 'வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே' (குறுந்-கசு)

என அவளைப் பெறுதற்க ணுளதாகிய விழைவின்கண் வந்தது. 'பெற்றுங் கறிகதில் லம்மவிவ் வூரே' எனப் பெற்றகாலத் தறிகவெனக் காலங்குறித்து நின்றது. 'வருகதில் லம்மவெஞ் சேரி சேர' (அகம்-உஎசு) என வந்தக்கால் இன்னது செய்வலென்னும் ஒழியிசைப்பொரு ணோக்கிற்று. (இ)

'கொன்' என்னுஞ் சொல்

**உருசு. அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பா னன்கே கொன்னைச் சொல்லே.**

இ - ள் : அச்சப்பொருளதும், பயமின்மைப் பொருளதும், காலப்பொருளதும், பெருமைப்பொருளது மெனக் கொன்னைச் சொல்நான்காம் ; எ - று.

எ-டு : 'கொன்மூனை யிரவூர் போலச்
சிலவாகுக நீதுஞ்சு நாளே' (குறுந்-கூக)

என்புழி அஞ்சி வாழுமூர் எனவும்,
'கொன்னே கழிந்தன் றிளமை' (நாற்பது-இடு)

என்புழிப் பயமின்றிக் கழிந்தது எனவும்,
'கொன்வரல் வாடை நினதெனக் கொண்டேனே'

என்புழிக் காதலர் நீங்கிய காலமறிந்து வந்த வாடை எனவும்,
'கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே' (குறுந்-கூஅ)

என்புழிப் பேரூர் துஞ்சினும் எனவும், கொன்னைச்சொல் நான்குபொருளும் பட வந்தவாறு கண்டுகொள்க. (சு)

'உம்' என்னுஞ் சொல்

**உருடு. எச்சஞ் சிறப்பே யைய மெதிர்மறை
முற்றே யெண்ணே தெரிநிலை யாக்கமென்
றப்பா லெட்டே யும்மைச் சொல்லே.**

இ - ள் : எச்சங்குறிப்பது முதலாக ஆக்கங் குறிப்பதீறாக உம்மைச்சொல் எட்டாம் ; எ - று.

எ-டு : சாத்தனும் வந்தான் என்னுமும்மை, கொற்றனும் வந்தானென்னும் எச்சவுகுறித்து நிற்றலின், எச்சவும்மை. கொற்றனும் வந்தான் என்பதூஉம், இறந்த சாத்தான் வாவாகிய எச்சவுகுறித்து நிற்றலின், எச்சவும்மை.

'குறவரு மருளுங் குன்றத்துப் படினே' (மலை-உஎஇ) என்பது குன்றத்து மயங்கா நியமருதற்கண் குறவர் சிறந்தமையாற் சிறப்புமை.

'ஒன்று இரப்பான்போ லிளிவந்துஞ் சொல்லுமுலகம
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போ
னல்லார்கட் டோன்று மடக்கமு முடைய
னில்லோர் புன்க ணீகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வண்மையு முடையன்' (கலி-சஎ)

என்புழி இன்னுனென்று துணியாமைக்கண் வருதலின் ஐயவும்மை. சாத்தன் வருதற்கு முரியன் என்பது, வாராமைக்குமுரிய னென்னும் எதிர்மறையை ஒழிபாகவுடைத்தாய் நிற்றலின், எதிர்மறையும்மை. தமிழ்காட்டு மூவேந்தரும் வந்தார் என எஞ்சாப் பொருட்டாகலான் முற்றும்மை 'நிலனு நீருந் தீயும் வளியு மாகாயமுமெனப் பூதமைந்து' என்புழி எண்ணுதற்கண் வருதலின் எண்ணும்மை. இரு நில மடிதோய்தலிற் றிருமகளுமல்லள் அமகளுமல்லள் இவள் யாராகும் எனறவழித் தெரிதற்பொருட்கண வருதலிற் றெரிநிலையும்மை. திருமகளோ அமகளோ என்னுது அவரை நீக்குதலின், ஐயவும்மையின் வேறுத லறிக. ஆக்கவும்மை வந்தவழிக் கண்டுகொள்க. உரையாசிரியர் தெடியனும் வலியனுமாயினுன் என்புழி உம்மை ஆக்கங்குறித்து நிற்றலின் ஆக்க வும்மை யென்றார். 'செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே' (சொல்-கடி.) என்னுமும்மை, வழுவை யிலக்கண மாக்கிக்கோடல் குறித்து நின்றமையின் பாலும் ஆயிற்று என்றல், அதுவே மருந்துமாயிற்று எனவருதலாம். (ஆக்கம்) ஆக்கவும்மை யென்பாரு முளர். (எ)

'ஓ' என்னுஞ் சொல்

உருக. பிரிநிலை வினுவே யெதிர்மறை யொழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
யிருமூன் றென்ப வோகா ரம்மே.

இ - ள் : பிரிநிலைப்பொருட்டாவது முதலாக ஓகாரம் அறு வகைப்படும்.

எ-டு : 'யாரே தேறே னவர்பொய் வழங்கலரே' (குறுந்-உக.) என்பது தேறுவார் பிறரிற்பிரித்தலிற் பிரிநிலை யெச்சமாயிற்று. சாத்தானுண்டானே என்பது வினுவோகாரம். யாரே கொள்வேன் என்பது, கொள்ளேனென்னு மெதிர்மறை குறித்து நிற்றலின், எதிர்மறை யோகாரமாம். கொளலோ கொண்டான் என்பது, கொண்டுய்யப் போயினு னல்லனென்பது முதலாய ஒழியிசை நோக்கி நிற்றலின், ஒழியிசையோகாரம். திருமகளோவல்லள் அர மகளோவல்லள் இவள் யார் என்றவழித் தெரிதற்கண வருதலிற் றெரிநிலையோ காரம். ஓஒபெரியன் என்பது பெருமை மிகுதி யுணர்த்தலிற் சிறப்போ காரம். (அ)

'ஏ' என்னுஞ் சொல்

உஎடு. தேற்றம் வினுவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே.

இ - ள் : தேற்றேகார முதலாக ஏகார மைந்து ; எ - று.

எ-டு: உண்டோ மறுமை எனத் தெளிவின்கண் வருதலிற் றேற்றே காரம். நீயே கொண்டாய் என வினாப் பொருளுணர்த்தலின் வினாவேகாரம். அவரு ளிவனே கள்வன் எனப் பிரித்தலிற் பிரிநிலையேகாரம். நிலனே நீரே தீயே வளியே என எண்ணுதற்கண் வருதலின் எண்ணேகாரம். 'கடல்போற் றோன்றல காடிறந் தோரே' (அகம்-க.) என்பது செய்யுளிறுதிக்கண் வருத லின் ஈற்றசையேகாரம். வாடா வள்ளியங் காடிறந் தோரே' (குறுந்-உகக.) எனச் செய்யுளிடையும் வருதலின் ஈற்றசையென்பது மிகுதி நோக்கிச் சென்ற குறி. இஃ தசைநிலையாயினும் ஏகாரவேறுபா டாகலின் ஈண்டுக் கூறினர். (க)

'என' என்னுஞ் சொல்

உருஅ. வினையே குறிப்பே யிசையே பண்பே
யெண்ணே பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யெனவென் கிளவி.

இ-ள்: வினை முதலாகிய ஆறு பொருண்மையுங் குறித்து வரும் என வென்னு மிடைச் சொல்; எ-று.

எ-டு: 'மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய் (புறம்-கசஉ.) என வினைப் பொருண்மையும், 'துண்ணெனத் துடித்தது மனம்' எனக் குறிப்புப் பொருண்மையும், ஒல்லென வொலித்தது என இசைப்பொருண்மையும், வெள் ளென வினர்த்தது எனப் பண்புப்பொருண்மையும், நிலனென நீரெனத் தீயென வளியென என எண்ணுப்பொருண்மையும், 'அழுக்கா றெனவொருபாவி' (குறள்-கசுஅ.) எனப் பெயர்ப்பொருண்மையுங் குறித்து, என வென்னுஞ் சொல் வந்தவாறு கண்டுகொள்க. (கo)

'என்று' என்னுஞ் சொல்

உருக. என்றென் கிளவியு மதனே ரற்றே.

இ-ள்: என்றென்னு மிடைச்சொல்லும் என வென்பது போல அவ் வாறு பொருளுங் குறித்து வரும்; எ-று.

எ-டு: 'நரைவரு மென்றெண்ணி (நாலடி-கக.) எனவும், 'விண்ணென்று விசைத்தது' எனவும், 'ஒல்லென் றெருவிக்கு மொலிபுன லூரற்கு' (ஐந்திணை ஐம்பது-உஅ.) எனவும், பச்சென்று பசுத்தது எனவும், நிலனென்று நீரென்று தீயென்று எனவும், பாரி யென்றெருவ னுளன் எனவும் வரும். (கக)

உசுo. விழைவின் றில்லை தன்னிடத் தியலும்

இ-ள்: அப்பான் மூன்றே தில்லைச்சொல்' என்று சொல்லப் பட்ட மூன்றனுள், விழைவின்கண் வருந் தில்லை தன்மைக்க ணல்லது வாராது; எ-று.

தன்மைக்கண் வருதல் மேற்காட்டப்பட்டனவற்றுள்ளும் பிருண்டுங் கண்டு கொள்க. இடம் வரையறுத் தோதாமையின், விழைவின் றில்லை தன் மைக்கண் வருதலும் மேலே பெறப்பட்டதனைப் பின்னுங் கூறினர், ஏனை யிடத்து வாராதென்று நியமித்தற்கென்பது.

'ஏ' 'ஓ' சொற்களுக்கு மேலும் ஒரு முடிவு

உசஎக. தெளிவி னேயுஞ் சிறப்பி னோவு
மளபி னெடுத்த விசைய வென்ப.

இ - ள் : தெளிவின்கண் வரும் ஏகாரமுஞ் சிறப்பின்கண் வரும் ஓகாரமும் அளபான் மிக்க இசையை யுடைய வென்று சொல்லுவர் ஆசிரியர் ; எ - று.

அளபெடையாய் வருதல் மேற் காட்டப்பட்டனவற்றுள்ளும் பிரண்டுங் கண்டு கொள்க. (கூ)

'மற்று' என்னுஞ் சொல்

உசஉ. மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
யப்பா லீரண்டென மொழிமனர் புலவர்.

இ - ள் : மற்றென்னுஞ்சொல் வினைமாற்றும் அசைநிலையு மென இரண்டாம் ; எ - று.

எ-டு : 'மற்றறிவா ரல்வினை யாமிளையம்' (நாலடி-ஙக.) என்றவழி அறஞ்செய்தல் பின்னறிவாமென அக்காலத்து வினைமாற்றுதலான் மற்றென் பது வினைமாற்றின்கண் வந்தது. 'அதுமற் றவலங்கொள்ளாது தொதுமற் கலு ழும்' (குறுந்-கஉ.) என அசைநிலையாய் வந்தது. கட்டுரையிடையும் மற்றே என அசைநிலையாய் வரும். (கச)

'எற்று' என்னுஞ் சொல்

உசஙு. எற்றென் கிளவி யிறந்த பொருட்டே.

இ - ள் : எற்றென்னுஞ் சொல் இறந்த பொருண்மைத்து ; எ - று.

எ-டு : 'எற்றென் னுடம்பி னெழினலம்' என்பது என்னை யிறந்த தென்னும் பொருள்பட நின்றது. 'எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லா தேன்' என்பதூஉம் இதுபொழுது துணிவில்லாருட் துணிவில்லாதேன் யான் என்று துணிவிறந்த தென்பது பட நின்றது. (கஞ)

'மற்றையது' என்னுஞ் சொல்

உசச. மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை யொழிய வினங்குறித் தன்றே.

இ - ள் : மற்றைய தெனப் பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றை யென்னும் ஐகாரவீற் றிடைச்சொல் சுட்டப்பட்டதனை ஒழித்து, அதனினங்குறித்து நிற்கும் ; எ - று.

ஆடை கொணர்ந்தவழி அவ்வாடை வேண்டாதான் மற்றையது கொணர் வென்னும். அஃது அச்சுட்டிய வாடை யொழித்து அதற்கினமாகிய பிற வாடை குறித்து நின்றவாறு கண்டுகொள்க.

பெரும்பான்மையும் முதனிலையாய் நின்றல்லது அவ்வீடைச்சொல் பொருள் விளக்காமையின், 'மற்றையதென்னுங் கிளவி' என்றார். சிறுபான்மை

மற்றையாடை எனத் தானேயும் வரும். மற்றையஃது, மற்றையவன் என்னுந் தொடக்கத்தனவும் அவ்விடைச்சொன் முதனிலையாய பெயர்.

'மன்ற' என்னுஞ் சொல்

உகூடு. மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்.

இ - ள்: மன்ற வென்னுஞ்சொல், தெளிவு பொருண்மையை யுணர்த்தும்; எ - று.

எ-டு: 'கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே. (நற்றிணை - நூ)

என வரும். மடவையே யென்றவாறும். (கஎ)

'தஞ்சம்' என்னுஞ் சொல்

உகூக. தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே.

'முரசுகெழு தாயத் தரசே தஞ்சம்' (புறம-எஉ.) எனத் தஞ்சக்கிளவி அரசுகொடுத்த லெளிதென எண்மைப் பொரு ளுணர்த்தியவாறு கண்டு கொள்க. (கஅ

'அந்தில்' என்னுஞ் சொல்

உகூள. அந்தி லாங்க வசை நிலைக் கிளவியென்
றுயிரண் டாகு மியற்கைத் தென்ப.

இ - ள்: அந்தி லென்னுஞ்சொல், ஆங் கென்னும் இடப் பொருளுணர்த்துவதும் அசைநிலையு மென இரண்டாம்; எ - று.

எ - டு: வருமே—சேயிழை யந்திற் கொழுநற் காணிய' (குறுந்-உஉ.) என்புழி ஆங்கு வருமென்ற வாறும். 'அந்திற் கசினன் கழலினன்' (அகம்-எக.) என வாளாதே அசைத்து நின்றது. (உக)

'கொல்' என்னுஞ் சொல்

உகூஅ. கொல்லே யையம்.

குற்றிகொல்லோ மகன்கொல்லோ எனக் கொல் ஐயத்துக்கண் வந்த வாறு. (உய)

'எல்' என்னுஞ் சொல்

உகூக. எல்லே யிலக்கம்.*

எல்லென்பது உரிச்சொ னீர்மைத்தாயினும், ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையான், இடைச்சொல்லென்று கோடும்.

'எல்லீர்' (புறம-உச.) என எல்லென்பது இலங்குதற்கண் வந்தவாறு.

'ஆங்' என்னுஞ் சொல்

உஎ0. இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி
பலர்க்குரி யெழுத்தின் விகுதியொடு முடிமே.

இ - ள்: இயற்பெயர் முன்னர் வரும் ஆரென்னு மிடைச் சொற் பலரறிசொல்லான் முடியும்; எ - று.

---

* இலக்கணக்கொத்து நூலாசிரியர், எலலே விளக்கமெனப் பாடமகொண்டுள்ளனர். சொலலதிகாரம் ஓர் எட்டுப்பிரதியில எலலே யிரகமெனப பாடங்கோடற்கேதுவுணமையின் சிலர் இரகமெனப பாடங்கொணடு 'எலலே யிளங்கிளியே' எனத திருபபாவையில வரும இபபகுதியை யுதாரணமாகக் காட்டுகின்றனர். இப்பாவை யுரையாசிரியா 'எலலே' எனபதறகு எனனே யெனப பொருள்கொண்டுள்ளனர்.

ஈண் டியற்பெயரென்றது இருதிணைக்கும் அஃறிணை யிருபாற்கு முரிய பெயரை.

எ - டு : பெருஞ் சேந்தனூர் வந்தார், முடவனூர் வந்தார், முடத்தாமக் கண்ணியார் வந்தார், தந்தையார் வந்தார் எனவும்; நரியார் வந்தார் எனவும் வரும்.

தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்னும் ஐந்து மொழித்து அல்லா வியற்பெய ரெல்லாவற்று முன்னரும் அஃறிணை யியற்பெய ரெல்லாவற்று முன்னரும் ஆரைக் கிளவி வருதலின், பெரும்பான்மை குறித்து 'இயற் பெயர் முன்னர்' என்றார்.

நம்பியார் வந்தார், நங்கையார் வந்தார் எனச் சிறுபான்மை உயர்திணைப் பெயர் முன்னர் வருதல் ஒன்றென முடித்த லென்பதனாற் கொள்க.

ஆரைக்கிளவி கள் ளென்பதுபோல ஒற்றுமைப்பட்டுப் பெயரீறாய் நிற்ற லின், ஆரைக்கிளவி பலரறி சொல்லான் முடியுமென்றது அதனை யீறாக வுடைய பெயர் பலரறி சொல்லான்முடியு மென்றவாறும்.

'பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே' என ஆரைக் கிளவிய தியல் புணர்த்தவே, அஃது உயர்த்தற் பொருட்டாதலும், திணைவழுவும் பால் வழுவும் அமைத்தலும் பெற்றாம்.

ஒருமைப்பெயர் முன்னர் ஒருமை சிதையாமல் ஆரைக்கிளவி வந்து பலரறிசொல்லான் முடிதலின், ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியின் வேறுத லறிக. (உஉ)

அதற்கு, மேலும் ஒரு விதி

உஎக. அசைநிலைக் கிளவி யாகுவழி யறிதல்.

இ - ள் : ஆரைக்கிளவி அசைநிலையாமிட மறிக; எ - று.

எ - டு : 'பெயரி னுகிய தொகையுமா ருளவே' (சொல்-சுஎ.) எனவும், 'எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே' (எழுத்து-சுக.) எனவும் வரும்.

ஆகுவழியறித லென்றதனால், அசைநிலை யாங்கால் உம்மை முன்னரும், உம்மீற்று வினைமுன்னரு மல்லது வாராமை யறிக. சிறுபான்மை பிறழ்ந்து வருமேனுங் கொள்க.

'ஏ' 'குரை' என்னுஞ் சொற்கள்

உஎஉ. ஏயுங் குரையு மிசை நிறை யசைநிலை
யாயிரண் டாகு மியற்கைய வென்ப.

இ - ள் : ஏயென்னு மிடைச்சொல்லும் குரையென்னு மிடைச் சொல்லும் இசை நிறையும் அசைநிலையு மென ஓரொன் றிரண்டாம்; எ - று.

எ - டு : 'ஏ யிஃதொத்த னென்பெருன் கேட்டைக் காண்' (கலி-சுக.) என்பது இசைநிறை. ஏயென் சொல்லுக என்பது அசைநிலை. 'அளிதோ தானே யது பெறலருங் குரைத்தே' (புறம்-இ.) என்பது இசை

நிறை. 'பல்குரைத் துன்பங்கள் சென்று படும்' (குறள்-கoசஅ.) என்பது அசைநிலை.

தொடர்மொழி முதற்கட் பிரிந்துநின்றல்லது பெரும்பான்மையும் ஏகாரம் இசைநிறையும் அசைநிலையு மாகாமையின், சார்ந்த மொழியோடு ஒன்றுபட்டிசைத்து இடையும் இறுதியும் நிற்குங் தேற்றேகார முதலாயினவற்றோடு ஒருங்கு கூறுது வேறு கூறினர்.

அஃதேல், இதனை நிரனிறைப் பொருட்டாகக் கொண்டு ஏ இசைநிறை; குறை அசைநிலை யென்றாரால் உரையாசிரிய ரெனின்:—அற்றன்று : மற்று அந்தில் என்பனபோலப் பொருள்வகையான் வேறுபடுவனவற்றை இரண்டா மென்ப தல்லது, சொல்வகையான் இரண்டாகிய சொல்லை இரண்டா மென்றதனுன் ஒரு பயனின்மையின், அவர்க் கது கருத்தன் றென்க. அல்லதூஉம், ஒரு சொல்லே இசை நிறையும் அசைநிலையுமாக வுடைமையான் அவற்றை யுடன்கூறினு ரென்னுக்கால் இசைநிறையும் அசைநிலையும் ஒருங்கு மயங்கக் கூறலா மாகலானும், அவர்க் கது கருத்தன்மை யுணர்க. (உச)

'மா' என்னுஞ் சொல்

உஎங. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

இ - ள்: மாவென்னு மிடைச்சொல் வியங்கோளைச் சார்ந்து அசைநிலையாய் வரும்; எ - று.

எ - டு: 'புற்கை யுண்கமா கொற்கை யோனே' என வரும்.

முன்னிலை அசைச் சொற்கள்

உஎச. மியாயிக மோமதி யிகுஞ்சில் னென்னு
மாவயி னுறு முன்னிலை யசைச்சொல்.

இ - ள்: மியா முதலாகிய ஆறும் முன்னிலை மொழியைச் சார்ந்து வரும் அசைச் சொல்லாம்; எ - று.

எ - டு: கேண்மியா சென்மியா எனவும், 'கண் பனி யான்றிக வென்றி தோழி' எனவும், 'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ' (குறு-உ.) எனவும், உரைமதி வாழியோ வலவ' எனவும், மெல்லம் புலம்ப கண்டிகும்' எனவும், 'காப்பும் பூண்டிசிற் கடையும் போகலே' (அகம்-எ.) எனவும் வரும்.

'இகும்' 'சின்' என்னும் சொற்கள்

உஎடு. அவற்றுள்
இகுமுஞ் சின்னு மேனை யிடத்தொடுந்
தகுநிலை யுடைய வென்மனுர் புலவர்.

இ - ள்: மேற்கூறப்பட்ட ஆறனுள், இகுமுஞ் சின்னும் படர்க்கைச் சொல்லோடுந் தன்மைச்சொல்லோடும் பொருந்து நிலையுடையவென எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தவாறு.

எ - டு: 'கண்டிகு மல்லமோ' (ஐங்குறு-கஉக.) எனவும், 'தண்ணும் பதுமோ வென்றிசின் யானே' (நற்-அக.) எனவும், தன்மைக்கண் வந்தன.

'புகழ்க்கு மல்லரோ பெரிதே' எனவும், யாரஃ தறிந்திசி னோரே! (குறு-கசை.) எனவும் படர்க்கைக்கண் வந்தன. (உஎ)

'அம்ம' என்னுஞ் சொல்

உஎசூ. அம்மகேட் பிக்கும்.

இ - ள்: அம்மவென்னு மிடைச்சொல் ஒருவனை ஒருவன் ஒன்று கேளென்று சொல்லுதற்கண் வரும்; எ - று.

எ - டு: 'அம்ம வாழி தோழி' (ஐங்-ஙக.) என வரும்.

மியா இக முதலாகிய அசைநிலை ஒரு பொரு ளுணர்த்தாவாயினும் முன்னிலைக்க ணல்லது வாராமையான் அவ்விட முணர்விக்குமாறுபோல, அம்ம வென்பதூஉம் ஒரு பொரு ளுணர்த்தாதாயினும் ஒன்றனைக் கேட்பிக்குமிடத் தல்லது வாராமையான் அப்பொருளுணர்விக்குமென்பது விளக்கிய, கேட் பிக்கு மென்றார். (உஅ)

'ஆங்கு' என்னுஞ் சொல்

உஎஅ. ஆங்க வுரையசை.

இ - ள்: ஆங்கவென்னு மிடைச்சொல் கட்டுரைக்கண் அசை நிலையாய் வரும்; எ - று.

எ - டு: 'ஆங்கக்குயிலு மயிலுங்காட்டி' எனவரும். (உசூ)

ஒப்பில் போலி

உஎஅ. ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்.

இ - ள்: ஒப்புமையுணர்த்தாத போலிச்சொல்லும் ஆங்க வென்பதுபோல உரையசையாம; எ - று

எ - டு. மங்கலமென்பதோ ரூருண்டு போலும் என வரும்.

போலும் போல்வது என்னுந் தொடக்கத்துப் பலவாய்பாடுந் தழுவுதற்குப் போலியென்றார். 'நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல்வதாம்' (நாலடி-கஉச.) என்பது மது.

அசைநிலையும் பொருள் குறித்தல்லது நில்லாமையின் 'அப்பொருட் டாகும்' என்றார். (ஙம்)

அசைநிலைச் சொற்கள்

உஎசூ. யாகா

பிறபிறக் கரோபோ மாதென வரூஉ
மாயேழ் சொல்லு மசைநிலைக் கிளவி.

இ - ள்: யா முதலாகிய ஏழிடைச் சொல்லும் அசைநிலையாம் எ - று.

எ - டு: யா பன்னிருவர் மாணக்கருள ரகத்தியனுர்க்கு எனவும், 'புற நிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா' எனவும், 'தான் பிறவரிசை யறிதலிற் றன்னுந்தூக்கி' (புறம்-கசஅ.) எனவும், 'அதுபிறக்கு' எனவும், 'நோதக

விருங்குயி லாலுமரோ' (கலி-கூகூ.) எனவும், 'பிரியின் வாழா தென்போ தெய்ய' எனவும், 'விளிந்தன்று மாதவத் தெளிந்தவென் நெஞ்சே.' (நற்றிணை-களஅ.) எனவும் வரும்.

இடம் வரையருமையின் இவை மூன்றிடத்திற்கு முரிய.

ஆங்கவும் ஒப்பில்போலியும் உரை தொடங்குதற்கண்ணும் ஆதரமில்வழியும் வருதலின் வேறு கூறினார். (கூக)

பிரிவில் அசைநிலைகள்

உஅ0. ஆக வாக லென்ப தென்னு
மாவையின் மூன்றும் பிரிவி லசைநிலை.

இ - ள்: ஆக, ஆகல், என்பது என்னு மூன்றிடைச் சொல்லும், அசைநிலையாங்கால், இரட்டித்து நிற்கும்; எ - று.

பிரிவிலசைநிலை யெனவே, தனித்து நின்று அசைநிலை யாகா வென்பதாம்.

ஒருவன் யானின்னேன் என்றனும், நீ யின்னை என்றனும், அவ னின்னன் என்றனும் கூறியவழிக் கேட்டான் ஆக ஆக, ஆகல் ஆகல் என்னும்; இவை உடம்படாமைக்கணனும் ஆதரமில்வழியும் வரும். ஒருவ னொரு துரைப்பக் கேட்டான் என்பது என்னும். அது நன்குரைத்தற் கண்ணும் இழித்தற்கணனும வரும். பிறண்டி வரினும் வழக்கு நோக்கி யுணர்ந்து கொள்க. (கூஉ)

'ஔ' என்னுஞ் சொல்

உஅக. ஈரள பிசைக்கு மிறுதியி லுயிரே
யாயிய னிலையுங் காலத் தானு
மளபெடை நிலையுங் காலத் தானு
மளபெடை யின்றித் தான்வருங் காலையு
மூளவென மொழிப பொருள்வேறு படுதல்
குறிப்பி னிசையா னெறிப்படத் தோன்றும்.

இ - ள்: இரண்டு மாத்திரையை யுடைத்தாய மொழிக்கீறுகா தெனப்பட்ட ஔகாரம், பிரிவி லசைநிலை யென மேற்கூறப் பட்டனபோல இரட்டித்து நிற்குமிடத்தும், இரட்டியாது அள பெடையாய் நிற்குமிடத்தும், அளபெடையின்றித் தான் வரு மிடத்தும், பொருள் வேறுபடுத லுள; அப்பொருள்வேறுபாடு சொல்வான் குறிப்பிற்குத் தகு மோசை வேறுபாட்டாற் புலப் படும்; எ - று.

பொருள் வேறுபாடாவன வழக்கு நோக்கச் சிறப்பும்மாறுபாடுமாம்.

எ - டு: ஔஔவொருவன் றவஞ் செய்தவாறு என்றவழிச, சிறப்புத் தோன்றும். ஒரு தொழில் செய்வானை ஔஔ வினிச்சாலும் என்றவழி, மாறுபாடு தோன்றும். ஔஉ வொருவ னிரவலர்க் கீந்தவாறு. ஔஉவினி வெகுளல் எனவும்; ஔவவன் முயலுமாறு, ஔவினித்தட்டுப்புடையல் என

வும்; அளபெடுத்தும் அளபெடாதும் வந்தவழியும், அப்பொரு டோன்றியவாறு கண்டுகொள்க. இதனை இக்காலத்து ஓகாரமாக வழங்குப. பிற பொருள்படு மாயினும் அறிந்துகொள்க.

ஈரளபிசைக்கு மென்றே யொழியின் கெட்டெழுத்தெல்லாவற்றுமேலும், இறுதியிலுயிரென்றே யொழியின் எகரவொகரத்துமேலுஞ் சேறலான், 'ஈரள பிசைக்கு மிறுதியிலுயிர்' என்றார்.

இது தத்தங குறிப்பிற் பொருள் செய்வதாயினும் அடுக்கி வருதலுடை மையான் ஈண்டு வைத்தார். (கக)

குறிப்புச் சொற்கள்

கஅஉ. நன்றீற் றேயு மன்றீற் றேயு
மந்தீற் றேவு மன்னீற் றேவு
மன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்.

நன்றீற்றேயும் அன்றீற்றேயுமாவன நன்றே அன்றே என்பன. அந்தீற் றேவும் அன்னீற்றேவுமாவன அந்தோ அன்னே என்பன. நன்றின தீற்றின் கண் எனை விரியும். இவ்விரிவு ஏனையவற்றிற்கு மொக்கும். நன்றீற்றே யென்பதனுன் 'நம்மூர்ந்து வரூஉ மிகர வைகாரமும்' (சொல்-கசுஉ.) என் புழிப்போலச் சொன்முழுவதுங கொள்ளப்படும். ஒழிந்தனவு மன்ன.

குறிப்பொடுகொள்ளு மென்றது, மேலதுபோல இவையுங குறிப்போசை யாற் பொருளுணர்த்து மென்றவாறு.

ஒருவன் ஒன்றுரைத்தவழி அதற்கு மேவாதான் நன்றே நன்றே, அன்றே யன்றே என அடுக்கலும் வரும்; அவை மேவாமைக்குறிப்பு விளக்கும். அவனன்றே யிது செய்வான் என அடுக்காது நின்றவழி, அன்றீற்றேவுக்குத் தெளிவு முதலாகிய பிறபொருளும் படும். ஏனையிரண்டும் அடுக்கியும் அடுக் காதும் இரங்கற்குறிப்பு வெளிப்படுக்கும். இவையுந் தத்தங குறிப்பிற் பொருள் செய்குவன.

அன்னபிறவு மென்றதனுன், அதோ அதோ, சோ சோ, ஒக்கும் ஒக் கும் என்னுந் தொடக்கத்தன கொள்க. ()

'உம்' என்னுஞ் சொல்லுக்கு, மேலும் ஒருமுடிபு

உஅங. எச்ச வும்மையு மெதிர்மறை யும்மையுந்
தத்தமுண் மயங்கு முடனிலை யிலவே.

இனி, மேற்கூறப்பட்ட இடைச் சொல்லின்கட் படு மிலக்கண வேறுபா டுணர்த்துகின்றார்.

இ - ன்: எச்சவும்மை நின்றவழி எஞ்சு பொருட்கிளவியாம் எதிர்மறையும்மைத் தொடர் வந்து தம்முண் மயங்குத லில: எ - று.

சாத்தனும் வந்தான் கொற்றனும் வர லரியன் எனின் இயை யாமை கண்டுகொள்க.

ஏனையும்மையொடு மயங்குதல் விலக்காராயிற் றென்னை யெனின்: அவை எஞ்சுபொருட் கிளவியவாய் வாராமையி னென்பது. (உஇ)

உஅச. எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்.

இ - ள்: எச்சவும்மையாற் றழுவப்படும் எஞ்சு பொருட் கிளவி உம்மையில் சொல்லாயின், அவ்வும்மையில் சொல்லி அவ் வும்மைத் தொடர்க்குப் பின் சொல்லாது முன் சொல்லுக; எ - று.

எ - டு: சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான் என வரும். கொற்ற னும் வந்தான் சாத்தன் வந்தான் எனப் பிற்படக் கிளப்பின், முற்கூறியதனை விலக்குவதுபோன்று பொருள் கொள்ளாமை கண்டுகொள்க.

'அடகுபுலால் பாகு பாளிதமு மூணனுன்
கடல்போலுங் கல்வி யவன்'

என்பது மது.

உம்மையடாதே தானே நிற்றலிற் செஞ்சொ லென்றார்.

செஞ்சொலாயின் முற்படக் கிளக்க வெனவே, எஞ்சு பொருட்கிளவி உம்மையொடு வரிற் பிற்படக் கிளக்க வென்றவாறும். (ஈக)

முற்றும்மை எச்ச மாதல்

உஅடு. முற்றிய வும்மைத் தொகைச்சொன் மருங்கி
னெச்சக் கிளவி யுரித்து மாகும்.

இ - ள்: முற்றும்மை யடுத்து நின்ற தொகைச்சொல்லிடத்து எச்சச்சொல் லுரித்து மாம்; எ - று.

எ - டு: பத்துங்கொடால், அனைத்துங்கொடால் என்புழி முற்றும்மை தம்பொருளுணர்த்தாது சிலவெஞ்சக் கொடு வென்னும் பொருள் தோன்றி நின்றவாறு கண்டுகொள்க.

முற்றுதலென்னும் பொருளது பண்பு முற்றியவும்மையென ஒற்றுமை நயத்தாற் சொன்மே லேறி நின்றது.

உரித்துமாகு மெனவே, எசசப் பொருண்மை குறியாது நிற்றலே பெரும்பான்மை யென்பதாம்.

ஏற்புழிக்கோட லென்பதனுன் எசசப்படுவது எதிர்மறை வினைக்க ணென்று கொள்க. பத்துங்கொடு என்பது பிறவுங் கொடு வென்பதுபட நிற் றலின், விதிவினைக்கண்ணும் எச்சங் குறிக்கு மென்பாரு முளர். இப்பொழுது பத்துங்கொடு என்பது கருத்தாயின், இப்பொழுது பத்துக்கொடு என உம்மை யின்றியும் பொருள் பெறப்படும்; பத்துங்கொடு பிறவுங்கொடு என்பது கருத் தாயின், இஃதெச்சவும்மையாகலின் ஈண்டைக் கெய்தாது; அதனுன் அது பொருத்தமின் றென்க.

இவை மூன்று சூத்திரத்தானும் வழுவுற்க வென இடைச்சொற்பற்றி மரபுவழுக் காத்தவாறு. (உஎ)

'ஏ' என்னுஞ் சொல்லுக்கு மேலும் ஒரு முடிபு

உஅசு. ஈற்றுநின் றிசைக்கு மேயெ னிறுதி
கூற்றுவயி னேரள பாகலு முரித்தே.

இ - ள்: செய்யு ளிறுதிக்கண் நின்றிசைக்கும் ஈற்றசை யே காரங் கூற்றிடத்து ஒரு மாத்திரைத் தாகலு முரித்து; எ - று.

எ - டு: 'கடல்போற் றோன்றல காடிறந் தோரே' (அகம்-க.) என்புழி ஓரளபாயினவாறு கண்டுகொள்க.

தேற்றமுதலாயின நீக்கி ஈற்றசையே தழுவுதற்கு ஈற்று நின்றிசைக்கு மென்றார். செய்யுளிடை நிற்பதனை நீக்குதற்கு ஈற்று நின்றிசைக்கு மென்றே யொழியாது இறுதி யென்றார். மேனின்ற செய்யுளுறுப்போடு பொருந்தக் கூறுதற்கு வென்பார் கூற்றுவயி னென்றார்.

உம்மை எதிர்மறை. (உஅ)

உ. எண்ணிடைச் சொற்கள்

எண்ணில் வரும் 'உம்' 'என' என்பன

உஅள. உம்மை யெண்ணு மெனவெ னெண்ணுந்
தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே.

இ - ள்: உம்மையான் வருமெண்ணும், எனவான் வருமெண் ணும், இறுதிக்கட் டொகை பெறுதலைக் கடப்பாடாக வுடைய வல்ல என்றவாறு. எனவே, தொகை பெற்றும் பெறாதும் வரு மென்பதாம்.

எ - டு: 'உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வகுபின' (சொல்-கஉய.)

எனவும், 'இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றி' (சொல்-உகஎ.) எனவும், 'நிலனென நீரென நீயென வளியென நான்கும்' எனவும், 'உயி ரென வுடலென வின்றி யமையா' எனவும் அவ்விருவகை யெண்ணுந் தொகை பெற்றும் பெறாதும் வந்தவாறு.

தொகையெனப் பொதுப்படக் கூறியவதனான், எண்ணுப் பெயரேயன்றி அனைத்தும் எல்லா மென்னுந் தொடக்கத்தனவுங் கொள்க. (உக)

எண்ணில் வரும் 'ஏ' என்பது

உஅஅ. எண்ணே காரமி டையிட்டுக் கொளினு
மெண்ணுக்குறித் தியலு மென்மனார் புலவர்.

இ - ள்: சொற்றொறும் வாராது எண்ணேகாரம் இடையிட்டு வரினும் எண்ணுதற் பொருட்டாம்; எ - று.

எ - டு: 'மலைநிலம் பூவே நிலைக்கோலென் றின்னர்'
எனவும்,

தோற்ற மிசையே நாற்றஞ் சுவையே
யுறலோ டாங்கைம் புலனென மொழிப '

எனவும் வரும்.

எண்ணுக் குறிதது வருவன எண்ணப்படும் பெயரெல்லாவற்றோடும் வருதன் மரபாயினும், இடையிட்டு வரினும் அமைக வென அமைத்தவாறு.

எனவும் என்றும் சொற்றொறுமை வாராது ஒருவழி நின்றும் எண்ணுக் குறிக்குமாலெனின் :—அவை ஒருவழி நின்று எல்லாவற்றோடும் ஒன்றுதலின் ஆண்டாராய்ச்சி யில்லை யென்க.

பிறவெண ஓடாநின்றவழி ஏகாரவெண்ணு இடை வந்தாயினும், ஓடாநின்ற பிறவெண்ணேயாமென உரைத்தாரால் உரையாசிரியரெனின் ;—அவ்வாறு விரா யெண்ணியவழிப் பிறவெணணுற் பெயர் கொடுப்பின் அதனோ ஏகாரவெண்ணென்பாரையும் விலக்காமையானும், பிறவெண்ணு மென்றதனாற் பெறப்படுவதோர் பயனின்மையானும், அவாகதது கருத்தன் றென்க. (சய)

'எனு' 'என்று' என்னுஞ் சொற்கள்

உஅக. உம்மை தொக்க வெனுவென் கிளவியு
மாவி ருகிய வென்றென் கிளவியு
மாயிரு கிளவியு மெண்ணுவழிப் பட்டன.

இ - ள் : உம்மை தொக்குநின்ற எனுவென்னு மிடைச்சொல்லும் என்றுவென்னு மிடைச்சொல்லும் இரண்டும் எண்ணுமிடத்து வரும்; எ - று.

எ - டு : நிலனெனு நீரெனு எனவும நிலனென்று நீரென்று எனவும் வரும்.

உம்மைதொக்க வெனுவென்கிளவி யெனவே, எனுவுமென அச்சொல் உம்மோடு வருதலுமுடைத்தென்பதாம. உம்மோடு வந்தவழி அவ்வெண்ணுமமை எண்ணு ளடங்கும்.

எண்ணுவழிப்பட்டன வெனவே, அவை சொற்றொறும வருதலேயன்றி இடையிட்டும் வருமென்பதாம். 'பின்சா யலபுடை தேவகை யெனு' (சொல்-அஉ.) எனவும், 'ஒப்பிற் புகழிற் பழியி னென்று' எனவும் இடையிட்டு வந்தவாறு. இவை எண்ணுதற்கண் வாராமையானும், 'அவற்றின் வருஉ மெண்ணினிறுதியும்' (சொல்-உகஅ.) எனச சூத்திரஞ் சுருங்குதற்கிறப்பினுனும், அவற்றினை ஈண்டு வைத்தார். (சக)

தொகை பெற்றே முடியும் எண்ணிடைச் சொற்கள்

உகஅ. அவற்றின் வருஉ மெண்ணி னிறுதியும்
பெயர்க்குரி மரபிற் செவ்வெ ணிறுதியு
மேயி னுகிய வெண்ணி னிறுதியும்
யாவயின் வரினுந் தொகையின் றியலா.

இ - ள் : மேற்சொல்லப்பட்ட எனு என்று என்பனவற்றுன் வரும் எண்ணி னிறுதியும், இடைச்சொல்லா னன்றிப் பெயரா

னெண்ணப்படுஞ் செவ்வெ ணிறுதியும், ஏகாரத்தான் வரும் எண்ணினிறுதியும், யாதானுமோ ரிடத்து வரினுந் தொகையின்றி நில்லா; எ - று.

எ - டு: நிலனெனு நீரெனு விரண்டும் எனவும், நிலனென்ரு நீரென்ரு விரண்டும் எனவும், நிலநீரென விரண்டும் எனவும், நிலனே நீரேயென விரண்டும் எனவும் தொகை பெற்று வந்தவாறு.

செவ்வெண் இடைச்சொல்லெண் ணன் றென்ரு ராயினும், எண்ணுதலுந் தொகை பெறுதலுமாகிய ஒப்புமையான் ஈண்டுக் கூறினர். (சஉ)

எண்ணில் வரும் உம்முக்கு, மேலும் ஒரு முடிபு

உகூக. உம்மை யெண்ணி னுருபு தொகல் வரையார்.

இ - ள்: உம்மை யெண்ணின்கண் உருபு தொகுதல் வரையப்படாது; எ - று.

'பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலு
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப' (சொல்-கoச.)

என்னும் பொதுவிதியான் உம்மையெண்ணின்கண் உருபு தொகல் பெறப்பட்டமையால், பெற்றதன் பெயர்த்துரை நியமப்பொருட்டாகலான் உம்மை யெண்ணி னுருபுதொகல் வரையப்படாது; ஏனையெண்ணின்கண் அவை வரையப்படுமென நியமித்தல் இதற்குப் பயனுகக் கொள்க.

'குன்றி கோபங் கொடிவிடு பவள
மொண்செங் காந்த ளொக்கு நின்னிறம்'

எனப் பிறவெண்ணின்கண் உருபு தொக்கதாலெனின்:—அற்றன்று: செவ்வெண் தொகையின்றி நில்லாமையின் அவற்றையென ஒரு சொல் விரிக்கப்படும்; விரிக்கவே, குன்றி முதலாயின எழுவாயாய் நின்றனவா மென்பது.

எ - டு:

'பாட்டுங் கோட்டியு மறியாப் பயமி
றேக்கு மரம்போ னீடிய வொருவன்.'

'இசையினுங் குறிப்பினும் பண்பினும் தோன்றி' (சொல்-உகஎ.) என உம்மை யெண்ணின்கண் உருபு தொக்கவாறு கண்டுகொள்க.

வரையா ரென்றதனுன், ஆண்டும் எல்லாவுருபுந் தொகா; ஐயுங் கண்ணுமே தொகுவனவெனக் கொள்க.

யானை தேர் குதிரை காலா ளெறிந்தார் என உம்மையும் உருபும் உடன் றொக்கவழி, உம்மைத் தொகை யென்னுது உருபுதொகை யென்க வென்பது இசைநூத்திரத்திற்குக் கருத்தாக உரைத்தாரால் உரையாசிரியரெனின்:—அஃது உம்மைத் தொகையாதலின் ஒருசொன் னடைத்தாய் உருபேற்ரு னும் பயனிலை கொண்டானும் நிற்கும்; அத்தொகையிடை உருபின்மை, சிற்றறிவினர்க்கும் புலனும்; அதனுன் அஃதவர்க்குக் கருத்தன்மை சொல்லவேண்டுமோ வென்பது. ()

உ. புறனடை

'உம்' 'உந்து' ஆதல்

உகூஉ, உம்முந் தாகு மிடனுமா ருண்டே.

இ - ள்: வினைசெயன் மருங்கிற் காலமொடு வருவனவற்றுள் உம்மீறு உந்தாய்த் திரிதலு முடைத்து; எ - று

எ - டு: 'நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து' (புறம்-உகூஙி.) எனவும், 'நாரரி நறவினுண் மகிழ்தாங் குந்து' எனவும் வரும்.

வினைசெயன்மருங்கிற் காலமொடு வரும் உம்மென்பது எற்புழிக்கோட லென்பதனைப் பெற்றும்.

இடனுமாருண்டேயென்றது, இத்திரிபு பெயரெச்சத்திற் கீறுயவழி யென்பது கருதிப்போலும்.

தம்மீறு திரிதன் முதலாயின இவ்வோத்தினுட் கூறப்படும் இடைச் சொற்கே யென்பது இதனானும் பெற்றும். வினையியலுள்ளுங் கூறப்படுமாயி னும், இடைச்சொற் றிரிபாகலான் ஈண்டுக் கூறலும் இயைபுடைத் தென்பது. (சச)

எண்ணிடைச் சொற்கள் வினைச்சொற்களிலும் வருதல்

உகூங. வினையொடு நிலையினு மெண்ணுநிலை திரியா நினையல் வேண்டு மவற்றவற் றியல்பே.

இ - ள்: வினையொடு நிற்பினும் எண்ணிடைச் சொற்கள் தங்நிலையிற் றிரியா; அவற்றொடு வருங்கால் அவற்றவற்றியல்பு ஆராய்தல்வேண்டும்; எ - று.

எ - டு: உண்டுந் தின்றும் பாடியும் வந்தான் எனவும், உண்ணவெனத் தின்னவெனப் பாடவென வந்தான் எனவும் வரும்.

ஒழிந்தவெண்ணொடு வருவனவுளவேற் கண்டுகொள்க.

பெரும்பான்மையும் பெயரோடல்லது எண்ணிடைசொல் நில்லாமை யின் அதனை முற்கூறி, சிறுபான்மை வினையொடு நிற்றலு முடைமையான் இதனை ஈண்டுக் கூறினார்.

நினையல் வேண்டு மவற்றவற்றியல்பே யென்றதனான், எண்ணிடைச் சொல் முற்றுச்சொல்லும் பெயரெச்சமும் பற்றி வாரா தென்பதூஉம், வினை யெச்சத்தோடும் எற்பன வல்லது வாராவென்பதூஉம், ஆண்டுத் தொகை பெறுதல் சிறுபான்மை யென்பதூஉங் கொள்க.

சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான், வேடன் வந்தான் என மூவ ரும் வந்தமையாற் கலியாணம் பொலிந்தது எனச் செவ்வெண் தொகை பெற்று வந்ததென்றாரால் உரையாசிரியரெனின்:—அவை எழுவாயும் பய னிலையுமாய் அமைந்துமாறுதலின் எண்ணப்படாமையானும், மூவருமென்பது சாத்தன் முதலாயினோர் தொகையாகலானும், அது போலியுரையென்க. (சஙி)

எண்ணிடைச் சொற்கள் பிரிந்து சென்று ஒன்றுதல்

உகூச. என்று மெனவு மெரடுவுந் தோன்றி
யொன்றுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே.

இ - ள்: என்றும் எனவும் ஒடுவும் என்பன ஒருவழித் தோன்றி எண்ணினுட் பிறவழியும் பிரிந்து சென்று ஒன்று மிட முடைய; எ - று.

எ - டு: 'வினைபகை யென்றிரண்டி னெச்சம்' (குறள் - கூஎச.) எனவும், கண்ணிமை நொடியென' (நூன்மரபு-எ.) எனவும், 'பொருள் கருவி காலம் வினையிடனேடைந்தும்' (குறள்-கூஎடு.) எனவும், அவை ஒருவழி நின்று, வினையென்று, பகையென்று எனவும், கண்ணிமையென நொடியென எனவும், பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு இடத்தொடு எனவும் நின்றவிடத்துப் பிரிந்து, பிறவழிச சென்று ஒன்றியவாறு கண்டு கொள்க.

ஒன்றுவழியுடைய வென்றதனால், சொற்றொறு நிற்பதே பெரும் பான்மை யென்பதாம். சொற்றொறு நின்றவெண் இக்காலத்தரிய. ஒடுவென் பதோ ரிடைச்சொல் எண்ணின்கண் வருத லிதனாற் கொள்க.

இவை மூன்றும் பொருளிற்பிரிந்து எண்ணின்கண் அசையாய் வருதலு டைய வென்பது உரையாசிரியர்க்குக் கருத்தென்பாரு மூளர். அசைநிலையென் பது இச்சூத்திரத்தாற் பெறப்படாமையானும், 'கண்ணிமை நொடி' என்னுஞ் சூத்திரத்து எனவைக் கண்ணிமை யென்பதனோடுங் கூட்டுகவென் றுரைத்த லானும், அவர்க்கது கருத்தன்றென்க.

இடைச் சொற்களின் பொருளறியுமாறு

உகூடு. அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த வியல வாயினும்
வினையொடும் பெயரொடு நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினுந் தெரிந்தனர் கொளலே.

இ - ள்: மேற்கூறப்பட்ட இடைச்சொற்கள், அவ்வச்சொல் லிற்கு அவையவை பொருளென நிலைபெறச் சொல்லப்பட்ட இயல்பையுடையனவாயினும், வினையொடும் பெயரொடும் ஆராய் ந்து உணரத் தோன்றி வேறு பொருளவாயும் அசைநிலையாயுந் திரிந்துவரினும், ஆராய்ந்து கொள்க; எ-று.

எனவே, கூறிய முறையான் வருதல் பெரும்பான்மையென்றும், வேறு பட வருதல் சிறுபான்மையென்றுஞ் சொல்லியவாறும்.

வினையொடும் பெயரொடு மென்றது, அவை வேறுபொருள வென் றுணர்தற்குச் சார்பு கூறியவாறு.

எ - டு: 'சென்றீ பெரும நிற்றகைக்குநர் யாரோ' (அகம்-சசு.) எனவும், 'கலக்கொண்டேன் கள்ளென்கோ காழ்கொற்றன் சூடென்கோ' எனவும் ஓகா

ரம் ஈற்றசையாயும் எண்ணுயும் வந்தது. 'ஓர்கமா தோழியவர் தேர்மணிக் குரலே' (அகம்-உஎக.) என மா முன்னிலை யசைச் சொல்லாயிற்று. 'அதுமற் கொண்கன் றேரே' என மன் அசைநிலை யாயிற்று. பிறவுமன்ன.

செய்யுளின்ப நோக்கி வினையொடும் பெயரொடு மென்றார். (சஎ)

இவ்வியலுக்குப் புறனடை

உகூசு. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.

இ - ள்: மேற்சொல்லப்பட்டனவன்றி யவை போல்வன பிற வரினும், அவற்றைக் கிளந்த சொல்லி னியல்பா னுணர்ந்து கொள்க; எ - று.

கிளந்தவற்றியலா னென்றது, ஆசிரியர் ஆணையானன்றிக் கிளந்தவற்றை யும் இன்னவென் றறிவது வழக்கினுட் சார்பும் இடமுக குறிப்பும் பற்றி யன்றே; கிளவாதவற்றையும் அவ்வாறு சார்பும் இடமுக குறிப்பும்பற்றி இஃதசைநிலை இஃதிசைநிறை இது குறிப்பால் இன்னபொரு ளுணர்த்தும் என் றுணர்ந்துகொள்க வென்றவாறு.

எ - டு: 'சிறிதுதவிர்க் கீக மாளரின் பரிசிலருய்ம்மார்' எனவும், 'சொல் லென் றெய்ய நின்னெடு பெயர்ந்தே' எனவும், 'அறிவார் யாரஃ திறுவுழி யிறுகென' எனவும், 'பணியுமா மென்றும் பெருமை' (குறள்-கூஎஅ.) எனவும், 'ஈங்கா குவா லென்றிகின் யானே' (நற்றிணை-நூறு.) எனவும், மாள, தெய்ய, என, ஆம், ஆல் என்பனவும் அசைநிலையாய வந்தன. 'குன்றுதொ முடலு நின்றதன் பண்பே' (திருமுருகா-உகஎ.) எனத் தொறுவென்பது தான் சார்ந்த மொழிப்பொருட்குப் பன்மையும் இடமாதலு முணர்த்தி நிற்கும். ஆனம், எனம், ஓனம் என்பன எழுத்துச்சாரியை. பிறவும் எடுத்தோதாத விடைச் சொலெல்லாம் இப்புறனடையாற் றழீஇக் கொள்க. (சஅ)

இடையியல் முற்றிற்று.

அ. உரியியல்

[உரிச்சொல் இலக்கணம் உணர்த்துவது]

க. பொது இலக்கணம்

உரிச்சொல்லின் இயல்பு

உகஎ. உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
யிசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி
யொருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கி
னெச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

நிறுத்த முறையானே உரிச்சொல் லுணர்த்திய வெடுத்துக்கொண்டார்; அதனுன் இவ்வோத்து உரியியலென்னும் பெயர்த்தாயிற்று. தமக்கியல் பில்லா விடைச்சொற்போலாது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குத் தாமே யுரியவாதலின், உரிச்சொல்லாயிற்று. பெரும்பான்மையுஞ் செய்யுட் குரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற் றென்பாரு முளர்.

இ - ள்: உரிச்சொல்லை விரித்துரைக்குமிடத்து, இசை குறிப்புப் பண்பென்னும் பொருண்மேற் றோன்றி, பெயர்க்கண்ணும் வினைக்கண்ணுந் தம்முருபு தடுமாறி, ஒருசொற் பல பொருட் குரித்தாய் வரினும் பலசொல் ஒருபொருட் குரித்தாய் வரினும் கேட்பானுற் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக்குரிய நிலைக்களத்தின்கண் யாதானுமொரு சொல்லாயினும் வேறு வேறு பொருளுணர்த்தப் படும் என்றவாறு.

என்றது, இசை குறிப்புப் பண்பென்னும் பொருளவாய்ப் பெயர் வினை போன்றும் அவற்றிற்கு முதனிலையாயுந் தடுமாறி ஒரு சொல் ஒரு பொருட் குரித்தாதலேயன்றி, ஒருசொற் பல பொருட்கும் பலசொல் ஒருபொருட்கும் உரியவாய் வருவன உரிச்சொல்லென்றும், அவை பெயரும் வினையும்போல ஈறுபற்றிப் பொருளுணர்த்தலாகாமையின், வெளிப்படாதவற்றை வெளிப் பட்டவற்றோடு சார்த்தித் தம்மையெடுத்தோதியே அப்பொரு ளுணர்த்தப் படுமென்றும், உரிச்சொற்குப் பொதுவிலக்கணமும் அவற்றிற்குப் பொரு ளுணர்த்துமுறைமையு முணர்த்தியவாறு.

குறிப்பு மனத்தாற் குறித் துணரப்படுவது. பண்பு பொறியா னுணரப் படுங் குணம்.

கறுப்பு, தவவென்பன பெயர் வினைப்போலி. துவைத்தல், துவைக்கு மென்பன பெயர் வினைக்கு முதனிலையாயின. உறு முதலாயின மெய்

தமொருது வருமாதலின், பெயரினும் வினையினு மெய்தமொறி யென்றது பெரும்பான்மைபற்றியெனக் கொள்க.

அவை கூறியவாற்றுற் பொருட்குரியவாய் வருமாறு முன்னர்க் காணப் படும்.

மெய்தமொறலும், ஒருசொற் பலபொருட் குரிமையும், பலசொல் ஒரு பொருட்குரிமையும் உரிச்சொற்கு உண்மையான் ஒதினுரேனும், உரிச்சொற்கு இலக்கணமாவது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குரியவாய் வருதலே யாம்.

ஒருசொல் ஒருபொருட்குரித்தாதல் இயல்பாகலாற் சொல்லாமையே முடியுமென்பது. (க)

கீழ்வருவன இன்ன உரிச்சொல் என்பது

உகூஅ. வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன.

இ - ள்; வெளிப்பட்ட உரிச்சொல், கிளந்ததனாற் பயனின்மையிற் கிளக்கப்படா; வெளிப்பட வாரா உரிச்சொன்மேற்றுக் கிளந்தோதல், எ - று.

'பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தி யெச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்' (சொல்-உகூஎ.) என்றதனால், பயிலாதவற்றைப் பயின்ற வற்றோடு சார்த்திப் பயின்றவற்றைப் பிறிதொன்றனோடு சார்த்தாது தம் மையே கிளந்தும் எல்லா வுரிச்சொல்லும் உணர்த்தப்படு மென்பதுபட்டு நின்றதனை விலக்கி, பயனின்மையாற் பயின்ற உரிச்சொற் கிளக்கப்படாது பயிலாத உரிச்சொல்லே கிளக்கப்படுமென, வரையறுத்தவாறு.

மேலவென்பது மேனவென நின்றது. (உ)

உ. சிறப்பிலக்கணம்

உரிச்சொற்களுள் 'உறு' 'தவ' 'நனி'

உகூக. அவைதாம்

உறுதவ நனியென வருஉ மூன்று
மிகுதி செய்யும் பொருள வென்ப.

வெளிப்படவாரா உரிச்சொல்லைக் கிளந்தோதி விரிக்கின்றார்.

அவைதாம் என்றது வெளிப்படவாரா உரிச்சொற்றும் என்றவாறு. அதற்கு முடிபு 'அவைதாம், அம்மாமெம்மே மென்னுங் கிளவியும்' (சொல்-உகஉ.) என்புழி உரைத்தாங் குரைக்க.

இ - ள்: 'உறுபுனற்றந்துல கூட்டி (நாலடி-கஅடு.) எனவும், 'ஈயாது வீயு முயிர்தவப் பலவே' (புறம்-உகூ.) எனவும், 'வந்துநனி வருந்தினை வாழியென் னெஞ்சே' (அகம்-கக.) எனவும், உறு, தவ, நனி யென்பன மிகுதியென்னுங் குறிப்புப்பொருளுணர்த்தும்; எ - று.

குறிப்புச்சொற் பரப்புடைமையான் முற்கூறினார். (ங)

'உரு' 'புரை'

நூ00. உருவுட் காகும் புரையுயர் பாகும்.

இ - ள்: 'உருகெழு கடவுள்' எனவும், 'புரைய மன்ற புரை யோர் கேண்மை' (நற்றிணை-க.) எனவும், உருவும் புரையும், உட் கும் உயர்பு முணர்த்தும்; எ - று. (ச)

'குரு' 'கெழு'

நூ0க. குருவுங் கெழுவு நிறனு கும்மே.

இ - ள்: 'குருமணித் தாலி' 'செங்கேழ் மென்கொடி' (அகம்-அ0.) எனக் குருவும் கெழுவும், நிறமென்னும் பண்புணர்த் தும்; எ - று. (ஞ)

'செல்லல்' 'இன்னல்'

நூ0உ. செல்ல லின்ன லின்னு மையே.

இ - ள்: 'மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்' (அகம்-உ.) எனவும், 'வெயில்புறந் தரூஉ மின்னலியக்கத்து' (மலைபடு-நூஎச.) எனவும், செல்லலும் இன்னலும் இன்மையை யென்னுங் குறிப்புணர்த்தும்; எ - று. (சு)

'மல்லல்' 'ஏ'

நூ0ங. மல்லல் வளனே.

நூ0ச. ஏபெற் றாகும்.

இ - ள்: 'மல்லனீ மால்வரை' (அகம்-நூஉ.) எனவும், 'ஏகல் லடுக்கம்' (நற்றிணை-ககசு.) எனவும், மல்லலும் ஏவும், வளமும் பெற்றுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று.

பெற்று—பெருக்கம். ஈது அக்காலத்துப் பயின்றதுபோலும். இவை யிரண்டு சூத்திரம். (எ) (அ)

'உகப்பு' 'உவப்பு'

நூ0ஞ. உகப்பே யுயர்த லுவப்பே யுவகை.

இ - ள்: 'விசும்புகந் தாடாது' எனவும், 'உவந்துவந் தார்வ நெஞ்சமோ டாய்நல னீஇய' (அகம்-கஞ.) எனவும், உகப்பும் உவப்பும், உயர்தலும் உவகையுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று.

'பசப்பு' 'பயப்பு'

நூ0ஃ. பயப்பே பயனும்.

நூ0எ. பசப்புநிற னாகும்.

இ - ள்: பயவாக் களரனீயர் கல்லா தவர்' (குறள்-சூ0ஃ.) எனவும், 'மையில் வாண்முகம் பசப்பூரும்மே' (கலி-எ.) எனவும், பயப்பும் பசப்பும், பயனும் நிற வேறுபாடுமாகிய குறிப்பும் பண்பு முணர்த்தும்; எ - று. (க0) (கக)

'இயைபு' 'இசைப்பு'

நடுஅ. இயையே புணர்ச்சி

நடுகூ. இசைப்பிசையாகும்.

இ-ன்: 'இயைந்தொழுகும்' எனவும், 'யாழிசையூப் புக்கும்' எனவும், இயைபும், இசைப்பும், புணர்ச்சிக் குறிப்பும் இசைப் பொருண்மையு மூணர்த்தியவாறு. (கஉ) (கக)

'அலமரல்' 'தெருமரல்'

நகஅ. அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி.

இ-ன்: 'அலமர லாயம்' (ஐங்-சுச.) எனவும், 'தெருமர லுள்ளமோ டன்னை துஞ்சாள்' எனவும், அலமரலும் தெருமர லும், சுழற்சியாகிய குறிப்புணர்த்தும்; எ-று. (கச)

'மழ' 'குழ'

நகக. மழவுங் குழவு மிளமைப் பொருள.

இ-ன்: 'மழகளிறு' (புறம்-நஅ.) எனவும், 'குழக்கன்று' (புறம்-கஅநு.) எனவும், மழவுங் குழவும், இளமைக் குறிப்புப் பொருளுணர்த்தும; எ-று. (கஞ)

'சிர்த்தி' 'மாலை'

நகஉ. சிர்த்தி மிகுபுகழ்.

நகந. மாலை யியல்பே.

இ-ன்: 'வயக்கல்சால் சிர்த்தி' எனவும், 'இரவரன் மாலை யனே' (குறிஞ்சிப்-உநஉ.) எனவும், சிர்த்தியும் மாலையும், பெரும் புகழும் இயல்புமாகிய குறிப்புணர்த்தும்; எ-று. (கசு) (கள)

'கூர்ப்பு' 'கழிவு'

நகச. கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்.

இ-ன்: 'துளிகூ ரெவ்வமொடு' (சிறுபாண்-நகூ.) எனவும், கழிகண் ணேட்டம் எனவும் 'கூர்ப்பும்' 'கழிவும', ஒன்றனது சிறத்தலாகிய குறிப்பை யுணர்த்தும் என்றவாறு. உள்ள தென்றது மூன் சிறவாதுள்ள தென்றவாறு. (கஅ)

'கதழ்வு' 'துனைவு'

நகஎ. கதழ்வுந் துனைவும் விரைவின் பொருள.

இ-ன்: 'கதழ்பரி நெடுந்தேர்' (நற்றிணை-உஉநு.) எனவும், 'துனைபரி நிவக்கும் புள்ளின் மான' எனவும், கதழ்வும் துனைவும், விரைவாகிய குறிப்புணர்த்தும்; எ-று. (கக)

'அதிர்வு' 'விருப்பு'

நகசு. அதிர்வும் விதிர்ப்பு நடுக்கஞ் செய்யும்.

இ-ன்: 'அதிர வருவதோர் நோய்' (குறள்-சுஉகூ.) எனவும், 'விதிர்ப்புற வறியா வேமக் காப்பினை' (புறம்-உ0.)

எனவும் அதிர்வும் விதிர்ப்பும், நடுக்கமாகிய குறிப்புணர்த்தும்; எ - று.

அதிழ்வென்று பாடமோதி, 'அதிழ்கண முரசம்' என்றுதாரணங் காட்டுவாருமுளர். (உo)

'வார்தல்' 'போகல்' 'ஒழுகல்'

நகள. வார்தல் போக லொழுகன் மூன்று
நேர்பு நெடுமையுஞ் செய்யும் பொருள.

இ - ள்: 'வார்ந்திலங்கும் வை யெயிற்று' (குறு-கச.) 'வார் கையிற் றிருழுதை' (அகம்-களந.) எனவும், 'போகு கொடி மருங் 'குல்' 'வெள்வேல் விடத்தேரொடு காருடைபோகி' (பதிற்-கந.) எனவும் 'ஒழுகுகொடி மருங்குல்' 'மால்வரையொழுகிய வாழை' (சிறுபாண்-உக.) எனவும், வார்தல், போகல், ஒழுகல் என்னு மூன்றுசொல்லும், நேர்மையும் நெடுமையுமாகிய பண்புணர்த்தும்; எ - று. (உக)

'தீர்தல்' 'தீர்த்தல்'

நகஅ. தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.

இ - ள்: தீர்தலுந் தீர்த்தலு மென்னு மிரண்டும் விடுதலாகிய குறிப்புணர்த்தும்; எ - று.

உ - ரை: 'துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை' (நற்றிணை-கoஅ.) என வரும்.

தீர்த்தல் விடுதற்பொருண்மைக்கண் வந்தவழிக் கண்டுகொள்க. தீர்த்த லென்பது செய்வித்தலே யுணர்த்திநின்ற நிலைமையெனின்:—செய்வித்தலே யுணர்த்து நிலைமை வேறேதின், 'இயைபே புணர்ச்சி' (உரியியல்-கஉ.) என்புழியும் இயைப்பென வேறேதல்வேண்டும்; அதனாற் றீர்த்தலுஞ் செய்தலே யுணர்த்துவதோ ருரிச்சொல் லெனவே படுமென்பது.

விடற்பொருட்டாகு மென்பதனை இரண்டனேடுங் கூட்டுக. பன்மை யொருமை மயக்க மெனினு மமையும். (உஉ)

'கெடவரல்' 'பண்ணை'

நகக. கெடவரல் பண்ணை யாயிரண்டும் விளையாட்டு.

இ - ள்: 'கெடவர லாயமொடு' எனவும், 'பண்ணைத் தோன் றிய வெண்ணுன்கு பொருளும்' (பொருள், மெய்ப்பாட்டியல்-க.) எனவும், கெடவரலும் பண்ணையும், விளையாட்டாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (உஉ)

'தட' 'கய' 'நளி'

நஉo. தடவுங் கயவு நளியும் பெருமை.

இ - ள்: 'வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்' (புறம்-நகச.) 'கயவாய்ப் பெருங்கை யானை' (அகம்-ககஅ.) 'நளிமலை

நாடன்' (புறம்-கஞ0.) எனத் தடவும் .கயவும் நளியும், பெருமை யாகிய பண்புணர்த்தும்; எ - று. (உச)

'தட' 'கய' 'நளி' என்பவற்றிற்கு, மேலும் பொருள்

நஉக. அவற்றுள்

தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்.

நஉஉ. கயவென் கிளவி மென்மையு மாகும்.

நஉந. நளியென் கிளவி செறிவு மாகும்.

இ - ள்: 'தடமருப்பெருமை' (நற்-கஉ0.) 'கயந்தலை மடப்பிடி (நற்-கநஎ.) 'நளியிரும்' * எனத் தடவென்கிளவி முதலாயின, பெருமையேயன்றிக் கோட்டமும் மென்மையுமாகிய பண்பும் செறிவாகிய குறிப்பு முணர்த்தும்; எ - று (உரு) (உச) (உள)

'பழுது' 'சாயல்' 'முழுது'

நஉச. பழுதுபய மின்றே.

நஉரு. சாயன் மென்மை.

நஉசு. முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே.

இ - ள்: 'பழுதுகழி வாழ்நாள்' 'சாயன் மார்பு' (பதிற்-கசு.) 'மண்முழுதாண்ட' எனப் பழுது முதலாயின, பயமின்மையாகிய குறிப்பும் மென்மையாகிய பண்பும் எஞ்சாமையாகிய குறிப்பு முணர்த்தும்; எ - று. (உஅ) (உசு) (நஉ0)

'வம்பு' 'மாதர்' 'நம்பு' 'மே'

நஉஎ. வம்புநிலை யின்மை.

நஉஅ. மாதர் காதல்.

நஉகூ. நம்பு மேவு நசையா கும்மே.

இ - ள்: 'வம்புமாரி'; (குறுந்-சுசு.) 'மாதர் நோக்கு' 'நயந்து நாம் விட்ட நன்மொழி நம்பி' (அகம்-ககஅ.) 'பேரிசை நவிரமேல வுறையுங், காரிகை யுண்டி; (மலைபடு-அஉ.) என வம்பும் மாத ரும், நிலையின்மையுங் காதலுமாகிய குறிப்புணர்த்தும். நம்பும் மேவும் நசையாகிய குறிப்புணர்த்தும்; மேவு - நசையாக. எ - று. (நக) (நஉ) (நந)

'ஓய்தல்' 'ஆய்தல்' 'நிழத்தல்' 'சாய்'

நந0. ஓய்த லாய்த னிழத்தல் சாஅ

யாவயி னன்கு முள்ளத னுணுக்கம்.

இ - ள்: 'வேனி லுழந்த வறிதுயங் கோய் களிறு' (கலி - எ.) 'பாய்ந்தாய்ந்த தாணைப் பரிந்தானை மைந்தினை' (கலி-கூசு.)

* 'நிலைபுனல் லேற்றுத கலைக்கை தருதீ, நளிதரினை வருதல்' (பதிற்று-ருஉ.) எனவும் பாடம்.

'நிழத்த யானை மேய்புலம் புடர' (மது-ஙாஙஉ.) 'கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்' (நெடுநல்-கஅ.) என ஓய்தன் முதலாயின நுணுக்கமாகிய குறிப்புணர்த்தும் என்றவாறு. ஆய்ந்த தாகின— பொங்குதல் விசித்தலாலுணுகிய தாகின. * உள்ள தென்றது முன்னுணுகாதுள்ள எ - று. (ஙச)

'புலம்பு' 'துவன்று' 'முரஞ்சல்' 'வெம்மை'

ஙஙக. புலம்பே தனிமை.

ஙஙஉ. துவன்றுநிறை வாகும்.

ஙஙங. முரஞ்சன் முதிர்வே.

ஙஙச. வெம்மை வேண்டல்.

இ - ள்: 'புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி' (அகம்-எ.) எனவும், ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்' (நற்-களக.) எனவும், 'சூன்முரஞ் செழிலி' எனவும், 'வெங்காமம்' (அகம்-கஙி.) எனவும், புலம்பு முதலாயின, தனிமையும் நிறைவும் முதிர்வுமாகிய குறிப்பும் விருப்புதலாகிய பண்புமுணர்த்தும்; எ - று.

(ஙடு) (ஙசு) (ஙஎ) (ஙஅ)

'பொற்பு' 'வறிது' 'ஏற்றம்'

ஙஙஞ. பொற்பே பொலிவு.

ஙஙட. வறிதுசிறி தாகும்.

ஙஙண. ஏற்ற நினைவுந் துணிவு மாகும்.

இ - ள்: 'பெருவரை யடுக்கம் பொற்ப' (நற்-ஙச.) எனவும், 'வறிதுவடக் கிறைஞ்சிய' (பதிற்-உச-) எனவும், 'கானலஞ்சேர்ப் பன் கொடுமை யேற்றி' (குறுந்-கசஞ.) 'ஏற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன்' எனவும், பொற்பு முதலாயின, முறை யானே பொலிவும், சிறிதென்பதூஉம் நினைவும் துணிவுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (ஙக) (சஐ) (சக)

'பிணை' 'பேண்'

ஙஙத. பிணையும் பேணும் பெட்பின் பொருள.

இ - ள்: 'அரும்பிணை யகற்றி வேட்ட ஞாட்பினும்' எனவும், 'அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்' (புறம்-கூக.) எனவும், பிணையும் பேணும், பெட்பின் பொருளாகிய புறந்தருதலென்னுங் குறிப்புணர்த்தும்; எ - று.

பெட்பின் பொருள வென்றதனால், பெட்பின் பொருளாகிய விருப்புத லுணர்த்தலுங் கொள்க. அது வந்தவழிக் கண்டுகொள்க. (சஉ)

* 'வீயதலாலுணுகியதாகின' எனவும் பாடம்.

'பணை'

நகக. பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்.

இ - ள். பணைத்துவீழ் பகழி' எனப் பணை யென்பது பிழைத்த லாகிய குறிப்புணர்த்தும்; அதுவே யன்றி 'வேய்மருள் பணைத் தோள்' (அகம்-க.) எனப் பெருப்பாகிய குறிப்பு முணர்த்தும், எ - று.

பெருமையாகிய பண்புணர்த்தாது பெருத்தலாகிய குறிப்புணர்த்து மென்பார் பெருப்பென்றார். (சக)

'படர்'

நகசo. படரே யுள்ளல் செலவு மாகும்.

இ - ள்: 'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி' (புறம்-ஸஎ.) 'கறவை கன்றுவயிற் படர' (குறுந்-கoஅ.) எனப் பட ரென்பது உள்ளுதலுஞ் செலவுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று.

'பையுள்' 'சிறுமை'

நகஅக. பையுளுஞ் சிறுமையு நோயின் பொருள.

இ - ள்: 'பையுண் மாலை' (குறு-ககூடு.) எனவும், 'சிறுமை யுறுப செய்பறி யலரே' எனவும், பையுளுஞ்சிறுமையும், நோயா கிய குறிப்புணர்த்தும்' எ - று. (சடு)

'எய்யாமை'

நகசஉ. எய்யா மையே யறியா மையே.

இ - ள்; 'எய்யா மையலை நீயும் வருந்துதி' (குறுஞ்சிப்-அ.) என எய்யாமை அறிவின்மையாகிய குறிப்புணர்த்தும்; எ - று.

அறிதற் பொருட்டாய் எய்தலென்றலும் எய்த்தலென்றலுஞ் சான் றோர் செய்யுட்கண் வாராமையின், எய்யாமை எதிர்மறையன்மை யறிக. (சக)

'நன்று'

நகசஙக. நன்றுபெரி தாகும்.

இ - ள்: 'நன்று, மரிதுதுற் றனையாற் பெரும' (அகம்-கo.) என நன்றென்பது பெரிதெனலுங் குறிப்புணர்த்தும் எ - று.

பெருமை யென்றது பெரிதென்றதனுன் நன்றென்பது வினையெச்ச மாதல் கொள்க. (சஎ)

'தவ'

நகசச. தாவே வலியும் வருத்தமு மாகும்.

இ - ள்: 'தாவி னன்பொன் றிறைய பாவை' (அகம்-உகஉ.) எனவும், 'கருங்கட்டாக்கலை பெரும்பிறி துற்றென; (குறு-சுகூ.) எனவும், தாவென்பது வலியும் வருத்தமுமாகிய குறிப்புணர்த் தும்' எ - று. (சஅ)

'தெவு' 'தெவ்வு'

நசருு. தெவுக்கொளற் பொருட்டே.
நசசுு. தெவ்வுப்பகை யாகும்.

இ - ள்: 'நீர்த் தெவுநிறைத் தொழுவர்' (மது-அகு.) எனவும், 'தெவ்வுப் புலம்' எனவும், தெவுந் தெவ்வும், முறையானே கொள்ளுதலும் பகையுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று.
(சகூ)(நுo)

'விறப்பு' 'உறப்பு' 'வெறுப்பு'

நசஎ. விறப்பு முறப்பும் வெறுப்புஞ் செறிவே.

இ - ள்: 'விறந்த காப்போ டுண்ணின்று வலியுறுத்தும்' எனவும், 'உறந்த விஞ்சி' எனவும், 'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' (புறம்-நுஉ.) எனவும், விறப்பு முதலாயின செறிவென்னுங் குறிப்புணர்த்தும்; எ - று. (நுக)

'விறப்பு' என்பதற்கு, மேலும் ஒரு பொருள்

நசஅ. அவற்றுள்
விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்.

இ - ள்: 'அவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல' (பெரும் பாண்-உஉசு.) என விறப்பென்பது செறிவே யன்றி வெருவுதற் குறிப்புமுணர்த்தும்; எ - று. (நுஉ)

'கம்பலை' 'சும்மை' 'கலி' 'அழுங்கல்'

நசக. கம்பலை சும்மை கலியே யழுங்க
லென்றிவை நான்கு மரவப் பொருள.

இ - ள்: 'கம்பலை மூதூர்' (புறம்-நுச.) எனவும், 'ஒரு பெருஞ் சும்மையொடு' எனவும், 'கலிகொளாய மலிபுதொகு பெடுத்த' (அகம்-ககு.) எனவும், 'உயவுபுணர்ந் தன்றிவ் வழுங்க லூரே' (நற்-உoநு.) எனவும், கம்பலை முதலாகிய நான்கும் அரவமாகிய இசைப்பொருண்மை யுணர்த்தும்; எ - று. (நுந)

'அழுங்கல்' என்பதற்கு, மேலும் இருபொருள்

நடுo. அவற்றுள்
அழுங்க லிரக்கமுங் கேடு மாகும்.

இ - ள்: பழுங்க ணுேட்டமு நலிய வழுங்கின னல்லனே' (அகம்-சுசு.)எனவும், 'குணனழுங்கக் குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்கு' (நாலடி-நடுநு.) எனவும், அழுங்கல், அரவமேயன்றி இரக்கமுங் கேடுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று, (நுச)

'கழுமு'

நூருக. கழுமென் கிளவி மயக்கஞ் செய்யும்.

இ - ள்: 'கழுமிய ஞாட்பு' (களவழி-கக.) எனக்கழுமென் பது மயக்கமாகிய குறிப்புணர்த்தும்; எ-று. (நுடு)

'செழுமை'

நூருஉ. செழுமை வளனுங் கொழுப்பு மாகும்.

இ - ள்: 'செழும்பல் குன்றம்' எனவும், 'செழுந்தடி தின்ற செந்நாய்' எனவும், செழுமை, வளனுங் கொழுப்புமாகிய பண் புணர்த்தும்; எ - று. (நுசு)

'விழுமம்'

நூருஊ. விழுமந் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்.

இ - ள்: 'விழுமியோர் காண்டொறுஞ் செய்வர் சிறப்பு' (நாலடி-கருசு) எனவும், 'வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து' (புறம்-உஎ.) எனவும், நின்னுறு விழுமங் களைந்தோன். (அகம்-களை.) எனவும், விழுமம் முறையானே சீர்மையுஞ் சிறப் பும் இடும்பையுமாகிய குறிப்புணர்த்தும் எ - று. (நுஎ)

'கருவி' 'கமம்'

நூருசு. கருவி தொகுதி.

நூருடு. கமநிறைந் தியலும்.

இ - ள்: 'கருவி வானம், (புறம்-கருசு.) எனவும், கமஞ்சூன் மாமழை' (அகம்-சாடு.) (குறுந்-கருஅ.) எனவும, கருவியுங் கமமும், தொகுதியும் நிறைவுமாகிய குறிப்புணர்த்தும் என்ற வாறு. 'கருவிவானம்' என்புழிக் கருவி மின்னு முழக்கு முதலாய வற்றது தொகுதி. (நுஅ) (நுசு)

'அரி' 'கவவு'

நூருசு. அரியே யைம்மை.

நூருஎ. கவவுகத் திடுமே.

இ - ள்; 'அரிமயிர்த் திரண் முன்கை' (புறம்-கக.) எனவும், 'கழுஉவிளங்காரங் கவைஇய மார்பே' (புறம்-சுசு.) எனவும், அரி யுங் கவவும், ஐம்மையும் அகத்திடு மாகிய குறிபுணர்த்தும்; எ - று. (சுஐ) (சுக)

'துவைத்தல்' 'சிலைத்தல்' 'இயம்பல்' 'இரங்கல்'

நூருஅ. துவைத்தலுஞ் சிலைத்தலு மியம்பலு மிரங்கலு மிசைப்பொருட் கிளவி யென்மனார் புலவர்.

இ - ள்: 'வரிவளீஇ துவைப்ப' எனவும், 'ஆமா நல்லேறு சிலைப்ப' (முருகு-உகடு.) எனவும்,

'கடிமரந் தடியு மோசை தன்னூர்
செடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப,' (புறம்-உசு.)

எனவும், 'எறிரங்கிருளிடை' (கலி-சசு.) எனவும், துவைத்தன் முதலாயின இசைப்பொரு ளுணர்த்தும் என்றவாறு. (கூஉ)

'இரங்கல்' என்பதற்கு, மேலும் ஒருபொருள்

நஉடுகூ. அவற்றுள்
இரங்கல் கழிந்த பொருட்டு மாகும்.

இ - ள்: 'செய்திரங்காவினை' (புறம்-கo.) என இரங்கல், இசையே யன்றிப் பொருளது கழிவாகிய குறிப்பு மூணர்த்தும்; எ - று.

கழிந்த பொருள்பற்றி வருங கவலையைக் கழிந்த பொருளென்றார். (சுஉ)

'இலம்பாடு' 'ஒற்கம்'

நஉசுo. இலம்பா டொற்க மாயிரண்டும் வறுமை.

இ - ள்: 'இலம்படு புலவரேற்றகை நிறைய' (மலைபடு-நுஎசு.) எனவும், 'ஒக்கலொற்கஞ் சொலிய' (புறம்-நஉஎ.) எனவும், இலம்பாடும் ஒற்கமும் வறுமையாகிய குறிப்புணர்த்தும்; எ-று.

இலமென்னு மூரிச்சொல், பெருமபான்மையும் பாடென்னுந் தொழில் பற்றி யல்லது வாராமையின் இலமபாடென்றார். (கச)

'ஞெமிர்தல்' 'பாய்தல்'

நஉசுக. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள.

இ - ள்: 'தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து' (நெடு நல்-சுயி.) எனவும், 'பாய்புனல்' எனவும், ஞெமிர்தலும் பாய்தலும், பரத்தலாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (சுருு)

'கவர்வு' 'சேர்' 'வியல்'

நஉசுஉ. கவர்வுவிருப் பாகும்.

நஉசுங. சேரே திரட்சி.

நஉசுச. வியலென் கிளவி யகலப் பொருட்டே.

இ - ள்: 'கவர்நடைப் புரவி' (அகம்-கநo.) எனவும், 'சேர்ந்து செறி குறங்கு' (நற்றிணை-களo.) எனவும், 'வியலுலகம்' எனவும், கவர்வு முதலாயின முறையானே விருப்புந் திரட்சியும் அகலமுமாகிய குறிபபுணர்த்தும்; எ - று. (சுசு) (சுள) (சுஅ)

'பேம், 'நாம்' 'உரும்'

நஉசுரு. பேநா முருமென வருஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சப் பொருள.

இ - ள்: 'மன்ற மராஅத்த பேமுதிர் கடவுள்' (குறுந்-அஎ.) எனவும், 'நாநல்லார்' எனவும், 'உருமில் சுற்றம்' (பெரும்பாண்-

சசள.) எனவும், பே முதலாகிய மூன்றும் அச்சமாகிய குறிப் புணர்த்தும்; எ - று. (கூகூ)

'வய' 'வாள்' 'துயவு'

நகூகூ.வயவலி யாகும்.

நகூள.வாளொளி யாகும்.

நகூஅ. துயவென் கிளவி யறிவின் றிரிபே.

இ - ள்: 'துன்னருந் துப்பின் வயமான்' (புறம்-ஈசை.) எனவும், 'வாண்முகம்' (புறம்-கூ.) எனவும், 'துயவுற்றேம் யாமாக' எனவும், வயமுதலாயின, வலியும் அறிவு வேறுபடுதலுமாகிய குறிப்பும் ஒளியாகிய பண்புமுணர்த்தும்;எ-று.(எ0)(எக)(எஉ)

'உயா' 'உசா' 'வயா'

நகூக. உயாவே யுயங்கல்.

நஎ0. உசாவே சூழ்ச்சி.

நஎக. வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்.

இ - ள்: 'பருந்திருந் தூயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை' (அகம்-ககூ.) எனவும், 'உசாத்துணை' (குறு-உடுஎ.) எனவும், 'வயவுறு மகளிர்' (புறம்-உடு.) எனவும், உயா முதலாயின, முறை யானே உயங்கலுஞ் சூழ்ச்சியும் வேட்கைப் பெருக்கமுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (எங) (எச) (எடு)

'கறுப்பு' 'சிவப்பு'

நஎஉ. கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள.

இ - ள்: 'நிற்கறுப்பதோ ரருங்கடி முனையள்' எனவும், 'நீ சிவந் திறுத்த நீரழி பாக்கம்' (பதிற்-கஙூ.) எனவும், கறுப்புஞ் சிவப்பும், வெகுளியாகிய குறிப்புணர்த்தும்; எ - று.

கறுமை செம்மையென்னுது கறுப்புச சிவப்பென்றதனான், தொழிற் பட்டுழியல்லது அவை வெகுளி யுணர்த்தாமை கொள்க. (எசு

அவற்றிற்கு, மேலும் ஒரு பொருள்

நஎங. நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப.

இ - ள்: 'கறுத்த காயா' 'சிவந்த காந்தள்' (பதிற்-கடு.) என அவை வெகுளியேயன்றி நிறவேறுபாடுணர்த்தற்கு முரிய; எ-று.

இவை வெளிப்படு சொல்லாயினும், கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள வென்றதனால், கறுங்கண், செவ்வாய் எனப் பண்பாயவழி யல்லது தொழிலாயவழி நிறவேறுபா டுணர்த்தா வென்பது படுதலின், அதனைப் பாதுகாத்தவாறு. (எஎ)

'நொசிவு' 'நுழைவு' 'நுணங்கு'

நூஎசை. நொசிவு நுழைவு நுணங்கு நுண்மை.

இ - ள்: 'நொசிமட மருங்குல்' (கலி-சுஅ.) எனவும், 'நுழை நூற் கலிங்கம்' (மலைபடு-இசுக.) எனவும், 'நுணங்குதுகி னுடக் கம்போல' (நற்றி-கடு.) எனவும், நொசிவு முதலாயின, நுண்மை யாகிய பண்புணர்த்தும்; எ - று. (எஅ)

'புனிறு'

நூஎடு. புனிறென் கிளவியின் றணிமைப் பொருட்டே.

இ - ள்: 'புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி' (அகம்-டுசு.) எனப் புனி றென்பது ஈன்றணிமையாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (எசு)

'நனவு'

நூஎசு. நனவே களனு மகலமுஞ் செய்யும்.

இ - ள்: 'நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன்' (அகம்-அஉ.) எனவும், 'நனந்தலையுலகம்' (பதிற்-சுஙு.) எனவும், நனவு, களனும் அகலமுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (அ0)

'மத'

நூஎஎ. மதவே மடனும் வலியு மாகும்.

இ - ள்: 'பதவு மேய்ந்த மதவுநடை நல்லான்' (அகம்-கச.) எனவும், 'கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு' (அகம்-நகூ) எனவும், மதவென்பது மடனும் வலியுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (அக)

அதற்கு, மேலும் இரு பொருள்

நூஎஅ. மிகுதியும் வனப்பு மாகலு மூரித்தே.

இ - ள்: 'மதவிடை' எனவும், 'மாதர் வாண்முக மதைஇய நோக்கே' (அகம்-கநo.) எனவும், மடனும் வலியுமே யன்றி மிகு தியும் வனப்புமாகிய குறிப்புஞ் சிறுபான்மை யுணர்த்தும் என்ற வாறு. மதவிடை யென்புழி மிகுதி, உள்ள மிகுதி. (அஉ)

'யாணர்'

நூஎகூ. புதுவதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி.

இ - ள்: 'மீனெறு பெயரும் யாண ரூர' (நற் - உகo.) என யாணரென்பது வாரி புதிதாகப் படுதலாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (அங)

'அமர்தல்' 'யாணர்'

நூ.அ0. அமர்தன் மேவல்.

நூ.அக. யா ணுக் கவினும்.

இ - ள்: 'அகனமர்ந்து செய்யா ளுறையும்' (குறள்-அச.) எனவும், 'யாணது பசலை, (நற்றிணை-ரு0.) எனவும், அமர்தலும் யாணும், முறையானே மேவுதலுங் கவினுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (அச) (அரு)

'பரவு' 'பழிச்சு'

நூ.அ2. பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள.

இ - ள்: 'நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே' (புறம்-நூநரு.) எனவும், 'கைதொழுஉப் பழிச்சி' (மது-சுகூச.) எனவும், பரவும் பழிச்சும், வழுத்துதலாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (அசு)

'கடி' என்னுஞ் சொல்

நூ.அங. கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்க மிகுதி சிறப்பே
யச்ச முன்றேற் ருயி ரைந்து
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.

இ - ள்: கடியென்னு முரிச்சொல் வரைவு முதலாகிய பத்துக்குறிப்பு முணர்த்தும்; எ - று.

எ - டு: 'கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு' (குறள்-சுடுஅ.) என வரைவும், 'கடிநனைப் பகழி' எனக் கூர்மையும், 'கடிகா' (களவழி-உசு.) எனக் காப்பும், 'கடிமலர்' எனப் புதுமையும், 'கடுமான்' (அகம்-கநச.) என விரைவும், 'கடும்பகல்' (அகம்-கசஅ.) என விளக்கமும், 'கடுங்கா லொற்றலின்' (பதிற் உஐ.) என மிகுதியும், 'கடுநட்பு' எனச் சிறப்பும், 'கடியையா னெடுங் தகை செருவத் தானே' என அச்சமும், 'கொடுஞ்சுழிப் புகார்த்தெய்வ நோக்கிக் கடுஞ்சூ டருகுவ னினக்கே' (அகம்-கக0.) என முன்றேற்றும் உணர்த்தியவாறு கண்டுகொள்க.

முன்றேற்று-புறத்தின்றித் தெய்வமுதலாயினவற்றின் முன்னின்று தெளித்தல். (அள)

அதற்கு, மேலும் இரு பொருள்

நூ.அச. ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே.

இ - ள்: 'கடுத்தன ளல்லளோ வன்னே' எனவும், 'கடி மிளகு தின்ற கல்லா மந்தி' எனவும், கடியென்கிளவி மேற்கூறப்பட்ட பொருளேயன்றிச் சிறுபான்மை ஐயமாகிய குறிப்புங் கரிப்பாகிய பண்பு முணர்த்துதற்கு முரித்து எ - று. (அஅ)

'ஐ' 'முனிவு' 'வை' 'எறுழ்'

நஅசு. ஐவியப் பாகும்.

நஅசூ. முனிவுமுனி வாகும்.

நஅஎ. வையே கூர்மை.

நஅஅ. எறுழ்வலி யாகும்.

இ - ள்: 'ஐதே காமம் யானே' (நற்றிணை-கசநஎ.) எனவும் 'சேற்றுநில முனிஇய செங்கட் காரான்' (அகம்-சசூ.) எனவும், 'வைநுனைப் பகழி' (முல்லை-எநஎ.) எனவும், 'போரெறுழ்த்திணி தோள்' (பெரும்பாண்-சூநஎ.) எனவும், ஐ முதலாயின முறையானே வியப்பும் முனிவும் கூர்மையும் வலியுமாகிய குறிப்புணர்த்தும்; எ - று. (அசு) (கo) (கூக) (கூஉ)

ஈ. சொல்லும் பொருளும்

உரிச்சொற் பொருள் மரபை ஒத்தது

நஅகூ. மெய்பெறக் கிளந்த வுரிச்சொல் லெல்லா
முன்னும் பின்னும் வருபவை நாடி
யொத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்த
றத்த மரபிற் ரோன்றுமன் பொருளே.

இ - ள்: இச்சொல் இப்பொருட்குரித்தென மேற்கூறப்பட்ட உரிச்சொ லெல்லாவற்றையும், அவற்று முன்னும் பின்னும் வருமொழிகளை ஆராய்ந்து, அம்மொழிகளுட் டக்க மொழியாலே ஒருபொரு ளுணர்த்துக; இவ்வாறுணர்த்தவே, வரலாற்றுமுறைமையாற் றத்தமக்குரித்தாய பொருள் விளங்கும்; எ - று.

இஃது என் சொல்லியவாறே வெனின்:—

'உறுதவ நனியென வரூஉ மூன்று
மிகுதி செய்யும் பொருள வென்ப' (சொல்-உகக)

எனவும்,

'செல்ல வின்ன வின்ன மையே' (சொல்-நமஉ.)

எனவும், ஓதியவழி, அவை வழக்கிடைப் பயின்ற சொல்லன்மையான், இவை மிகுதியும் இன்ன்மையு முணர்த்துமென்று ஆசிரியராணையாற் சொள்வதல்லது வரலாற்றுப் பொருளுணர்த்துமெனப்படாவோ வென்று ஐயுறுவார்க்கு, 'உறுகால்' (நற்-நஎ.) 'தவப்பல' (புறம்-உநறி.) 'நனி சேய்த்து' (ஐங்குறு-சசநஉ.) எனவும், 'மண்ணகமழ் வியன்மார்பணங்கிய செல்லல்' (அகம்-உஉ) எனவும், முன்னும் பின்னும் வருஞ்சொன் ஞடி அவற்றுள் இச் சொல்லோடு இவ்வுரிச்சொல் இயையு மென்று கடைப் பிடிக்கத், தாம் புணர்த்த சொற்கேற்ற பொருள் விளங்குதலின், உரிச்சொல்லும் வரலாற்றுப் பொருளுணர்த்து மென்பது பெறப்படுமென ஐய மகற்றியவாறெனக் கொள்க. வரலாற்றுப் பொருளுணர்த்தாவாயின், குழுவின் வந்த குறிஞ்சிலவழக்குப்போல இயற்கைச் சொல்லெனப்படா வென்பது. (கூஉ

கூறிய சொற்கள் பிறபொருளும் உணர்த்தல்

நகக0. கூறிய கிளவிப் பொருணிலை யல்ல
வேறுபிற தோன்றினு மவற்றொடுங் கொளலே.

இ - ள்: முன்னும் பின்னும் வருபவை நாடியவழி, உரிச் சொற்குக் கூறப்பட்ட பொருளேயன்றிப் பிற பொருடோன்று மாயினும், கூறப்பட்டவற்றோடு அவற்றையுங் கொள்க; எ - று.

'கடிநாறும் பூந்துணர்' என்றவழிக் கடியென்பது முன்னும் பின்னும் வருபவை நாட, வரைவு முதலாயின பொருட்கேலாது மணப் பொருட்டா யினவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. (கச)

சொற்களால் கருத்துணர்தலின் நிலை

நகக. பொருட்குப்பொரு டெரியி னதுவரம் பின்றே.

பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருளுணர்த்துங்காற் படு முறைமை யுணர்த்துகின்றார்.

இ - ள்: ஒரு சொல்லை ஒரு சொல்லாற் பொருளுணர்த்திய வழி அப்பொருளுணர்த்த வந்த சொற்கும் பொருள் யாதெனப் பொருட்குப் பொருடெரியுமாயின், மேல் வருவனவற்றிற்கெல் லாம் ஈதொத்தலின், அவ்வினு இறைவரம்பின்றி யோடும்; அத னாற் பொருட்குப் பொருடெரியற்க; எ - று.

ஒரு சொற்குப் பொருளுரைப்பது பிறிதோர் சொல்லானன்றே; அச் சொற்பொருளும் அறியாதானை உணர்த்துமா றென்னையெனின், அது வரு கின்ற சூத்திரத்தாற் பெறப்படும். (கஇ)

அதனை உணர்த்தும் ஆற்றல்

நகஉ. பொருட்குத்திரி பில்லை யுணர்த்த வல்லின்.

இ - ள்: 'உறுகால்' (நற்-நஎ.) என்புழி உறுவென்னுஞ் சொற்குப் பொருளாகிய மிகுதி யென்பதன் பொருளும் அறியாத மடவோனுயின், அவ்வாறு ஒருபொருட்கிளவி கொணர்ந் துணர்த்த லுறுது, கடுங்காலது வலி கண்டாய், ஈண்டு உறுவென்பதற்குப் பொருளென்று தொடர்மொழி கூறியானும், கடுங்கா லுள்வழிக் காட்டியானும், அம் மாணாக்க னுணரும் வாயிலறிந்து உணர்த் தல் வல்லனுயின் அப்பொரு டிரிபு படாமல் அவனுணரும் என்ற வாறு. அவற்றை முணர்தலாற்றாதானை உணர்த்துமா றென்னை யெனின்:— அதற்கன்றே வருஞ்சூத்திர மெழுந்த தென்பது. (கஉ)

அதனை உணரும் ஆற்றல்

நகங. உணர்ச்சி வாயி லுணர்வோர் வலித்தே.

இ - ள்: வெளிப்படத் தொடர்மொழி கூறியானும் பொரு ளைக் காட்டியானும் உணர்த்தவும் உணராதானை உணர்த்தும் வாயி லில்லை; உணர்ச்சியது வாயில் உணர்வோர துணர்வை வலி யாக வுடைத்தாகலான்; எ - று.

யாதானு மோராற்ரு னுணருந்தன்மை அவற்றில்லையாயின், அவனை யுணர்த்தற் பாலனல்ல னென்றவாறு. (கூ)

சொற்களின் பொருள்கட்குக் காரணம் உண்டு

நகூசு. மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்ரு.

இ - ள்: உறு தவ முதலாயின சொற்கு மிகுதி முதலாயின பொருளாதல் வரலாற்று முறைமையாற் கொள்வதல்லது, அவை அப் பொருளவாதற்குக் காரணம் விளங்கத் தோன்ரு; எ - று.

பொருளொடு சொற்கியைபு இயற்கை யாகலான் அவ்வியற்கையாகிய இயைபாற் சொற்பொரு ளுணர்த்து மென்ப ஒரு சாரார். ஒரு சாரார் பிற காரணத்தா னுணர்த்து மென்ப. அவற்றுண் மெய்மையாகிய காரணம் ஆசிரி யர்க்குப் புலனுவதல்லது நம்மனோர்க்குப் புலனாமையின், மொழிப்பொருட் காரண மில்லை யென்னுது விழிப்பத் தோன்ரு வென்ரூர். அக்காரணம் பொதுவகையான் ஒன்ரு யினுஞ் சொற்ரொறு மூணமையிற் சிறப்பு வகை யாற் பலவாம்; அதனுன் விழிப்பத்தோன்ரு வெனப் பன்மையாற் கூறினர். உரிச்சொற்பற்றி யோதினரேனும், வினைச்சொற்பொருட்கு மிஃ தொக்கும். (கூ)

உரிச்சொற்களில் எழுத்துப் பிரிந்து இசைத்தல் இல்லை

நகூடு. எழுத்துப்பிரிந் திசைத்த லிவணியல் பின்றே.

இ - ள்: முதனிலையும் இறுதிநிலையுமாக எழுத்துக்கள் பிரிந்து வேறு வேறு பொருளுணர்த்தல் உரிச்சொல்லிடத் தியை புடைத்தன்று; எ - று.

இவணியல்பின்றெனவே, எழுத்துப் பிரிந்து பொருளுணர்த்தல் பிறண்டு இயல்புடைத தென்பதாம். அவையாவன, வினைச்சொல்லும் ஒட்டுப் பெயருமாம். பிரிதலும் பிரியாமையும் பொருளுணர்த்துவனவற்றிற்கே யாகலின், கூறை கோட்படுதல் கடவுளர்க்கு எய்தாதவாறுபோல, இடைச் சொற்கு இவ்வாராய்ச்சி யெய்தாமை யறிக.

தவ நனியென்னுந் தொடக்கத்தன குறிப்பு வினையெசசம் போலப் பொருளுணர்த்தலின், அவைபோலப் பிரிக்கப்படுங்கொல்லோ வென்றை யுரைமை ஐயமகற்றியவாறு. (கூ)

ச. புறனடை

நகூசு. அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
மூரிச்சொல் லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னிகூனத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப் பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனுர் புலவர்.

இ - ள்: அன்ன பிறவுங் கிளந்தவல்ல பன்முறையானும் பரந்தன வரூஉ மூரிச்சொல் லெல்லாம் என்பது, சொல்லப்பட்

டனவே யன்றி அவைபோல்வன பிறவும் பல வாற்றானும் பரந்து வரு முரிச்சொல்லெல்லாம் என்றவாறு. பொருட்குறைகூட்ட வியன்ற மருங்கினிணைத்தென வறியும் வரம்பு தமக்கின்மையின் என்பது, பொருளொடு புணர்த்த இசை குறிப்புப் பண்புபற்றித் தாமியன்ற நிலத்து இத்துணையென வரையறுத்துணருமெல்லை தமக்கின்மையான் எஞ்சாமைக் கிளத்தலரிதாகலின் என்றவாறு. வழி நனி கடைப்பிடித் தோம்படை யாணையிற் கிளந்தவற்றியலான் பாங்குறவுணர்தல் என்பது;

' இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி. (சொல்-உகள.)

எனவும், 'முன்னும் பின்னும் வருபவை காடி' எனவுங் கூறிய நெறியைச் சோராமற் கடைப்பிடித்து 'எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்' (சொல்-உகள.) எனவும்,

' ஒத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்த
றத்த மரபிற் றோன்றுமன் பொருளே' (சொல்-உஅக.)

எனவும், என்னுற் றறப்பட்ட பாதுகாவ லாணையிற் கிளந்தவற்றியல்பொடு மரீஇயவற்றை முறைப்பட வுணர்க என்றவாறு.

குறிப்புப்பொருண்மை பலவகைத்தாகலானும், பெயரினு வினையினு மெய்தடுமாறியுந் தடுமாறுதும் ஒருசொற் பலபொருட் குரித்தாயும் வருதலானும், ஈறுபற்றித் தொகுத்துணர்த்தற்கு அன்னவீறுடைய வன்மையானும், 'பன்முறையானும் பரந்தன வறுஉம்' என்றார்.

பொருளைச் சொல் இன்றியமையாமையின், அதனைக் குறையென்றார்; ஒருவன் வினையும் பயனும் இன்றியமையாமையின், 'வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தின் றுலகு, (குறள்-கூகஉ.) 'பயக்குறை யில்லதாம் வாழு நாளே' (புறம்-கஅஅ.) என்றாற்போல, பொருட்குறை கூட்ட வரம்பு தமக்கின்மையி னென இயையும்.

இருமை யென்பது கருமையும் பெருமையு மாகிய பண்புணர்த்தும். சேணென்பது சேய்மையாகிய குறிப்புணர்த்தும். தொன்மையென்பது பழமையாகிய குறிப்புணர்த்தும். இவையெல்லாம் அன்ன பிறவுங் கிளந்தவல்ல வென்பதனாற்கொள்க. பிறவுமன்ன. (கஂஂ)

உரியியல் முற்றிற்று.

கூ. எச்சவியல்

க. சொற்களின் வகை

நால்வகைச் சொற்கள்

நகூஎ. இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொல்லென்
றநேத்தே செய்யு ளீட்டச் சொல்லே[1].

இளவியாக்கமுதலாக உரியிய லிறுதியாகக் கிடந்த ஒத்துக்களுள் உணர்த்துதற் கிடமின்மையான் உணர்த்தப்படாது எஞ்சி நின்ற சொல்லிலக் கணமெல்லாந் தொகுத்துணர்த்திய வெடுத்துக்கொண்டார். அதனால் இவ் வோத்து எச்சவியலென்னும் பெயர்த்தாயிற்று.

'கண்டூரென்ரு' (சொல்-சஉடு.) எனவும், 'செய்யா யென்னுமுன்னிலை வினைச்சொல்' (சொல்-சஉடு) எனவும், 'உரிச்சொன் மருங்கினும்' (சொல்-சஉக.) எனவும், 'ஒருமை சுட்டிய பெயரிலைக் கிளவி' (சொல்-சஉக.) எனவும், இவை முதலாகிய சூத்திரங்களா னுணர்த்தப்பட்ட அசைநிலையும் வினைச்சொல் லிலக்கணமும் வழுவமைதியும் அவ்வோத்துக்களு ளுணர்த்தாது நண்டுணர்த்திய தென்னையோ வெனின்:—அதற்குக் காரணம் அவ்வசசூத்திர முறைக்கும்வழிச் சொல்லுதும்.

பலபொருட்டொகுதிக்கு ஒன்றனுற்பெயர் கொடுக்குங்கால் தலைமையும் பன்மையும்பற்றிக் கொடுப்பினல்லது பிறிதாறின்மையானும், தலைமையும் பன்மையும் எச்சத்திற்கின்மையானும், பத்துவகையெச்சமு நண்டுணர்த்தலான் எச்சவியலாயிற்றென்றல் பொருந்தாமை யுணர்க.

---

1 செய்யுளீட்டச் சொல நானகு —தொலகாப்பியா காலத்தில தமிழச சொறகள் இலகண முறையிற போனறே சொறபிறப்பியல முறையிலும நானகாக வகுகபபட்டன முதலாவது தனசொல அபறசொல எனகிற முறையில தெனசொல வடசொல எனற பாகுபாடும, பினபு தன சொறகுள செநதமிழ கொடுநதமிழ எனகிற முறையில நாடடுசசொல திசைச்சொல எனற பாகுபாடும, பினபு நாடடுச்சொறகள் இயலபும திரிவுமபறறி இயறசொல திரிசொல எனற பாகுபாடுமம தோனற, இயற சொல திரிசொல திசைசசொல வடசொல என நானகமைநதன.

ஆங்கிலதில சொறகளை Primitives, drivatives என இரணடாயப பகுபபதாலும: ''திரிபினறி இயலபாகிய சொலலாகளின இயறசொலலாயிறறு'' எனறும, ''திரிசொலலது திரிவாவது உறுபபுத திரிதலுமென இருவகைதது. இன்னை, மஞ்ஞை எனபன உறுபபுத திரிநதன. விலஙகல, வீணடு எனபன முழுவதுந திரிநதன'' எனறும சேனாவரையரும பிறரும கூறுவதாலும, இயறசொலலியுந திரிசொலலியும முறையே எணசொல அருஞசொல எனறு கொள்ளாமல, இயலபான சொல் திரிக்கபபடட சொல எனறு கொள்வதே பொருததமாம.

தெலுஙகு கனனடம முதலிய திராவிடமொழிகள முறகாலததில கொடுந்தமிழாயிருநததமையின, அவறறின் சொறகள் திசைச சொறகள எனப்படடன. இன்று அம மொழிகள் ஆரியகலபபால வேறறு மொழியாய வழஙகுகின்றமையின, வேறறு மொழிச் சொறகளேயலலாம திசைசசொலலெனக கூறுவது தவருகும. முறகாலத்தில திசைச சொலலாகக காடட படட கொடுந்தமிழச் சொறகளே இனறுந திசைச சொலலாகும.

வடமொழி யொனறே முறகாலததில தமிழகதது வழஙகிய அயன்மொழி. அதனால அதன் சொல அமமொழிப பெயராலேயே வடசொலலெனபபட்டது. அது போல இறுதோது தமிழில வழஙகும பிறமொழிச சொறகளும ஆங்கிலச்சொல போர்த்துக்கீசியசசொல என அவவமமொழிப பெயராலேயே அழைக்கபபடல வேணடும.

செய்யுட்குரிய சொல்லும், அவற்றதிலக்கணமும், அவற்றுற் செய்யுள் செய்வுழிப் படும் விகாரமும், செய்யுட் பொருள்கோளும், எடுத்துக் கோடற்கணுணர்த்துகின்றார்.

இ - ள் : இயற்சொல்லும், திரி சொல்லும், திசைச்சொல்லும், வடசொல்லும் என அத்துணையே செய்யுளீட்டுதற்குரிய சொல்லாவன ; எ - று.

இயற்சொல்லாணுஞ் செய்யுட்சொல்லாகிய திரிசொல்லானுமேயன்றித் திசைச்சொல்லும் வடசொல்லும் இடைவிராய்ச் சான்றோர் செய்யுள் செய்யுமாறு கண்டு ஏனைப்பாடைச்சொல்லுஞ் செய்யுட்குரியவோவென் றையுற்றார்க்கு, இக்நான்கு சொல்லுமே செய்யுட் குரியன: பிறபாடைச்சொல் உரியவல்ல வென்று வரையறுத்தவாறு.

செய்யுள் செய்யலாவது ஒருபொருண்மேற் பலசொற் கொணர்ந்தீட்டலாகலான், ஈட்டலென்றார்.

பெயர்வினையிடையுரி யென்பன இயற்சொற் பாகுபாடாகலான், இயற்சொல் அந்நான்கு பாகுபாட்டானுஞ் செய்யுட்குரித்தாம். திரிசொற் பெயராயல்லது வாரா. என்மனு ரென்பதனே வினைத்திரிசொல் என்பாருமுளர். அஃது 'என்றிசினோர்' 'பெறலருங்குறைத்து' (புறம்-நி.) என்பனபோலச் செய்யுண்முடிபு பெற்று நின்றதென்றலே பொருத்தமுடைத்து. தில்லென்னு மிடைச்சொல், தில்லவென்முனுந் தில்லையென்முனுந் திரிந்து நின்றவழி அவை வழக்கிற்குமுரியவாகலின், திரிசொல்லெனப்பட்டாது. 'கடுங்கால்' என்புழிக் கடியென்னு முரிச்சொல், 'பெயரினும் வினையினு மெய்தடுமாறி' (சொல்-உகஎ.) என்பதனுற் பண்புப்பெயராய்ப் பெயரொடு தொக்கு வழக்கினுட் பயின்று வருதலால், திரிசொல் லெனப்படாது. திசைச்சொல்லுள் ஏனைச் சொல்லுமுளவேனும், செய்யுட்குரித்தாய் வருவது பெயர்ச்சொல்லேயாம். வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட் குரியவாய் வாரா. இவ் வாறுதல் சான்றோர்செய்யுள் நோக்கிக் கண்டுகொள்க. (க)

இயற்சொல்

நகஅ. **அவற்றுள்**

இயற்சொற் றமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே.

இ - ள் : அந்நான்கனுள், இயற்சொல்லென்று சொல்லப்பட்ட சொற்றும், செந்தமிழ்நிலத்து வழக்காதற்குப் பொருந்திக் கொடுந்தமிழ் நிலத்துந் தம்பொருள் வழுவாம லுணர்த்துஞ் சொல்லாம் ; எ - று.

அவையாவன நிலம், நீர், தீ, வளி, சோறு, கூழ், பால், தயிர், மக்கள், மா, தெங்கு, கமுகு என்னுந் தொடக்கத்தன.

செந்தமிழ்நிலமாவன வைகையாற்றின் வடக்கும் மருதயாற்றின் றெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்.

திரிபின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல்லாயிற்று. கொடுந் தமிழ் நிலத்திற்கும்[1] பொதுவாகலின் இயற்சொல்லாயிற் றெனினு மமையும். நீரென்பது ஆரியச்சிதைவாயினும் அப்பொருட்கு அதுவே சொல்லாய்ச் செந்தமிழ் நிலத்தும் கொடுந்தமிழ்நிலத்தும் வழங்கப்படுதலான் இயற்சொல்லா யிற்று. பிறவு மிவ்வாறு வருவன இயற்சொல்லாகக் கொள்க.

தா மென்பது கட்டுரைச்சுவைபட நின்றது. (உ)

திரிசொல்

நகஙக. ஒரு பொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி.

இ - ள்: ஒருபொருள் குறித்து வரும் பல சொல்லும் பலபொருள் குறித்து வரும் ஒருசொல்லுமென இரு வகைப்படுந் திரிசொல்; எ - று.

வெற்பு, விலங்கல், விண்டு என்பன ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி. எனை மென்பது அன்னமும் கவரிமாவும் புளிமாவும் காயு முணர்த்த லானும், உந்தி யென்பது யாழ்ப்பத்தலுறுப்பும் கொப்பூழும் தோற்பட்டும் கான்யாறு முணர்த்தலானும், இவை வேறுபொருள் குறித்த ஒருசொல்.

திரிசொல்லது திரிவாவது உறுப்புத் திரிதலும் முழுவதுந் திரிதலுமென இருவகைத்து. கிள்ளை, மஞ்ஞை என்பன உறுப்புத் திரிந்தன. விலங்கல், விண்டு என்பன முழுவதுந் திரிந்தன. முழுவதுந் திரிந்தனவற்றைக் கட்டிய வழக்கென்பாரு முளர். அவை கட்டிய சொல்லாமாயிற் செய்யுள் வழக்காமா றில்லை; அதனுன் அவையுந் திரிவெனல் வேண்டுமென்பது.

---

1 சேனாவரையர் செந்தமிழ் நிலமாகக் கூறியவிடம் பெரும்பாலும் பாண்டி நாட்டிற்குப்பாற்பட்டதாயிச் சோழநாட்டின் தென் பகுதியாயிருத்தலின், தவருகும். பாண்டிநாடே தமிழ் நாடெனும் பாண்டியனே தமிழ் நாடனெனும் நிகண்டுகள் கூறுகிறபடியும், ''வீயாத தமிழுடையான் பாண்டியன்'' எனுமொரு பழமொழிவரும், ''பாண்டிய நிலமுடுடைத்து நலஞ்தமிழ்'' என்று ஔவையாரும், ''தமிழ் நிலைபெற்ற ...மதுரை'' என்று நக்கீரரும், ''கூடலிலுயர்ந்த வொண்டமிழ்'' என்று மாணிக்கவாசகரும் பாடியிருப்பவும், முசசங்கங்களையும் முறையே இரண்டு தமிழ் வளர்த்தவர் பாண்டியராயே யிருப்பவும், இவற்றை எடுத்தோயும் நோக்காது மதுரைக்கு வடகோடே செந்தமிழ் நாடாகச் சேனாவரையர் குறித்தது வியப்பிற்கிடமானது.

''செந்தமிழ் நாடாவது:—வையையாற்றின் வடகரும...மருவூரின் மேற்கும் என்ப. இவ்வாறு உரைத்ததற்கு ஓர் இலக்கணங் காணுமையானும், வையையாற்றின் தெற்காகிய கோற்கையும், கருவூரின் மேற்காகிய கொடுங்கோளூரும், மருதயாற்றின் வடக்காகிய காஞ்சியும் தமிழ் நிலைமாதல் வேண்டுமாதலானும், அஃது உரையன்று என்பார் உரைக்குமாறு:—

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலின
எழுத்துஞ் சொல்லும் பொருளுநாடி

என்றமையானும், இதனுள் தமிழ் கூறு நல்லுலகமென விசேடித்தமையானும், கிழக்கும் மேற்கும் எல்லைகூறுது தெற்றெகலலே கூறியவதனுற் குமரியினு தெற்காகிய நாடுகளையுமுணர்த்தது வேங்கடமலையின் வடக்காகிய நாடுகளையொழித்து வேங்கடமலையின் தெற்கும், குமரியின் வடக்கும், குணகடலின் மேற்கும், குடகடலின் கிழக்குமாகிய நிலம் செந்தமிழ் நிலமெனவுரைப்ப'' எனபா தெயவசிகியார்.

இன்னும் பாண்டிநாடே தமிழ் வழங்குறகு சிறந்திருப்பது கவனிக்கத்தக்கது.

அஃதேல், பலசொல் ஒருபொருட் குரியவாதலும் ஒருசொற் பலபொருட் குரித்தாதலும், உரிச்சொன் முதலாகிய இயற்சொற்கு முண்மையான் அது திரிசொற் கிலக்கணமாமாறென்னே யெனின்:—அது திரிசொற்கிலக்கண மூணர்த்தியவாறன்று; அதனது பாகுபா டுணர்த்தியவாறு. திரிபுடைமையே திரிசொற்கிலக்கணமாதல் 'சொல்லின் மூடிவி னப்பொருண் முடித்தல் என்பதனுற் பெற வைத்தார் கிள்ளை மஞ்ஞை யென்பன ஒருசொல் ஒரு பொருட் குரித்தாகிய திரிசொல்லாதலின் இருபாற் றென்றல் நிரம்பா தெனின்:—அற்றன்று: ஆசிரியர் இருபாற்றென்ப திரிசொற்கிளவி எனத் தொகை கொடுத்தாராகலின், கிள்ளை மஞ்ஞை யென்பனவற்றோடு ஒரு பொருட் கிளவியாய் வரும் திரிசொலுளவாக லொன்றே, இவை பிறபொருள் படுதலொன்றே, இரண்டனு ளொன்று திட்பமுடைத்தாதல் வேண்டும். என்னை? ஆசிரியர் பிற கூறுமையினென்பது.

திரித்துக்கொண்டது இயற்கைச்சொல்லான் இன்பம் பெறச் செய்யு ளீட்ட லாகாமையானன்றே; அதனுற் றிரிசொல்லெனவே, செய்யுட்குரித் தாதலும் பெறப்படும். (க)

திசைச் சொல்

சஂ00. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.

இ - ள்: செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலத்துந் தாங் குறித்த பொருள் விளக்குந் திசைச் சொல் என்றவாறு. என்றது, அவ்வந்நிலத்துத் தாங் குறித்த பொருள் விளக்குவதல்லது அவ் வியற்சொற்போல எந்நிலத்துந் தம்பொருள் விளக்கா வென்றவாறும்.

பன்னிருநிலமாவன பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவா நாடு, அருவாவடதலை எனச் செந்தமிழ்நாட்டுத் தென்கிழ்பான்முதலாக வடகிழ் பாலிறுதியாக எணணிக்கொள்க.[1]

---

1 கொடுந்தமிழ நிலமாகச சேறலுரையா கூறிய பனனிருநிலம 12-ம நூறறுண டிற கேறறவையாதலினு, தொலகாபபியா குறித்தவையாகா.

''பனனிருநிலமாவன,— வையையாறறினை .....நாடு, ஒளிநாடு, தெனபாணடி நாடு, குருங்குட்டநாடு, குடநாடு, பனறிநாடு, கறகாநாடு, சீதைநாடு, பூழிநாடு, மலாடு, அருவாநாடு, அருவாவடதலை என்ப. இவை செந்தமிழ நாட்டகத்த. செந தமிழ நாடெனறமையால, பிறநாடாகவேணடுமெனபார உதாரணங காட்டுமாறு:— ''கனனித் தென்கரைக் கடறபழந்தீபம, கொலலங்கூகஞ சிங்களமென்னும் எலலியின புறததவும, கனனடம வடகம கலிங்கம தெலிங்கம கொங்கணம துளுவம் குடகம குனறகமெனபன குடபாலிருபுற சையத துடனுறைபு கூறுந தமிழ திரி லிலங்களும, முடியுடையவரிடுலிவாடசியின அரசுமேமபபட்ட குறுலிக குடுமிகள் பதினமரும உடனிருபபிருவருமாகிய பனனிருவர அரசரும படைதத பனனிருதேயத தினும தமிழச சொலலாதறகு விருபபுடையன'' எனறமையானும, தமிழ கூறு நல லுலகதது, வழககுஞ செயயுளுமாயிரு முதலின, எழுததுஞ் சொலலும் பொருளும் நாடி.'' என நிறுதது பினனுஞ செநதமிழியறகை சிவணிய நிலததொடு முந்துநூல கணடு'' என ஓதியவதனுறு சிவணிய நிலமாவது ஆலலி குறித்த நிலததைச சாரந்த நிலமென வேணடுதலானும, பன்னிருநிலமாவன.—

குமரியாறறினு தெனகரைபபடட பழநதீபமும கொலலமும கூபகமும சிங்கள மும, சையதினு மேறகுபபடட கொங்கணமு துளுவமும், குடகமுங, குனறகமும், கிழகுபபடட கருநாடமும வடுகும தெலிங்கும கலிங்கமும எனறு கொள்ளப்படும்.

இவறறுள், கூபகமுங் கொலலமுங கடல கொள்ளபபடுதலின, குமரியாறறின வடகரையைக கொலலமெனக குடியேறறினார் போலும. பஞ்சத்திராவிடமெனவும் வடநாட்டார் உரைப்பவாகலான், அவையெதும் வேங்கடத்தின் தெற்காதலுங் கூடாமை யுணர்க.''

தென்பாண்டிநாட்டார் ஆ எருமை என்பவற்றைப் பெற்ற மென்றும், தம்மாமி யென்பதனைத் தந்துவையென்றும் வழங்குப. பிறவுமன்ன.

தங்குறிப்பின வென்று தனிமொழி தம்பொருளுணர்த்துமாற்றுக்குச் சொல்லினுர்; இருமொழி தொடருமிடத்துத் தன்னே வந்தான் என வேண்டியவாறு வரப்பெறு மென்றுரல்ல ரென்பது. (சு)

வட சொல்

சஅக. வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.

இ - ள்: வடசொற் கிளவியாவது வடசொற்கே உரியவெனப் படுஞ் சிறப்பெழுத்தினீங்கி இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தானியன்ற சொல்லாம்; எ - று.

எனவே, பொதுவெழுத்தா னியன்ற வடசொல்லும் செயயுட் செய்தற்குச் சொல்லா மென்றவாருயிற்று.

அவை வாரி, மேரு, குங்குமம், மணி என்னுந்தொடக்கத்தன.

வடசொல்லாவது வடசொல்லோடொக்குந் தமிழ்ச்சொல்லென்றுரால் உரையாசிரியரெனின்:-அற்றன்று: ஒக்குமென்று சொல்லப்படுவன ஒருபுடையாலெனப்புமையும் வேற்றுமையுமுடைமையான் இரண்டாகல் வேண்டும. இவை எழுத்தானும் பொருளானும வேறுபாடின்மையாகிய ஒருசொல்லிலக்கண முடைமையான் இரண்டுசொல்லெனப்படா; அதனுன் ஒத்தல் யாண்டையது: ஒரு சொல்லேயாமென்பது. ஒரு சொல்லாயினும் ஆரியமுந் தமிழுமாகிய இடவேற்றுமையான் வேறுயின வெனின்:—அவ்வாருயின் வழக்குஞ் செய்யுளுமாகிய இடவேற்றுமையாற் சோறு கூழென்னுந் தொடக்கத்தனவும் இரண்டு சொல்லாவான் செல்லும்; அதனுன் இடவேற்றுமையுடையவேனும் ஒருசொல்லிலக்கணமுடைமையான் ஒருசொல்லேயாம். ஒரு சொல்லாய வழித் தமிழ்ச்சொல் வடபாடைக்கட்செல்லாமையானும், வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலானும், இவை வடசொல்லாய் ஈண்டு வழங்கப்பட்டனவெனல்வேண்டும்; அதனுன் அது போலியுரையென்க. அல்லதூஉம, அவை தமிழ்ச்சொல்லாயின் வடவெழுத்தொரீஇயென்றல் பொருத்தமையானும், வடசொல்லாத லறிக. (இ)

சஅஉ. சிதைந்தன வரினு மியைந்தன வரையார்.

இ - ள்: பொதுவெழுத்தானியன்றனவே யன்றி, வடவெழுத்தானியன்ற வடசொற் சிதைந்து வரினும், பொருத்தமுடையன, செய்யுளிடத்து வரையார்; எ - று.

எ-டு: 'அரமிய வியலகத் தியம்பும்' (அகம்-சஉச.) எனவும், 'தசநான் கெய்திய பணைமரு ணேன்ருள்' (நெடுநல்-ககடு.) எனவும் வரும்.

சிதைந்தன வரினுமெனப் பொதுப்படக் கூறியவதனுன், ஆணை, வட்டம், நட்டம், கணணன் எனப் பாகதமாய்ச் சிதைந்து வருவனவுங் கொள்க.

இச் சூத்திரத்தானும் அவை தமிழ்ச்சொ லன்மையறிக.

சொற்கள் அடையும் விகாரம்

சூ0க. அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலு மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலுந் தொகுக்கும்வழித் தொகுத்தலு
நீட்டும்வழி நீட்டலுங் குறுக்கும்வழிக் குறுக்கலு
நாட்டல் வலிய வென்மனார் புலவர்.

இ - ள்: இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொல் லென்னு நான்கு சொல்லியுஞ் செய்யுளாகத் தொடுக்குங்கால், மெலியதனை வலிக்கவேண்டும்வழி வலித்தலும், வலியதனை மெலிக்கவேண்டும்வழி மெலித்தலும், குறைவதனை விரிக்கவேண்டும்வழி விரித்தலும், மிகுவதனைத் தொகுக்கவேண்டும்வழித் தொகுத்தலும், குறியதனை நீட்டவேண்டும்வழி நீட்டலும், நெடியதனைக் குறுக்க வேண்டும்வழிக் குறுக்கலுமாகிய அறுவகை விகாரமும், செய்யுளின்பம்பெறச் செய்வான் நாட்டுதலை வலியாகவுடைய; எ - று.

எ-டு: 'குறுக்கையிரும்புலி' (ஐங-உகூ.) 'முத்தைவரூஉங் காலத் தோன்றின்' (எழு-ககூ.) என்பன வலிக்கும்வழிவலித்தல். 'சுடுமண்பாவை' 'குன்றிய லுயர்த்திறுதி' (சொல்-கூ.) என்பன மெலிக்குமவழி மெலித்தல். 'தண்ணந்துறைவன்' (குறு-உகூ.) என்பது விரிக்கும்வழி விரித்தல். 'மழவ ரோட்டிய' (அகம்-க.) என்பது தொகுக்குமவழித் தொகுத்தல். 'குன்றி கோபங் கொடிவிடு பவள மொண்செங் காந்த ளொக்கு மின்னிறம்' என்புழிச செவ்வெண்ணின் றொகை தொக்கு நிற்றலின் இதுவுமது. 'வீடுமின்' என்பது நீட்டுமவழிநீட்டல். 'பாசிலை' (புறம்-நிசு.) யென்பது காட்டுவாருமுளர். உண்டாஞ்தென்பது உணடருந்தெனக் குறுகி நிற்றலிற் குறுக்கும்வழிக் குறுக்கல். 'அழுந்து படு விழுப்புண்' (நற்றிணை-கூஎ.) என்பதுமது. பிறவுமன்ன.

நாட்டல் வலிய வென்றது, இவ்வறுவகை விகாரமும் இன்னுழியாமென்று வரையறுக்கப்படா; செய்யுள் செய்யுஞ்சான்றோர் அணிபெற நாட்டலைத் தமக்கு வலியாகவுடைய வென்றவாறு. நாட்டல், நிலை பெறச் செய்தல். (எ)

உ. பொருள் கோள்

நால்வகைப் பொருள்கோள்

சூ0ச. நிரனிறை சுண்ண மடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுண ரியல்பே.

இனிச் செய்யுளிடத்து விகாரவகையான் மொழிகள் தம்முட் புணருமாறு கூறுகின்றார்.

இ - ன்: நிரனிறையும், சுண்ணமும், அடிமறியும், மொழி மாற்றுமென நான்கென்று சொல்லுப: அந்நான்கு சொல்லுஞ் செய்யுளிடத்துத் தம்முட்புணரு முறைமை. எ - று.

நான்கு சொல்லு மென்பதூஉஞ் செய்யுளிடத்தென்பதூஉம் அதிகாரத் தாற் பெற்றும்.

நிரனிறையுஞ் சுண்ணமும் மொழிமாற்றுத லொக்குமாயினும், நிரனிற்ற லும் அளவடியெண்சீரைச் சுண்ணமாகத் துணித்தலுமாகிய வேறுபாடுடைமை யான், அவற்றைப் பிரித்து அவ்வேறுபாட்டாற் பெயர்கொடுத்து, வேறிலக் கணமில்லாத மொழிமாற்றை மொழிமாற்றென்றார்.

இச்சூத்திரத்தான் மொழிபுணரியல் நான்கென வரையறுத்தவாறு. (அ)

நிரனிறைப் பொருள்கோள்

எ0டு. அவற்றுள்

நிரனிறை தானே
வினையினும் பெயரினு நிலையத் தோன்றிச்
சொல்வேறு நிலை இப் பொருள்வேறு நிலையல்.

இ - ள்: அந்நான்கினுள், நிரனிறையாவது வினையானும் பெயரானும் ஆராயத் தோன்றிச் சொல் வேறு நிற்பப் பொருள் வேறு நிற்றலாம்; எ - று.

தொடர்மொழிப்பொருள் முடிக்குஞ் சொற்கண்ணதாகலான், முடிக்குஞ் சொல்லைப் பொருளென்றார்.

வினையினும் பெயரினு மென்றதனான், வினைச்சொல்லான் வருவதூஉம், பெயர்ச்சொல்லான் வருவதூஉம், அவ்விரு சொல்லான் வருவதூஉமென நிரனிறை மூன்றும்.

எ-டு: 'மாசு போகவுங் காய்பசி நீங்கவுங்—கடிபுனன் மூழ்கி யடிசில்கை தொட்டு' என முடிவனவும் முடிப்பனவுமாகிய வினைச்சொல் வேறு வேறு நிற்றலின், வினைநிரனிறை யாயிற்று. அவை மாசு போகப் புனன்மூழ்கி, பசி நீங்க அடிசில் கைதொட்டு என வியையும். 'கொடி குவளை கொட்டை நுசுப் புண்கண் மேனி' என முடிவனவும் முடிப்பனவுமாகிய பெயர்ச்சொல் வேறு வேறு நிற்றலின், பெயர்நிரனிறை யாயிற்று. அவை நுசுப்புக்கொடி, உண்கண் குவளை, மேனி கொட்டை என வியையும்.

'உடலு முடைந்தோடு மூழ்மலரும் பார்க்குங்
கடலிரு ளாம்பல்பாம் பென்ற—கெடலருஞ்சீர்த்
திங்க டிருமுகமாச் செத்து'

என முடிப்பனவாகிய வினையும் முடிவனவாகிய பெயரும வேறு வேறு நிற்ற லின், பொதுநிரனிறையாயிற்று. அவை கடல் உடலும், இருள் உடைந் தோடும், ஆம்பல் ஊழ்மலரும், பாம்பு பார்க்கும் என வியையும்.

நிலையத்தோன்றி யென்றதனால், சொல்லும் பொருளும் வேறு வேறு நிற்குங்கால் நிரல்பட நில்லாது,

'களிறுங் கந்தும்போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றுந்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே:

என முயங்கி வருதலுமகொள்க. (க)

சுண்ணப் பொருள்கோள்

சூ0சு. சுண்ணந் தானே
பட்டாங் கமைந்த வீரடி யெண்சீ
ரொட்டுவழி யறிந்து துணித்தன ரியற்றல்.

இ - ள்: சுண்ணமாவது இயல்பாக அமைந்த ஈரடிக்கணுள ளாகிய எண்சீரைத் துணித்து இயையும்வழி அறிந்து கூட்டி இயற்றப்படுவதாம்; எ - று.

அளவடியல்லாதன விகாரவடியாகலிற் பட்டாங்கமைந்தில, வாதலிற் பட்டாங்கமைந்த வீரடியெனவே, அளவடியாதல் பெறப்படும். ஈரடியெண்சீர் விகாரவடியானும் பெறப்படுதலின், அவற்றை நீக்குதற்குப் பட்டாங்கமைந்த வீரடியென்றார். எனவே, சுண்ணம் அளவடி யிரண்டனு ளல்லது பிறண்டு வாராதென்பது.

எ - டு: 'சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை'

என்புழி, ஆழ மிதப்ப, நீத்து, நிலையென்பனவும், சுரை, அம்மி, யானைக்கு, முயற் கென்பனவும், நின்றுழி நிற்ப இயையாமையின், சுரை மிதப்ப, அம்மி யாழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனத் துணித்துக் கூட்ட, இயைந்த வாறு கண்டுகொள்க.

சுண்ணம்போலச் சிதராய்ப் பரந்து கிடத்தலிற் சுண்ணமென்றார்: (கo)

அடிமறிப் பொருள்கோள்

சூ0எ. அடிமறிச் செய்கி யடிநிலை நிரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே.

இ - ள்: அடிமறிச்செய்யுளாவது, சீர் நின்றுங்கு நிற்ப அடிகள் தத்தநிலையிற் றிரிந்து ஒன்றனிலைக் களத்து ஒன்று சென்று நிற்கும்; எ - று.

எனவே, எல்லாவடியும் யாணடுஞ் செல்லுமென்பதாம்.

எ - டு: 'மாறுக் காதலர் மலைமறந் தனரே
யாறுக் கட்பனி வரலா லஃதே
யேறு மென்றோள் வளைநெகி ழும்மே
கூறுய் தோழியான் வாழு மாறே'

என வரும். இதனுட் சீர் நின்றுங்கு நிற்பப் பொருள் சிதையாமல் எல்லா வடியுந் தடுமாறியவாறு கண்டுகொள்க.

பெரும்பான்மையும் நாலடிச்செய்யுட்க ணல்லது இப்பொருள்கோள் வாரா தென்க.

'நிரனிறைதானே' 'சுண்ணந்தானே' 'மொழிமாற்றியற்கை' என்பன போல ஈண்டும் அடிமறிச்செய்தியென்பதனைக் குறளடியாக்கி, அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது தடுமா றும்மே பொருடெரி மருங்கின் என்று சூத் திரமாக அமைப்பாருமுளர். (கக)

அதற்கு மேலும் ஒரு முடிபு

மo அ. பொருடெரி மருங்கி
லீற்றடி யிறுசீ ரெருத்துவயிற் றிரிபுந்
தோற்றமும் வரையா ரடிமறி யான.

இ - ள் : பொருளாராயுங்கால், அடிமறிச் செய்யுட்கண் ஈற்றடியது இறுதிச்சீர் எருத்தடியிற் சென்று திரிதலும் வரையார் ; எ - று.

சீர்நிலை திரியாது தடுமாறுமென்றாராகலின், சீர்நிலை திரிதலும் ஒருவழிக் கண்டு எய்தியதிகந்துபடாமற் காத்தவாறு.

இலக்கியம் வந்தவழிக் கண்டுகொள்க.

எருத்துவயி னென்பதற்கு ஈற்றயற்சீர்வயி னென்று பொருளுரைத்து,

' சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூர மகளி ராரணங் கினரே
சார லுடை நீவரு தீயே
வார லெனினே யானஞ் சுவலே '

என்புழி அஞ்சுவல் யான் என இறுதிச்சீர் ஈற்றயற்சீர்வயிற் சென்று திரிந்த தென்று உதாரணங் காட்டினாரால் உரையாசிரியரெனின் :—யானஞ்சுவ லென நின்றுங்கு நிற்பவும் பொருள் செல்லுமாகலின் இவ்வாறு திரிதல் பொருந்தாமையின், அவர்க்கது கருத்தன்றென்க.

எல்லாவடியும் யாண்டுஞ் செல்லுமாயினும், உரைப்போர் குறிப்பான் எருத்தென்றும் ஈற்றடியென்றுங் கூறினார்.

' உரைப்போர் குறிப்பி னுணர்வகை யன்றி
யிடைப்பான் முதலீ றென்றிவை தமமுண
மதிக்கப் படாதன மண்டல யாப்பே '

என உரைப்போர் குறிப்பான் முதலு மிடையு மீறுங்கோடல் பிறருங் கூறினரென்பது. (கஉ)

மொழிமாற்றுப் பொருள்கோள்

மo கo. மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளா அல்.

இ - ள் : மொழிமாற்றினதியல்பு, பொருளெதி ரியையுமாறு சொன்னிலையை மாற்றி முன்னும் பின்னும் கொள்ளும்வழிக் கொளுவுதலாம் எ - று.

எ - டு :

' ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை—காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தாளுணுந் தோளா
னிறனுள்ளூ ருள்ள தலர் '

என இதனுள், பாரி பரம்பின்மேற் றண்ணுமைதாஞணும் தோளாள் எனவும், நிறன் விறன்முள்ளூர் வேஙகைவீ எனவும், உள்ளூருள்ளதாகிய அலர் ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும் எனவும், முன்னும் பின்னுங்கொள்வழி யறிந்து கொளுவப் பொரு ளெதிரியைந்தவாறு கண்டுகொள்க. மொழிமாற்று நின்று ஒன்றற்கொன்று செவ்வாகாமை கேட்டார் கூட்டியுணருமாற்றுற் கடா வல்வேண்டும். அல்லாக்கால், அவாய்நிலையுந் தகுதியு முடையவேனும் அண்மை யாகிய காரணமின்மையாற் சொற்கள் தம்மு ளியையாவாமென்க. (கக)

ங. தொகைச்சொல் வகைதொகையாவன

[1]அகம தநநுள எனுமவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா.

செயயுட்குரிய சொல்லும், சொற்றொடுக்குங்காற்படும விகாரமும, அவை செயயுளாக்குங்காற் றம்முட்புணர்ந்து நிற்குமாறுமாகிய செய்யுளொழிபு உணர்த்தி, இனி வழக்கிலக்கணதெதொழிபு கூறுகின்றார்.

இ - ள்: தநநுள என்பனவற்றை முதலாக வுடையவாய்க் கிளைமை நுதலி வரும் பெயரும் பிரிக்கப்படா; எ - று.

அவையாவன தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; ஞமன், ஞமள், ஞமர்; எமன், எமள், எமர்; தம்மான், தம்மாள், தம்மார்; நம்மான், நமமாள், நம்மார்; ஞம்மான், ஞம்மாள், ஞம்மார்; எம்மான், எமமாள், எமமார் என வரும்.

உம்மையாற் பிற கிளைநுதற்பெயரும் பிரிக்கப் பிரியா வென்பதாம: அவை தாய், ஞாய், தந்தை, தன்னை என்னுந் தொடக்கத்தன.

இவற்றைப் பிரிப்பப் பிரியாவென்றது என்னையெனின்:—வெற்பன், பொருப்பன் என்னுந் தொடக்கத்து ஒட்டுப்பெயர் வெற்பு + அன், பொருப்பு + அன் எனப் பிரித்தவழியும், வெற்பு, பொருப்பு என்னு முதனிலை தம்பொருள் இனிது விளக்கும். தமன் எமன் என்பனவற்றைத் தம் + அன், எம் + அன், எனப் பிரிக்கலுறின் தம், எம் என்பன முதனிலையாய்ப் பொருளுணர்த்துவன வாதல் வேண்டும; அவை பொருளுணர்த்தாமையான், தமன், எமன் என வழங்கியாஙகுக் கொள்வதல்லது பிரிக்கப்படாமையின், அவ்வாறு கூறினு ரென்பது. பிறவுமன்ன. அஃதேல், தாம், யாம் என்பனவற்றிற்கு முதனிலை யாகப் பிரிக்கவே, அவையுந் தம்பொரு ளுணர்த்து மெனின்;—தமன், எமன் என்பன தன்கிளை என்கிளை எனவும், தஙகிளை எங்கிளை எனவும் முதனிலை வகையான் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாதலுடைய. ஒருமையுணர்த் துங்கால் தாம் யாம் என்பன பொருந்தாமையின் தான் யான் என்பனவே முதனிலை யெனல்வேண்டும். வேண்டவே, இவ்வாறு பிரிப்பின் தமன் எமன் என வொரொன் றிரண்டுசொல்லாதல்வேண்டுதலான், எழுத்தானும் பொரு ளானும் வேறுபாடின்மையின் ஒரு சொல்லெனவேபடும்; இரண்டு சொல் லென்றல் நிரம்பாமையின், அவ்வாறு பிரித்தலும் பொருத்தமின்றென்பது.

கிளைநுதற்பெயர் விளிமரபின்கட் பெறப்பட்டமையாற் பெயரியலு ளுணர்த்தாராயினர். அதனால் ஆண்டியையுபபட்டின்றுகலால், பிரிப்பப் பிரியா வொருசொல்லுக்கோ டியையு இதனை ஈண்டு வைத்தார். (கச)

தொகைபோல் அடுக்கி வருவன

சகக. இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே.

இ - ள்: இசைநிறையும், அசைநிலையும், பொருள் வேறு பாட்டோடு புணர்வதுமென ஒருசொல் லடுக்கு அம்மூன்றுவகைப் படும்; எ - று.

எ - டு: 'ஏ ஏ ஏ ஏ யம்பன் மொழிந்தனள்' என்றது இசைநிறை. மற்றே மற்றே; அன்றே அன்றே என்பன அசைநிலை. பாம்பு பாம்பு; அவ னவன்; வைதேன் வைதேன்; உண்டு உண்டு; போம் போம் என்பன, மூறை யானே விரைவுந் துணிவும் உடம்பாடும் ஒருதொழில் பலகாணிகழ்தலுமாகிய பொருள்வேறுபா டுணர்த்தலிற் பொருளொடு புணர்தல். பொருள்வேறுபாடு பிறவுமுளவேல் வழக்கு நோக்கிக் கண்டுகொள்க.

அடுக்கு ஒருசொல்லது விகாரமெனப்படும்; இரண்டு சொல்லாயின் இரு பொருளுணர்த்துவதல்லது இப்பொருள் வேறுபாடுணர்த்தாமையி னென்பது. (கஞ)

தொகை மொழிகள்

சகஉ. வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
விளையின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத்தொகையே யன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

இனித் தொகையிலக்கண மூணர்த்துகின்றார்.

இ - ள்: வேற்றுமைத்தொகை முதலாகத் தொகைச்சொல் ஆறும்; எ - று.

வேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மையும் வினைச்சொல்லீறும் பண்புச் சொல்லீறுந் தொகுதலிற் றொகையாயின வென்பாரும், அவ்வப்பொருண மேல் இரண்டும பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்மு ளியைதலிற் றொகையாயின வென்பாருமென இருதிறத்தர் ஆசிரியர். செய் தான் பொருள், இருந்தான் மாடத்து என உருபு தொக்கு ஒரு சொன்னீர் மைப் படாதனவுந் தொகையாவான் சேறலின் அவற்றை நீக்குதற்கும், வேழக் கரும்பு, கேழற்பன்றி என்புழித் தொக்கனவில்லையெனினும் தொகையென வேண்டப்படுமாகலான் அவற்றைத் தழுவுதற்கும், உருபு முதலாயின தொகு தலிற் றொகை யென்பார்க்கும் ஒட்டி யொருசொன்னீர்மைப்படுதலுந் தொகை யிலக்கணமெனல் வேண்டும்; அதனுன் உருபு முதலாயின தொகுதல் எல்லாத் தொகையினுஞ் செல்லாமையான், எல்லாத்தொகைக்கண்ணுஞ் செல்லுமாறு ஒட்டி யொருசொல்லாதல் தொகை யிலக்கணமாய் முடிதலின், இவ்வாசிரி யர்க்கு இதுவே துணிவெனப்படுமென்பது. அற்றாயின், 'உருபு தொக வரு தலும்' (சொல்-கசஎ.) எனவும், 'வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்' (சொல்-சகஅ.) எனவும், 'உம்மை தொக்க பெயர்வயி னானும்' எனவும், 'உவமை தொக்க பெயர்வயினானும்' எனவும் ஓதலால் அவை ஆண்டுத் தொக்

கனவெனப்படுமன்றே வெனின்:—அற்றன்று: 'அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகையவயின்' (சொல்-கசை.) என்புழி அதுவெனுருபு நின்று கெட்டதாயின் நின்ற காலத்துத் திணைவழுவாம்; அத்திணைவழு அமைவுடைத் தெனின் விரிக்கின்றுழி நான்காமுருபு தொடராது அதுதன்னையே விரிப் பினும் அமைவுடைத்து; அதனுன் மூறைப்பொருடோன்ற நம்பிமகன் என இரண்டுசொற் றொக்கன வென்பதே ஆசிரியர் கருத்தெனல்வேண்டும். அல்ல தூஉம், வினைத்தொகை பண்புத்தொகை அன்மொழித்தொகை யென்பனவற் றின்கண் வினையும் பண்பும் அன்மொழியுஞ் தொக்குநில்லாமையானும், அஃதே கருத்தாத லறிக. அதனுன் உருபும் உவமையும் உம்மையுஞ் தொகுதலாவது தம்பொருள் ஒட்டிய சொல்லாற் றோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாதே நிற்றலேயாம்.

வேற்றுமைத் தொகையென்பது வேற்றுமைப் பொருளையுடைய தொகை யென்றுணும் வேற்றுமை பொருடொக்க தொகை யென்றுணும் விரியும். உவ மத்தொகை, உம்மைத்தொகை அன்மொழித்தொகை யென்பனவும் அவ்வாறு விரியும். அன்மொழியாவது தொக்க சொல்லல்லாத மொழி. வினைத்தொகை பண்புத்தொகை யென்பன, வினையினது தொகை பண்பினது தொகையென விரியும். வினைபண் பென்றது அவற்றை யுணர்த்துஞ் சொல்லே. ஒரு சொல் லாற் றொகையின்மையிற் பிறிதோர் சொல்லொடு தொகுதல் பெறப்படும்.

இச்சூத்திரத்தாற் றொகைச்சொல் இனைத்தென வரையறுத்தவாறு. ()

வேற்றுமைத் தொகை.

சூ.கஉ. அவற்றுள்

வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல.

இ - ள்: வேற்றுமைத்தொகை அவ்வேற்றுமை யுருபு தொடர்ப்பொரு ளுணர்த்தியாங் குணர்த்தும்; எ - று.

எனவே, சாத்தனொடு வந்தான் என்னும் பொருட்கட் சாத்தன் வந்தான் எனவும், சாத்தற்குக் கொடுத்தான் என்னும் பொருட்கட் சாத்தன் கொடுத் தான் எனவும் உருபுதொடர்ப்பொரு ளுணர்த்தும் ஆற்றலில்லன தொகா; அவ்வாற்றலுடையனவே தொகுவன வென்றவாறும்.

இரண்டாம் வேற்றுமைத்தொகை முதலாக வேற்றுமைத்தொகை அறு வகைப்படும். நிலங்கடந்தான், குழைக்காது எனவும்; தாய் மூவர், பொற்குடம் எனவும்; கருப்பு வேலி, கடிசூத்திரப்பொன் எனவும்; வரைபாய்தல், கருவூர்க் கிழக்கு எனவும்; சாத்தன்புத்தகம், கொற்றனுணர்வு எனவும்; மன்றப்பெண்ணை மாரியாமா எனவும் வரும். இவை, மூறையானே நிலத்தைக் கடந்தான்; குழையை யுடைய காது; தாயொடு மூவர்; பொன்னுனியன்ற குடம்; கரும் பிற்கு வேலி; கடிசூத்திரத்திற்குப்பொன்; வரையினின்றும் பாய்தல்; கருவூ ரின் கிழக்கு; சாத்தனது புத்தகம்; கொற்றனதுணர்வு; மன்றத்தின்கணிற்கும் பெண்ணை; மாரிக்கணுள தாமா என்னும் உருபுதொடர்ப் பொருளே இனிது விளக்கியவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. (கஎ)

உவமத் தொகை

சகுச. உவமத் தொகையே யுவம வியல.

இ - ள்: உவமத்தொகை உவமவுருபு தொடர்ப்பொருள் போலப் பொருளுணர்த்தும் என்றவாறு. எனவே, புலியன்ன சாத்தன், மயிலன்ன மாதர் என்னும் பொருட்கட் புலிச்சாத்தன்; மயின்மாதர் என அப்பொருள் விளக்கும் ஆற்றலில்லன தொகா: ஆற்றலுடையனவே தொகுவனவென்பதாம்.

எ - டு: புலிப்பாய்த்துள்; மழைவண்கை; துடி நடுவு; பொன்மேனி என்பன புலிப்பாய்த்துளன்ன பாய்த்துள்; மழையன்னவண்கை; துடியன்ன நடுவு; பொன்னன்ன மேனி எனத் தம் விரிப்பொரு ளுணர்த்தியவாறு கண்டு கொள்க. அஃதேல், புலிப்பாய்த்துளே யொக்கும் பாய்த்துள்; மழையையொக்கும் வண்கை என விரிதலின் அவையெல்லாம் வேற்றுமைத் தொகை யெனப்படும்; அதனுன் உவமத்தொகையென ஒன்றில்லையெனின்:—அற்றன்று: சொல்லுவார்க்கு அது கருத்தாயின் வேற்றுமைத் தொகையுமாம். அக்கருத்தானன்றிப் புலியன்ன பாய்த்துள், பொன்மானுமேனி என வேற்றுமையோடு இயைபில்லா உவமவுருபு தொடர்ப்பொருட்கட் டொக்கவழி உவமத்தொகையாவதல்லது வேற்றுமைத் தொகை ஆண்டின்மையின் வேற்றுமைத்தொகையாமாறில்லை யென்க. உவமவுருபு ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொல்லாகலான், வினையும் வினைக் குறிப்பும் பற்றி வரும். இரண்டாம் வேற்றுமை அவைபற்றி 'என்போற் பெருவிதுப் புறுக நின்னை, யின்னுதற்ற வறனில் கூற்றே' (புறம்-உருடு) என்புழிப் போலவென்பது குறிப்பு வினையெச்சமாய் நிற்றலானும், 'நம்மனோரு மற்றினைய ராயி—னெம்ம னோரிவட் பிறவலர் மாதோ' (புறம்-உகo.) என்புழி அன்னோ ரென்பது இடைச்சொன் முதனிலையாகப் பிறந்த குறிப்புப்பெயராகலானும், என்னைப்போல, நும்மையன்னோர், எம்மையன்னோரென இரண்டாவது விரித்தற் கேற்புடைமையானும்'. (கஅ)

வினைத்தொகை

சகுரு. வினையின் றொகுதி காலத் தியலும்.

இ - ள்: வினைத்தொகை காலத்தின் கணிகழும்; எ - று.

காலத்தியலுமெனப் பொதுவகையாற் கூறியவதனுன் மூன்று காலமுங் கொள்க.

தொகுதி காலத்தியலுமெனவே, அவ்வினை விரிந்து நின்றவழித் தோன்றுது தொக்கவழித் தொகையாற்றலாற் காலந்தோன்று மென்றவாறும்.

ஈண்டு வினையென்றது எவற்றையெனின்:—வினைச் சொற்கும் வினைப் பெயர்க்கும் முதனிலையாய், உண், தின், செல், கொல் என வினைமாத்திர மூணர்த்தி நிற்பனவற்றை யென்பது. இவற்றை வடநூலார் தாதுவென்ப.

எ - டு: ஆடமங்கு; செய்குன்று; புணர்பொழுது; அரிவாள்; கொல்யானை; செல்செலவு என வரும். கால மூணர்த்தாது வினைமாத்திர மூணர்த்தும் பெயர், நிலப்பெயர் முதலாகிய பெயரொடு தொக்குழிக் காலமூணர்த்திய வாறு கண்டுகொள்க. காலமூணர்த்துகின்றுழிப் பெயரெச்சப் பொருளவாய்

நின்றுணர்த்துமென்பது 'செய்யுஞ் செய்த வென்னுங் னெவியின்—மெய் யொருங் கியலுந் தொழிலொரு மொழியும்' (எழு சஅஉ.) என்பதனுட்கூறினார். தொகைப் பொருளாகிய தாம் பிரிந்தவழிப் பெறப்படாமையின் ஆசிரியர் இவற்றைப் 'புணரிய னிலையிடை யுணரத் தோன்றும்' என்றார். அதனான் இவை தஞ் சொல்லான் விரிக்கப்படாமையிற் பிரிவிலொட்டாம்.

பெயரெச்சம் நின்று தொக்கதென்றாரால் உரையாசிரியரெனின்:— அற்றன்று: ஆசிரியர் இவற்றைப் பிரித்துப் புணர்க்கப்படா: வழங்கியவாறே கொள்ளப்படுமென்றது, பிரித்தவழித் தொகைப் பொருள் சிதைதலானன்றே; கொன்றயானை என விரிந்தவழியும் அப்பொருள் சிதைவின்றேல் 'புணரிய னிலையிடை யுணரத்தோன்றும்' என்றற்கோர் காரணமில்லையாம். அதனாற் பெயரெச்சம் நின்று தொகுதல் ஆசிரியர் கருத்தன்மையின், உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க. அல்லதூஉம், ஆகுபெயர் உணர்த்தியவழி வினைத் தொகையுளப்பட 'இருபெயரொட்டும்' (சொல்-ககச.) என்றாராகலானும் வினை நின்று தொகுதல் அவர்க்குக் கருத்தன்மை யறிக.

அஃதேல், வினைத்தொகைக்கு முதனிலை பெயராமன்றோவெனின்:— உரிஞென்பது முதலாயினவற்றைத்தொழிற்பெய ரென்றாராகலின், தொழின் மாத்திர முணர்த்துவனவெல்லாம் தொழிற்பெயரென்பது ஆசிரியர் கருத்தென்ப. (கக)

பண்புத் தொகை.

சகசு. **வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்**
றன்ன பிறவு மதன்குண நுதலி
யின்ன தினுவென வரூஉ மியற்கை
யென்ன னிளவியும் பண்பின் றொகையே.

இ - ள்: வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பனவும் அவை போல்வன பிறவுமாகிய குணத்தை நுதலிப் பின்றொக்கவழிக் குணச்சொற் குணமுடையதனை யுணர்த்தலான் இன்னதினுவென ஒன்றனை ஒன்று விசேடித்து இருசொல்லும் ஒருபொருண்மேல் வரு மியல்பையுடைய எல்லாத் தொகைச்சொல்லும் பண்புத் தொகையாம்; எ - று.

நுதலியென்னுஞ் சினைவினையெச்சம் வருமென்னு முதல்வினையோடு முடிந்தது.

இயற்கையென்றது, தொக்குழிப் பண்புடையதனைக்குறித்தல் அத் தொகைச் சொல்லதியல் பென்பதல்லது காரணங்கூறப்படா தென்றவாறு. தொகைக்கணல்லது அச்சொல் தனிநிலையாய், உண், தின், செல், கொல் என்பன போலப் பொருளுணர்த்தாமையின், பண்புத்தொகையும் வினைத்தொகை போலப் பிரிக்கப்படாதாம்.

எ-டு: கருங்குதிரை என்பது வண்ணப்பண்பு. வட்டப்பலகையென்பது வடிவு. நெடுங்கோலென்பது அளவு. நீங்கரும்பென்பது சுவை. அன்ன பிறவு மென்றதனான், நுண்ணூல், பராரை, மெல்லிலை, நல்லாடை என்னுந் தொடக்கத்தன கொள்க. அவை, கரிதாகிய குதிரை, வட்டமாகிய

அதற்கு மேலும் ஒரு முடிபு

சூ0அ. பொருடெரி மருங்கி
ஈற்றடி யிறுசீ ரெருத்துவயிற் றிரிபுந்
தோற்றமும் வரையா ரடிமறி யான.

இ - ள் : பொருளாராயுங்கால், அடிமறிச் செய்யுட்கண் ஈற்றடியது இறுதிச்சீர் எருத்தடியிற் சென்று திரிதலும் வரையார் ; எ - று.

சீர்நிலை திரியாது தடுமாறுமென்றாராகலின், சீர்நிலை திரிதலும் ஒருவழிக் கண்டு எய்தியதிகந்துபடாமற் காத்தவாறு.

இலக்கியம் வந்தவழிக் கண்டுகொள்க.

எருத்துவயி னென்பதற்கு ஈற்றயற்சீர்வயி னென்று பொருளுரைத்து,

' சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூர மகளி ராரணங் கினரே
சார லுடை நீவரு தீயே
வார லெனினே யரனஞ் சுவலே '

என்புழி அஞ்சுவல் யான் என இறுதிசீர் ஈற்றயற்சீர்வயிற் சென்று திரிந்த தென்று உதாரணங் காட்டினாரால் உரையாசிரியரெனின் :—யானஞ்சுவ லென நின்றாங்கு நிற்பவும் பொருள் செல்லுமாகலின் இவ்வாறு திரிதல் பொருந்தாமையின், அவர்க்கது கருத்தன்றென்க.

எல்லாவடியும் யாணடுஞ் செல்லுமாயினும், உரைப்போர் குறிப்பான் எருத்தென்றும் ஈற்றடியென்றுங் கூறினார்.

' உரைப்போர் குறிப்பி னுணாவகை யன்றி
யிடைப்பான் முதலீ றென்றிவை தமமுணர
மதிக்கப் படாதன மணடல யாப்பே '

என உரைப்போர் குறிப்பான் முதலு மிடையு மீறுங் கோடல் பிறருங் கூறினரென்பது. (கஉ)

மொழிமாற்றுப் பொருள்கோள்

சூ0கூ. மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளாஅல்.

இ - ள் : மொழிமாற்றினதியல்பு, பொருளெதி ரியையுமாறு சொன்னிலையை மாற்றி முன்னும் பின்னும் கொள்ளும்வழிக் கொளுவுதலாம் எ - று.

எ - டு :

' ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை—காரி
விறன்மூள்ளூர் வேங்கைவீ தாளுணுந் தோளா
ணிறனுள்ளூ ருள்ள தலர் '

என இதனுள், பாரி பரம்பின்மேற் றண்ணுமைதாஞணுந் தோளாள் எனவும், நிறன் விறன்மூள்ளூர் வேங்கைவீ எனவும், உள்ளூருள்ளதாகிய அலர் ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும் எனவும், முன்னும் பின்னுங்கொள்வழி யறிந்து கொளுவப் பொரு ளெதிரியைந்தவாறு கண்டுகொள்க. மொழிமாற்று நின்று ஒன்றற்கொன்று செவ்வாகாமை கேட்டார் கூட்டியுணருமாற்றுற் கடா வல்வேண்டும். அல்லாக்கால், அவாய்நிலையுந் தகுதியு முடையவேனும் அண்மை யாகிய காரணமின்மையாற் சொற்கள் தம்மு ளியையாவாமென்க. (கக)

ங. தொகைச்சொல் வகைதொகையாவன

'அகம தநநுள எனுமவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா.

செயயுட்குரிய சொல்லும், சொற்றொடுக்குங்காற்படும விகாரமும, அவை செயயுளாக்குங்காற் றம்முட்புணர்ந்து நிற்குமாறுமாகிய செய்யுளொழிபு உணாத்தி, இனி வழக்கிலக்கணத்தொழிபு கூறுகின்றார.

இ - ள்: தநநுள என்பனவற்றை முதலாக வுடையவாய்க் கிளைமை நுதலி வரும் பெயரும் பிரிக்கப்படா; எ - று.

அவையாவன தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர்; தம்மான், தம்மாள், தம்மார்; நம்மான், நம்மாள், நம்மார்; நும்மான், நும்மாள், நும்மார்; எம்மான், எமமாள், எம்மார எனவரும்.

உம்மையாற் பிற கிளைநுதற்பெயரும் பிரிக்கப் பிரியா வென்பதாம்: அவை தாய், ஞாய், தந்தை, தன்னை என்னுந் தொடக்கத்தன.

இவற்றைப் பிரிப்பப் பிரியாவெனறது என்னையெனின்:—வெற்பன், பொருப்பன் என்னுந் தொடர்ச்சித்து ஒட்டுப்பெயர வெற்பு + அன், பொருப்பு + அன் எனப் பிரித்தவழியும், வெற்பு, பொருப்பு என்னு முதனிலை தம்பொருள் இனிது விளக்கும். தமன் எமன் என்பனவற்றைத் தம் + அன், எம் + அன், எனப் பிரிக்கலுறின் தம், எம் என்பன முதனிலையாய்ப் பொருளுணர்த்துவன வாதல் வேண்டும்; அவை பொருளுணர்த்தாமையான், தமன், எமன் என வழங்கியாங்குக் கொள்வதல்லது பிரிக்கப்படாமையின், அவ்வாறு கூறினு ரென்பது. பிறவுமன்ன. அஃதேல், தாம், யாம் என்பனவற்றிற்கு முதனிலை யாகப் பிரிக்கவே, அவையுந் தம்பொரு ளுணர்த்து மெனின்:—தமன், எமன் என்பன தன்கிளை என்கிளை எனவும், நுங்கிளை எங்கிளை எனவும் முதனிலை வகையான் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாதலுடைய. ஒருமையுணர்த் துங்கால் தாம் யாம் என்பன பொருந்தாமையின் தான் யான் என்பனவே முதனிலை யெனல்வேண்டும். வேண்டவே, இவ்வாறு பிரிப்பின் தமன் எமன் என ஒரொன் றிரண்டுசொல்லாதல்வேண்டுதலான், எழுத்தானும் பொரு ளானும் வேறுபாடின்மையின் ஒரு சொல்லெனவேபடும்; இரண்டு சொல் லென்றல் நிரம்பாமையின், அவ்வாறு பிரித்தலும் பொருத்தமின்றென்பது.

கிளைநுதற்பெயர் விளிமரபின்கட் பெறப்பட்டமையாற் பெயரியலு ளுணர்த்தாராயினர். அதனால் ஆண்டியைபுபட்டின்றுகலால், பிரிப்பப் பிரியா ஒருசொல்லடுக்கோ டியையு மிதனை ஈண்டு வைத்தார். (கச)

தொகைபோல் அடுக்கி வருவன

சகக. இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே.

இ - ள்: இசைநிறையும், அசைநிலையும், பொருள் வேறு பாட்டோடு புணர்வதுமென ஒருசொல் லடுக்கு அம்மூன்றுவகைப் படும்; எ - று.

எ - டு: 'ஏ ஏ ஏ ஏ யம்பன் மொழிந்தனள்' என்றது இசைநிறை. மற்றே மற்றே; அன்றே அன்றே என்பன அசைநிலை. பாம்பு பாம்பு; அவ னவன்; வைதேன் வைதேன்; உண்டு உண்டு; போம் போம் என்பன, மூறை யானே விரைவுந் துணிவும் உடம்பாடும் ஒருதொழில் பலகாணிகழ்தலுமாகிய பொருள்வேறுபா டுணர்த்தலிற் பொருளொடு புணர்தல். பொருள்வேறுபாடு பிறவுமுளவேல் வழக்கு நோக்கிக் கண்டுகொள்க.

அடுக்கு ஒருசொல்லது விகாரமெனப்படும்; இரண்டு சொல்லாயின் இரு பொருளுணர்த்துவதல்லது இப்பொருள் வேறுபாடுணர்த்தாமையி னென்பது. (கஞ)

தொகை மொழிகள்

சகஉ. வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
விசேயின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத்தொகையே யன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

இனித் தொகையிலக்கண மூணர்த்துகின்றார்.

இ - ள்: வேற்றுமைத்தொகை முதலாகத் தொகைச்சொல் ஆறும்; எ - று.

வேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மையும் விசேச்சொல்லீறும் பண்புச் சொல்லீறுந் தொகுதலிற் றொகையாயின வென்பாரும், அவ்வப்பொருண மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்மு ளியைதலிற் றொகையாயின வென்பாருமென இருதிறத்தர் ஆசிரியர். செய் தான் பொருள், இருந்தான் மாடத்து என உருபு தொக்கு ஒரு சொன்னீர் மைப் படாதனவுந் தொகையாவான் சேறலின் அவற்றை நீக்குதற்கும், வேழக் கரும்பு, கேழற்பன்றி என்புழித் தொக்கனவில்லையெனினும் தொகையென வேண்டப்படுமாகலான் அவற்றைத் தழுவுதற்கும், உருபு முதலாயின தொகு தலிற் றொகை யென்பார்க்கும் ஒட்டி யொருசொன்னீர்மைப்படுதலுந் தொகை யிலக்கணமெனல் வேண்டும்; அதனுன் உருபு முதலாயின தொகுதல் எல்லாத் தொகையினுஞ் செல்லாமையான், எல்லாத்தொகைக்கண்ணுஞ் செல்லுமாறு ஒட்டி யொருசொல்லாதல் தொகை யிலக்கணமாய் முடிதலின், இவ்வாசிரி யர்க்கு இதுவே துணிவெனப்படுமென்பது. அற்றாயின், 'உருபு தொக வரு தலும்' (சொல்-கசஅ.) எனவும், 'வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்' (சொல்-சகஅ.) எனவும், 'உம்மை தொக்க பெயர்வயி னானும்' எனவும், 'உவமை தொக்க பெயர்வயினானும்' எனவும் ஓதலால் அவை ஆண்டுத் தொக்

கனவெனப்படுமென்றே வெனின்:—அற்றன்று: 'அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகையின்' (சொல்-கசை.) என்புழி அதுவெனுருபு நின்று செட்டதாயின் நின்ற காலத்துத் திணைவழுவாம்; அத்திணைவழு அமைவுடைத் தெனின் விரிக்கின்றுழி நான்காமுருபு தொடராது அதுதன்னையே விரிப் பினும் அமைவுடைத்து; அதனுன் முறைப்பொருடோன்ற நம்பிமகன் என இரண்டுசொற் றொக்கன வென்பதே ஆசிரியர் கருத்தெனல்வேண்டும். அல்ல தூஉம், வினைத்தொகை பண்புத்தொகை அன்மொழித்தொகை யென்பனவற் றின்கண் வினையும் பண்பும் அன்மொழியுந் தொக்குநில்லாமையானும், அஃதே கருத்தாத லறிக. அதனுன் உருபும் உவமையும் உம்மையுந் தொகுதலாவது தம்பொருள் ஒட்டிய சொல்லாற் றோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாதே நிற்றலேயாம்.

வேற்றுமைத் தொகையென்பது வேற்றுமைப் பொருளையுடைய தொகை யென்றுணும் வேற்றுமை பொருடொக்க தொகை யென்றுணும் விரியும். உவ மத்தொகை, உம்மைத்தொகை அன்மொழித்தொகை யென்பனவும் அவ்வாறு விரியும். அன்மொழியாவது தொக்க சொல்லல்லாத மொழி. வினைத்தொகை பண்புத்தொகை யென்பன, வினையினது தொகை பண்பினது தொகையென விரியும். வினைபண் பென்றது அவற்றை யுணர்த்துஞ் சொல்லே. ஒரு சொல் லாற் றொகையின்மையிற் பிறிதோர் சொல்லொடு தொகுதல் பெறப்படும்.

இச்சூத்திரத்தாற் றொகைச்சொல் இனைத்தென வரையறுத்தவாறு. ()

வேற்றுமைத் தொகை

சூத்திரம். அவற்றுள்

வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல.

இ - ள்: வேற்றுமைத்தொகை அவ்வேற்றுமை யுருபு தொடர்ப்பொரு ளுணர்த்தியாங் குணர்த்தும்; எ - று.

எனவே, சாத்தலெறி வந்தான் என்னும் பொருட்கட் சாத்தன் வந்தான் எனவும், சாத்தற்குக் கொடுத்தான் என்னும் பொருட்கட் சாத்தன் கொடுத் தான் எனவும் உருபுதொடர்ப்பொரு ளுணர்த்தும் ஆற்றலில்லன தொகா; அவ்வாற்றலுடையனவே தொகுவன வென்றவாறும்.

இரண்டாம் வேற்றுமைத்தொகை முதலாக வேற்றுமைத்தொகை அறு வகைப்படும். நிலங்கடந்தான், குழைக்காது எனவும்; தாய் மூவர், பொற்குடம் எனவும்; கருப்பு வேலி, கடிசூத்திரப்பொன் எனவும்; வரைபாய்தல், கருவூர்க் கிழக்கு எனவும்; சாத்தன்புத்தகம், கொற்றனுணர்வு எனவும்; மன்றப்பெண்ணை மாரியாமா எனவும் வரும். இவை, முறையானே நிலத்தைக் கடந்தான்; குழையை யுடைய காது; தாயொடு மூவர்; பொன்னுனியன்ற குடம்; கரும் பிற்கு வேலி; கடிசூத்திரத்திற்குப்பொன்; வரையினின்றும் பாய்தல்; கருவூ ரின் கிழக்கு; சாத்தனது புத்தகம்; கொற்றனதுணர்வு; மன்றத்தின்கணிற்கும் பெண்ணை; மாரிக்கணுள தாமா என்னும் உருபுதொடர்ப் பொருளே இனிது விளக்கியவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. (கஎ)

உவமத் தொகை

சூசுச. உவமத் தொகையே யுவம வியல.

இ - ள்: உவமத்தொகை உவமவுருபு தொடர்ப்பொருள் போலப் பொருளுணர்த்தும் என்றவாறு. எனவே, புலியன்ன சாத்தன், மயிலன்ன மாதர் என்னும் பொருட்கட் புலிச்சாத்தன்; மயின்மாதர் என அப்பொருள் விளக்கும் ஆற்றலில்லன தொகா: ஆற்றலுடையனவே தொகுவனவென்பதாம்.

எ - டு: புலிப்பாய்த்துள்; மழைவண்கை; துடி நடுவு; பொன்மேனி என்பன புலிப்பாய்த்துளன்ன பாய்த்துள்; மழையன்னவண்கை; துடியன்ன நடுவு; பொன்னன்ன மேனி எனத் தம் விரிப்பொரு ளுணர்த்தியவாறு கண்டு கொள்க. அஃதேல், புலிப்பாய்த்துளே யொக்கும் பாய்த்துள்; மழையையொக்கும் வண்கை என விரிதலின் அவையெல்லாம் வேற்றுமைத் தொகை யெனப் படும்; அதனுன் உவமத்தொகையென ஒன்றில்லையெனின்:—அற்றன்று: சொல்லுவார்க்கு அது கருத்தாயின் வேற்றுமைத் தொகையுமாம். அக்கருத் தானன்றிப் புலியன்ன பாய்த்துள், பொன்மானுமேனி என வேற்றுமையோடு இயைபில்லா உவமவுருபு தொடர்ப்பொருட்கட் டொக்கவழி உவமத்தொகை யாவதல்லது வேற்றுமைத் தொகை ஆண்டின்மையின் வேற்றுமைத்தொகை யாமாறில்லை யென்க. உவமவுருபு ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொல்லாகலான், வினையும் வினைக் குறிப்பும் பற்றி வரும். இரண்டாம் வேற் றுமை அவைபற்றி 'என்போற் பெருவிதுப் புறுக நின்னை, யின்னுதுற்ற வறனில் கூற்றே' (புறம்-உகுடு) என்புழிப் போலவென்பது குறிப்பு வினை யெச்சமாய் நிற்றலானும், 'நம்மலேரு மற்றினைய ராயி—னெம்ம லேரிவட் பிறவலர் மாதோ' (புறம்-உக0.) என்புழி அன்ஜே ரென்பது இடைச்சொன் முதனிலையாகப் பிறந்த குறிப்புப்பெயராகலானும், என்னைப்போல, நம்மை யன்னேர், எம்மையன்னேரென இரண்டாவது விரித்தற் கேற்புடைமை யறிக'. (கஅ)

வினைத்தொகை

சூசுடு. வினையின் றொகுதி காலத் தியலும்.

இ - ள்: வினைத்தொகை காலத்தின் கணிகழும்; எ - று.

காலத்தியலுமெனப் பொதுவகையாற் கூறியவதனுன் மூன்று காலமுங் கொள்க.

தொகுதி காலத்தியலுமெனவே, அவ்வினை விரிந்து நின்றவழித் தோன் றுது தொக்கவழித் தொகையாற்றலாற் காலந்தோன்று மென்றவாறும்.

ஈண்டு வினையென்றது எவற்றையெனின்:—வினைச் சொற்கும் வினைப் பெயர்க்கும் முதனிலையாய, உண், தின், செல், கொல் என வினைமாத்திர மூணர்த்தி நிற்பனவற்றை யென்பது. இவற்றை வடநூலார் தாதுவென்ப.

எ - டு: ஆடாங்கு; செய்குன்று; புணர்பொழுது; அரிவாள்; கொல் யானை; செல்செலவு என வரும். கால மூணர்த்தாது வினைமாத்திர மூணர்த் தும் பெயர், நிலப்பெயர் முதலாகிய பெயரொடு தொக்குழிக் காலமூணர்த்திய வாறு கண்டுகொள்க. காலமூணர்த்தினின்றுழிப் பெயரெச்சப் பொருளவாய்

நின்றுணர்த்துமென்பது 'செய்யுஞ் செய்த வென்னும் ளெவியின்—மெய் யொருங் கியலுந் தொழிறெரூ மொழியும்' (எழு சஅஉ.) என்பதனுற் கூறினார். தொகைப் பொருளாகிய தாம் பிரித்தவழிப் பெறப்படாமையின் ஆசிரியர் இவற்றைப் 'புணரிய னிலேயிடை யுணரத் தோன்ரு' என்ரார். அதனுன் இவை தஞ் சொல்லான் விரிக்கப்படாமையிற் பிரிவிலொட்டாம்.

பெயரெச்சம் நின்று தொக்கதென்ரூரால் உரையாசிரியரெனின்:— அற்றன்று: ஆசிரியர் இவற்றைப் பிரித்துப் புணர்க்கப்படா: வழங்கியவாறே கொள்ளப்படுமென்றது, பிரித்தவழித் தொகைப் பொருள் சிதைதலானன்றே; கொன்றயானை என விரித்தவழியும் அப்பொருள் சிதைவின்றேல் 'புணரிய னிலேயிடை யுணரத்தோன்ரு' என்றற்கோர் காரணமில்லேயாம். அதனுற் பெய ரெச்சம் நின்று தொகுதல் ஆசிரியர் கருத்தன்மையின், உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க. அல்லதூஉம், ஆகுபெயர் உணர்த்தியவழி வினைத் தொகையுளப்பட 'இருபெயரொட்டும்' (சொல்-ககச.) என்ரராகலானும் வினை நின்று தொகுதல் அவர்க்குக் கருத்தன்மை யறிக.

அஃதேல், வினைத்தொகைக்கு முதனிலை பெயராமன்ரேவெனின்:— உரிஞென்பது முதலாயினவற்றைத்தொழிற்பெய ரென்ரராகலின், தொழின் மாத்திர முணர்த்துவனவெல்லாம தொழிற்பெயரென்பது ஆசிரியர் கருத் தென்ப. (கக)

பண்புத் தொகை.

சகசு. **வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்**
றன்ன பிறவு மதன்குண நுதலி
யின்ன திதுவென வரூஉ மியற்கை
யென்ன ளெவியும் பண்பின் ரொகையே.

இ - ள்: வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பனவும் அவை போல்வன பிறவுமாகிய குணத்தை நுதலிப் பின்ரொக்கவழிக் குணச்சொற் குணமுடையதனை யுணர்த்தலான் இன்னதிது வென ஒன்றனை ஒன்று விசேடித்து இருசொல்லும் ஒருபொருண்மேல் வரு மியல்பையுடைய எல்லாத் தொகைச்சொல்லும் பண்புத் தொகையாம்; எ - று.

நுதலியென்னுஞ் சினைவினையெச்சம் வருமென்னு முதல்வினையோடு முடிந்தது.

இயற்கையென்றது, தொக்குழிப் பண்புடையதனைக்குறித்தல் அத் தொகைச் சொல்லதியல் பென்பதல்லது காரணங்கூறப்படா தென்றவாறு. தொகைக்கனல்லது அச்சொல் தனிநிலேயாய், உண், தின், செல், கொல் என் பன போலப் பொருளுணர்த்தாமையின், பண்புத்தொகையும் வினைத்தொகை போலப் பிரிக்கப்படாதாம்.

எ-டு: கருங்குதிரை என்பது வண்ணப்பண்பு. வட்டப்பலகை யென்பது வடிவு. நெடுங்கோ லென்பது அளவு. தீங்கரும் பென்பது சுவை. அன்ன பிறவு மென்றதனுன், நுண்ணூல், பராரை, மெல்லிலே, நல்லாடை என் னுந் தொடக்கத்தன கொள்க. அவை, காரதாகிய குதிரை, வட்டமாகிய

பலகை எனப் பண்புச்சொல்லும் பண்புடைப் பொருளே குறித்தலான், இரு சொல்லும் ஒரு பொருளவாய் இன்னதிதுவென ஒன்றையொன்று பொதுமை நீக்கியவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன.

அஃதேல், கரிதாகிய குதிரை, வட்டமாகிய பலகை என்பன அத்தொகையின் விரியாகலிற் பண்புத்தொகை பிரிக்கப்படாதென்றதென்னை யெனின்:- அற்றன்று: தொகைப்பொரு ளுணர்த்துதற்குப் பிறசொற்கொணர்த்து விரித்தல்லது, தன்சொல்லான் விரியாமையின் அவை விரியெனப்படா வென்க. வடநூலாரும் பிரியாத்தொகையும் பிறசொல்லான் விரிக்கப்படுமென்றார். கரிய தென்னும் பண்புகொள் பெயர் கருங்குதிரை யெனத் தொக்கதென்றாரால் உரையாசிரியரெனின் : அதனைப் பெயரெச்சம் வினைத்தொகை நிலைமொழி யென்றதற் குரைத்தாங் குரைத்து மறுக்க. பிறசொற்கொணர்த்து விரிக்குங் கால், கரிய குதிரை, கரிதாகிய குதிரை, கரியது குதிரை என அத்தொகைப் பொருளுணர்த்துவன வெல்லாவற்றினும் விரிக்கப்படும்.

முதனிலையாவது, கரியன், செய்யன், கருமை, செம்மை என்பனவற்றிற் கெல்லாம் முதனிலையாய்ச் சொல்லாய் நிரம்பாது கரு செவ் வெனப் பண்புமாத்திர முணர்த்தி நிற்பதாம்.

என்ன இளவியுமென்றதனால், சாரைப்பாம்பு, வேழக்கரும்பு, கேழற் பன்றி எனப் பண்பு தொகாது பெயர் தொக்கனவும் அத்தொகையாதல் கொள்க. இவற்றது சாரை முதலாகிய நிலைமொழி பிரித்தவழியும் பொருளுணர்த்தலின், இவற்றைப் பிரித்துப் புணர்த்தார். அஃதேல், பாம்பைச்சாரை விசேடித்ததல்லது சாரையைப் பாம்பு விசேடித்தின்றாகலின் ஒன்றை ஒன்று பொதுமை நீக்காமையாற் சாரைப்பாம்பென்பது முதலாயின பண்புத்தொகையாயினவாறென்னையெனின்:—நன்று சொன்னாய்: விசேடிப்பதும் விசேடிக்கப்படுவதுமாகிய இரண்டனுள் விசேடிப்பது விசேடியாக்கால் அது குற்றமாம்; விசேடிக்கப்படுவது விசேடித்தின்றென்றலும் விசேடிக்கப்படுதலாகிய தன்றன்மைக் கிழுக்கின்மையான், விசேடியாது நிற்பினும் அமையுமென்க. இவ்வேறுபாடு பெறுதற்கன்றே, இன்னதிது வென வரூஉமென வின்மொழியை விசேடிப்பதாகவும், முன் மொழியை விசேடிக்கப்படுவதாகவும், ஆசிரியர் ஓதுவாராயிற்றென்பது. அற்றேனும், சாரை யெனவே குறித்த பொருள் விளங்கலிற் பாம்பென்பது மிகையாம் பிறவெனின்:—அற்றன்று: உலக வழக்காவது, சூத்திரயாப்புப் போல மிகைச்சொற்படாமைச் சொல்லப்படுவதொன்றன்றி, மேற் றொட்டுங் கேட்டார்க்குப் பொருள் இனிது விளங்க வழங்கப்பட்டு வருவதாகலின், அது கடாவன்றென்க. மிகைச்சொற் படாமைச் சொல்லப்படுமாயின், யான் வந்தேன், நீ வந்தாய் என்னுது வந்தேன், வந்தாய் என்றே வழங்கல் வேண்டுமென்பது. இனி ஒற்றுமை நயத்தால் என்புந்தோலு முரியவாதலாகிய உறுப்புஞ் சாரை யெனப்படுதலின், அவற்றை நீக்கலாற் பாம்பென்பதூஉம் பொதுமை நீக்கிற்றென்பாருமுளர். உயர்சொற்கிளவி, இடைச்சொற்கிளவி உரிச்சொற்கிளவி என்புழியும், உயர்சொல், இடைச்சொல், உரிச்சொல்லென்பன சொல்லென்பதன்கட் கருத்துடையவன்றிக் குறிமாத்திரமாய், உயர்வு, இடை, உரி என்ற துணையாய்நின்றனவாகலின், சாரையென்பது பாம்பை விசேடித்தாற் போல அவை கிளவி யென்பதனை விசேடித்து நின்றனவென்பது. அவ்வாற்றான் அமைவுடையவாயினும், சூத்திரமாகலின், உயர்சொல், இடைச்சொல், உரிச்சொலென்னே யமையும்; கிளவி யென்பது மிகையெனின்:—மிகையாயினும்

இன்னோரன்ன அமைவுடைய வென்ப தணர்த்துதற்கு அவ்வாறேனு மென்பது. (உ0)

உம்மைத் தொகை

சூகள. இருபெயர் பல்பெய ரளவின் பெயரே
யெண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
யெண்ணின் பெயரோ டவ்வாறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே

இ - ன்: இருபெயர் முதலாகச் சொல்லப்பட்ட அறுவகைச் சொற்றிரளையும் தனக்குச் சார்பாகக் குறித்து நிற்கும் உம்மைத் தொகை; எ - று.

எ - டு: உவாப்பதினொன்று என்பது இருபெயராலாய உம்மைத் தொகை. புலிவிற்கெண்டை என்பது பல பெயராலாய உம்மைத் தொகை. தூணிப் பதக்கு என்பது அளவுப்பெயராலாய உம்மைத் தொகை. மூப்பத்திரண்டு என்பது எண்ணியற்பெயராலாய உம்மைத் தொகை. தொடியரை யென்பது நிறைப்பெயராலாய உம்மைத்தொகை. பதினேந்தென்பது எண்ணுப்பெயராலாய உம்மைத் தொகை. இனி அவை விரியுங்கால், உவாவும் பதினொன்றும் எனவும், புலியும் வில்லுங் கெண்டையும் எனவும், தூணியும் பதக்கும் எனவும், மூப்பதின்மரும் மூவரும் எனவும், தொடியும் அரையும் எனவும், பத்து மைந்தும் எனவும் விரியும்.

வேற்றுமைத்தொகை முதலாயின பலசொல்லாற் றொகுதல் சிறுபான்மை; அதனுள் உம்மைத்தொகை இரு சொல்லானும் பல சொல்லானும், ஒப்பத்தொகுமென்பது அறிவித்தற்கு இருபெயர் பல்பெயரென்றார். கற்சுனைக் குவளையிதழ், பெருந்தோட் பேதை எனப் பிறதொகையும் பெரும்பான்மையும் பலசொல்லான் வருமாலெனின்:—கல்லென்பதுஞ் சுனையென்பதுங் கற்சுனை யெனத் தொக்கு ஒரு சொல்லாய்ப் பின் குவளையென்பதனோடு தொக்கு ஒரு சொல்லாய்ப் பின் இதழென்பதனோடு தொக்குக் கற்சுனைக் குவளையிதழென வொன்றையிற்று. பெருந்தோளென்னுந் தொகை ஒருசொல்லாய்ப் பேதை யென்பதனோடு தொக்குப் பெருந்தோட்பேதையென வொன்றையிற்று. அவை இவ்வாற்றானல்லது தொகாமையின் இருசொற்றொகையே யாம். புலிவிற் கெண்டை என்புழி மூன்று பெயருந் தொகுமென்னுது முதற்பெயரொழித்தும் இறுதிப்பெயரொழித்தும், வேனெடிரண்டுந் தம்மூட்டொக்கு ஒரு சொல்லாய்ப் பின் மற்றையதனோடு தொகுமெனின்:—மூன்றொகுமிரண்டற்கும் ஓரியைபு வேறுபா டின்மையானும், இருதொகைப்படுத்தல் பலசெய்கைத்தாகலானும், அவை மூன்று பெயரும் ஒருங்கு தொக்கனவெனவே படுமென்பது.

அளவின் பெயர் முதலாயின, இருபெயராயல்லது தொகாவென வரையறுத்தற்கு இருபெயர் பல்பெயரென அடங்குவனவற்றைப் பெயர்த்துக் கூறினார். கலனே தூணிப்பதக்கு, தொடியேகஃசரை நூற்றுநாற்பத்து நான்கு என்புழித் தூணிப்பதக்கு, கஃசரை, நாற்பத்து நான்கு என்பன ஒரு சொற்போல அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயருமாய் வழங்கப்பட்டு வருதலின், கலமுந் தூணிப்பதக்கும், தொடியுங் கஃசரையும், நூறும்நாற்பத்து

நான்கும் என இருமொழி நின்று தொக்கவென்றலே பொருத்த முடைமை யறிக.

உம்மைத்தொகை இன்னபொருள்பற்றித் தொகுமென்னுது அவ்வறுகிள வியும் எனச் சொல்லேபற்றி ஓதினுரேனும், 'எற்புழிக்கோடலென்பதனுன் 'உயர்திணை மருங்கினும்மைத் தொகையே பலர் சொன் னடைத்து' (சொல்-சஉக.) என்பதனுன் எண்ணும்மைப்பொருட்கட் டொகுமென்பது பெறப் படும். எண்ணின்கண் வரும் இடைச்சொற்பலவேனும், தொக்கு நிற்கும் ஆற்றலுடையது உம்மைப்பெயராகலான், உம்மைத்தொகையாயிற்று. (உக)

அன்மொழித் தொகை

சகஅ. பண்புதொக வருஉங் கிளவி யானு
மும்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானு
மீற்றுநின் றியலு மன்மொழித் தொகையே

இ - ள்: பண்புச்சொற்றொகுஞ் சொல்லினும் உம்மை தொக்க பெயர்க்கண்ணும் வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும் இறுதிச்சொற்கள் நின்று நடக்கும் அன்மொழித்தொகை; எ - று.

பண்புத்தொகைபடவும் உம்மைத்தொகைபடவும் வேற்றுமைத்தொகை படவும் அச்சொற்றொக்கபின் அத்தொகை அன்மொழித்தொகை யாகாமையின் தொகுவதன்மூன் அவற்றிற்கு நிலைக்களமாகிய சொற்பற்றி வருமென்பது விளக்கிய, தொகையினானு மென்னுது, 'பண்பு தொகவரூஉங் கிளவி யானு மும்மை தொக்க பெயர்வயினானும், வேற்றுமை தொக்க பெயர்வயினானும்' என்றுர்.

இறுதிச்சொற் படுத்தலோசையாற் பொருள் விளக்குமாறு வழக்கினுள் ளுஞ் செய்யுளுள்ளுங் கண்டுகொள்க.

எ - டு: வெள்ளாடை, அகரவீறு என்பன பண்புத்தொகை நிலைக்களத் துப் பிறந்த அன்மொழித்தொகை. தகரஞாழல் என்பது உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. பொற்றொடி என்பது வேற் றுமைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இனி, அவை வெள்ளாடையுடுத்தாள், அகரமாகிய ஈற்றையுடைய சொல் எனவும், தகரமு ஞாழலுமாகிய சாந்துபூசினுள் எனவும், பொற்றொடி தொட்டாள் எனவும் விரியும்.

பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறத்தல் பெரும்பான்மையாகலின், முறையிற்கூறுது அதனை முற்கூறினுர்; வேற்றுமைத்தொகை நிலைக்களத் துப் பிறத்தலின் உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறத்தல் சிறுபான்மை யாயினும், ஒரு பயனேக்கி அதனை அதன்மூன் வைத்தார். யாதோ பய னெனின் :—சிறுபான்மை உவமத்தொகை நிலைக்களத்தும் வினைத்தொகை நிலைக்களத்தும் அன்மொழித்தொகை பிறக்குமென்ப துணர்த்துதலென்க. அவை பவளவாய், திரிதாடி என வரும். அவைதாம் பவளம்போலும் வாயை யுடையாள்; திரிந்த தாடியையுடையான் என விரியும். பிறவு மன்ன. (உஉ)

தொகைமொழிகளிற் பொருள் நிற்குமிடம்

சூகக. அவைதாம்

முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலு
மிருமொழி மேலு மொருங்குட னிலையலு
மம்மொழி நிலையா தன்மொழி நிலையலு
மந்நான் கென்ப பொருணிலை மரபே

இ - ள்: முன்மொழிமே னிற்றலும், பின்மொழிமே னிற்றலும், இருமொழிமே னிற்றலும், அவற்றின்மே னில்லாது பிறமொழிமே னிற்றலுமென அத்தொகையும் அவற்றது பொருணிலைமரபும் நான் கென்று சொல்லுவர் ஆசிரியர்; எ - று.

தொகையும் அவற்றது பொருணிலைமரபும் ஒருவகையான் வேறுயினும், ஒற்றுமைநயம்பற்றி அவைதாமென்றார்.

பொருணிற்றலாவது வினையோடியையுமாற்றான் மேற்பட்டுத் தோன்றுதல்.

எ - டு: வேங்கைப்பூ என்புழிப் பூவென்னும் முன்மொழிக்கட் பொருணின்றது. அது நிறந்தன்னும் வினையோ டியையுமாற்றான் மேற்பட்டுத் தோன்றியவாறு கண்டுகொள்க. மேல் வருவனவற்றிற்கும் ஈதொக்கும். இடவகையான் முன்மொழியாயிற்று. அடைகடல் என்புழி அடையென்னும் பின்மொழிக்கட் பொருணின்றது. இடவகையாற் பின்மொழியாயிற்று. முன் பின்னென்பன காலவகையாற் றடுமாறி நிற்கும். கடலுங் கடலடைந்த விடமுங் கடலெனப்படுதலின், அடைகடலென்பது அடையாகிய கடலென இருபெயர்ப் பண்புத்தொகை. இனி, வரையறையின்மையாற் சிறுபான்மை முன்மொழி பின்மொழியாகத் தொக்கதோ ராறும் வேற்றுமைத்தொகை யெனவுமமையும். உவாப்பதினான்கு என்புழி இருமொழிமேலும் பொருணின்றது. தன்னின முடித்தலென்பதனாற் பல பெயர்மே னிற்றலுங் கண்டுகொள்க. வெள்ளாடை என்புழித் தொக்க இருமொழிமேலும் நில்லாது உடைத்தாளென்னும் அன்மொழிமே னின்றது.

வேற்றுமைத்தொகைமுத னான்குதொகையும் முன்மொழிப்பொருள; வேற்றுமைத்தொகையும் பண்புத்தொகையுஞ் சிறுபான்மை பின்மொழிப் பொருளவுமாம். உம்மைத்தொகை இருமொழிப்பொருட்டு.

ஆறனப்பட்ட தொகை பொருள்வகையான் நான்காமெனப் பிரிதோர் வகை குறித்தவாறு.

தொகை மொழிகள் ஒருசொற்றன்மைய

சூஉய். எல்லாத் தொகையு மொருசொன் னடைய

இ - ள்: அறுவகைத் தொகைச் சொல்லும் ஒருசொல்லாய் நடத்தலையுடைய என்றவாறு.

ஒருசொன்னடையவெனப் பொதுப்படக் கூறியவதனான், யானைக்கோடு, கொல்யானை எனமுன்மொழி பெயராகியவழி ஒருபெயர்ச்சொன்னடையவாதலும், நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் என முன்மொழி வினையாய

வழி ஒருவினைச்சொன்னடைய வாதலுங் கொள்க. அவை உருபேற்றலும் பயனிலை கோட்லு முதலாகிய பெயர்த்தன்மையும், பயனிலையாதலும் பெயர் கோடலு முதலாகிய வினைத்தன்மையு முடையவாதல் அவ்வச்சொல்லோடு கூட்டிக் கண்டுகொள்க.

நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் எனப் பெயரும் வினையுந் தொக்கன ஒருசொன்னீர்மையில வாகலிற் றொகையெனப்படா வென்பாருமுளர். எழுத்தோத்தினுள் 'பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப-வேற்றுமை யுருபு நிலைபெறு வழியுங்—தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்' (எழு-கஉஉ.) என்றதனுன், வேற்றுமையுருபு தொகப், பெயருந் தொழிலும் ஒருங்கிசைத்தல் ஆசிரியர் சேர்த்தாராகலின், அவை தொகையெனவே படுமென்பது. கடந்தானிலம், இருந்தான் குன்றத்து என்பன ஒருங்கிசையாது பக்கிசைத்தலின், அவை தொகையன்மையறிக.

எல்லாத் தொகையு மொருசொன் னடைய என்றதனுன், தொகையல்லாத தொடர்மொழியுள் ஒருசொன் னடையாவன சிலவுளவென்பதாம். யானை கோடுகூரிது, இரும்பு பொன்னுயிற்று, மக்களை யுயர்திணையென்ப என்பன வற்றுள், கோடுகூரிது, பொன்னுயிற்று, உயர்திணையென்ப என்னுந் தொகையல் தொடர்மொழி ஒருசொன்னடையவாய் எழுவாய்க்கும் இரண்டாவதற்கும் முடிவாயினவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன.

உம்மைத் தொகைக்கு மேலும் ஒரு முடிவு

கஉக. உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனுர் புலவர்

இ - ள்: உயர்திணைக்கண் வரும் உம்மைத்தொகை பலர்க்குரிய ஈற்றுன் நடக்கும்; எ - று.

பொதுவிற் கூறினுமேனும், மாமூலபெருந்தலைச்சாத்தர்; கபிலபரணர்கோர் என வரும்.

விரவுப்பெயர்த்தொகையும் அடங்குதற்கு உயர்திணைப் பெயரும்மைத் தொகை யென்னுது, உயர்திணைமருங்கி னும்மைத்தொகை யென்றுர். அவை ஒட்டியொருசொல்லாய் நிற்றலிற் பலரறிசொல் லெனப்படும். பலரறிசொற் கபில பரணன் என ஒருமையீற்றுன் நடத்தல் வழுவாகலின் வழுக்காத்த வாறு.

இதனுனுந் தொகை ஒரு சொல்லாதல் பெற்றும். ஒரு சொன்னீர்மை பெற்றின்றுயின், கபிலன் பரணன் என ஒருமைச்சொல் ஒருமையீற்றுன் நடத்தற்கட்படும் இழுக்கென்னையென்பது. (உடு)

பொருள் கொள்ளுங் குறிப்பு

சஉஉ. வாரா மரபின வரக்கூ றுதலு
மென்னு மரபின வெனக்கூ றுதலு
மன்னவை யெல்லா மவற்றவற் றியல்பா
னின்ன வென்னுங் குறிப்புரை யாகும்.

இ - ள்: வாராவியல்பினவற்றை வருவனவாகச் சொல்லுதலும், என்னுவியல்பினவற்றை என்பனவாகச் சொல்லுதலும்,

அத்தன்மையனவெல்லாம் அவ்வப்பொருளியல்பான் இத்தன்மைய வென்று சொல்லுங் குறிப்புமொழியாம்; எ - று.

எ - டு:—அந்நெறி யீண்டு வந்து கிடந்தது, அம்மலே வந் திதனோடு பொருந்திற்று எனவும்; அவலவலென்கின்றன நெல், மழைமழையென்கின் றன பைங்கூழ் எனவும் வரும். அவை வரவுஞ்சொல்லுதலு மூணர்த்தாது இன்னவென்பதனைக் குறிப்பாலுணர்த்தியவாறு கண்டுகொள்க.

மூலே வந்தன, தலே வந்தன என்பன காட்டுவாரு முளர். ஆண்டு வருதல் வளர்தற் பொருட்டாகலான், அவை ஈண்டைக் காகா வென்க.

நிலம் வல்லென்றது, நீர் தண்ணென்றது என்பன காட்டினாரால் உரை யாசிரியரெனின்:—சொலற்பொருள வன்மையின், அவை காட்டல் அவர் கருத்தன் றென்க.

அன்னவையெல்லா மென்றதனான், இந்நெறியாண்டுச் சென்று கிடக்கும்; இக்குன் றக்குன்றேடொன்றும் என்னுந் தொடக்கத்தன கொள்க. (உசு)

தொகையைப்போல அடுக்கி வருவன வற்றுள் இசைநிறை அடுக்கு

சூஉங. இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்

பொருளொடு புணர்தல் என்னும் அடுக்கு

சூஉச. விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்

இ - ள்: மேற்கூறப்பட்ட ஒருசொல்லடுக்கினுள், இசை நிறையடுக்கு நான்காகிய வரம்பையுடைத்து; பொருளொடு புணர்தற்கண் விரைவுபொருள்பட அடுக்குவது மூன்றாகிய வரம் பை யுடைத்து; எ'- று.

வரம்பாகுமென்றது, அவை நான்கினும் மூன்றினு மிறந்து வாராக் குறைந்து வரப்பெறு மென்றவாறு.

எ - டு 'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ' எனவும், நித்நித்நி எனவும் வரும்.

அவை மூமமூறையாலும் இருமூறையாலும் அடுக்கி வருதல், இவற் றைக் குறைத்துச் சொல்லிக் கண்டுகொள்க.

இசைப்பொருளாவது செய்யுளின்பம்.

விரைவிக்குஞ் சொல்லே விரைசொ லென்றார்.

அசைநிலே இருமூறையல்லது அடுக்காமையின், அதற்கெல்லே கூறு ராயினர். அஃ திருமூறை யடுக்குமென்பது யாண்டுப் பெற்றுமெனின், அடுக்கு மென்பதனாற் பெற்றும். ஒருமூறை வருவது அடுக்கெனப் படாமையி னென்பது.

முன்னர்க் கூறப்படும் அசைநிலே அடுக்கி வருமென்பது அதிகாரத்தாற் கோடற்பொருட்டு "இசைநிறையசைநிலே' என்னுஞ் சூத்திரத்தின்பின் வையாது இச்சூத்திர மிரண்டனையும் ஈண்டு வைத்தார்.

வழி ஒருவினைச்சொன்னடைய வாதலுங் கொள்க. அவை உருபேற்றலும் பயனிலை கோட்லு முதலாகிய பெயர்த்தன்மையும், பயனிலையாதலும் பெயர் கோடலு முதலாகிய வினைத்தன்மையு முடையவாதல் அவ்வச்சொல்லோடு கூட்டிக் கண்டுகொள்க.

நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் எனப் பெயரும் வினையுந் தொக்கன ஒருசொன்னீர்மையில வாகலிற் றொகையெனப்படா வென்பாருமுளர். எழுத்தோத்தினுள் 'பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப-வேற்றுமை யுருபு நிலைபெறு வழியுங்—தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்' (எழு-கஉஉ.) என்றதனான், வேற்றுமையுருபு தொகப், பெயருந் தொழிலும் ஒருங்கிசைத்தல் ஆசிரியர் கோள்தாராகலின், அவை தொகையெனவே படுமென்பது. கடந்தானிலம், இருந்தான் குன்றத்து என்பன ஒருங்கிசையாது பக்கிசைத்தலின், அவை தொகையன்மையறிக.

எல்லாத் தொகையு மொருசொன் னடைய என்றதனான், தொகையல்லாத தொடர்மொழியுள் ஒருசொன் னடையாவன சிலவுளவென்பதாம். யானை கோடுகூரிது, இரும்பு பொன்னுயிற்று, மக்களை யுயர்திணையென்ப என்பன வற்றுள், கோடுகூரிது, பொன்னுயிற்று, உயர்திணையென்ப என்னுந் தொகையல் தொடர்மொழி ஒருசொன்னடையவாய் எழுவாய்க்கும் இரண்டாவதற்கும் முடிவாயினவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன.

உம்மைத் தொகைக்கு மேலும் ஒரு முடிவு

கஉக. உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்

இ - ள்: உயர்திணைக்கண் வரும் உம்மைத்தொகை பலர்க் குரிய ஈற்றுரன் றடக்கும்; எ - று.

பொதுவிற் கூறினுமேனும், மாமூலபெருந்தலைச்சாத்தர்; கபிலபரண ரக்கீரர் என வரும்.

விரவுப்பெயர்த்தொகையும் அடங்குதற்கு உயர்திணைப் பெய ரும்மைத் தொகை யென்றது, உயர்திணைமருங்கி னும்மைத்தொகை யென்றார். அவை ஒட்டியொருசொல்லாய் நிற்றலிற் பலரறிசொல் லெனப்படும். பலரறிசொற் கபில பரணன் என ஒருமையீற்றுரன் றடத்தல் வழுவாகலின் வழுக்காத்த வாறு.

இதனானுந் தொகை ஒரு சொல்லாதல் பெற்றும். ஒரு சொன்னீர்மை பெற்றின்றாயின், கபிலன் பரணன் என ஒருமைச்சொல் ஒருமையீற்றுரன் றடத்தற்கட்படும் இழுக்கென்னையென்பது. (உஇ)

பொருள் கொள்ளுங் குறிப்பு

சஉஉ. வாரா மரபின வரக்கூ றுதலு
மென்னு மரபின வெனக்கூ றுதலு
மன்னவை யெல்லா மவற்றவற் றியல்பா
னின்ன வென்னுங் குறிப்புரை யாகும்.

இ - ள்: வாராவியல்பினவற்றை வருவனவாகச் சொல்லுதலும், என்னுவியல்பினவற்றை என்பனவாகச் சொல்லுதலும்,

அத்தன்மையனவெல்லாம் அவ்வப்பொருளியல்பான் இத்தன்மைய வென்று சொல்லுங் குறிப்புமொழியாம்; எ - று.

எ - டு:—அந்நெறி யீண்டு வந்து கிடந்தது, அம்மலை வந் திதனோடு பொருந்திற்று எனவும்; அவலவலென்கின்றன நெல், மழைமழையென்கின் றன பைங்கூழ் எனவும் வரும். அவை வரவுஞ்சொல்லுதலு முணர்த்தாது இன்னவென்பதனைக் குறிப்பாலுணர்த்தியவாறு கண்டுகொள்க.

மூலை வந்தன, தலை வந்தன என்பன காட்டுவாரு மூளர். ஆண்டு வருதல் வளர்தற் பொருட்டாகலான், அவை ஈண்டைக் காகா வென்க.

நிலம் வல்லென்றது, நீர் தண்ணென்றது என்பன காட்டினாரால் உரை யாசிரியரெனின்:—சொலற்பொருள வன்மையின், அவை காட்டல் அவர் கருத்தன் றென்க.

அன்னவையெல்லா மென்றதனான், இந்நெறியாண்டுச் சென்று கிடக்கும்; இக்குன் றக்குன்றேடொன்றும் என்னுந் தொடக்கத்தன கொள்க. (உசு)

தொகையைப்போல அடுக்கி வருவன வற்றுள் இசைநிறை அடுக்கு

சூஉங. இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்

பொருளொடு புணர்தல் என்னும் அடுக்கு

சூஉச. விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்

இ - ன்: மேற்கூறப்பட்ட ஒருசொல்லடுக்கினுள், இசை நிறையடுக்கு நான்காகிய வரம்பையுடைத்து; பொருளொடு புணர்தற்கண் விரைவுபொருள்பட அடுக்குவது மூன்றாகிய வரம் பை யுடைத்து; எ - று.

வரம்பாகுமென்றது, அவை நான்கினும் மூன்றினு மிறந்து வாராக் குறைந்து வரப்பெறு மென்றவாறு.

எ - டு 'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ' எனவும், நீத்நீத்நீ எனவும் வரும்.

அவை மும்மூறையானும் இருமுறையானும் அடுக்கி வருதல், இவற் றைக் குறைத்துச் சொல்லிக் கண்டுகொள்க.

இசைப்பொருளாவது செய்யுளின்பம்.

விரைவிக்குஞ் சொல்லை விரைசொ லென்றார்.

அசைநிலை இருமுறையல்லது அடுக்காமையின், அதற்கெல்லை கூறு ராயினர். அஃ திருமுறை யடுக்குமென்பது யாண்டுப் பெற்றாமெனின், அடுக்கு மென்பதனாற் பெற்றும். ஒருமுறை வருவது அடுக்கெனப் படாமையி னென்பது.

முன்னர்க் கூறப்படும் அசைநிலை அடுக்கி வருமென்பது அதிகாரத்தாற் கோடற்பொருட்டு "இசைநிறையசைநிலை' என்னுஞ் சூத்திரத்தின்பின் வையாது இச்சூத்திர மிரண்டனையும் ஈண்டு வைத்தார்.

அசைநிலை அடுக்கு

சூஉ.கண்டீ ரென்ரு கொண்டீ ரென்ரு
சென்ற தென்ரு போயிற் றென்ரு
வன்றி யிணைத்தும் வினவொடு சிவணி
நின்றவழி யசைக்குங் கிளவி யென்ப

இ - ள்: கண்டீரெனவும், கொண்டீரெனவும், சென்றதென வும் போயிற்றெனவும் வரும் வினைச்சொன் னுன்கும், வினவொடு பொருந்தி நின்றவழி, அசைநிலையடுக்காம்; எ - று.

கட்டுரையகத்து ஒருவன் ஒன்று சொல்லியவழி அதற்குடம்படாதான் கண்டீரே கண்டீரே என்னும். ஈண்டு வினைச்சொற் பொருண்மையும் வினாப் பொருண்மையு மின்மையின், அசைநிலையாயினவாறு கண்டுகொள்க. வரையாது கூறினமையால், கண்டீரே எனச் சிறுபான்மை அடுக்காது வருதலுங்கொள்க. ஏனையவும் ஏற்றவழி அடுக்கியும் அடுக்காதும் அசைநிலையாம். அவை இக் காலத் தரிய; வந்தவழிக் கண்டுகொள்க. (உசு)

சூஉசு. கேட்டை யென்ரு நின்றை யென்ரு
காத்தை யென்ரு கண்டை யென்ரு
வன்றி யிணைத்து முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த வியல்பா கும்மே.

இ - ள்: கேட்டை யெனவும், நின்றை யெனவும், காத்தை யெனவும், கண்டை யெனவும் வரும் நான்கும், முன்னிலை யல்லாக் கால், மேற்சொல்லப்பட்ட அசைநிலையாம்; எ - று.

இவையுங கட்டுரைக்கண் அடுக்கியும் சிறுபான்மை அடுக்காதும் ஏற்ற வழி அசைநிலையாய் வருமாறு கண்டுகொள்க.

நின்றை, காத்தை யென்பன இக்காலத்துப் பயின்று வாரா.

வினவிற் கடையாக அடுக்கிவந்தவழி முன்னிலையசைநிலையேயாம். இவை அடுக்கியும் அடுக்காதும் முன்னிலைச்சொல்லாதலு மிடைமையான், அந் நிலைமை நீக்குதற்கு 'முன்னிலையல்வழி' யென்ரூர்.

முன்னுறக்கிளந்த வியல்பாகு மென்றதனுன், முன்னையபோலச சிறு பான்மை வினவொடு வருதலுங்கொள்க.

முன்னிலையல்வழி யென்பதற்கு முன்னையபோல வினவொடு சிவணி நில்லாதவழி யென்றுரைத்தாரால் உரையாசிரிய ரெனின்:—அற்றன்று: வினு வொடு சிவணல் இவற்றிற்கொன்ரு னெய்தாமையின் விலக்கவேண்டா; அத னுன் அவர்க்கது கருத்தன்றென்க.

இரண்டு சூத்திரத்தானுங் கூறப்பட்டன வினைச்சொல்லாதலும் இடைச் சொல்லாதலு மிடைமையான், வினையிலுள்ளும் இடையிலுள்ளுங் கூறுதல் ஈண்டுக் கூறினர்.

அஃதேல், ஆக, ஆகல், என்பது என்பனவற்றோடு இவற்றிடை வேற் றுமை யுண்மோ? அவையும் வினைச்சொல்லாத லுடைமையா னெனின்:—

இசை நிறைத்தற்கும் பொருள் வேறு பாட்டிற்கும் அடுக்கி வரினல்லாது அடுக்காது வருதலே வினைச்சொற் கியல்பாம். ஆக, ஆகல், என்பது என்பன அடுக்கியல்லது நில்லாமையின், வினைச்சொல் இடைச்சொல்லாயின வெனப் படா. கண்ணூர், கொண்ணூர் என்பன முதலாயின வினைசொற்குரிய ஈற்றவாய் அடுக்கியும் அடுக்காதும் வருதலால் வினைச்சொல் அசைநிலையாயின வெனப்படும்; இது தம்முள் வேற்றுமை யென்க. அல்லதூஉம், விளைவொடு சிவணி நிற்றலானும் வினைச்சொல்லெனவே படுமென்பது. (கூ0)

ச. வினைமுற்றின் வகை:

அதன் இயல்பு

சூஉள. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றச்
சிறப்புடை மரபி னம்முக் காலமுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினு
மெய்ம்மை யானு மிவ்விரண் டாகு
மவ்வா றென்ப முற்றியன் மொழியே.

இ - ள்: முற்றுச்சொல்லாவது, இறப்பு நிகழ்வு எதிர்வென்னும் மூன்றுகாலமும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் மூன்றிடத்தும், உயர்திணையும் அஃறிணையும் இருதிணைப் பொதுவுமாகிய பொருடோறும், வினையானுங் குறிப்பானும் இவ்விரண்டாய் வரும் அவ்வறுவகைச் சொல்லா மென்று சொல்லுவர் ஆசிரியர்; எ - று.

எ - டு: சென்றனன், கரியன் எனவும்; சென்றது, கரிது எனவும்; சென்றனை, கரியை எனவும் வரும்.

இடமுணர்த்தலுந் திணையும் பாலும் விளக்கலும் போல ஒரு சாரனவற்றிற்கே யாகாது, எல்லாமுற்றுச் சொற்குங்காலம் முற்சிறத்தலின், 'சிறப்புடை மரபி னம்முக்காலமும்' என்றார்.

வினையினுங குறிப்பினும் என்புழி ஓரீற்றவாகிய வினையும் வினைக்குறிப்புமே கொள்ளப்படும்; இவ்விரண்டாதற் கேற்பன அவையாதலான்.

மெய்ம்மையாவது பொருண்மை.

உயர்திணையும் அஃறிணையுமல்லது இருதிணைப் பொது வென்பதோர் பொருளில்லையாயினும், சென்றனை, கரியை என்பன செலவிற்கு வினைமுதலாதலும் பண்பியுமாகிய ஒரு நிமித்தம் பற்றி இருதிணைக்கண்ணுஞ் சேறலின் அந்நிமித்தம் இருதிணைப்பொது வெனப்பட்டது.

வினையினுங்குறிப்பினும் இவ்விரண்டாய் வருதலாவது தெரிநிலைவினையாற்றெற்றெனத் தோன்றலும் குறிப்பு வினையாற்றெற்றெனத் தோன்றுமையுமாம்.

முற்றி நிற்றல் முற்றுச்சொற் கிலக்கணமாதல் முற்றியன் மொழியே யென்பதனாற் பெற்றும். முற்றிநிற்றலாவது இதுவென்பது வினையியலுட்

கூறினும். (சொல்-உஉஇ.) திணையும் பாலும் இடமும் விளக்கல் எல்லாமுற் றிற்கு மின்மையான் இலக்கணமன்மை யறிக.

உயர்திணை அஃறிணை விரவென்னும் பொருண்மேல் வினையும் வினைக் குறிப்புமாய் வருதல்பற்றி அவ்வாறென்ப வென்றார். காலமும் இடமு முதலா யினவற்றோடு கூட்டிப் பகுப்பப் பலவாம்.

ஊராளுநர் தேவகுலம் என்றாற்போல மெய்ம்மையானும் என்புழி ஆனென்பது தொறுமென்பதன் பொருட்டாய் நின்றது.

முன்னர்ப் பிரிநிலை வினையே பெயரே (சொல்-சஉ0.) என்புழிப் பெய ரெச்சமும் வினையெச்சமுங் கூறுபவாகலின் அவற்றோடையைய முற்றுச்சொல் லையும் ஈண்டுக் கூறினார். கூறவே முற்றுச்சொல்லும் பெயரெச்சமும் வினை யெச்சமுமென வினைச்சொன் மூவகைத்தாதல் இனி துணரப்படுமென்பது.

உரையாசிரியர் வினையியலுள் ஓதப்பட்டன சில வினைச்சொற்கு முற் றுச் சொல்லென்று குறியிடுதலுதலிற்று இச்சூத்திரமென்றாரா லெனின்.—குறியீடு கருத்தாயின் அவ்வாறென்ப முற்றியன் மொழியே என்னுது அவ் வாறு முற்றியன் மொழியெனல் வேண்டுமாகலான் அது போலியுரையென்க. முற்றியன் மொழியென்ப என மொழிமாற்றவே குறியீடாமெனின்:—குறி யீடு ஆட்சிப் பொருட்டாகலின் அக்குறியான் அதனை யாளாமையான் மொழி மாற்றி யிடர்ப்படுவ தென்னையோ வென்பது. அல்லதூஉம் முற்றியன் மொழி யெனக்குறியிட்டாராயின் இவை பெயரெஞ்சு கிளவியெனவும், இவை வினை யெஞ்சுகிளவி யெனவுங் குறியிடல்வேண்டும்; அவ்வாறு குறியிடாமையானும் அது கருத்தன்றும். அதனான் வினைச்சொல்லுள் இருவகையெச்ச மொழித்து ஒழிந்தசொன் முற்றிநிற்கு மென்றும், அவை இனைத்துப்பாகுபடு மென்றும் உணர்த்தல் இச்சூத்திரத்திற்குக் கருத்தாகக் கொள்க. (உக)

அதற்கு வேறு விதி

சஉஅ. எவ்வயின் வினையு மவ்விய னிலையும்.

இ-ள்: மூவிடத்தாற் பொருடோறும் இவ்விரண்டாமென மேற்சொல்லப்பட்ட கட்டளையுட்பட் டடங்காது பிறழ்ந்து வரும் வினையும் முற்றியல்பாய் நிலையும்; எ - று.

யார், எவன், இல்லை, வேறு என்பன இடமுணர்த்தாமையின், மேற் கூறிய கட்டளையினடங்காது, பிறழ்ந்து வந்தனவாம். சிறப்பீற்றான் வருந்தெரி நிலைவினையுங் குறிப்பு வினையும் பொருடோறும், வினையும் வினைக்குறிப்புமாய் வருதற்கு எய்தாமையின் மெய்ம்மையானு மிவ்விரண்டாரும் (சொல்-சஉஎ.) கட்டளையுட்படாது பிறழ்ந்து வந்தனவாம். குறிப்புவினைக்கீறுகாது தெரிநிலை வினைக் கீறுவனவும், தெரிநிலைவினைக் கீறுகாது குறிப்புவினைக்கீறுவனவும் சிறப்பீற்றவாம். அவை வினையியலுட் கூறிப்போந்தாம். யார் எவன் என்பன பாலும், இல்லை வேறு என்பன திணையும் பாலும் உணர்த்தாவாயினும் மேலைச்சூத்திரத்தான் முற்றுச்சொற்குப் பாலுந்திணையு மூணர்த்தல் ஒருதலை யாக எய்தாமையின் இடமுணர்த்தாமையேபற்றி ஈண்டுக் காட்டப்பட்டன. திணையும் பாலு மூணர்த்தல் ஒரு தலையாயின் தன்மை மூன்னிலை படர்க்கை யென்னு மம்மூ விடத்தான் (சொல்-சஉஎ.) என ஆசிரியர் மூன்னிலையிடம் ஆண்டு வையாரென்பது.

முற்றுச்சொல்லே யன்றிப் பெயரெச்சமும் வினையெச்சமும் காலமும் இடமு முணர்த்துமென்பது இச்சூத்திரத்திற்குப் பொருளாக உரைத்தாரால் உரையாசிரியரெனின்:—அவை இடவேறுபா டுணர்த்தாது மூவிடத்திற்கும் பொதுவாய் நிற்றலின், அது போலியுரையென்க.

இனி ஒருரை:—மேலைச் சூத்திரத்தாற் கூறப்பட்ட பொருண்மேலும் வரும் எல்லாவினையும் முற்றுச்சொல்லாய் நிற்கும் என்றவாறு. ஈண்டு வினை யென்றது வினைச்சொல்லை யாக்கு முதனிலையை. எல்லாவினையும் முற்றுச் சொல்லாமெனவே, எச்சமாதல் ஒருதலையன் றென்பதாம். ஆகவே, வினைச் சொலாதற்குச் சிறந்தன முற்றுச்சொல்லே யென்பதாம். எல்லாவினையும் முற்றுச்சொல்லாகலும், கச்சினன், கழலினன், நிலத்தன், புறத்தன் என்னுந் தொடக்கத்து வினைக்குறிப்பின் முதனிலை எச்சமாய் நில்லாமையும், வழக்கு நோக்கிக் கண்டுகொள்க. பிறவு மன்ன.

இவையிரண்டும் இச்சூத்திரத்திற்குப் பொருளாகக் கொள்க. (கூ)

அதற்கு முடிபு

சூ உக. அவைதாம்

தத்தங் கிளவி யடுக்கு நவரினு
மெச்சநத் தானும் பெயர்முடி பினவே.

இ - ன்: மேற்சொல்லப்பட்ட முற்றுச்சொற்றும், தத்தங் கிளவி பல அடுக்கிவரினும், தம்மூட் டொடராது எவ்வாற்றானும் பெயரொடு முடியும்; எ - று.

எ - டு: உண்டான் றின்ரு ணெடிஞன் பாடினன் சாத்தன்; நல்ல னறிவுடையன் செவ்வியன் சான்றோர் மகன் என வரும்.

அடுக்கி வரினு மென்ற உம்மையான், வந்தான் வழுதி; காரியன் மால் என அடுக்காது பெயரொடு முடிதலே பெரும்பான்மை யென்பதாம்.

தம்பாற்சொல் லல்லது பிறபாற்சொல்லொடு விரா யடுக் கின்மையின், 'தத்தங்கிளவி' யென்றார்.

என்மனார் புலவர், மூப்பஃதென்ப என வெளிப்பட்டும் வெளிப்படாதும் பெயர்முடிபா மென்றற்கு எத்திறத்தானு மென்றார். 'எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி' (சொல்-கூஅ.) என்றதனுண், வெளிப்படாது நிற்றலும் பெறப்பட்டமையான் ஈண்டுக் கூறல்வேண்டா வெனினின்:—ஆண்டு முடிக்கப் படும்பெயர் வெளிப்படாது நிற்றலுமுடைத்தென்றார்; இது முடிக்கும் பெயரா கலின் ஆண் டடங்கா தென்பது. முடிக்கப்படுவதனோடு முடிப்பதனிடை வேற் றுமை, வேற்றுமையோத்தினுட் கூறினும். இன்னும் எத்திறத்தானு மென்ற தனுன், உண்டான் சாத்தன்; சாத்தனுண்டான் என மூன்றும் பின்னும் பெயர் கிடத்தலுங் கொள்க.

அஃதேல், மூற்றி நிற்றலாவது மற்றுச்சொன்னோக்காமை யாகலின், முற்றிற்றேல் அது பெயர் அவாய் நில்லாது; பெயர் அவாயிற்றேன் முற்றுச் சொலெனப்படாது; அதனுண் முற்றுச்சொற் பெயர்கொள்ளுமென்றல் மாறு கொள்ளக்கூறலாமெனின்:—அற்றன்று: உண்டான் சாத்தன் என்பது எத்தை யென்னும் அவாய்நிலைக்கட் சோற்றையென்பதனோடு இயைந்தாற்போல, உண்

டான் என்பது யாரென்னும் அவாய்நிலைக்கட் சாத்தனென்பதனோடு இயைவ தல்லது, அவாய்நிலையில்வழி உண்டானெனத் தானே தொடராய் நிற்றல் வினையியலுள்ளுங் கூறினுமென்பது. அஃதேல், சாத்தனென்னும் பெயர் சோற்றையென்பது போல் அவாய்நிற்றலையுள்வழி வருவதாயின், எத்திறத் தானும் பெயர்முடிபினவே என விதந்தோதல் வேண்டாவாம் பிறவெனின்:— கன்று சொன்னுய்: அவாய்நிற்றலையுள்வழி வருவது அவ்விரண்டற்கும் ஒக்கு மேனும், உண்டானென்றவுழி உண்டற்றொழிலாற் செயப்படுபொருள் உய்த் துணர்ந்து பின் அதன்வேறுபா டறியலுறிற் சோற்றையென்பது வந்தியை வதல்லது, சொற்கேட்டதூணையான் எத்தையெனக் கேட்பான் செயப்படு பொருள் வேறுபாடு அறிதற்கு அவாவாமையின், சோற்றையென்பது வருதல் ஒருதலையன்று. இனி, உண்டானென்னுஞ் சொல்லாற் பொதுவகையான் வினைமுதலுணர்ந்து கேட்பான் அதன் வேறுபா டறியலுறுதலின், சாத்த னென்பது வருதல் ஒருதலையாம். அதனுன் இச்சிறப்புநோக்கி விதந்தோதினு ரென்பது. (கூ)

ரு. எச்சச் சொற்களின் வகை

அவற்றின் பாகுபாடு

சூ.ஒ. பிரிநிலை வினையே பெயரே யொழியிசை
யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே
குறிப்பே யிசையே யாயி ரைந்து
நெறிப்படத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி.

முற்றுச்சொல் லுணர்த்தி எச்சமாமா றுணர்த்துகின்றூர். எஞ்சு பொருட்கிளவி கொண்டல்லது அமையாமையின் எச்சமாயினவும், ஒரு தொடர்க்கொழிபாய் எச்சமாயினவுமென அவை இருவகைப்படும்.

இ - ள்: பிரிநிலை முதலாகச் சொல்லப்பட்ட பத்தும் எஞ்சு பொருட்கிளவியாம்; எ - று.

அவற்றுட் கடைநிலை மூன்றும் ஒருதொடர்க்கொழிபாய் எச்சமாயின. அல்லன எஞ்சுபொருட்கிளவியான் முடிவன. எஞ்சுபொருட்கிளவியெனினும் எச்சமெனினு மொக்கும்.

பெயரெச்சம் வினையெச்சம் பெயர் வினையான் முடிதலின், ஆருபெயராற் பெயர் வினை யென்றூர்.

ஆயிரைந்து மெஞ்சுபொருட்கிளவி யென்றூரேனும், எஞ்சு பொருட் கிளவி பத்துவகைப்படு மென்பது கருத்தாகக் கொள்க.

எச்சமாவன ஒருசார்பெயரும் வினையும் இடைச்சொல்லுமாதலின், பெயரியன் முதலாயினவற்றுட் பத்தும் ஒருங்குணர்த்துதற்கேலாமை யறிக.

முடிவும் பொருளு மொத்தலான், என்றென்பதனை எனவின்க ணேற்றினூர். (கூ)

பிரிநிலை யெச்சம்

சூசுக. அவற்றுள்
பிரிநிலை யெச்சம் பிரிநிலை முடியின.

இ - ள்: மேற்சொல்லப்பட்ட எச்சங்களுள், பிரிநிலையெச்சம் ஏகாரப்பிரிநிலையும் ஓகாரப்பிரிநிலையுமென இருவகைப்படும். அவ்விருவகைப்பிரிநிலையெச்சமும் பிரிக்கப்பட்ட பொருளையுணர்த்துஞ் சொல்லோடு முடியும்; எ - று.

எ - டு: தானே கொண்டான்; தானே கொண்டான் என்னும் பிரிநிலையெச்சம் பிறர் கொண்டிலரெனப் பிரிக்கப்பட்ட பொருளையுணர்த்துஞ் சொல்லான் முடிந்தவாறு கண்டுகொள்க.

அஃதேல், தானெனப்பட்டானன்றே ஆண்டுப் பிரிக்கப்பட்டான், பிறர் கொண்டிலரென்பது அவனையுணர்த்துஞ் சொல்லன்மையான், அவை பிரிநிலை கொண்டு முடிந்திலவாலெனின்:—அற்றன்று: தானெனப்பட்டான் பிறரிற் பிரிக்கப்பட்டவழிப், பிறரும் அவனிற் பிரிக்கப்பட்டமையான், அவை பிரிநிலை கொண்டனவேயா மென்க.

பிரிநிலையோடு முடிதலாவது அவனே கொண்டான் என்றவழி, அவனே யென்பது கொண்டானெனப் பிரிக்கப்பட்டபொருளை வினையெனக் கொண்டு முடிதலென்றாரால் உரையாசிரியரெனின்:—அற்றன்று: அவனே கொண்டான் என்புழி அவனென்னும் எழுவாயவேற்றுமை கொண்டானென்னும் பயனிலை கொண்டது; ஏகாரம் பிரிவுணர்த்திற்று; ஆண்டெச்சமும் எச்சத்தை முடிக்குஞ் சொல்லுமின்மையான், அவர்க்கது கருத்தன்றென்க. (கூடு)

வினை யெச்சம்

சூசுஉ. வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பு
நினையத் தோன்றிய முடிபா கும்மே
யாவயிற் குறிப்பே யாக்கமொடு வருமே.

இ - ள்: வினையெச்சத்திற்குத் தெரிநிலைவினையுங் குறிப்புவினையும் முடிபாம்; ஆண்டைக்குறிப்புவினை ஆக்கவினையோடு வரும்; எ - று.

எ - டு: உழுது வந்தான்; மருந்துண்டு நல்ல ஞயிஞன் என வரும்.

உழுது வருதல்; உழுது வந்தவன் என வினையெச்சம் வினைப்பெயரோடு முடிதல் நினையத்தோன்றிய வென்றதனாற் கொள்க.

வினையெச்சத்திற்கு முடிபு வினையியலுட் கூறப்பட்டமையான் இச் சூத்திரம் வேண்டா வெனின்:—இதற்கு விடை ஆண்டே கூறினும்.

'வேங்கையுங் காந்தளு நாறி யாம்பன் மலரினுந் தான் றண்ணியளே' (குறுந்-அசு.) 'வில்லக விரலிற் * பொருந்தியவாறு கல்லகஞ்சேரி ஞெரு மருங னெமே' (குறுந்-உஎ0.) எனவும்; கற்றுவல்லன், பெற்றுடையன் எனவும் வினைக்குறிப்பு ஆக்கமின்றி வந்தனவாலெனின்:—ஆக்கமொடு வரு

* பொருந்தியவர் எனவும் பாடம்.

மென்றது பெரும்பான்மை குறித்த தாகலிற் சிறுபான்மை ஆக்கமின்றியும் வருமென்பது. (உசு)

பெயரெச்சம்

சூஉங. பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.

இ - ள்: பெயரெச்சம் பெயரொடு முடியும்; எ - று.

எ - டு: உண்ணுஞ் சாத்தன்; உண்ட சாத்தன் என வரும்.

'அவ்வறு பொருட்குமோ ரன்னவுரிமைய' (சொல்-உஉச.) என்றதனாற் பெயரெச்சம் பொருள்படுமுறைமை கூறினார். முடிபு எச்சவியலுட் பெறப்படுமென வினையியலுட் கூறியவாறு கடைப்பிடிக்க. (உஎ)

ஒழியிசை யெச்சம்

சூஉச. ஒழியிசை யெச்ச மொழியிசை முடிபின.

இ - ள்: மன்னை யொழியிசையும், தில்லை யொழியிசையும், ஓகார வொழியிசையும் ஆகிய ஒழியிசையெச்சமூன்றும் ஒழியிசையான் முடியும்; எ - று,

எ - டு: 'கூரியதோர் வாண்மன்' 'வருகதில் லம்மவெஞ் சேரிசேர' (அகம்-உஎக.) கொளலோ கொண்டான் என்னும் ஒழியிசை யெச்சம், முறையானே, திட்ப மின்று, வந்தாலின்னது செய்வல், கொண்டியப்போமா றறிந்திலன் என்னும் ஒழியிசையான் முடிந்தவாறு. பிறவும் முடித்தற்கேற்கும் ஒழியிசை யறிந்துகொள்க. (உஅ)

எதிர்மறை யெச்சம்

சூஉடு. எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின.

இ - ள்: மாறுகொ ளெச்ச மெனப்பட்ட ஏகார வெதிர்மறையும், ஓகார எதிர் மறையும் உம்மை யெதிர்மறையுமாகிய எதிர்மறையெச்ச மூன்றும் எதிர்மறையான் முடியும்; எ - று.

எ - டு: யானே கொள்வேன்; யானே கள்வேன்; வரலு முரியன் என்னும் எதிர்மறையெச்சம், முறையானே, கொள்ளேன், கள்ளேன், வாராமையு முரியன் என்னும் எதிர்மறையான் முடிந்தவாறு கண்டுகொள்க. (உக)

உம்மை யெச்சம்

சூஉசு. உம்மை யெச்ச மிருவிற் றானுந்
தன்வினை யொன்றிய முடிபா கும்மே.

இ - ள்: எஞ்சுபொருட்கிளவியும் அவ்வெஞ்சுபொருட் கிளவியான் முடிவதுமாகிய உம்மையெச்ச வேறுபாடிரண்டன்கண்ணும், தன்வினை உம்மையொடு தொடர்ந்த சொற்குப் பொருந்திய முடிபாம்; எ - று.

என்றது, 'எஞ்சுபொருட் கிளவி செஞ்சொலாயின்' (சொல்-உஎச.) என்றதனுள் உம்மையுடைத்தாயும் உம்மையின்றியும் வரும் எஞ்சுபொருட்

இளவி உம்மையெச்சத்திற்கு முடிபாத லெய்திற்று. என்னை? எல்லாவெச்சத்திற்கும் எஞ்சுபொருட்கிளவியே முடிபாகலின். இனி உம்மையொடு தொடர்ந்த சொல்லிரண்டற்கும் வினையொன்றேயாகல் வேண்டுமென எய்தாத தெய்துவித்தவாறு.

ஒன்றற்காயதே வினையதற்கு மாகலிற் றன்வினை யென்றார்.

உ - டு: சாத்தனும் வந்தான் கொற்றனும் வந்தான் என இரண்டும் ஒருவினை கொண்டவாறு கண்டுகொள்க. சாத்தனும் வந்தான் கொற்றனு முண்டான் என வினை வேறுபட்டவழி உம்மையெச்சமும் எஞ்சுபொருட் கிளவியும் இயையாமை கண்டுகொள்க. அஃதேல்,

'பைம்புதல் வேங்கையு மொள்ளிணர் விரிந்தன—
செடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே' (அகம்-உ.)

என வினை வேறுபட்டுழியுந் தம்மு ளியைந்தனவா லெனின்:-இணர் விரிதலும் ஊர் கோடலும் இரண்டும் மணஞ்செய் காலம் இது வென்றுணர்த்துதலாகிய ஒருபொருள் குறித்து நின்றமையான், அவை ஒருவினைப்பாற்படுமென்பது. பிறவும் இவ்வாறு வருவனவறிந்து ஒருவினைப்பாற்படுக்க.

எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயவழித் தன்வினை கோடல் ஈண்டடங்காமையான், அது தன்னினமுடித்தலென்பதனாற் பெறப்படும்.

உம்மையெச்ச மிருவீற்றாலு மென்றதனான், உம்மை யெச்சத்திற்கு முடிபாகிய எஞ்சுபொருட்கிளவி உம்மையொடுவரின் எச்சமாமென்பதாம். அஃதெச்சமாங்கால், முன்னின்றது எஞ்சுபொருட் கிளவியா மென்பது.

எதிர்மறையும்மை எதிர்மறை யெச்சமா யடங்குதலின், ஈண்டும்மை யெச்சமென்றது எச்சவும்மையேயாம். (சு0)

அதற்குமேலும் ஒரு முடிபு

சூ. தன்மேற் செஞ்சொல் வருஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமு
மிறந்த காலமொடு வாராக் காலமு
மயங்குதல் வரையார் முறைநிலை யான.

இ - ள்: உம்மை யெச்சத்தின்முன் எஞ்சு பொருட்கிளவி உம்மையில் சொல்லாய் வருங்கால், நிகழ்காலத்தோடு எதிர்கால மும் இறந்தகாலத்தோடு எதிர்காலமும் மயங்குதல் வரையார்; எ - று.

முறைநிலையான வென்றதனான், கூறிய முறையானல்லது எதிர் காலம் முன்னிற்ப வினைக்காலம் பின் வந்து மயங்குதலில்லை யென்பதாம்.

உ - டு: கூழுண்ணுகின்றான் சோறுமுண்பன் எனவும், கூழுண் டான் சோறுமுண்பன் எனவும் அவை கூறிய முறையான் மயங்கிய வாறு கண்டுகொள்க.

இவற்றோடு இது மயங்குதல் வரையா ரெனவே, இறந்தகாலத்தோடு நிகழ்காலமும் நிகழ்காலத்தோடு இறந்தகாலமும் வந்து மயங்குதல் வரையப்படு மென்றவாறாயிற்று.

தன்மேற்செஞ்சொல் வருஉங்காலை யென்றதனான், உம்மையடுத்த சொல் வருங்கால், வேறுபாடின்றி இரண்டு சொல்லும் ஒருகாலத்தான் வருமென்பதாம்.

தன்வினை, காலம்வேறுபடுதலும் படாமையும் உடைமையான், இன்னுழி இன்னவாற்றுனல்லது காலம் வேறுபடாதென வரையறுத்த வாறு. (சக)

'என' என்னும் எச்சம்

சஉஅ. எனவெ னெச்சம் வினையொடு முடிமே.

இ - ள்: எனவென்னுமெச்சம் வினைகொண்டு முடியும்; எ - று.

எ - டு: கொள்ளெனக் கொடுத்தான்; திண்ணெனத் துடித்தது; ஒல்லெனவொலித்தது! காரெனக்கறுத்தது எனவும், நன்றென்று கொண்டான்; தீதென்றிகழ்ந்தான் எனவும் வரும். (சஉ)

ஏனை மூன்று எச்சங்கள்

சஉக. எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கு
மெஞ்சுபொருட்கிளவி யிலவென மொழிப.

இ - ள்: சொல்லப்பட்டனவொழிந்து நின்ற சொல்லுங் குறிப்பும் இசையுடாகிய எச்சமூன்றும் மேல் வந்து தம்மை முடிக்கும் எஞ்சுபொருட்கிளவியை யுடைய வல்லவென்று சொல்லுவர் ஆசிரியர்; எ - று.

என்றது, அவ்வதற்தொடர்க்குத் தாமெச்சமாய் வந்து அவற்ற தவாய் நிலையை நீக்கலின், பிரிநிலையெச்சமுதலாயினபோலத், தம்மைமுடிக்கும் பிற சொல்லைத் தாம் அவாய் நில்லாவென்றவாறு. அவை பிறசொல் லவாவாது தாம் எச்சமாய் வருமாறு முன்னார்ச் சூத்திரத்தாற் பெறப்படும். (சக)

குறிப்பெச்சமும் இசை யெச்சமும்

சஉஎ. அவைதாம்
தந்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்.

இ - ள்: அவ்வெச்சமூன்றும் சொல்லுவார் குறிப்பான் எஞ்சி நின்ற பொருளையுணர்த்தும்; எ - று.

எ - டு:

'பசப்பித்துச் சென்ற நுடையையோ வன்ன
நிறத்தையோ பீர மலா'

'இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து' (குறள்-அஎக.)

என்புழி முறையானே பசப்பித்துச் சென்றுழை யாமுடையேம் எனவும், நீயாரைக் காலத்தாற் களைக எனவும் வந்த தொடர்மொழி எச்சமாய்நின்ற குறிப்புப்பொருளை வெளிப்படுத்தலாற் குறிப்பெச்சமாயின.

' அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு ' (குறள்-க.)

' அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு ' (குறள்-ககஉச.)

என்றவழி முறையானே அதுபோல எனவும், நீத்தார்க்கே தவறு எனவும் வருவன எஞ்சிய இசைப்பொரு ளுணர்த்தலான் இசையெச்ச மாயின. சொல் லெச்சத்திற்கு உதாரணம் முன்னர்க்காட்டுதும். 'சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே' (சொல்-சசக.) என்பதனுன் அஃதொருசொல்லாதல் பெறப் படுதலின், இது தொடர்ச்சொல்லா மென்பது. சொல் லென்னுஞ் சொல் எஞ்சுவது சொல்லெச்சமென்பார் இவ்விருவகையும் இசையெச்சமென அடக்குப.

பசப்பித்துச் சென்றுரை யாமுடையேம் என்னுந் தொடக்கத்தன குறிப்பிற்றேன்றலா யடங்குதலின், விண்ணென விசைத்தது என்பது குறிப்பெச்சமென்றும், அதுபோல என்னுந் தொடக்கத்தன விகாரவகையாற் றேற்கு நின்றமையான், ஒல்லென வொலித்தது என்பது இசையெச்சமென் றும், இவை தத்தஞ்சொல்லான் முடிதலல்லது பிறசொல்லான், முடியாமை யின் இவற்றை மேல்வந்து முடிக்கும் எஞ்சுபொருட்கிளவியில வென்ற ரென்றும், உரைத்தாரால் உரையாசிரியரெனின்:—அற்றன்று: 'தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றேன்றலும்' (சொல்-கஎ.) எனச் சொற்பொருட் பாகுபாடுணர்த்தினர்; குறிப்பிற்றேன்றும் பொருளே வெளிப்படுத்தும் எச்ச மாதலுடைமையான் எசசமென்றார்; அதனுன் ஆண்டடங்காது. இனி விசைத்தது ஒலித்தது என்பன தஞ்சொல்லெனப்படா; படினும், விண் ணென வீங்கிற்று துண்ணெனத் துளங்கினுன் எனவும், ஒல்லெனவீழ்ந்தது எனவும் பிறசொல்லானும் முடிதலின் எஞ்சுபொருட் கிளவியில வென்றல் பொருந்தாதாம். என்னை? தஞ்சொலல்லாதன எஞ்சுபொருட் கிளவியா மாகலின்.

இனி அதுபோல வென்பது தொகுக்கும்வழித் தொகுத்த லென்பதனுற் றேற்கதாயின், அதனேச சுட்டிக் கூறுவதுமையென அணியியலுள் ஆசிரியர் ஒருவமை வேறுபாடாகக்கூறல் பொருந்தாது. தொகுக்கும்வழித் தொகுத்தல் ஒருமொழிக்கண்ணதாகலிற் பலசொற் றேறு மென்றலும் பொருத்தமின்று. அதனுன் அவர்க்கது கருத்தன்று. விண்ணென விசைத் தது; ஒல்லென வொலித்தது என்னுந் தொடக்கத்தனவற்றை எனவெ னெச்சமென அடக்கிக் குறிப்பெச்சத்திற்கும் இசையெச்சத்திற்கும் வேறுதா ரணங்காட்டல் கருத்தென்க. அல்லதூஉம், எனவெனெச்சமென அடக் காது இசையுங்குறிப்புமப்பற்றி வருவனவற்றை வேறேதின், வெள்ளென வெளுத்தது எனப் பண்புபற்றி வருவதனையும் வேறேதல்வேண்டும்; அதனை வேறேதாமையானும் எனவெனெச்சமென அடக்குதலே கருத்தாகக் கொள்க. குறிப்புப் பொருளாப் 'பசப்பித்துச் சென்று ருடையையோ' 'இலைதாக முண்மரங் கொல்க' என்பன முதலாகிய தொடர்மொழியே உணர்த்தலான் எஞ்சுபொருளெனப்படா வாயினும், அப்பொருள் பிறசொல்லானல்லது வெளிப்படாமையின், அச்சொல் லெச்சமாயிற்று. குறிப்புப் பொருளே யன்றி எஞ்சுபொருளுஞ் சொல்லுவான் குறிப்பொடு படுத்துணர்ந்து தமக்

கேற்ற சொல்லாலுணர்த்தப்படுதலின், குறிப்பா னெச்சஞ்செப்பல் மூன்றற்கு மொத்தவா றறிக. ( )

சொல்லெச்சம்.

சசக. சொல்லெ னெச்ச முன்னும் பின்னுஞ்
சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே.

இ - ள்: சொல்லெச்சம், ஒருசொற்கு முன்னும் பின்னுஞ் சொன்மாத்திரம் எஞ்சுவதல்லது, தொடரா யெஞ்சுதலின்று; எ - று.

'உயர்திணையென்மனார்' (சொல்-க.) என்புழி ஆசிரியரென்னுஞ்சொல் முன்னும், 'மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே' (குறுந்-எக.) என்புழி எமக்கென்னுஞ்சொல் பின்னும், எஞ்சி நின்றவாறு கண்டு கொள்க.

ஒருசாரார் இவற்றை இசையெச்சமென்று, சொல்லளவல்ல தெஞ்சுத லின்றே என்பதற்குச் சொல்லென்னுஞ் சொல்லளவல்லது பிறிதுசொல் லெஞ்சுத லின்றென்று பொருளுரைத்து, பசித்தேன் பழஞ்சோறு தாவென்று நின்ரூள் என்புழித் தாவெனச்சொல்லி யெனச், சொல்லென்னுஞ்சொல் எஞ்சி நின்றதென்று, இதனை உதாரணமாகக் காட்டுப. அவர் முன்னும் பின்னு மென்பதற்குச் சொல்லென்னுஞ் சொற்கொணர்ந்து கூட்டுவதன் முன்னும் பின்னுமென இடர்ப்பட்டுப் பொருளுரைப்ப. (சஞ)

சு. சில மரபு வகை

இடக்கர்ச்சொல்

சசஉ. அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்.

இ - ள்: அவைக்கணுரைக்கப்படாத சொல்லை அவ்வாய் பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் சொல்லுக; எ - று.

அவைக்கண் வழங்கப்படுஞ்சொல்லை அவையென்றார்.

எ - டு: 'ஆன்முன் வருஉ மீகார பகரம்' எனவும், கண்கழீஇ வருதும்; கான்மே னீர்பெய்து வருதும் எனவும், *கருமுகமந்தி செம்பி னேற்றை; †'புலிநின் றிறந்த நீரல் லீரத்து' எனவும் இடக்கர்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் கூறியவாறு.

ஈகாரபகரமென்பதுபோலக் கண் கழுவுதன் முதலாயின அவையல் கிளவியைக் கிடந்தவாறு கூறுது பிறிதோராற்றூற் கிளந்தனவல்ல வெனினும் அவையல் கிளவிப் பொருண்மையை யுணர்த்தலின், ஒற்றுமை நயத்தான்

---

* கரு முகமந்தி, செம்பினேற்றை எனபனவற்றுள், கருமுகம், செம்பின் என்பன மகடூஉ, ஆடூஉவாகிய இவ்விருபாலார் இடக்கரவயவங்களே முறையே யுணர்த்துமென்ப.

† "புலிநின் றிறந்த நீரல் லீரத்து" புலி நின்று கழித்தகன்ற ஈனமீரல்லாத இழிந்த நீரினுளாகிய ஈரத்தினிடத்து. இழிந்தநீர்—மூதநிரம். இப்பொருட்டாதலை, "களிறுநின்றிறந்த நீரல் லீரத்துப், பாலவி தோனமுலை யகடுநிலஞ்சேர்த்திப், பசியடமுடங்கிய பைங்கட்செந்நாய்" எனவரும் (நற்றிணை-கஎக.) செய்யுளடிக ளா னறிக.

அவையல்கிளவியைப் பிறிதோராற்றுற் கூறியவாய்பாடாகக் கொள்ளப்படும். இவை 'தகுதியும் வழக்கும்' (சொல்.கள.) என்புழித் தகுதியாயடங்கு மெனின்:—செத்தாரைத் துஞ்சினரென்றல் முதலாயினவன்றே தகுதி யாவன; ஆண்டுச் செத்தாரென்பது இலக்கணமாகலின் அதனலும் வழங்கப் படும்; தகவு நோக்கிச் சொல்லுங்காற் றுஞ்சினரென்றுஞ் சொல்லப்படும்; ஈண்டை யவையல்கிளவியாற் கிளத்தல் வழுவாதலின் மறைத்த வாய்பாட் டானே கிளக்கப்படும்; அதனுன் ஆண்டடங்கா வென்பது.

இது வழுவமைதியன்மையாற் கிளவியாக்கத்துக் கூறுராயினர். (சக)

சசங. மறைக்குங் காலை மரீஇய தொரா அல்.

இ - ள்: அவையல்கிளவியை மறைத்துச் சொல்லுங்கால், மேற்றொட்டு வழங்கப்பட்டு வருவன மறைக்கப்படா; எ - று.

எ - டு: ஆப்பி, ஆனையிலண்டம் என மரீஇ வந்தன மறைக்கப்படாது வந்தவாறு.

'பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி' (பெரும்பாண்-உ.) என்புழிக் கான்றென்பது, தன் பொருண்மே னில்லாது அணி குறித்துப் பிறிதோர் பொருண்மே னிற்றலின் மரீஇய சொல்லாய் மறைக்கப்படா மையின், அதன் பொருண்மே னின்றவழி மறைக்கப்படுதலு மறிக. (சஎ)

'ஈ' 'தா' 'கொடு' என்னுஞ் சொற்கள்
ஈதா கொடுவெனக் கிளக்கு மூன்று
மிரவின் கிளவி யாகிட னுடைய.

இ - ள்: ஈ, தா, கொடு எனச் சொல்லப்படும் மூன்றும் ஒரு வன் ஒன்றை யிரத்தற்கண் வருஞ்சொல்லாம்; எ - று.

அவை பிறபொருண்மேல் வருதலுமுடைமையான், 'இரவின் கிளவியா கிடனுடைய' வென்றார்.

வழங்கல், உதவல், வீசல் முதலாயின பிறவு முளவாக இவற்றையே விதந்தோதியதென்னையெனின்:—அவை கொடைப்பொருளவாய் வருவ தல்லது இவைபோல இரத்தற்குறிப்பு வெளிப்படுக்கும் இரவின் கிளவியாய்ப் பயின்று வாராமையானும், இன்னுர்க்கு இன்னசொல் லுரித்தென்று வரை யறுத்தலும் வழுவமைத்தலுமாகிய ஆராயசி ஆண்டின்மையானும் இவற் றையே விதந்தோதினரென்பது.

அஃதேல், 'ஈயென்கிளவி' (சொல்-சசஅ.) என்னுஞ் சூத்திரமுதலாய நான்கும் அமையுமே; இசசூத்திரம் வேண்டாமெனின்:—இவை இரவின் கிளவி யாதலும் மூன்றென்னும் வரையறையும் அவற்றுற் பெறப்படாமையின் வேண்டுமென்பது.

முன்னிலைச் சொல்லாய் வருவழியல்லது பிறழ்ந்து இன்னசொல் இன்னுர்க் குரித்தென்னும் வரையறை யில்லென்ப துணர்த்துதற்கு, ஈ தா கொடுவென முன்னிலை வாய்பாடுபற்றி யோதினர். (சஅ)

'ஈ' என்னுஞ் சொல்

சசரு. அவற்றுள்

ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே.

'தா' என்னுஞ் சொல்

சசசு. தாவென் கிளவி யொப்போன் கூற்றே.

'கொடு' என்னுஞ் சொல்

சசஎ. கொடுவென் கிளவி யுயர்ந்தோன் கூற்றே.

இ - ள்; ஈயென்கிளவி இரக்கப்படுவோனின் இழிந்த விரவலன் கூற்றும். தாவென்கிளவி அவனேடொப்பான் கூற்றும். கொடுவென்கிளவி அவனி னுயர்ந்தவன் கூற்றும்; எ - று.

எ - டு: சோறீ; ஆடை தா; சாந்து கொடு என மூன்று சொல்லும் முறையானே மூவர்க்கு முரியவாய் வந்தவாறு கண்டுகொள்க. (சுசு) (ஐ0) (ருக)

அதற்கு மேலும் ஒரு முடிபு

சசஅ. கொடுவென் கிளவி படர்க்கை யாயினுந்
தன்னேப் பிறன்போற் கூறுங் குறிப்பிற்
றன்னிடத் தியலு மென்மனுர் புலவர்.

இ - ள்: கொடு வென்னுஞ்சொல், முதனிலை வகையாற் படர்க்கையாயினும், தன்னேப் பிறனெருவன் போலக் கூறுங் கருத்து வகையால், தன்னிடத்துச் செல்லும்; எ - று.

எ - டு: மேற் காட்டப் பட்டது.

தன்மைக்கும் முன்னிலைக்கு மூரிய தா வென்பதனுனுக பொதுவாகிய ஈ யென்பதனுனுகவன்றே சொல்லற்பாலது; உயர்ந்தான் அங்ஙனந் தானேற்பானுகச் சொல்லாது, கொடுவெனப் படர்க்கை வாய்பாட்டாற்சொல்லும். ஆண்டுத் தன்னையே பிறன்போலக் குறித்தானுகலிற் றன்னிடத்தே யாமென இடவழு வமைத்தவாறு.

உயர்ந்தான் தம னெருவனேக் காட்டி இவற்குக் கொடுவென்னு மென்றூரால் உரையாசிரியரெனின்:—ஆண்டுப் படர்க்கைச்சொற் படர்க்கைச் சொல்லோடியையதலான் வழுவின்மையின் அமைக்கல்வேண்டாவாம். அதனுன் அது போலியுரையென்க. (ஐஉ)

பெயர்கள் முதலிய சொற்கள்

சசகூ. பெயர்நிலைக் கிளவியி ஞஅ குநவுந்
திசைநிலைக் கிளவியி ஞஅ குநவுந்
*தொன்னெறி மொழிவயி ஞஅ குநவு
மெய்ந்நிலை மயக்கி ஞஅ குநவு
மந்திரப் பொருள்வயி ஞஅ குநவு
மன்றி யகனத்துங் கடப்பா டிலவே.

இ - ள்: பெயர்நிலைக்கிளவியி ஞகுநவும் என்றது—ஒரு திணைப்பெயர் ஒருதிணைக்காய் வருவனவும்; எ - று.

* 'தொன்னெறி மொழிவயி ஞஅ குநவும்' என்பதற்கு இவ்வுரையாசிரியர் 'முதுசொலலாகிய செயயுள வேறுபாட்டினகண இயைபிலலன இயைநதனவாய் வருவன; அவை யாறறுடனசெனற எருமையை ஈறதகுல ஊகாகுயவாகுக்கடன எனபது முதலிய' எனவரைந துளளார. இநநெடா டாமொழியின பொருள தெறறெனல புலப படவிலலை இயைபிலலன இயைநதனவாய வருதலினறமையின, ஊகாகுயவாகுக எருமையை ஈறதலின இயையு இனறேறறும இயைபுனமை ஒருதலையான வேணடபம பாலதாம. அனறியும அது முதுசொலலாயிருநதாலோடு செயயுள வேறுபா டுமையதா யிருக்கவேணடுமெனவும ஆணை நநதனாரா நம தமிழாசிரியனகண பணடைக காலநதொடடுப பரவை வழகினகணண அடிபபடட சானறோரால நிறுபபட வழங்கிவரும இமமரபினொரி பொருளநதமைபபாராக காணகிறகினறது.

அது வருமாறு: வாணிகச சாததெனாரு செனறுசெலருவனை, அபபாதது நிலினறும பிரிநது ஒரு படடினததுட்செனறு பல வெருமைகளோடு பொருளகொடுதது தேறறுதது நாடாடுசேறறுக ஒருபபாடடுப பலபபல காவதங்கடநது ஒரு கானயாறறு முடைகரையை யணமி அவவெருமைகளை நீரருநதசெயது அயரவுயிரதது பினவா அவவாறறைக கடகுமமையதது, காலமலலாதகால நஞ்சசேயமைகணண பெயதத மழையான பொருகுகென வெளளநதோனறி அவவெருமைகளோயெலலாம அடித்துகெணடு ஓர ஊரபபுறதத தொதுகிவிடடது அதனையுணராத அவவூரவா அவைகளை ஈரதது கொணாநது கரைசேரதது பலனை வேணடியபம நாறறம மிகுதியாக விருந்தையின, ஒருவரும உடனபடடிலர இதனியலபுணரந்த பொரியாரொருவா இஙஙனமாய செயல நேரிடின, இச செயலே இனனவா செயதது முதுசொலவேணடுமென மமமூர அடஙகலிருகுமம: அதனாலகணணகனியாறறுநதுநேரினை உணமை வெளியாமெனை உரைததனர. அவவாறே கணகனியாறறுநதுநேடக அவவ அடஙகலே எடுதது வநது 'கணணுறி இகதமறறினறோனை', எனகூறி, தமமிலபிறை சென றுதனகு ஆணடு தோறறும நனகொடையாகக கொடுகுமம பொருளை அவவாணடிறை கொடாது அவவூரக குயவரை பொறறுதது முகக மையாரி துவே யெனக கருதி,

''காடடெரு மறடடை பொறறுகரி
மடகலஞ் சுட்ட புகையான
மேறறே மேகநு தோனறி
மினனி யிடிதது மழைபொழிநது
யாறறில நீததம பெருகி
யாறதுக கொலலும எருமைகளை
ஈரதுக கொணாநது கரை யேறறல
இவவூர குயவாக கெனறுங கடனே''

என்று ஒரு பறைய ஓலையில வரைநது அவவடஙகலோடு சோததுகுகட்டி அவவூரவர் முனகொணாநது கடடையவிழதது பல ஏடுகளாக தளளிப படிதது காடடினன. அதனைக்கேடட பெரியாா பலரும குயவன களளியினெழுத புகையானய மேகந்நநத நீரான் எருமைசாதலின, இவவூாக குயவரே இவைகளைக கரையேறறல முறையென முடிவுசெயதனா எனபதாம. இது பொருததமாகக காணபபடுகினறது.

ஆசிரியா நசசினாகசினியா, 'தொனனெறி மொழிவயி ஞஅ குநவும்' எனபதறகுச் சொலலீடடதுப பழைய நெறியானய வரும சொலலும' என உரைகூறி, 'முது மொழி பொருளுடையனவும பொருளிலலனவுமென இருவகைப்படும, அவை 'யாட்டுளான இனனுரைதாரான' எனறது; இடையன எழுதொடு புணராது

அவையாவன : ஒரெருத்தை நம்பியென்று வழங்குதலும், ஒரு கிளியை நங்கை யென்று வழங்குதலு மாம். பிறவுமன்ன. திசைநிலைக்கிளவியி ஞகுநவும் என்றது—திசைச் சொல்லிடத்து வாய்பாடு திரிந்து வருவனவும் என்றவாறு. அவை புலியான், பூசையான் என்னுஞ் தொடக்கத்தன. தொன்னெறிமொழிவயி ஞகுநவும் என்றது—முதுசொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவனவும் என்றவாறு. அவை யாற்றுட் செத்த வெருமை யீர்த்த லூர்க்குயவர்க்குக் கடன் என்பது முதலாயின. மெய்ந்நிலைமயக்கி ஞகுநவும் என்றது—பொருண்மயக்காகிய பிசிச்செய்யுட்கட் டிணை முதலாயின திரிந்து வருவனவும் என்றவாறு. அவை,

> ' எழுதுவரிக் கோலத்தா ரீவார்க் குரியார்
> தொழுதிமைக் கண்ணீணைந்த தோட்டார்—முழுதகலா
> ஞாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்
> பேணற் கமைந்தார் பெரிது '

என்பது புத்தக மென்னும் பொருண்மேற் றிணை திரிந்து வந்தவாறு கண்டு கொள்க. பிறவுமன்ன. மந்திரப்பொருள்வயி ஞகுநவும் என்றது—மந்திரப் பொருட்கண் அப்பொருட்குரித்தல்லாச் சொல் வருவனவும் என்றவாறு. இதற் குதாரணம் மந்திரநூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க. அன்றி யகோத்துங் கடப்பாடிலவே என்றது—அவ்வினைத்தும் வழங்கியவாறே கொள்வதல்லது இலக்கணத்தான் யாப்புறவடைய வல்ல என்றவாறு.

இஃ திச்சூத்திரத்திற்கு ஒருசாரா ருரை. ஒருசாரார் பிற வுரைப்ப.

இஃ தியற்சொல்லுக் திசைச்சொல்லும் பிறவும்பற்றி வழுவமைத்த தாகலின், கிளவியாக்க முதலாயினவற்றின்கண் உணர்த்துதற் கியைபின்மை யான், ஈண்டு வைத்தார். (நிரு)

செய்யாய் என்னுஞ்சொல்

சூ(ற)o. செய்யா யென்னு முன்னிலை விகுதிச்சொற்
செய்யென் கிளவி யாகிட னுடைத்தே.

இ - ள்: செய்யா யென்னும் வாய்பாட்டதாகிய முன்னிலை முற்றுச்சொல் ஆயென்னு மீறு கெடச் செய்யென்னுஞ்சொல் லாய் நிற்ற லுடைத்து; எ - று.

பொருளறிவுறுக்கும் மொழியைக் கூறுதலனறி, எழுதெதாடு புணராத பொருளறி வுறுக்கும் மொழியைக்கூறல எனனும பொருள தருது நினறது "யாறறுட்செத்த எருமையை சாத்தல ஊர்க்குயவர்க்குக் கடன" எனபது: குயவன சுள்ளியான எழுந்த புகையானுய மேகந்தந்த நீரான எருமைசாதலின், அதனை ஈர்த்தல குயவர்க் குக் கடனுயிறறென ஒரு காரணம உள்ளதுபோலக் கூறுகினறது, உணமைபபொரு ளன்றி ஒருவன இயைபினறிக் கூறிய சொறகு எடுத்துக்காட்டாகக் கூறபபடுதலின, பொருளுணர்த்தாதாயிறறு' எனவும, இலக்கண விளக்க நூலாசிரியா, "தொனனெறி மொழிவயி ஞகுநவும்' எனபது அடிபபட்ட நெறியான் வழங்குதலுடைய முது மொழியாகிய செயயுள் வேறுபாட்டின்கண இயையாதன இயைந்தனவாய் வருவன. அவை "யாறறுட்செத்த எருமை ஊர்க்குயவர்க்கு இழுத்தல கடன" என்றது முதலா யின. குயவன சுள்ளியால எழுந்த புகையானுகிய மேகந்தந்த நீரான் எருமை சாதலின குயவர்க்கு ஈர்த்தல கடனுயிறறு என்க. ஒரு காரணம உள்ளதுபோலக் கூறுகினறது. உண்மைப் பொருளன்றி ஒருவன இயைபினறிக்கூறிய சொறகு எடுத்துக் காட்டாகக கூறப்படுதலின, இயையாதன இயைந்தனவாய வருதலாயிறறு' எனவும கூறியிருத்த லின. இது நன்கு விளங்கும.

ஆகிடனுடைத் தென்றதனால், செயயா யென ஈறுகெடாது நிற்றலே பெரும்பான்மை யென்பதாம்.

எ - டு: உணணுய், தின்னுய், கிடவாய், நடவாய், தாராய், வாராய், போவாய் என்பன ஈறு கெட உண, தின், கிட, நட, தா, வா, போ எனச் செய்யென்கிளவி யாயினவாறு கண்டுகொள்க.

செய்யாயென்னும் முன்னிலை யெதிர்மறை செயயென் கிளவியாதற் கேலாமையின், செய்யாயென்னும் முன்னிலை விணைசொலென்றது விதி விணையேயாம்.[1]

தன்னின முடிதத லென்பதனுன் வம்மின, தமமின் என்பன மின்கெட வம், தம் என நிற்றலும, அழியல, அலையல எனனு முன்னிலை யெதிர்மறை, ஐகாரங்கெட்டு அழியல், அலையல் என நிற்றலுங் கொள்க. ஒன்றென முடித்த லென்பதனுல், புகழ்தா ரென்னும படாக்கையின ஆறு கெடப் 'புகழ்திகு மல்லரோ' என நிற்றலுங கொள்க. இவையெல்லாஞ செய்யுண்முடி பென் பாரு முளா.

செயயா யென்னு முன்னிலையெதிர்மறை எதிர்மறைபடாது செய்யென் விதிவிணையாதலு முரிததென் றுரைத்தாரால உரையாசிரிய ரெனின்:— அற்றன்று: செய்யா யென்னும எதிர்மறைவிணையுஞ் செய்யாயென்னும் விதிவிணையும முடிந்த நிலைமை ஒகுமாயினும, எதிர்மறைகண மறை யுணராததும இடைநிலையு முணராமையான், முடிகருஞசொல் வேறெனவே படும. மறையுணராததும் இடைநிலையாவன: உணணலன, உணடிலன், உணணுது, உணமேன் என்புழி வரும அல்லும, இல்லும, ஆவும, வையும, பிறவுமாம். உணணுய, உணமேன் என்புழி எதிர்மறையாகார வேகாரங கெட்டு நின்றன வெனல வேண்டும்; அல்லாக்கால் மறைப்பொருள் பெறப்படாமையின், அதனுன எதிர்மறைச சொல்லே விதிவிணைசசொல லாகாமையின் அவர்க்கது கருததனறென்க. அல்லதூஉம, ஆசிரியர அகக்கருத்தினராயின், செயயா யென்னு மெதிர்மறை விணைசசொல் என் றேறுவரா மன்; அவவா றேறாமை யான, அவர்கது கருததன்மையான உரையாசிரியராக்கும் அது கருததன்மை யறிக. (இச)

'ஈ' 'ஐ' என்னும் முன்னிலை ஈறுகள்

சுடுக. முன்னிலை முன்ன ரியு மேயு
மந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

இ - ள்: முன்னிலை விணைச்சொன்முன் வரும் ஈகாரமும் ஏகாரமும் அம் முன்னிலைச்சொற் கேற்ற மெய்யூர்ந்து வரும்; எ - று.

---

1 செயயாய எனனும முனனிலை யொருமை யெதிர் மறைசசொல செயயென ஏவற பொருள்படுவது முணடெனபதே இந்நூற்பாவிற்பொருள். தமிழ்ப்பெயராகிள உருபேற்காமலே எழுவாயாதல் போலத, தமிழ் விணைகாச சொற்கள விகுதியேற காமலே ஏவலாகும. செயயாய எனபதன மறுவடிவான செயமாடாய என்னும எதிர்மறை விணையும இன்னும உலகவழகில செயயமாடாய எனற எடுததலோசை யால விளுப பொருளைப்படுப பீடு செயயென ஏவற்பொருள் நருவதைத தெளி வாயத காணகின்றோம். நூற்பாவில் செயயாயெனனும ஏவல விணைசசொல எனனுமல முனனிலை விணைசசொல எனக கூறியிருததலையும நோகருக.

எ - டு: 'சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே' (அகம்-சசு.) 'அட்டி லோலே தொட்டனே நின்மே' (நற்றிணை-உ00.) என அவை முன்னிலைக் கேற்ற மெய்யூர்ந்து வந்தவாறு கண்டுகொள்க.

முன்னிலை யென்றாலும், செய்யென் கிளவியாகிய முன்னிலை யென்பது அதிகாரத்தாற் கொள்க.

ஈகார மொன்றேயாக, புக்கீ, உண்டீ, உரைத்தீ, சென்றீ என முன்னிலை வினையீற்று வேறுபாட்டிற் கேற்ப மெய் வேறுபட்டு வருதலான், 'அந்நிலை மரபின் மெய்' என்றார். ஏகாரம் மகர மூர்ந்தல்லது வாராது.

இவ்வெழுத்துப்பேறு புணர்ச்சி விகாரமாதலின் ஈண்டுக் கூறற்பாற் றன் றெனின்:—அற்றன்று: 'இயற்பெயர் முன்னரானைக் கிளவி' (சொல்-உஎ0.) அப்பெயரோடு ஒற்றுமைப்பட்டு நின்றுற்போல முன்னிலை முன்ன ரீயு மேயும் முன்னிலைச் சொல்லோடு ஒற்றுமைப்பட்டு நிற்றலான், கிலைமொழி வரு மொழி செய்து புணர்க்கப்படாமையான், அமமைய புணர்ச்சிவிகார மெனப படா வென்க. அஃதேல், இடையியலுள் 'இயற்பெயர் முன்ன ரானைக் கிளவி' (சொல்-உஎ0.) என்பதனை டியைய இதனையும் வைக்க வெனின்:— ஆண்டு வைப்பிற் செயயா யென்பது செயயென் கிளவியாயவழியது அவ்வீகார வேகார வரவென்பது பெறப்படாமையின், ஈண்டு வைத்தார். 'செயயா யென்னு முன்னிலை வினைச்சொல்' என்பதனை ஈண்டு வைத்தற்கும இதுவே பயனுத லறிக. முன்னிலைசசொல்விகாரம் ஒருங்குணர்தல் அதற்குப் பயனெனினு மமையும். ஈயென்பதோ ரிடைசசொல் உணடென்பது இசசூத் திரத்தாற் பெற்றும. இவை யிரண்டும் ஈண்டுப் புறத்திறவு பொருள்பட நின்றன. அசைநிலை யென்பாரு முளர். (இரு)

புதிய சொற்கள்

சூ.உ. கடிசொல் லில்லைக் காலத்துப் படிமை.

இ - ள்: இவை தொன்று தொட்டன வலலனவென்று கடி யப்படுஞ் சொல்லில்லை; அவ்வக்காலத்துத் தோன்றி வழங்கப்படு மாயின்; எ - று.

எ - டு: சம்பு, சள்ளை, சட்டி, சமழ்ப்பு எனவரும. இவை தொன்று தொட்டு வந்தனவாயின், முதலாகாதனவற்றின்கண்

"சகரக் கிளவியு மவற்றோ டற்றே—
அ ஐ ஔவென்னு மூன்றலங கடையே" (எழு-சூ உ.)

என விலக்கார் ஆசிரியர்; அதனுன் அவை பிற்காலத்துத் தோன்றிய சொல் லேயா மென்பது.*

இஃது எழுவகை வழுவமைதியுள் ஒன்றுகாது ஓர் பாதுகாவலாதலின் கிளவியாக்கத் தியையின்மையான் ஈண்டுக் கூறினு ரென்பது.

---

* சம்பு, சள்ளை, சட்டி, சமழப்பு, எனை முதலிய சொறகள் தொலகாபபியர காலதறகு முனபே வழஙகினமை தேறறமாதலின், "சகரககிளவியு மவறறோ டறறே" எனனும நூறபா பிறகாலதறகுச செருகலாயோ பாடவேறுபாடுள்ளதாயோ இருததல வேணடும. தொலகாபபியம ஓர அகராதியனமையின, அதில சகரககிளவி யினமை சகரம மொழி முதல வராதெனபதறகுச சானறனறு. கழகபபதிபபு எழுத் ததிகார கச்சினாககினியததில 62-ம நூறபாவுரை அடிக குறிபபைப பாரகக.

இனி ஒருசாரா ருரை:—இன்ன அநுவதிக்குங் காலமா மக்காலத்து, அவை வழுவன்மை எல்லா ஆசிரியர்க்கும் உடம்பாடாகலின் அதனைத் தழுவிக் கொண்டாரா றென்க. இவையிரண்டும இச்சூத்திரதத்துக்குப் பொருளாகக் கொள்க.

இனி ஒன்றென முடித்தலாற் புதியன தோன்றிஞற்போலப் பழையன கெடுவனவும் உளவெனக் கொள்க. அவை அழான், புழான் முதலியனவும் எழுத்திற்புணர்ந்த சொற்கள் இக்காலதது வழங்காதனவுமாம். (நிசு)

முதற்குறை முதலியன

சூ நூ. குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி யறிதல்.

இ - ள்: குறைக்குஞ் சொல்லைக் குறைக்கு மிட மறிந்து குறைக்க; எ - று.

குறைகுமவழி யறித லென்பது, ஒரு சொற்குத் தலையு மிடையுங் கடையுமென இடமூன்றன்றே; அவற்றுள் இன்னுழிக் குறைக்கப்படும் இச் சொல் லென்றறிந்து குறைக்க வென்றவாறு.

எ - டு: தாமரை யென்பது 'மரையிதழ் புரையு மஞ்செஞ் சிறடி' எனத் தலைக்கண்ணும், ஒந்தியென்பது 'வேதின வெரிநி னேந்திமுது போத்து, (குறு-கசo.) என இடைக்கண்ணும, நீலமென்பது 'நீலுண் டுகிலிகை கடுப்ப' எனக் கடைக்கண்ணும், குறைக்கப்பட்டவாறும், அவை பிறரூடுக் குறைதற்கேலாமையுங் கண்டுகொள்க. குறைத்தலாவது ஒருசொலினிற் சிறிதுநிற்பச சிறிது கெடுத்த லாகலின், முழுவதுங் கெடுத்தலாகிய தொகுக்கும்வழித் தொகுத்தலின் வேறுத லறிக.

'இயற்சொற் றிரிசொல்' (சொல்-நகூஎ.) என்னுஞ் சூத்திரமுதலாயின செய்யுளதிகாரத்துக் கூறுமையானும், ஒரு காரணததாற் கூறினுஞ் செய்யுட்க ணென்று விதந்து கூறுமையானும, இது வழக்குமுடி பென்பாரு மூளர். (நிஎ)

சூ நூ. குறைத்தன வாயினு நிறைப்பெய ரியல.

இ - ள்: குறைத்தனவாயினும், அவை குறையாது நிறைந்து நின்ற பெயரியல்புடைய; எ - று.

என்றது, முற்கூறிய உதாரணங்கள் தாமரை ஒந்தி நீலமென நிறைந்த பெயர்களின் பொருள்களைத் தந்தே நிற்கு மென்றவாறும்.

குறைத்தவழியும் நிறைந்த பெயராகக் கொள்கவென்றவாறும். குறைக்கப்படுவன பெயரேயாகலின், 'நிறைப்பெயரியல' வென்றார். (நிஅ)

இடைச்சொல் மரபு

சூ நூ. இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே.

இ - ள்: பிறிதோர் சொல்லை வேறுபடுப்பனவும் பிறிதோர் சொல்லான் வேறுபடுக்கப்படுவனவுமெனச் சொல் இருவகைப் படும்; பிறிதோர் சொல்லை வேறுப்படுத்தலாவது விசேடித்தல். பிறிதோர் சொல்லான் வேறுபடுக்கப்படுதலாவது விசேடிக்கப்

படுதல். இடைச்சொல்லெல்லாம் பிறிதோர் சொல்லே வேறு படுக்குஞ் சொல்லாம்; எ - று.

வேறுபடுத்தலும் வேறுபடுக்கப்படுதலும் ஆகிய இரண்டும் பொதுவகையான் எல்லாச் சொற்குஞ் சாமானியமை எயதுமாகலின், இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல் லென்றதனால், இவை வேறுபடுக்குஞ் சொல்லாத லல்லது ஒரு ஞான்றும் வேறுபடுக்கப்படுஞ் சொல்லாகா வென நியமித்த வாறும். அவை அன்னவாதல் இடையியலுள் ஓதப்பட்ட இடைசசொல் வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் வரும்வழிக் கண்டுகொள்க.

வேற்றுமைச சொல் வேற்றுமையைச் செய்யுஞ் சொல்லெனவிரியும். வேற்றுமையெனினும், வேறுபா டெனினு மொக்கும்.

இடைசசொல் லெல்லாம வேற்றுமைச சொல்லாயினும, அவற்றுள் ஒருசாரனவற்றை வேற்றுமைச சொல்லென் றுள்ப; இயற் சொல்லுள் ஒரு சாரனவற்றை இயற்பெயரென் றற்போல வென்பது. இதுவுமோர்நயம். (நிகூ)

உரிச்சொல்லுக்கு அல்லியல்பு

சூநுடு. உரிச்சொன் மருங்கினு முரியவை யுரிய.

இ - ள்: உரிச்சொல் லிடத்தும் வேறுபடுக்குஞ் சொல்லாதற்கும் உரியன உரியவாம்; எலலாம் உரியவாகா என்றவாறு. எனவே, உரிச்சொல்லுள் வேறுபடுத்தும் வேறுபடுக்கப்பட்டும் இருநிலைமையு முடையவாய் வருவனவே பெரும்பான்மை யென்பதாம்.

வேறுபடுக்குஞ் சொல்லேயாவன உறு, தவ, நனி என்னுந் தொடக்கத்தன. இருநிலைமையு முடையன குரு, கெழு, செல்லல், இன்னல் என்னுந் தொடக்கத்தன. உறு பொருள், தவப்பல, நனி சேய்த்து, எகல்லடுக்கம் என இவை ஒன்றை விசேடித்தல்லது வாராமையும்; குருமணி, விளங்குகுரு; கேழ்கிளரகலம, செங்கேழ்; செல்லனெய, அருஞ்செல்லல்; இன்னற்குறிபபு, பெயரின்னல் என இவை ஒனறனை விசேடிததும் விசேடிக்கப்பட்டும் இருநிலைமையுமுடையவாய் வருமாறும் வழக்குஞ் செய்யுளு நோக்கிக் கணடு கொள்க. குரு விளங்கிற்று, செல்லநீர எனத் தாமே நின்று விளைகொள்வன, விசேடிக்கப்படுந் தன்மையுடையவாதலின், விசேடிக்கப்படுஞ் சொல்லாம். பிறவும் விசேடித்தல்லது வாராதனவும், விசேடித்தும் விசேடியாதும் வருவனவும், வழக்குஞ் செய்யுளுநோக்கி யுணர்க.

வேறுபடுக்குஞ் சொல்லேயாவன இவையெனத் தொகுத்துணர்த்தற்கும், உரிச்சொன் மருங்கினு முரியவை யுரிய எனச்சூத்திரஞ் சுருங்குதற்கும், இடையியலுள்ளும் உரி யியலுள்ளும் வையாது, இரண்டு சூத்திரத்தையும் ஈண்டு வைத்தார். (கo)

விளையெச்சச் சொற்கள்

சூநுஎ. விளையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.

இ - ள்: மேற் கூறப்பட்ட விளை யெச்சமும் வேறுபட்ட பல லிலக்கணத்தை யுடைய; எ - று.

அவையாவன : 'உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய'(குறு-உகஉ.) எனவும், 'ஞாயிறு பட்டு வந்தான்' எனவும், செய்தெனெசசம் வினை முதல் கொள்ளாது பிறிதின் வினை கோடலும், அஃ நீறு திரிதலும்; 'மோயின ஞெயிர்த்த காலை' (அகம்-டு.) எனவும், கண்ணியன் வில்லன் வரும் எனவும், மூற்றுச்சொல்லது திரிபாய் வருதலும்; ஓடிவந்தான் விரைந்து போயினான் எனவும், வெய்ய சிறிய மிழற்றுஞ் செவ்வாய் எனவும், செவ்வன்றெரி கிற்பான், புதுவதனியன்றவணியன் எனவும், தம்மை முடிக்கும் வினைக்கட் கிடந்த தொழிலானும் பண்பானுங குறிப்பானும் உணர்தறிந்த தெரிநிலை வினையுங் குறிப்பு வினையுமாய் முடிக்குஞ் சொல்லை விசேடித்தலும், பிறவுமாம். செய்தெனெசசத்தீறு திரிதல் வினையியலுட் காட்டிப்போந்தாம்.

'பெருங்கை யற்றவென் புலம்புமூங் துறுதது' என்புழிப் பெரு மென்பதனை ஒருசாரார் வினையெச்ச வாய்பாடென்ப; ஒருசாரா வினைச் சொற்பற்றி நின்றதோ ருரிசசொலென்ப.

இடைசசொல்லும் உரிசசொல்லும் மேற்கூறப்பட்ட இலகணமோ யன்றிப் பிறவிலக்கணமு முடைய வென்ப திணாதந்திரா. இனி அவையே யன்றி வினையெஞ்சுகிளவியும் பலவிலக்கணதன வென்பதுபட நின்றமை யான், உம்மை இறந்தது தழீஇய வெச்சவும்மை. அவ்விலக்கணம் ஞாயலவன்றித் திரிதலும் வேறு பொருளுணர்த்தலும் விசேடித்தலுமுத லாகிய வேற்றுமையுடையவாகலின், 'வேறு பல்குறிய' வென்றார்.

வினையெச்சத்துள் விசேடிதலே நிற்பனவுமுளவென்பதூஉம் உணர்த்து கின்றாராகலின், இதனை வினையியலுள் வையாது, ஈண்டு விசேடிக்குஞ்சொல் லுணர்தலுவனவற்றோடு வைத்தார்.

'பெயர்த்தனென் முயங்க' (குறுந்-அச.) என்பது முதலாயின செய்தெ னெச்சம் முற்றுப்பத திரிந்தனவென்றும், ஓடிததுணடெஞ்சிய என்பது முதலாயின செயவெனெச்சம் செய்தெனெசசமாயத் திரிந்தனவென்றும், முன்ன ருரைத்தாமால் உரையாசிரிய ரெனின்:—பெயர்தனென் முயங்க என்பது முதலாயின எசசத்திரிபாயின் எசசப்பொருளுணர்த்துவதல்லது இடமும் பாலு முணர்த்தற்பாலவல்ல. எச்சப்பொருணமையாவது மூன்றிடத் திற்கும் ஐந்து பாற்கும பொதுவாகிய வினைநிகழ்ச்சியன்றே ; அவ்வாறன்றி முற்றுச்சொற்கு ஒதிய ஈற்றவாய் இடமும் பாலு முணர்தலின, அவை முற்றுதிரிசொல் லெனவேபடும். சொன்னிலையுணர்ந்து வினைகோடன் மாத்திரத்தான் வினையெச்சமெனின்:—மாரைக்கிளவியும், வினையொடு முடியும் வேற்றுமையும், பிறவுமெல்லாம் வினையெச்சமாவான் செல்லும்; அதனுன் அவர்க்கது கருத்தன்றென்க. அல்லதூஉம், கண்ணியன் வில்லன் வரும் என வினைக்குறிப்புமுற்றுயத் திரிதற்கேற்பதோர் வினையெச்சம் இன்மையானும், அது கருத்தன்மை யறிக.

'ஓடித்துண்டெஞ்சிய' என்பதனூஉம் ஞாயிறு பட்டு வந்தான் என்பதனூஉம் பிறவினை கொண்டனவாயினும், செய்தெ னெச்சத்திற்குரிய இறந்தகால முணர்த்தலான், எனைக்காலத்திற்குரிய செயவெனெசசதனின் றிரிபெனப் படா; செயவெனெச்சத் திரிபாயிற் செயவினெசசத்திற்குரிய காலமுணர்த் தல்வேணடும். மழை பெய்ய மரகுழைத்தது எனச் செயவெனெச்சத்திற்கு

இறந்தகாலமு முரித்தெனினு:—காரண காரியப் பொருண்மை யுணர்த்தும் வழியல்லது செயவெனெச்சம் இறந்தகால முணர்த்தாது; ஒடித்துண்டனும் ஞாயிறு படுதலும் எஞ்சுதற்கும் வருதற்கும் காரணமன்மையான் ஆண் டிறந்த கால முணர்த்தாமையின், செய்தெனெச்சமாய நின்று தமக்குரிய இறந்தகால முணர்த்தினவெனப்படும். அதனுற் செயவெனெச்சஞ் செய்தெனெச்சமாய்த் திரிந்தனவென்றலும் அவர் கருத்தன்றென்க. ஞாயிறு பட்டு வந்தான் என்பது ஞாயிறு பட்டபின் வந்தான் என இறந்தகாலமுணர்த்தலும், ஞாயிறு பட வந்தான் என்பது ஞாயிறு படாநிற்க வந்தான் என நிகழ்கால முணர்த்தலும் வழக்கு நோக்கிக் கண்டு கொள்க. (சுக)

பொதுவாகத் தொடர்மொழிகள்

சூ.அ. உரையிடத் தியலு முடனிலை யறிதல்.

இ - ள்: வழக்கிடத்து உடனிற்கற்பால வல்லனவற்றது உடனிலை போற்றுக; எ - று.

உடனிற்கற்பால வல்லனவாவன தம்முண்மாறுபாடுடையன. மாறுபாடில்லனவற்ற துடனிலைக்கண ஆராய்ச்சி யின்மையின், உடனிலையென்றது மாறுபாடுடையனவற்ற துடனிலையேயாம்.

எ - டு: இந்நாழிக்கிந்நாழி சிறிது பெரிது, என உடனிற்கற்பால வல்லாச் சிறுமையும் பெருமையும் உடனின்றவாறு கண்டு கொள்க. சிறி தென்பது பெரிதெனப்பட்ட பொருளை நோக்காது பெரிதென்பதற்கு அடையாய் மிகப்பெரிதன் றென்பதுபட நிற்றலான், அமைவுடைத் தாயிற்று.

அறிதலென்பது இவ்வாறு அமைவுடையன கொள்க வென்றவாறு.

மாறுபாடுடையன உடனிற்றல் எழுவகைவழுவினுள் ஒன்றன்மையான், இதனைக் இலக்கியாக்கத்துட் கூறாது ஈண்டுக் கூறினர். (கூஉ)

குறிப்பால் உணரும் சொற்கள்

சூ.கூ. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே
யின்ன வென்னுஞ் சொன்முறை யான.

இ - ள்: சொல்லாணன்றிச் சொல்லுவான் குறிப்பாற் பொருளுணரப்படுஞ்சொல்லு முள; இப்பொருள் இத்தன்மைய வென்று சொல்லுதற்கண்; எ - று.

எ - டு: செஞ்செவி, வெள்ளொக்கலர் என்புழி மணியும பொன்னு மணிந்த செவி என்றும், வெளியதுதித்த சுற்றம் என்றும், குறிப்பா லுணரப் பட்டவாறு கண்டுகொள்க. குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர் என்புழி அண்ணபெருஞ்செல்வத்தார் என்பதுஉங குறிப்பா லுணரப்படும்.

இது 'தெரிபுவேறு நிலையலுங குறிப்பிற் றோன்றலும்' (சொல்-கரிஎ.) என்புழி அடங்குமெனின்; ஆண்டுப் பொருணிலை இருவகைத்தென்பதல்லது இன்னுழி இப்பொருள் குறிப்பிற்றோன்றுமென்னும் வேறுபாடு பெறப்படா மையான், ஆண்டடங்காதென்பது.

இதுவும் மேலையோத்துக்களுள் உணர்த்துதற் கியைபின்மையான் ஈண்டுணர்த்தினர். (கூஉ)

ஒரு சொல் இருபொரு ளுணர்த்தல்

சூ.கூ0. ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்.

இ - ள்: பொருள் வேறுபாடின்றி ஒரு பொருண்மேல்வரும் இரண்டுசொற் பிரிவின்றித் தொடர்ந்துவரின், அவற்றைக்கடியார்; எ - று.

எ - டு: 'நிவந்தோங்கு பெருமலை' எனவும், 'துறுகன் மீமிசை யுறுகண்' எனவும் வரும்.

பிரிவில வென்றது, வேறோர்சொல்லான் இடையிடப்படாது நிற்பன வென்றவாறு.

இருசொல் ஒருபொருண்மேல் வருதல் எழுவகை வழுவினுள் ஒன்றன் கீழடங்குமாயினும் ஈண்டுக் கூறினார்.

> 'வையகங் கிழவன் வயங்குகார் மாணகலத்
> தையலா யின்னுநீ நல்கினை நல்காயேற்
> கூடலார் கோவோடு நீயும் பதிதியே
> நாடறியக் கௌவை யொருங்கு'

என்புழி, வையகங் கிழவன் கூடலார்கோ என்பன ஒரு பொருளை வரைந்துணர்த்தலாற் பிரிவிலவாகலின் வரையப்படாவென்றும்,

> 'கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப் பெருஞ்சேந்தன்
> வையகலு மேறுமம வயக்களிறே—கைதொழுவல்
> காலேக வண்ணனைக் கண்ணுறக் காணவெஞ்
> சாலேகஞ் சாரு நடை'

என்புழிக் காலேகவண்ணன் என்பது அச்சாந்து பூசிதை யெல்லாக்கும் பொதுவாய்க் கூத்தப்பெருஞ்சேந்தனையே வரைந்துணர்த்தாமையின், அவை பிரிவுடையவாமென்றும், உரையாசிரியர் உரைத்தாராலெனின்:—அற்றன்று:

> 'நாணி நின்றோ ணிலைகண் டியானும்
> பேணினெ னல்லதோ மிகுந்த வானத
> தணங்கருங் கடவுளன் றோணின்
> மகன்றா யாதல் புரைவதாங் கெனவே' (அகம்-ம சூ.)

என்புழி வானத்தணங்கருங்கடவு ளன்றோள் என்பது மகளிர்க்கெல்லாம் பொதுவாய், நாணி நின்றோளை வரைந்துணர்த்தாதாயினும் சொல்லுவான் குறிப்பான் அவளையே உணர்த்திநிற்போலக் காலேகவண்ணன் என்பதூஉம் பொதுவாயினுஞ் சொல்லுவான் குறிப்பாற் கூத்தப்பெருஞ் சேந்தனையே உணர்த்திப் பிரிவிலவாய் நிற்றலான், அவாக்கது கருத்தன்றென்க. (சூசு)

ஒருமைப் பெயர் பன்மைக்காதல்

சூ.கூக. ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனுமா ருண்டே.

இ - ள்: ஒருமைக்குரிய பெயர்ச்சொற் பன்மைக்காகுமிடமுமுண்டு; எ - று.

எ - டு: 'எவ லிளையர் தாயவயிறு கரிப்ப' என்புழித் தாய்யென்னும் ஒருமை சுட்டிய பெயர் இளையரென்பதனைற் ரூயரென்னும் பன்மை உணர்த்தியவாறு கண்டுகொள்க.

'பன்மைக்காகு மிடனுமாருண்டே' யென்பது' ஒருமைச்சொற் பன்மைச் சொல்லோடு தொடர்தற்குப் பொருந்துமிட முண்டென்பதனாலும் பட நின்றமையான், 'அம்மை தந்தை யுணனல் யானை யடுபோர சோழர' எனவும் ஒருமைசசொற் பன்மைச்சொல்லோடு தொடாதலுங் கண்டுகொள்க. ஈண்டு ஒருமைசசொற் பன்மைச்சொல்லோடு மயங்குதல் வுடைமையான் 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி' (சொல்-உஎ.) என்புழி அடங்காமை யறிக.

ஏற்புழிக்கோடலென்பதனான் உயாதிணைக்கண்ணது இம்மயக்கமென்றுங் கொள்க.

ஆகுமிடமென்பதனால், பன்மையுணாத்துதற்கும பன்மைசசொல்லொடு தொடாதற்கும் பொருந்துமவழிக் கொள்க வென்பதாம. (கடு)

ஆறாம் படையில் முன்னிலை யொருமை பன்மையொடு முடிதல்

சூ.உ. முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இ - ள்; முன்னிலை குறித்து நின்ற ஒருமைச் சொல, பன்மையொடு முடிந்ததாயினும், வரையப்படாது; அம்முடிபு ஆற்றுப் படைச் செய்யுளிடத்துப் போற்றியுணரப்படும்; எ - று.

கூத்தராற்றுப்படையுள் 'கலமபெறு கணனுள தொக்கற் றலைவ' (மலைபடுகடாம-குஎ.) என நின்ற ஒருமைசசொற போய 'இரும்பேரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்' (மலைபடுகடாம-கஅஎ.) என்னும பன்மைச சொல்லோடு முடிந்தவாறு கண்டு கொள்க. ஈண்டு முன்னிலையொருமைப் பெயராதல் அதிகாரத்தாற் கொள்ச.

'ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனுமா ருண்டே' (சொல-சூசக.)

என்பதனான் இதுவும் அடங்குதலின், இச்சூத்திரம வேண்டா வெனின் :— பன்மையொடுமுடியு மிடனுமாருண்டே என்றது 'பன்மைக் காகு மிடனுமா ருண்டே' என்றாராதலின், ஆண்டுப் பன்மைச சொற்கொண்டு முடியாது ஒருமைசசொற் பன்மை யுணர்த்துதலும பன்மைச் சொல்லொடு ஒரு பொருட்டாகிய துணையாய மயங்குதலு முணாத்தினர் : அதனான் இக் கொண்டுமுடிபு ஆண் டடங்கா தென்பது. அல்லதூஉம், இம்முடிபு செய்யுட்குரித்தென்றமையானும் ஆண் டடங்காமை யறிக.

பொதுவகையான் ஆற்றுப்படைமருங்கி னென்றாராயினும், சுற்றத்தோடு சுற்றத்தலைவனை ஆற்றுப்படுத்தற்கண்ணது இம்மயக்கமென்பது பாதுகாத் துணர்கவென்பார் 'போற்றல்வேண்டும்' என்றார.

'பான்மயக் குற்ற வையக் கிளவி' (சொல்-உஉ.) எனபதனாற்கூறிய ஒருமைப்பன்மைமயக்கம் வழுவமைதியாயினும் இலக்கணத்தோடொத்துப்

பயின்று வரும். ஒருமை சுட்டிய பெயர்நிலைக்கிளவி பன்மைக் காதலும், முன்னிலையொருமை பன்மையொடு முடிதலும் அன்னவன்றிச் சிறுவழக்கின வாதலின், ஆண்டு வையாது ஈண்டு வைத்தார்.

ஒருவர் ஒருவரை ஆற்றுப்படுத்தற்கண் முன்னிலை யொருமை பன்மை யொடு முடிதல் வழக்கிற்கும் ஒக்குமாகலான், ஆற்றுப்படையெனப் பொது வகையாற் கூறினர். ( )

எ. சொல்லதிகாரத்திற்குப் புறனடை

இருவகை வழக்கினும் நூல்வழக்கில் முதன்மை

சூசுஉ. செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினு
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பல்வேறு செய்தியி னூன்றி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.

இ - ள் : செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் இவ்வதிகாரத்தின் கட் பொருள்பெறச் சொல்லப்பட்ட சொல்லெல்லாவற்றையும் பல வேறு செய்கையுடைய தொன்னூனெறியிற் பிழையாது சொல்லை வேறுபடுத்துணருமாற்றூற் பிரித்துக் காட்டுக ; எ - று.

என்றது, 'நிலப்பெயர்' குடிப்பெயர் எனவும், 'அம்மா மெம்மேம்' எனவும் பொதுவகையாற் கூறப்பட்டன. அருவாளநிலத்தானென்னும் பொருட்கண் அருவாளன் எனவும்; சோழநிலத்தானென்னும் பொருட்கண் சோழியன் எனவும்; இறந்தகாலத்தின்கண் உண்டனம், உண்டாம் எனவும்; நிகழ்காலத்தின்கண் உணநின்றனம், உண்ணநின்றும், உண்கின்றும் எனவும்; எதிர்காலத்தின்கண் உண்குவம், உண்பாம் எனவும் வேறுபட்டு வருமன்றே; அவ்வேறுபாடெல்லாம் கூறிற் பல்குமென்றஞ்சிக் கூறிற்றில ஞயினும், தொன்னூனெறியிற் பிழையாமல் அவ்வேறுபாடுணரப் பிரித்துக் காட்டுக நூல்வல்லா ரென்றவாறாயிற்று.

இது பிறநூன்முடிந்தது தானுடம்படுதலென்னுந் தந்திரவுத்தி. பிறவுமன்ன.

செய்கை - விதி.

சொல்வரைந்தறிய வெனவே, வரைந்தோதாதது பொதுவகையா லுணரப் பட்டவற்றின்மேற்று இப்புறனடையென்பதாம்.

இனி ஒருசாரார் :—செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் என்னுற் கிளக்கப் படாது தொன்னூலாசிரியராற் கிளக்கப்பட்டு எஞ்சிநின்ற சொல் லெல்லா வற்றையும் அவ்வத் தொன்னூனெறியிற் பிழையாமைச் சொல்லை வரைந்துணர க்கொணர்ந்து பிரித்துக்காட்டுக என்றவாறு.

என்னுற்கிளக்கப்படாது என்பது பெற்றவாறென்னை யெனின் :— கிளந்தன பிறநூலிற்கொணர்ந்து காட்டல். வேண்டாமையிற் கிளக்கப்படா தன வென்பது பெறப்படு மென்க.

புறனடையாற் கொள்ளப்படுவன :—யானு நீயு மவனுஞ் செல்வேம் எனவும், யானுநீயுஞ் செல்வேம் எனவும் ஏனையிடத்திற்குரிய சொற் றன்மைச் சொல்லோ டியைந்தவழித் தன்மையான் முடிதலும், அவனுநீயுஞ் சென்மின் எனப் படர்க்கைச்சொன் முன்னிலையோடியைந்தவழி முன்னிலையான் முடிதலும், 'நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்' என்புழிப் பல்லேமுள்ளுமெனத் தன்மையாகற்பாலது பல்லோருள்ளுமெனப் படர்க்கைப் பன்மையாயவழி அமைதலும்,

'முரசுகெழு தானை மூவ ருள்ளு,
மரசெனப் படுவது நினதே பெரும'

(புறம்-உரு.) என்புழி மூவிருள்ளுமென முன்னிலையாகற்பாலது மூவருள்ளு மெனப் படர்க்கையாயவழி அமைதலும், 'இரண்டனுட் கூர்ங்கோட்ட காட்டு வல்' என்புழிக் கூர்ங்கோட்டதென ஒருமையாகற்பாலது கூர்ங்கோட்ட வெனப் பன்மையாயவழி அமைதலுமாம். பிறவு முளவேற் கொள்க.

அகத்தியமுதலாயின எல்லாவிலக்கணமுங கூறலிற் பல்வேறு செய்தியி னுலென்றார்.

இவ் விரண்டுரையும் இச் சூத்திரத்திற் குரையாகக் கொள்க.

எச்சவியல் முற்றிற்று.

சொல்லதிகாரச்சேனாவரையருரை

முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேவன் திருவடி வாழ்க.

சூத்திர முதற்குறிப்பகராதி

சூத்திரம்	பக்கம்	சூத்திரம்	பக்கம்
அஆவஎன - வறி	அ	அவற்றுள் செய்யு	கசக
அஆவஎன - வற்று	கஉ	அவற்றுள் தடவென்	கஅக
அ எனப் பிறத்த	அக	அவற்றுள் தரு சொல்	உச
அசை நிலைக் கிளவி	ககூச	அவற்றுள் நான்கே	ககO
அச்சக் கிளவி	எசு	அவற்றுள் நிரனிரை	உOO
அச்சம் பயமிலி	கறுக	அவற்றுள் நீயென்	ககசு
அடிமறிச் செய்தி	உOக	அவற்றுள் பன்மை	கஉஅ
அடைநிலை முத	உக	அவற்றுள் பிரிநிலை	உகக
அண்மைச் சொல்லிற்	கூக	அவற்றுள் பெயரென	கOக
அண்மைச் சொல்லே	கூக	அவற்றுள் முதனிலை	கசாஉ
அதற்கு வினையுடைமை	சுO	அவற்றுள் முன்னிலைக்	கஉள
அதனினியறன்	டுஅ	அவற்றுள் முன்னிலைதன்	கஉக
அதிர்வும் விதிர்ப்பு	களக	அவற்றுள் யாதென	உசு
அதுச் சொல்வேற்றுமை	ஈஉக	அவற்றுள் விறப்பே	கஅச
அது விது வுதுவென	சOறு	அவற்றுள் வினைவேறு	சO
அது வென் வேற்றுமை	எஉ	அவற்றுள் வேற்றுமை	ஒ Oறு
அத்திணை மருங்கி	கஉச	அவற்றொடு வருவழி	கசள
அந்திலாங்க	ககசஉ	அவைதாம் அம்மா	கஉஒ
அந் நாற் சொல்லு	கசுக	அவைதாம் இ உ ஐ ஓ	அ.அ
அப் பொருள் கூறி	உஅ	அவைதாம் உறுதவ	களள
அமர்தன் மேவல்	கஅக	அவைதாம் தத்தங்கிள	உகள
அம்ம கேட்பிக்கு	கசுக	அவைதாம் தத்தங்குறி	உஉஉ
அம்ம வென்னு	கூள	அவைதாம் தத்தம்பொ	அறு
அம்முக் கிளவி	கசச	அவைதாம் புணரியனி	கறிசு
அயனெடி தாயி	கூச	அவைதாம் பெண்மை	ககக
அரியே யையம்மை	கஅறு	அவைதாம் பெயர்	சக
அர் ஆர்ப எனு	கஉசு	அவைதாம் முன்மொழி	உகக
அலமரறெருமர	களக	அவைதாம் முன்னும்	கறுள
அவற்றின் வரூஉ	களக	அவைதாம் வழங்கியன்	அச
அவற்றுள் அழுங்கல்	கஅச	அவையல் கிளவி	உஉச
அவற்றுள் அன்னெனின்	கூக	அவ்வச் சொல்	களச
அவற்றுள் இசையாகு	அக	அவ்வழி அவனிவ	கOஉ
அவற்றுள் இருமுஞ்சி	கசுறு	அவ்வே இவ்வெனு	அள
அவற்றுள் இயற்சொ	ககூறு	அளபெடைப் பெயரே	கூஉ
அவற்றுள் இரங்கல்	கஅசு	அளபெடைப் பெயரே	கூங
அவற்றுள் ஈயென்	உஉக	அளபெடை பெயரே	கூறு
அவற்றுள் எழுவாய்	டுO	அளபெடை மிகூஉ	கO
அவற்றுள் செய்கென்	கஉறு	அளவு நிறையும்	அசு

சூத்திரம்	பக்கம்	சூத்திரம்	பக்கம்
அண் ஆன் அள் ஆள்	கஉக	இருபெயர் பலபெயர்	உoக
அன்மையினின்மை	கஉo	இர் ஈர்மின்	கஙஅ
அன்ன பிறவுங்கிளை	கஙஉ	இலம் பாடொற்க	கஅசு
அன்ன பிறவுந்தொன்	எசு	இறப்பினிகழ்வி - றச்சி	உகரி
அன்ன பிறவுமஃறி	கoள	இறப்பினிகழ்வி - ரூவம்	கஉo
அன்ன பிறவுமுயர்	கoரி	இறப்பே யெதிர்	கஙிச
ஆகவாகலென்ப	கஙள	இறுதியு மிடையு	எஅ
ஆக்கக் கிளவி	கள	இறைச்சிப் பொருள்	கஙஅ
ஆக்கந்தானே	கள	இனச் சுட்டில்லா	கசூ
ஆங்கவுரையசை	கசூசு	இனைத்தென	உசூ
ஆடூ உவறிசொல்	சு	இன்றில வுடைய	ஙஙசு
ஆண்மை சுட்டிய	கஙஉ	இன்ன பெயரே	கஎள
ஆண்மை திரிந்த	கஉ	ஈதா கொடுவென	உஉடி
ஆண்மையடுத்த	கoஉ	ஈரளபிசைக்கு	கசூள
ஆயென் கிளவி	கஉக	ஈற்று கின்றிசை	களo
ஆரும் அருவும்	கஙந	ஈற்றுப் பெயர்	எசு
ஆவோவாகும்	கஅ	உகப் பேயுயா	களஅ
ஆறன் மருங்கி	எரி	உகரந்தானே	அங
ஆருகுவதே அதுவென	சூஉ	உசாவே சூழ்ச்சி	கஅள
ஆனென் இறுதி	கஉ	உணர்ச்சிவாயி	கஙக
இசைத்தலு	சரி	உம்மூருதாகு	களந
இசை நிறையசை கிலே	உoச	உம்மை தொக்க	களக
இசைப்படு பொருளே	உகந	உம்மையெச்ச	உஉo
இசைப் பிசையாகும்	களக	உம்மை யெண்ணினுரு	களஉ
இடைச் சொல்லெல்லா	உஙக	உம்மை யெண்ணுமென	களo
இடைச் சொற் கிளவி	கoo	உயர் திணை மருங்கினு	உகஉ
இடையெனப் படுவ	கரிரி	உயர் திணையென்	க
இதனதிது விற்றென	அக	உயாவே யுயங்கல்	கஅள
இது செயல் வேண்டு	கரிஉ	உரிச் சொற் கிளவி	களசு
இயற்கைப் பொருளே	கசு	உரிச் சொன் மருங்கினு	உஙஉ
இயற்கையினுடமை	சுந	உருபு தொடர்	ளெ
இயற் சொற்றிரிசொ	கஙச	உருபெண மொழி	ஙசு
இயற் பெயர்க்கிளவி	உக	உருவுட்காகும்	களஅ
இயற் பெயர் சிலை	கoக	உரையிடத்தியலு	உஙச
இயற் பெயர் முன்	கசுந	உலமத்தொகையே	உoசு
இயைபே புணர்ச்சி	களக	உளவெனப்பட்ட	கசு
இரட்டைக் கிளவி	ஙசு	எச்சஞ் சிறப்பே	கரிக
இரண்டன் மருங்கி	எஉ	எச்சவும்மை	கசுஅ
இரண்டாருவதே ஐயெ	ரிச	எஞ்சிய கிளவி	கஙக
இருதிணைச் சொற்கு	கoள	எஞ்சிய மூன்று	உஉஉ
இருதிணைப் பிரிந்த	கoக	எஞ்சிய விரண்டி	கச
இருதிணை மரு	க	எஞ்சு பொருட் கிளவி	கசக

சூத்திரம்	பக்கம்
எடுத்த மொழி	சடு
எண்ணுங்காலு	நடு
எண்ணேகார	கஎ0
எதிர்மறுத்து	அ0
எதிர் மறையெசச	உஉ0
எப்பொருளாயினு	உஎ
எய்யாமையே	கஅந
எல்லாச் சொல்லும்	கூஅ
எல்லாத் தொகையும	உகக
எல்லா மென்னும்	ககச
எல்லாரு மென்னும	க0ந
எல்லே யிலக்கம்	ககசந
எவ்வயிற் பெயரு	நுஉ
எவ்வயின் வினையு	உசசு
எழுத்துப் பிரிந்திசை	ககஉ
எறுழ் வலியாகும	ககூ0
எற்றென் கிளவி	கசஉ
எனவெனெசசம்	உஉஉ
என்று மெனவு	களச
என்றென் கிளவி	கசக
ஏ பெற்றாகும்	களஅ
வயங்குவினையு	கசச
ஏழாகுவதே கண்ணெண	சுநு
ஏற்ற வினைவு	கஅஉ
வினைக்காலமூ	கநச
வினைக் கிளவி	கசசு
வினைப்புள்ளி	கூக
வினை யிரண்டு	உநு
வினை யுயிரே	அக
வினை யுருபும் அன்ன	அஉ
வினை யெச்சம்	கசச
ஐந்தாகுவதே இன்	சுக
ஐயமுங் கரிப்பு	கஅசூ
ஐயுங்கணனு	எக
ஐவியப்பாகும்	கக0
ஒப்பில் போலி	கசுசு
ஒரு பெயாப் பொதி	நுக
ஒரு பொருளிரு	உநுநு
ஒரு பொருள் - சொல்	கக்கசு
ஒரு பொருள் பெயர்	நஉ
ஒருமை சுட்டிய பெயர்	உநுநு
ஒருமை சுட்டியவெல்	கசச

சூத்திரம்	பக்கம்
ஒருமை யெண்ணின்	நகூ
ஒருவரென்னும்	ககசு
ஒருவரைக்கூறும்	உஉ
ஒரு வினையொடு	எக
ஒழியிசை யெச்ச	உஉ0
ஒன்றறி கிளவி	அ
ஒன்றறி சொல்லே	நு
ஒன்றன் படாக்கை	கநூ
ஒன்று வினைமரு	ச0
ஓம்படைக் கிளவி	எநு
ஓயதலாய்ச	கஅக
ஓவும் உவ்வும	அசு
கடதற வென்னு	கஉச
கடி சொல்லில்லை	உஙு0
கடியன் கிளவி	கஅக
கண்கால் புறமக	சுநு
கணடீரென்றூ	உகச
கண்ணுங்தோளு	சசு
கதழ்வுந் தினைவு	களக
கம நிறைந்திய	கஅநு
கம்பலை சுமமை	கஅச
கயவென் கிளவி	கஅக
கருமை மல்லா	சுஅ
கருவி தொகுதி	கஅநு
கவகத்திடுமே	கஅநு
கவர்வு விருப்பாகும்	கஅசு
கழிவேயாக	கஇஅ
கழுமென் கிளவி	கஅநு
கள்ளொடு சிவணு	க0சு
கறுப்புஞ் சிவப்பும்	கஅள
கன்றலுஞ் செலவு	சுக
காப்பினெப்பி /	நுசு
காலத்தாமே	கஉ0
கால மூலக	சஙு
கிளந்தவல்ல	அசூ
கிளந்தவல்ல	களநு
கிளந்த இறுதி	கூநு
கு ஐ ஆனென	அ0
குடிமையாண்மை	சஉ
குத்தொகவரூஉ	எநு
குருவுங் கெழுவுங	களஅ
குறித்தோன் கூற்ற	சக

சூத்திரம்	பக்கம்	சூத்திரம்	பக்கம்
குறிப்பினும் வினையினும்	கஉக	தநநு எ எனை	உ0ஙூ
குறைச் சொற் கிளவி	உஙூக	தநநு எ எனு	ஙூள
குறைத்தன வாயினு	,,	தன்மேற் செஞ் சொல்	உஉக
கூர்ப்புங் கழிவு	களகூ	தன்மை சுட்டலு	உ0
கூறிய கிளவி	ககக	தன்மை சுட்டிற் பன்மை	ககள
கூறிய முறையி	ஙூஙூ	தன்மைச் சொல்லே	ஙூஙூ
கெடவரல் பண்ணை	கஅ0	தன் னுளுறுத்த	கஉஙி
கேட்டை யென்ரு	உகச	தாமென் கிளவி	ககச
கொடுவென் கிளவிபடர்	உஉசு	தாவென் கிளவி	உஉசு
கொடுவென் கிளவியுயர்	,,	தாவே வலியும்	கஅஙூ
கொல்லேயையம்	ககஙூ	தானென் கிளவி	சுகச
சாயன்மென்மை	ஙஅக	தானென்பெய	சுஙூ
சிதைந்தன வரினு	ககூஅ	தினையொடு பழகிய	ககக
சிறப்பினுகிய	ஙூக	தீர்தலுந தீர்த்தலு	கஅ0
சினை நிலைக் கிளவி	சுஙூ	துயவென் கிளவி	கஅள
சீர்த்தி மிகு புகழ்	ஙளசூ	துவன்று நிறை	கஅஉ
சுட்டு முதலாகிய	ஙூ0	துவைத்தலுஞ் சில	கஅஙி
சுட்டு முதற் பெயரே	கூச	தெவு கொள	கஅச
சுட்டு முதற் பெயரும்	கூஙி	தெவ்வுப்பகை	கஅச
சுணணந்தானே	உ0க	தெரி நிலையுடைய	ள0எ
செந்தமிழ் சோந்த	ஙகூள	தெரிபு வேறு	கூக
செப்பினும் விளுவிலும்	கச	தெளிவினேயு	கசுஉ
செப்பும் விளுவும்	கஉ	தேற்றம விளுவே	கசு0
சேப்பே வழீஇயினுமை	கச	தொழிற் கூறு	கூஉ
செயப்படுபொருளை	கஙிஙூ	தொழிற் பெயராயி	கூஙூ
செயற்கைப் பொருளை	கள	நம்புமேவு	கஅக
செய்து செய்யு	கசய	நளியென கிளவி	கஅக
செய்தெனெசச	கஙி0	நனவே களவு	சஅஅ
செய்யாயென் னு	உஉஅ	நன்மீற்றேயு	கசுஅ
செய்யுண் மருங்கினு	உஙள	நன்று பெரிதாகும்	கஅஙூ
செலவினும் வரவினு	உஙூ	நான்காகுவதே குளன	சு0
செல்லலின்ன	களஅ	நிகழ்உ நின்ற	க0அ
செழுமைவளனு	கஅஙி	நிரனிரை சுண்ண	ககக
சேரே திரட்சி	கூஅசு	நிலப் பெயர் குடி	க0ஙூ
சொல்லெனப்படுப	க00	நிலனும பொருளும்	கசசு
சொல்லெனெச்ச	உஉச	நிறத்துருவுணா	கஅள
ஞெமிர்தலும் பாய்தலு	கஅசு	நின்ரு நிகழ்தை	சஙி
தகுதியும் வழக்கு	கஙி	நீயிர நீயென	ககஙி
தஞ்சக்கிளவி	ககஙூ	நுமமின் திரபெயரா	கூச
தடவுங கயவு	க0	நொசிவு நுழைவு	கஅஅ
தடுமாறுதொழி	எச	பசப்பு நிறனுகும்	களஅ
தத்த மெச்சமொடு	கசஅ	படரே யுள்ளல்	கஅஉ

சூத்திர முதற்குறிப்பகராதி

சூத்திரம்	பக்கம்	சூத்திரம்	பக்கம்
பணையே பிழைத்தல்	கஅங	பொருட்குத் திரிபில்	ககக
பண்புகொள் பெயரு	கூஉ	பொருட்குப் பொரு	ககக
பண்புகொள் பெயரு	கூங	பொருண்மை சுட்டல்	ஙo
பண்பு தொக வரூஉ	உகo	பொருண்மை தெரி	கூகூ
பயப்பே பயனை	களஅ	பொருளொடு புண	உஅ
பரவும் பழிசசும்	கஅக	பொற்பே பொலிவு	கஅஉ
பலவயினனு	ஙஅ	மகடூஉ மருஙகி	ககள
பல்லபல சில	கoஙி	மதவேமடனு	கஅஅ
பல்லோர் படர்க்கை	கசo	மல்லல் வளனே	களஅ
பழுது பயமின்றே	கஅக	மழவுங் குழவு	களக
பன்முறை யானு	கசஙி	மறைக்குங காலை	உஉஙி
பன்மை சுட்டியவெல்	ககஙூ	மற்றென் கிளவி	ககஉ
பன்மையு - வகரா லை	கஉ	மற்றையதென்	ககஉ
பன்மையு - கம்மூவிர	ஙூச	மன்றவென் கிளவி	ககஙூ
பன்மையு - யிறினை	ஙூஙி	மன்னுப் பொரு	உள
பன்மையு - யுயர் நினை	ஙூஉ	மாதா காதல்	கஅக
பாலறி மரபி	கஉக	மாரைக் கிளவி	கஉசு
பான் மயக்குற்ற	ஙக	மாலையியல்பே	களக
பிணையும பேணும்	கஅஉ	மாவென் கிளவி	கசுஙி
பிண்டப் பெயரும்	எo	மிகுதியும் வனப்பு	கஅஅ
பிரி நிலை வினுவே	ஙசo	மிசகதன் மருஙகி	கஙிக
பிரி நிலைவினையே	உகஅ	மியா யகமோ	ககசுஙி
பிறிது பிறிதேற்றலு	எஅ	முதலிற் கூறு	அச
பின் முன்கால்	கசஙூ	முதலுஞ் சினையு	எo
புதிது படற் பொரு	ஙஅஅ	முதற் சினைக் கிளவி	சுஙூ
புலம்பே தனிமை	கஅஉ	முதன் முன்னுவரி	எo
புள்ளியு முயிரு	கூசு	முந்நிலைக்காலமு	சுஙிo
புனிறென் கிளவி	கஅஅ	முரஞ்சன் முதிரவே	கஅஉ
பெண்மை சுட்டிய சினை	ககக	முழுதென் கிளவி	கஅக
பெணமை சுட்டிய வுயர்	சு	முறைப் பெயர் - முறை	கூஙி
பெண்மை சுட்டிய வெல்	ககஉ	முறைப் பெயர் யேயென	கூஉ
பெண்மைச் சினை	ககக	முறைப் பெயர் மரு	கூo
பெண்மை முறை	ககக	முற்படக் கிளத்தல்	கo
பெயரிலகிய	ஙிக	முற்றிய வும்மை	கசுகூ
பெயரினுந் தொழி	நஎ	முனவு முனிவாகும்	ககo
பெயரெஞ்சு கிளவிபெ	உஉo	முன்னத்தினுணரு	உஙச
பெயரெஞ்சும் கிளவியு	கசஅ	முனனிலை சுட்டிய	உஙசு
பெயர் நிலைக் கிளவிகால	ஙிச	முன்னிலை முன்ன	உஉக
பெயர் நிலைக் கிளவியினு	உஉள	முன்னிலை வியகோள்	கஙசு
போ முருமென	கஅசு	மூன்றனு மைந்தனு	எக
பையுளுஞ் சிறுமை	கஅஉ	மூன்றுகுவதே ஒடு	ஙிள
பொருடெரி மருங்கி	உoஉ	மெய்பெறக் கிளந்த	ககo

சூத்திரம்	பக்கம்	சூத்திரம்	பக்கம்
மொழிப் பொருட்கார	ககூஉ	விழை வின்றில்லை	
மொழிமாற்றியற்கை	உ0உ	விழைவேகால	கஙிஅ
பாஅரென்னும்	கஉஅ	விளிகொள்வதன்	சகூ
பாகா பிறபிற	கசுசு	விளியெனப்படுப	அள
பாணுக்கவிஞும்	கஅகூ	விறப்பு முறப்பு	கஅச
யாதனுருபிற் கூறி	எகூ	விஞவுஞ் செப்பே	கஙு
யாது எவெனென்னு	உஙி	வினையிற்ரேன்றும	க0
ரஃகாஞெற்றும்	எ	வினையினும் பண்பினு	கூச
வடசொற் கிளவி	ககூஅ	வினையின் ரெருகுதி	உ0சு
வண்ணத்தின் வடிவி	உ0எ	வினையெஞ்சு கிளவியும்	உகஙு
வண்ணம் வடிவே	சூக	வினையெனப் படுவது	கஉ0
வம்பு நிலையின்மை	கஅக	வினையே குறிப்பே	சசுக
வயவலியாகும்	சுஅள	வினையே செய்வது	அசு
வயாவென் கிளவி	கஅள	வினையொடு நிலை	களசு
வறிது சிறிதாகும்	கூஅஉ	வினைவேறு படுஉம்	கூகூ
வன்புறவரூஉம்	கஙிஉ	வெம்மை வேண்டல்	கஅஉ
வாராக் காலத்து நிக	கஙிக	வெளிப்படு சொல்லே	களள
வாராக் காலத்து வினை	கஙிசு	வேறு வினைப் பொது	கூஙி
வாராமரபின	உகஉ	வேற்றுமை தாமே	சள
வார்தல் போகு	கஅ0	வேற்றுமைத் தொகை	உ0ச
வாளொளியாகும்	கஅள	வேற்றுமைப் பொருளே	கூசு
வியகோளெண்	கூச	வையே கூர்மை	ககூ0
வியலென் கிளவி	கூஅ	ளஃகாஞெற்றே	எ
விரை சொல்லடுக்கே	உசுசு	னஃகான் ஒற்றே	எ
விழுமஞ் சீர்மை	கஅஙி	னரலள என்னு	கூக